உ

ஓம்

ஸ்ரீ

# தத்வராயஸ்வாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# அடங்கன்முறைப்
பிரபந்தம்.

இஃது

ஸ்ரீசிதம்பரம்

ஸ்ரீபொன்னம்பலஸ்வாமிகள்
மடாதிபதி
ஸ்ரீபரஞ்ஜோதிஸ்வாமிகளால்
பரிசோதிக்கப்பெற்று,

சிதம்பரம்
ஷண்முகசுந்தர விலாஸ பிரஸில்
அச்சியற்றி
வெளியிடப்பெற்றது
அக்ஷய௵ ஆவணிமீ ௰௫௳

உ

ஓம்.

ஸ்ரீநியாயசந்திர வேதாந்தபாஸ்கர

வீரசேகர ஞானதேசிக பாதசேகர

# ஸ்ரீ சுப்பையஸ்வாமிகளியற்றிய

# சாற்றுக்கவி.

ன்புநிறை தரக்குரவ னடியிணையே மிசப்போற்றி யருவி பாய்ந்தே
யன்புருகித் திருப்பவளந் திறந்துதிற னிசைபலவா யிணையற் றோங்கும்
ன்பெருமை தனக்குரிய தத்துவரா யப்பெருமான் றுலாட் டாதி
ன்புகழு மடங்கன்முறை சிறந்ததுமற் றெவற்றினுமேன் மாண்பு பூண்டே 1.

பூண்டதிருக் குரவன்மலர் மறைநெறியிற் புகழுதலாற் புகழ்மிக் கோங்கி
வேண்டுபெரும் புலவர்களும் வெருவுகின்ற வஞ்சாறே விளம்ப லாதி
ண்டதொடர் மிகப்படைத்த வவ்வடங்கன் முறையறிந்த நிறைந்த கேள்வி
ாண்டவர்தங் கருணைநிதி வைப்பிடம்பொ னம்பலஞா னசான் றானே. 2.

ந்திமுதற் சற்குணங்கள் மிகநிறைந்தோன் றமிழ்நாடு தழைத்து வாழ்வே
ாந்தரிகை மணிகீதை கைவல்ய மெய்ப்பொருளின் றுதா வானோன்
ந்துபல சுவடிகொடு மினிதுபெறத் திந்நூலை யிசைய வோதி
ாந்துமது மதுகரம்போற் சுவைசுவைத்த மாதாவின் மலர்செய் சூட்டோன. 3.

தம்பரந் தெவர்க்கு மினியவே யோதி யேழைகட் குதவநு கூலன்
சிதம்பர குரவன் திருவடி பரவிச் சிதம்பர மெனும்பதி வதிவோன்
திசம்பெறு மறைகள் பலவுமொத் துலகிற் றிகழ்தரப் பதிப்பித்தீந் தனனவ்
புதம்பொறை சதமென் றகமித மிகுந்த புதப்பரஞ் ஜோதிமாமுனியே. 4.

சிவமயம்.

## தத்துவராயசுவாமிகள்

# அடங்கன் முறையின்

## அட்டவணை.



| நெ. | விபரம் | பாட்டு | பக்கம். |
|---|---|---|---|
| | திருத்தாலாட்டு. .... .... | 51 | 1 |
| | பிள்ளைத்திருநாமம் .... ... | 66 | 6 |
| 3 | வெண்பாவந்தாதி .... .... | 100 | 54 |
| 4 | கலித்துறையந்தாதி .... .... | 100 | 75 |
| 5 | சின்னப்பூ வெண்பா .... .... | 100 | 96 |
| 6 | தசாங்கம் .... ... ... | 10 | 117 |
| | இரட்டை மணிமாலை .... .... | 20 | 120 |
| | மும்மணிக்கோவை .... .... | 28 | 125 |
| | நான்மணிமாலை .... .... | 40 | 145 |
| | கலிப்பா .... ... .... | 5 | 173 |
| | ஞானவினோதன் கலம்பகம் .... | 100 +17 | 177 |
| | உலா. .... .... | 397 | 217 |
| | சிலேடையுலா .... .... | 601 | 259 |
| | நெஞ்சுவிடு தூது .... .... | 182 | 297 |
| | கலிமடல் ... ... .... | 199 | 314 |
| | அஞ்ஞவதைப்பரணி .... ... | 493 +4 | 336 |
| | மோகவதைப்பரணி .... ... | 849 | 421 |
| 18 | அமிர்தசாரம்... .... .... | 220 | 463 |

உ

சிவமயம்.

# ஸ்ரீ தத்வராயசுவாமிகள்.

## சரித்திரச்சுருக்கம்.

பூமிதேவிக்குத் திருமுகம்போலச் சிறந்திருக்கிற தமிழ்நாடு பலவற்றினுமேம்பட்ட நடுநாட்டில் வீரமாநகரத்தில் சற்றேறக்குறைய முந்நூறுவருஷத்திற்குள்ளாக மாத்துவப்பிராமணருக்குள்ளே யிவ்வுலகஞ்செய்த மாதவமென்று சொல்ல இரண்டு புண்ணியமூர்த்திகள் அவதரித்தார்கள். அவர்கள் அம்மான் * மருமகன் என்கிற முறைமையையுடையவர்கள். அவ்விருவரும் வடமொழி தென்மொழி யிரண்டிலும் வல்லவராய் அறிவாசாரமுதலியவைகளிற் சிறந்தவர்களாய்ப் பிரமசாரியர்களாகியேயிருந்து தங்கள்கருமத்தில் வழுவாது நடந்துவருநாளில், வேதாந்தசாஸ்த்ரம் யாவையும்படித்து ஐயந்திரிவு அறியாமையில்லாமல் அவற்றின்பொருள்களை ஆராய்ந்தறிந்தெப்போதுந் தத்வவிசாரணையும் ஸ்வரூபவிசாரணையுஞ் செய்துவருதலாலும், அவைகளையேஎவர்களுக்கும் போதித்தலாலும், பெரிய விருக்ஷம் தோன்றற்கிடனான சிறிய ஆலம்விதைபோல் ஞானங் கூர்மையானவராதலாலும் இவர்களுக்கு அப்பருவத்திலேதானே பூர்வநாமம் போய்த்தத்வராயரென்றும், ஸ்வரூபானந்தரென்றும் காரணநாமமுண்டாயின.

(இவர்கள்) பூர்வ தவக்குறைவால்வந்தவர்களாதலால் ஆத்மவிசாரணை செய்யவேண்டுமென்கிற விவேகமே மேலிட்டாலோசித்தார்கள். அவையென்னெனில், இம்மையில், யாவரி

---

* ஸ்வரூபானந்த சுவாமிகளுடன்பிறந்தாள்பிள்ளை தத்வராயசுவாமிகள்.

னுஞ் சிறந்த அரசர்கள்வாழ்வுஞ் சிலநாளிலழிந்து விடும்; அத னல் வருமின்பமு முள்ளிப்பூவின்றேனை யொக்குமென்றும் மறுமையில், இந்திராதிதேவர் பதங்களும் ஆயுண் மிகுந்தி ருந்து காமாதிதுன்பமுற் றழியுமென்றும் இளமையாதியும் நிலை யல்லவென்றும் நினைத்துப் பெண்ணுதி மூவாசையும் துறந்து சாந்திமுதலாகிய குணங்களைத் தமக்கங்கமாகக்கொண்டு தலையில் நெருப்புப்பற்றிக்கொண்டவன் நீர் தேடுதல் போலவும், மிகுந்த கோடைவெயிலி லகப்பட்டவன் நிழல் தேடுதல்போலவும் அதி தீவிர பக்குவமுடையவர்களாய்ச் சனனமரணமொழிக்கவல்ல ஞானசிரியரைத்தேடி அடுக்கவேண்டிப் பலநாள் பலவிடங்களி லுந் தேடிப்பார்த்துங் கிடையாமல் மிகவும் வருத்தமடைந்து ஒரு நாள், போம்வழியில்ஒருசிறந்தசோலையில்பெரியகல்லாலவிருக்ஷத் தின்கீழிருந்தாலோசித்தார்கள். அவையென்னெனின், நாம் இப்ப டித்தேடினல் எத்தனை காலஞ்செல்லும்; ஆதலால் ஒருவர்உத்தரதி சையிலும்ஒருவர்தக்ஷிணதிசையிலும் போய்த்தேடிப்பார்ப்போம்; நமக்குள் எவருக்குமுன்னே ஆசிரியர்கிடைத்தனுக்கிரகம் பெற் றுக்கொள்ளுகின்ருேமோ அவரேமற்றொருவருக்கும் ஆசிரிய ரென்று நிச்சயித்துக்கொண்டு போனுர்கள். அவர்களில்தென்றே சத்திற்சென்ற ஸ்வரூபானந்தசுவாமிகள் பலதேசங்களிலும் பல ஊர்களிலும் பலவனங்களிலும் பலமலைகளிலும் பலநதிதீரங்களி லும் பல புராதனலயங்களிலுந் தேடிக்கொண்டு, திருவரங்கமுந் திருவானைக்காவும் காவேரிநதியும் தெற்காக வடக்கேபோய்த் திருப்பைஞ்ஞீலியென்கிற சிவஸ்தலத்தையும், திருவெள்ளறை யென்கிறவிஷ்ணுஸ்தலத்தைதயும்தன்பாங்கினுடைத்தாயிருக்கிற சோவத்தமென்னும் ஸ்தலத்துக்குச் சமீபத்திற் போம்பொழுது இவருக்கு ஒருகாரணமுமின்றிப் பேரானந்தமும் சரீரத்திலே

புளகாங்கிதமும் உண்டாகிக்கைகள் அஞ்சலிமுகிழ்த்திடக் கண்களில் நீர்பெருகக்கண்டு, நான் தேடிவந்த ஞானசிரியரிருக்கிறஸ்தானம் இதுவேயென்று அந்த நகரைப் பிரதக்ஷணமாய் வந்து உள்ளேபோய் இவ்விடத்திலே பெரியவர்கள் உண்டோவென்று விசாரித்தார். அவ்விடத்திலுள்ளவர்கள் இந்த ஊருக்குப் புறத்திலே நாணற்புதலிருக்கின்றது. அதனுள்ளே யொருபெரியவரிருக்கின்றார். அவர் பெயர் * சிவப்பிரகாசசுவாமிகளென்றும், அவர் ஒவ்வொரு தினத்திலே சாயங்காலத்தில் அந்தப்புதலைவிட்டு வெளியில் வருகின்றாரென்றுஞ்சொல்ல, அவ்விடத்திலேபோய் இவர் காத்துக்கொண்டிருக்கிறபோது அந்தச் சிவப்பிரகாசசுவாமிகள் ஒருநாள் வெளியிலேவந்தார். ஸ்வரூபானந்தசுவாமிகள் நமஸ்காரம்பண்ணி நெடுங்காலமாயலைக்கின்ற சனனமரணப் பிரவாகத்தினின்றும் அடியேன் கரையேற ஞானோபதேசம் பண்ணவேண்டுமென்று பாததாமரையைப்பிடித்துக்கொண்டு முறையிடும்பொழுது, நாம் நினைத்திருந்த அதிதீவிரபக்குவனிவனேயென்று ஆலோசித்து, அப்பா! உனக்காகத்தான் இங்கே இதுவரையில் யானிருந்தேனென்று மேலான மஹாவாக்யத்தை அநுக்கிரம்பண்ணச் சிரவணாதிகளால் அவ்வநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்வாநுபூதியாகவேண்டிச் சமாதிபண்ணிக்கொண்டிருக்குநாளில், வடக்கே தேடிக்கொண்டுபோன தத்வராயசுவாமிகள் அத்தேசமுழுமையுந்தேடி ஆசிரியர்கிடையாமல் மறுபடியுந் தென்றேசத்திற்குவந்துஸ்வரூபானந்தசுவாமிகளைக்கண்டார். ஸ்வரூபானந்தசுவாமிகளுந் தனக்காசிரியர்கிடைத்ததும் அநுக்கிரகம் பெற்றுக்கொண்டதும் பிறவுஞ்சொல்ல, மிகவும் அதிசயமடை

---

* சிவப்பிரகாசசுவாமிகள் பூர்வஸ்தலம் திருவாரூர்—இவர் சுத்தவைதிக சைவர்.

து ஸ்வரூபானந்தசுவாமிகளை வணங்கி மேலான ஞானானுக்கிரம் பெற்றுக்கொண்டு நிருவிகற்ப சமாதியிலிருந்து நித்ய நிரதிசயானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றகாலத்திலே பெரியோர்களுக்குத் தாம் பெற்றபேறு உலகம் பெறவேண்டுமென்கிற சங்கற்பம் சுபாவமானபடியால் ஸ்வரூபானந்தசுவாமிகள் திருவுள்ளத்தில் இந்தத் தத்வராயர் தென்மொழியிற் பாடுதலில் மிகவும் வல்லவராயிருக்கையால் இவரைக்கொண்டு லோகோபகாரமாச் சில சாஸ்திரங்களைச்செய்விக்கவேண்டுமென்று நினைத்து உபாயமாய்க் குறிப்பித்துக்கொண்டுவர, அவர்சதாநிஷ்டையில் இருக்கின்றவரானபடியால் அவருக்கு இந்தக்குறிப்பு மிகவுந் தோன்றாமலிருந்ததுகண்டு, இக்கருத்து நன்றாய்த் தெரிவிக்கவெண்ணி ஒருநாள் அமாவாசையில் அப்யங்கஞ்செய்யவேண்டியவர்போல ஏவலாளரைத் தயிலங்கொண்டுவாருமென்றுசொல்ல, அருகேநின்ற தத்வராயசுவாமி அமாவாசையென்கிறதை மனதிலே நினைத்து அம்மென்றார். அப்போது ஸ்வரூபானந்தசுவாமிகள் கோபித்துக்கொண்டவர்போல விதிவிலக்கென்கிற சங்கற்பமுங்கடந்து காலாதீதராய்நின்ற நமக்கும் விதிவிலக்குண்டோ, நம்மெதிர்நிற்கவேண்டாம்போமென்றுசொல்லத், தத்வராயசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்தமாய் விளங்குகின்ற சுவாமிகளுக்கும் நான் விதிவிலக்குக்கற்பித்த குற்றத்தால்இனிநானிந்தச்சரீரத்தோடிருத்தல்தகாது, கடலில் விழுந்திறத்தலன்றி இதற்குப்பரிகாரம் வேறில்லையென்றுநினைத்து ஆசாரியர் சந்நிதானத்தைநோக்கிக்கொண்டே பின்னிட்டபடிநடந்து ஆராமை மேலிட்டுக் கண்களிற் சலம் தாரைதாரையாய்ப் பெருகப் பரமாசாரியராகிய சிவப்ரகாசசுவாமிகளையும் ஆசாரியராகிய ஸ்வரூபானந்தசுவாமிகளையுங் குறித்து ஸ்வரூப சாக்ஷாத்காரவிலாசத்தை நவ நவமாய்த் தமது ஸ்வாநுபூதியின் கணனுபவித்தபிரகாரம் பின்னுள்ள

வாத்மகோடிகளும் அவ்வனுபூதியைப் பெற்றுய்யும்படி ஜீவகாருண்ணியத்தினால் தமது ஸ்வரூபானுபூதி ஆவேசத்தால் ஸ்தோத்திரமாய்ச்—சிவப்ரகாசவெண்பா—தத்வாமிர்தமென்னும் இரண்டுடன்—திருத்தாலாட்டு, பிள்ளைத்திருநாமம், வெண்பூவந்தாதி, கலித்துறையந்தாதி, சின்னப்பூவெண்பா, தசாங்கம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலிப்பா, ஞானவினோதன்கலம்பகம், உலா, சிலேடையுலா, நெஞ்சுவிடுதூது, கலிமடல், அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி, அமிர்தசாரவெண்பாவென்னும் இந்தப்பதினெட்டையும் திருவாய்மலர்ந்தருளிக்கொண்டுபோம்பொழுது அருகில்நின்ற மாணாக்கர்கள் அப்போதைக்கப்போதே அப்பிரபந்தங்களைத் தனித்தனியெழுதிக்கொண்டுபோய் ஸ்வரூபானந்தசுவாமிகள் சந்நிதானத்திற் படிக்கச், சுவாமிகளும் அச்சாஸ்திரங்களில் விருப்பமில்லாதவர்போல் மயிருள்ளவள் வாரிமுடிக்கிறதுபோல வாயுள்ளவன் பாடியனுப்புகிறானென்று திருவாய்மலர்ந்துகொண்டிருந்தார். அப்படியிருக்க இங்கே தத்வராயசுவாமிகள், ஆசாரியர் தரிசனத்துக் கபாத்திரனாய்விட்டேனே, இனி நானெந்தச்சனனத்தில் தரிசிப்பேனென்னும் ஏக்கத்தினாலே தாயைக்காணாத இளங்குழந்தையைப்போல அழுது முகம்வீங்கிப் பாடுதுறையில் திருவடிமாலையைப் பாடிக்கொண்டுவிழுந்திறக்கக் கடலுக்குச் சமீபத்தில் போம்பொழுது, அந்தச்செய்தியையு மாணாக்கர்கள் வந்துசொல்ல ஸ்வரூபானந்தசுவாமிகளறிந்து, குருவுக்குவீங்கியை வரச்சொல்லுமென்று கட்டளையிட, அதைக் கேள்விப்பட்ட தத்வராயசுவாமிகள் தந் தேகவருத்தமுழுதும் நீங்கிடக்கச் சக்தியும் பெற்றுக்கொண்டு, சுவாமிகளால் அனுப்பப்பட்ட மாணாக்கர்களைப்பார்த்துக் கருணாநிதியாகிய சுவாமிகள் மகாஅபராதியாகிய வென்னையும்வரக் கட்டளையிட்டார்களோவென்று பேரானந்தமடைந்து மேற்படி பிரபந்தத்

தில்திருவருட்கழன்மாலை, போற்றிமாலை, புகழ்ச்சிமாலை,முதலானவைகளையும் பாடிக்கொண்டு சிரசின்மேல் அஞ்சலிஹஸ்தராய்ச் சுவாமிகளுடைய சந்நிதானத்தைப் பார்த்துக்கொண்டேவந்து பிரதக்ஷணம்பண்ணி அஷ்டாங்க பஞ்சாங்கமாக அநேகநமஸ்காரஞ் செய்துமுன்னிலும்அதிகமாய்க் கண்களில் நீர்பெருகமயிர்க்கூர்ச்செறிந்து பரவசப்பட்டு நெஞ்சமுருகி ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நிற்கும்போது சுவாமிகளும் இருவென்று சட்டளையிட இருந்து சுவாமிகளின் பணிவிடைசெய்து கொண்டு மிகவும் சந்தோஷமடைந்திருக்கும்நாளில், சுவாமிகள், தத்வராயர் பாடிய சாஸ்திரங்களை யெல்லாம் பார்வையிட்டுச் சொல்லமைதியும் பொருளமைதியுநோக்கிச் சந்தோஷத்தைத் தனக்குள்ளே யடக்கிக்கொண்டு இந்தச் சாஸ்திரங்கள் மிகக் கற்றவர்க்கன்றி மற்றவர்க்குதவாவென்று நினைத்துத் தத்வராயசுவாமிகளைப்பார்த்து, அப்பா! இந்தச்சாஸ்த்ரங்களெல்லாம் உனக்கே பாடிக்கொண்டனையன்றி யுலகத்தாருக் குபயோகமாகப் பாடவில்லையே என்றருளிச்செய்ய அப்போது, மடைத்தொழிலாளர்கள் சுவாமீ! அமுது கொள்ள வெழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச் சுவாமிகளும் நித்யகர்மங்களைமுடித்து அமுதுக்கெழுந்தருளத், தனியேயிருந்த தத்வராயசுவாமிகள் ஆசாரியர் திருவாக்கை ஆலோசித்து அப்படியே தாமும் நினைத்துச் சுவாமிகள் அமுது கொண்டு வருமுன்னர் எல்லாருக்கும் பிரயோசனப்பட மோகவதைப்பரணியில் ஒருபிரகரணமாகச்சசிவர்ணபோத மென்னும் ஒருசாஸ்த்ரத்தைச்செய்துசுவாமிகள்திருவடியிலேவைத்து நமஸ்காரம்பண்ணச், சுவாமிகளும் தத்வராயர் விரைந்துபாடினதையும் அச்சாஸ்த்ரத்தின் பாகத்தையும் பார்த்துச் சந்தோஷமடைந்தார். பின்னும் தத்வராயசுவாமிகள் சில வேதாந்த சாஸ்த்ரங்களுஞ் சில மத சித்தாந்த நூல்களுஞ் செய்துகொண்டு நிர்விகற்பசமாதியிலி

ருக்கும்நாளில், யாத்திரைசெய்கின்றவராகிய சிலஆராத்தியர்களு ஞ்சில வித்வான்களும் ஸ்வரூபானந்த சுவாமிகளின் சந்நிதானத் தில் வீற்றிருக்கிற தத்வராயசுவாமிகளின் முன்னேவந்து போர் முகத்தாயிரங்களிற்றி யானையைக்கொன்ற சுத்தவீரனைத் தலைவ னாகக்கொண்டு பாடப்படும் பரணியென்னும் பிரபந்தத்தை வீர மென்பது சனவிலுங்கேட்டறியாத உம்முடைய ஆசான்மேலெப் படி நீர் பாடினீரென்றுகேட்க, அதற்குத் தத்வராயசுவாமிகள் நம் முடையசுவாமிகளும் சிஷ்யருடைய அகங்காரமாகிய யானையைக் கொல்லுதலாற் பாடினேனென்று சொல்ல, அதற்கு அவர்கள் நீர் சொல்லும் அகங்காரயானை கண்ணுக்குப் புலப்படாமையால் ஒவ் வாது; ஆயினும் ஒரு சிஷ்யனுடைய அகங்காரமாகிய யானையைக் கெடுத்தற்கு அநேகநாட் செல்லுமே? இவர் ஏககாலத்தில் ஆயி ரஞ்சிஷ்யர்கள் அகங்காரத்தைக்கெடுத்த தெப்படியென்றுவினவ, அதற்குத் தத்வராயசுவாமிகள் அனுபவத்திற் காட்டவேண்டு மென்று பிரதியுத்தரமொன்றுஞ் சொல்லாமல் சமாதி செய்தி ருந்தார். ஸ்வரூபானந்தசுவாமிகளின் சந்நிதானம் பட்டமையால் வந்த வித்வான்களனைவரும் இராப்பகல் ஒன்றுந்தெரியாமல் மூன்றுதினமளவும் பரிபூரணதசையிலிருந்தார்கள். நாலாநாள் தத்வராயசுவாமிகள் திருக்கண்விழித்தபின்பு அவ்வித்வான்களும் எழுந்து சுவாமிகளையும் தத்வராயசுவாமிகளையும் நமஸ்காரம் பண்ணி நாங்களறியாமையினால் ஆக்ஷேபித்தோம். தங்கள் சந்நிதானத்தினது விசேஷம் ஏககாலத்தில் பதினாயிரஞ் சிஷ்யர்கள் நேரிட்டாலும் பரிபாகப்படுத்தத்தக்க வல்லபமுள்ள தென்று அவர்கள் பலரும் இப்பிரபந்தங்களைக்குறித்து ஒவ்வொ ருகவிகளைச்சாத்தி மாணாக்கர்களாய் வழிபட்டுப் போனார்கள். பின்பு தத்வராயசுவாமிகள் லோகோபகாரமாக வேதாந்த சாஸ்த்ரத் திற்குள்ளே சுவானுபூதிக்கிசைந்த சாரமாயுள்ள செய்யுட்களை

யெல்லாந்திரட்டிப், பெருந்திரட்டு, குறுந்திரட்டென்ன இரண்டு சாஸ்த்ரத்தை அருளிச்செய்தார். இப்படியாகச்சுவாமிகளுட னிணைபிரியாமல் இருக்கும்பொழுது ஸ்வரூபானந்தசுவாமிகள் யாதோ ஒரு திருவிளையாட்டை நினைத்துத் தத்வராயசுவாமிகளை வைத்துத் தாம் பிரிந்து புறப்பட்டுப்போகையில் இவரும் பின்றொடரச், சுவாமிகளுந்தமக்கு நேரிட்டபடி வழியொன்றின்றிக் காடு நாடு மலைகள் முதலான விடங்களிற் சுற்றித்திரிந்து சமுத்திரத்தின் சமீபத்திற்போயினர். தத்வராய சுவாமிகளும் உடனாகவேபோய் ஸ்வரூபானந்த சுவாமிகள் கடன்மேல் நடக்கக் கடற்சலம்விலகி வழிகொடுக்க அதைக்கண்டு தாமும் கடலில்நடக்க ஜலம் வழிவிடாமையால் கரையிலேநின்று பசுவைநீங்கிய விளங்கன்றுபோலக் கதறித்திக்குகள்தோறுந் தேடும்பொழுது ஸ்வரூபானந்தசுவாமிகளுந் தரிசனங்கொடுத்துப் பின்பு அகண்டபரிபூரண சச்சிதானந்தமாய் விளங்கினர். அதைக்கண்ட தத்வராயசுவாமிகள் அதிசயமும் ஆராமையும் அடைந்து சுவாமிகளுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளெல்லா முடித்துச் சுவாமிகளையே நினைத்துக்கொண்டிருந்து பிரிவாற்றாமையாலோ பேரன்பினாலோ சுவாமிகளையன்றித் தமக்கொருசெயலின்மையினாலோ தாமும் உடனே பரிபூரணதசையடைந்தார். இவர்களுக்குத் திருவலஞ்சுழியும் வாசஸ்தானம். சிவப்ரகாசசுவாமிகள் சமாதி திருவாரூர் சமீபஸ்தானம். ஸ்வரூபானந்தசுவாமிகள் சமாதி திருவண்ணாமலைக்கும் விருத்தாசலத்துக்கு மத்தியஸ்தானம். தத்வராயசுவாமிகள் சமாதி சிதம்பரத்துக்கும் விருத்தாசலத்துக்கு மத்தியஸ்தானம். இந்தச்சரித்திரம் மேற்படி சுவாமிகளுடைய பரம்பரை மாணக்கர்கள் அனுப்பின பிரதிகளின்படி பதிப்பிக்கப்பெற்றது.

தத்வராயசுவாமிகள் சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

☞ குறிப்பு;—

இங்ஙனம் ஸ்ரீ தத்வராயசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பாடுதுறைப்பிரபந்தத்தின் ஆதியில் எழுதப்பெற்றிருக்கிறது. பின்னர், இப்பெருந்தகையார் சமாதியின்மீது சருக்கல் ஆலய மமைக்கப்பட்டுவிருத்தாசலத்திற்கும் சிதம்பரத்திற்கும் மத்தியில் எறும்பூர் என்றவழங்கிவரும் இறப்பூதூரில் "ஸ்ரீ தத்வேசுரர் கோயில்" எனவழங்கப்பெற்று உத்ஸவாதிகளும் நடந்துவந்தன. பின், ஆலயமுப்பழுதுற்றுக் காலவேற்றுமையால், ஆலயத்தின் நாற்புறமும் இலைக்கள்ளிப்புதர்களுமூடி, குளங்களெல்லாந் தூர்ந்து, வளங்குன்றியிருந்தகாலத்தில் ஸ்ரீ தத்வராயசுவாமிகளின் அடியவர் பரம்பரையில் இருந்துவந்த சதானந்தசுவாமிஎன்பவர் கிராமங்களில் அரிசிமுதலியன பெற்று ஒருவேளைப் பூஜை யாற்றிவந்தனர். இங்ஙனமிருக்குங்கால், ஸ்ரீ சமிவனக்ஷேத்திரம் என்னும்கோயிலூரில் அருளிறையாயெழுந்தருளித்தனையண்மிய அடியவர்களின் ஆணவாதி மும்மலமகற்றி அறிவுருவாக அநுக்கிரகஞ் செய்தருளியிருந்த ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிக வடிகளின் திருவருட்பேறுபெற்றவள்ளலும், கருணாநிதியென ஸ்ரீ சிருங்ககிரிஜகத்குருபீடம் ஸ்ரீ நரசிம்ம பாரதியவர்களால் காரணநாமமிட்டழைக்கப் பெற்றவரும் ஆய ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின் மாணாக்கராய் ஸ்ரீ சிதம்பரத்தில் அரியமடாலய மமைத்து அணுகிய அடியவர்கவிருளகற்றுந் தினமணியாய் விளங்கியிருந்த ஸ்ரீ பொன்னம்பலஞானதேசிகரவர்கள் ஸ்ரீ தத்வராயப் பெருந்தகையால் பாடியவாயிற்றேனூறும்படி பாடியருளிய பாக்கணலமும் பொருட்செறிவும்கண்டு, அப்பெருந்தகையின் சமாதிகாணும் அவாப்பெருக்கத் துடனிருந்தனர். இங்ஙனமிவரிருக்க, ஸ்ரீ தத்வராயசுவாமிகள் சமாதியிற் பூஜைசெய்து

கொண்டிருந்த சதானந்தசுவாமிகள் கனவில், பொன்னம்பலவன் ஆலயமியற்றுஉன் எனத்திருவருடோற்றுவிக்க அவர் உடனே சிதம்பரம் வந்து ஸ்ரீபொன்னம்பலவிறைவையைக்கண்டுசெய்திதெரிவிக்க, மிக மிக மகிழ்வுற்று உடனே அடியர்குழாங்களுடன் சென்றுபார்த்து அவ்வாலயத்தினைச்சூழ்ந்து செறிந்துள்ள இலைக்கள்ளிப்புதரின் நாப்பணுள்ள நடைபாதையில் வலம் வருங்கால் ஒரு வெண் பொற்காசு காணப் பெற்றது. அதனையெடுத்து, "திருவருள்திருப்பணிக்குதவிய முதற்றொகையென" அடியவர்பாற்கொடுத்துப் பின்சிதம்பரம்வந்து அன்றுமுதல் மேற்கண்ட ஆலயஜீரணோத்தாரணத்தின் பொருட்டுப் பலஅன்பர்களிடம் தெரிவித்துப்பொருளீட்டிச் சுமார் ௬0௲ ரூபாய்பெறத்தக்க கருங்கல்லாலயம், மடம், நந்தவனம், திருக்குளம், அந்தணரில்லம் முதலியன அமைத்து விளம்பிஷு ஆனிமீ ௰௪௨ முறைப்படி கும்பாபிஷேகமியற்றி அதற்குவேண்டிய விளைநிலங்களும் மூலதனமுஞ் சேகரித்துவைத்தனர். இப்புண்ணியகைங்கரியத்திற்குப் பெருந்துணையாய்நின்றவர் அருங்குணியும், தனவணிகமணியுமாய உய்யக்கொண்டான் சீர்வயல் அள. முரு. திருவாளர், சுப்பிரமணியன் செட்டியார்என்னும் செம்மலாவார். இப்போதுமேற்கண்ட ஸ்ரீதத்வராயசுவாமிகள் ஆலயம்அழகுறஅமைக்கப்பெற்று அந்தணர்களைக்கொண்டு இரண்டுகாலஅபிஷேக ஆராதனைகளும் வருடந்தோறும்வரும் ஆடிமீ சதய நக்ஷத்திரத்தில் ஸ்ரீதத்வராயப்பெருந்தகை சமாதியெய்திய திருநாளாதலின், அன்று அடியவர்கட்கும் ஏழைகட்கும் அன்னமளித்தலும் ஸ்ரீதத்வராயசுவாமிகளின் திருவுருவத்திற்குத் தக்கவிமானத்து இரவு திருவோலக்கக் காட்சியும் நடந்துவருகின்றன. இவரது ஆசிரியராகிய ஸ்ரீசொரூபானந்தசுவா

மிகள் சமாதியைக்காணவேண்டிப் பலதுறையிலும் முயன்றும், துணிவுதோன்றும் நிகழ்ச்சியுடன் காணப்பெறவில்லை. தொடர்ந்து விசாரிக்குமளவில், திருநெல்வேலிக்கு வடகிழக்கு, தாம்ரபர்ணிக்கரையில் சேந்தமங்கலத்தில் சமாதியுற்றுத் திருச்சிற்றம்பலமுடையார் எனவழங்கிவருவதாயும், அவர் சமாதியெய்தியதிருநாள் வைகாசிமீ குருவாரம், கேட்டைநக்ஷத்திரம் ஏகாதசிதிதியெனவும்இவர்கள்காலவெல்லைசுமார்(௩)வருடங்கட்கு மேலாயிற்றெனவும் கூறலாம். "அஃதெப்படியறியக்கிடக்கின்றதெனின், சேந்தமங்கலம் கோயிற்கல்வெட்டினாலும், சங்கரானந்தர் நான்மணிமாலையிலும் தொகைவகைசொல்லவறிந்தோம்பெருந்திரட்டுச்சேகரித்தகாலம், சாலிவாகனசகாப்தம் (௫௯௭)ல் யுவ வருடம் மாசிமீ திரட்டிமுடிந்தது. தத்வதேசிகர் சந்தானத்தில் நடும் சந்தானமாகிய சுவயம்பிரகாசயோகி தேவாரந்திருவாய்மொழி (௰௯)ம் எடுத்து அதிகாரம் ௫௨ பாட்டு நூறாம் திரட்டிச் சங்கரநாராயணத்திரட்டென்றுபெயரிட்டுஇருக்கின்றார். அதுசங்கரநாராயண புரத்திலிருக்கலாம்" எனவுங்குறிக்கப்பெற்ற ஒரு பழையபனையேடுகாணப்பெற்றது. இவற்றை நம்புதற்குரிய காரணமும் ஸ்ரீதத்வராயர் திருவாக்கிற்காணப்பெறுகிறது. அஃதாமாறு, நெஞ்சுவிடுதூதில் "அன்பதனாற்-புண்ணியநீர் கங்கு புரளவரும்பொருனைத், தண்ணதியும் பண்டைச் சதுர்மறையும் - விண்ணவரும், வந்துசூழ் சேந்தை வடகுடபால் வந்திப்போர், சிந்தைநோ யெல்லாஞ்சிதையும்வகை -யெந்தைபிரான், மெய்யன்பர் தற்சூழ வீற்றிருக்குமெய்ம்மையிதிற், பொய்யொன்றுமில்லை" யென அறுதியிட்டருளியிருக்கின்றனர். பொருனைத் தண்ணதி என்றும், சேந்தை வடகுடபால் இன்ன ஊரெனக் கூறாது சேந்தை வடகுடபால்என்றும் கூறியிருத்தலினால், தாம்

ரபர்ணிபாயும் திருநெல்வேலியின் வடகிழக்கில் 3-வது மைலில் தாம்பிரபர்ணிவடகரையிலுள்ள சேந்தமங்கலம் என்னும் ஊரின்கண் வடமேற்குமூலையில், என்னும் பொருளுந்தரலாம் எனஐயுறக்கிடக்கின்றது. அவ்விடத்திற் சமாதிகள்காணப்பெறினும், சொரூபாநந்தர் சமாதிதான் எனப்புலப்படக் காணத்தக்க அறிகுறிகள் காணப்பெறவில்லை. கல்வெட்டும், சங்கரநாராயணத்திரட்டுங்கிடைத்தற்குரிய முயற்சிசெய்து வருகின்றேன். கிடைப்பின் அவற்றையும்அச்சியற்றிப்பிரசுரிக்க ஆவலுடையேன். திருவருள் கூட்டுவிக்குமாக. மேற்கண்ட ஓலை எட்டிற்கண்டபடி பார்க்கின் இற்றைக்கு (1252)வருடத்திற்கு முன்னரிருந்தனரென்பது தெரிகிறது. அன்றியும்சங்கரநாராயணத்திரட்டுச் சேகரித்த ஸ்ரீதத்வராயசந்தானத்தில் (நடு) ம் சந்தானமாகிய சுவயம்பிரகாசயோகி திரட்டியதுஎனக்காணப்படுகின்றமையின், சுமார் கூறுா வருடங்கட்கு முன்னர்ச்சமாதியெய்தி யிருக்கவேண்டுமெனஅறியலாம். இப்பெரியார்வாக்குத் தமிழறியும் விழைவுடையார்க்குப் பேரமுதனையஇன்சுவைததும்பும் பாக்கள் பலசந்தங்களால் அமைக்கப்பெற்றிருப்பதுடன், தெய்வவேறுபாடின்றி அடங்கன்முறையின் பிள்ளைத்தமிழில் "தம்பத்துனை நிந்தித்தொருவேள்வி தொடங்குந் தக்கன் றலையோநீ தானங்குரி கொள்ளுங்-கம்பக்களி றேவெங் காலன்னுயி ரோவக்கஞ்சன்வர வேவும்வஞ்சச்சக டோதிண்-கும் பக்கரி யோமா மருதோதிரு முன்கை குவியுமபடியார்தம் பவ மோவிவை யன்றே-செம்பொற்கழ லிட்டுச் சிதைவிப்பதுநின் சிற்றடியேமென வெஞ்சிற்றில்லஞ்சிதையேலே" என்றும் நெஞ்சுவிடுதூதில் "நாயனார்,சுந்தரர்க்குங்குந்திசு தர்க்குந் துணிவுடனப், பைந்தொடிபால் வேந்தர்பாற் பைம்பொனடி-நொந்திடவே,அன்று தூதானவர் பாலடியேற்கா, வின்று நீ தூதாயெழுந்தருளாய்"

என்பனவாயமனைதைத்தூதனுப்புதல்போன்றபலபாக்கள்முத்தும்
பவழமும்போலக்கலந்து செறிந்துநிற்குமழகும்,பக்தர் கணங்களை
த்துதிக்குங்கால், பிள்ளைப்பிரபந்தம் "கதியதிதுவாரூமெனமுயலு
காமகருமிகள் கணுதர் கபிலர்மாக்கணிகர்மதி யாளர் நருகர்முதல்
வாதர் கலைகள்கத ருமலிறைவர் தாண்,முதியதமிழ் மாலை யணி
யவருகாழி முருகர்மறைஞான முனிவர் மான் முடிவறிவில் பாத
ருளரிகொடு தூது முதல்வர்தனி போக மொழிகுவா, ரதிகை
நகர்நாத ரருள்செய்திரு நாவினரையரிறை யாளு மியல் பொரு
தழுதழுது பாடி யருளுதிரு வாதை யதிபர்சட கோபர் துதிகளே,
மதிசெயவெங் நாளு மகிழ்வொடுமை யாடும் வகை யருளு நாதன்
வருகவே மணிதர்வடி வாகி வருகருணை வாரி வருகவெனை
யாளி வருகவே" என்பனபோன்ற கவிகளின்வனப்பும், நெஞ்சு
விடுதூதில்" வெய்ய திரிபுரமுஞ் சுட்டானைமெய்ப்படவே துய்ய
மறையாலுஞ் சுட்டானை-மெய்யாக, வானுமடிமைபுகுந்தாளானை
வல்வினையேன் றானு மடிமைபுகுந் தாளானை-வேனில் வே,ளெப்
யப்படுங்கோலஞ் செய்தானை யென்னையிங்ஙன் செய்யதிருக்கோ
லஞ் செய்தானை-யையமற,நேராகச் செய்தொன் றுஞ்செய்யானை"
"மெய்யானை மெய்யர்க்குப்பொய்யானை யஞ்சலெனுங்,கையானை
யென்னையிங்ஙன் கையானைப்-பொய்யருளத், தாயானை யொன்று
ந்தா னுகானையென்பிழைக்குக்,காயானை அங்கைக்கனியானை"என
இருபொருட்படவும்நிரையழகுறவும் வைத்துப்பாடிய பாக்களின்
மாண்பும், பரணிப்பிரபந்தங்களில் அஞ்ஞவதைப்பரணி, மோக
வதைப்பரணி இரண்டினும் தத்துவக்குழாங்களை எதிராக்கி,படை
வகுத்து, போர்ச்செறிவுகாட்டி வெற்றிகொளுந்திறனை விவேகி
கட்கு அறிவூட்டிச்செல்லும் ஆற்றலும், வெண்பாக்களில் அசைப்
பதம் முதலியனவின்றிமுழுச்சொற்கள் புனைந்து பெரும் பெ

ருள்களைத்திணித்துக்குறுக்கிக் கூறிச்செல்லுங்காட்சியும் அறிஞர் கள் மதிக்குப்பெருவிருந்தாக விருக்குமென்பதிலையமென்னே?

ஸ்ரீ பொன்னம்பலஞானதேசிகர் என்னும் எனது பரமாசிரியர் இத்தகை அருமை நூலை முட்டறப்பல பிரதிகள் கொண்டு ஆய்ந்தச்சிடப்பிரயத்தனஞ்செய்தும் ஆகூழின்மையான்முடிவெய்தாது போயிற்று. பின்னர் எனதாசிரியர் ஸ்ரீ காசிவாசிசிதம்பரஸ்வாமிகள் காலத்தச்சியற்ற வெண்ணி அச்சியந்திரசாலையிற் கொடுத்த நாடொடங்கி இந்நூற்கு அச்சியற்றுங்கால் வந்தஇடுக்கண்கள் எண்ணிலடங்கா.அதனுனே இந்நூல் எப்படியாயினும்வெளிவந்து உலவின்பின்னர்த் திருவருள்கூட்டுவிக்கின் மறுபதிப்பில் அரும்பதவுரை முதலியவும்சேர்த்துப்பல திற ஆராச்சியுடன் முழுச்சரித்திரமும் தெரிந்துவெளியிடலாம். இப் போது ஸ்ரீபொன்னம்பல ஞானதேசிகரவர்களாலும், ஸ்ரீராமானுஜஐயா அவர்களாலும் திருத்தியபிரதிகளையும், கபிஸ்தலத்திலிருந்த "தத்துவராய சுவாமிகள்." (இவர்கள் இந்நூலிலே மிகவிறுகியபற்றுடையாரா யிருந்ததனுல் இப்பெயர்வந்தது,) என்னும் பெரியார்பாலிருந்து ஸ்ரீபொன்னம்பலஞானதேசிகரவர்கள்காலத்தில்வாங்கிமடத்தில் வைத்திருந்ததுமாய ஓலைச்சுவடியினையுமொத்திட்டு எனது சிற்றறிவிற் கெட்டியவளவுஅச்சியற்றியிருக்கிறேன். எனதிதயவனசத்துறை இமகிரிஜனநியருள் செய்யின், பல பெரியோரைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து மறுபதிப்பு அச்சியற்ற வெண்ணியுள்ளேன்.

---

திருவருள்கூட்டுவிக்குமாக.
பிழையுள தேல் உலகம்பொறுக்க.

பரஞ்சோதி,
ஸ்ரீ பொன்னம்பலஸ்வாமிகள் மடம்,
சிதம்பரம்.

# பிழை திருத்தம்,

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். | பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| ௬௭ | ௧ | முன்கைக் | முன்கை | ௱௩௩ | ௧௮ | வேறேனில் | வேறெனில் |
| ௭௧ | ௮ | தீவினையென் | தீவினையேன் | ௱௩௮ | ௧௭ | ஹுற்பவ | லுற்பவ |
| ,, | ௬ | தாயறியே | தாணறியே | ௱௪௧ | ௨௩ | ஊளனே | உளனே |
| ௭௯ | ௰௧ | மற்றிலைப் | மற்றிலை | ௱௪௬ | ௫ | மறுளா | மருளா |
| ௮௨ | ௬ | சொல்விற்பா | சொல்விப்பா | ௱௪௮ | ௭ | செய்க | செய்ய |
| ,, | ௮ | பரமன் | பிரமன் | ,, | ௨௰ | வறுத்த | லறுத்த |
| ,, | ௰௨ | கண்ணல் | கண்ண | ௱௪௯ | ௰௭ | யாவியங் | யாவியுங் |
| ௮௩ | ௨ | பைப்பின் | பைபின் | ௱௫௩ | ௧0 | யுள்ளது | முள்ளது |
| ,, | ௫ | திலத்தொல் | திலதொல் | ௱௫௬ | ௨ | லாவியினு | லாவியு |
| ௮௪ | ௫ | வினைச்சித்த | வினைசித்த | ௱௫௭ | ௧௧ | வுரியவர் | தாவுரியவர் |
| ௯௭ | ௰௯ | விண்ணைவி | விண்ணைணவி | ௱௬௨ | ௮ | ஞனுள | ஞணுள |
| ௱௬ | ௫ | மாஹுமனே | ஹுமனே | ௱௬௩ | ௨0 | மதச்சென்ற | மதிசென்ற |
| ௱௯ | ௰௮ | திழுக்குந் | திருக்குந் | ௱௬௪ | ௧ | னுகர்ந்து | நுகர்ந்து |
| ௱௧௫ | ௰௯ | ஞெளிவரன் | ஞெழிவான் | ௱௬௫ | ௰௮ | யேத்தி | யேத்த |
| ,, | ௨0 | ஞைஞெளி | ஞைஞெழி | ௱௭௧ | ௧ | காணே | காணேன் |
| ௱௨0 | ௧0 | தாரனெ | தானெ | ௱௭௩ | ௰௧ | மூங்கி | முழங்கி |
| ,, | ,, | தேரனென | தேனென | ,, | ௨0 | களிபிளிற | களிபிளிற |
| ௱௨௬ | ௨௨ | மொய் | மெய் | ௱௭௮ | ௬ | வயப்பெழுது | யெப்பொழுது |
| ௱௨௮ | ௧௩ | தோய் | தோய | ௱௮0 | ௰௬ | ஞவினிடை | நோவினிடை |
| ௱௩௧ | ௧௪ | சுருக்கு | சுருகி | ௱௮௯ | ௨௨ | மெம | மெம |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். | பக்கம் | வரி | பிழை. | திருத்தம், |
|---|---|---|---|---|---|---|---|
| ௱௯௰ | ௰௬ | தெடுவது | தேடுவது | ,, | ௨௦ | டாதேரிச | டாதரிச |
| ,, | ௰௯ | னெனேயா | லெனேயா | ௨௬௯ | ௧ | ளாய்கை | ளரய்க்கை |
| ௱௯௬ | ௰௪ | வோநெறி | வோர்நெறி | ௨௭௧ | ௩ | சிறிதொழி | சிறுதொழி |
| ௨௦௨ | ௰௫ | வென்றதனே | வென்றதெனே | ௨௭௨ | ௫ | பத்திறன் | பத்துநான் |
| ௨௦௮ | ௰௫ | வரைத்தனு | வரைதனு | ,, | ௰௫ | மாமரை | மாமறை |
| ௨௧௮ | ௪ | காணர் | காணன் | ௨௭௩ | ௭ | வருபானு | வருபானு |
| ௨௨௦ | ௧௦ | புகுதுபூ | புகுதுங் | ௨௭௫ | ௭ | கொன் | போன் |
| ௨௨௭ | ௬ | விருத்தி | விரித்தி | ௨௭௬ | ௰௭ | நெல்லைக் | னெல்லை |
| ௨௨௯ | ௧ | வொழியாதி | வொழியாத்தி | ௨௮௧ | ௫ | மவர்பயந்த | மவர்ப்பயந்த |
| ௨௪௬ | ௧௩ | கோரணிகொ | கோரணிகொள் | ,, | ௰௩ | மளவிருங்க | மளவிற்ருங்க |
| ,, | ௰௫ | மூப்புட் | மூப்புப்பிணி | ,, | ௰௫ | மான்புற் | மானின்புற் |
| ,, | ௰௬ | கோப்புபல | கோப்புப்பல | ௨௮௭ | ௰௩ | மொய்மலர் | மொய்ம்மலர் |
| ,, | ,, | கூத்தாட்டு | கூத்தாட்டுத் | ௨௯௨ | ௨௨ | யிருந்ததே | யிருந்தவே |
| ௨௪௭ | ௧ | மோழியா | மொழியா | ௩௦௨ | ௧௯ | வரியேன் | வறியேன் |
| ௨௪௮ | ௭ | நிவந்த | நீவந்த | ௩௦௪ | ௧ | தருளிற்று | தருளினு |
| ,, | ௧௦ | தார்நேரா | தானேரா | ,, | ௬ | ரனேயோ | ரனேயே |
| ,, | ௧௨ | மமைந்தேன் | மமைத்தேன் | ,, | ௯ | யுலரானி | யுலராகி |
| ௨௫௪ | ௧ | யுவகைத் | யுவகை | ௩௦௮ | ௭ | ரின்னிதழ் | ரின்னிதழ்ப் |
| ௨௫௫ | ௫ | யன்றி | யின்றி | ௩௧௨ | ௪ | கெங்கனே | கெங்ஙனே |
| ,, | ௧௦ | கழிப்பான் | களிப்பான் | ௩௨௬ | ௰௯ | பிலத்தா | பெலத்தா |
| ௨௬௧ | ௧௩ | திரைக்கோ | திரைகொ | ௩௨௭ | ௧௫ | மித்தாற் | மித்தாக் |
| ௨௬௮ | ௰௬ | ளயனித்து | ளயனீத்துத் | பக்கம் ௩௰௮ பின் ௩௨௧-சரி. | | | |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். | பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| ௩௩௩ | ௨௦ | கோவத்தை | கோவத்தைக் | ௩௭௧ | ௧௪ | யாவெந்நி | யார்வெந்நி |
| ௩௪௩ | ௰௮ | யிடர்சோ | யிடர்சேர் | ௩௭௪ | ௧௦ | டிறடா | டிரடா |
| ௩௪௪ | ௧௦ | பவையில | பவையில் | ௪௮௮ | ௨ | ஞெருத்தீ | ஞெருதீ |
| ௩௫௨ | ௨ | நிகழ்வறு | நிகழ்வுறு | ௪௯௪ | ௧௬ | மருவி | மருவு |
| ௩௫௬ | ௨ | மறிவொணு | மறியொணு | ௫௰௬ | ௧௪ | சொலலே | சொல்லே |
| ௩௬௫ | ௯ | மொருக்கா | மொருகா | ௫௨௭ | ௧௧ | மார்க்களொ | மார்களொ |
| ,, | ௰௭ | குறியல்ல | குறியன்று | ௫௪௨ | ௯ | வொண்டு | கொண்டு |
| ௩௭௦ | ௰௧ | நன்றிக்கா | நன்றியறியப் | ௫௫௧ | ௫ | மையமு | மையுமு |
| | | காப்பழி | படு | ,, | ௨௨ | புரிக்கலம் | பரிகலம் |
| ௩௭௨ | ௧௫ | காணுதறி | காணுவறி | ௫௬௬ | ௯ | பெரியாரிற் | பெரியாரில் |
| ௩௭௩ | ௰௧ | காப்பவே | காப்பதே | ௫௭௬ | ௩ | மிறைவினை | மறைவினை |
| ௩௮௨ | ௧௫ | தானலா | தமலா | ,, | ௬ | வினைச்சட | வினைசட |
| ௩௮௮ | ௰௧ | விதென்னே | யிதென்னே | ௬௦௨ | ௧௦ | மாததிர | மாத்திர |
| ௩௮௯ | ௰௬ | ஒழிந்தன | ஒழிந்தது | | | | |
| ௩௯௬ | ௰௫ | னழிந்ததே | னழிந்தவே | | | | |
| ௪௦௨ | ௧௪ | தாளிணைப் | தாளிணை | | | | |
| ௪௦௪ | ௨௦ | ஞெருனீ | ஞெருநீ | | | | |
| ௪௦௭ | ௧௦ | ஞென்றுனு | ஞொன்றுனு | | | | |
| ௪௦௮ | ௭ | நிலனிலோ | னிலனிலோ | | | | |
| ,, | ௯ | யுவமையா | யுரிமையா | | | | |
| ௪௨௦ | ௨ | தற்க | தார்க்க | | | | |
| ௪௪௪ | ௭ | வாணலகை | வாளலகை | | | | |

ஸ்ரீ சச்சிதானந்த

பரப்பிரஹ்மணேநம:

# ஸ்ரீ தத்துவராயசுவாமிகள்

அருளிச்செய்த

## அடங்கன்முறைபதினெட்டனுள்

முதலாவது

# திருத்தாலாட்டு.

தத்துவப்பிரகாசம்.

அன்னைத் தரமாகி யாவர்க்கு மெய்தரிய
தன்னைத் தரமேனி சாத்தும் பெருமானே. (௧)

துஞ்சும் பிறவித் துயரை நினைந்தடியே
னஞ்சும் படிகண் டழுவித்த வாண்டகையோ. (௨)

விரும்பித் தனைத்தேட வெவ்வினையே னெஞ்ச
விரும்பைக் கனிசெய்த வெந்தை பெருமானே. (௩)

முன்வேத மெல்லா மொழிவரிய மொய்கழல்கொண்
டென்வே தனைகண் டெழுந்தருளி வந்தானே (௪)

நன்கொன்றும் வானவர்க ணின்றுணங்க நானிலத்தே
யென்கண் களிக்க வெழுந்தருளி வந்தானே. (௫)

தொந்தனை தீரச் சுருதி தொழும்பதத்தை
சிந்தனை செய்ய மதிதந்த வள்ளலோ (௬)

நஞ்சேய் பிறவிக்கு நாயே னடுங்காம
லஞ்சே லஞ்சேலென் றருளும் பெருமானே. (எ)

தேசார் முனிவர்குழா நின்றுணங்கத் தீயேனைக்
கூசாம லாளக் கொடியிட்ட கொண்டலோ. (அ)

மீட்டுகைக்கு முள்ள முருக்கிநில மேல்வீடு
காட்டுகைக்கும் வீரக் கழலிட்ட கண்டனே. (கூ)

கண்குளிர நான்கண்டு கொள்ளக் கடிகமழுந்
தண்களப மெய்நிறையச் சாத்தும் பெருமானே. (க0)

அனைத்துத் திசைகளுக்கு மப்பாலாய் நின்ற
தனக்குப் பரிவட்டஞ் சாத்தச் சமைந்தானே. (கக)

இங்கழுநீர் மாலை யெனக்கருளி யின்னளிசேர்
செங்கழுநீர் மாலை புனைந்தருளுந் தேசிகனே. (கஉ)

புண்டரீ கத்தவனுங் காணாத பொன்முடிக்கே
தொண்டர் திருமாலை சூட்டக் கொடுத்தானே. (கங)

செற்ற பிறவிநீறாகத் திருமுண்ட
மற்ற பிறைபோ லணிந்தருளு மண்ணலோ. (கச)

ஆங்கோபி லீதென் றடியே னகம்புகுதப்
பூங்கோயிலுள்ளே புகுதும் பெருமானே. (கரு)

ஆத்த மறைகூற வஞ்சு மடிபிணைகண்
டேத்த வடியர்குழா மின்புற் றிருந்தானே. (கசா)

வேதன மென்னுருவ் மாக்குதற்கு வீரசிங்
காதன மேறியமுந்தவி ருந்தானே. (கஎ)

தோய முன் பாகத் தொழுதெழுமென் கைப்பொருளுங்
காயமு மாவியுங் கைக்கொள்ளுங் கற்பகமோ. (௧௮)
புண்டரிகக் கைம்மலரென் புன்றலைமேல் வைத்தருளிப்
பண்டை வினைதீரப் பார்க்கும் பெருமானே (௧௯)
ஆவா விருவ ரறியாத சேவடியை
வாவாவென் றென்றலைமேல் வைக்கும் பெருமானே. (௨0)
வட்டைவா சித்து விடாமே யெனக்கென்னைக்
காட்டவா வென்ற கருணைத் தடங்கடலோ. (௨௧)
என்னதி யானென் றினியொருகா லத்தினுள்ளு
முன்ன லறவூ னுயிர்வேறு செய்தானே. (௨௨)
பூண்ட புலன்கள் பொறிவழியே போகாமே
மீண்டிரு வென்று விளம்பும் பெருமானே. (௨௩)
புற்கடந் தோன்றாத வண்ணம் புரளாமே
மற்கட மாமனத்தை மாட்டும் பெருமானே. (௨௪)
பொய்யாகு மெய்யில்லை வேறாகும் புருடனைக்
கையா மலகமெனக் காட்டும் பெருமானே. (௨௫)
உனைமறைய் மூடு முணர்விலா மாயைக்
கனவிருளைக் காணென்று காட்டும் பெருமானே. (௨௬)
கண்ட விருளைநீ காணாதே யவ்விருளைக்
கண்ட வறிவைநீ காணென்று சொன்னானே. (௨௭)
கண்ட வறிவுதனைக் கொண்டுன்னைக் கண்மறைத்த
பண்டை யிருளைநீ பார்த்துக்கா ணென்றானே. (௨௮)

கங்குலா மர்யவிருள் காண்கிலேன் காண்கின்ற
தெங்கு மறிவென் றிசைக்க விசைந்தானே. (உகூ)
சர்தமா மிவ்வுடல நானல்லேன் சான்றாகும்
போதமே நானென்னப் போதிக்கும் போதகனே. (௩0)
ஏரணவு மிஞ்ஞாலத் தோற்ற நிலையிறுதி
காரணநா னெனபடி காட்டும் பெருமானே. (௩க)
யானறிகை யாலே யறிவ னறிவதல்லே
னறிவ னதுமென நாட்டந் தருவானே. (௩உ)
சான்றா மறிவுருவுஞ் சாக்ஷியமா மிச்சகமுந்
தோன்றாத வண்ணஞ் சொருகுவித்த தோன்றலோ (௩௩)
இருந்த விருப்பினையும் யானறிவ தின்றித்
திருந்த விருக்க வருள்செய்த தேசிகனே. (௩ச)
அந்த வுபாதி யுனக்கான வப்பரிசே
யிந்த வுபாதியிறைக் கென்னும் பெருமானே. (௩ரு)
தான்சகத்தைக் கண்டுந் தனைக்கண்டுந் தான்மறந்து
முன்செ யவத்தைமுன் றுண்டிதற்கு மென்றானே. (௩சு)
அழுந்த விருந்தவிருப் பாரா லதுவிட்
டெழுந்திருந்த தாரா வியம்பிக்கா னென்றானே. (௩எ)
வல்லிருண் மூடி யறியேனை மற்கடத்தைப்
பல்லிளி கண்டு பதைப்பித்த பண்பனே. (௩அ)
பதையாத வண்ணம் பரஞ்சுடரைக் காட்டிச்
சிதையா விருளைச் சிதைவித்த சேவகனே. (௩கூ)
மீட்சி செலவின்றி வேறின்றி விண்முதலாங்

காட்சியுங் கண்ணாகக் காணுங்கண் டந்தானே. (சo)
கண்டகண் ணாலே கடலுலகும் பாதலமு
மண்டமுநே ராகவமிர் துசெய்த வண்ணலோ. (சக)
உதிப்பதெல் லாமு முணர்வன் றுணர்வை
மதிப்பதுவும் விட்டுநீ வாளாவி ரென்றானே. (சஉ)
நாற்றஞ் சுவையொளியூ றோசையெலா நாட்டமெனுந்
தோற்றமுங் காணாதே சும்மாதி ரென்றானே. (சங)
சித்தசித் தீசத் திரிவிதமுந் தீர்ந்தபா
ழித்தனைக்கு முற்பத் தியுமிதுவே யென்றானே. (சச)
மும்மைப்பாழ் தீர மொழிபா மொழியாலே
நம்மைப்பா ரென்று நவிலும் பெருமானே. (சரு)
அபாவபா வங்களுக் கப்பாலாய் நின்ற
சுபாவமாந் தன்னைசோதி சொல்லாமற் சொன்னானே. (சசு)
இவ்வா றறிந்தபரி சென்னவொண்ணா வின்பத்தைச்
செவ்வாய் மலராமற் செப்பும் பெருமானே. (சஎ)
ஆனந்த வெள்ளமென தங்கைக் கனியாக
மோனந்தன் னாலே மொழியும் பெருமானே. (சஅ)
ஆட்டின மாயக்கூத் தென்ன வகத்துள்ளே
கூட்டெனை ஞானக்கூத் தாட்டிய வித்தகனே. (சகூ)
செல்ல லறுத்த சிவப்பிர காசனே
சொல்லை மறைதேர் சொருபானந் தச்சுடரோ. (ருo)
சேய்வந்த வானவருங் காணாத சேவடியான்
வாய்வந்த வாபுகழ வாழும் பெருமானே. (ருக)

திருத்தாலாட்டு முற்றிற்று.

இரண்டாவது.

# பிள்ளைத் திருநாமம்.

[தத்துவ நிலையம்]

(காப்புப்பருவம்.)

## மும்மூர்த்திகள்.

ஏத்தியிறை யேகனென வனேகனென மறையி
னீறுகளு நின்னுருவ மின்னதென வுணராச்
சோதீதமுனக் கபயமென வனவரத நின்று
சொருபானந் தன்செம்பொற் றுணைமலர்த்தாள் காக்க
மூர்த்திகண்மூ வர்களென்ன மாலரன்நான் முகனாய்
முக்குணத்தான் மூவுலகு முறைபிறழா வண்ணங்
காத்தழித்துப் படைத்துவருங் கருமுகில்செம் பவளக்
கனகமெனுந் திருமேனிக் காரணநா யகரே. (௧)

## கலைமகள்.

பொய்யுடலைம் பொறிபுலனா யழியாம லடியேன்
பொருவிலனந் தானந்த போதம்வடி வாக
வையமுயிர் பரமெனும்பே தங்கழியத் திருவாய்
மலர்ந்தசொரு பானந்தன் மணிமலர்த்தாள் காக்க
செய்யகன கக்குன்றின் முகத்திடத்துந் திருவார்
செழுங்கமலத் தன்னம்போ லெழுந்தருளி யிருந்திங்
குய்யுமறம் பொருளின்பம் வீடுயிர்கள் குணர
வோதியநா மகளென்னு மும்பர்கணா யகியே (௨)

வேறு.

சத்தமாதர்கள்.

உலகுபதி னானுமாக வாக்கின
னுயிர்கணிலை யாகுமாறு காப்பவ
னொருவும்வகை நூறியாடு கூத்தின
னொருபதொரு நூறுகூடு நோக்கின
னிலகுதல னேழுமேறு கோட்டின
னெழுமலையு மூடுபோன வேற்கைய
னிகலிவரு தாருகாரி யார்க்கொனு
மெழுகடவுண் மாதர்பாது காக்கவே
கலகமத கோபலோப காத்திரர்
கனவுமணு காமைகாது மைத்திரி
கருணைமுதி தாதிமாத ரார்க்கொரு
கணவனென மேவிவாழு மாத்திகர்
துலவுமறை யோதுமாறி லாப்பர
சுகமெய்யுணர் வானுபூதி யாத்தும
சொருபமெனு மாறுமேனி சாத்திய.
சொருபமினனை யாளிபாத மேத்தியே. (௩)

வேறு.

உமையவள்.

சோதிசொரு பாகி னீதியறி யார்க
டோமிலொருமுவ ரென்ன வேத்திய
தூயமறை யோதி நாலுமுணராத
தூலமதி யாளர் சொன்னசாத்திர

வாதியரோடேறு மாறுசில பேசி
மாளும்பதீர வென்னை யீட்கொளு
மாறுநர ணுகி மாயவிரு டீர
மாறவிருதாள்தள் சென்னி சூட்டியை
யாதியரி மாதர் தாமிருவ ராலு
மாசைதணியாது முன்னோர் நாட்பதி
னாறுமடி யான வாயிரவர் கூடி
பாடவரனுசை தன்னி னீத்தொரு
பாதியொரு மாது வாழவிரை வோடு
பாயவொரு மாது சென்னிமேற்கணை
பாடழிய மேவு மாரன்மலர் பாத
மீதுமனு காத கன்னிகாக்கவே. (ச)

வேறு.

முப்பத்து முக்கோடி தேவர்.

கதிபதியாக் கட்டனை நாயினேற்கருள்
கருணையனைக் கற்றவாறு பாவினாற்கொடு
துதிசெய்துமெய்ப் பத்தர்பாடி யாடு தீர்த்தனைச்
சொருபனைமற் றொப்பிலானை ஞான மூர்த்தியைப்
பதினொருநெற் றிக்கண்ண ரோரோர் தேர்க்கெழு
பரியொருசக் கிரத்துநான்மை மூவர் பாற்கதி
ரெதிரிலிபத் தட்டலோக பாலர் வைத்திய
ரிருவரெண்முப் பத்துமூவர் தேவர் காக்கவே (ரு)

காப்புப் பருவமுற்றிற்று

# வருகைப் பருவம்

வேறு

நறைதரு நளின முறைபவ னூரக
நடுவறி துயில்கொ ளமலனீ
ணதிபொதி சடில தரவரன் முதல
நவில்வுறு மமரர் கணமுனட்
சிறைதரு பிறவி யறும்வகை யுறவு
செயவுள னுருகி நயனொடே
செயசெய விறைவ செயவென மொழிகள்
செவிமுத லருகு செலவுறு
வுறைதரு முடலை யுடலொடு நடலை
யுறுபவ கடல்கொ ளலையென
வுறுபுல னினிமை யொழியநல் வழியி
லுறவரு மெனையும் வினவியே
மறைதரு பொருளொர் மொழியினின் மதிகொள்
வகைசொல வலவன் வருகவே
வருபவ மொழிய வனுபவம் விளைய
வடிவுகொ ளமலன் வருகவே. (க)

உரையுணர் வரிய வுணர்வுரு நிகழ
வொருமொழி யருள வருகவே
யுணர்தொறு முருகி யுளனுடல் புளக
முறவுற வருள வருகவே
திரையொடு கரையில் சிவவுணர் வுததி
திளையென வருள வருகவே

செனனமொ டிறுதிசெலவா விலதொர்
தெளிவுற வருள வருகவே
யிரையுறு புலனெ டிசையுறு பொறிக
ளிவைதொறு மருவு கரணமே
லிருடருபுருட னிறையெனும் விததி
யிவைகெட விதுவ தெனவொணு
வரையறு நினது வடிவொளி திகழ
வழியிட வலவன் வருகவே
வருபவ மொழிய வனுபவம் விளைய
வடிவுகொ ளமலன் வருகவே. (உ)

வினவியெ னுருவு தரவரு ளுருவின்
வெளிபடு விமலன் வருகவே
விரகழி யடிய ருளமிக வுருகி
விழிபுனல் சொரிய வருகவே
கனவினு மமரர் கருதவு மரிய
கழலிணை யருள வருகவே
கருதரு முருவு கரதல மருவு
கனியென வருள வருகவே
யெனவினை யளவ தெழுகடலளவ
தலவெனு மிதனை விழிபினு
லெரிமுக மிடுவை யெனும்வகை பொடிசெய்
தெனதெழு பிறவி யிரியவே
மனவிட ரழியும் வகைபொழி கருணை

மழைமுகில் வருக வருகவே ஃ
வருபவ மொழிய வனுபவம் விளைய
வடிவுகொளமலன் வருகவே. (ங)

வேறு

மலரின் மணமென மணியினொளியென
மகிழு மொருபொருள் வருகவே
மதியு மிரவியு மனலு மெனவதின்
மருவு பயனவன் வருகவே
யலது வுளதென வறிய வொருவரு
மரிய விரகினன் வருகவே
யமிர்து கருசுவை யெனவெனகமனி
யருளு மருபரன் வருகவே
புலனு மனமுதல் கரண மறிவரு
புனித வெனையுய வருகவே
புகழ்வ திகழ்வது புதுமை பழமையொ
டொழியு நிலையவன் வருகவே
சொலவு கொடுதனை யறியுமு ணர்வினர்
தொடர வரியவன் வருகவே
செருப் வெனையுநி னருளி னடியிணை
துதிசெ யெனுமருள் வருகவே (ச)

வேறு.

மலர்தலை யுலகின் வரும்பொருண் முழுதும்
வடிவெனு மொருவன் வருகவே
மருவிய பொருள்கண் முழுதினு மொழிப
வடிவெனு மமலன் வருகவே
நலமொழிவறவெ னுளன்மனி யெனையு
மழிதரு நயனன் வருகவே
நவமணி யொளியி னொளிர்சு சொருப
நீமதென வருள வருகவே
சலமதி யெனவென் மனனுறு துயர
மொழிதர வருள் வருகவே
சளனுறு மவல வறுசம யமுப
றவிரெனு மழகன் வருகவே
சிலுகுறு மறைகள் பலசொலி யுணர்வு
தெளிவிலர் மறையன் வருகவே
திருவடி யெனது சென்னிமிசை யருளு
சிவபரன் வருக வருகவே. (ரு)

வேறு,

பரவுமிமை யோர்கண் முனிவர்மறை யோது
பரிசுதனை நாடி யறிவுறார்
படர்பெருக மேனி யருள்கொடெனை யாளு
பரிசுபடி மேவி யரியதா
[illegible]ரவுகபி ரூகை யறியினில தாமென்

நருமறையி னோதா முவமைதா
னனுபவம தாகவகிலநிகழாம
லறிவுவடி வாக வறிவுதா
னிரவில்வரு சோம னிருமையில தாகும்
விழியினுள மாசு கழியவே
யெனுமறையி னீதி யிலகவிறை சிவ
னெனநிகழு பேத மிரியவே
வரவுதிரி வான மதிவிழியின் மாசு
கழியவரு நாதன் வருகவே.
மனிதர்வடி வாகி வருகருணை வாரி
வருகவெனை யாளி வருகவே. (௬)

கறைசெய்பவ வேலை முழுகியழி யாது
கடிதுகரை யேற நினைகுவார்
கதிசொருபர் தாளி னணைகையெனு ஞான
கலையையுண ராது கலகமார்
துறைகடொறு மேவி யறிவறியு மாறு
சுழலுதுயர் தீரவருளிமா
சுருதிமுடி வோது பொருளெனுரு வாகை
துணியவரு நாதன் வருகவே
யறையுமள வாகி யனுபவ மிலாத
வவலவறி வாளர் கனவுநா
னதுகலற வாடு மலகைமன மாள்
வருளியினி யாறி யிருவெனு

மறைசொல்வழி யேகம் வடிவுசிவமாக
மதியருளு நாதன் வருகவே
மனிதர்வடி வாகி வருகருணை வாரி
வருகவெனை யாளி வருகவே. (எ)

கதியதிது வாகு மெனமுயலு காம
கருமிகள் கணாதர் கபிலர்மாக்
கணிகர்மதி யாள ரருகர்முதல் வாதர்
கலைகள்கத றுமலி றைவர்தான்
முதியதமிழ் மாலை யுணியவரு காழி
முருகர்மறை ஞான முனிவர்மான்
முடிவறிவில் பாத முளரிகொடு தூது
முதல்வர்தனி போக மொழிகுவா
ரதிகைநகர் நாத ரருள்செய்திரு நாவி
னரையரிறை யாளு மியல்பொரு
தழுதழுது பாடி யருளுதிரு வாதை
யதிபர்சட கோபர் துதிகளே
மதிசெயவெந் நாளு மகிழ்வொடுரை யாடும்
வகையருளு நாதன் வருகவே
மனிதர்வடி வாகி வருகருணை வாரி
வருகவெனை யாளி வருகவே. (அ)

வேறு.

நிறைவுகுறை வாத வழிதல்கழி சால
நிகழ்வுவர வீறு முதலோடே

நெடுமைகுற ணோர்மை பெருமைசிறி தாகை
யிலதுளது மான வுருவுமா
யுறுகையொரு காலு முலகின்வழு வாடு
லுலவு மடியேனு முருகவே
யொருவடிவ மாகி யிருபதமு மீபு
மொருகருணை யாளன் வருகவே
யறுசமய வாதி லுறுசமய நாடி
யழகிதிது தீப திதுவெனு
வவர்களொடு பேத கவலைபடிக வோது
மவலமதி யான சவலை போய்
மறையின்முடி வோது பொருளென்வடி வாக
மதியருளு நாதன் வருகவே
மரணபவ மாற விரணமனன் மாற
வருகவெனை யாளி வருகவே (௬)

புயலளக பார முயலளவிடாத
புதியமதி யாகும் வதனம்வேள்
புயமருவு சாப முரியவொருபாக
நெரியுமிரு கோணுபுருவநீள்
கயலுலவு காவி கமலமலர் நீல
முழையதல வாலவமுதமே
கரவுடைய நாளி னுலகுதடு மாறு
கல்கமிட மாரனளவியே
செயவருவதான கணைகளிரு காது

கிழியவிளை யோருள் ளழியவா
டிருநயன மார மிளநிலவு சாரு
சிறுமுறுவல் கோப மதரமா
மயிலியலின் மாதர் வடிவழகெ னுமன்
மதியருளு நாதன் வருகவே
மாரணபவ மாற விரணமனன் மாற
வருகமல பாதன் வருகவே. (௰)

---

வருகைப்பருவம் முற்றிற்று. ஆக-௬௫.

# தாற்பருவம்.

வேறு.

பருதிபாப்ச் சசியாய்நீர் பார்கா றீரானாய்ப்
　பகலிராத் திரியாய்மேல் கிழ்கூ ழாயாதே
கருதினார்க் கதுவாயே தாகா தாயானாய்
　கலகதார்க் கிகளோடே கூடா வீடாதே
பொருதிநாச் சலிபாமே நாமே நாமாகப்
　புகழுநாத் தருவானே போதா கூராநீள்
சுருதிசாற் றரியானே தாலோ தாலேலோ
　துதிசெய்வார்க் கினியானே தாலோ தாலேலோ. (க)

தெரிசனாத் தியமாறு லேறு மாறுமா
　சிவசுகாத் தியின்மூழ்கா மீள்கால் கூடாமே
முரசுதாக் கியதீவாய் மேனா னால்வேத
　மொழியுமாற் றமிலாதாய் மூவாய் சாவாதா
யரசனார்த் தனவேதா வானோர் கோமானா
　லறிபொனாப் பொருணோரே காணா நாம்வாழ்வா
னொருசொலாற் றருவானே தாலோ தாலேலோ
　வொழிவிலாப் பெருமானே தாலோ தாலேலோ. (உ)

தணியுமாற் றலிலாதோ வாதே வாதேதோ
　சமயசாத் திரநூலே யோதா யானானள்
புணர்வுதார்க் கிகளோடே யாய்வா னாள்வீணே

பொழுதுபோக் கிவிடமமே பூமே னீவாராப்
பணியுமாத் திரைப்போதே வானோ ரேனோர்தேர்
பதுமநாய்த் தலைமேலே தாரா நேராவோ
ருணர்வுதாக் கியகோவே தாலோ தாலேலோ
வொழிவிலாப் பெருமானே தாலோ தாலேலோ. (௩)

வேறு.

முன்னஞ் செயுமா தவகோ டிகளான்
முதுநான் மறையோது
முனிவோர் தமினுற் பவியா மறையின்
முடிவிற் றுணிவுற்றுப்
பன்னும் பொருளா னபரம் பொருளே
பொருளென் றலதொன்றிற்
பற்றற் றுறவும் பகையும் புகழும்
பழியுங் கழியோடும்
பொன்னுஞ் சமமா கநினைந் திகழும்
பாழுந் தருமின்பப்
போகங் களெலா மோகங் களெனும்
படிபுந் தியின்வைத்துத்
தன்னந் தனியே யடைவா ருறவே
தாலோ தாலேலோ
தனிநா யகனே யெனையா ளுடையாய்
தாலோ தாலேலோ. (௪)

மத்தம் முறுமீ மாமிச மார்க்கந்
நியாயம் வைசேடிக
மாயா வாதஞ் சாங்கியந் திருமான்
மார்க்கம் மறையோதுஞ்
சித்தம் மறுவை ரவமா விரதங்
காளா முகம்வாமந்
திகழ்பா சுபதஞ் சைவம் மெனவே
சிவனை துபவேரும்
புத்தம் மருக முலகா யதிக
முதலா கியவாதம்
புகலுஞ் சிலுசிற் புகுதா தகலச்
சுகபூ ரணபோதச்
சத்தென் னுருவாம் வகைதந் திடுவாய்
தாலோ தாலேலோ
தனிநா யகனே யெனையா ளுடையாய்
தாலோ தாலேலோ (ரு)
இம்மற் கிரை யானவு டம்பை
யெடுத்திது காரணமா
யிரவும் பகலும் மெளிவந் தனசெய்
திதனை லமையாதே
மம்மர்க் கிடனுய் நடனு டியபொய்
வாழ்வைக் கருதாதே
மறையிற் றுறையிற் பொறையிற் றுறவி
னிறைவிற் குறைவற்றே

யெம்மைக் குநமக் குறவா மவர்வே
றலநா மலதென்றே
யாதொன் றினுமியா வரொடும் பணியற்
றெல்லா வழியானுந்
தம்மைப் பெறுவா னினைவா ருறவே
தாலோ தாலேலோ
தனிநா யகனே யெனையா ளுடையாய்
தாலோ தாலேலோ. (௯)

தாற்பருவ முற்றிற்று.

# சப்பாணிப்பருவம்.

## வேறு.

நிலன்முழு தணிமுடி மலரெனு மரவணை
நித்திரை யுற்றோனு
நிகிலமு முதவிய நிமலனு மடிமுடி
யுற்றறி யத்தேடித்
தலன்முழு தையும்வெளி முழுதையு மியல்வகை
தட்டியி ளைப்பாகிச்
சயசய வெனவடி பரவவும் வெளிபட
வற்றிவர் பித்தாக
மலன்முழு தறமுட லெனதுரு வெனநினை
மத்தவெ னைத்தேடி
மனனுரை யறுநின தருவென துருவென
வைத்தும லர்த்தாளென்
குலன்முழு தையுமடி மைக்கொள வருமிறை
கொட்டுக சப்பாணி
குருபர பரசிவ சிவகர கரமலர்
கொட்டுக சப்பாணி. (க)

வெறிகமழ் திருவடி மலரென் றலைமிசை
வைத்தரு ளித்தாவி
விடயமுண் விழிமுதல் புலனைவ் வெழலற
விட்டிரெ னப்பேசி
மறிகட லலையென வுறுமனன் மலைவற

வைத்தொரி மைப்போதின்
வடிவறி வெனவறி வகைசெய்த வறிவுறு
குற்றம் தைக்கூறி
யறிவறி பொருளறி பவனென நிகழ்தரு
மூப்பரி சைத்திர
வறிபொரு ளறிவினி னறிவறி வனிலவன்
முற்றறி விற்கூடக்
குறியறு குறிகுறி யெனவரு ளியவிறை
கொட்டுக சப்பாணி
குருபர பரசிவ சிவகர கரமலர்
கொட்டுக சப்பாணி. (௨)

கடலுறு திரையெனு மனவினை கெடவினை
வைத்தொரி மைப்போதிற்
கரதல மணியென வெனையெனி னெதிர்நிகழ்
வித்தனை யெத்தோடு
முடன்மரு வியுமொரு மருவுத லறவிறை
நிறைநிற வித்தார
முணர்தொறு முணர்தொறு முளமுரு கிடவினன்
வைத்தனை பொற்பாதம்
வடகலை தமிழ்பல கலையலை கொடுவரு
கற்றெரு தொப்போர்தம்
வழிமொழி யொழிகென விழுபடு குழியவை
தப்புக வுற்றோரின்

குடிகுடி வழிவழி யடிமைகொள் ளெமதிறை
கொட்டுக சப்பாணி
குருபர பரசிவ சிவகர கரமலர்
கொட்டுக சப்பாணி. (௩)

வேறு.

பணியு மடியவர் பிணிக ளறவருள்
பத்தர்வி னைக்கேட
பகரு மறைகளு மயரவெ ணுள்வரு
பட்சப தக்கார
மணியும் வயிரமு மெனுமவ் வொளியெனுள்
வைத்தவ ருட்கோல
வடிவ மெவையுநின் வடிவ மெனவரு
மச்சுக நற்போத
நணுக வமரர்க ளரிய குருபர
நற்றவர் பற்றுள
நலம திண்டயற வருளி முடிமிசை
வைத்தம லர்ப்பாத
குணனு மலனற வருளு சிவபர
கொட்டுக சப்பாணி
குரவு வெனையுய விருகை மலர்கொடு
கொட்டுக சப்பாணி. (௪)

வேறு.

தூஞ்சல் விழித்தல் பிறத்த லிறத்தல்
சுருங்கல் விரித்தலெனச்
சொல்லும் விதங்களு மற்றள வற்ற
சுகோததி யாய்நினையு
நெஞ்சு நினைப்பு மறப்பற நின்மல
நிட்கள மாயறிவாய்
நிற்ப விருப்ப கிடப்ப நடப்பன
நிற்பிறி தற்றொருகா
லெஞ்சுத லின்றிய விவ்வுரு வென்றுண
ரவ்வுரு வற்றுணர்வா
ரெவ்வள வவ்வள வாகிய நின்னுரு
வென்னுரு வாயிடவென்
குஞ்சியின் வைத்த துணர்ப்பது மங்கொடு
கொட்டுக சப்பாணி
கும்பிடு மன்பர்த மென்புரு கும்பர
கொட்டுக சப்பாணி. (ரு)

வேறு.

நாளன் றுயிர்ப்பரியும் வாளென் றுரைத்தவுல
கிற்காத லற்றுணடைவார்
நாளிங் கதிக்குமறை நாலின் பொருட்டெளிய
வுற்றூய வுற்றருமையா.

யாளிங் குனக்கபயம் யாமென் றுரைக்கநினை
யத்தேவ ருட்கியிடவா
வாலங் கயற்கண்மொழி தேனம்புயத்தினவ
ளிப்பாவை யொப்பவெனு
வேளைங் கணைக்குமிரை யாய்மங்க லுற்றவென
சிந்தாகு லத்தினையெலா
மீளென் றிருத்திவெளி வீடிங் களித்தவிர
கைப்பாடி நட்டமிடவே
தாளிங் களித்தெனது தாபந் தவிர்த்தவிறை
சப்பாணி கொட்டியருளே
தாதாவை யும்பெற்ற மூதாதை யானவிறை
சப்பாணி கொட்டியருளே. (சு)

ஓதார ணங்களுன் பாதார விந்தமல
ருன்னப் படாதவதனு
லோதப் பெருமென்ன மேதக்க வானவர்க
ளுள்ளம் பதைக்கவுருவ
மீதாகு மிங்கிறைவ னிவனேயெ னத்தெளிய
வென்போலி கட்கெளியையா
மிறைநின் பெருங்கருணை வெள்ளத்தி லேமூழ்கி
யென்செய்வ னென்றறிகிலேன்
றீதான விப்பிறவி நோய்தீர் மருந்தொன்று
திருவுள்ள மாகவெனுமுன்

சென்னிக்கண் வைத்தடிக ளுன்னற்கு ரைக்கரிய
தன்னைக்க ணத்தினருளுந்
தாதாவெ னப்புலவ ரோதும்பு கழ்ச்சொருப
சப்பாணி கொட்டியருளே
தாதாவை யும்பெற்ற மூதாதை யாணவிறை
சப்பாணி கொட்டியருளே. (எ)

வேறு.

சித்தந சித்திட நிற்குண முத்தி
யெனச்சிலர் நிற்பாருஞ்
சித்துரு நித்தவ நித்தவி தப்படல்
செப்புதி றத்தாரு
மத்துவி தத்துவி தத்துப யத்து
விதத்தும தத்தாரு
மத்துரு விற்பிறி தற்றமை தத்தமை
யத்தமு ரைப்பாரும்
புத்தர்மு தற்சம யத்தவர் தத்த
மதத்த பொருட்பேசப்
புக்குமலைத்தவி லைத்தக லைப்பொடு
புத்திச வித்தேகை
குத்துவ தக்தையொ ழித்தவ ருட்கடல்
கொட்டுக சப்பாணி

# செங்கீரைப் பருவம்.

குத்தரி யொத்த மனத்தை யுருக்கிறை
கொட்டுக சப்பாணி. (அ)

சப்பாணிப் பருவம் முற்றிற்று ஆக உசு.

வேறு.

கருவிக டந்திட வருள்விர கங்களி
தந்தா ளுந்தாவின்
கருணையு நெஞ்சது கருதுதே ருங்க
ணிரண்டா னுந்தாரை
யருவி சொரிந்திட வதிசய மங்குற
நின்பா லன்பரயே
யரிகுரல் வந்தழு தழுது வரும்படி
கண்டார் நின்றூர்க
ளிருவ ரிருந்திட மெனதுரை கொண்டு
நகுந்தோ றுந்தோறு
மெனது மனங்களி வரவர நின்கழ
லின்கீ தம்பாடித்
தெருவு தொறுந்திரி தரவரு ளும்பர
செங்கோ செங்கீரை
சிவகர சிந்தனை யறவருள் சுந்தர,
செங்கோ செங்கீரை (க)

அவனியி னன்றியில் வினைநர கந்தரு
நன்றே யுண்டாகி
லமருல கந்தரு மறிய விழுந்திடு
மங்கோ டிங்கோடும்
பவநி தனங்கெடும் வகையிலர் பங்கய
நின்று ளன்பாகிப்
பணிகில ரென்றரு மறைபக ரும்பர
செங்கோ செங்கீரை
தவவடி வென்றுகொள் சடையுடை செந்துகி
றண்டே கொண்டாடித்
தமையுணர் வின்றிய சமயிகள் பந்திசெல்
சங்கே தஞ்சாடிச்
சிவமக மென்றுள தெளிவு தரும்பர
செங்கோ செங்கீரை
சிவகர சிந்தனை யறவருள் சுந்தர
செங்கோ செங்கீரை (உ)

வேறு.

எனைப்பொ ருளாக நினைத்திறை பார்மிசை
வந்தா யென்போல
வினிப்பிற வாது பெறத்தொழு வோர்மதி
தந்தா யன்போடு
முனைத்தரு மர்றெனு டற்பொரு ளாருயிர்
கொண்டாய் நின்றாடு

முளச்செயன் மாள வளித்திரு தாளுரை
யொன்று னெஞ்சார
நினைப்பது மீள மறப்பது வாநினை
வன்று யொன்றுகி
நிகழ்ச்சி யறுத நிலைப்பொ ருளாகிய
நின்கோ லங்காணத்
தினைத்துணை போதி னெனக்கருண் மாதவ
செங்கோ செங்கீரை
சிவப்பிர காச தவத்தனி நாயக
செங்கோ செங்கீரை. (ந)

வேறு.

பாதமுடி தேடிருவர் பாதலனும் வானுமுடி
வாகவிவர் சென்றேயவே
பாரினது நாதனருள் வானில்வர நாமரிய
பாவியர்களென்றேதவே
பேதமொ டபேதமெனு மாறுகொடு வாதுசில
பேசுமவர் திண்டாடவே
பேணுமடி யார்கடிரு வாய்மலரு மோர்விரகு
பேசிநனி கொண்டாடவே
வேதமுட் ஞகமபு ராணமன வாசக
ருருதனெ நின்றேதநீ

வீடிதெனு மாறுவெளி காணவரு ளானதிரு
மேனிகொடு வந்தாய்விலா
வாதழிலி யானவெனை யாளநினை வாய்சொருப
வாடியருள் செங்கீரையே
யாசையறு வார்களித யாலயம்வி டாதவிறை
யாடியருள் செங்கீரையே. (௪)

தூலமற நேர்மையதி தூரமணி தாகுமிருள்
சோதியல வென்றோதுமா
தூயமறை நாவின்வடி வாதிதிரு மேனிசுர
ரானவர்கள் கண்டார்களோ
மானுமர னன்முகனு நாடவரி தாகுமெனு
மாசிலொளி குன்றுமனீ
மானுடவர் போலவரு ளானதிரு மேனிகொடு
மாநிலனி னன்றுனதோர்
சீலமெனி னேதுமில தாகிமட மாதரொடு
சேரமிகு மன்பாகியே
தேடுபொரு ளாசைகொலை யாதிபழி யானவினை
சேரவரு சந்தாபமா
மாலமனன் மாறியமு தாகவெனை யாள்சொருப
வாடியருள் செங்கீரையே
யாசையறு வார்களித யாலயம் விடாதவிறை
யாடியருள் செங்கீரையே, (௫)

வேறு.

புனலின்ன ருஞ்சுவை புவியினு ரங்கனல்
வெஞ்சூ டென்றூழின்
புகரென விந்துவி னுங்குளிர் விண்புரை
வங்கூ ழின்சேற
வினையன வும்பொருள் பலபல கண்டவை
யங்கே யங்கேநின்
றிசைய வருங்குண னியல்பின் வழங்கினை
சந்தர பந்தீர
மனனு மிறந்தவ் விடனு மறிந்தது
வும்போ கும்பாழாய்
வறுமைக டந்துள புரண வெறுந்தனி
கண்டே கொண்டாடச்
செனன மறும்படி மனனம் விளம்பினை
செங்கோ செங்கீரை
சிவகர சிந்தனை யறவருள் சுந்தர
செங்கோ செங்கீரை. (சு)

வேறு.

வீடுந்து வக்குமறும் வேடம்ப ணித்தருளும்
வீரங் கொனக்க தளவேர்

வேதங்க ளுச்சியுறை பாதங்கள் வைத்தருள
வேயென் றலைக்கி யைவதோ
வோடும் மனப்பிணியை யீதென் றளித்தறிவை
யோரென் றுணர்த்தி யமையா
வோரும்பொ ருட்கு நினை வேறென் றுணர்த்தியுண
ராவொன் றுணர்த்து மிறைவா!
வீடென் றெனக்குவினை வேனுன் கடைத்தலை
வீடென் றிருப்ப னலதோர்
மேவும்பொ ருட்களுடை னேவுஞ் சுவர்க்கமினி
வேறென் றெனக்கொர் பொருளோ
தேடும் மறைக்கரியை யாகுஞ் சிவப்பிரம
செங்கீரை யாடியருளே
தேறும் மவர்க்குணர்வு நீயென் றளிக்குமிறை
செங்கீரை யாடியருளே. (எ)

வேறு

அஞ்சொண் புலனு னரிப்புண் டவலக்
கடல்வா யழிவேனை
யாரு யெனநின் னருளா மடிவைத்
தழகாம் விழியாலென்
வஞ்சம் மெறியா மறியா வறிவாம்
வடிவா மெனதுள்ளே

மன்னுஞ் சொருபா மதியாய் ரவியாய்
வருபூ தமுமானாய்
நஞ்சஞ் சினமென் றயன்மான் முதலோ
வர்கடா மயல்செய்ய
நாதா வடியோ நசியா வகையா
ளுடையா யெனவன்பர்க்
கஞ்சும் மருளா னயிலும் பரனே
யாடாய் செங்கீரை
யரன்மால் பிரமர்க் கறியா வறிவே
யாடாய் செங்கீரை. (அ)

செங்கீரைப்பருவம் முற்றிற்று. ஆக-௫ள.

# முத்தப்பருவம்.

மதியு மிலமதி யுடைய வறிஞரை
மருவி யொருகலை கற்றிலேன்
மதுர கவிபல வடசொ றமிழ்விர
கறியும் வழிசெல வுற்றிலேம்
புதிய சொலவொரு பொருண்மை பெறவியல்
புனையு நினைவது பெற்றிலேம்
புலவர் சொனசொன சொலவு மவர்நினை
பொருளு முரைசெய்து நிற்கணே
துதியில் வருசொல வொழிய வறிதொரு
சொலவு மிலவெனும் பெற்றியால்
சுரரு முனிவரு மெமது சொலவுக
டொழுது சிரமிசை யிற்கொளா
முதிய மறையென மொழிய வருளிய
முதல்வ பணிமணி முத்தமே
முடிவில் பவமொரு நொடியின் முடிவுசெய்
முனிவ பணிமணி முத்தமே. (க)

கழிய மொழிவகை பொழிய வுளனுறு
கவலை யறவிலர் கட்டுநூல்
கதறி விடுமறு சமய நெறியுறல்
கருது நினைவது தப்பவே
விழிய தொழியவொர் சொலவு மிலதல
கெனநி னருளினை மெச்சியே
விழிக ளருவிகள் பொழிய வுருகிட்

விரகு செயவல வித்தகா
வழிய விருவினை யமல மலர்விழி
யடிய ரவர்பெற வைத்வதுநீ
யழியு மலவுட லலவு னுருவறி
வுருவ மெனுமது சத்தியமே
மொழிய வொருமொழி மொழியு முருகிதழ்
முளரி பணிமணி முத்தமே
முடிவில் பவமொரு நொடியின் முடிவுசெய்
முனிவ பணிமணி முத்தமே. (உ)

வேறு.

தளர்வ தின்றிநி னுலகி னின்புறு
தலைமை யொன்றிய முத்திதான்
சமமெ னும்படி தலைவ நின்றிரு
வுருவு தந்தருண் முத்திதா
னுளன்ம கிழ்ந்திட வுருகு மன்பொடு
னருகி ருந்திடு முத்திதான்
னெழிவ தின்றிநி னுணர்வெ னுந்திரு
வுருவொ டொன்றிடு முத்திதான்
வளமை யொன்றெழி வறவு டம்புட
னடைய விங்கடை வுற்றியான்
மகிழ விங்கருள் வடிவு கொண்டரு
மறை மொழிந்திட வுற்றுமா
முளரி யங்கழ லருள வந்தருண்

முனிவ தந்தருண் முத்தமே
முதலு மின்றியோர் முடிவுமின்றிய
முதல்வ தந்தருண் முத்தமே. (௩)

வரவு டன்றிரி வருப தந்தரும்
வலவ தந்தருண் முத்தமே
மதியி றந்துள மதிய றிந்திடு
மதிஞ தந்தருண் முத்தமே
பரவி நின்கழல் பரிவொ டும்புகல்
பரிசு தந்தருண் முத்தமே
பதக மின்றிய வவர றிந்திடு
பரம தந்தருண் முத்தமே
யிரவி சந்திர னெரி மறைந்திட
மிகவி லங்கிய சித்துமெய்
யெல்லையி னின்பமெ னுருவு தந்தரு
ளிறைவ தந்தருண் முத்தமே
முரிவு றும்பவ மொழிய வொன்றருண்
முனிவ தந்தருண் முத்தமே
முதலு மின்றியோர் முடிவு மின்றிய
முனிவ தந்தருண் முத்தமே. (௪)

ஒழிவ றுந்திரு வுருவு தந்தரு
ளொருவ தந்தருண் முத்தமே
யுருகு மன்பர்க ளுணர்வு றுந்திரு

வுருவ தந்தருண் முத்தமே
முழுது நின்றிரு வுருவெ னுந்தனி
முதல்வ தந்தருண் முத்தமே
முரச றைந்துனை யருள வந்தருண்
முனைவ தந்தருண் முத்தமே
தொழுதெ ழன்பர்க ளறிய வந்தருள்
சொருப நின்கழல் செப்புமா
சுருதி யஞ்சவெ னறிவி னன்றியில்
சொலவு கொண்டுனை மத்தனேன்
மொழிப நின்றிரு முகம லர்ந்தருண்
முனிவ தந்தருண் முத்தமே
முதலு மின்றியொர் முடிவு மின்றிய
முதல்வ தந்தருண் முத்தமே. (௫)

வேறு.

வளரு மிருகன கலச தனமவை
மருவு தசைநிண மச்சைசீ
வழுவ வெனவிழும் வழலை வருபுரை
கழலை மறுவுற வுற்றமேதார்
குளிர்வு தருமொளி ருடைய மதியவ
குருதி முகமொளி கற்கநீர்
கொழுகொ ளெனவிழு குழுமி குலவிய
குமிழ மலரல சுத்தமா

வுளது வடிவினை புணர வுறினொரு
கணனு நினைவறு கட்டமா
யுலவு பொறியென வுணர வருளியொ
ருரையி னுபநிட தத்தமே
முளரி மலரித ழலரு மொளிமுக
முதல்வ பணிமணி முத்தமே
முடிவில் பவமொரு நொடியின் முடிவுசெய்
முனிவ பணிமணி முத்தமே. (௫)

வேறு.

நித்த வதிப்தி சுத்த நிருபதி
பத்த நிரவய வத்திலே
நெக்க வுளனொடு பொக்க மறவரு
நிட்டை யுடையவ ரிட்டனே
கத்தி யலைபடு புத்தர் முதலவர்
கட்டு வனசில முட்டை நூல்
கற்று வருசில சற்றர் சொலவுறு
கட்ட வழியினை விட்டுமா
சித்தி யழகிய பத்தி யெனநினை
முத்தி யருளிய சித்தனே!
செத்தி வுடலொரு தத்த படமென
திற்க வருளிய சிற்சுகா!
முத்தி நிலமிசை யெத்தி யருளிய

முத்த பணிமணி முத்தமே
முற்று முழுவற நிற்கு மொழிமுதன்
முத்த பணிமணி முத்தமே. (௭)

முத்தப் பருவ முற்றிற்று. ஆக–சச.

# அம்புலிப் பருவம்.

வேறு.

முனிவ ரன்சொருப் பன்ற ருங்கழன்
முடிவ றிந்தில னரியுநான்
முகனு மன்றணி முடிவ றிந்தில
னெனமொ ழிந்தன மறையெலா
மினிவ ரும்பவ மொழிய வென்பதை
யுறவு டம்புட னினியவீ
டிதுவெ னும்படி தெளிய விங்கொரு
மொழிமொ ழிந்திருள் வெளியொடே
யனித மிங்கித முறும கம்புற
மறநி றைந்துள வமலமா
வறிவ னந்தமெய் யளவி னின்பமெ
னுருவெ னும்படி யருளினன்
மனித னென்றிட வரவி சைந்தவன்
வருக வென்றபின் வருகவே
மறுவொ ழிந்திடும் வடிவு தந்திட
வருக வம்புலி வருகவே. (க)

வேறு.

கோதி லர்வமு தக்கடல் குளிக்கவர்ங்
குறைவொடு நிறைவற்றுக்
கோடி லாவுடம் புறவுமா நினக்கொரு

கோளினுன் மறையாத
சோதி யானிலை பிறவுமாம் பண்டைநின்
சோடசக் கலையன்றித்
துகளி லாவறு பத்துநாற் கலையுநின்
சொருபமா னதல்லாப்
பாதி நாளுமுன் றன்னதா மரிப்பதுற்
பவிப்பதா யிதுகாலம்
பட்ட பாடெலாங் கெட்டுநற் பரம்பொரு
ளாகவாம் பணிந்தேத்தி
யாதி நாயகன் றன்னுட னுடுதற்
கம்புலீ வருவாயே
யாண்ட நாயகன் றன்னுட னுடுதற்
கம்புலீ வருவாயே (உ)

தேசு நாடிமனு மதிகொடோ சிவப்பிர
காசனிங் கழைத்தக்காற்
செல்லு வோமெனு திருந்ததுன் சிவப்பெலாந்
தீயதுன் வெளுப்பெல்லா
மாசி லாதநீ ருடையதுன் கறுப்பெலா
மண்ணதுன் னசைவெல்லா
மாரு தத்ததுன் புரைப்பெலாம் வானதைம்
பூதமாய் வர்ன்மீதே
பூச லாடுநீ யும்பனு மெனமதித்
திட்ப்பெரு யும்பர்க்கு

மும்ப ரானவர் தமக்குமுள் ளுணர்வதா
மும்பனு மிவன்பூரதத்
தாசி லாவறி வாகவாம்
மாடுதற் கம்புலீ வருவாயே
யாண்ட நாயகன் றன்னுட னடுதற்
கம்புலீ வருவாயே (௫)

வேறு.

இருளெலா மெறியுநின் னொளியெனுங் கனிகொடே
யிங்குவா ராதையோ
விரவிதேர் கொடுவரும் புரவிலங் கிட்டபோ
திலதுநின் னொளியதற்றோ
ருருளையே யொத்திகா ணுன்னையும் மவனையு
மும்பர்யா வரையுமற்று
முணர்வுளோர் யாவரையு முட்புறம் பறநிறைந்
துருவுதோன் றுதவண்ண
மருளவே மூடுமா மாயைவல் லிருளையே
மாத்திரைப் போதினுள்ளே
மாயவோ ரளவிலா ஞானவா னந்தமே
வடிவதா வொளிரவேதந்
தருளுதே சிகனவந் தடைவதே கருமநல்
லம்புலீ யாடவாவே
யனுபவத் தன்றிவே றறிவொணு விறையுட
னம்புலீயாடவாவே (௬)

உணவினிற் சுவைகள்போ லுரைகளிற் பொருள்கள்
லுடல்களுக் குயிர்கள்போலு [போ
முயிரினுக் குயிருமா யுணர்வினுக் குணர்வுமா
யொளியினுக் கொளியுமாயே
யிணைபறத் திகழிவன் றேசினே ரேகதே
சத்தைநா றுயிரங்கூ
றிட்டமட் டில்லைகா ணிரவிநீ தியுடுத்
தொகைமினென் றென்னு மெல்லாங்
குணதிசைக் கண்ணெழுந் திரவினீ குடதிசைக்
கண்மறைந் திடுநி யெங்கோன்
கூறுபத் துத்திசைக் கண்ணுமப் புறமுமெட்
குத்துணிட் டகல்வுறுதே
யணுவினுக் கணுவுமாய் நின்றதன் மையையறிந்
தம்புலீ யாடவாவே
யனுபவத் தன்றிவே றறியொணு விறையுட
னம்புலீ யாடவாவே. (௫)

வேறு.

அண்டமியா வையுமுலா விடினுமா நின்னைநீ
யறியலா யெங்கள் பெருமா
னகிலமியா வையினுமுள் ளொடுபுறம் பறநிறைந்
தறிவர்கா ணறியு மதுநீ
கண்டதே காணு வறிவுறுய் முழுதையுங்

கண்டுபோய் விஞ்சிய பெருங்
கண்ணார்கா ணென்றுமெக் காலமுஞ் சுடர்விடுங்
கடவுள்கா ணிந்த விறைகாண்
டுண்டமா முடலெடுத் தழல்வைகா ணின்னையித்
தொழில்கொள்வா ரிவர்தமக் கோர்
தொழிலிலார் தொழிலியா வையும்விதித் திடுவர்நஞ்
சொருபவா ரமுத ரிவர்கா
ணண்டநா யகனதா ளடைவதே கருமநல்
லம்புலீ யாடவாவே.
யறிவதா னந்தமா வழகுநீ பெறுதிநல்
லம்புலீ யாடவாவே. (கூ)

வேறு.

கோணுருவு கொண்டுகுறை கூடிநிறை வெய்திக்
குறைந்தற மறைந்துள குரம்பையெனு மிந்தக்
காணுமள வாவிடுவ தின்றிநில நீர்தீக்
கால்வெளி வரற்குரிய காரண னு மாகித்
தாணுவெனு மாதிகழ லாமடி யவர்க்குத்
தன்னையருள் கற்பகத ருத்தகவில் பெண்பே
டாணுமல னுய்முழுது மானபெரு மானே
டம்புலி பணிந்துவிளை யாடவரு வாயே. (எ)

அம்புலிப்பருவம் முற்றிற்று. ஆக-௫௧.

# சிற்றிற்பருவம்.

வேறு.

நெஞ்சநின தாலய முடம்பக லெனைய
நெய்திரி மனன்சுடர் நிறைந்தபர ஞான
மஞ்சனம் விடாதுனை நினைந்துருகு கண்ணீர்
மந்திரநி னன்பர்திரு வாசகம் வணங்குங்
குஞ்சிமல ராதரவு சந்தமணி யாடை
கோலமணி வாயமுது கொள்வதுமென் வாணாள்
செஞ்சொன்மணி மாலைதிரு மாலையிவை கொண்டுன்
சேவடிக ளாலெமது சிற்றில்சிதை யேலே. (க)
மாதினை வழங்கிநில நீதிகெட வாழே
மடைப்பளியின் மைந்தனை யறுத்திடவு மாட்டேந்
தாதைதலை வேதிய னவன்றனை வெகுண்டே
தாளையற வெட்டுகில மாளுவது நீயிங்
நீதியுடை யார்சிலரை யென்றுனையு நின்னுண்
ணெக்கவடி யார்தமையு மிக்கபிழை தேடித்
தீதுமொழி யேமெமது சிற்றில்சிதை யேலே
சேவடிக ளாலெமது சிற்றில்சிதை யேலே. (உ)

வேறு.

வஞ்சக்கள் வன்மா மாயன்னிவ னிங்கோர்
மாயக்கவி யாய்வந் தடியேனுயி ருள்ளு

நெஞ்சத்துள் ளும்பிக் குவையொன்றெழி யாமே
நின்றாரறி யாமே யுண்டே நிறைவுற்றா
னஞ்சிக்கெடு வீர்நும் முயிர்சாத்தாட் செய்மின்
னருகேசெலி னும்மைப் பருகாவிடு மென்றான்
செஞ்சொற்கவி கட்கிங் குன்னைப்பழி கூறேஞ்
சிறியேமென வெஞ்சிற் றில்லஞ்சிதை யேலே. (௫)

வேறு.

பேசக்கரு தப்பட் டவனன்றெனை யாளும்
பித்தன்குறி கேடன் பெண்ணாணலி யல்லான்
றேசத்திறை யொன்றிற் றட்டானுற வற்றான்
சென்மப்பகை யன்றற் சேர்வாருயி ருண்பான்
கூசப்படு வானன் மறையன்குண னில்லான்
குருவற்றவ னிங்கோ ருருவற்றவ னென்றே
யேசித்தில மெஞ்சிற் றில்லஞ்சிதை யேலே
யெமையாளுடை யாய்சிற் றில்லஞ்சிதை யேலே. (௬)

வேறு.

தம்பத்துனை நிந்தித் தொருவேள்வி தொடங்குந்
தக்கன்றலை யோநீ தானங்குரி கொள்ளுங்
கம்பக்களி றேவெங் காலன்னுயி ரோவக்
கஞ்சன்வர வேவும் வஞ்சச்சக டோதிண்

கும்பக்கரி யோமா மருதோ திரு முன்கைக்
குவியும்மடி யார்தம் பவமோவிவை யன்றே
செம்பொற்கழ லிட்டுச் சிதைவிப்ப துநின்சிற்
றடியேமென வெஞ்சிற் றில்லஞ்சிதை யேலே (௫)

சிற்றிற்பருவ முற்றிற்று. ஆக-௫௬.

# சிறுதேர்ப்பருவம்.

வேறு.

அண்ட கோடிக ளனைத்தினுக் கப்புறத்
தப்புற மாய்நின்றே
யணுவி னுக்கணு வாகிநின் றயன்முத
லகிலசெந் துவுமாகும்
பிண்ட கோடிநூ றுயிர கோடியாய்ப்
பிறங்கொரு பிறப்பின்றிப்
பேத மற்றள வற்றபே தங்களாய்ப்
பிறழ்ந்துள பெருமானே!
பண்டை நான்மறைக் கரியநின் றன்னையு
மென்னையும் பாராதே
பரவும் வானவர் நிற்பவென் புன்றலைப்
பாதபங் கயஞ்சூடித்
தெண்டம் யானிடத் தந்திடுஞ் சேவக
னுருட்டுக சிறுதேரே
சிவப்பிர காசனென் பவப்பிணி மருத்துவ
னுருட்டுக சிறுதேரே. (க)

வையம் யாவையும் வகுக்கவுங் காக்கவு
மறைக்கவுந் தாம்பெற்ற
வரிசை வானவர் மூவருந் தேவரு
மற்றவர் தங்கோவு

மைய மாகியிப் பொருளென வறியொணு
வப்பொரு ளடியேனை
யாண்டு கொண்டன விறந்தபே ரின்பமா
மமிர்தசா கரந்தன்னைக்
கையி னுமல கக்கனி யென்னவே
கண்டுகண் களிகூரக்
காசி னிக்கணோர் தேசிக னுகியெக்
கடவுளுந் தொழுதேத்துஞ்
செய்ய தாமரைப் பதந்தருஞ் சேவக
னுருட்டுக சிறுதேரே
சிவப்பிர காசவென் பவப்பிணி மருத்துவ
னுருட்டுக சிறுதேரே. (உ)

வேறு.

நாவிற் படாதசுவை செவியிற் படாதவொலி
நண்ணப் படாதபரிச
நயனப் படாதவொளி நாசிப்ப டாதமண
நாவிற் படாதகரணம்
பூவிற் படாதகனம் வெளியிற் படாதபுரை
வளியிற் படாதவொலிதோய்
புனலிற் படாதநெகிழ் வனலிற் படாததெற
லினனிற் படாதவொளிவந்
தோவிற் படாதுபடு மதியிற் படாதகுளி
ருணர்விற் படாதவுணர்வா

பொன்றிற் படாதொருவ ருள்ளப் படாதுமறை
யோதப் படாமலெவரிருந்
தேவிற் படாதமிகு தேவர்க்கெ லாமிறைவ
சிறுதே ருருட்டியருளே
தேனித்து நான்மகிழ வாழ்வித்த மாமுனிவ
சிறுதே ருருட்டியருளே. (௩)

வேறு.

மண்ணாத ரத்தினரர் மாறாத வாழ்வுலகின்
மட்கப்ப டாதவொளிநீர்
வாடப்ப டாதமலர் வீடப்ப டாதநிதி
கோடுற்ற யாழினிசையிற்
பண்ணாத வோசையொரு பாவிற்ப டாதவியல்
காவிற்ப டாதகனியோர்
பாகத்த டாநறவு போகத்து றாவினிமை
மோகித்த பண்டை யிமையோ
ருண்ணாத பேரமுத மொளியாத பேரிரவி
யோதாத வேதமொழியா
னுரையற்ற செம்பொனொரு கரையற்ற பேருததி
யுருகுற்ற பத்திவலையிற்
றிண்ணாக வந்துவளை வுண்ணாவி ருக்குமிறை
சிறுதே ருருட்டியருளே
தேவாதி தேவர்தொழு தேவாமு தற்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. (௪)

வேறு.

வரைசாலு மாகரியின் முரசார வாரமிக
வருவார்ப தத்தைமதியே
மடவார்க ளாயிரவர் நடனுட வானவர்கண்
மணிவாயில் கொற்றமகவா
னரசாளு மாசையில மயனாரணாதிபத
மணிமாதி சித்தியனுகே
மறிவாள ரேனுமின தடியார லாதவரை
யணுவா நினைத்துமறியே
முரையார வாரமிடு முலகாய தாதிகல
ருடனை தர்க்கமுரையே
முனதாளி னேதுபுக முரையாடு தோறுமுன
னுருகாவி யக்கவிருகண்
டிரையார வாரமிட வுரையாடு மாமுனிவ
சிறுதேரு ருட்டியருளே
திருவாத வூர்முனிவர் திருவாச காபரண
சிறுதேரு ருட்டியருளே. (ரு)

சிறுதேர்ப்பருவ முற்றிற்று. ஆக-சுக.

# சிறுகீரைப்பருவம்.

வேறு.

நீயதுவெ னும்பதமதந்தெளிய நேதி
நேதியென வோதிநிலை நின்றதுண ராதே
யோயும்வ ரங்கையுறு மாமலக மாக்க
வோர்டிவரு வீர்களென வறைகசிறு பறையே
மாயுமுட லைந்துபுல னுற்கரண மீமை
வாயுவுயிர் மாயைபர மற்றுமுள வெல்லா
மாயினறி வாகுமென வறைகசிறு பறையே
யருளியெனை யாண்டவிறை யறைகசிறு பறையே. (௧)

புண்டருமு டம்பினள வாயழிய லுற்றுப்
போகுதுயர் தீரநின் பொன்னடிபொ ருந்தத்
தொண்டர்கணம் வருகவென வறைகசிறு பறையே
சொருப! துய ரகலவென வறைகசிறு பறையே
புண்டரிக நயனனறி வரியநின தடியிப்
புவியினவ ரறியும்வகை புகுந்தபடி யெல்லா
மண்டருல கழுமறிய வறைகசிறு பறையே
யருளியெனை யாண்டவிறை யறைகசிறு பறையே. (௨)

சடைபுனைய நீறணிய வென்பதுவும் வேண்டா
தண்டியுடை செந்துகிலின் முண்டியென வேண்டா
வுடைபுனைய வுடைகளைய வென்பதுவும் வேண்டா
வுடம்புதனின் மற்றுமுறு மெக்குறியும் வேண்டா
விடையிலொரு பொருளுமுள தன்றியுள வில்லா

வின்பவறி வானவடி விவ்விடலொ டிங்கே
யடையுமவர் வருகவென வறைகசிறு பறையே
யருளினென்னை யாண்டவிறை யறைகசிறு பறையே. (ச

வேறு.

விக்கிவிடு மளவே விட்டதெனு முயிர்வா
மூக்கிவெளி புவிகா லப்புடல மதுநான்
றுக்கிசுகி யெனுமா துக்கவிரு வினையாங்
கொக்கிவிடு திறவே கொட்டுசிறு பறையே (ரு)
நீடுதிரு நினையே னித்தபத நினையேன்
வீடுபுக நினையேன் மிக்குளது நினையேன்
பாடியுன தடியேன் பத்தியுட னுருகக்
கூடவருள் சொருபா கொட்டுசிறு பறையே. (சு)

சிறுபறைப்பருவ முற்றிற்று.

ஆக பருவம் ௰-க்கு-கவி-சுசு.

---

வெண்பா.

காப்பு வருகைதால் சப்பாணி செங்கீரை
மூப்பிலார் முத்த முலைமதியங்—கூப்பிய
சிற்றில் சிறுதேர்ச் சிறுபறை யென்றிவை
பத்துத் துறைப்பிள்ளைப் பாட்டு.

பிள்ளைத்திருநாமம் முற்றிற்று.

---

செங்கீரைப்பருவவிபரம்.

ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இருகைகளையும் நிலத்திலூன்றிக்கொண்டு தலைநிமிர்ந்து முகமசைபவாடுதல்.

மூன்றாவது.

# வெண்பாவந்தாதி.

( தத்துவவிளக்கம். )

போதா லயத்தோனும் புள்ளூர் கொடியோனு
மேதாதி யேதந்த மென்றறியார்—நாதா!
சொருபானந் தாகடையேன் றொண்டுகந்து செய்ய
விருபாதந் தந்தவா றென். (க)

தந்தா யெனவேத்தித் தன்னைத் தரவல்ல
சிந்தா மணியென் சிரமிசையே—தந்தபத
நண்ணுங்க ளெல்லீரு மப்பொழுதே மெய்ஞ்ஞானக்
கண்ணுங்க ளங்கைக் கனி. (உ)

கனியே! தெளிதேனே! சன்னலே! பாலே!
முனியே! தனியேன் மொழிதோ—றினியாயென்
றப்பொழுதைக் கப்பொழுது மாரமிர்தை நெஞ்சமே
யெப்பொழுது மெப்பொழுது மேத்து. (ந)

எத்தாய் மடநெஞ்சே யெல்லா வினையுமறப்
பார்த்தாள வல்ல பரஞ்சுடரை—பார்த்தவுடற்
புண்ணாலே பட்டதுயர் போகும்போ தாகுமவன்
கண்ணாலே காணவாங் காண். (ச)

காணும் பொருளாகிக் கண்ணாகிக் காண்பவனு
யானு மறிவு மறிவையுமாய்த்—தானுவுமா
யல்லாவா மென்பார்க் கதுவதுவாய் நின்றானைச்
சொல்லாட வந்தான் றுணிந்து. (ரு)

துணியுடையா ரூரட்ட சோறுடையார் சோம்பே
பணியுடையார் பல்லோர் பழிப்பா—மணியுடையா
ரெம்மை யுடையா ரிருகமலத் தாளுடையார்
தம்மை யுடையார் தமர். (சு)

தமக்குருவ மேதென்று தாமுணரார் காயச்
சுமைக்குருவைச் சோறுன்னித் துன்புற்—றிமைப்பொழுது
மாவநல னின்றி யழிவரே யந்தோநந்
தேவை வணங்கார் சிலர். (எ

சிலரா னேயென்க சிலரயன் மாலென்க
சிலர்பரமஞ் சத்தி சிவமென்க—சிலர்பரம
மிங்குருவே யென்க வருவென்க வெவ்வுருவு
மெங்குருவே யென்றறிந்தோம் யாம். (அ)

யாமா றறிய விசையு மிசையாவுங்
கோமானிவ்வயறிந்து கொள்ளுவா—னுமோத
வல்லவா நெஞ்சே மலரடிதந் தாண்டவரு
ணல்லவா சொல்லவா நாம். (கூ)

# வெண்பா வந்தாதி.

நாமம் புகழ்ந்துரையாய் நன்னெஞ்சே நாம்விரும்புந்
தாமம் புனைகுழலார் சார்ந்துடல—மீம
மிடும்போதென் செய்வா ரிறையடியார் சென்னி
நடும்போதை நாவா னயந்து. (ய)

நயந்தீர்சிற் றின்பமே நல்லன்பா னென்னைப்
பயந்தீர வாளும் பரனை-யயர்ந்திருக்கு
நெஞ்சினீர்! வாரீர் நிகழ்த்தீ ரெமக்கறியத்
துஞ்சிநீர் போங்காற் றுணை. (யக)

காற்றை நிறுத்தவாங் கல்வளைக்க வாநமது
சீற்றமன னென்செயலாந் தீரவதை—மாற்றித்தா
ஞவே யளித்தபிரா ஞண்மை யிருந்தவா
நாவே! மறவா நவில். (யஉ,

நவிலாதே வேறென்று நாவவன்ற ஞமந்
தவிராதே யெப்பொழுதுஞ் சாற்று—பவநோவு
விள்ளவடி யேற்கர்க வேதியவே டங்கொண்டாற்
குள்ளவரு ளுள்ளமே யுள்ளு. (யங)

உள்ளத் திருடீரு முள்ள பொருளெல்லாந்
தெள்ளத் தெளிந்து சிவமாகு—முள்ள
பொருணேக்கு மெக்கலையும் பூங்கழறந் தாண்டர்
னருணேக்கி ஞற்பார்த்த வன்று. (யச,

அன்றுமென் றேதே னறுசமய வாதிகளோ
டொன்று வுணரே னுலகத்தை-பின்றின்ப
மாருடையா ரென்னெழிய வன்பா லவர்கழுகீர்த்
தாருடையார் தந்தார் தனம். (௰௫)

தனைமாற்ற மொன்றிற் றருவானைக் காயச்
சுமைமாற்ற வேண்டுமெனச் சொல்லா-ரெமையாளிக்,
காரார் கழிகாதல் செய்யா ரறிவற்றார்
தூராக் குழியென்றுந் தூர்த்து. (௰௬)

தூர்த்தர் துறவர் தொழும்பர் தொழுகுலத்தோ
ரோத்துடையோ ரில்லோரென் றென்றில்லை-யார்த்தராய்ச்
சொல்லார் சொருபன்றாள் சூடினார் பீடுடையா
ரல்லாதா ரல்லா தவர். (௰௭)

அல்லாதா ரல்லா தவரா ரவரவர்க
ளெல்லா மெம்க்கெம் பிரானுவா-ரெல்லாக்
கரணங் கடந்தான் கடையேனைக் கண்டு
சரணங்க டந்தான் றமர். (௰௮)

தமர மிகுசமயச் சங்கேதஞ் சாரே
நமரும் பிறரு மெனநாடே-மமராறை
நாடா தரிக்கிலே நாதன் பணியொழிய
வீடா தரிக்கிலேம் வேறு. (௰௯)

வேறென் றுமொன்றென்று மேவினர்க டம்பிறப்பைச்
சீறும் பெருமானஞ் சென்னிமிசை—யேறுங்
கழறு மன்புடையார் காதினரோ டேதுங்
கழறாரே தம்மையே கண்டு. (உ௰)

தம்மை யிரந்தாலுந் தாரார்பின் சென்றவரைப்
பொய்ம்மைப் புலவீர் புகழாதே—வம்மின்!
வினைமாற்று மெம்பெருமான் வேண்டியதே நல்குந்
தனைமாற்ற மொன்றிற் றரும். (உக)

தருமணி தாமரை சங்குநின் செங்கை
கருமுகி லென்று கவிக—ளொருமணலு
மீபார்பின் செல்வரே யெல்லாந் தருவானை
வூயாரா வாழ்த்தாதே வந்து. (உஉ)

வந்தெனக்கு நல்குவதே மானுடவே டங்கொண்டெ
னெந்தை பெருமா னிருபதங்க—ளந்தோவிங்
கென்னை நினையாதே யாவர்க்கு மெய்தரிய
தன்னை நினையாதே தான். (உங)

தானந்த மில்லாத தம்பிரான் றானென்னை
யானந்த வெள்ளத் தழுத்தியபி—னூனந்து
துக்க விடன்போலுந் தொல்பிறவிச் சூழலெலாம்
புக்கவிடங் கண்டிலேன் போய். (உச)

போக்கும் வரவுமிலாப் பூரணமே தப்புரண
மாக்க வெனைநினைந்தே யாளருளான்—மாக்குழுணை
வந்தா யெனைத்தேடி மாமறையும் வானவரு
மெந்தா யுனைத்தேட விங்கு. (உரு)

இங்கோர் குறைவற் றெழின்முனிவ ராயிடினு
மெங்கோனைப் போற்று ரெமக்கார்தா—னெங்கோ
ளழித்துண்ட கண்ட னடியார்தங் கூட்ட
மொழித்துண்டோ நாயேற் குறவு. (உசா)

உறவா யிறையடியா ருட்பட் டுலகத்
திறவா ததுபிறப்பு மெண்ணி—மறைகோடி
யொன்றொழிய வில்லையெனு முண்மை யுளத்துணர்ந்தா
லன்றொழியு மிக்குரம்பை யச்சு. (உஎ)

அச்சந் தவிர்த்தா னடியாரி ராதவிட
முச்சங்க மேயெனினு மூடமா—மிச்சிலா
முண்ணு விடமே யமிழ்தே னுமுற்றவர்க
ணண்ணு விடமே நரகு. (உஅ)

நரகுஞ் சுவர்க்கமு நானிலனுஞ் சென்று
வரவுந் திரியவும்யான் மாட்டேன்—மருவியெனைக்
கன்னு ருரித்தாண்ட கற்பகத்தி னற்பதத்தை
யுன்னு ருரியா ருற. (உகூ)

உற்ற தவங்க ளொருகோடி யுண்டெனினு
மற்ற தவ்மிறையை வாழ்த்தாரேன்—மற்றைத்
துரிதங்க ளேனு மவன்றொண்டர் தொண்டர்
சரிதங்க ளெல்லாந் தவம். (௧௰)

தவப்பிரகா ரங்களெல்லாஞ் சாதித்தார் நிற்கச்
சிவப்பிரகா சா! நினது செய்கை—யுவப்பினுட
னங்குமரை வந்தருளி யம்பொற் பதமளித்தா
யிங்குமரை யன்னே னுக்கின்று. (௧௧)

இன்றடைந்தா ரெய்தா நலனே தடையாதார்
சென்றடைவ தெந்நலந் தேருங்காற்—பொன்றாத
தேவிற்குந் தேவாஞ் சிவப்பிரகா சன்கமலப்
பூவொக்கும் பொற்றாள் புகழ்ந்து. (௧௨)

புகழுங் குலனும் பொறியின் செறிவு
நிகழு மறிவு நிறையு—மகிழ்வுதரு
மும்ப ருலகு முயர்முத் தியுமடியேற்
கெம்பெருமா னல்லதுவே றேது. (௧௩)

ஏது மறியே னிவனுற்ற தெம்பெருமான்
பாத மடியேற்குப் பற்றென்னு—நாதனே!
யெவ்வுயிர்க்கு மேமமே! யென்னு மெழும்வீழும்
வெவ்வுயிர்க்கு நீராய் விழி. (௧௪)

விழித்திருந்து தூங்குவார் மெய்யுள்ளத் துள்ளே
முழித்திருந்த ஞானமுனியே!—மொழிப்பறநீ
யாட்டியருள் கூத்தை யாற்று யருளாலே
காட்டியருண் மெய்ஞ்ஞானக் கண். (௩௫)

கண்டுற் றுயிர்த்துண்டு கேட்குங் கருவியுமாய்த்
தொண்டுற்ற வானுகிச் சொற்கடந்து—பண்டுற்ற
நீதானே யாய்நிற்றி நின்மலனே! நிற்குணனே!
நாதா! நீ வல்ல நடன். (௩௬)

நடனுடி நானனந்த நாளாக நல்லாய்
கடனு வதுதவிர்க்கை கண்டா-யுடனுகி
விள்ளா யருட்சொருபா! மேதினியின் யாவர்க்குங்
கொள்ளாத கோலமெலாங் கொண்டு. (௩௭)

கொண்டாடுஞ் செல்வங் குலனும் பொருடானும்
வண்டார் குழலாரும் வாழ்மனையும்—விண்டா
லழலளவே யானு லருட்சொருபா! வுந்தன்
கழலளவே யென்றன் கருத்து. (௩௮)

கருதப் படாதநீ கண்காண வந்த
தொருதப்பே கண்டா யுடையாய்—சுருதிக்குஞ்
சாற்ற வரிதாகுந் தாளிணையென் புன்றலைமே
லேற்ற வெனநினைந்தே யிங்கு. (௩௯)

இங்கேவந் தின்னம் பிறவாம லீசா! நின்
பங்கே ருகப்பாதம் பற்றினேன்—சங்கேத
சாத்திரமும் பாரேன் சதுமுகன்மால் வாழ்வையணு
மாத்திரமும் பாரேன் மறந்து. (சO)

மறந்துங் கருதுகிலேன் வானோர்தஞ் செல்வ
மிறந்தும் பிறந்து மிளையேன்-றுறந்தும்
பெருந்தவங்கள் செய்தும் பெறற்கரிய வீசன்
றிருந்தவந்து சிந்தையுள்ளே சேர்ந்து. (சக)

சேருஞ் சிவப்பிரகா சன்பதத்தி னின்பதத்திற்
பாரும் விசும்பும் பணிசெய்யுங்—கூரிய
மெய்ஞ்ஞானக் கண்விழிக்கும் வேதப் பொருள்விளங்கு
மஞ்ஞானக் கங்கு லறும். (சஉ)

அறுதி யுனைத்தந்தா யாங்கென்னைக் கொண்டா
யுறுதி யுனதோ வெனதோ-மறைகோடி
யன்புற்றுய் கின்ற வழியாப் பதம்பெற்றே
னென்பெற்று யென்பா லிறை. (சங)

இறையோனே வெங்கட் கிரங்காய் முறையோ
முறையோ வெனத்தேவர் மூவர்-மறையுந்
திகைக்க வருமந்தச் சேவடிகொண் டென்னைத்
துகைக்கை சொருவன் றொழில். (சச)

தொழிலான துன்பணியாத் தோத்திரஞ்செய் தோவா
தழலாகி னீயஞ்ச லென்பா-யெழிலார்
நிருபா திகனே! நினையவும்யான் பாட்டேன்
சொரூபா! வென் செய்குவேன் சொல். (௪௫)

சொல்லும் பொருளுங் கடந்த சொரூபா! வென்
றல்லும் பகலும் பரற்றிற்-கல்லு
மிரும்புந் தரமோ வெரிமெழுகு மோப்போ
விருப்பு மடியவர்கண் மெய்க்கு. (௪௬)

மெய்க்குன்ற மாகி வினையே னுள்ஞ்சிறந்த
மைக்குன்றை வேரோடும் வாங்குமிரு-கைக்குன்றே
யுன்னைநீ பொப்பா யுடையாய் தகுமோவந்
தென்னை நீ யாண்ட வியல்பு. (௪௭)

ஆண்ட வியல்பொன் றறியா வருவினையேன்
பூண்ட மயலொருநாட் போகாதோ-நீண்டபுக
ழாரணந்தா னுள்ள வறியா வகண்டபரி
பூரணன்ற னுள்ளம் புகுந்து. [௪௮)

புகுந்தது காணும் புவியிலே யொல்லை
முகந்துகொளீ ரெல்லீரு முத்தி-முகுந்தனயன்
சென்றெல்லை தேடமுடி காணாத தார்காணு
மன்றெல்லை தேடு மடி. (௪௯)

அடியு முடியு மறிவான் விசும்பும்
படியு மிடந்தும் பறந்து-நெடிய
கருந்தாதை யும்மகனுங் காதலித்தென் னெஞ்சத்
திருந்தானைக் காணுமா றென். (ருO)

என்னீய மானிடரை யேத்துவீ ரின்புலவீர்
தன்னீய வல்லான் சரணிற்க-மன்னும்
பொருளை லையுமோர் பொழுதே யருள்வான்
கருணை லயனே கலந்து. (ருக)

கலந்திலே னுன்னடியார் கண்ணருங் கூட்ட
மலந்திலேன் யாக்கைத்தீ வாழ்க்கை-குலைந்திலே
னுன்பாதங் காண்பா னுடையாய் கடையானே
னன்பாக யானுனக்கிங் கார். (ருஉ)

ஆரானு மெய்த் வரிய மலர்ப்பதமென்
றோராதே யுண்மை யுணராதே-வாராத்
தரமன் றியவென் றலைதந்தான் பாரீர்
பரமன் றிருவுள்ளப் பாங்கு. (ருந)

பாங்கா மிருவர் பறவையு மேனமுமாய்த்
தாங்கார மென்ப தறிந்தாயே-யோங்காரத்
தண்ணா லுளவா றருளொழிய வாய்வோமென்
றெண்ணா லுளமே யினி. (ருச)

பாங்கா மிருவர் பறவையு மேனமுமாய்த்
தாங்கார மென்ப தறிந்தாயே—யோங்காரத்
தன்னை யுளவா றருளொழிய வாய்வோமென்
றென்ன யுளமே யினி. (௫௪)

இனியார்தம் முள்ளத்தே யெப்பொழுதும் வாழுந்
தனியான தத்துவனூர் தாமே-துனியாமென்
னுள்ளங் கரைத்தா ரொழியாப் பெருங்கருணை
வெள்ளங் கரைபுரள விட்டு. (௫௫)

விட்டிடமுந் தொட்டிடமுங் காணு வெறுங்குருட்டுப்
பெட்ட ரறுசமயப் பித்தேறித்-தட்டுப்
படாதே பரனவன்றன் பங்கேரு கத்தாள்
விடாதே மனனே விளம்பு. (௫௬)

விளம்புகின்ற மாமறையின் மெய்ப்பொருளே வந்தென்
னுளம்புகுந்த சோதி யுருவே—தளர்ந்தனன்யா
னுன்மாயங் கண்டோறு முன்னடியே னென்னளவு
பன்மாய நீதவிரப் பார். (௫௭)

பார்க்கினுமாம் பரா தொழியினுமாம் பண்டைவினை
தீர்க்கினுமாந் தீராமற் செய்கினுமாம்—யார்க்கு

மறிவரிய பர்தமே யன்பீரயென் னுள்ளஞ்
செறிவது நீ செய்தவா செய். (ருஅ)

சேய்மை கரிமை வெளிமை திருமேனி
யையமை பெரிமையென வாரறிவார்—மெய்யாக
வும்ப ருணரா ருனையடியேன் கண்டிருப்ப
தெம்பெருமான் யாராகி யான். (ருகூ)

ஆராய் நெஞ்சு மடியேனுந் தானெங்கே
சீரார் பிரானுன் றிருவருட்கட்-பாராதே
நன்றாய ஞாலமாய் ஞானமாய் நானுவா
யொன்றாகி நின்ற வொளிக்கு. (கூ0)

ஒளியேயென் னுள்ளத்தை யோவா திருக்குங்
களியே கருத்திறந்து கண்ட-வெளியேயென்
னாராத பேரமுதே யத்தா வடியேற்குத்
தாராத தில்லைநீ தான். (கூக)

தானிருக்கும் வண்ணத்தைக் காட்டித்தன் றாளிணைக்கீழ்
யானிருக்கும் வண்ண மெனக்களித்த—தேனிருக்கு
முன்னரிய தோர்சொருப னுள்ளிருக்க நெஞ்சமே
யென்னரிய தெல்லா மெளிது. (கூஉ)

எளிவந்த தோகெடுவா யெல்லாந் திறந்து
களிவந் திலைநினைந்துன் கண்ணீர்—துளிவந்த
தில்லைகாண் சிந்தையுனக் கெங்கேனுங் காணெஞ்சே
யல்லைகா ணாளுடையார்க் கன்பு. (௮௩)

அன்பா லொருகா லருட்சொருபா! வென்னிலவன்
றன்பாத மெய்திச் சனனமறு—மின்ப
மதிநமக்கு நல்குங்காண் வாராய் மனனே
யிதுநமக்கு நல்லதுவே றேது. (௮௪)

எதுசெய்தா லேதாமென் றேமாக்கு நெஞ்சமே
தீதுசெய்யா தெப்பொழுதுஞ் சிந்தியாய்—போதுசெய்யா
தண்ணலுநம் பால்வருங்கா ணாங்கவன்றன் பூங்கழற்கே
நண்ணலு மாங்கா ணமக்கு. (௮௫)

நமக்குடைய நாயனார் செய்த நலன்ஞாலத்
தெமக்கியம்ப வாகு மியல்போ-தமக்கன்
படுத்தா ரடியா ரடியாரைப் போற்றக்
கொடுத்தா ரெமையடிமை கொண்டு. (௮௬)

கொண்டுகொண் டேத்திக் குவலயத்தே நாயேனைத்
தொண்டுகொண் டாண்டவியல் சொல்லியே-கண்டுகொண்
டோவா துருகவுளனோ டுரைகடந்த
தேவா! திருவுள்ளஞ் செய். (௮௭)

செய்யர்மை யுஞ்செயலுஞ் செய்யானைப் பெற்றயான்
செய்யே னுளகாலஞ் செய்வதினி—வையத்
தடியேன் றரமறியா தாண்டென்னைப் பார்த்த
படியே புகழ்வதுவே பார்த்து. (௬அ)

பார்த்தா யெனையொழியப் பாரா தொருபார்வை
பேர்த்தாயா னென்னதேனும் பேதைமையைத்—தீர்த்தாய்
கொடியேன் வருபிறப்பைக் கோவேநீ செய்த
தடியேன் றரமே யருள். (௬௯)

அருளே நிறைவடிவே யாரணங்க டேடும்
பொருளேயென் போதத்தே நின்ற—தெருளே
சிவனேநின் பொற்பாதஞ் சேராமல் யான்போ
பவமே கழியாம லாள். (எ0)

ஆளும் படியே யலமாக்கு மென்னெஞ்ச
மீளும் படியே வினையெல்லா—மாள
வுருக்கும் படியே யுடையா னருடா
னிருக்கும் படியே யெனக்கு. (எக)

எனக்கிருந்த வாறேபோ லெல்லாருங் காண
வுனக்கிருந்தாற் குன்றுவதோன் றுண்டோ—மனக்கவலை
நீத்தாட் கொளவந்த நின்மலநீ யாவரையுங்
கூத்தாட்டு வானென்னே கூறு. (எ௨)

கூறுங் கரணநீ கூறரிய கொள்கைநீ
மாறுங் கொடிய மயக்குநீ—தேறும்
பரிசுநீ யானற் பரனைநின் பண்பிங்
குரைசெய்வார் யாரே யுரை. (எ௩)

உரைக்குந்தோ ருவிவைநின் றுன்கருணை வெள்ளங்
கரைக்குந் திறனெழியக் காணேன்-றிரைக்கொண்ட
வம்பரனே சென்ன வருவிவரு மந்தோகண்
ணெம்பரனே றுண்டோ வெனக்கு. (எச)

எனக்குநினை வுன்பதத்தை யெய்துவதே யெந்தாய்!
நினக்கு நினைவே துரையாய்-மனத்திறெடு
மாற்ற முணரா வடிவாக்க வோவென்னைக்
கூற்ற முணவோ குறித்து. (எ௫)

குறித்தா யெனையாளக் கோலமாய் வந்தாய்
கருத்தாயென் வல்வினைநின் கண்ணுன்—மறுத்தெனது
புன்றலைய வன்குரங்கு போலுமனன் போக்கினு
யென்றலையி னின்பதங்க ளிட்டு. (எ௬)

இட்டம் பெருமார்க் கியாதோ விவள்காதன்
மட்டன் றெனையாள வாவென் னு—மிட்ட
கழுநீர்த்தா ரென்னுந்தன் கைகழுவா நிற்கு
மழுநீர்த்தா ரைக்கே யணங்கு. (எஎ)

அணங்குற் றொருகோடி யாடறுத்தாற் பெறே
னுணங்குற்ற தேவ ரொழிப-வணங்குற்று
நான்கண்டு கொள்ள நடந்தா னடிப்பொடியே
மான்கொண்ட நோய்க்கு மருந்து. (எஅ)

மருந்தாய் நிதியாய் மதியாய்க் கதியாய்ப்
பொருந்துநுகர் போகமாய்ப் போற்று-மருந்துணையாய்த்
தந்தையாய்த் தாயாய்த் தலைவனுமாய்த் தாடந்தெ
னெந்தையாய் நின்றா னிறை. (எகூ)

இறைநெஞ் சருளே யெனனினைந்தி யானக்
கறைநெஞ் சறியாதே கண்டேன்-மறையோனு
மோதரியான் செய்தவிர கொன்றுரைப்ப மாட்டுகிலே
னேதறியே னென்னுவி யுண்டு. (அ௰)

உண்டோ விலதோ வுருவோ வருவோவென்
றெண்டானு மற்றிமையோ ரேமாப்பக்-கண்டே
னடியே னெனவென்னை யாண்டானை யாற்றேன்
முடியேன் முறையோ முறை. (அக)

முறையோ தரியேன் முழுதுலகு மோரடி
யறையோவமரர்க் கறையோ-மறையோடு
தங்க ளுளத்தொளித்த தத்துவனார் தாமேவந்
தெங்க ளுளத்திருந்தா ரென்று. (அஉ)

என்று மொருவர்க் கியல்பின்ன தென்னும்வகை
யொன்று முணர்வரியை யுத்தமனே-யென்றால்வந்
தெய்தவார் வல்லா ரிரங்கா யெனவிரந்து
செய்தவா காணுமை தேர்ந்து. (அ௩)

தேரே னுடையாய் திருமேனி யின்னருமை
பாரே னொருகாலும் பாவியே-னூரேனீ
யாண்டவா சொல்லி யகிலமெலா நின்பாதந்
தீண்டவா தீவினையென் செப்பு. [அ௪]

செப்புற்ற கொங்கை திறத்தென்செய் தாயறியே
னப்புற்ற கண்ணருவி யாருகு-மொப்புற்ற
தேவா திபர்வணங்குந் தேவே சிவனேயென்
றுவா விவளான வா. (அ௫)

வானவா நின்பாதம் வைத்தவா நீயேநா
னானவா வென்னவா வற்றவா-கானில்
வருந்தவா னோர்முனிவர் வல்வினையே னெஞ்சத்
திருந்தவா வென்செய்த வா. (அ௬)

என்செய் பிழையறியே னெங்கோ னெனத்தொழுதேன்
பொன்செய் கலைவீழும் பூண்வீழு-மென்செய்கே
னப்போத மாறு தருவிவரு மந்தோக
ணெப்போதுங் கூடா விமை. (அ௭)

இமைக்குள்ளு நம்பிறவி யெஃக விருங்கூற்றைக்
குமைக்குங் குரைகழல்க ணல்கி-நமக்குள்ள
வஞ்சமே கண்டாண்ட மாமணிக்குக் கைம்மாறு
நெஞ்சமே கண்டனையோ நீ. (அஅ)

நீயென்று முண்டாய் நிகழ்வெல்லா நேராக
வாயன்றி நின்றானென் றாரணஞ்சொன்-னாயகனுக்
காமுறவே செய்யா மனனேமற் றல்லதுநீ
காமுறுவ தெல்லாங் கனா (அகூ)

கனவினுந் தேவர் கருதற் கரியா
னனவிலே நாமாக நம்மை-வினவிவந்
தஞ்சேலென் றாண்ட வருட்சே வடியருமை
நெஞ்சே நினைக்கிலை யே நீ. (கூ0)

நீயே யெழுந்தருளி வந்து நெடுங்கால
நாயேன் வருபிறவி நாமமறக்—காயுமத
வாரணமே மெந்தன் வலியேமற் றெப்பொருட்குங்
காரணமே நீயேயென் கண். (கூக)

கண்ணென்கோ நாயேன் கருத்தென்கோ காதல்செயும்
பண்ணென்கோ தேனென்கோ பாலென்கோ—விண்ணவர்க
டங்கோவே யென்கோ தனிநா யகவென்கோ
வெங்கோவே யென்சொல்கோ யான் (கூஉ)

யானே பெனையுடையோ னென்னெஞ்சே நன்னெஞ்சும்
யானே பிறப்பறுக்க வெண்ணினேன்—யானே
பிறந்தேனு மெந்தை பெருமானென் றீமை
மறந்தே புகுந்தான் மனத்து. (௬௩)

மனத்துணையே யென்பிறவி மாமருந்தே வாழ்வே
தனித்துணையே சார்வே தவமே-தினைத்துணையு
மாற்றே னுனைப்பிரிந்தே யாரமுதே யாராத
தோற்றேனே யென்செய்கேன் கூறு. (௬௪)

கூறு மளவே குருமலர்த்தா ளன்றியே
வேறு முளவா விளங்குமது—சீறு
மிடையானே யேழ்பிறவி மாறுவது மென்னை
யுடையான் றிருவார்த்தை யொன்று. (௬௫)

ஒன்றோ மனனே யுயர்ந்தோர் திருவுள்ள
மன்றோ வறுதியிட வாகுமோ—வின்று
முழங்குந் திருவாய் மொழியொன்றுன் முத்தி
வழங்கும் பெருமான் வரின் (௬௬)

வருமாகி னிப்பிறவி வாய்த்ததே யன்றோ
திருமேனி கண்ணுற் றிளைப்பப்—பெருமாற்குத்
தாமஞ்சாத் தக்கரங்க டாழ்க்கத் தலைசெவிக்
ஞமங்கேட் பத்துதிப்ப நா. (௬௭)

நாவே நினைபிரந்தே னேனும் பிறிதொன்று
கூவேலருள் வடிவு கொண்டருளிப்-பூவே
யிருபாதந் தந்திங் கெனையாண்டு கொண்ட
சொருபானந் தன்புகழே சொல் (கூஅ)

சொல்ல முடியாவாம் வேதந் துணையடிக்கு
நல்லமுடியாள னாரணனும்-வெல்ல
முடியாப் புலனுடையேன் மூலமா முத்திக்
கடியா னெனநிற்ப தாம். (கூகூ)

ஆமே பிரமனுக்கு மாயனுக்கு நாயனார்
தாமே புகுந்தென் றலைமிசையே-யேமுற
வேற்றுதற்கு நோற்றேற் கொழிய வெளிவந்து
போற்றுதற்குச் செம்பொனடிப் போது. (ள)

வெண்பாவந்தாதி-முற்றிற்று.

# கலித்துறையந்தாதி.

## தத்துவசாரம்.

சொல்லன சொல்லின் பொருளன சொல்லு மனமுஞ்
செல்ல, வில்லன வுள்ளன யாவையுமாவன வென்னுடைய,
கல்லன நெஞ்சங் கரைப்பன வன்பொ டுரைப்பவர்க்கு,
நல்லன நற்செசரு பானந்தர் பாத நளினங்களே. (க)

நளினந் தனையொக்க நற்றவஞ் செய்ய நலன்மருவும், புளி
னஞ் செறிதடம் புக்கதென் னேதனைப் போற்செய்கின்ற,
னளிநந் தமக்களிக் குஞ்சொரு பானந்த னண்டபிரான், களி
நந்து சேவடி யப்படி யேசெய்யக் கண்டிருந்தே. (உ)

கண்டிருக் குங்கதி நல்கா தொழியினிக் காயந்தன்னைக்,
கொண்டிருக் கும்படி யென்னடி யேன்குர வாவுனக்கே,
தொண்டிருக் கும்படி யாண்டவ னேசொரு பானந்தநின்.
பண்டிருக் கும்மறி யாப்பர மானபொற் பாதங்களே. (ங)

பாதங்க ளேபர மென்றிருக் கும்பர மர்க்குடம்பு, போதங்க
ளேபர மல்லவெங் கோனடி போற்றலின்றி, வாதங்க ளே
பர மென்றிருப் பார்க்கு வரவுபஞ்ச, பூதங்க ளேபரந் தோ
ன்றுத வர்க்கொரு போதினுமே. (ச)

போதி னுடம்பெடுக் குந்நெறி போகுத லந்நெறியாம்
போதி னெடுங்கிப் புகில்விரி கின்றமெய்ப் போதங்கண்ட
போதி னடங்கத் தருந்தம் பிரான்புவி மேன்டந்த
போதி னிடங்கொண் டிருப்பதிப் போதம் புரையறவே (ரு)

அறவே தளைப்பட் டழுந்துகின் றேனடி யேனுடைய
வுறவே யுனக்கன்றி யார்க்குரைப் பேனினை யான்மறந்து
மறவே னெனவென்னை வாழ்வித்த பாதத்தை வந்தடையப்
பெறவே யருண்மற்று வேண்டே னெனக்குப் பிறிதொன்று
[மே. (௬)

ஒன்றும் பலவு முருவு மருவு முடம்பெடுப்பும்
பொன்றுந் திறனும் புதிதும் பழைதும் பொல்லாமையுட
னன்று முதலு நடுவு முடிவுநா னுவிதமா
யென்று மொருபடி யாயிருப் பானிருக் கும்படியே. (எ)

இருக்கும் படியிது வாகினெம் மானிப்பொய் வாழ்க்கையினை
யொருக்கும் படியொன் றுரைத்தரு வாயுதிக் கும்பொழுது
சுருக்கும் பொழுதுமி லாச்சுட ரேசொரு பானந்தவென் [ஞ்
றிருக்கு மறுக்கத் திருமேனி சாத்திய தேசிகனே. (அ)

தேசிகன் பாதங்கள் சிந்திக்க வேசிந்தை செய்திருக்கும்
வாசிகண் டாலு மறக்குமென் னேயிந்த மாயவாழ்க்கைப்
பாசிகண் டானந்த வாரிகண் டாரப் பருகப்பெறு
நாசிகண் டாலுச் செவிதுவக் கோடு நயந்துநின்றே (௯)

நயவா விடயத்து நையுநெஞ் சேநம்மை நன்னெறிசேர்த்
துபவா தரிக்கி னுரைக்கவுற் றேனுரை யாடுதொறும்
வியவா வுருகா விழிபனி யாகின்ற மெய்யடியார்
கபவா மணப்பங் கயத்தாளை யேத்துதல் காரியமே. (௰)

காரியங் கேட்கிற்செங் கையாழி கண்டிலன் செய்யபச்சை
நாரியின் பாகமு நான்கண்டி லேனுன் முகமுமில்லை
வாரியுண் டாவியும் யாக்கையும் வையமு மற்றுமுற்று
மாரியன் காணும் பிறப்பறுத் தானென்னை யாண்டுகொண்
டே. (௯௪)

ஆண்டுகொண் டானு மமரா திபரையு மாக்குந் தன்மை,
பூண்டுகொண் டானும்புரங்கள்சுட் டானும் புவனமுட்ட
நீண்டுகொண் டானுந்தன் னேர்மைகண் டானு நினைந்துரு
கேன், மீண்டுகொண் டாடும் படிவிழித் தானொரு வேதி
யனே. (௯௫)

வேதிய னார்சொரு பானந்தர் மெய்யடி யாரடிக்கீழ்ப், பூதி
யி னாற்பிற விக்கொடு நோய்விட்டுப் போகுமென்றால்,
வாதியர் நாவலங் காட்டி வடிக்கின்ற வார்த்தைகளா,
லூதிய? நாமறி கின்றிலங் காணு முலகத்திலே. (௯௬)

உலகத்தி லேசில கற்றுற் பிறப்பிறப் போவுமென்பார், கல
கத்தி லேநெஞ்சங் கன்றுத வண்ணங் கரதலத்தா, மலகத்
தி னேரிந்த வையமெல் லாமுண்ட வண்ணமெய்யா, வில
கத்தன் னேர்மலர்ப் பாதந்தந் தானுக்கிங் கென்செய்வனே.
(௯௭)

வனனே மருவினென் வார்குழல் வாணகை மான்விழியார்
தனனே மருவினென் னென்செய்வ தோதம்பி ரானைத்தங்

கண், மனனே மருவி யிருக்கவைப் பாரை வணங்கியவ, ரின
னே மருவ விருப்பமுண் டாகி னிதயத்திலே. (௰௫)

இதயா லயத்தி னிருப்பா ரறிய விரந்துருகிப்,
பதையா திருப்பதென் பாவிநெஞ் சேபர ளுரருளாற்,
சிதையா தொழிபிற் சிலுகாய் விடுமிச் சிலசபயக்,
கதையான் மனக்கணக் காலவிடு மோவிக் கடும்பிறப்பே. ()

பிறந்தும் பிறவாக பெம்மா னெனைச்செய்த பெற்றிதன்னை,
மறந்து மறவா வகையளித் தானின்ப வானுலகிற், சிறந்தே
னரகிற் செறிந்தேன்பல் லூழிகள் சென்றுநின்றே, யிறந்
தேனென் செய்தே னெனக்கின்ப துன்ப மினியில்லையே ()

இல்லாத வொன்றை யுளதா நினைந்திங்ங னேசழியும்,
பொல்லாத வென்னைப் பொருளா நினைந்திப பொறிகுலைக்க
வல்லானை வாக்கு மனனு மொன்றாகி வழுத்தினர்க்கு, நல்லா
னை யேத்துவன் யானின் றெனக்கே நகைவருமே. (௰அ)

வருமா தரவறி வாநெறி வான்வலிந் தாண்டுகொண்ட,
பெருமானை யல்லது பேசுவ னேபிற வாதவனை, யொருமா
னுடங்கொண் டுருகாத வென்னை யுருக்கித் தன்னைத்;தருமா
றுவந்தசெந் தாமரைத் தாளென் றலைவைக்கவே. (௰௯)

வைக்கப் பழவினை மாண்டறும் ஞான மயவடிவாம், போக்
கப்பிறவியும் போய்விடு மிந்தப்புவனத்துளீர், துக்கப் படா

வகைசொல்லுகின் றேன்சொரு பானந்தர்தஞ், செக்கர்ப்
பதுமத்தை வென்றபொற் பாதஞ் சிரத்தெடுத்தே. (உ0)

எடுத்தாய் வினைக்கட னின்றென்னை முன்னை யெழுபிறப்புங்
கொடுத்தாய் கெடாத பதமளித் தாய்கிள ரும்புலன்க, டடுத்
தாய் தடுக்கத் தடுக்கநி லாதவை யின்னமென்னைப், படுத்தா
வகையுன் னடிப்படுத் தாயெம் பரம்பரனே. (உக)

பரம்பா விடயந் தொறும்பதை யாவித யத்தினின்னை,
நிரம்பா தவரோத்து நில்லாத வண்ண நிரந்தரமென்
சிரம்பாதம் வைத்துன் றிருமேனி யைக்கண் டிருக்கநல்காய்
வரம்பாச வேரறுத் தாயடி யேனுக்கு மற்றில்லையே. (உஉ)

மற்றிலைப் பற்றென்று வாழ்வித்த நாதன் மலரடியைப்
பற்றிலை மற்றொன்றைப் பற்று தொழிந்திலை பற்றியொன்று
ம், பெற்றிலை யாயினும் பேய்த்தேரை நீரெனும் பின்றொ
டர்ச்சி, யற்றிலை யென்செய்கின் றாய்நெஞ்ச மேயழிந் தற்
றனையே, (உங)

அற்றார் தமக்கன்பு செய்வா ரருட்சொரு பானந்தனார்
நற்றா யினுநல்கி நற்றா ளிணைதந்து நாடறிய
வற்றாத வானந்த வாரியுள் ளேநம்மை வைக்கநெஞ்சே
பெற்றாலு மொன்றைப் பெறாதாரையொக்குநின் பெற்றி
களே. (உச)

நின்பெற்றி தன்னை நினைக்கவுண் டோநெஞ்ச மேநிறையப்,
பொன்பெற்று வைத்துப் பொதிந்துகொள் ளாய்புன் குரம்
பையிலே, தன்பெற்றி தன்னைத் தருந்தம்பி ரான்வந்து சார்
ந்திருக்க, வென்பெற்று நீபிந்தி யஞ்சொன்ன வாசெய்தி
னைக்கின்றதே. (உரு)

இளையேன் பிறந்திறந் திந்திப் பந்தனைத் தொந்தனைப்பட்
டளையே னினக்கன்றி யன்புசெய் யேனகி லாண்டத்துக்கு
முளையே முதலு முடிவுமி லாவின்ப மூழ்கியெனைத்
திளையே யெனச்செய் சிவப்பிர காசச் செழுஞ்சுடரே.(உ௬

செழுமலர்ச் சேவடி சேர்த்தகி லேனன்பிற் சேர்த்தினரைக்
கெழுமியும் யானறி யேனன்பர் நீதிகள் கேட்டுமிலேன்
புழுமல் யாக்கை பொறேனுடை யாயென்றுன் பொன்னடி
க்கே, யழுமது வன்றி யறிகின்றிலே னென்னை யாண்ட
வனே. (உ௭)

ஆண்டவ னிக்கரு ளால்வந்த வாறு மவனடிக
டண்டவென் னெஞ்சு திரிந்தற்ற வாறுஞ் செவ்வாய்மலர
நீண்ட வனந்தம் பிறப்பற்ற வாறுநே ரேயறிந்து
மீண்டவ னென்று நினையா திருப்பதெல் வெவ்வினையே. ()

வினைவேறு சொல்லுப வேறுமென் னெஞ்சத்தை மீட்டுடம்
பி, னென்னைவேறு செய்தனை யித்தையு மென்னையும் யானி

ஊையா, நினைவே நினைவித்து நின்னடிக் கேநிலை கொள்ளத் தந்த, பினைவேறு நானறி யேனெம்பி ரானன்றிப் பேசு தற்கே. (உசு)

பேசுதற் காவன வோதுதற் கார்பிறப் போடிறப்பைக்
கூசுதற் காரிக் குவலயத் தாருட் குலநலங்கொண்
டேசுதற் கார்பர மீசனுக் காளுற்ற யானென் றென்மேற்
பூசுதற் காரவன் பொன்மலர்ப் பாதப் பொடியொழிந்தே. ()

ஒழிந்தன வேறொன்று காண்கின்றி லேனுண்டு போல முன்னங், கழிந்தன வாகின்ற காயமுஞ் சீவனுங் காட்சி யெல்லா, மழிந்தபொய்ம் மாயையு மைந்தா மவத்தைக ளு ம்மறிவா, மொழிந்தவன் பாத முளரியம் போதென்கண் முன்னிற்பதே. (நக)

நிற்பன வாயு நடப்பன வாயு நிகழுநின்னைச்
சொற்பன மாமென்று சொல்லலுற் றேன்சொல்ல லாவ துளக், கற்பனை யாவுங் கடந்தாய் திறத்தொன்றைக் காண் கின்றிலே,னற்பன வா!வறி யேனின்று நீசெய்தநாடகமே.

நாடக மாய்முடிந் தற்றது போனம்மை யாளுடையா
னாடக மார்கழற் கன்புற்ற வாறு மழுகுபுழுக்
கூடக மாகக் குறித்திதற் காகக் குயின்மொழியார்
மாடக மாள வருந்துமென் னேயிந்த வன்மனனே. (நந)

மனனே மொழியு மனமற் றூர்வடி வாகியசிற்
கனனே யுனேநல்கு கற்பக மேயென் கருத்தின்வைக்குந்
தனனே நினதடி சார்ந்தா ரவரடிச் சார்ந்தவர்தம்
மினனே மருவி யிருக்கநல் காயென் னிடர்கெடவே. (௯௪)

கெடுத்தான் பவமரன் பண்டொரு நால்வர்க்குக்கேசவனும்
படுத்தான் பதினெண் படிசொல்லிற் பார்த்தற்கு வார்த்தை
யொன்றிற், கொடுத்தா னெனையாண்ட கோனடி கூடினர்
யார்க்குமுத்தி, யெடுத்தான் பரமன் சுரர்க்கையந் தீர வெரி
மழுவே. (௯௫)

மழிப்பார் மயிரை வளர்ப்பார் சிலர்வற் கலைபுனைவா
ரொழிப்பா ருயிரை யொறுத்துழல் வார்தர்க்க மோடுளநாட்
கழிப்பார் பிறிது கருதாகின் றூர்கண்ட தேதுங்கண்ணால்
விழிப்பா ரருளை விரும்பார் நிரயத்தின் வீழ்வர்களே. (௯௬)

வீழ்வார் தமையுமின் மிக்கா ரிலரென்று மெய்யுணரா
வாழ்வார் கடைதொறும் வாளா சுழன்றுதம் வாய்மைகெடப்
பாழ்வாய் திறந்து பதைப்பார் சிலர்பந்த பாசம்விடத்
தாழ்வார் நினைவர்க ளோதம்பி ரானைச் சரணமென்றே. (௯௭

சரணஞ் சரணென் றடைந்தார் தமக்குச் சலிக்குமந்தக்
கரணங்க ளில்லையிக் காயமெங் கேயவர் காண்டொரு
மரணம் பிறப்பில்லை மற்றொன் றுமில்லைப்பற் றொன்றுமிலாப்
புரணந் தமக்கு வடிவா மிறைசெயும் பொன்னருளே. (௯அ

பொன்னரும் பாதமென் புன்றலை மேல்வைத்துப் புன்குரம்
பைப், பின்னரும் பாமற் பிரித்தனை யேபிறி தற்றிருக்கப்
பின்னரும் பாவம் பிறிதுள வோபெரு மானிரங்கித், துன்
னரும் பாவந் துடைத்தருள் வாய்மெய்த் துறவுதந்தே.(௩௯

துறவின டுத்திலை தொண்டிற் பணிந்திலைத் தொல்கழற்கே
யுறவி னெடுத்தொரு மாமல ரிட்டிலை யுள்புகுந்தென்
பிறவி கெடுத்த பெருமானை யைம்புல ஞரைப்பெற்று, மறவி
கொடுத்தநெஞ் சேயென்செய் தாயென்னை மாயத்திலே.(௪௰

மாயத்தி லேயெனை வைக்கினும் வைபொரு மாசுமிலாத்
தேயத்தி லேயருள் செய்கினுஞ் செய்யின்பச் சேவடியைக்
காயத்தி லேகண்டு கொள்ளென்று தந்தவென் கற்பகமே!
நேயத்தி லேயென்னை நீங்காத வண்ணம் நினைந்தருளே.(௪௧)

அருளே! யமையாத வானந்த வெள்ள மளித்தருளுந்
தெருளே! மதுரச் செழுங்கனி யே! சிந்தைக் கப்புறனும்
பொருளே! புகல வரியவ னே! புக ழார்மனத்து
மருளே! மறையவ னே!மலர்த் தாண்மற வாமனனே.(௪௨)

மனனே முதல்வரு மிந்திரி யப்பகை மாய்த்தடியா
ரினனே யெனைவைத்த வின்னமிர் தே!யிலங் குஞ்சு டர்ச்சிற்
கனனே! கருதரு காட்சிய னே! கடை யேற்கிருந்த
தனனே! தரிக்கின்றி லேன்றலை வா!சரண் டந்தருளே.(௪௩)

தந்தா யுனையென்னைத் தாங்கிக்கொன் டாய்தமியேன்ற
னுள்ளே, வந்தா யெனையிங்ஙன் வாழச்செய் தாய்மன வாக்
கிறந்த, நந்தாத பேரொளியேநனு காருள்ள நள்ளிருளே
சிந்தா மணியே!யடியேனிதற்கென்கொல் செய்வதுவே.(சச

செய்யே னிருவினைச் சித்தவி காரத் தியக்கிற்சென்று
நையே னரகினுக் கென்கட வேனின் னடந்தவிர்த்த
வையே! யருட்சொரு பானந்த நாத! வுனையடைந்தே!
னெய்யே னினிச்சிலர் பாலிர வேனினியாதொன்றுமே.(சரு

யாதொன்று நீயன்றி யில்லாத பின்பிங் கெவற்றைநன்று
தீதென்ப தெங்கள் சிவக்கனி யே! செய்யவேண்டுவது
மாதொன் றியநின் றிருமேனி கொண்டிங்ஙன் வந்தவிந்தப்
போதொன் றியகழ லேவழு வாது புகழ்வியப்பே. (சகூ)

புகழ்ந்தென் புகழல்ல சொல்லியொன் றாகப் புவியினுள்ளோ
ரிகழ்ந்தென் னெனையெவ ரென்செய்கி னென்னினி யாவை
யுமாய்த், திகழ்ந்தெங் கணுந்தன் செயலன்றி யில்லாமை
தேற்றிச்சிந்தை, நிகழ்ந்திங் கெனையென்று நீங்காம னின்
மல னின்றனனே. (சஎ)

நின்று ரறியா வகைவந்தென் னெஞ்சு முயிரும்வெளவி
யொன்றாக யானறத் தானே யுயர்ந்தன னோதரிய.
வென்றாதை யானையுந் தானு நிறைந்து கழன்றி லங்குங்,
குன்று வொளிமெய்க் குருபர னாகிய கோலங்கோடே.(சஅ)

கொட்டாவி கொண்டனர் விட்டா ருயிரென்று கூடநின்று
நட்டார்கள் சுட்டு நடக்கும் வகையிது கண்டு கண்டு [பர்க்
மொட்டாதெ னெஞ்ச மொருகா லிதென்னென் றுணரவும்
கெட்டா தவனென்னை யாளுடை யானரு ளில்லவர்க்கே.(சகூ

இல்லாத தில்லை யெனக்கினி யாவரிங் கென்னை யொப்பார்
நல்லா னிகத்தொரு மானுட னாகியிந் நானிலத்தே
யெல்லாரு நிற்கவென் புன்றலை மேலிரு பாதம்வைத்துக்
கல்லா மனமென் கனியாகும் வண்ணங் கரைத்தனனே.ருO

கரையே னெனைவந்து நீசெய்த வாறது கண்டுகண்டே
யுரையே னுருகிநின் றோலமி டேனுடை யாயடியேன்
றிரையே மருவு கடலென வேங்கிச் சிலிர்த்தலறேன்
விரையேன் றொழுவிங்ங னேயெளி தோவென்றன் வெவ்
வினையே. (ருக)

வினையே னையும்பொரு ளென்றிந்த மேதினி வந்தநன்மை
நினையே னெனதுகண் ணீர்சொரி யேனெடு மாலைகொடு
புனையேன் மகிழ்ந்துனைப் போற்றகி லேன்புவி தன்னினெ
ன்னே, யனையேன் றிறத்திங்ங னெவ்வாறு கண்டுவந்
தாண்டதுவே. (ருஉ)

ஆண்டவ னே! நின் னடியிணை தந்தபின் னெவகையர்
நீண்ட வினைக வுலகங்கள் காலங்க ணீள்வினைக

வீண்டு சராசரம் யாவையு மின்னு முளவுமெல்லா
மாண்டன வேவறி யேனுடை யாயிந்த வல்லபமே (ருங)

வல்லாள னிங்கொரு மானுட னாகிவந் தாண்டு கொண்டு
பொல்லாத வென்றன் மனத்திற் புகுந்தபின் போதமதா
மெல்லா மிருந்தது வேறுப டாமலி தென்செய்தவா
நல்லா னருளிருக் கும்படியோ விந்த நன்னலனே. (ருச)

நலனே! விளங்கு நவமணி யே! பண்டை நற்றவத்தின்
பலனே! பகரவொ ணாப்புக ழே! பத்தர் சென்றடையு
மிலனே! யருட்சொரு பானந்த நாத விகபரமே
நிலனே வருங்கழல் யான்பாட நல்கு நிரந்தரமே. (ருரு)

தரமேது மில்லாத் தமியேனை வந்தாண்ட தத்துவனே!
பரமேது மொன்றின்றிப் பல்கடை தோறு மிடுபலியென்
கரமே கலனென வுண்டு களித்திட நல்குகண்டாய்
வரமேது மீதன்றி வேண்டே னினியெங்கள் வானவனே!.

வானாதி பூதங்கள் மெய்யென்று கொண்டு மயங்குமென்பால்
வானாதி பூதங்கள் மெய்யே யெனவிறை வந்தபின்றை, வா
னாதிபரு மனிதரு மற்றுள் ளவருமுன்னே, வானாதி பூதமுங்
காணே னவன்றந்த வாழ்வுகண்டே. (ருஎ)

வாழ்வாக வெண்ணி மனைமக்கள் மாதரை மற்றவர்பால்
வீழா வழிந்து விடுகின்ற வென்னையு மேனிகொண்டு

தாழாமல் வந்து சரணார விந்தந் தலையளித்தே
யாள்வானை யன்றி யறியேனினிமற் றறிகுவதே. (ருஅ)

அறிவே!யறிவு மறிபொரு ளானதும் போயடங்குஞ், செறி
வே கழன்றொளிர் செஞ்சுட ரேபின்னுந் தேய்ந்துவெறுங்,
குறியேது மின்றிய தோர்குறி யேபிவை யாவையுமா,றெ
றியே யறிகின்றி லேன்சிறி யேனின் னிலைமையதே. (ருக)

அதுவே பொருளிது வன்றென் றரற்று மறுசமய
மதுவே மிகவுண்டு மாளாத வண்ண மலர்க்கழறந்
திதுவே பொருளென யான்காண வந்த விறையையன்றி:
யெதுவே வரினு மியம்பேன் பிறதெய்வம் யானினியே.(சுo)

யானே வினவி யிணையடி நண்ணுதற் கெவ்விடத்துந்
தானே மலர்க்கழ றந்திடு வாயித் தரணிவந்தென்
னூனே யுருக்கி யொழியாத வானந்த மானவுண்மைத்
தேனே யளித்த சிவப்பிர காசச் செழுங்கனியே. (சுக)

கனியென் றியம்புவன் கன்னலென் கேன்கரு தாதவர்க்குத்
துனியென்று சொல்லுவன் சொல்லறி யேன்றுனைக் கற்று
நின்ற, தனியென்று சாற்றுவ னேதறி யேனெங்க டத்து
வனே, யினியென் னியம்புவ னென்செய்கு வேனிவ் வியல்
பினுக்கே. (சுஉ)
இயலாத வேட்கைகொண் டெய்த்தே யுழன்றறிவேது
மில்லா, மயலார் மனத்து மதியிலி காண்மன்னை வந்திறை

ஞ்சி, யுயலா யிருக்க வவமே யுழன்றெங்க ளுத்தமர்க்கிங்
கயலா யிருப்பதென் னேகெடு வீர்நின் றயர்ந்துகொண்டே.(

கொண்டாடி முன்வந்த கோள்களும் வீடுங் குடிப்பிறப்பும்
வண்டார் குழன்மட மாதரும் வாழ்வும் வலிந்துவந்து
தண்டாத வின்பந் தமியேனை யாட்கொண்டு தந்தவரைக்
கண்டா லிவைமுழு தும்மெங்ஙனேவல்ல கைவிடவே. (௯௪

கையே தொழுவது மன்றியென் னெஞ்சுங் கனியும்வண்ண
மெய்யே திருவுள்ள மாயரு ளாயறி யாதமுன்னைப்
பொய்யே யதுபினைப் போனது வாகப் புகுந்துநின்ற
மெய்யே யினியடி யேனிது வேநின்னை வேண்டுவனே.(௯௫

வேண்டிய வாசெய் தியாமிங்ங னேவிளை யாடவென்றே
யாண்டிடு நாதரை யாரென் றுரைப்பி னருட்படையா
னீண்டிய மாயங் கெடுத்தெனை முன்னை யியல்புதந்து
தூண்டிய காரணச் சோதி யருட்சொரு பானந்தரே. (௯௬)

சொருபா வெனவுமென் றேழா வெனவுந் துளக்கமிலா
நிருபா திகவென்று நின்றே யரற்றி நெடிதுநைந்தே
யுருகா வுவவா வவன்புக ழாமுண்மை வெள்ளமுள்ளம்
பருகா தொழியினுண் டோபவ நாச முறும்பரிசே. (௯௭)

உறவே யலமந் துழல்கின்ற யானுண்மை கண்டுகொண்ட
திறவே யென்முன்வந்த தேசிக னேநின் றுதித்திக்கின்ற

நறவே நவையறு மன்பர்தம் பால்வரு நல்லமிர்தே
மறவே னினையென்னை வாளானினிச்சிலர் வாட்டினுமே. சுஎ

வாடேன் மகிழேன் மனமுத லாம்புலன் றன்வழியே
யோடே னெருகா லுளந்தள ரேனினை யன்றி யொன்று
தேடேன் சிறந்தநின் சீரடி யார்திருப் பாதமல்லாற்
கூடே னினிக்குர வாவெனக் கேதுங் குறையில்லையே. (சுச

இல்லையுண் டென்னு மிரண்டுமெல் லாதவ னின்றென்பொ
லாச், சொல்லையுங் கொண்ட சுகசொரு பானந்தன் றா
மறைக, ளெல்லைகண் டோதற் கரிதா மிறைபுக ழேத்
நெஞ்சே, வல்லைகண் டாயிங் கிதற்கென்ன மாதவம் வாய்
ததுவே. (எ(

வாயார நின்று மலரடி வாழ்த்துவன் வண்ணமிலா
மாயா குணமொன்று மில்லா யெனவைவன் மன்னுமன்பி
ருயாகி வந்தென் றலைமிசைத் தாணல்கி முன்னைமறை
யாயா வறிவளித் திங்கென்னை யாட்கொண்ட வத்தனையே. (எ

அத்தனை யாதியை யேதுவின் றிப்புகுந் தாண்டுகொண்ட
பித்தனைப் பத்தர் பிணிமருந் தைப்பிற விப்பகையை
நித்தனை யெத்தனை யும்மரி யானை நினைநெஞ்சமே
கத்தனைத் தும்மொழித் திட்டினு மேயுள்ள காலங்களே. எஉ

காலமென் கோகடல் ஞாலமென் கோக்ருத் தின்னதென் கோ
வாலமுண் டான்மற்றை யாயனென் கோவறிந் தாரறிந்தி
கோலமென் கோவருட் கொண்டலென் கோகுறை யாநிறை
வீர்ஞ், சீலமென் சோநம்மு னேவந்த தேசிகச் சித்த
னையே. (எ௩)

சிந்தா குலங்களைச் சேதித்து மாறாத செல்வந்தந்
தெந்தா யினிநின்னை யாதெனன் னிரப்ப னெழுந்தருளி
வந்தாய் பரிந்தொரு வார்த்தைசொன் னாயுன் மலரடியா
மந்தா மரையளித் தாயளித் தாயென் னயர்வழித்தே. (எ௪)

அழிந்தன வையைந்து மற்றன வாசைக ளல்லவுடன்
கழிந்தன காரண காரிய முற்றுங் கருத்துடனே
யொழிந்தன மாயை யுலகத் தியற்கைக ளுத்தமனார்
மொழிந்தனர் முத்தி யிதற்கென்ன காரண முன்னு
ளதே. (எ௫)

முன்னே தொடங்கி வருகின்ற மாயப் பிறவிமுற்றுங்
கொன்னே கழித்து விடுகின்ற கண்டு மகக்குறித்த
வன்னே யெனவந் தடியிணை தந்தெனை யாண்டுகொண்ட
மன்னே யினியுந்தன் வார்த்தைய லாலில்லை மாற்றங்களே.

மாற்றங் களுமன னும்வினை யாவையு மற்றந்தவர்
காற்றங்கி நீர்நில முற்று மவற்றுட் கலந்துநின்ற

நாற்றஞ் சுவையொளி யூறோ சையு நண்ணு மிவ்வுலகிற்
றோற்றங் களுஞ்சொரு பானந்த நாதச் சுடர்வடிவே. (௭௭)

வடிவேது மின்றிய மாயவ னேதொல்லை மாமறையின்
முடிவே! முடியா முழுப்பொரு ளேமுத்தையொத்தநகைக்
கொடியேரிடையவ டங்குபங் கா!வெங்கள் கொற்றவனே
யடியே னினைப்பா வும்படி யேதென் றறிகிலனே. (௭௮)

இலனென் றினிச்சென் றிரக்கின் றிலனிங் கியாவரையுங்
குலனென்று கோத்திர சாத்திரக் கத்துகள் கூறகிலே
னலன்வந்து மற்றை யறுசம யச்சிலு காயகிலேன்
றலன்வந்த தத்துவ ஞரெம்மை யேயின்று சார்ந்தனரே. ()

சாரம னின்றவொளிநின்ற வாநிற்கத் தாரணியின்
வாராது வந்தவர் போல்வந்த தெங்ஙன் மனனுங்கண்ணு
நீரா வுருகு நினைதொறு மிங்கிது நின்மலனே
யாராத வின்னமிர் தேயறி யேனின் னருள்வகையே. (௮௰)

வகையான பல்பிற விக்கடன் மாய்த்து வருமவற்றைத்
தகையா வெனைத்தனி தாங்குதற் கேயருட் சட்டைசாத்தி
மிகையா வருகலி வென்றிடு வேதிய ராகுதியின்
புகையான் மகிழ்தர ணிக்கெம் பிரானின்று போந்ததுவே.

போதான் கொண்டுமன் பொன்னடி நண்ணு புலன்கடந்த
நாதா! வெனநின்னை நாத்தழும் பப்புக ழ்ன்னுமன்பர்க்

காதார மேயென் றரற்று நெஞ் சேயது காணமக்குப்
பேதாதி பேதப் பிணிதீர் மருந்து பெருகவுமே. (அஉ)

பெருகா சிறுகா பிறழா பிரியா பெயர்ந்தயரா
வொருகா லொழிபா வழியாத வுண்மை யுகந்துகொண்டு
பருகா வருகா பழியா விழியா பனிசொரியா
வுருகா மகிழ்பவர் காற்பொடி யேதுயர்க் குண்மருந்தே. ()

உண்மைய னேயென துள்ளம் வளைத்துன தாக்கவல்ல
தின்மைய னேசெய்யுஞ் செய்கையெல் லாஞ்சிவ மாக்குவி
த்த, வொன்மைய னேயொன் றறியா வெனக்குவந் துன்
னைத்தந்த, வண்மைய னேநின்னை வாழ்த்தா தவர்நிற்பர்
மாயத்திலே. (அச)

மாயாக் கருணைப் பெருவெள்ள மேமதி யாதவர்க்குச்
சேயா யமுதச் செழுஞ்சுட ரேநின்றன் செய்கையெலாம்
வாயார வோத வறியாது வானமுமண்மிசையோன்
றுயாத யானடு வேபெங்ஙன் வாழ்த்த வமைந்தனையே. ()

அமையு மினிமுன்னை யாசையெல் லாமிவ் வவனிவந்தே
யெமையும் பணிகொண் டுளனே புகுந்தவ ரிங்ஙனெம்
மைச், சமையும் விழிகொண்டு தம்மேனி செய்த தலைவர்
தந்தா, ளிமையுங் கொளலின்றிக் கண்டே யிருக்கை யினியு
ளதே. (அசு)

தேவாதி தேவர் திகைப்பவென் சிந்தைவந் தென்சிறிய
பாவான் மகிழும் பரம்பர னேபத்தர் கூட்டத்தொடே
யோவாது வைத்த லொழித்தல் குரம்பையை யொன்றருள்
வா, யாவா வெனவளித் தற்கன்பர் பால்வரு மாதியனே. ()

ஆதிய னேநின் னளவிது வென்ன வறிவரிதா
நீதிய னேநில நீரெரி காநெடு வானமதாஞ்
சோதிய னேசொரு பானந்த நாத சுருதியெல்லா
மோதிய நேர்மை கடந்தவுன் பாதமென் னுள்ளத்ததே. ()

உள்ளங் கரைவித் தொழியா வுணர்வா முலப்பிலின்ப
வெள்ளந் தனைத்தந்த வேதிய னேநின்றன் மெய்யடியார்
தெள்ளென்ற சிந்தையின் வீற்றிருக் குந்திருப் பாதந்தந்து
கள்ளம் புகுநெஞ்ச னமடி யேனையுங் காத்தருளே. (அக)

காக்கிலெ னென்னைக் கடைக்கணி யாவினிக் கைவிடினெ
ரூக்கற நின்ற வெறுந்தனி யேநின் சரணிரண்டு
நீக்கவொ ணாதுகண் டாய்நிம லாவென்ற னெஞ்சினின்று
ம், போக்கிலாய்வர வின்றிநின் ரூய்பரி பூரணனே. (கூ0)

பூரண னேயுல கெல்லாம் படைத்துப் புரந்தழிக்குங்
காரண னேகம லாசனன் வானவர் கண்ணுதலோ
ரூரண னேத முறநடு வேயென்னை நாடிவரு
மாரண னேநின்னை யானக லாவன் பளித்தருளே. (கூக

அருளே யருளே வடிவுகொண் டிந்த வவனியிலே
மருளேவ்டிவாகு மென்னைவந் தாண்டதென் வஞ்சநெஞ்ச
விருளே வெளியா வெறிக்கச்செய் தாயெப் பொருள்களு
மாம், பொருளே பொருளே புழுவார் குரம்பையைப்
போக்குதலே. (கூ௨)

போக்குதல் பொல்லா வுடம்பையல் லாதைம் புலநெறியை
நீக்குத னெஞ்சி னினைத்தவெ லாநீ நினைத்ததுவே
யாக்குதன் மெய்ச்சொரு பானந்த நாத வருள்விழியா
னோக்குதல்செய்கைகண் டாயடியேன் றன்னை நோக்குதலே.

நோக்குகண் டாயென் று நுண்டுளி சோரக்க ணின்றுசொல்
லும், வாக்குகண் டான்மறுப் பான்வல்லனோவென் பிறப்பை
நேரே, போக்குகண் டார்பொருந் தார்மர ணம்பிறப் பிற்பு
குது, மேக்குகண் டான்பரிந் திங்கெனை யாள விசைந்தவ
னே. (கூ௪)

இசையா னலனென்னை யாளுடை யானிந் தியங்களுட
னசையாத நெஞ்சுகொண் டன்பா னினைந்தழி யும்முடம்பி
னசையான தின்றி நலஞ்செய்வ ராயினற் றுடலையின்
மிசையார வைத்தென்று மெய்யான தன்னை வெளிப்படவே

வெளிபடு மாறு சமயப் பொருள்களு மெய்யுணர்வா
மொளிபடு மாறு பிறப்பிறப் பானது முள்ளந்தெள்ளித்

தெளிபடு மாறுஞ் சிவப்பிர காசன்றிருக்கண்வைக்கிற்
களிபடு மாறுங் கவர்வு மிலாத களிவருமே. (௯௬)

களிவர வைப்பன கண்ணு வனமண் புனலெரிகால்
வெளிவர வைப்பன மீண்டுமொன் றுவன மெய்யுருகித்
துளிவருங் கண்ணுடைத் தொண்டரைத் துன்பப் பிறவி
பென்னு, மிளிவர வைத்தவிர்ப் பான்மணியின் வந்த
விணையடியே. (௯௭)

அடியே னெனவென்னை யாண்டவ னேயம்பு காலெரிவான்
படியே யெனப்பல பேதங்க ளாவுன்னைப் பாவிக்கின்றே
னடியே யினியிந்த நாயெனை தற்றென்று நீயிருக்கும்
படியே யிருக்கும் படியரு ளாயெம் பரஞ்சுடரே. (௯௮)

பரஞ்சுட ரேசொரு பானந்த நாதவிப் பார்முதலா
மொரைஞ்சுடனேநின் றுழலாத வண்ணமென் னுள்ளுரு
கிக், கரைஞ்சுட னேருறக் கண்ணொளி யேயுறத் தண்ணிய
வென், சிரஞ்சுட ரேதரு சேவடி சேருன் றிருக்கண்வைத்
தே. (௯௯)

வைத்தாய் மலரடி வாங்கிக்கொண் டாயெனை யுன்னைத்தந்த
பித்தா பிறவிப் பிணிமருந் தேபெத்த முத்தியிலாச்
சித்தா சிவப்பிர காசவென் சிந்தையு ளேசெறிந்துஞ்
சுத்தா தொழுவதல் லாலறி யேனென்று சொல்லுவதே (௱

கலித்துறையந்தாதி-முற்றிற்று.

ஐந்தாவது.

# சின்னப்பூ வெண்பா.

## தத்துவசரிதை.

### தசாங்கம்.

பேர்.

ஏழு பிறப்பு மகல வெனைவந்து
சூழுஞ் சொருபானந் தச்சுடரே—வாழ்வெலா
மித்தை யெனக்களிப்பார் மென்கமலச் சேவடிக்கே
பித்தை யெனக்களிப்பார் பேர். (௧)

அல்லும் பகலு மறியா வகையொன்று
சொல்லுஞ் சொருபானந் தச்சுடரே—புல்லிமையால்
வெற்றியறி தற்கரியா ராங்கவரான் மெய்யாந்தம்
பெற்றியறி தற்கரியார் பேர். (௨)

மன்னு மிதமகங்கண் மாற வடிவெங்குந்
துன்னுஞ் சொருபானந் தச்சுடரே—யென்னையொரு
வாசா திருத்தினன் வாக்கு மனங்காயம்
பேசா திருத்தினன் பேர். (௩)

ஓதி யுணர்பவர்கட் கொன்றுந் தெரியாத
சோதி சொருபானந் தச்சுடரே—வாதிகடந்
தத்தமுத்தி மாற்றவல்லார் தப்புவார் சார்ந்தவரைப்
பெத்தமுத்தி மாற்றவல்லார் பேர் (௪)

ஏத்தன்மை யுந்தானா வித்தன்மை யென்னவொணாச்
சுத்தன் சொருபானந் தச்சுடரே—யெத்தியெனை
பேத மறமொழிவா னின்பமளித் தொன்றேடும்
பேத மறமொழிவான் பேர். (௫)

வையம் புனறீ வளிவா னெனநிகழ்ந்துந்
துய்ய சொருபானந் தச்சுடரே—ஐயமறச்
சீராநந் தத்தன் றிசைமுகனீ சன்றேரும்
பேராநந் தத்தன் பெயர். (௬)

தீபவினை யேன் மனத்தே செறிந்திருந்தும்
தூய சொருபானந் தச்சுடரே-நாயேனை
வாதைப் பெருமான் மருவாமன் மானுடங்கொள்
பேதைப் பெருமான் பெயர். (௭)

இன்னதெனா தேதன்னை யன்றி யிலதாகச்
சொன்ன சொருபானந் தச்சுடரே—தன்னடியின்
மெத்தன் பிறப்பிலிதன் வேறு வெனையாண்ட
பித்தன் பிறப்பிலிதன் பேர். (௮)

ஊன்று மடியவர்தம் முள்ளத்தே யுள்ளபடி
தோன்றுஞ் சொருபானந்தச் சுடரே—யான்றமைந்த
விண்ணா னவியலார் வேதாகமத்தாயும்
பெண்ணா ணலியலார் பேர். (௯)

ஒன்றும் பலவு முருவு மருவுமாய்த்
துன்றுஞ் சொருபானந் தச்சுடரே—யென்றும்
பிறவா னிறவான்றன் பேரருளா னன்றிப்
பிறவா னிறவான் பெயர். (௧)

நாடு.

துதிபாடுந் தொண்டர் குதிபாயுங் கண்ணீர்
நதிபாயு மானந்த நாடே—கதியாவி
நாடும் பரம்பரத்தார் நாகத்தார் நாண்மலரார்
நாடும் பரம்பரத்தார் நாடு. (௧௧)

துளிபாய்கண் டொண்டர் தொலையா நறவுண்
டளிபாடு மானந்த நாடே—யொளிவேதந்
தானாகத் திற்கரியா ரென்பார் சமயத்தார்
தானாகத் திற்கரியார் நாடு. (௧௨)

பெரிதாயும் பேரன்பர்க் கன்றிப் பிறர்சேர
வரிதாகு மானந்த நாடே—விரிவேத
ஞான மயமான னன்னுமெ னென்னெஞ்சின்
ஞான மயமானா னாடு. (௧௩)

எதுவெதுவா கக்கொண்டார் யாரேனுங் கொண்ட
வதுவதுவ மானந்த நாடே—கதியதுவன்
றாமே யெனவல்லார் போலயரா மேயடைய
நாமே யெனவல்லார் நாடு. (௧௪)

அறிவு வடிவா யயர்ந்து மயரா
நறவுதரு மானந்த நாடே—மறவிபினு
நோனா தவஞ்செய்தார் நோக்கமிலே னேக்குறவே
ஞானா தவஞ்செய்தார் நாடு. (௰௫)

கனவு நனவுறக்கங் காணுந் துரிய
நனவின்வரு மானந்த நாடே—தனதுகழல்
சூடுநற் கண்டந்தான் றோன்றுமே தான்றோன்ற
நாடுநற் கண்டந்தா னாடு. (௰௬)

உடலா யுயிரா யுணர்வா யொருதா
னடனாடு மானந்த நாடே—யுடனாயு
மூன்பாடு மாசெய்தா ரோரா வெனையாண்டு
நான்பாடு மாசெய்தார் நாடு. (௰௭)

புலனாலும் வேறோர் பொருளின்மை கண்டு
நலனாரு மானந்த நாடே—சொலவாலே
யென்னாக வேதந்தா னேத்த வெனத்திகைப்ப
ஞன்னாக வேதந்தா னாடு. (௰௮)

பிறிவா னவையும் பெருங்கண் ணுடையார்க்
கறிவாகு மானந்த நாடே—செறிவார்க்குக்
கேடிலது தாமொழிவார் கேடிலா தீதென்று
நாடிலது தாமொழிவார் நாடு. (௰௯)

# சின்னப்பூ வெண்பா.

நயனுற்ற ஞான நறவுண்டு நல்லோ
ரயர்வுற்ற வானந்த நாடே—புயர்வுற்ற
வானநாட் டந்தந்தான் மண்மேலென் னுண்மேவ
ஞானநாட் டந்தந்தா னூடு. (உ௰)

## ஊர்.

அடியா ரடியா ரடியேவல் செய்ய
மடியாத நல்ல மனனே—மிடியரைப்போய்ச்
சங்கந் தருவா னெனுமே தனைப்பெறவோ
ரங்கந் தருவா னகம். (உக)

தன்மை யறிவரிய தம்பிரான் முன்செய்த
நன்மை மறவாத நன்மனனே-யென்மனனு
மாகந் துடைப்பான் வடிவுகொடு வந்தென்ற
னாகந் துடைப்பா னகம். (உஉ)

அல்லாக் கலரை யருவருத்திங் கன்பர்க்கு
நல்லார்க்கு நல்லதா நன்மனனே—யெல்லாக்கு
நெஞ்சிற் கரியார் கரியார் நிறஞ்செறிந்த
வஞ்சிற் கரியா ரகம். (உங)

பிறியா வொழியா பெயரா வுபரா
மறவா நினையா மனனே-பொறிவாயின்
மாந்தா மதியார் மதிபுகுந்து மாறுவரத்
தாந்தா மதியார் தலம். (உச)

தெண்ணீர்மை தந்தாண்ட செம்பொற் றிருவடிக்கே
யுண்ணீர்மை வந்துருகு மொண்மனனே-கண்ணீர்வந்
தீரஞ்செய் யாதார்பா லில்லா னெழின்மதனம்
போரஞ்செய் யாதான்ற னூர். (உரு)

பூதமாய்ப் பேதமாய்ப் போதமா யானினைந்த
தேதுமாய் நிற்கு மெழின்மனனே-யேதமா
மாயை தனையனையான் மாட்டும் வகைமூட்டுந்
தீய தனையனையான் சேர்வு. (உசு)

விடம்போன் றுடம்போடு மேவா வுடம்பைக்
கடம்போலக் காணு மனனே-மடஞ்சேரு
மானம் பலகண்டான் மாதர்க் கெனுமேதர்க்
கூனம் பலகண்டா னூர். (உஎ)

நெக்கருவி கண்சோர நின்மலனார் கோலங்கண்
டெக்கருவி யும்போ மெழின்மனனே-நக்கனயன்
கைச்சங் கெடுத்தான் கருதரியான் கைதொழுவா
ரச்சங் கெடுத்தா னகம். (உஅ)

உழறி விடயத்தே யோடாதே மீளக்
கழறுகின்ற கற்றோர் மனனே-குழறியபுன்
வாக்கினை னம்மான் மனத்தா னினைந்தேத்த
வாக்கினை னம்மா னகம். (உகூ)

வினைக்கு மறிவிற்கும் வேறின்மை கண்டு
நினைப்பயர்வு நீத்த மனனே—தனக்கொன்று
முன்னாக வில்லான் முடிவா கவுமில்லா
னென்னாக வில்லா னிடம். (௯௰)

யாறு.

கழற்பதுமந் தந்த கருணைநினைந் தோவர்
தழற்பெருகி யின்பமா மன்பே-யெழிற்சுருதி
யோது மருவினா னென்றிற் றுவக்கின்றி
யேது மருவினான் யாறு. (௯௧)

எதுவெதுவா கக்கொண்டா ரெங்கோ னியல்போ
லதுவதுவா கப்பயக்கு மன்பே—முதுமறைக
ளோது மொழியாதா.னுள்ளொளியா னன்றிவே
றேது மொழியாதான் யாறு. (௯௨)

காமையா ளுடையா னெனுந்தோறு முள்ளி
மமையா துருகிவரு மன்பே—நமையாண்டு
நாமா தரஞ்செய்தார் தம்மடியே மென்றிருக்க
யாமா தரஞ்செய்தார் யாறு. (௯௩)

பாவு தொழிலுடையார் பாவகத்தி னுண்மை
யருவிசொரி கண்காட்டு மன்பே-மருவுமவர்க்
கொன்று மிருத்துவா ராமே யொழித்தவரை
யென்று மிருத்துவார் யாறு. (௯௪)

பாசந் தெறவந்த பங்கயத்தாள் பாராட்டிப்
பேசுந் தொறும்பெருகும் பேரன்பே—யாசையெலா
மாற விருத்தினான் வந்தவா காணவெனை
யாற விருத்தினான் யாறு. (௰௫)

சகலமு மாய்நின்ற தம்பிரான் றாள்போன்
றகல மளப்பரிய வன்பே—யகில
வுலகு முருவினா னோரானை யாள
விலகு முருவினான் யாறு. (௰சா)

தொழுகையுந் தூய்மலருந் தோத்திரமுந் தொண்டு
மழுகையுங் கூடிவரு மன்பே—பழகிவரும்
புல்லாந் தரவல்லார் போக்கினார் பொன்னடிதந்
தெல்லாந் தரவல்லார் யாறு. (௰எ)

பொறியிற் சுவையுணரும் புல்லறி வாள
ரறியப் படாதபே ரன்பே—மறைமுடிவெப்
போதுமோ தத்தந்தா னானற் போதங்கொண்
டேதுமோ தத்தந்தான் யாறு. (௰அ)

ஏதங் களைந்திங் கெனையாண்ட வன்கழற்கே
பேதங் கெடப்பெருகும் பேரன்பே—தாதையுட
னன்னையு மாற்றினா னாதலமாக்கு
மென்னையு மாற்றினான் யாறு. (௰கூ)

துதிசெயலுந் தொண்டர் தொழில்செயலு ெஞ்சி
னதிசயமும் கூடியரு வன்பே—யெதுவுந்தா
ஞானந் தத்தான் முதலா னருமறைதேர்
ஞானனந் தத்தா னதி. (௪0)

மலை.

பொன்றாத தேவர்களும் பொன்றும் பொழுதினுந்தான்
குன்றாது நின்ற குணக்குன்றே—யென்றுந்தா
னீறிலாச் சித்தாந்த னேருருவங் கண்டவர்க்கு
வேறிலாச் சித்தாந்தன் வெற்பு. (௪௧)

ஒருவடிவ மில்லா வொளியே வெளியே
குருவடிவாய் வந்தகுணக் குன்றே—திருவடிதந்
தாலால மாற்றினா னரா வமுதளித்தான்
கோலால மாற்றினான் குன்று. (௪௨)

தேடி யரனுந் திருமாலு நான்முகனுங்
கூடி முடியாக் குணக்குன்றே—நாடியெனுட்
போராது வந்தார் பெருந்தன்மை யிற்பிறழ்ந்து
வாராது வந்தார் மலை. (௪௩)

பூமே லயன்மால் புராரியுடன் புத்தேளிர்
கோமேவு நேராக் குணக்குன்றே—நாமம்
படியா வணங்கொள்வான் பையாக்க மெய்யென்
குடியா வணங்கொள்வான் குன்று. (௪௪)

பவலயங்க ளின்றிப் பாவைதீக் காலவான்
குவலயங்கள் பூத்தகுணக் குன்றே-கவலையாம்
வாதாந்தத் திற்கெட்டார் மன்னரியர் மன்னுபுகழ்
வேதாந்தத் திற்கெட்டார் வெற்பு. (சரு)

செனியாமற் செய்த பதமலதென் சென்னி
குனியாமற் செய்தகுணக் குன்றே-துனியான
கோதாக மஞ்சொன்னர் கூடா வகைகூட
வேதாக மஞ்சொன்னர் வெற்பு. (சசு)

மண்டலம்வா ழும்பரிசு மாறு கருதாதே
கொண்டல் பொழியுங் குணக்குன்றே-யண்டரெலா
மாவாவென் ருண்டா ரணியமுற வன்பினெனை
வாவாவென் ருண்டார் மலை. (சஎ)

மூன்று முருவு முதலுருவு மெவ்வுருவுங்
கோன்றுனே யான குணக்குன்றே-தோன்றி
யிறக்குமா செய்தா ரெனையொழிய வெல்லா
மறக்குமா செய்தார் மலை. (சஅ)

ஆறுசமயத் தவரு மருமறையுங்
கூற வரிய குணக்குன்றே-தேற
லெனவர்ம லோதியா ரின்னுரையாங்கேட்க
வினவாம லோதியார் வெற்பு. (சகூ)

## சின்னப்பூ வெண்பா.

மலையாழி விண்டிக்கு மண்டலமாண் டாலுங்
குலையாது நின்ற குணக்குன்றே—தலையா
யடிவாய் வருவா ரடியா ரவர்பால்
வடிவாய் வருவார் மலை. (௫௰)

உன்னும் வகையறியா மாலுமனே னென்மனனுங்
கன்னெகிழ வந்த கருணையே—பின்னமா
மாறுத வாதந்தான் மாற்றி யறிவுருவை
மாறுத வாதந்தான் மா. (௫௧)

நீயஞ்ச லென்றென்முன் னிற்பார்போ னின்றடியேன்
காயஞ்சேர் வுற்ற கருணையே—மாயஞ்செய்
தந்தித் திடவுரியான் றன்னைத் தருமென்று
வந்தித் திடவுரியான் மா. (௫௨)

தாக்குமா றென்றின்றி நின்றேயுந் தானென்னைக்
காக்குமா வந்த கருணையே—நோக்குவார்
முன்னாக வந்திப்பார் காப்பார் முதன்மூவர்
மன்னாக வந்திப்பார் மா. (௫௩)

ஆதலா காடை யறிவிங் கடியேன்பாற்
காதலால் வந்த கருணையே—யோதி
லொருவா தரவுடையா னுள்ளொளியான் வேதர்
மருவா தரவுடையான் மா. (௫௪)

தம்மேற் பரங்கெட்டுச் சார்ந்தவர்க்குத் தம்பதத்தைக்
கைம்மேற் கொடுக்குங் கருணையே—யெம்மை
நலமூன்று மாறினர் நன்னெஞ் சிருப்பார்
மலமூன்று மாறினர் மா. (௫௫)

செய்தவமொன் றில்லேன் சிலவன்பு பாவிக்குங்
கைதவங் காணாக் கருணையே—மெய்தவிர்ந்து
மாறா வரும்பெருமான் மாறத்தா னென்மனத்தே
மாறா வரும்பெருமான் மா. (௫௬)

புண்ணா முடம்பாகிப் போகாமே யாகமெலாங்
கண்ணாக வந்த கருணையே—யெண்ணேது
மீறா மதிதந்தா னீறாக வெவ்விடத்து
மாறா மதிதந்தான் மா. (௫௭)

மாண்டகைய தேவசேனா மையலுற வையத்தே
காண்டகைய வந்த கருணையே—பாண்ட
பணவா சகங்கடந்தா னென்றுன்னப் பாட
மணவா சகங்கடந்தான் மா. (௫௮)

எண்காதல் செய்ப விமையோரும் வேதமுமென்
கண்காண வந்த கருணையே—புண்காயஞ்
சேரா வழிபயந்தான் றீரச் செறிந்தவர்க்கு
வாரா வழிபயந்தான் மா. (௫௯)

பண்டா ரிமையோர் பட்டரெய்தப் பாரினெனைக்
கண்டாள வந்த கருணையே-கொண்டாடி
நாவார வாரத்தா னல்லடியார் போற்றிசைக்கு
மாவார வாரத்தான் மா. (௬0)

கொடி.

கன்மதிமுன் னீரான தன்மைபோற் கல்லாவென்
றன்மனனு நீராந் தருமமே-துன்மதியான்
மாறும் பெருமான் மருவா வகையொன்று
கூறும் பெருமான் கொடி. (௬௧)

என்பரமோ வன்றி யினிப்பிறவா மேகாக்கத்
தன்பரமாக் கொள்ளுந் தருமமே-வன்பிறவி
மாற வினியான் மறவா வரந்தருவான்
கூற வினியான் கொடி. (௬௨)

என்னை யளியென் றிரந்தார்கட் கந்நிலையே
தன்னை யளிக்குந் தருமமே-மின்னைநிகர்
சால முடையா ருடம்பொழிக்கச் சாத்தியதோர்
கோல முடையார் கொடி. (௬௩)

ஊனாக மானுரை யோர்மொழியா லேயுணர்வு
தானாகப் பார்க்குந் தருமமே-வானின்
னேற வரியா னினிப்பிறவா மேகாப்பான்
கூற வரியான் கொடி. (௬௪)

ஊனினா னென்றுள்ளு முள்ள முடையார்க்குத்
தானினா னாகுந் தருமமே—மேனி
யலைகாற் றெரிவா னவனிதோன் றுமற்
குலைகாற் றெரிவான் கொடி. (௬௫)

கட்டறுத்தென் சிந்தைக் கருவறுத்தென் னெஞ்சறியத்
தட்டறுத்து விட்ட தருமமே-கட்ட
முளவா தரித்தா னுவந்தடிமை யென்னைக்
கொளவா தரித்தான் கொடி. (௬௬)

வன்மை யுடைய மனக்கணக்காற் றன்னுடைய
தன்மை தெரியாத் தருமமே—முன்மேவு
சுற்ற மறுப்பான் றுடைப்பான் றொலையாவென்
குற்ற மறுப்பான் கொடி. (௬௭)

சாலத் தனக்கன்பு செய்வார்க்குத் தன்னையே
சாலக் கொடுக்குந் தருமமே—ஞாலத்தோ
டொன்றுவா னந்த னகத்தடக்கு முள்ளத்துக்
குன்றுவா னந்தன் கொடி. (௬௮)

ஆராத வன்புடையார்க் கன்றி யனுபவத்திற்
சாரா திழுக்குந் தருமமே—யோராமற்
றிண்டாட வந்தான் சிதைத்தவா தேயமெலாங்
கொண்டாட வந்தான் கொடி. (௬௯)

அப்பார்கண் மாறா தழுவார்கட் கானந்தந்
தப்பா தளிக்குந் தருமமே-தப்பான
வாதாட வைப்பான் மருவாம லன்பருடன்
கோதாட வைப்பான் கொடி. (எ௰)

முரசு.

பஞ்சேந் திரியப் பயனுண்பா ருண்பவெலா
நஞ்சே யெனவறையு நான்மறையே-தஞ்சே
வடியா வருளா ரவர்பா லருளார்
முடியா வருளார் முரசு. (எக)

பயமா னதுதீரப் பார்த்தெலா ஞான
மயமா வறையு மறையே-நயவாத
வென்று னடுவா னிறுதியா னெப்பொருட்கு
முன்று னடுவான் முரசு. (எ௨)

காலந் திசைகடந்த காரணத்தை வேறுசெய்தன்
மாலென் றறைகின்ற மாமறையே-நூலொன்று
மோதாதை யானு ளொழித்தா னுலகிற்கு
மூதாதை யானுன் முரசு. (எ௩)

தத்துவா முத்தி யருளென்று சாருவதே
யத்துவா வென்னு மருமறையே-கத்துவார்
கண்டகத்தார்க் கெட்டார் கருதா வரனயன்மான்
முண்டகத்தார்க் கெட்டார் முரசு. (எச)

வீடு தெளிவார்கட் கன்றி விளம்புபொரு
ளூட வரிதாகு நான்மறையே-யோடுபுலன்
காவா திருப்பார் கருத்தாள ரைத்திருப்பார்
மூவா திருப்பார் முரசு. (௭௫)

ஆன்பதனுற் கேட்டா ரறியா வரும்பொருளை
யொன்பதுகாற் சாற்று மொளிமறையே-வன்புலன்கள்
காப்பா னிளையான் கருத்தா னுலகிற்கு
மூப்பா னிளையான் முரசு. (௭௬)

கதியொன் றுணரார்க்குக் கன்மனமே யாகு
மதியென்ற நல்ல மறையே-துதியன்றி
மற்று மொழியார்தம் மாட்ட லதுமொழியார்
முற்று மொழியார் முரசு. (௭௭)

எஞ்சா திறைவ னுருவேயி தெல்லாமென்
றஞ்சா தறையு மருமறையே-நஞ்சாய
போக மறுத்தாரென் புந்தியா ரென்சிந்தை
மோக மறுத்தார் முரசு. (௭௮)

கோலா கலமாங் குதர்க்க நெறிகளெலா
மாலாகு மென்றறையு மாமறையே-மேலாகச்
சொன்னமே தந்தானுந் தொல்பிறப்பென் றுன்னுமதி
முன்னமே தந்தான் முரசு. (௭௯)

நல்லவர்க்கு ஞானமே சாற்றி நலனல்லா
தல்லவர்க்குச் சாற்று மருமறையே-பல்லுயிர்க்குத்
தான்றுருவ ஞானன் சதுர்முகத்தான் மாலென்னு
மூன்றுருவ மானன் முரசு. (அ0)

படை.

திட்டாந்தத் தெட்டாதே தேசிகன்றாள் சென்னிமே
னட்டாற் றெரிவதா ஞானமே-முட்டான
வத்தர்க் கினியா னனுகா வகையருள்வான்
பத்தர்க் கினியான் படை. (அக)

வாசஞ் சுவையொளியூ றோசையெனும் வன்பேத
நாசஞ் செயவல்ல ஞானமே-நேச
ரணியாக வில்லா னனைத்துலகுஞ் செய்து
பணியாக வில்லான் படை. (அஉ)

காலந் திசைதேசங் கற்பித் திடுகாண
நாலுங் கடந்தொளிரு ஞானமே-மாலான
சுற்றங் கறுத்தான் றொடர்ந்தடிமை கொண்டெனது
பற்றங் கறுத்தான் படை. (அங)

வேதங்க ளேமுதலா வெவ்வே றுரைக்கின்ற
நாதங் களையொடுக்கு ஞானமே-மாதங்கந்
தீர்க்க வுரியான் றிருமா லயன்றேடிப்
பார்க்க வுரியான் படை. (அச)

ஆரணமும் பண்டை யரனு மலரோனு
நாரணனும் போற்றிசெயு ஞானமே—கோரணியாம்
வாதங்க டந்தான் மனவா சகங்கடந்தான்
பாதங்க டந்தான் படை. (அரு)

அந்த முதலற் றகம்புறமற் றெவ்விடத்து
நந்து மொளியுடைய ஞானமே—யிந்தவுடம்
போடுமோ செய்தா ருளத்தா ருணர்விலேன்
பாடுமோ செய்தார் படை. (அசு)

ஒக்க வுருகியுட னென்று தவர்தம்மை
நக்க வருகுபடு ஞானமே-யக்கோ
டரவாமை பூண்டா னயனெடுமா லுள்ளும்
பரவாமை பூண்டான் படை. (அஎ)

உண்ணெக் குருகாதே யோர்தி யுணர்பவர்க்கு
நண்ணற் கரிதாகு ஞானமே—யெண்ணுற்ற
கோசங் களைந்தார் குரம்பைக் குலங்களைந்தார்
பாசங் களைந்தார் படை. (அஅ)

ஒட்டந் தவிர வொருக்கி யொழியாத
நாட்டந் தரவல்ல ஞானமே-தாட்டந்த

பின்னும் பரமன் றெளத்தனது பேரருளாற்
பன்னும் பரமன் படை. (அகூ)

ஊனோநா னின்றிங் குழலா வகையுணர்வா
ஞானோநா னாக்கியமெய்ஞ் ஞானமே—மாநேயர்
தேடு மருவார் தெளியுந் திறனில்லார்
பாடு மருவார் படை. (கூ௦)

தார்.

நாயான வென்னை நயந்தாண்ட வாசொல்லி
வாயார வேத்தும்பா மாலையே—காய
நிலைமை யெனக்களித்தார் நெஞ்சகல்வார் தாமாந்
தலைமை யெனக்களித்தார் தார். (கூக)

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றுக் களித்தன்பாம்
வண்டு முரலும்பா மாலையே-தொண்டர்க்கா
ளாத லறவையா னாக்கினா னண்டரையுஞ்
சாத லறவையான் றார். (கூஉ)

அந்தவா னோர்க ளயர வடியேன்பால்
வந்தவா சொல்லுஞ்சொன் மாலையே—பந்தமா
முனைக் காட்டினா னுட்காமே யுள்ளவெலாந்
தானைக் காட்டினான் றார். (கூ௩)

நாட்டம் வருநீரார் நாளும் புதிதாக
வாட்டமறச் சாத்தும்பா மாலையே-வீட்டுநெறி
சேர வுறவானோர் திண்டாடத் தீவினையேன்
சாரவுற வானோர்தந் தார். (௯௪)

அல்லவா மென்மனத்தை யாட்கொள்ள வல்லவா
வல்லவா சொல்லுஞ்சொன் மாலையே-நல்லடியார்
வர்க்கத்துக் குத்தரியான் வந்தாள்வான் வாதியர்க
டர்க்கத்துக் குத்தரியான் றார். (௯௫)

பாதமா லுற்றுருகும் பண்பினராய்ப் பல்சமய
வாதமா லற்றார்சொன் மாலையே-போதன்மா
லோதா ரணமானா னுன்னானென் னுள்வரவுஞ்
சாதா ரணமானான் றார். (௯௬)

ஈச னெனதுட் புகுந்தருளி யென்னாவால்
வாசகஞ் செய்யும்பா மாலையே-யோசையால்
வந்ததிருக் கைமலரான் மாமுனிவு நாமமறத்
தந்ததிருக் கைமலரான் றார். (௯௭)

சித்தத்தார் தேறல் பருகித் தெளிவுற்ற
மத்தத்தார் போற்றுஞ்சொன் மாலையே-பெத்தத்திற்
றுக்கியமா னானொளிவான் றந்தான்று னேசான்று
சாக்கியமா னானொளிவான் றார். (௯௮)

பன்னுந்தேர் றுங்கேட்குந் தேர்றும் பதைத்தெனது
வன்னெஞ் சுருக்கும்பா மாலையே—முன்னைமறை
வானு டரியார் மலரான் மகேசன்மா
ருனு டரியார்தன் றூர். (சுசு)

ஆறு வொழுகிவரு மானந்தக் கண்ணீரான்
மாறு மணந்தரும்பா மாலையே—பாறுமுட
லத்துருவ மாயினு னன்றென் பவரறியுஞ்
சத்துருவ மாயினன் றூர். (எ)

சின்னப்பூ-முற்றிற்று.

ஆறாவது

# தசாங்கம்-வெண்பா,

## தத்துவபோதம்.

### பேர்.

சாம மணிநிறத்துத் தத்தாய்! தனைத்தருவா
ணம மறிய நயந்துரையாய்-நாமஞ்
சொருபா அனந்தனென்று தூமறைகள் சொல்லும்
பெருமானுக் கிட்டதெல்லாம் பேர். (க)

### ஊர்.

பண்ணார் மொழிக்கிள்ளாய்! பார்மிசைமேல் வந்தாண்ட
வுண்ணா ரமுதுவந்தா னூருரையாய்-கண்ணாறு
வெள்ளம் பரக்க வெறுமின்ப மேவிளையு
முள்ளம் பரம்பரனுக் கூர். (உ)

### நாடு.

வண்ணப் பசுங்கிளியே! வாழ்வித்த நாயனார்
நண்ணப் படுகின்ற நாடுரையா-யெண்ணுற்ற
வானந்த மாக வருநாடா மேனாடு
மானந்த நாடென் றறி. (ந)

### யாறு.

செஞ்சொற் பசுங்கிளியே! செம்மேனி கொண்டெம்மை
யஞ்சற்க வென்றாண்டா னாறுரையாய்-வஞ்சக்

கருக்கெடுக்கு ஞானக் கனம்பொழியக் கண்ணீர்
பெருக்கெடுக்கும் பேரன்பு பேசு. (௪)

மலை.

மலையேது சொல்லாய் மரகதமே! வந்தென்
றலையேறு தாளுடையான் சாரச்—சிலையக்
கணமே கனியாகக் கண்ணளிக்க வல்ல
குணமே யெனையுடையான் குன்று. (௫)

வாகனம்.

பாகனைய செஞ்சொற் பசுங்கிளியே! பாரில்வரும்
வாகனமே தாண்ட மறையவனுக்-காகம்
வருங்கருவை மாற்ற மனுடரைப்போல் வந்த
பெருங்கருணை யென்றுநீ பேசு. (௬)

கொடி.

பண்டோற்கு மின்சொற் பசுங்கிளியே! தொண்டென்னைக்
கொண்டாற் குரிய கொடிகூறுய்-மண்டிக்
கெடுக்கு மனங்கெடுத்துக் கேடிலா வின்பங்
கொடுக்குந் தருமக் கொடி. (௭)

முரசு.

இன்பா லளிப்பே னிளங்கிளியே! யெங்கோமான்
முன்பாய் முழங்கு முரசுரையா-யன்பா

லறையு மறையே யவனியுளோர் துன்பம்
பறைய வறையும் பறை. (௮)

படை.

நறவு கனியொடுபர் னல்கக் கிளியே!
யிறைவர் படையே தியம்பாய்-பிறவித்
தொகைதுணிக்குந் தெய்வச் சுடர்ஞான வாளே
பகைதுணிக்க வேந்தும் படை. (௯)

தார்.

செங்கனிவாய்ப் பைங்கிளியே! தேசிகன்ற னுதாஞ்செய்
கொங்கலர்தார் யானறியக் கூறிக்கா-ணிங்கெனுட
லாமா லையனுக் ககமாலை மாற்றினர்தம்
பாமாலை யென்றே பகர். (௰)

தசாங்கம்-முற்றிற்று.

ஏழாவது

# இரட்டைமணிமாலை.

## தத்துவதீபம்.

நேரிசைவெண்பா.

கருணை யிருந்தவா கார்ணீர் தங் கண்ணு
ரருணினைய வஞ்சுவதா மண்டர்—வெருளார்தே
யேத்துவதா நாயேனு மென்னே! திருமேனி
சாத்துவதாந் தம்பிரான் ருன். (க)

கட்டளைக்கலித்துறை.

தார்னெனக் குச்செய்த நன்றிக்கென் னுவிதந் தோனென
யானினைக்கிற்றன தாகும்பண் டேயஃதி யானெனவோ[வே
ளுனினைக் கற்பித் துயிர்வைத்து மீள வொளித்துக்கொண்ட
தேனினைக் குந்தொறுஞ் சொல்லுந்தொ றுநின்று தித்திக்கு
[மே. (உ)

நேரிசை வெண்பா.

திக்கால தேசங் கடந்த செழுஞ்சுடரே!
யிக்காலத் தேயிங் கெழுந்தருளித்—துக்கமெலா
நீக்கியவா கண்டாயே நெஞ்சமே நீயறியப்
பாக்கியம்யா மென்செய்தேம் பண்டு. (ங)

கட்டளைக்கலித்துறை.

பண்டைப் படியே நமக்களிக் கின்ற பரஞ்சுடரைக்
கண்டைக் கனியின் சுவையைக்கை விட்டுக் கவலைநெஞ்சே

தொண்டைக்கு மேலுறுஞ் சோற்றுச் சுவடுந் துடியிடை
யார், கெண்டைக் கிளர்விழியும் முன்னி யென்னைக் கெடுத்
[தனையே. (௪)

நேரிசை வெண்பா.

கெடுத்தெனைநீ வஞ்சத்தே கீழ்ப்படுத்தி ஞனு
மடுத்தனவே செய்தானு மன்பா—னெடுத்தென்னை
யாண்டான்வி டானெஞ்சே யாதலா லென்னளவில்
வேண்டாநீ செய்யும் வினை. (௫)

கட்டளைக்கலித்துறை.

வினையின் செயலும் விதியின் வலியும் விடற்கரிய
மனையும் புதல்வரு மண்ணு மயக்கமு மானுடங்கொண்
டெனையும் பொருட்படுத் தாண்டா னிருகழற் போதுநெஞ்
சா, னினையு மளவி னிவையொன்று மென்முன்பு நின்றில
[வே. (௬)

நேரிசை வெண்பா.

நின்றன போன்று நிலையாத வாழ்க்கையை
யொன்றென வுன்ன லொழிநெஞ்சே-யின்றென்னை
யாண்டா னடிக்குருகு மன்பலான் மற்றொன்றும்
வேண்டா மெனநீ விடு. (௭)

கட்டளைக்கலித்துறை.

விடுமாறென் விட்டபின் மேலுறு மாறென் னெனநினைந்து
தடுமாறி நிற்குஞ் சளர்வம்மி னே! சகத் தானதென்றுங்

கெடுமாறு கண்டு கெட்டவாறு வேண்டினங் கேள்வனுக்கா
ட், படுமா நினையப் படுமாகி னெஞ்சிற் பயங்கெடுமே. (அ)

நேரிசை வெண்பா.

பயங்கெடுமா வேண்டுதியேற் பந்தித்த நெஞ்சே
யியங்கிடுவாய் வாளா விருப்பாய்-நயங்கொட்டினை
தொண்டாகக் கொண்ட சொருபானந் தச்சுடரைக்
கொண்டாடு தன்மறவாக் கொள். (௯)

கட்டளைக்கலித்துறை.

மறவா வரம்பெற்ற மெய்யடி யார்கண் மறந்துமினிப்
பிறவார் வினையிற் பிணிக்கப்ப டார்பிறி தொன்றுகண்டு
துறவா ரருட்சொரு பானந்த நாதன் றுணையடியே
யுறவா யுடைய வவரென்னை யாள வுரியவரே. (௰

நேரிசைவெண்பா.

உரிய வடியா ருடன்கூடி டாதே
திரியவெனை யிங்ஙனே செய்தாற் -பெரிய
வருளுக் கழிவென்றே யஞ்சுகே னஞ்சா
மருளுக் கழிவென்னே மற்று. (௰௧)

கட்டளைக்கலித்துறை,

மற்றா ரினியென்னைக் காப்பவ ரென்று மனுட்டர்தொழுஞ்
சற்றான தேவரைச் சாருவனோ தன்னைத் தள்ளத்தள்ளப்

பெற்றுளே யன்றி யறியா தழும்பிள்ளை போலுனையே
பற்று விருப்பன் பவமா நரகிற் படுத்தினுமே. (௰௨)

நேரிசைவெண்பா.

படுத்துவமா கத்தனையும் பாவுந் தெரிந்து
தொடுத்தறியா' னைப்புகழ்ந்து சொன்னற்-சடத்துவமே
தந்தாரா கிற்றருவார் தத்துவனைப் போற்றன்னை
யிந்தாபா ரென்றீவார் யார். (௰௩)

கட்டளைக்கலித்துறை.

யாரே பெறுபவ ரென்னையல் லாலிப் பிறப்பிலினி
வாரே னெனவென்னை வாழ்விக்கு மாறு வடிவினொடும்
பேரேது மற்ற பிறப்பிலி பேரரு ளேவடிவாய்
நேரே புகுந்திந்த நெஞ்சே யறிய நிகழ்ந்திடவே. (௰௪)

நேரிசை வெண்பா.

நிகழ்கின்ற தெல்லாமு நின்மலனே யானு
மிகழ்கின்ற வேறுதா னேதோ-புகழ்வின்றி
நாடப்ப டாவெங்க ணாயகனார் சீர்பாதஞ்
சூடப்ப டாதார்தாஞ் சொல். (௰௫)

கட்டளைக்கலித்துறை.

சொல்லா யருட்சொரு பானந்த நாத துணையடிக்கு
நல்லார் பழுதற்ற நாவலர் நிற்ப நலனொன்றிலேன்
புல்லா வெழுத்திற் பொருளின் வறுமொழி யாற்புகழச்
கல்லர் மனனைக் கனிசெய்த காரணங் காதலித்தே. (௰௬)

நேரிசை வெண்பா.

கர்தலித்தவெல்லாந் தரவல்ல கற்பகத்தை
மூதலித்த நூலே மொழியாதே-யோதொலித்த
புத்தி யொருங்கவரும் பொன்னூர் திருவடியை
யெத்தி னடைகிற்பே மியாம். (௧௭)

கட்டளைக்கலித்துறை.

யாமா தரியார் விருக்கநெஞ் சேநம்மை யிம்மையிலே
சீமான் சிவப்பிர காசன் றிருவடி தீண்டப்பெறு
மாமாகர் நிற்ப வலிந்துவந் தாண்டதென் மாமறைநா
லாமா மவனுக் கருளே வடிவென் றறைந்ததுவே. (௧௮)

நேரிசைவெண்பா.

அறைகின்றே னெஞ்சே யறம்பொருள்வீட் டின்ப
முறையும் பதியொழுக்க மோத-னிறையொளிசேர்
தந்தைதாய் சுற்றங்கண் முற்றுந் தனைத்தந்த
வெந்தைதா னென்றே யிரு. (௧௯)

கட்டளைக்கலித்துறை.

இருத்தே சிகனடி யைப்பிரி யாதெம் பிரானிங்ஙனே
யுருத்தே வருந்திரு மேனியைக் காணுடை யான்புகழே
திருத்தேது மின்றித் துதியவை கேடொண்டர் தொண்
டதுசெய், கருத்தே கருது கழல்சூட வைத்த கருணை
யையே. (௨௰)

இரட்டைமணிமாலை முற்றிற்று.

எட்டாவது.

# மும்மணிக்கோவை.

தத்துவரூபம்.

அகவற்பா.

பூங்கழ னினைந்து புலம்பி யோங்கிய
மலரோன் மாலான் மகேசன் சிவனெனப்
புலவோர் புகழு மலகில் கீர்த்தி
யைந்தொழிற் கடவுளுஞ் சிந்தனைக் கரிதென
விந்திரன் முதல்வரு மிமையவர் முற்று
மந்தரத் துள்ளோ ரனைவரு மலமர
மந்திர முறையுந் தந்திர மனைத்துங்
கற்றவர் காமங் கடிந்தவர் கோபஞ்
செற்றவ ராசை தீர்ந்த நற்றவர்
யாவரு நிற்ப மேவருந் தன்மைப்
படிமிசைப் பாவம் வடிவுகொண் டதுபோற்
செடிபடு முடல்கொடு வெடிவதன் முன்னம்
வினைக்கடன் மூழ்கி யனைத்துஞ் சிந்தித்
தற்பமும் பயனில் செற்பமும் பயிற்றி
வாழுதற் கெண்ணித் தாழுநர்த் தாழ்ந்து
மருந்து மின்பமும் பொருந்து மின்பமுந்
திருந்தா வாழ்க்கைப் பொருந்துதலை வருந்தி
யறுதொழி லாகுஞ் சிறுதொழில் வழுவா

விரத மொன்று மில்லா வியற்கை
விரதம் பூண்டு வீடே னாகி
வழுக்கிடை யில்லா விழுக்குடை யொழுக்கு
மழுக்குடை யுளனும் புழுக்குடை யுடனு
மிறைநல வெல்லை யின்மை போலவென்
குறைசொல வெல்லை கூடா தாகினும்
யானுறு துபரம் யானறி யாமையிற்
றானறிந் தருளிச் சகலபல் லுயிர்க்கும்
யோனி யாகியோர் மேனி யின்றிய
சுத்தன் முத்தன் சொருபா னந்த
னித்தன் கருணை யயனென நிகழ்தரு
நற்றிரு நாமப் பித்த னாகி
யுளக்க ணாளர்க்கு வெளிப்பட வுரிய
வென்று முள்ள தன்றிரு மேனி
நின்ற வண்ண நிற்க வின்றென்
னூனக்கண் காண யான்பண் டறிந்த
புலைமதி யிரிபல் போயென் றலைகொடு
யானடி வணங்கு மாறு
மானுட னாகி வந்துதோன் றினனே. (௧)

நேரிசைவெண்பா.

தோன்றற்சேர்ந் தானந்தன் றோன்றிலனேற் றோன்றிய
போன்ற தனுகரண போகவுல--கூன்று [மொய்,

கனவு நிலையெனவே கண்டியா மெய்ம்மை
வினவ நினைவுறுமோ வேறு. (௨)

கட்டளைக்கலித்துறை.

வேறுசெய் தானரு ளைக்கத்தி னாலென் வினையடைய
நீறுசெய் தானிரு பாதிக மேனியென் னெஞ்சறியப்
பேறுசெய் தான்பண்டி யானென்று பேணும்பிண்டத்தை
ஊறுசெய் யாமலொருவிர காலிந்த வூனுயிரே [யொன்று

அகவற்பா.

ஊனு முடம்பு தானுந் தன்மையிற்
பூத மைந்தின் பொலிவே யாதெனி
னென்பு தோனரம் பிறைச்சி மயிரிவை
வன்புறு மண்ணே நெகிழுந் தண்புன
னீர்நிண மூளை சோரிசுக்கிலமே
யுறக்கமுஞ் சோம்பு மறப்பும் பசியுங்
கடுகிய விழைவுஞ் சுடுதீ யதுவே
யிருத்தலு மெழலுஞ் சரித்தலுங் கடத்தலும்
வலித்தலுஞ் சலிக்கும் வாயு வாமே
யாசையு முனிவு மானதம் பங்களும்
வரையா, லோபமும் புரைவா னியல்பே
புறநிலை யையைந் திவையே யகநிலை
புவிமுதற் பொருளிற் புரிந்த கந்தஞ்

சுவையொளி யூறொலி யுண்டே செவிமெய்
கண்வாய் மூக்குப் பண்மொழி நடைகொடை
போக்கின் பந்தரும் வாக்கொடு பதங்கை
பாயு ருபத்தமென் றாயுன ரறைந்த
வறிதொழிற் கருவியுஞ் செறிதொழிற் கருவியு
முணர்ந்தங் காய்ந்து துணிந்துசெய் கரணமு
மித்தன்மை பிறவுஞ் சித்தன்மை தெரிய
பன்மொழி கூறாது சின்மொழி யருளி
யென்னை நின்னுரு வென்ன வென்னை
யறியே னாதலி னஞ்சலென் றருளி
நெறியாற் றன்னை நிகழ்த்தக் குறைவறப்
பண்டே தன்ன தாயினு மென்பாற்
கொண்டா னாகக் கொண்டுதண் டித்தோய்
முன்னாகத்தொகுத் தென்ன துடைமையுங்
காயமுஞ் சீவனுங் கவர்ந்து நாயேற்
கந்தமில் சொருபா னந்தன்
சிந்துர மலரடி தந்தனன் றலைக்கே. (௪)

### நேரிசைவெண்பா.

தலைதருபோ துள்ளஞ் சமிக்குந் தவிர்ந்தா
லலைதருபே ராழிபோ லாகுஞ்—சலமெரிகான்
மண்மாகம் வைத்தழிக்க வல்லவா நிற்போனுங்
கண்மாய முண்டோர் கழற்கு. (௫)

கட்டளைக்கலித்துறை.

கழலா ரணங்கள் பரவுஞ் சிவப்பிர காசன்றன்னைத்
தொழலா மதிதந்து துன்மதி தீர்த்திந்தத் தொன்னெடுநா
ளழலார் பிறவியுற் றங்கொடிங் கெய்தி யலமருமிச்
சுழலா ருழியச் சுகவாழி மூழ்கத் துகைத்தனனே (௯)

அகவற்பா.

துகைத்தென் சென்னியிற் சகத்தென்று விளங்கிய
மண்முதற் சென்ற கண்முதல் வாங்கி
முன்னவா தனையா லுன்னிய கருத்தி
னேட்ட மெல்லா மீட்டுத்தேட் டறுத்துத்
தெரிவின்மை தெரிதலைத் தெரீஇத் தெரிபுகொண்டு
தெரிவின்மை யழித்துத் தெரிவே யாக்கித்
தெரிவொழித் தின்மை திகழ்த்தித் தெரிவையுந்
தெரிவானி னெரீஇத் தெரிபு தெரியாமை
யென்ப தின்றி யிருந்தமை போந்த
பின்பு தெரிவ தன்றி யங்கு
காயமு முயிருங் காலமுந் திசையுந்
தேயமும் யாதுந் திகழாது பாவிக்கும்
பாவனை யற்ற பரமிது வென்ன
மேவா விருத்தி யோவியம் போல
விருந்த வென்னை யெழுப்பிப் புரிந்து
போதலும் வீதலும் பொருந்தலிற் பிறத்தலுஞ்

சாதலுந் தவிராமை காட்டிப் பேதமற்
றப்படி யிருந்து மிப்படி விரிந்து
கப்புறும் வண்ணந் தப்ப விப்படி
கருத்தற விருத்திக் கண்ணளித் தொடுக்கமும்
விரித்தலுந் தீர விழிப்பித் திருட்டு
பகலவன் முன்னர்ப் படாஅ தொப்ப
வகிலமுந் தோன்று தறிவொளி திகழக்
கண்டு களிகூர்ந்த வென்னைத் தண்டிப்
பண்டை நிலையிற் பதித்தது கண்ட
ஞான நாடக! நான்முகன் முதலா
வான நாடரு மாதவத் தவருங்
காணா தலன்வர நாணாம லடியே
னொருவாது பரவ நிருபா திகனுஞ்
சொருபா னந்த னுருவாய் வந்து
நேயமொன் றில்லா நாயேன்
காயமே புகுந்து கோயில்கொண் டனனே (௭)

நேரிசைவெண்பா.

கொண்டவிடன் கொள்ளா விடனென் றிவையிரண்டுங்
கண்டவிடன் காணா விடன்கடந்த—கண்டானே
தானாகி நின்றசொரு பானந்தன் ருள்கண்டே
ஞானவி தங்காணே னான். (௮)

கட்டளைக்கலித்துறை.

நானுவி தஞ்செய்து ஞானுதி தஞ்செய்து நாடரிய
மானுட கஞ்செய்ய வல்லவ னேயந்த வானவர்க்குந்
தேனார் பதநல்கிச் செம்பவ ளத்திரு வாய்மலரா
யானு லவரென்செய் வார்சொல்லு மாறென்கொ லாரணமே

அகவற்பா.

ஆரண மறிதற் கரிய காரணன்
முன்னு விடத்தைச் சொன்னு டருமையி
னென்னு நின்ற தென்னே தன்னை
யறியும் பரிசே தென்னி லிறைவ
னருளா லாகு மின்றே யிருளெறி
யிந்து மூன்னீர் தந்த கல்லென
வருட்கதி ரெறிக்கு முருக்கொண் மேனிமுற்
றிண்ணெஞ் சுருக்கிக் கண்ணீ ருகுமே
நோக்கா னிகழ்ந்த வாறு கோத்த
புனல்வாய் மீன்சொரி சினையுயிர்த் தற்றே
யன்பா லென்னைத் தன்பா னினைய
வென்பால் யானிலங் கிடுதற் கன்பா
லீன்றவாமை முட்டையுஞ் சான்றே
கலந்தெ னுவி நலங்கொ ணீர்மை
விலங்குண் விளவின் கனியொக் கும்மே
கருவி யெல்லா மொரீஇச் சொருக

வழியின்றிக் கழியு மாறு குழீஇய
வாயில் குடத்திற் றேயநிறைந் தற்றே
நாதன் செய்த செயலிற் கேது
வெல்லா முண்டு போலு மில்லை
விண்ணிற் றேவர் நண்ணுதற் கரிதெனக்
கண்ணிற் காண மண்ணிற் றோன்றிச்
சொருபா னந்தச் சோதி குருவாய்த்
தாயினும் பரிந்து வந்து நாயேன்
மூண்ட வெம்பிறவியின் மூழ்கி
மாண்டுபோ காம லாண்ட காரணமே. (௰)

நேரிசைவெண்பா.

காரணமென் கண்ணளிக்கக் கண்மூன் றுடையானு
நாரணனு நான்முகனு நான்மறையும்—பூரணமாஞ்
சோதியுண ராநிற்கத் துய்யசொரு பானந்த
நீதியுண ராவெனக்கு நீ. (௰௧)

கட்டளைக்கலித்துறை.

நீயே பரிந்துவந் தாண்டிலை யாயி னிரயந்தன்னி
னாயேன் கிடந்தென் படக்கடவேனல னென்றுமில்லாப்
பேயே னுலகி னினிப்பிற வாவகை பெற்றெடுத்த
தாயே மனனே யுறைதன மேயென் றனிமைகண்டே (௧௨)

அகவற்பா.

கண்டுங் கண்டிலன் மேனி காணப்
பண்டுங் கண்டில னடியேன் முண்டகத்
தாளிணை தரினு மாளுவன் யானே
தாராக் காலு மாளுவன் யானே
கூடினுங் கண்ணீர் வருமே கூடாது
வாடினுங் கண்ணீர் வருமே நாடி
நினையினு நினையநெஞ் சிலனே நினையா
வினையினு நினையநெஞ் சிலனே யினைய
தன்மை யானிற் சார்தலுந் தவிர்தலு
மென்ன வயலொன் றின்றே நின்வயிற்
கண்டன னென்றல் காட்சியிற் படா
வண்டநின் றன்மை யன்றே கண்டில
னென்னின் முன்ன ரீசற் காண
வன்னிய ரெனில்லை றன்றே நின்னிற்
பொன்றின னென்னிற் புகன்ற வாக்கே
யின்றெனக் கழறு மன்றே யன்றி
வேறெனில் வீடுகூ டாதே யொன்றெனிற்
கூட வேண்டா வாமே நாடிச்
சொருபா னந்த வுருபா யிங்குக்
குருவாய் வந்து தோன்றி யருளாம்
விழியி னன்றி மொழியிற் படாதெனி
னெழிவற நிறைந்த வழிவில் சோதிக்கு

வரவுஞ் செலவு மில்லை யருவினுங்
குருவு மிலனென் பவர்க்குத் தெரிவுறக்
கண்டன னெனவோ கண்டில னெனவோ
வொன்றின னெனவோ வொன்றில னெனவோ
வந்தனை யெனவோ வந்திலை யெனவோ
வருவினை யெனவோ வுருவினை யெனவோ
கருவினை யறக் கடைக்கணித்த
வொருமொழி யாள வுரைத்திசி னெமக்கே. (௯௩)

நேரிசைவெண்பா.

கேட்டற் கரிய மறைப்பொருளிங் கேகிடைக்கு
நாட்டப் படுமென்றி யானுரைத்தா—னாட்டினவர்க்
கேறுமே யென்னை யுடையா னருளிலதேற்
றேறுமே சிந்தை சிலர்க்கு. (௯௪)

கட்டளைக்கலித்துறை.

சிலவா சகங்கொண்டு சிந்தைசெல் லாத விடத்தையொன்று பலவாகு மென்னப் படுவது வோபத்தி யால்வணங்க மலவா சறுத்தென்னை வாழ்வித்த நாதன் வடிவின்வந் தோர், சொலவா லுணர்வுஞ் சொலவு மொன்றாக தனைச் சொலுமே. (௯௫)

அகவற்பா.

சொல்லும் வர்க்கு நீயே யாயினுஞ்
சொல்லாற் சொல்லப் படாஅய் நீயே

யுள்ளு முள்ள நீயே யாயினு
முள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅய்
கண்ட வெல்லா நீயே யாயினுங்
காட்சியிற் படாஅ மாட்சிமை நினதே
யெல்லாப் பொருளு நீயே யாயினு
மல்லா திருத்தி யமல நீயே
யெல்லா விடனு நீயே யாயினு
முள்ளா தவர்பா லில்லை நீயே
யஃதான், றரியதி னரியை யெளியதி னெளியை
பெரியதிற் பெரியை சிறியதிற் சிறியை
நொய்யதி னொய்யை யையதி னையை
வெய்யதின் வெய்யை தணியதிற் றணியை
யணிமையி னணியை சேயதிற் சேயை
குறுமையிற் குறியை நெடுமையி னெடியை
பருமையிற் பரியை நேர்மையி னேரியை
யின்ன தன்மை யாயநின் னியல்பு
வான நாடரு மறையுமியானு
மறிந்த வளவி னரற்றுது நின்னள
விறந்த பெருமைக் கெங்கே யெறிந்த
திலத்தள வல்லது நிலத்தள வுருமை
யிலக்கது சிறுமை யன்றே சலத்துறு
மதியென நடுங்குமென் மதியை வாங்கிப்
பதிவயிற் படுத்தப் பார்மிசை யுருவாய்

வந்தருள் சொரூப! வானோர்
சிந்தனைக் கரிய தெய்வ நற்சுடரே. (௰௬)

நேரிசைவெண்பா.

சுடர்க்குச் சுடராஞ் சொருபானந் தன்று
ளிடர்க்குப் படையா விருக்க-வுடற்குச்
சிலகோலஞ் செய்தவமே செத்துப்போ வாரே
யுலகோரி தென்ன வுணர்வு. (௰௭)

கட்டளைக்கலித்துறை.

உணரீ ருடம்பி னிலைமை யுடம்புயி ருள்ளதெல்லாங்
கொணரீ ரினிய குரைகழ னல்கக் கொண் டாடிக்கொண்டு
புணரீ ரருட்சொரு பானந்த நாதர் புகழ்வல்லவா
நிணரீ ருளம்பர மானந்த மாம்படி நித்தலுமே. (௰௮)

அகவற்பா.

நித்தலு மலர்தூஉய்க் கைத்தலங் குவித்துப்
பணியுந் தொண்டர் பிணியுறும் பிறவியிற்
போர்கா வண்ண நீகாத் தருளத்
திருவரு ளதுவே யொருவடி வாகித்
தோன்றிய சொருபா னந்த வான்ற
வாறு சமயத் தவரு நாடிக்
கூறுவது நின்னை யன்றே வேறறப்

பொல்லாக் காயமு நில்லாத் தன்மையு
மிடும்பைத் தொழிலுங் குடும்பச் சுமையுந்
தாகா திகளும் போகாப் பிணியும்
பிறப்பிற் றுன்பமு மிறப்பிற் கேடுங்
கேடறு கின்ற வீடுறு நினைவுந்
தவத்துறு முயல்வு மவத்துறை யிகழ்பு
மெல்லா மொக்கச் சொல்லா நின்று
மொவ்வா வியற்கையின் வெவ்வே றூன
விவ்வா றென்னோ விறைவ செவ்வே
பற்பல வழியோர் பதிக்கு பதியோர்
கற்பித் தனரெனக் காணார் சொற்பித்
தாமன் றெனநின் றேமுறு மாக்க
டாமன் றொப்பிவர் தமக்கே காமுறத்
தம்மா னறியுந் தன்மையிற் றடவிக்
கைம்மாக் கண்ட கண்ணி லாளரு
முறிகாய் சாக மூலந் தனித்தனி
யறியா தோர்க்கு மரமா மாறு
மொக்கு மன்றே மெய்க்க ணாளர்க்
காயா விடினு மாயினு நீயாய்
ஞானக் கண்ணி னிகழ்தி
யூனக் கண்ணி னுலகா யினையே. (௰௬)

நேரிசை வெண்பா.

உலகமாந் தோற்றம்போ யோருருவாய் நேரே
யிலகினு மென்கண்ணி னிற்கட் புலனொழித்துக்

கைபாற் றடவினர்க்குக் காண்கின்ற வோவியங்கள்
பொய்யாய்ச் சுவராமாபோல். (௨௰)

### கட்டளைக்கலித்துறை.

போலா வுரைகொண்டு போற்றினு மென்றலை யிற்பொறித்த
காலா தாஞ்செய்து கண்ணீர் ததும்பிக் கசிந்துருகி
மாலா குவநல்ல வார்த்தைகண் டீர்வடித் துப்படிக்குங்
கோலா கலவுரை கூகையும் பேயுங் குழறுவவே. (௨௧)

### அகவற்பா.

குழறு சிறுவர் மழலை மென்சொற்
கேட்டு மகிழ்த லல்லது மீட்டுக்
கழறு ரவரை விழுமி யோரே
யன்ன தன்மைநீ முந்நீர்ப் பிறந்த
புற்புத நிகழ்ந்த பொருளொரு பொருளாக்
கற்பனை செய்பு மற்ப மாக்கண்
மலவுடன் மன்னு வந்தன வுணவின்
பலமெனப் புலவர் பகரவு நிலையி
னுற்பவ மனத்திற் கற்பித மெல்லாச்
சொற்களு மென்னச் சொல்லியு நற்பொரு
ளெம்மதென்னவெம்மதென்று
மம்மர்மாந்தர்மயங்கித்தம்மிற்
கலகஞ்செய்யக்காமுற்றவர்பா

விலகாவிருந்தும்விலகாநீயே
வன்பாவியனுமென்பாலன்பா
யவ்வழிமாற்றிச்செவ்வழிப்படுத்தப்
புராணமேனிபொலிந்தினிதிலங்கத்
தரணிவாழத்திருவவதரித்த
சொருபானந்ததிருமாமுனிவ
வருளேபொருளெனநினையுந்தெருளுடை
மெய்யுணர்வாளர்மெய்யிற்றேன்றி
யையுணர்விற்குமமிர்தாயினையே
பலவெனிற்பலவாயொன்றெனினொன்று
யிலதெனினிலதாவுளதெனினுளதாய்
நன்றெனினன்றாய்த்தீதெனிற்றீதா
யன்றெனினன்றாயாமெனினுமா
யீதிதுவென்னுநீதியின்றி
யாதேயாகநினைந்தனரஃதே
யாகிநின்றவேகநாயக!
நீகண்டிருக்கினல்லதாகத்
தொழிவறநிறைந்தநின்னுரு
வழியிலைகாணமதியினோர்க்கே (௨௨)

நேரிசைவெண்பா.

மதியானு நானுமறையானு மற்றோர்
கதியானுங் காண்பரோ காலான்—மிதியாக்கொண்

மீட்டாசறுத்தாண்டவீரன்விழியாலே
காட்டாதபோதந்தக்கண். (உக)

கட்டளைக்கலித்துறை.

கண்ணு ளளையன்றிக் காணுது கண்ணவன்கண் ணொழிய
வெண்ணுது சிந்தைகொண் டேத்தாது நாவிறை தாளோ
நண்ணுது சென்னி நயவாது நாசிநற் சீரொழிய [ழிய
வுண்ணு செவியவ் வொளியொடல் லாதுரு காவுடம்பே ()

அகவற்பா.

உடம்பே, மலநிணமுளை வழுவெண்பிறைச்சிப்
புலவுநாறிப்புழுச்சொரியும்மே
தலையே, நில்லாப்பொருளைநிலையெனநினைந்து
பொல்லாதவரைப் போய்ப்பணியும்மே
கண்ணே, மலம்பொதிந்தியற்றிய வடிவினைமறையக்
கலன்புனைமாதர் கவின்காணும்மே
மூக்கே, உடன்மணமுணரா தொருமணங்கொண்டு
முடைமணமாறி மொத்துண்ணும்மே
வாக்கே, அறம்பொருளின்பம் வீடெனநான்கின்
திறங்கெடவெரியுந்தீச்சொரியும்மே
செவியே, பிறனில்வாழும் பெண்மைகேட்கும்
புறனுரை யன்றி யறனுரை பெறுவே
கையே, மடக்கொடி மாதர் வயிற்பணி செயும்புல
னடக்கிடு சொருபற் காம்பணி செயாதே
மனமே, ஏது செய்தா லேதா மென்று

காதற் கடலின் கரைகா ணாவே
யானே, குடும்ப மென்னு மடங்கற் காட்டி
னிடும்பைக் கெல்லா மிடனா யினனே
யின்ன தன்மைய னென வென்னை
யாரண மறியாக் காரணக் கடவுளென்
றாரணங் கெடுத்த பூரண புராணன்
சொருபா னந்த னிருபா தங்கள்
புலைய னேனுக் களிக்கத், தலையே
பற்று வளித்த பொற்றா ளல்லது
மற்றோர் தெய்வம் வணங்கறி யாவே
கண்ணே, அருவி பாய வருளா ணண்ட
வுருவ மன்றி யொன்றுங்கா ணாவே
மூக்கே, மெய்கமழ் புறவுளன் மெய்புகுந் தருளிய
மொய்கழன் முளரி மணமுர லும்மே
வாக்கே, கருவினை யறுத்த கழலிணை கனவினு
மருவ லன்றி மற்றறி யாவே
செவியே, கூறு மன்பர் குரைகழற் றொடுத்த
வாரமிர் தருந்தி யாரா வாமே
கையே, என்பணி யுடம்பாம் வன்பிணி மருத்துவன்
றன் பணி யன்றித் தானறி யாதே
மெய்யே, விகிர்தன் வந்து மெய்யே தன்னுட்
புகுத வுரோமம் புளகஞ் செயுமே
ஊனே, நெக்கு நெக்கு நீரா வுருகி

யுக்கு நாத னொளிபுக் கதுவே
யானே, யானென தின்றி யெல்லா மான
தேனினை யருந்திச் சிவமா யினனே
யோதின னெல்லாப் பேதமும் போந்த
வாதனை யன்றி மற்று
நாதனை யொழிய நான்கா ணேனே. (௨௫)

நேரிசைவெண்பா.

காணும் பொருளெல்லாங் கண்ணாகக் காண்பவர்க்கு
கோணுஞ், சமயிகடங் கொண்டாட்டம்—வேணுமே
சூழ்ந்திருக்கு நாடுஞ் சொருபானந் தன்பதத்தே
வாழ்ந்திருப்ப தல்லாது மற்று. (௨௬)

கட்டளைக்கலித்துறை.

மற்றுக் கொளவொன்றும் வேண்டா மனனே! வானிரந்து
பெற்றுக்கொ ளெந்தை பெருமானை யுன்னப்பெறவவன்சீர்
கற்றுக்கொ ளாண்ட கருணைக் கழல்கை விடாதிருந்து
விற்றுக்கொ ளொற்றிவை யென்னிது வேநின்னை வேண்டு
[வனே. (௨௭)

அகவற்பா.

வேண்டலன் விண்ணு மண்ணு நீண்ட
புகழு மறனும் பொருளு மின்பமுந்
திகழும் வீடுஞ் சிறப்புந் தொகையி
லெல்லாப் பொருளு மில்லா வாகி

யொழியினு மொழிகப் பொழியினும் பொழிக
வெனையா ளுடைய சொருபானந்த!
நினையா னிரப்ப துண்டு மனனே
மன்னு நின்னடி மறவாது நினையமற்
றுன்றுதல் கவினு மொழிய வாக்குன்
னும மொன்று நவிற்ற மற்றவற்
றாம லுகி யொழிய மூக்குன்
முற்றுத் தளிரடி முரல முன்னை
மற்றை நாற்ற மாற்றக் கண்ணுந்
திருவுரு வதுவே திளைக்க மற்றே
ருருவுங் காணு தொழிகச் செவியுன்
கீர்த்தி யொன்றுங் கேட்க மற்றொரு
வார்த்தையுங் கேளா வாகக் கையுன்
காற்றலை யேவல் செய்யக் கவலைச்
சோற்றலை யேவ றுறக்க நாய்த்தலை
மற்றோர் தெய்வம் வணங்கா வுன்றன்
பொற்று ளிணையே பொலிய மற்றை
யவயவ மெல்லா மவயவத் தடுத்த
விவை யிவை செய்ய யானுஞ் சிவமா
வாவா வென்றன் றருளு மருணினைந்
தோவா தருக விவ் வுடம்புகு மளவே. (உஅ)

நேரிசைவெண்பா.

அளவா யிருப்பதே யையோ வரனுந்
துளவார் முடியோனுஞ் சோதித்—துளவாறு
தன்னையா யாநிற்பத் தம்பிரான் றானேவந்
தென்னையாள் கின்ற விது. (௨௯)

கட்டளைக்கலித்துறை

இதுவா மதுவெனி லன்றிநின் றேயெப் பொருள்களுமா
மதுவா கினுந்திரு மேனியன் பாலமு வார்க்கருளான்
மதுவார் பதநல்கு மல்லது வானவர்க் கும்பிறர்க்கும்
பொதுவா விருந்தது வோசொரு பானந்தன் பூங்கழலே. ()

மும்மணிக்கோவை முற்றிற்று

ஒன்பதாவது.

# நான்மணிமாலை.

## தத்துவானுபவம்.

### அகவற்பா.

பூவை வண்ணனும் பொன்னொளி வண்ணனுந்
தீவண் ணனுமெனச் சிறந்த மூவரு
முண்ணிகழ் ஞானக் கண்ணாற் காணும்
வண்ண மில்லா வண்ணல் வண்ணங்
காணப் படாஅன் காண்பவ னாகுங்
கேட்கப் படாஅன் கேட்பவ னாகுஞ்
சொல்லப் படாஅன் சொல்பவ னாகு
முயிர்க்கப் படாஅ னுயிர்ப்பவ னாகு
மியக்கப் படாஅ னியக்குவ னாகும்
புணரப் படாஅன் புணர்பவ னாகும்
உணரப் படாஅ னுணர்பவ னாகுஞ்
செய்யப் படாஅன் செய்பவ னாகு
மையப் படாஅ வறிவா மெய்யன்
புவியிற் றிண்மை புனலி னெகிழ்பு
தீயின் வெம்மை வாயுவிற் சலனம்
வானிற் புரைத்தல் பானுவிற் றேசு
மதியிற் றண்மை மன்னுயிர்க் குணர்ச்சி
திதியுற முன்னே செய்த முதியோ
னெவையுந் தன்னிற் றோன்றி நின்றிறக்க
வவைதனக் கில்லா தாம விகார

மாகி நின்ற வேகன் சொருபன்
யோக மெட்டு முணர்ந்த பாகத்
தெருள் புரி சிந்தைப் பெருமா தவர்க
ளருள்விருப் புறுபா னஞ்சி நிற்க
மறுளா மெனையோர் பொருளா நினைந்தென்
னிருளார் யாக்கை நீக்க வருளா
மின்னொடும் புகுந்துதன் பொன்னடி பணித்தென்
கன்னெஞ் சுருக்கிக் கண்மா ருமன்
மஞ்சனஞ் சொரியவே நெஞ்சினை நடுக்கி
யஞ்ச லஞ்ச லென்று தஞ்சமில்
யாக்கையும் பொருளு மாவியும் வாங்கி
நோக்கி னென்வினை நூறிப் பூக்கமழ்
பாதந் தலைமிசைப் பதித்துப் பழமறை
யோது முபாதி யான பேதப்
பந்தமுஞ் சீவனும் பரனு மாகி
வந்த மாயா பேதம் வந்த
விடந்தொறுங் காட்டி யிரண்டு பாதியுங்
கடந்து நின்ற கண்ணே யாக்கி
யுலவு முடற்குயிர் மலரி னாற்றஞ்
சொலவினிற் பொருடேய்மணிச்சோதி
திலத்தி னெண்ணெய் பலத்தி னின்சுவை
விறகினிற் செந்தீ பாலி னறுநெய்
யென்ன நின்ற விப்பொரு ளியா
னென்ன வென்னிற் காட்டிப் பின்னர்ச்

செய்தருள் விரகு செப்பும் வகை யறியேன்
கைதவ மின்றிக் கண்டும் பொய்தவ
மெய்யோ வுருகி வீழா
வையோ கண்க ளருவிபாய் கிலவே.

நேரிசைவெண்பா

அருவமாய் நின்ற வொளியப் படிநிற்க
வுருவமாய் வந்த வொருவன்-சொருபன்ருள்
வாழ்த்தி மகிழ்ந்திருக்க மாட்டாதே மாஞாலம்
பாழ்த்த வுடம்பைப் பரிந்து. (உ)

கட்டளைக்கலித்துறை.

பருதிகள் பல்லா யிரங்கதி ரும்மிரு ளப்பகலா
வொருதிசை கால மூலக மொழிவற் ருெளிருந்தன்மை
சுருதிக ளாயிரஞ் சொல்லவு நஞ்சொரு பன்பதங்கள்
பொருதிகன் மார்க்கிகள் காண்கிலர் கத்திக்கண் பூத்தலினே.

விருத்தம்.

பூத் திருக்கையால் வைத்துநஞ் சென்னியில்
பொன்னடி பொறித்துள்ள
மாத் திருக்கையோர் மாத்திரை யதனிலே
மாற்றிவா சகமொன்று

லோர்த் திருக்கெலா முரைப்பரும் பொருளின்வே
றின்றியே யொன்றாகப்
பார்த் திருக்கவாம் படியருள் சொருபனைப்
பாவிகள் பணியாரே. (௪)

அகவற்பா.

பணிக்க வேண்டுநின் பழவடி யார்க்குக்
கணிப்பி னேவலென் கையாற செய்க
கரந்தொழு தேத்தக் கடிமலர் தேடிப்
பரந்தெழ வென்றன் பதங்க ணிரந்தரம்
பூக்கழ லென்றும் புகழ்ந்து போற்றியென்
வாக்கு நின்னை வாழ்த்த நோக்க
நீக்க மின்றி நின்றன் மேனி
நோக்கி நுண்டுளி சொரிய மூக்கு
மதமண னுண்ண மதியா துன்றன்
பதமண னுண்டு பருகத் துதியெனு
மாறி னன்பர் வாக்கெழு மதுரத்
தேற லுண்ணவென் செவிக ளாறி
யச்ச மற்ற வடியவர் வைத்த
மிச்சி லுண்ண வென்னு நிச்சலும்
பாவிடை நூலிற் பரந்தெழ வறுத்த
சேவடி சூடவென் சென்னி மேலிட
வுற்ற தவத்தோ ருறுதுய ரொப்த

நற்றவ மிலேனை நாடிப்பெற்ற
தாயி லாகி யாண்டநின் றனக்கே
கோயி லாகவென் குரம்பை போயா
தொளிவந் துள்ள மொழியா வின்பக்
களிவந் துருகிக் கரைய வெளியா
வீட்டிய விருக்கு மாறு
காட்டிய சொருபநின் கருணை கண்டே. (௫)

நேரிசைவெண்பா.

கண்டு குழைவர் கணையென்றும் வேலென்றுந்
தொண்டர் குழையுஞ் சொருபன்கண்—கண்டு
மனங்குழையா ரையோவிம் மானிடவர் மாயக்
கனங்குழையார் காவியங்கண் கள். (௬)

கட்டளைக்கலித்துறை.

காவியங் கண்கள் பனிப்பவந் தாய்சுடி மாமலர்க
ளேவியந் தோகை தொழுதனை யோசொரு பன்பதங்கண்
மேவியங் கார்தொழு வாரவர் மெய்யும் பொருளுமன்றி
யாவியங் கொள்ளுமென் றேமறை நான்கு மறையுநின்றே.

விருத்தம்.

நின்ற வொன்றைநினை யாது நெஞ்சினிலே
யாத விவ்வுடல நித்தமா

மென்று கொண்டுநினை வார்கள் செய்ததமு
னென்ன பாவமிவ ரிங்கிலத்
தோன்ற வந்தவொரு பன்பதங்கடலை
யுச்சி வைக்கிலர்கொ லூழிநா
ளொன்று திங்கள்புவி யம்பு தீயனில
மெஞ்ச நின்றவெளி துஞ்சவே. (அ)

அகவற்பா.

துஞ்சல் பிறத்த லுறுபயம் விஞ்சிய
பெருமிதம் பெருமை பேரவா வாழும்
வருமிட ரின்ப மறிதிரை விரவு
குற்றம் வெண்ணுரை சுற்றந் துராஅன்
மம்மர் நோய்கள் மறுக்கும் புலவு
கொம்மை முலையார் கொடுஞ்சுழி வெம்மை
கோபம் வடவை தாப மமிர்தம்
போக நஞ்சு நாகங் காம
மழுக்கு முதலை புழுக்கண் மைந்தர்
மீனம் புலன்கண் மான மகர
முணர்வில் கல்வி யொலியா மேழ்பவப்
புணரி தன்னுட் பிணி யுடற்கலத்
தரந்தைப் பொருள்பெறும் பெரும்பொய்ச் சரக்கு
நிரம்ப வேற்றித் திரம்பெறு கூம்பு
யானென நாட்டி யெனதெனும் பாச

மானவிட் டத்து வலியுறக் கட்டி
நேய மென்னும் பாயது விரித்து
மேலை வல்வினை மாலுமி யாகி
யீரா று நூறு யிரவே ழியோனிப்
போது பெற்ற வூர்தோ றுஞ்சென்
றேற்றிய சரக்கி னிரட்டியு முற்றியு
முறுதி யின்றி யோடுங் காலை
யிறுதி யெய்த வெண்ண மொன்றறக்
கருத்தது கலங்க மிருத்தியு வென்னும்
வரைபட் டுடைந்துறு வங்க நிரய
வளற்றின் வீழா முன்ன மொளித்தகு
மறிவு மரக்கல னமைத்துத் துறவி
ஞமக் கூம்பு நாட்டி யேம
வருளாங் கயிற்றிற் புரள்பறக் கட்டிப்
பத்தி யென்னும் பாய்பூ ரித்து
முத்தி யூரிற் றம்மை யுய்த்தருள்
சொருப னென்னு மொருமீ காம
னருந்தவர்க் கரசின் பாதந்
திருந்தவைக் கிலர்தஞ் சென்னியின் மிசையே. (௯)

நேரிசைவெண்பா.

சென்னிமி சைப்பதங்கள் சேர்த்தித் திகழ்சொருப
னுன்ன வரிய வுணர்வாகுந்—தன்னை

யருளும் விரகேதா னீடிப் புறத்தி
னருளு மளவி னுழுந்து. (௧௰)

### கட்டளைக் கலித்துறை.

உழுந்தரு ளுந்துணைப் போதி னுணர்வுரு வாகவொன்று
மொழிந்தரு ளத்திரு வுள்ளத் தடைத்து முத்துமறையோன்
செழுந்தா ளிக்கண் டிருமேனி சாத்திரஞ் சிற்சொருப
னெழுந்தரு ளிற்றில னேலெங்ங னேபிறப்பேறுவதே. (௧௧

### விருத்தம்.

ஏறுவ திழிவ தாவரு மியல்ப தேறுவ திலர்க ளாறினர் கூறிடு சொருபர் தாளிணை மலர்கள் கூடிட நினைவு றுது போய், வேறொரு தரும மேவுறு மவர்கள் வீடதுபெறுகை கூடுமோ, மாநியிவ் வுலகி லாவது திரிய வானுலகுறுவ தாகியே. (௧௨)

### அகவற்பா.

ஆகியு மழிந்தும் போகு முற்பவத்
துன்பந் துடைத்திங் கின்பங் கொடுக்கத்
திருவுருப் புனைந்த குரவன் சொருபன்
பொற்பதஞ் சூடிச் சிற்பத வீடு
கையிற் கனியெனக் காணு ரையோ
தர்க்க நெறியிற் சார்வர் தர்க்கஞ்

சொல்வல தில்லை யாகுஞ் சொலவு
மனனல தில்லை யாகு மனனுங்
கனவுஞ் ஞானக் காரிய மாகு
மஞ்ஞா னத்தா லாகிய விருநெறி
மெய்ஞ்ஞா னத்தை விளக்கு மாறென்
னிலதுள தேக மேனக மென்ப
தலதிலை தர்க்க மறைவ தில்தெனி
லிலது முத்தி யெய்துத லின்ப
மலடி மைந்த னெய்துத னிலையா
யுள்ளது முன்னே யுள்ள தாதலி
னெள்ளறு முத்தி யென்செய வுள்ள
தன்னின் மாசு தானொழித் திடுத
லென்னி லேறிய மாசோ முன்னே
யுள்ள மாசோ வொழிப்ப தென்னின்
விள்ளா முன்னே யுள்ள தாகி
னிடையோர் காலத் தென்னின் முத்தி
யடைவார் திறத்தி னடையும் பின்னு
மொழிவறு பரம்பொரு ளொன்றே யாகி
னிழவு பேற தில்லை யிழைய
வேறே யொருவ னுண்டெனில் வேறு
கூறின் முத்தியிற் கூடா னகு
மிங்ஙன மான பின்ன
ரெங்ஙனஞ் சொல்வா ரிகற்சம யிகளே (௰௩)

நேரிசைவெண்பா.

சமயிகடம் பாலே தம்மைச் சொருப
னிமையி னருள்செய்ய வெய்தி-யிமையவர்க்குந்
தேவுதா மாயிருக்க வாகச் சிலர்ச்சீ
போவதாம் பூசற் பொர. (௰௪)

கட்டளைக் கலித்துறை.

பூசலுற் றுடுஞ் சமயிகளோடு புகுந்துதர்க்கம்
பேசலுற் றுறி யிருந்தன் றேபிணி சேர்பிறவி
யூசலுற் றுட னொழிக்குஞ் சொருபன்ற ணேங்குகொற்ற
வாசலுற் றுரை மருவ லுற் றுர்கொலிம் மாதவரே. (௰௫)

விருத்தம்.

மாதாக மணந்திட வென்று கொளு
மாதாக மறந்திடு நஞ்சொருபன்
போதாரர விந்தம லர்ப்பதநம்
போல்வார்கள் பெறுந்தர மானதுவே
வேதாக நினைந்தனை யண்டர்களு
மீசானனு மாயனு மிந்திரனும்
வேதாவு மறிந்தில ரென்றலவோ
வேதாகம கீதைவி ளம்புவதே. (௰௬)

அகவற்பா-

விளம்ப வேண்டு மெந்தை களங்கப்
பிறவி செய்த பெற்றி யறவ
நீசெய் தனையெனி னின்பே ரருளுக்
காசெய் அவதே யன்றியுந் தேச
னவிகா ரதையு மழியு மென்றுஞ்
செய்ய மாயை யுண்டெனிற் சிதையு
மையநின் பெருமை யன்றியு மெய்யே
யுள்ள மாயை யொழியா பொய்யே
யில்லது தோன்று தாகு மென்றுஞ்
செய்வினை செய்யு மென்னிற் செய்வினை
செய்வோ னொழிய வில்லை செய்வோ
னின்னில் வேறு மென்னின் மற்றவ
னுன்னரும் வீட்டி னொன்று னாகு
மொன்றி னொன்றுகெட் டொன்ற வேண்டும்
பொன்றுத லன்றி யின்றே யென்றும்
பின்ன னாகி யிருக்கினின் னபரிச்
சின்னதை சிதையு மென்றும் பன்னும்
விழியின் மாந்தர்க்கு மொழிவகை முதனு
னுடம்படுத் துற்ற வாறு முள்ள
நடுங்கிய பரிசுமென் னடுக்கங் கெடும்படி
யுருநாம மில்லா வொளியா நீயே
சொருபா னந்தனென் றிருநா மத்து

மானுட வேடஞ் சாத்தி வந்தெ
னூனுட லாவியு னுடைமை யானவை
முன்னர்க் கொண்டுன் முளரியங் கழலென்
சென்னியிற் சேர்த்து நின்னைத் தந்த
பின்னர் நின்னை யல்லான் முன்னை
யாதுங் காணு திருந்த நாத
வெனதனு பவமே யிரண்டுங் கனையிரு
ளிரவி முன்ன ரெஃகிய பரிசெனின்
வரவு போக்குளன் மற்றவ னிருண்
மீண்டும் வருதலு முண்டா
மாண்டகையென்றுந் தூண்டாச் சுடரே. (௫எ)

நேரிசைவெண்பா.

தூண்டாச் சுடரனைய சோதி சொருபனே
யாண்டவனே யென்றழைத்த வப்பொழுதே—மீண்டு
மறித்தொருகால் வாராமே வந்து தலைமேற்
பொறித்தருள்வான் செம்பொனடிப் போது. (௫அ)

கட்டளைக்கலித்துறை

போதா ரயனரன் மாற்கும்புத் தேளென்று பொய்ம்மையற
வேதா கமங்கள் விளம்புஞ் சொருபனோர் மேனிகொண்டு
பாதா ரவிந்தங்க ளாயேன் றலையிற் பதித்திடவுஞ்
சாதா ரணமா யிருப்பது வேயிச் சகத்தினிலே (௫௯)

விருத்தம்

சகத் தார்செய் தவங்களின் மாய்ந்திடு
சழக் காம்விர தங்களி னேய்ந்திடு
மகத் தாலிவ லந்தலை யாம்பவ
மயக் கற்ற நினைந்திலம் யாம்பல
முகத் தான்மறை நின்றறை சாந்தியை
முதற் சாதன மொன்றில நீங்கலில்
சுகத் தாறி யிருந்தன மீங்கிரு
சுடர்த் தாள்சொரு பன்றா நாங்களே (௨௰)

அகவற்பா,

ஈவுரி யவர்வே றில்லை யிச்சகத்
தரணமைத் தனனே யென்பார் கரிய
செங்க ணெடுமால் செய்தன னென்பார்
பங்கயத் தவனே படைத்தன னென்பார்
ரிந்திரன் முதலா மிமையவ ராலே
வந்ததிச் சகமென மதிப்பார் சிந்தை
யாயி னிலதா மல்ல துண்டா
மாயையிச் சகத்து வந்த தென்பார்
முக்குண வடிவா மூலப் பகுதி
யிக்கட லுலக மீன்ற தென்பா
ரொலியே தந்ததிவ் வுலகமென்பார்
மலியும் வினையான் வந்த தென்பா

ரணுவிவ் வுலகை யாக்கிய தென்பார்
கணிகர் புத்தியின் கற்பனை யென்பார்
சூனியத் துலகு தோன்றிய தென்பா
ரான்றவ ரொருவ ராலு மன்று
பூதந் தன்னின் புணர்ச்சி யென்பா
ரேது மியல்ப தில்லை யென்பா
ரிப்பரி சளவி லாத வாதிகள்
சொற்பொரு ளறிந்து மெய்ப்பொரு ளறியாது
கற்றவ ளவிற் றர்க்கஞ் சொல்லிக்
கூவற் பூட்டைக் குண்டிகை போல
வோவற் றுற்பவத் துழல்பவ ராவ
ரோமெனும் பதத்தி னுட்பொரு ளென்று
தூமறை பரவுஞ் சொருபா னந்தன்
மையற் பிறவி வன்பகை யறுக்குஞ்
செய்ய சேவகன் சிவப்பிர காசன்
மனக்கணக் கிடாமல் வந்திப் பவர்க்குத்
தனைக்கணத் தருள வல்ல தத்துவன்
ஞானந் தன்னிற் றோன்றி
மோனந் தன்னின் முடிய முற்றுமே. (உக)

நேரிசைவெண்பா

முற்றுமாய் நின்ற முதல்வன் சொருபன்றாட்
கற்றுமா லாகி யமைவுற்று-மற்றொன்றிற்

சென்றவர் மண்டித் திரியா திருந்ததி
னின்றவா நில்லாவே நெஞ்சு. (உஉ)

கட்டளைக்கலித்துறை.

சுத்த மனந்தஞ் சுகமென் றுபநிடஞ்சொல்சொருப
னுத்தம னந்தக் கரணமொருக்கி யொளியினல்லாற்
றத்த மனன்கொடு தத்துவங் காணும் பரிசெனவர்க்
கத்த மனமுத யம்மவன் பாலுள வானபின்னே. (உ௩)

விருத்தம்.

பின்னு பின்னம தெனவே நின்று
பிணங்கா நிற்பர்கள் பேச்சிற்கு
முன்னு நின்றிடு மனனுக் கும்மிவை
யுடையா னெனவரு முணர்விற்கு
முன்னு நின்றிடுஞ் சொருபா னந்தனை
மொழிவா னரிதென முதுவேதஞ்
சொன்னு லறிகில ரவனு ரருளடி
சூடா தவர்மதி கேடாயே. (உச)

அகவற்பா,

மதிகே டென்னே மனிதர் விதியான்
முக்குணந் தன்னி னற்குணந் தன்னால்
வானி னேறி மாதரா ருடன்

வேனில் வேளின் விழாக்கொண் டாடியுந்
தாழ்ந்தவர்க் கண்டு சாலவும் வியந்தும்
வாழ்ந்தவர்க் கண்டு மனன்வழுக் குற்றுங்
காயத் துற்ற நோயது தணிக்க
வைத்தியர்த் தேடியும் வலியிலைடர்
தெயித் தியர்க் கஞ்சியுஞ் செற்ற மார்வங்
கோபமே முதல் குற்றம் பெருகிப்
பாவ மெய்திப் படுநர குற்று
மத்திம குணத்தான் மானுட வடிவாய்
நித்த முத்தியி னன்றிச் சித்தந்
தந்தைதாய் தாரஞ் சுற்ற மற்று
மைந்தர் மாதுலர் மருகர் மாற்றலர்
கள்ளர் மன்னர் கடிய மிருகம்
புள்ளு நரகம் பொல்லாப் புழுக்கள்
வாதஞ் சீத மடக்கு றுபித்த
மாதி நோய்க ளார்வஞ் செற்ற
மதமாற் சரிய மானந் தம்பங்
கதனுர் கோபங் காம மாசை
யைம்புல னுருநான் கந்தக் கரணங்
கம்ப முறக்கங் களிப்புக் கவர்பு
கல்வி செல்வ நல்குர வாதி
யெல்லையில் துயரா லல்ல லெய்தித்
திக்கிரை யாகித் தேகங் கூற்றின்

வாய்க்கிரை யாகி வாணாள் போக்கி
யறிவ தெல்லா மழித்துச் செறிவினை
யொக்கி னுயரிற் குறையின் மக்களிற்
றேவரில் விலங்கிற் செனித்துப் பாவந
தீக்குணந் தன்னாற் போக்கிட வொண்ணா
விலங்குச் சாதியிற் பிறந்து மலங்க
வொன்றை யொன்று கொன்ற தின்ற
றுஞ்ச லஞ்சன்மை துணித்த லெஞ்சா
நெறியிற் பிறப்பி னிசய நன்றே
பாவப் பெருமைத் தாபர மாகிக்
காற்று மழையுங் கதிரவன் வெயிலு
மேற்று மெல்லையில் கால மாற்றும்
படியுணர் வில்லாச் சடவடி வாகி
முக்குண வினையின் மூழ்கி நிற்குண
வெந்தை சொருப னிணையடி
சிந்தை செய்யார் செய்வ ரருவினையே. (உரு)

நேரிசைவெண்பா.

அருவிபாய் கண்ணினொடு மஞ்சலித்த கையாற்
றெருவெலா மென்றோ திரிவேன்-சொருபா
வெமைக்கண்டு கொண்டாண்ட வெம்மானே யென்று
நமைக்கண்டு நாடர் நக. (உசு)

கட்டளைக்கலித்துறை.

நகலுறு மேயொரு பானந்த நாத நதிநதங்கள்
சகலமுஞ் செல்வது சாகரத் தேதர்க்க சாத்திரங்கற்
றிகலுறு மார்க்கிக ளெல்லா வழியு முடிவிற் சென்று
புகலுறு முத்தியி னென்னுது நின்று பொருந்திடவே. (௨௭)

விருத்தம்.

பொருதிவ் வுலகை யாள லாமிவர்
புயல்செயி குழல்கொள் போதி ஞளுள
பொருவில் விசிக மாகும் வாள்விழி
புருவ மிருவி லாகு மேயெனக்
கருது மதன ராசன் வாழ்வுசொல்
கவிகண் மொழிகள் காமி பேமிறை
கருணை யுதத் யாகை யானிரு
கழலு முடியு நாட மால்கொளு
மருதி னிடையி னூரு மாதவன்
மலரின் மிசையின் வாழும் வானவன்
மதியி னறியொ ணாத தாளெனரு
மனுடர் வடிவ தாகி யோவிடு
சுருதி முடிவு கூறும் வேறறு
சுகமெய் யுணர்வு காணு மாறொரு
சொலவி னருளு நாதன் மாசறு
சொருப னடிகள் சூடி வாழ்துமே. (௨௮)

## அகவற்பா.

வாழ்தி மனனே மாய வாழ்க்கையி
னாழ்துய ரேது மறியாய் நாளுங்
கண்டுங் கேட்டு முண்டு முடுத்துங்
கொண்டுங் கொடுத்துங் கூடியும் பிரிந்து
முறங்கியும் விழித்துங் கறங்கு போற்சுழன் றுஞ்
செய்தது செய்து சென்றவிக் காலத்
தெய்திய வெமக்கிங் கியம்பே யெய்திய
துண்டு கேண்மதி யுன்வச மொழிந்து
பண்டை வல்வினைக் கண்டகர் கொண்டு
போம்வழி போகிப் புன்னுனைப் பனிநீ
ராம்வழும் பளவா யன்னைய ருதர
மண்டு தீமிகு தண்டவிற் புக்குப்
பிண்ட மாகிப் பெருத்துக் கண்செவி
மெய்வாய் மூக்குக் கைகான் முதலிய
வரும்பி யன்னை யுணவா னிரம்பி
யவற்றின் வழியே யறிவது பிறழ்ந்து
கவற்றி பெருகக் கைகா னிமிர்க்க
வொல்லாச் சிறையி னுள்ள தன்ப
மெல்லாங் கரந்தை யிருமதிச் சென்றபிற்
சாலும் வல்வினை காலாற் றள்ள
மேலாக் காலுங் கீழாத் தலையு
மறிய வீழ்ந்தங் கறிவுபிறழ் வெய்தித்

தப்பா மலனுந் துப்பா னுகர்ந்து
விழும முற்றுங் கழுமத் தனையாங்
குழவியிற் றுன்பங் குவாலை வழுவினை
நடைகற் றளவின் ஞானநல் கினரா
லடைவிற் குரவ ராலையே தடையிற்
காளைப் பருவத்துக் காமவெந்தீச்
சூளைப் பட்டுத் துயரே பீளை
வடியக் கண்ணுந் தடிகா லாகத்
தள்ளி நடந்து சாலவு முவந்தோர்
றெள்ளு மூப்பா னிடரே யுள்ளே
யிடும்பைசெய் தொழி லாற்கடும் பிணிநோயாற்
சுற்றத் தவராற் பற்றலர் தம்மான்
மற்று முற்ற தெற்ற விற்று
மாண்டுடல் கழிய வல்வினை யுடன்போய்
மீண்டு மீண்டும் வெவ்வே றுடல
மாயழி வெய்தி யனந்தயோனியி
னீயுறு துயர மறிதி வீயா
வின்பம் வேண்டுதி யாயி னின்ப
வுருவாய் வந்த சொருபா னந்த
னடி யுழுந்துருள் போதிற் கேடி
னுரைகழி யின்ப வுருவுன் தாக்குங்
கரைகழி காதல் கொண்டு
விரகழிந் தடியின் மேல்விழுந் திடினே. (௨௬)

நேரிசைவெண்பா.

விழுந்து கிடவாதார் வேதனைபோ மாறென்
மொழிந்த மறைமுடிவின் முற்று-மழுந்து
துனியார் பவமருந்தாச் சொல்லுஞ் சொருபன்
முனியா வருளுடையான் முன். (௬௰)

கட்டளைக்கலித்துறை.

முன்னம் பிழைத்தது நும்மையம் மொய்கழல் காணவுற்ற,
வன்னம் பிழைக்கச் செலவிட்டி லீர்பின் பகத்ததுவே,
டன்னம் பிழைக்கட்டிச் சாந்தமும் பூசித் தவறுசெய்தீ,
ரின்னம் பிழைக்குஞ் சொருபன்முன் னேசென் றிடப்பெ
றினே. (௬௧)

விருத்தம்.

இடக்கரு துகிலவொ ராக்கை யாய்த்தொழி
லிலக்கறு மெழுவகை யாக்கை யாய்க்கெட
வடக்கரு புலனவை மேற்கொ ளாத்தனை
யலைத்திட வலைதுலை மாற்றி னுய்படுஞ்
சடக்கென வொருதிரு வார்த்தை யாற்றிகழ்
தனைத்தரு சொருபனை யேத்தி னோற்றில
திடர்க்கடன் மூழ்கிடு நாட்டி லார்க்குள
தெனக்கென வொருமனன் வாய்த்த வாய்க்கையே

## அகவற்பா.

வாய்க்க மானுடப் பிறவி யாக்கை
யூறின் றாக வுயர்குலத் துதிக்கப்
பேறுண் டாகப் பெற்று மாறின்
றறனும் பொருளு மின்பமும் வீடு
முறைமையின் மொழிந்த முதுமறை முதல்வன்
வேதப் பொருளை விரித்தரு ளாகம
மோதிய புரான முபபுரா ணங்க
ளிதிகா சங்க ளிவ்வழி வந்த
மதியோ ரமுத மதுர வாக்கா
லோதும் பொருளி னுள்ளம் வைத்துக்
காது நூலிற் கருத்துவையாது
காமங் கொலைபொய் களவறக் கருணை
தூய்மை செவ்வை துணிவூண் சுருக்க
மிரும்பொறை யென்னு மியமமீ ரைந்து
மருந்தவங் கொடைமதி யார்த்தி கமமைப்
பூசை கேள்வி பொருந்திய விரத
மாசி னுண மந்திரஞ் செபமென
வோது நியம மாகுமை யிரண்டுட
னுதனம் பயின்றுவா தசயம் பண்ணி
யிந்தியந் தன்னி னெழுச்சியை மீட்டாங்
கந்தக் கரண மசைவற வொருக்கி
யொருக்கிய விடத்தி னுணர்வினைக் கொண்டு

தாங்கம தறவே சமாதியி னிருந்து
பரவுட லதனைப் பார்த்தங் கழித்துப்
புரண போதமு மொழிபத் திரணமு
மில்லை யாக்கி யாவையுந் தானெனுஞ்
சொல்லு மாறிச் சொருபனன் கழல்கள்
கண்டு கொள்ளுந் தொண்டருட் கூடா
ருண்டியும் புணர்ப்பு முறக்கமும் பயமுங்
குணனும் புழுவி னுணர்வே யாகி
மற்றவைபொருட்டால் வான்பொருளீட்டக்
கற்றவை விற்றுக் கான்பல கடந்தும்
பற்றலர்ப் பணிந்தும் படிறுகள் செய்து
மருந்தின் மந்திரத் தருந்துய ருழந்துங்
குலத்தொழில் புரியாது புலைத்தொழில் செய்தும்
வங்க மேறியும் வல்லிரு ணடந்துந்
துங்க மன்னரைத் தொழுது போற்றியு
மங்கவர் மதிப்ப வாகவத் தேறியுங்
கைநா கத்தின் காலிட் டோடியும்
பைநா கத்தைப் பணிகொண்டு புணர்ந்துஞ்
செல்வர்பிற் சென்று நல்குர வுரைத்துங்
களவும் பொய்யு மளவறப் பயின்று
மெய்யா முயற்சியொடு செய்யாச் செயலிற்
செய்பா தில்லை செய்து மெய்திய
வேது மில்லை யெனினுங்
காதலிற் றணியார் கழிந்துபோ குவரே. (௬௬)

நேரிசைவெண்பா.

போகாது வாராப் பொருளெல்லா மாயல்லா
வாகா தழியாத தாகாதே—யாகா
சொருபனு நாமத்தென் றுன்பந் துடைப்பா
னுருவுமாய் வந்தவொளி. (௩௪)

கட்டளைக்கலித்துறை.

ஒளியார் வளைகலை நாணிழ வாருரு வுந்திரியார்
தெளியாத பித்தென்று செப்பவி ரார்நின்று தேங்கக்கண்
ணீர், குளியா ரினியகொடிய வென் னூர்குர வன்சொருப
னளியா ரலங்க லெளிதோ புனைய வரிவையர்க்கே (௩௫)

விருத்தம்.

அ[illegible]தனளக மிருளும்புய லணிதிரு திலக நுதலம்புலி
யரிமதர் விழிகன் மதனெங்கணை யழகிய வதன மலரம்புயங்
கிரிவம தரிகொ ளணிசங்கிரு கிரியென வுயரிய விருகொங்
கைகள், கிளிமொழி யுருவு திருவென்றயர் கிறிபடு புலவ
ரறிவென்சொல, விரிவுறு சனன மரணஞ்சல மிடர்சுக
மிதனு ளலவுஞ்சட, மெனமொழி பவமெனுவன்கட
லிடையற முழுகி யழிகின்றனர், புரிவுற மனனே யிருவென்
றருள் பொழிவிழி யருவி யிருதன்கழல், புனைதரு சொருப
னருளின்புறு புணரியின் முழுக விதியின்றியே. (௩௬)

## அகவற்பா.

விதிவலி யின்றி மதிவலி யன்றே
யலைகடல் கடைந்த ஞான்று
நிலைபுடை யசைவின் மந்தர மத்தாய்
விசையினிற் றசிகா மெத்தனை யற்றுப்
போகா ததுவே போத மொந்தன
நாகா திபனு நாணு மேவக
விடஞ்சுட வெந்து விருப்புட னுண்ணக்
கடைந்த வவுணர் கையே யடைந்த
திருவு மமிர்துஞ் சிந்தா மணியும்
பரியு மைரா வதமுந் தருவும்
பெற்றவர் பிறர்பிற ரன்றே மற்றை
விதியே விபரீ தத்தா ருறுதி
சொற்றொழி றுனு மறப்பயன் றருமே
காலம் வாசி மகமே ஞாலங்
கொடுத்தது கோவிந் தற்கே கொடுத்த
மாவலி பெற்ற தோவலில் சிறையே
குஞ்சரத் திற்குங் கோளரா விற்கு
மஞ்சிறைப் புட்கும் வெஞ்சிறை யெதனால்
விதியின் வலியா லன்றே யதுவோ
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பது
சூழ்வினை யாளர் துணிவே பேழ்வாய்
ஞமனைத் தப்பல் யார்க்கு மரிதே

வெருவரத் தக்க வொருமூன் று மொழித்தவ
ரொருவரில் லொளி யுலகத் திருவினை
சாய்த்தேம் விதிவலி மாய்த்தே நமன்வாய்
தீர்த்தே மென்ற வொருவன் வார்த்தை
பொய்யல வெனும்வகை கைகண் டனமே
மறைமுடி வெல்லா மறைபுற லரிதென
விமையவ ரேமாப் பெய்தச் சமயத்
துறைதொறுஞ் சுழன்றவர் சுழன்றே சோர
மாரி கோடையில் வான்றுயர் பெருக
நீரின் மூழ்கியு நெருப்பிடை நின்று
மருந்துவ துறந்து மரிய மாதவம்
பொருந்தியும் பொருந்தார் போகப் பெருந்தகை
பெருமை தானே கருணையி னியல்போ
தற்சுதந் தரமோ வெற்செய்த தறியேன்
விடைய மன்றி வேறொன் றறியாக்
கடையரிற் கடைய னாகி முடையார்
புன்சா ருடல மெண்சா ணளவாய்ப்
போகு மென்னை வாவா வென்று
பங்கயக் கண்ணாற் பார்த்தருள் செய்து
செங்கைவைத் தருளியென் சென்னியின் மிசையே
துங்க நற்கழல் சூட்டி யிங்கொரு
மொழிதர ஞான விழியது விழித்த
வெண்ணில் கால மிறந்துபிறந் துழந்த
கண்ணி லென்னைக் காணெனப் பணிய

விதியையுங் காணேன் வினையையுங் காணே
னொதிவிழிக் கூற்றையுங் காணேன் விதமுற
வுருவாய் நின்றவெல்லாஞ்
சொருபானந்தன் றோற்றமா கியதே. (கஎ)

நேரிசை வெண்பா.

தோற்றுவ வெல்லாஞ்சொருபன் சொருபமே
யூற்றமா மண்ணீ ரொளியெங்கே-காற்றெங்கே
வானெங்கே மாலா மனனெங்கே மாமாயை
தானெங்கே யானெங்கே தான். (கஅ)

கட்டளைக்கலித்துறை.

தானே தனைநிக ராகுஞ் சொருபனிற் சங்கையில்லை
யானே யெனைநிக ராவது மேது முணரகில்லேன்
றேனேர் மலர்ப்பதஞ் சூட்டித்தன் னுச்செய்த பின்னு
முன, மூனே வடிவா மிடத்தினும் பேத முணர்ந்தி
லனே. (கசு)

விருத்தம்.

உணர்வ தறுமவ ருணர்வ திலர்தனை யுணர வுரியவர் தாமு
மோ, ருணர்வு முணர்வறு பொருளு மறுதலி னுணர்வ
திலரிவ ருதலா, லணர்கொள் கறையுடை யவனு மரவணை

யவனு மலர்மிசை யோனுநா, மறிய விரகிலெ னரிய சொரு
பன தருமை யறிகில ளாசையாற், கொணரு கிலளிறை
யவனை யெனையெதிர் கொடுசெல் கிலளொரு தாயுமாய்க்
கொடுகி யுயிர்குலை குலைய வலையிடு கொடிய விவளெதிர்
காணவே, புணரும் வகையரு ளுருவு கொளுமிறை புகுது
கிலனென வோதியே, புரளும் விழுமெழு மருவி யிருவிழி
பொழிய விவளொரு பூவையே. (௪௦)

நான்மணிமாலை முற்றிற்று.

# பத்தாவது-கலிப்பா.

## தத்துவ சித்தி.

### நேரிசைவெண்பா.

கிடுவித்தா னெல்லாம் விடாதபடி நின்று
கடுவித்தா ரத்தினிமை காணீர்-முடிவிற்றான்
செய்ததொன்று மில்லை சிவபெருமா னெங்ஙனே
மெய்கலந்து நின்ற விரகு.

### பஃறாழிசைக்கலிப்பா.

திருவாரு மருண்மேகஞ் செழுங்கருணை முகந் தெழுந்தோ
ருருவாயென் சென்னியெனு மொருமலைமா முகடேறி
யிகபரம தறமூடி யானெனதங்கற மூங்கி
யகமிதம தறமின்னி யமலமெனுந் தனுவிளங்கச்
சுருதிகளின் முடிபெவையுந் தூயவரு ளாகமமு
மிருதிபுரா ணதிகளும் விளம்பவின மறிவரிய
பொருவில்பரம் பொருளதெனும் பொற்புடைய மெய்ஞ்
ஞானப், பெருமழைய தொருமொழியிற் பொழிந்துபிர ளய
மதற.

நீங்கார்த மாயையுட னிகளமமத் துவமடிய
வாங்கார மதமான மாமரங்கள் பறித்தெடுத்துக்
கற்பனையும் விரதமுமாங் களிபிளிறச் சுழித்தமுக்கிப்
பற்பலவாஞ் சமயமெனும் பறவையின மிரிந்தகல

வறம்பாவ ஞானமுட னரியவளம் பெருகவினை
திறம்பர்த நனவதனிற் றிகழ்தரவே குதித்தோடி
யிருவினையாங் கரைபுரள வெல்லையற மிகப்பொங்கிக்
கருதருமா மோகமெனுங் கலக்கமறத் தெளிந்தெழுந்து
சரிதையுடன் கிரியைவனந் தானுழக்கி யாதாரங்
கருதுகலை மண்டலமாங் கருமவியோ கதுதொலைத்துப்
பூதவியல் பையைந்தாம் பொழிலழித்து மீதோடி
பேதமற வறுநான்கு மிலங்கிவிளங் கெழிலாரு
நனவதெனு நிலனழித்து நன்கில்கண வதுமருவி
மனமுதலா நான்கினுடன் மகிழ்விடயம் பிராணநதி
நனவெனவே நடித்துவிளை நாடழித்துக் காலோடி
யுனலரிய சுழுத்தியெனு மொப்பரிய நிலம்புகுந்து
திறம்பாத பிராணநதி திகழ்தரமா மாயையினின்
மறந்தேது மறியாத மாநிலனுங் கழித்தோடி
யவ்வியத்த மெனுமடவி யழித்தறிவாந் தனைநோக்கி
மெய்வியத்த மாந்துரிய மிகப்பரந்து விளையாடி
யகநோக்கி னறிவாகுந் தனையன்றி யேதுமின்றிச்
சகநோக்கிற் றுன்கரியாய்ச்சகமதுசாக் கியமாகுங்
கருதரிய காரணபா வங்களெலாங் கழித்துவிளை
பெரியநில னதுவழித்துப் பேசரிய நிலன்மேவி
யறிவறிவா னறிபொருளு மறிவறியா மையுமறவே
யிறுகலதா யிவணமென விளம்பவிர கேதுமிலா
வரியநில னதுவழித்தங் களவறவே தான்மிருத்துத்

தரிசறவேசத்தாதி யுலகழித்துச் சமைங்கெழுந்த
நித்தாதி குணனெனு நிலன்மருவி நினைவரிய
பற்றுகும் பெருங்கடலைப் பழுதறவே தானெக்கி
யாதியுட னந்தமிலா வலைதிரைநீத் தளவிறந்த
போதவெளம் பரந்துபரி பூரணமோங் கியநாடன். (௧)

வேறு.

நாடியிடின் மேலதுவா நாடுபொரு ளாய் முழுதும்
வீடலற மேவியெலாம் வித்தகனு ருருவாகித்
தேடியின மமரர்களுஞ் செழுமறையும் வாடியிட
நாடியெமைச் செய்தவள நவிலுறுமா றறிகிலமே. (௨)

உலகினுட னுயிர்பரமா யுணர்வாயொண் பொறிபுலனு
யலகினவை முழுதுமலா வரிய பிரானுருவாகிக்
குலமறையு மமரர்களுந் தடுமாறக் குவலயத்தே
நிலவியெமைச் செய்தவள நிகழ்த்துறுமா றறிகிலமே (௩)

அறிவானு மறிபொருளு மறிவுமறு மமலமதாஞ்
செறிவாகித் திகழுசிவப் பிரகாச ருருவாகி
மறையோடங் கமரர்கண மலறிமுறை யிடப்புவியிற்
சிறியேமைச் செய்தவளஞ் செப்பிடுமா றறிகிலமே. (௪)

எனவாங்கு-தனிச்சொல்--ஆசிரியச்சுரிதகம்,
அருமறை முழுது மமரர்கள் கணமுங்

தெரிவுற வரிய சிவப்பிரகாச
செல்லையி லருளா னெழிலுரு வாகிக்
கல்லுறு மென்மனங் கனிசெய்து முன்ன
மூனது வடிவா யுழியுழி வந்த
யானெனு நினைவிமைப் பொழுதினினழித்து
முறியா வின்ப முழுமுத லாகி
வறிவாந் தன்னை யையம தறவே
கையுற நெல்லிக் கனியெனக் காட்டிச்
செய்தவிப் பெருநலந் திகழ்த்துத லரிதே. (ரு)

கட்டளைக்கலித்துறை.

இருப்புக்கன் மன்னிய வென்னெஞ்சின் வஞ்சத்திசைந்து நின்று, கருப்பற் றறுத்தென்னை யாண்டவனே கமலத் தயன்மா, றெரிப்பற் கரிய சிவப்பிர காச திருவருளா, லுருப்பெற் றலர்ந்தநின் றெண்மலர்ப் பாதமெனுச்சியதே.

கலிப்பா-முற்றிற்று.

பதினொராவது—

# ஞானவிநோதன்கலம்பகம்,

## தத்துவ ஞானம்.

[நேரிசை வெண்பா.]

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீதில் வந்த பரனே—கொடியேனென்
றெண்ணா விமைப்பளவி னிங்ஙனே வீடளித்த
கண்ணா கடைபோகக் கா.

[மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.]

ஒன்றாயும் பலவாயு முருவாயு மருவாயு
மன்றாயு நின்றானு மறிவேநின் னருளுருவம் (௧)

மணங்கமழுஞ் செங்கமல மலரடிக்கு வடிவுணர்ந்தா
ருணர்ந்ததுவே வடிவாகு முணர்வேநின் னொளியுருவம்

தன்னியல்பு வான்வருந் தாமறியா ராயினுமென்
சென்னியினின் றொழியாத திருவடித்தா மரைமலரே (௨)

சுழலனைய வினைவழியே சுழன்றுசுழன் றிடையோவா
துழலுமெனைப் புகுந்தாள வோருருவம் புனைந்தருளி
யழலனைய விப்பிறப்பி னழுந்தாம லடியேற்குன்
கழலிணையை யளித்தாய்க்குக் கைமாறு காண்கிலமே. (௪)

துரியநிறங் கவர்ந்தொளிருஞ் சொருபானந்தச் சோதி
யரியரனிந் திரன்பிரம னமரருளந் தடுமாறப்

பெரியதொரு பொருளாகப் பேதையே னுளம்புகுந்துன்
னுரியபழ வடியவர்த முடனுள வுவந்தனையே. (ரு)

முப்பொழுது நீயேயாய் நின்றுனு மூர்த்திநினைக்
கொப்பெழுத வொண்ணாத வோங்குசொரு பானந்த
வப்பொழுதைக் கப்பொழுது மாறாத பேரமுதா
யெப்பெழுது மென்னிதயத் திப்படிநீ யிருந்தருளே. (சு)

வேறு.

அறிவிலெ னுளம்வரு மருளினை யயர்வுறும்
பொறிபுலன் மனன்விறல் பொடிபட வருளினை. (எ)

குறுகிய வவர்வினை குலைசெய்த விழியினை
முறுகிய பிறவிகண் முடிவுறு மொழியினை. (அ)

வேறு.

காயமதே யானுகிக் கழிகின்றே னொழியாத
மாயையெலா மறவுலகில் வாராநீ வந்தனையே. (கூ)

முனியேநல் லமரர்கடம் முடிகிடப்பக் கடையான
தனியேனுக் கிரங்கியடித் தாமரைநீ தந்தனையே. (௰)

கரமறியா னிந்திரன்மால் கமலத்தோ னிவர்நிற்பத்
தரமறியா தென்னையுநீ தானுகப் பார்த்தனையே. (௰க

நிலைகுலையத் தோன்றியதெ னீகொண்டவெனதுடலங்
குலைகுலையத் தோன்றியதெ னீயுண்ட வெனதுள்ளம்

ஓங்குவிரி கடற்றிரைபோ லலைகொடியி ருணர்வுன்பா
லோங்குவிரிந் தடங்கவிரிந் தடங்காத வழகினையே.(௰௩

தேவர்க்குந் தேவுநீ தெளிவிற்குந் தெளிவுநீ
மூவர்க்குங் கோவுநீ முற்றுயிர்க்கு மூலநீ. (௰௪)

எப்பொருட்குந் தோற்றநீ யெவ்வுயிர்க்கும் வீடுநீ
மெய்ப்பொருட்கட் டோற்றநீ மெய்யினர்க்கு மெய்
[யனீ. (௰௫)

வானுநீ நிலனுநீ வளியுநீ யொளியுநீ
யூனுநீ யுயிருநீ யுண்மைநீ யின்மைநீ. (௰௬)

தோற்றநீ யிறுதிநீ துன்பநீ யின்பநீ
மாற்றநீ மனனநீ மற்றுநீ முற்றுநீ. (௰௭)

எனவாங்கு—தனிச்சொல்.

உருவாயிந்த வுலகுயவந்த-சொருபானந்தனைப் பரவுதும்,
வருபா சங்களை மாற்று வோனெனவே. (௧)

நேரிசைவெண்பா.

எனதே பிறவித் துயரென தேயெந்தன்
மனதே யலமாக்க வற்றுந்-தனையேதா

னன்னோ னருள்சொருபா னந்த னனைத்தினுக்கு
முன்னோ னெழுந்தருளா முன். (௨)

கட்டளைக்கலித்துறை.

முன்னே நடுவே முடிவே முடியா வருள்சுரந்த
வன்னே பரிந்தெனை யாண்டவ னேயழி வின்றியசெம்
பொன்னே புகழ்சொரு பானந்த னேபுலை யேனளவே
யின்னே யருளியவா றெம்பிரான தியல்புகளே. (௩)

விருத்தம்.

புகழ்பெறு வேதந்தான் புகலறி யாதென்று
லிகழ்வுறும் யானின்று ளிணைபுகழ் வானுண்டே
நிகழவெ றுநின்றே நினையுரை யாநின்றாய்
திகழ்சொரு பானந்தா சிரமிசை மேனின்றே. (௪)

வேறு.

மேனின்ற வானவர்க டாநின்று தேடுவதும்
வேறொன்ற தாகுமெனு மாறொன்றி லாதருவு
மூனின்றெ றுவினிடை வார்சென்று தீர்வதுவு
மோர்வொன்றி லாதவடி யேனின்று சூடுவதும்
வானின்ற வூதைகன னீர்மண்க ளூடுருவி
வாழ்சந்திர சூரியர்கள் காலங்கள் சூழ்திசைக
டானன்றி மேவுபர மானந்த மாகமறை
தானின்று கூறுசொரு பானந்தர் தாளிணையே. (௫)

வேறு.

இளையராய் வந்து புகுந்தெனதாருயிர்ப்
புளையாருஞ்சொருபானந்தர் பொன்னடி
யளையாநின்றகல் வார்களுக் கார்கொலோ
துளையாய் நின்றிடுவார்துய ரன்றியே. (௬)

வேறு.

அன்றிய பிறவிகளாறும்வகை யுறவினொ
டகமெனக மிகநாளுந்
துன்றிய மலர்கொடு முனிவர்நின் மலரடி
தொடர்சொரு பானந்தா
வொன்றிய மலரடி யிணையென் றலைமிசை
யுறவெவ் று முனர்வாய்வே
றின்றிய படியதி சயமதி சயமினி
யென்செய வியலாதே. (௭)

வேறு.

இயலுமிசை களும்விரகு படநின்றோதி
யீதலறி யாதவரைக் காதலோடும்
புயலுமிகு சுரதருவு நிதியுமென்று
போய்ப்புகழ்ந்து திரிகுவமோ பொய்யு மெய்யு
மயலுமுற வுகளுமறுஞ் சொருபானந்தர்க்
கடிமைசெய்து முடியாத கொடியமாய

மயலுமற வியுநினைவு மறுமானந்த
வடிவினொடு நிலமிசையின் வாழுவோமே. (அ)

வேறு.

வாழு கின்றனர்கள் போலிந்த மானுடவர்
மாளு கின்றனர்கள் பூதங்கள் பானுமதி
சூழு கின்றதிசை காலங்கள் யாதுமறு
சோதி யெங்கள்சொரு பானந்தர் பாதமலர்
தாழு கின்றிலர்க ணீள்பந்த பாசவினை
தாயர் தந்தைமனை யாண்மைந்த ராபதனுள்
வீழு கின்றனர்கள் கேடொன்றி லாதபர
வீடு சென்றுபுகு வா ரென்றுதா னிவர்களே (௯)

நேரிசைவெண்பா.

தானிவ் வுலகி னுருவாகித் தன்னடியே
னானில் வருமா றொழித்ததே-மேனி
நினைந்ததுவே யாகி நிகழ்சொருபா னந்தன்
புனைந்தவிணைப் பாதாம் புயம். (௰)

வேறு-விருத்தம்.

புயமேகுன்றமு நுமதீகை புயலே யென்று புலவீர்காள்
கயமேயன்றி நயவாரைக் கவிநீர் பாட றவிரீரே
துயர்மே லின்றி யிடமேவுஞ் சொருபா னந்த வெளின்ஞான
மயமே யுங்கள் வடிவாகி மறுகால் வந்து பிறவீரே. (௧௧)

வேறு.

பிறவியா லுள பேறிது காணும்வந்
திறுக வேதமு வீரொனை யும்முட
னுறவு கூறவெ னுள்வரு மாதர
வறிகி லீர்சொரு பானந்த நாதரே. (௭௨)

வேறு.

நாதனை யென்சொரு பானந்தனை யென்றலைசேர்
பாதனை யோர்வுறுவார் பாலனை யோகியநால்
வேதனை வேதனைநோய் தீர்வுற மெய்பணிவார்
சேதன மன்றவர்கஞ் சிந்தைவெ றுந்திணியே. (௭௩)

வேறு.

திணியமுரு டாயொன்றை யறிவிலனு ளேவந்து
செறியநினை யாவின்பமே
யணிகொளரு ளாகங்கொ டவனிதனி லேவந்த
வரியசொரு பானந்தனார்
பணிகொள்பர மானந்த பதமொழிய வேறிங்கோர்
பதநினைவர் நீள்சிந்தைநோய்
தணியவிரு பாதங்க டலைமிசையி லேதந்த
தகைவைநினை யாவந்தரே. (௭௪)

வேறு.

வந்தவரலா றென்றுமறியாய்
மண்டுபுலனர் கொண்டுசெலவே

பந்தநெறியே சென்று மனமே
 பங்கமுறநீ மங்கியழியா
தெந்தைபெருமா னின்பவடிவாய்
 நின்றசொருபா னந்தனிருதாள்
சிந்தைமயலால் வந்தபவநோய்
 சிந்தும்வகைநீ சென்றுசெறியே. (௩௫)

வேறு-புயவகுப்பு.

செறிவுறு மடியார் சிந்தைசெ றிந்தன
 சினமுடன் மதமா னங்கள்க ளைந்தன
செயமக டிருநா மங்கைபொ ருந்தின
 திசையொரு பதுசூழ் நின்றுபொ திந்தன
விறவறு பரமா னந்தம்வி ளைந்தன
 வெனதித யமெலா முண்டுமகிழ்ந்தன
விகபர மெனவே றின்றியி சைந்தன
 விதுவெனி னதுதா னன்றியொ ழிந்தன
பிறிவறு பொருடா னின்றுநி றைந்தன
 பிரமனொ டரன்மா லென்றுப குந்தன
பெருமறை பலவா நின்றுபு கழ்ந்தன
 பிறவியி னதுவே ரின்று பிடுங்கின
வறிவயர் வெனலா யன்றியிருந்தன
 வகமித மெனுமால் பொன்றவ ணைந்தன
வதிசய மிகுமா றெங்குமு றைந்தன
 வழகிய சொருபா னந்தர்பு யங்களே. (௩௬)

வேறு—நற்றாயிரங்கல்.

புயபட்பொருந்தநடுவேநின்று நீமகள்
புலம்பலொன்றுமறியாயன்று காண்வர
தியம்பகன்பிரமன் மாலன்று தேடிய
திறங்கடந்தசொருபானந்தர் காணவர்
வயம்புகுந்தவர லாறன்பர் பாலருள்
வருந்துகின்றதொழிவாயின்று நாளையு
மியம்புகின்றவெழில் வேதங்கள் தானுணர்
விறந்துநின்றவுணர் வேயென்று மேனியே. (௫)

மேனிவெறுமறிவேயென்றதேயென
வேதமொழிவுறு மேநின்றுதேடுநர்
வானிலிமைபவ ரேகண்டு நாமிக
வாழநிலமிசையேவந்து தாழ்பவ
ருனில் வருபவ நோயின்றியேயிட
வோர்சொல்மொழிகுவ ரேபந்த நீள்வினை
யானிசெயுமவரேயின்பமேயரு
ளாகினவர்சொருபானந்த நாதரே. (௫௮)

வேறு.

தரையதன் மேல்வந்தே தலையதன் மேலுன்று
டுரையற நீதந்தே சுடர்சொரு பானந்தா
புரையற வேநின்றாய் புலனறியாவொன்றே
யுரையுணர் வாலொன்று முணர்வறியாயின்றே. (௫௬)

வேறு.

இன்றுளே னின்றிலே னெனத் தோற்றற
நின்றுளே னழி யாவகை நேயமோ
டின்றுளே சொரு பானந்தர் வாய்மொழி
யொன்றுளே பர மானந்த லோகமே. (உ0)

வேறு.

கமையால் வந்த துறவான் முந்து
கலைபா லொன்று மனநூலோ
ரமைவால் விஞ்சு மறிவா லெந்தை
யருடா னின்றி விடினுகா
தெமையாள் கின்ற சொருபா னந்த
னிருபா தங்க டரிலோர்கா
லிமையா தொன்றில் விழியா தென்று
மிறவா வொன்றை யுறவாமே. (உக)

கட்டளைக்கலித்துறை.

உறவே யுயிர்கட் குயிரே யொருபற்று மற்றுநின்ற
துறவே சுடர்ச்சொரு பானந்த னேதுயர் தீரக்கண்ட
திறவே யழிவு படாச்செல்வ மேயென்றுந் தித்திக்கின்ற
நறவே சிறியே னுரைப்பதெவ் வாறுனை ஞாலத்திலே (உ௨)

நேரிசைவெண்பா.

ஞாலம் புகுந்தருளி நாயேனை யாட்கொண்ட
சீலம் புகழுமா செய்கண்டாய்—கோலங்கொண்
டாண்டானை மாறா வருட்சொருபா னந்தனை
வேண்டா வடிபேற்கு வேறு. (உரு)

அம்மானை-மடக்கு.

வேறொன்றெ னுமந்த வேறெங்கே யம்மானை
வேறொன்று மில்லை வெறுமறிவே யம்மானை
பேறென்ப திப்படியே பேறன்றோ வம்மானை
பேரின்பம் பேசும் வகையென்னோ வம்மானை
கூறுஞ் சுருதிகளின் கூறெங்கே யம்மானை
கூறுமற் கூறியவா கொண்டாடா யம்மானை
யாறுந் திறந்தான்வந் தேறுங்கா ணம்மானை
யண்ணல்சொரு பானந்த னம்பொற்றா ளம்மானை. ()

வேறு-விருத்தம்.

மானு குங்கயல் விழியா ரின்றன
மயிலா மிங்கிவ ரியலுனுந்
தேனு ருங்குழல் முகிலா நன்றிசெய்
திருவா மிங்கிவ ருருநேரே
பானு றுங்குழல் மொழியா மென்றிடர்
படுவார் தம்மொடு தடுமாறற்

கொனு ரன்பொடு சொருபா னந்தர்த
மிருபா தந்தொழு திடுவேனே. (௨௫)

வேறு.

இடுவா ராரென்றேசறு கின்று ரிப்போதிந்
கெடுவார் மேலுங் கிடம ரிக்குங் கெற்பத்தார்
நடுவா நின்று னஞ்சொருபானந் தன்றனிற்
படுவா ரல்லா ரின்னமு மீதோ படுவாரே. (௨௬)

வேறு.

வாராய்வரு வாபொருமா னுட ஞகி யென்னு
நீராயுரு கெஞ்சினு மிங்கிவ ணைக்குநெக்குச்
சோராவெழு மென்சொரு பானந்தச் சோதியென்னும்
பேராயிரத் தாணைநி னைந்திவள் பெற்ற பேறே. (௨௭)

வேறு.

பெறுவ தினியொரு பேறென்கொ லோவரு
பிறவி யறுமிதின் ஞாலந்தன் மேனனி
செறிவ தினியுற வேதின்ப வார்கடல்
செறிய வருள்சொரு பானந்தர் தாளல
துறுவ தினியெது வேறன்பி னுனக
முருகு மடியவ ரோடொன்றி வாழ்தலி
னறிவ தினியெது வோவொன்று வேறற
வடைய நமதுரு வாய்நின்ற தாகிலே. (௨௮)

வேறு,

நின்றுநிலை யாதும்பர் வாழ்வங்கு நேரா
நெஞ்சுகுலையாநின்று வாழிம்பர் வாழ்வோ
வின்றுநிலை யாகின்ற வாழ்வென் றிராதே
யென்றுமுள்ளர் போலிங்கு வாழ்கின்று ளீர்கா
ளொன்றுநிலை யாதென்றி ரீரெங்கு மாய்வே
றென்று மிலதாவொன்று மாயன்று மாயே
யென்றுநிலை யாவின்ப மாகின்ற தாநீ
ரெந்தைசொரு பானந்தர் பாதந்தொ ழீரே. (உக)

வேறு-தலைவியிரங்கல்.

தொழுவார் வினைதீர்த் தருளுஞ் சொருபா னந்தன்றோ
டழுவா வென்முன் றுயினுநீவெந் தழலாயே
யெழுவா யோதண்மதியே யென்னே யென்னேபோய்
விழுவார் மேலே தடிகொடு சென்றாய் வேண்டாதே, (௩௨)

வேறு.

வேண் டாதெனெஞ்சமடி யாருட னன்றிமேவத்
தீண் டாதுசென் னியிறை சேவடி யன்றியென்னைத்
தூண் டாவிலங் குசொரு பானந்தச் சோதியென்னை
யாண் டானையன் றியுரை யாடவ றிந்திராதே. (௩௪)

வேறு.

இரவுபக லுயிர்கழியு மாகண்டு வானவர்க
ளரியனைய பிறவியதி லேநின்று மானு மெம்ம

தெளிதரவு கெடவினிய பாதங்க ணீயருளி
யிதுவதென வொருசொல்மொழி யாயென்றுதாழு
முரியபழ வடியர்வெளி யேகண்டு வாழ்வதுவு [வது
முலகரொரு வருமறியு மாறின்றி மாளுவது
முபநிடத மடையுநெறி யேநின்று பாடுவது
முருவொடரு வலதொர்பொரு ளாமென்று கூறுவது
நிரதிசய பரமசுக மேயென்று நாடுவது
நினையவுரி யவர்கள்பிற வாரென்று பேசுவது
நிகழ்வடிவு கருணையென வேயென்று மோதுவது
நிறைவுகுறைவறுமமிர்த மாயன்பர் மூழ்குவது
மரனொடரி யயனமரர் கோனின்று தேடுவது
மகிலபுவ னமுமுடைய கோனென்று பேணுவது
மறுசமய விததிபல வாதங்கொ டாடுவது
மறிவிலெனுள் புகுதுசொரு பாநந்த நாதனையே ()
தனையாருந்தெரி யாதென்று
தடுமாறும்படி தானென்று
நினையாதிங்குரு வாய்வந்து
நெறிதானென்றறி யாவன்பி
னெனையாளுஞ்சொரு பானந்த
னிருபா தந்தலை மேல்கொண்டு
புனையா வந்தக மேநின்று
புலையாடும்புல னமஞ்சே. (௩௩)

வேறு—ஊசல்.

அச்சமறுத் தாண்டானென் றாடாமோ வூச
லாண்டருளுந் திறம்பாடி யாடாமோ வூசல்

மெச்சியவன் கழல்பரவி யாடாமோ வூசல்
வெறுமறிவே யாநேமென் றுடாமோ வூச
விச்சகத்தே மெய்ச்சொருபா னந்தனெனத் தோன்றி
யின்பவெள்ளத் தழுத்திடவென்னையுமாட் கொ
பிச்சனென வும்பாடி யாடாமோ வூசல் [ண்ட
பெருங்கருணைப் பெருமானென் றுடாமோ வூசல்()

விருத்தம்.

ஊச லாடுமிவ் வுடலுயி ரிதுதனை
யொருபொழு தொழியாதே
பூச லாடிடு பொறிபுலன் மனனெடு
புணர்வுறு குணன்முற்றுந்
தேச லாதன சிதைவகை யுருவொடு
திகழ்சொரு பானந்தா
பேச லாமள வலவென துளம்வரு
பெருகிய வருடானே. (௩௫)

கட்டளைக்கலித்துறை

தானே வணங்குமென் சென்னியென் னாவுனைச் சாற்று
தொறு, மூனே யுருகு முரோமஞ் சிலிர்க்கு முகுமென்
கண்ணீர், நானேது மொன்று மறிகின்றிலேன்வெறு ஞான
கனத், தேனே யருட்சொருபானந்த நீதந்த செல்வினையே.

வேறு-விருத்தம்.

வினைவளை கழன்று புனைகலை குலைந்து
விழியருவி நின்று சொரியவே
நினைவுபிறி தின்றி நிசிபகல தின்றி
நினையநிகழ் கின்ற சொருபர்தோள்
வினைவளை கழன்று புனைகலை குலைந்து
விழியருவி நின்று சொரியவே
நினைவு பிறி தின்றி நிசிபகல தின்றி
நினையுமயி லென்று புணர்வதே. (௧௭)

மடக்கு-விருத்தம்.

புண்ணி யம்மவன் கொண்டதொ ராகமே
போத மேசொரு பானந்த ராகமே
யண்ணி யன்னதி தூரத்த னல்லனே
யன்ப ரானவர்க் கேயத்த னல்லனே
மண்ணி யங்குகா றீநீர் வானுமாய்
வைத்த ளித்து மறைத்திடு வானுமாய்ப்
பண்ணி யும்மழித் தும்விளை யாடுமே
பழைய நான்மறை யேயுரை யாடுமே. (௧௮)

அகவற்பா.

உரைசெய் மனனே யுரைசெய் மனனே
கரையி லாசைக் கடலிடைப் பட்டுக்
கலங்கித் திரையின் மலங்கியலைத் தலைந்து

பஃறெடு நாளாற் பாரிடை விசும்பிடை
மன்னுப யாவினும் வந்துழி வந்துழி
யோரோ ருருவி னுடலெடுத் தழிந்தது
பாரே ழுன்றே பழுவென்பு பகரி
னட்ட கிரியி னெட்டடுக் குடைத்தே
குழவியிற் பருகிய செழுமுலைப் பாலிவ்
வெழுகட லதனி னெழுமைய தன்றே
மலர்தலை யுலகிற் பலபல மாக்கட்குத்
தாயென வீன்றுந் தந்தையென வளித்துஞ்
சேயெனப் பிறந்துந் தெவ்வரெனப் பகைத்துங்
கணவரெனப் புணர்ந்துந் துணைவரெனச் செறிந்து
மோரோர் யோனியி னுற்றதும் பிரிந்ததும்
பாரேழ் சூழ்கடற் படுதிரை தொகுத்த
நுண்மணற் பகரினு மெண்வகை யரிதே
யிவ்வகை பிறந்திறந் திளைபுழி யவ்வயின்
கூடிய பொருள்களை நாடுவ தரிதே
கல்வியிற் கழறிய தெல்லைய தில்லையே
மறுமை யன்றி மற்றவை யனைத்தும்
பிறிது நீயே யறிதி யன்றே
யன்ன தன்மையை யறிந்து மின்னு
மென்ன தியானென் றிசைந்து நாணு
வடிவு மெழிலும் வனப்புறு கல்வியுங்
குடியுந் திருவொடு குலனு மிடுவதோர்

நாமமுஞ் சுமந்து நமபிற வென்று
சாமள வுஞ்சழக் குரைத்துப் போமிது
தன்னு னிந்தப் பன்னெடுங் கால
மென்னீ பெற்றனை யியம்பே யன்னே
பயனில செய்து கழியா தயனர
னிந்திர னெடுமா லின்னமு நிற்பச்
சிந்துரச் சேவடி யந்தரத் தின்றித்
தீண்டவிப் புவியிற் சீரடி யார்களை
யாண்டுகொண் டருளவோ ரந்தண னாகி
வந்தருள் சொருபா னந்தனைச்
சிந்தை செய் யிடருறு பந்தவீ டறவே. (ருக)

வேறு விருத்தம்

அறையாநின் றிடுஞ்சுருதி யறையுமாறு
மறிவோமென் றறைபவர்க ளறியுமாறுஞ்
சிறையாகும் பிறவிசிறை செய்யுமாறுஞ்
சிலையாகுஞ் சிந்தைசிலை யாகுமாறு
மறையாநின் றிடுமாயை மறைக்குமாறு
மதியாலன் றுருகுமென வகுக்கப் பட்ட
துறையாறும் படுமாறு மறியலாகுஞ்
சொருபானந் தன்றிருத்தாள் சூடுனோன்றே. (சு0)

வேறு

ஞான்றவா ளருவி யிருவிழி சொரிய

நானெனை யேயதி சயிப்ப
வான்றன்மே லமரர் வியப்புற மண்ணோர்
மத்தனுன் மத்தனென் றுரைப்பத்
தோன்றநீ வந்திங் கென்னையாண் டவனே
சொருபானந் தச்சுடர்ச் சோதி
சான்றதாய் நின்ற வுருவமே தாராய்
தமியனேன் மருளடுந் தாளே (சக)

வேறு

மருளால்வன் றறியேனன் றீறியேனு மதனன்
மதனுரைங் கணையானன் கணையாநெஞ் சுருளச்
சுருளாரங் குழலார்சொற் குழலார்நஞ் சுழலச்
சுழலாற்றிற் சுழலாறிற் சுழல்வேனோர் பொருளாப்
பொருளாமென் றருணும் பருநாடும் புகலைப்
புகல்வாரெஞ் சொருபானந் தன்னென்றென் றருளா
னருளான்மெய் யன்பான்மெய் யன்பாலே யற்று
ரற்றார்வே தனையேதும் பெற்றார்வே தனையே. (சஉ)

வேறு.

வேத நாயக னெனு மேவிய
நாத னர்சொரு பானந்தர் நாண்மலர்ப்
பாத மேதுதி யாய்கெடும் பல்பிறப்
போத வேலை யொலிதரு மோசையே. (சங)

வேறு.

ஓசை தந்தமித நாவந்த தோவா
　　தோதி யொன்றுபல வாமென்று வேறு
பேசு நுங்களள வேயெங்கள் வானோர்
　　பேணு கின்றசொரு பானந்த னார்தாள்
வாச கங்கண்மன னேடுங்கள் வாணாள்
　　மாளு மெங்களுட னேயின் றடாநீர்
பூச லென்றுவரு போதங்கள் கூர்வாள்
　　போதம் வந்தவழி யேயின்று போமே. (௪௪)

வேறு

இன்றவா விதுவாக யானேயா னுகவினி
யென்செயலோ விவையாக விமைப்பளவு மொன்றி
னின்றவா நில்லாத நெஞ்செனக்கு நெஞ்சா
நினைவரிதா யிதுவெனவோ நெறியுமதற் கின்றி
யன்றுவா னவர்களரு மறையினுடன் றேடற்
கரியவொரு பொருளாகு மப்பொருளை யானுஞ்சென்
றென்றுவானெறியுண்டோ சொருபானந் தச்சோதி
யுடையதிரு வுளத்தினரு ளுண்டாயினுண்டே. (௪௫)

வேறு

உண்டுமில் லையுமதாகி யுருவுமிங் கருவுமாகிப்
பண்டொடின் றடையவாகிப் பலவொடொன் றாகித்தானே
கொண்டகொண் டளவ தாகிக் குறிக்கொணாத் திறத்ததாகி

யண்டனென் சொருபா னந்த னடியிணை யலர்ந்தவாறே.

கட்டளைக்கலித்துறை.

அலரா யினசெய்பு மைம்புலன் காண்ட மறுவகையாங்
கலர்காள் பலகுணங் காண்டலங் காள்கர ணங்களென்னும்
பலர்கா ளருட்சொரு பானந்த னூர்பவ ளத்திருவாய்
மலரா தளவுமன் றேவெங்க ளேசடுங்கள் வாழ்வுகளே. ( )

வேறு—விருத்தம்.

வாழும் பதநீ சங்கரன் மால்பூ
வாழ்கின் றவனீ யும்பர்கள் கோனீ
சூழுந் திசைநீ காலமு நீமா
ஞாலங் களுநீ நேர்மையு நீயே
வீழும் பவநீ வீடது நீயான்
மேவுஞ்சொருபா னந்தவெ னெஞ்சந்
தாழும் மிறைநீ யெந்துணை நீயெந்
தாயென் பவனீ தந்தையு நீயே. (௪௮)

வேறு.

தந்தையொடு தாய்மைந்தர் முன்பினுடன் வந்தார்
தாரமொடு பேரர்மிகு கூருமுற வாகும்
பந்தமென வேவந்த தொந்தமிவை யொன்றிற்
பட்டதல காணுமிவை விட்டுவிடுநோ
வந்தமுத லின்றியென் றுமுள தானே
யண்டமுத லாயன்றி நின்றபொரு ளுமா

விந்தவுல கேவந்து தந்தருளுமாறு
தெந்தைசொரு பானந்த னென்று மொழியீரே. ()

வேறு

மொழிகிலீர் சொருபா னந்தர்
மெய்கழல் வெய்ய வாழ்க்கை
கழிகிலீ ரிரங்கி யாளுங்
கருணையை நினைந்து கண்ணீர்
பொழிகிலீர் புலவீர் பொய்யே
பொருளலா தவரைப் போற்ற
லொழிகிலீ ரவமே யுங்க
ளுரையெலா முகுத்தீ ரன்றே. (ருய)

வேறு-குறம்

குத்திரம தாவுலகர் பிச்சையிட வென்றுசில
கூறியருள் வேறுபடுமக்
குறத்தியல ஞபகர் திறத்தின்வழு வாதவருள்
கூறுமவள் வேறுநினைவா
பித்தனைவி டாய்நினைவை விட்டுநினை யாயறி
விறந்திடவி ருந்தபடிபா
ரெங்குமறி வேயினிய கம்புறமி றந்திட
விருந்துவி டிருந்தபடியே
சுத்தமறை யோதவறி யாதபொரு டன்னைவெளி
சொன்னபடி யுன்னிநமையா

மெய்யசொரு பானந்தர் செய்யகழ லோதொரு
துவட்சியுள சொல்லிவிடவோ
வெத்தியென்னை யாளுடைய நாயகனு மென்பணி
யிசைந்துகொளு மோவெனுமதே
யெப்படிசி னேந்தனைகொ லப்படிய தாகுமிதி
லேதமொரு பேராதுமிலதே. (௫௧)

வேறு.

இலதுளி திகபர மிதமக மிருள் வெளி
யிழிவுயர் வெனுமெல்லா
மலதல வவையல வறிவல வயர்வல
வமரரு மறிவானோர்
வலதில தருள்வடி வொடுவரி னல்தெனுள்
வருசொரு பானந்த
னலதிரு வுருவின தெனுமொழி பனுவல்க
ளுடுதல் கூடாதே. (௫௨)

வேறு.

கூடாதே யவனடியார் குழாத்தையவன் குரைகழற்றுள்
சூடாதே யெனையாண்ட சொருபானந் தச்சுடரைப்
பாடாதே யவன்றந்த பரமானந் தக்கடல்புக்
காடாதே யிங்கெடுநா ளென்செய்தே னேனேனே. (௫௩)

வேறு.

ஆனே னதுநா னென்றிங் கோது மளவேயா

முனே வடிவா மவரோ டுழலா வகைநெஞ்சே
தானே சொருபா னந்தன் கமலத் தாள்வந்தன்
பானேர் படமா தவமென் செய்தாய் பகராயே. (௫௪)

கட்டளைக்கலித்துறை

[மறைச்
பகராநின் றேனெவர்க் குஞ்சொரு பானந்தர் பண்டை
சிகரா லயத்துமென் சென்னியு மன்னுஞ் செழுங்கமலச்
சுகரா சியைநினைந் தேத்தித் தொழுமினுந் தொல்பிறவி
மகரா லயத்தை வறளாக்க நல்ல மருந்திதுவே. (௫௫)

நேரிசைவெண்பா.

மருந்தா மவன்பெயரை வாழ்த்துகிலே மின்பந்
தருந்தா ளிணைசாரேஞ் சார—விருந்து
மொருபாச மில்லை முணர்விலேம் யாமா
சொருபானந் தன்கழற்குத் தொண்டு. (௫௬)

விருத்தம்=மேகவிடுதூது.

தொண்டர் வாழ்சொரு பானந்த னார்பதங்
கண்ட நாண்முதல் கண்களு நீர்நிலாப்
பண்டை யாளல னென்றுபல் காலமாக்
கொண்டல் காள்மொழி யீர்கொடி யேனையே. (௫௭)

ஷை வேறு

கொடியவினை யான்மங்கை மார்குழ றுமொழியேகொண்டுநீ

முடிபவிசு னேநின்று பேசுய் முறிகைமதி கேடின் றிபா
யடியர்பவ நோய்மங்க வே யருளுசொரு பானந்த ஞர்
படியின்மிசை யேவந் ததாள் பணிய நினையாய்நெஞ் சமே.

வேறு

நெஞ்சமறியத் தன்வடிவை நிகழ்த்தி நெடுநா ளுடனுய
துஞ்சல் பிறத்த லறச்செய்த சொருபா னந்தர் துணையடி
போல், வஞ்ச மறுக்க வற்றோயோ மணமுண் டாயோ மதி
யாதே, கஞ்ச மலர்கொண் டுவமிக்கக் கருதிற் றென்னே
கற்றவரே. (ருசு)

வேறு.

கற்றவர்க ளர்வாருங் கருத்துடைய ராவாருங்
கருதிற் றெல்லாம்
பெற்றவர்க ளாவாரும் பிறந்தவர்க ளாவாரும்
பீடு சேர்ந்த
நற்றவர்களாவாரு ஞானிகடா மாவாரு
நன்மையெல்லாந்
துற்றவர்க ளாவாருஞ் சொருபானந் தர்க்கடிமைத்
தொழில்செய்வாரே. (கூ0)

வேறு

தொழிலவ ரடியிணை தொழலா வென்றன

சொலவவர் திறன் வரு துதியா லென்றலை
விழிலவ ரடியா ரடியார் பங்கய
விரைமல ரடியிணை மிசைபா வன்புகொ
டழினவர் பிறவிக ளறவே தன திரு
வருளொரு வடிவுகொள் சொருபா னந்த
மெழில்புரை திருவுரு விதுவே யன்றியொ
ரிகபர மிதமக மிலதாய் நின்றதே. (௬௧)

வேறு.

நின்றதடி யார்தங்க ணெஞ்சினிடை யேவஞ்ச
நெஞ்சமுடை யார்கள் விரகே
வென்றதடி யாரன்ப ரன்பரடி யார்தங்கள்
வெம்பிறவி யான பகையே
கொன்றதகல் வானன்றி நின்றுதடு மாறவருள்
கொண்டுவிளை யாடி யிசைபா
வென்றதனை யேயிங்கெ னெந்தை சொரு பானந்த
னின்பவிரு பாதங்களே. (௬௨)

கொச்சகம்

பாதந் தலையிற் பதித்தென் பவங்களைந்த
நாதன் பரன்சொருபா னந்தன் பரங்கருணை
கேதங் கெடச்செவியாற் கேட்குந் தொறுமென்னு
வோதுந் தொறுமுருகி நீரா வுகுமுனே. (௬௩)

விருத்தம்-வண்டுவிடு தூது

ஊன்வரு பெருநோய் தான்விட விறைபா

னுகுதரு மன்பாய் மிகுதவ முறவே
வான்வரு மிமையோர் கான்வர நிலனே
வந்தருள் சொருபா னந்தர்த மலர்சேர்
தேன்வரு மிருதா ளிணைமல ரென்றன்
சென்னியின் மிசையே யின்னமு மொருகா
ருன்வரும் வகைபோய் நீபணி யாயே
சரிகுழல் வண்டே வரிகழல் கண்டே. (௯௪)

வேறு.

கண்டே சொருபா னந்தன் பாதங் காணார்போல்
விண்டே யுழல்வேன் மெய்யே யடியார் போலன்பு
கொண்டே னெனவுங் கூறுநின்றே னென்னைப்போ
லுண்டே யுடையா ளெடுகை தவமிங் குடையாரே (௯௫)

வேறு.

உடையா னெனவுவந்த சொருபா னந்த
னுருவாவந் திருக்கவவன் றிருவா சற்கோர்
தடையான தற்றிருக்க வழிவொன் றில்லாத்
தானாகத் தனையடைவார்க் கருளா நின்ற
கொடையான தவனடியா ரடியே யாகக்
கூடுவ்தும் பாடுவ்துங் குவல யத்தோர்
கிடையாது கிடைத்திருக்க வவமே தாம்போய்க்
கெடுகின்று ரலமாக்கப் படுகின் றாரே (௯௬)

நேரிசைவெண்பா

படக்கடவ தெத்தனையும் பட்டேனிக் கட்ட
விடக்கொழியும் வண்ணம் விளம்பாய்-கடற்கருணை
மாமலையா யாள வருசொருபா னந்தாவென்
றீயனையாஞ் சிந்தைநோய் தீர். (௬௭)

விருத்தம்

தீர்த்த மாவதுஞ் செய்தவ மாவது
மார்த்த மாவது மர்ச்சனை யாவதுஞ்
சோத்த மாவது மென்சொரு பானந்தர்
வார்த்தை கேட்கை மதியே மதிக்கொளே.

வேறு.

மதிக்கைமதி கேடென் றிரீர் மலப்பொதியை நீரென்றுநீ
ருதித்துமரி யாநின்ற நோ யொழிக்கநினை யாதின்றிலீர்
கதிக்குநெறி யேதென்பி ரேல்,கருத்தின்மிகு நேயங்கொடே
துதித்தபொழு தேசிந்தைநோய் துடைப்பர்சொரு பானந்
தரே (௬௮)

வேறு

பானந்திய சுவையோசொரு பானந்தன தின்பந்
தானொன்றிய திருசேவடி தருமின்சுவை மதுரத்
தேனொன்றிய சுவையோதிரை யமிர்தந்தரு சுவையோ
ஞானந்தரு சுவையோவெது நாடும்பெரு நலனே (௭0)

கட்டளைக்கலித்துறை

நலனுகுவதுநன் ஞானமதாவது நன்மைமிகுங் [ட
குலனுகுவதுங் குரம்பைகொண் டாரிவர் கொண்டுகொண்
பலனுகுவதும் பணிதந்து செய்த றணித்தனெஞ்ச
மலனு வருசொரு பானந்த நாதர்நல் லன் பருக்கே (எக)

விருத்தம்-சித்து

பருதியு மதியு மெனுமிவை விததி
படுபூதங்க ளுற்ற வாருயிர்
பலபல வுலகம் விரவிய பிரமன்
முதலாவந் துதித்த யோனிகள்
பகர்வுறு திசைக ணிசிபகன் முதல
வருகா லங்கண் முற்றும் வேறொரு
பரமற வெமது வடிவென வருளி
விளையாட் டென்று விட்ட தேசுறு
சுருதியின் முடிவு மறைவுற வரிய
சொருபானந்த னித்த மாகிய
துணையடி தொழுது துதிசெய்து மிகவு
மருச்சி யாகின்ற சித்த ரேமணி
துளவ னுடைய னரன ருளிய
பதமாகின்ற குத்திர வாழ்வுகள்
சுகமல திரிய வரும்வழி பழைய
குருடே நன்று னிட்ட மேதுரை
கருதிய தருது மழிவரு பொழுது

மிலதா கின்ற சித்தி யேபல
கலைகளி னலையி னலவது வினவி
யெனையாள் கின்ற வத்த னாருள்
கழலிணை தொழுது வழிபட வவர்த
மருளால் வந்த வித்தை காண்வரு
கருவறு குளிகை யிதுமுன மொருவர்
கிடையா தென்று கிட்டி னும்மிக
வரிதிது பரம குருவரு ளுடைய
பரமா னந்த சித்தனு யிரு
வருபர னமரு மழகிய கருணை
யிதன்மூ லங்க ளொப்பி லாதவ
னதிரச முடைய வடியவர் திறனை
மிகவே கண்டு திருஷ்டினை யாலவ
ரருளிய வமிர்த கிருதகுள சகித
மயில்வே மென்று மிட்ட மாகவே (எஉ)

வேறு.

ஆகமுடை யீருங்கண் மே லாடுபுல னைவைந்து மா
னாகநலி யாதிந்திர மா னாலபவ மேவந்து ரு
சோகமெனு நோயிங்கு ரு தூயசொரு பானந்தர் தா
மாகவருள் பாதங்கண் மே லாசையொரு போதொன்றி லே

வேறு.

போதா தனன்மா லரனே யெனினும் பொய்யில்லா

வேதா கமமெய்ப்பொருடா மெய்கண் டவரேனு
நாதா வெனையா ளுடையாய் சொருபா னந்தாவென்
றோதா தவர்மேன் மையெலா மொன்றுக் குடனன்றே.

வேறு.

உடலை யார்த்தவைம் பூதமிட் டன்றெனக்
கோரள வறுமாசைக்
கடலை யார்த்ததிவ் வடவையாங் காமகோ
பாதிவெங் கனன் மண்டுஞ்
சுடலை யாற்றவொண் கிலதருள் வடிவொடு
சுடர்ச்சொரு பானந்தா!
முடலை யாக்கைகொ டலம்வரன் முடிவுநாள்
மொழிந்தருள் செய்யாயே. (எரு)

கட்டளைக்கலித்துறை.

செய்தவந் தானிலை சீலமொன் றுமிலை மால்கொணெஞ்சிற்
கைதவம் பொன்றிலை காமரு பூங்கழற் காமளவு
நைதலுந் தானிலை ஞானமொன் றுமிலை யானடுவே
யெய்தவென் றால்வரு மோசொரு பானந்த னின்னருளே()

நேரிசை வெண்பா.

அருளாறு மெம்பெருமா னாக மழியாப்
பொருளாறு மென்னுள்வரும் போதந்-திருவாயென்
வாளாளே நாறும் வருஞ்சொருபா னந்தன்மலர்த்
தாளாறு மென்புன் றலை (எள)

அசுவற்பா.

என்புன் றலைமிசை யிணையடிக் கமல
மன்புற வளிக்கவென் றே முன்பு
சொருபா னந்தத் திருமா முனிவ
செறிந்துல கிடையிற் செய்தசேவக
மறிந்தன னறிந்தன னம்ம செறிந்த
வாயிர கோடி யனல்கனன் றுயிர்க்கும்
வாயின வெய்ய மறந்திக ழைம்புலக்
கொத்தொரு பொழிபடக் கோளரக் கன்சிரம்
பத்தொரு கணைப்படுத் தினையே சுத்த
நஞ்சமு முண்டனை நம்ப நாயேன்
வஞ்ச நெஞ்சம் வாரியுண் பதற்கே
சிலைபெண் ணாகச் சேவடி சேர்த்தினை
நிலைபெற வென்னை நீயாக் குதற்கே
வரைத்தனு வாக வளைத்தனை
கரைப்பது கருதியென் மனப்பெருங் கல்லே ( )

வேறு—காலம்

கல்லையலா லுவமையிலா மனங்கனியுங் காலங்
காதலெலா மீசனுக்கே கூரவருங் காலந்
தொல்லையிலா கியபிறவி தொலைந்துவிடுங் காலஞ்
சொருபானந் தச்சுடர்தான் றோன்றவருங் காலஞ்
சொல்லவிலா வொருசுகமா யென்னில்வே றென்றுந்
தோன்றாத திருவடி யென்றலைமே லேறி

யெல்லையிலர் வின்பவெள்ளங் கரையழியுங் கால
மென்னையுமாண் டருள்புரிவா னெழுந்தருளுங் காலம்.

வேறு.

காலம்பல தானின்கழல் காணுந்திற னேதென்றரன்
மாலம்புயன் மாலங்குற வாவென்றெனை யாளுந்திறன்
ஞாலம்புகு தாநின்றரு ளுதன்சொரு பானந்தனெர்
கோலம்பழ வேதம்பல கூறும்பொரு ளாகின்றதே. (அ௰)

வேறு.

ஆகின் றவையழி யாநின் றமையறி
யாநின் றறிகின் றிலைவாணாள்
போகின் றதுபுகு தாதென் றறிகிலை
பொய்யென் றறிகிலை மெய்யென்றே
சாகின் றனைபிற வாநின் றனைதடு
மாறும் படிகெடு வாய்நெஞ்சே
யாகின் றளவினு மாகின் றிலைசொரு
பானந் தரொடுற வாமன்பே. (அக)

வேறு.

அன்பே சொருபா னந்தச் சுடரே யகிலத்தின்
முன்பே பின்பே முடிவீ றறியா முதலோனே
யென்பே றுநினைந் திமையோ ரலம்வந் திடவிங்கோர்
வன்பே யனையே னென்பா லன்பா வந்தாயே. (அஉ)

நேரிசை வெண்பா

வந்துபர மானந்த வாழ்விந்த மண்ணிடைமே
தந்தசொரு பானந்தர் தாள்சூடிச்- சிந்தைமய
நீர்ப்பா ரலாதவரே தேவர்கோ வாச்செல்லப்
பார்ப்பா ரமரா பதிக்கு. (அஈ)

விருத்தம்-மதங்கு

பதியா கின்ற பதந்த னின்செயல்
பழவே தங்க ணிரந் தரந்தனி
துதியா நின்றுமி தென் றறிந்திலர்
சொரூபா னந்தர்பு குந்து சந்தத
முதியா நின்றவி ரண்டு பங்கய
முமிழ்தே னுண்டம தங்கி யென்றனே
மதியா வின்றுவி லங்கு கென்றனே
மறையோ னென்றுவி லங்கொ துங்கியே. ( )

வேறு

துங்கத் திருவடி யதனைத் தெரிதரு
சொருபா னந்தன தருளாலே
சங்கைத் திறனது தவிரத் தனதிரு
தாளைத் தலைமிசை யாளத்தந்
தங்கைக் கனியென வருளிச் செய்தவிர
வயர்வுற் றயல்படு மயனெஞ்சே

யெங்குற் றனையன் பெங்குற் றனையவ
னிருபொற் கழலிணை மலரிற்கே. (அரு)

அகவற்பா.

மலர்மிசை மடந்தை யொருமண வாள!
பலர்புகழ் தக்க கலைமகள் கணவ!
கௌரி கேள்வ! பார்மகட் கிறைவ!
மௌன நன்மொழி ஞானவிநோத!
வறிவரு மறிவ நெறியரு ணிமல
போதங் கொடுக்கும் பூத வல்லப
கேதங் கெடுக்கும் பாத பங்கய
வெனக்கென வந்த தனித்துணைத் தலைவ
வொருவரு மறியாச் சொருபா நந்த
பெரும நின்புகழ் பெரியோய் கேட்டரு
ளோருருப் புனையி னும்ப ருலகத்
தாருரு புகழு மறிவுரு வாமே
யிந்நிலத் தடியிட விறைவ விந்நில
மந்நிலத் தேற வடியிட் டறுமே
பண்டைவடி வொழிந்துன் பங்கய மலர்க்கண்
கண்டவர்க் குடம்பு கண்ணு கும்மே
செய்ய பாதஞ் சிரமிசை யேறின்
வெய்ய பாசம் விட்டே றும்மே
யன்னிய மறுமோர் மொழியின்
முன்னிய சமய மொழிப்பிணக் கறுமே. (அகூ)

விருத்தம்.

பிணங்குவனோ பேதமபே தங்க ளென்று
பிதற்றுகின்ற பிதற்றருடன் பிறவி யொன்றுற்
றுணங்குவனோ குணங்கடந்த சொருபா னந்த
னொளிமலர்ச்சே வடியொழிய வொருதே வுண்டா
வணங்குவனோ வவனடியா ரடியார் தம்மை
வழிபடுவோர் குழுவொழிய மற்றை யாரோ
டிணங்குவனோ வென்னையெனக் கென்னிற் றந்த
வியல்பைநினைந் துருகியழிந் திடுகின் றேனே. (அஎ)

கட்டளைக்கலித்துறை.

இடுகின்றி லேனென்று மேற்கின்றி லேனல்லனிந்தியத்தை யடுகின்றி லேனென்று மாய்கின்றி லேனென்று மாசை யொன்றும், விடுகின்றி லேனென்றின் மீட்கின்றி லேனெஞ் சுன் றுட்கண்வந்தாட், படுகின்றி லேனென் படக்கட வேன் சொரு பானந்தனே. (அஅ)

விருத்தம்-களி

சொருபா னந்தத் திருமா முனிவன்
றுணையார் கமலத் தொலையா நறவைப்
பருகா வுருகிப் பெருகா நிறையும்
பரமா னந்தப் பெருமா களியே
னொருபா வனையற் றுரையற் றுணர்வற்
றுருவற்றொழிவற் றுலகற்றிலகுற்

றிருகாத லுமற் றவரென் றுலகத்
தெண்பட் டவரென் கண்பட் டவரே. (அ௬)

நேரிசைவெண்பா.

பட்ட மதகரிமேற் பல்கோடி யாண்டவனி
வட்ட முழுதாளு மன்னர்பத-மட்டோ
சொருபானந் தன்கீர்த்தித் தொல்லமுதை வாரிப்
பருகா வுருகும் பகற்கு. (௬0)

விருத்தம்.

பகுத்த பேதமும் பூதமும் போதமும்
பற்றுவிட் டதுமுற்றுந்
தொகுத்தி யாவையு நானெனத் தானெனுஞ்
சுடர்ச்சொரு பானந்தன்
மிகுத்த தாமரை செகுத்தது ளல்லது
வேறுவே றுலகத்தே
வகுத்த மூவர்தம் பதத்தையொன் றுகயான்
மறவியு மதியேனே. (௬௧)

வேறு.

மதியிலேனெனைப்போல வல்வினைசெய் தாருண்டோ
மங்கு மிந்நாற்
கதியிலே சுழன்றவலக் கடலிடையே நடனுடைக்
கடவே னாகித்

ஆதியிலே யருள்சுரக்குந் தூயசொரு பானந்தச்
சோதி யென்னு
நீதியிலே புகுந்திருக்க வீதியிலேன் முகவாதே
நின்நற் றேனே. (கூஉ)

வேறு.

அற்றவர்க ளாகியற வேடங்கொண் டார்சரு நீதே
கற்றவர்க ளாகியரி தாயரிதாய கலைகளெல்லாங்
துற்றவரி லாதிச்சொருபானந்தன் றெண்டல்லா
மற்றவர்கள் கோடிபல கோடி மடங்குநன்றே. (கூஙு)

வேறு.

நன்றும் மறியே னன்றும் மறியே னுமேயனுட்
டுன்றுஞ் சுடரே சொருபானந்தச் சோதீயென்
றென்றிங் குரையா டளவென் னிதயஞ்செயுமாறிங்
கொன்றும் மறியேனெனினும் முரையா தொழியேனே.

கட்டளைக் கலித்துறை.

ஒழித்திலை சிற்றின்ப முண்டிலை நீயுண்டு முண்மைதனில்,
விழித்திலை மெய்ச்சொரு பானந்த வென்று வெறுமொரு
கான், மொழித்திலை தீமை மொழிந்தற் றனைபல மோக
மென்றுங், கழித்திலை யாவி கழிந்தனை யேயென் கடை
நெஞ்சமே. (கூரு)

விருத்தம்.

கிடைய தாகிப் பிபீலிகை யாதியாக்
கமல யோனிக ணக்கில்ச ராசரத்
தொடைய தாயொன் றுபோ லுல கங்களாந்
தோற்ற மென்சொரு பானந்தச் சோதியை
யிடைய றுவின்ப வாரியை யிங்குவந்
தென்னை யாண்டவெங் கோனையி றைஞ்சியே
யடைய யான்விழுங் கும்படி பாரினி
யகில லோகமெங் கையறி வன்றியே. (௬௬)

வேறு.

அன்றென்று கூறுதனை யாமென்று கூறுமறு
சமயங்க ளாகி யவையே
நன்றென்று கூறுமவர் நடுவென்று ஞானகன
வொளியென்று நாலுமறையே
யொன்றென்று கூறுசொரு பானந்த நாதனுரு
வாய்வந்து மேவிவாவா
வென்றென்று கூறியிரு பாதங்கண் மேவவிதி
யின்றிங்கி லாதவிவரே. (௬௭)

வேறு,

தவிரேமிதொன் றுபகரச் சமயத்தி னென்றுந்
துவரே மனைத்துஞ் சொருபா னந்தச் சோதிதொல்லைப்
பவரோ கமாறும் படிகண்ட பதங்களென்னு
மவிரோத மான நெறியல்லன வையமுண்டோ. (௬௮)

வேறு.

வையமினி யெனைப்புகழ்ந்தென் மற்றென்னை யிகழ்ந்
தாலென் மாறுதென்றுஞ்
செய்யவள்வந் தென்னுடனே செறிந்திருந்தென்
பிறிந்திருந்தென் சிதையாதென்று
மையமற விருந்தெனுடம் பழிந்தாலெ னுக்கமழி
வதனானுண்டோ
துய்யசொரு பானந்தன் றுணையடியென் றலையாரச்
சூடினேற்கே. (௯௯)

நேரிசைவெண்பா.

சூடினேன் பாதஞ்சொருபானந் தச்சுடரைப்
பாடினேன் பண்டை யடியாரிற் - கூடினேன்
கண்டேன் களிகூரக் காயம் படைத்தநா
ளுண்டேன் பெருதபய னென்று. (௱)

ஞானவினோதன்கலம்பக முற்றிற்று.

# பன்னிரண்டர்வது-உலா.

## தத்துவகார்மியம் குழகன்.

பூப்போலு மேனிப் புவனம் பதினாலுங்
காப்போனு மெல்லாங் கரப்போனுங்— கோப்போனுந்

தன்கமல பாதங்க டேடித் தளர்வுறவிங்
கென்கமல மார விசைந்தருளி — நன்கமல

வாக்கிறந்து துய்ய மனனிறந்து மற்றனைத்து [ங்கென்
நோக்கிறந்து நோக்கரிய நுண்பொருடான் - போக்கிற

கையகத்தி னமலகம் போலெனக்குக் காட்சிதர
வையகத்தின் மானுடனாய் வந்துதித்த — துய்ய

பெருமா னுலகிற் பிறந்திறக்க கில்லா
வொருமா முதலா மொருவன் - பெருமாலா

யஞ்சாரை யாருரை யாங்ககல்வான் வேண்டியவர்க்
கஞ்சாரை யாருரை யாங்ககல்வா - னெஞ்சா

ரயனு ரணனீச னுனு மேத்து
மயனு ரணனீச னுனன் - பயமார்

முனிவா னவையா மொழிவான் வருமா
முனிவா னவையா மொழிவான் - றுனியாகி

யங்குழலார் தங்கட் ககப்பட் டவர்பிறகே
யங்குழலார் தங்கட் ககப்படுவான் — றாங்கக்

கழறு மறையனையார் காணென்று நெஞ்சைக்
கழறு மறையனையார் காணார் — சுழலா

வலமாந் திருக்கு மறிவா னுறநா
னலமாந் திருக்கு மறிவா — னலனா

வத்துருவ மாய வருளிசையா னன்பருவந்
தத்துருவ மாய வருளிசையான் - றத்துவங்க

ளாறாறு மையைந்து நாலேழு மீரேழும்
வேறான துந்தானாய் வேறானான் — வேறாக

வென்னைத்தா னாக்கி யெனதுநா வுண்ணிறைந்து
தன்னைத்தான் பாடுந் தகைமையான் - வன்னத்திற்

கொப்பாரு மில்லா வுருவுடையான் யானறிய
விப்பாரில் வந்தவிருநிதிய — மப்பாலைக்

கப்பாலாய் மெய்யே யடிபணிந்தோர் தம்முடைய
மெய்ப்பாலாய் நிற்கும் விரகினா — னெப்பாலுந்

தன்னை யொருவ ரறியாத தன்மையான்
முன்னை யறிவான மூர்த்தியா — னென்னையுமொன்

ருக்குவான் போலே யடியேன் கிளையோடும்
போக்குவான் றானே பொலிந்திருப்பான் - யார்க்குந்

திகழாதே தான்றிகழ்வான் சேராதே சேர்ந்தா
னிகழாதே யாவு மிகழ்ந்தா - னிகழ்வெவையு

மாக்காதே யாக்கினா னாங்கெல்லா மாயல்லான்
போக்காதே யூழிபல போக்கினான் - பார்க்கிற்

பெரியவற்றுட் டானே பெரியான் பெயர்த்து
மரியவற்றுட் டானே யரியான் - றெரிபறவே

யாழ்ந்தா னகண்ட மகமாக வப்புறனுஞ்
சூழ்ந்தான் றனையொன்றுஞ் சூழாதான் - றாழ்ந்து

நுகரா நுகர்ச்சியா னுண்ணுணர்வோன் றில்லாச்
சகரா மறிவரிய தாளான் - பகருங்கா

ணெய்யவற்று ணெய்யா னுணியவற்று ணுண்ணியா
னையவற்று ளையா னழகியான் - வெய்யவற்றுள்

வெய்யான் றணிவின் மிகத்தணியான் றுய்யவற்றுட்
டுய்யா னெனக்கினிய தோற்றத்தா - னைய

னுயரா வுயர்வா னுணரா வுணர்வா
னயரா நினையா வறிவான் - பெயராத

விந்நிலைமை தன்னிலைமை யென்றறிய வொண்ணாத
வந்நிலைமை தன்னிலைமை யாயினான் — மன்னாப்

பொருளின் மருளும் புலையேனை யும்பார்த்
தருளுங் கருணை யமல — னிருடீர

வாதி முடிபீ தெனமுன் னருமறைக
ளோதி முடியா வுணர்வினொளி — யேதிலே

னாவி னவிலு மளவி னயமொடென
தாவி பருகு மருநிருதி — பாவியேன்

வண்ண நினையு மளவில் வடிவினொடு
கண்ணுட் புகுதுபூ கருணைமலை — யெண்ணரிய

போக நினையு மளவி னுடல்புளக
மாக வருளு மருளமிர்து — தாகத்தா

லுண்ண நினையி னுருகி யெனதுசெய
லெண்ண மழிய வெழுமிரத — நண்ணிரதந்

தன்னை நினையு மளவு தனிநினையு
மென்னை யழிய வெழுமின்பந் — தன்னளவி

னன்பு மிகுதி யுடைய வவருடலோ
டென்பு முருக்கு மெழிலிறைவ — னின்பவரு

ளுள்ள நினையி னயன முததிமென
வெள்ளம் விளைய விளையுமருள் — கள்ள

மயக்கத் தினைநினையில் வன்மத்த னென்னும்
வியக்கந் தருமொப்பில் வீரன் — பயக்குமிரு

வல்வினையின் வாயின் மணலிட்டி யான்மருவு
புல்வினைக ளேரப் புகல்புனிதன் — வல்வினைதீர்

வானுக்க விப்புவியை மற்றென்னை வெற்றவெறுந்
தானுக்க வந்தருளுந் தம்பிரான் — மேனிலத்த

விண்ணோர்க ளண்ணுக்க மேனி யுடையார்போல்[லாந்
மண்ணோர்கள் விண்ணுக்க வந்திருப்பா—னெண்ணமெ

தானுடையா னுயேற்குத் தன்னைத் தரவந்த
ஆனுடையா னெல்லா வுயிருடையா — னேனையவுந்

தன்னிலே தோன்றியிடத் தானென்றிற்றோன்றுதா
னென்னிலே யென்னை யெனக்களிப்பான்- முன்னமெ
[லாந்

தன்னைப் பருகத் தருவார்போ லுள்புகுதா
வென்னைப் பருக வெழுந்தருள்வா — னின்னதெனு

வூருடையான் றானே யுறவுடையான் யாமிட்ட
பேருடையான் பேரா யிரமுடையான் — சீருடைய

தன்னுடைய சோதி சலியாம னிற்கவே
யென்னுடைய மாய விருளகற்றத் - தன்னிலையின்

வாராமல் வந்தார்போல் வந்தான் வருபிறவி
சாராமல் வந்து சமைந்தபிரான் - சீரா

ரிணக்கொன்றுந் தானன்றி யின்றியே நின்ற
குணக்குன்றந் தானுடைய கோமான் - பிணக்கின்றி

யாதானு மோர்வழியா னேத்துவோர் தங்கட்கு
மாதா வெனவே வழிபட்டு - நீதியா

னங்கவர்கள் வேண்டு மவையே யளித்துலக
மெங்கு முலவி யிடாகற்றி - மங்குமுட

னீறெனவே போகாமு னெஞ்சப் பிணியடைய
வாறெனவே நல்லிவரு மாறுடையோன் - வேறறவே

தானந்த மொன்றின்றித் தானே தனைவிளையு
மானந்த நாடடைய வாளுடையோன் - மேனந்து

சிந்தைதா னுஞ்செல்லாத் தெய்வத் திருக்கோயில்
எந்தைதான் வீற்றிருந்த வெல்லைக்க - ணந்தமறும்

புண்ணியர்க ளொளும் புதுமலர்தூஉய்ப் பொன்னடிக்
கண்ணியவர்பணிந்து நாத்தழும்ப- வெண்ணரிய [கே

பாதனே பாதம் பணிந்தெழுவோர் தம்முள்ளப்
போதனே புத்தேளிர் போற்றரியோய் - நாதனே

நாரா யணனே சடாதரனே நான்முகனே
தீரா வினைதீர்க்குஞ் சேவகனே - யாரானும்

வேண்டுவார் வேண்டு முருவாகி வேண்டியதே
யீண்டுவா வென்றென்றே நின்றேத்தி-யாண்டகையே.

யாரா வமுதமே யைம்புலனுங் கொண்டுவப்ப
வாரா வெனப்பெரிது மால்விளைப்பச் — சீராருந்

தாழ்ச்சி தருமன்பர் தாங்காண விப்புவியிற்
காட்சி தரத்தன் கருணையான் - மாட்சிமையிற்

செய்யா வழகுடைய செய்யவலூர் யாம்பிறப்பி
னெய்யாத வண்ண மெழுந்தருளத் - துய்ய

திருக்கோலங்கொண்டருளுஞ் சீரழகை முன்னே
யிருக்கோத மாட்டாதா மென்று - நெருக்கன்பர்

கண்ணீரான் மஞ்சனமே செய்வானற் கர்ப்பூரத் [ராச்
தெண்ணீரான் மஞ்சனமுஞ் செய்தருளி - யெண்ணே

சொற்கலையி னின்று துவளா வழியருள்வா
னற்கலையுஞ் சாத்தி நலனேரப் - பொற்கழலே

தஞ்சந் தனமென்றி யானிருக்கத் தானருள்வர்
னஞ்சந் தனமே லணிந்தருளி — நெஞ்சமது

செஞ்சாந்த மாகச் சிறியேற் கருள்செய்வான்
செஞ்சாந்து சாத்திச் சிறந்திடவே — பெஞ்சவரு

நாண்மலரா வண்ண மடியேற்கு நல்குவா
ஞண்மலர்தான் சாத்தி நறுங்குழன்மே — னீண்மா

மறைகழறு நின்ற மலர்த்தா டருவா
னறைகழறுன் சாத்தி யழகா — வந்நெறிவந்

தெதிரா னவர்பிறவி யெல்லா மெறிவான்
கதிர்ஞான மாங்கடகஞ் சாத்தி - முதுபிறவிப்

பேரா ழியினின்று மேற்றுவான் பேரொளிசேர்
சீராழி சாத்தித் திருவிரற்க - ணோர்ருஞ்

சொற்கடக நாயேனை வந்து தொழச்சொல்வா
னற்கடகஞ் சாத்தி நலஞ்சிறப்பப் - பொற்கொடியா

ராகு வலையங் கழுந்தாம லாட்கொள்வான்
வாகு வலையம் வலஞ்சாத்தி - மாகவலை

தீராஞ் சாத்தவினை தீரா ரெனவருள்வான்
பேராரஞ் சாத்திப் பிறவியெலா - நோரக்

குருத்தோடு தீர்ப்பான் குழைக்காதிற் செம்பொற்
றிருத்தோடு சாத்திமறுச் சேரா-திருக்குமதிச் [டும்

செவ்வித் திருமுகனைச் சேர்ந்தடியேன், கண்ணிரண்
வெளவிப் பெரிய மயறீர்ந்து - மெய்விளைப்பா

ளுகத் திருக்கோல மாங்கொன்று கொள்ளாதே
மேகத் தணைகின்ற வெண்மதியின் — பாகமே

யொத்த நுதன்மீ தொளிர்நீற்றுக் காப்புத்தன்
பத்தர் வினைநீறும் படிசாத்திப்- பித்தனே

னிட்டவொரு பட்டத்திற் கெல்லா மிசைந்திருப்பான்
பட்ட மழகு படச்சாத்திக் - கட்டவுடல்

காட்ட மணிந்தழலிற் காட்டாமுன் றுளெனக்குச்
சூட்ட மணிமகுடஞ் சூடித்தா - ளுட்டமிலாப்

பேயான நாயேன் பிதற்றுந் தமிழ்மாலை
யாயாமற் சாத்து மருளினு — ளுயாவென்

வாண்மாலை மெய்யென்று மங்காமே செங்கழுநீர்த்
தோண்மாலை சாத்தித் துயரகலக்- கோண்மாற்றும்

வேதகத்தி னுனன்னம் புள்ளும் விடைதவிரப்
போதகத்தின் மீதே புகுந்தருளி — யேதுவற்ற

முத்திலகு நன்குடையோ ருள்ளத்தே முற்றுமெண
முத்திலகு நன்குடைகண் மொய்த்துவர- மற்றக்

கொடிய பிறவிக் குலேவோரை யம்பொற்
கொடிக ளெழுந்தழைத்துக் கொள்ள - விடுசகடு

போலவட்ட மாகவரு பொய்ச்செல்வ மென்றேபட்
டாலவட்ட மெங்கு மசைந்துவரக் — கோலமுற்ற

மூர்த்திகளு முப்பத்து முக்கோடி தேவர்களு
மேத்தி யெழுந்துவிழுந் தென்புருகிக் - கூத்தாட

விண்ணோர்க ளேற்றும் விரைத்தூப முமொழிய
மண்ணோர் நறுந்தூப வான்புகைதா — னண்ணரிய

மெய்த்தேவ தேவன்றான் மேதினியு ளானென்று
புத்தே ளுலகிற்குப் போயுரைப்பச் - சித்தமுறுஞ்

சல்லியங்க ளெல்லாந் தவிரச் சதிரான
பல்லியங்க ளெங்கும் பரந்தொலிப்பத் - துல்லியங்க

டாதொன்று மில்லாத் தனிச்சுடரான் றான்வந்தா
னூதொன்று மில்லா வொளிவந்தான் - றானென்று

மென்னையாட் கொள்ளு மிறைவந்தான் யாவர்க்கு
முன்னையாய் நின்ற முதல்வந்தான் — பன்னுமறைச்

சீரோத வொண்ணுத் திருமேனி தன்னையுமிப்
பாரோ ரறியும் படிவந்தா - ேனாத

வென்னைத் திரித்தென்னைக் காட்டி யெனைமாற்றித்
தன்னைத் தருந்தம்பி ரான்வந்தா - னென்னுந்

திருச்சின்ன மெங்குஞ் செவிகளெல்லா மார
விருத்தின்னஞ் சேவித்து மேவத் - தெரிப்பரிய

சுத்த நெறியார் துறவி னெறியறியுஞ்
சித்த ரிருமருங்குஞ் சேவிப்ப - நித்தமொழி

வில்லாம லோது மெழின்மறைகள் கண்டறியா
நல்லான் மணிமலர்த்தா ணத்தழும்ப - வல்லவர்தம்

பாமாலை கொண்டு பணிந்தெழநன் பத்தர்கணம்
பூமாலை கொண்டு புகழ்ந்தேத்தக் - கோமா

னெழுந்தருளுங் காலை யெழிலடியார் கண்ணீர்
கொழுந்தாளம் போலே குதிப்பச் - செழுந்தாணி

யூரா னுவந்தருளி யோங்கு மணிமாட்சி
சீரார் திருவீதி சேர்ந்தருள - வோரும்

வான மதிதயங்கு கோபுரங்கண் மண்டபங்க
ளேனை மணிமா ளிகையிடங்க - டானடைய

நாணு மடனு நலனு மினவளையும்
பூணுங் கலனும் புனைகலையும் — பேணாரு

முள்ளமு மாவியு மொன்றொழியா மேதம்மை
விள்ள விரைந்தீண்டி மெல்லியரால் — வள்ளலார்

தாளிணையை வந்தித்துத் தம்முடைய மெய்மறந்து
கோளில்பொறிபோற் குழறுவார் — மீளா

வுணருவா ருண்ணு ரமிர்தைத்தங் கண்ணுற்
புணருவார் புண்ணியனே! யென்பா — ரிணையிலாத்

தோற்ற மிருந்தபடி யாரச் சுருதிகண்முன்
சாற்ற வரியபொரு டானென்பார் — போற்றவரும்

பண்டி தருமறையும் பாரோரும் வானோருங்
கண்டு தொழவரிய காரணனார் - தொண்டர்க்குக்

காட்சி கொடுத்தருளக் காசினிமேல் வந்ததொரு
மாட்சிமைகா ணென்று வனப்புறுவா - ராட்சிசெய்தார்

தம்மை மயக்கந் தவிற்குமே தானேதா
னெம்மை மயக்குவா னென்றிசைப்பார் - தம்மை

முனியா வருந்தவத்தை மூண்டிவனைச் சேர்ந்துந்
துனியாம் றேமென்று சொல்வார் - ரினியானெம்

முள்ளமே மேவ வொழியா திருக்கருணை
வெள்ளமே யென்று விளம்புவா — ருள்ளாவி

நோமனேய் செய்யு மிவனெழிய நுண்ணிடையீர்
காமனும் வேறே கருதுமோ — யாமறியப்

பற்றற்றோர் தங்கள் பரம்பொருளாய்ப் பல்சமய
முற்றுற்றோர் வேண்டு முருவமுமாய் — மற்றுற்றோ

ரெல்லார்க்கு மெல்லாப் பொருளா யிருக்கத்தான்
வல்லா னிவனென்று மாமறைகள் - சொல்லுவதிவ்

வீரனையே யானுமிம் மெல்லியலார் தம்மளவு
மாரனே யாகை வருத்தமோ — நேரிழையீர்

பூண்ட வளைகலைநான் போனாலு நம்மைநா
மீண்டு கொடுபோக வேண்டாவோ - வாண்டகையே

வேண்டமோ வென்பார் விரையீ ருரையெல்லா
மாண்டமோ வென்று மறுகுவார் - மீண்டும்

விழுவார் தொழுதெழுவார் வேர்ப்பார்தாம் விம்மா
வழுவார்நீ யாளாயோ வென்பார் - வழுவாத

பேரருட்க ணில்லையோ வென்பார் பெரியோனுக்
காரருட்க ணென்பாலே யாமென்பா — சீரருட்சேர்

பொன்னடிகள் வந்து பொருந்தப் புவிமடந்தை
யென்ன தவஞ்செய்தாளோ வின்றென்பா - ருன்னரிய

ஸ்ரீமான் மணிமார்பிற் சீர்மாலை தான்சாத்தும்
பாமாது பெற்ற பதமென்பார் - பூமாதின்

புண்ணியமே யென்பாரிப் பொன்னார் திருமேனிக்
கண்ணியளே சால வவளென்பா - ரண்ணல்

வசையில் புகழ்மாதை வாழ்த்துவார் மன்னும்
விசையையே வீறுடையா ளென்பா - ரிசைபெரிய

ஞானக் கொழுந்துற்ற நன்கென்பார் நற்சுருதித்
தேனப் பதமிரக்குஞ் சென்றென்பார் - மேனி

யருளேகா ணோர்க வாள்கின்று னென்பார்
வெருளேது மின்றிப்போய் வேண்டிற்-றெருளேசெய்

யானந்த வெள்ளக் கலவி யடியேன்பாற்
றானந்த வாரானோ தானென்பார் - தேனே

புலன்களினா லுள்ளபயன் பொய்யன்றி மெய்யே
நலன்களிகூ ரப்பெற்றே நாமென் - றலம்புனைவா

ராதரமு மாராமை தானு மதிசயமுந்
தீதரங்க மேன்மேலுஞ் சென்றின்னே - யோதியவா

சிந்து மலர்க்கணைக டான்றெரிந்து சீராய
வெந்தையளி நாணுக்கி யின்பவேள் - பைந்தொடியார்

சொல்லு மனனு முடையவொரு சொற்கரும்பு
வில்லி னழிக்க விரைவுற்றுன் - சொல்லே.

---

# பேதை.

வடிக்குங் கிளிப்பிறப்பு மாற்றறியாப் பாலன்
பிடித்தது வேபிடிக்கும் பேதை - யடுத்த

தறியாப் பருவ மறியாமை தாயைப்
பிறியாச்சிறுகுழந்தைப் பிள்ளை - கிறியாய

மாயைக் குலக்கொழுந்து மாஞால மர்ணகருத்
தீயை மதியாதே சென்றணைவாள் - வாயாத்

தணக்குந் திருவேண்டித் தாழ்ந்தோரை யுந்தான்
வணக்கஞ் செயாநின்ற வல்லி - கணக்காயர்

பாடமே யோதிப் பயனென் றறியாத
மூடமே யான முகத்தினு — ணீடு

கடற்புவன மீரேழுங் காமனுற் செங்கோ
னடக்கு முறையே நடப்பான் - மடக்குதலைத்

தப்பா வினைத்தளையைப் பூண்பா டனையொருகால்
மெய்ப்பால் வினவ விளைவறியான் - மெய்ப்பாலாங்

கந்தஞ் சுவையொளியூ றோசைக் கடுவிடஞ்சே
ரைந்தலைநாகத்தை யாங்கெடுத்துச் — சிந்தை

சுழல வுடலைச் சுழலச் சுழலக்
கழல வுதறும்வகை காணு — ணிழல்போலப்

பொய்யேயாய்க் காணும் பொருளெல்லாம் பொன்றாத
மெய்யேபோற் காணும் விழியினுள் - வையகத்தே

வாதைப் படுகின்ற மாமோகக் கையாலே
போதப் பெருங்கண் புதைத்தொளிப்பா - டீலுற்ற

மையல்சிற் றில்வாழ்க்கை வாழாதெ லாம்வாழ்ந்து
செய்யக் கடவதெலாஞ் செய்தாலும் — பொய்யாகி

யின்று பிறந்தார் கணக்காயு மின்னுமிது
நின்று நிலையா தெனவின்றிப் — பின்றையு

முனிழைத்த வில்வாழ்க்கை யுண்மை யெனநினைந்து
தானிழக்க நின்று தளர்வளவில் — வானிழக்க

முன்னை மறையாற்ற மூவாத மூர்த்திகளு
மின்னு மறிவின்றி யீடழிய — வென்னைத்

தாமறியா தேயாண்ட தம்பிரான் வந்து
நரருருவாய் ஞாலமெலாங் காணத் — தரணிதனிற்

பொன்மாட வீதியினுட் போதகத்தின் மேல்வரலுஞ்
சென்மாந் திரியத்திற் செய்தவத்தான் — முன்மேவு

புல்வினத்தை நீங்கியிறை பொற்று டொழவிரும்ப
நல்வினத்திற் றேழியர்பா னன்கணைந்து - சொல்லீ

ரிவரா ரெனவியம்ப வெம்மையும்வந் திங்கே
யவர்கா ணடிமையுகந் தாள்வார் — கவாரதே

தம்பே ரழகுலகிற் றுங்காட்ட வேண்டியபோ
தெம்போ லெழுந்தருள்வ ரித்தனைகாண் - கொம்பேநீ

கைதொழா யென்றவரைக் கைதொழா யென்றுரைத்
செய்தவா செய்தவா செய்தற்றுண் - மைதீர் [தாள்

திருவுருவங் கண்டாலென் செந்தாமரையும்
பருவமலா தன்றலரப் பண்ணுன் - மருவிவருந்

தன்னயர்பு தன்னுலே தையலுந் தற்பயக்கு
மன்னையர்பா லேசென் றணுகினள் - பின்னேதை

பெதும்பை

லாகும் பெதும்பை யறியப் படாத்தவமும்
பாகொன்று கல்விப் பயனதுவுஞ் — சோகமறக்

கற்றோ ருரைக்குங் கசடறு நுண் கேள்வியும்
பற்றேது மில்லாப் பரனருளு - முற்றுவரு

பாக்கியமுஞ் சேர்ந்து பயந்த பரிசும
மூக்கியறியு மொளிமதிய - நோக்கு

மூளந்த னிடையே யொருகாற் கொருகால்
வளர்ந்து வருவதொரு வல்லி - விளம்பு

பலகலைப்பா லாய பயன்கருதி யல்லாக்
கலகலப்ப தெல்லாங் கழிக்குங் - குலவன்னங்

கண்டதெல்லாங் கானலினீ ராகக் கடைப்பிடித்தங்
குண்டதெலா முண்டிலவா யேயொழிந்து தண்டறவே

செய்தவையுஞ் செய்திலவா கச்சிதைந்து தீங்கறவே
யெய்தவையு மெய்தாத வாயிழந்து - மைதவழுங்

கார்செறித்த மின்னுங் கனவுங் கருதரிய
நீரெழுத்து மென்ன நிலையதுதா - னோரிடத்தி

னில்லாத வாழ்க்கை நிலைபெற லென்னேயென்
றல்லான தும்பகலு மாய்குவா - ரில்லா

வுருபியா வொன்றினையு முள்ள படியே
நிருபியா நின்ற நிறத்தாள் - பெரியோர்கட்

கானவையே செய்ய வடியிடுவா ளெங்கவர்முன்
போன வழியதற்பின் போகுவா — டாளொருவர்

நிந்தியா நல்ல நெறிநடப்பா ணிவுதலை
முந்தியர் நின்ற முகத்திறுள் - சந்த

மறைநர் றியமதுர வாயாள் குரம்பைக்
குறைநாடு நல்லினிய கூற்று - ணெறிகாணப்

பாலனதுவாய காலமே பன்னுபவ
மாலமெனவிழிக்கு மங்கணு - ளேலக்

கடியா விடினன்றிக் காயத்தீ வாழ்க்கை
முடியாவென் றேருதி முடிப்பாள் - படியொழிய

வானகமு மீண்டு வரத்தவிரா தாகினது
வூனகமே யாமென் றுணர்குவாண் - ஞானமலாக்

கன்மபா வங்கள் கருச்சிறையுட் கட்டியிடுங்
தன்மபா வங்களெனத் தான்குலைவா - ணன்மைமிக

நின்று நிலையென்று நிலையாய நின்மலனை
யன்றி யிலதென் றறைகுவா - ளொன்றுதனை

யோதினவனையல தோதா வுபநிடந்தான்
றீதின் மொழியாளைச் சேர்ந்திருந்து-பேதைமையால்

வந்த பிறவி மயக்கமற மானுடனா
யிந்த வுலகத்தெழுந்தருளி — யென்னை

யுரைக்குந் திருவார்த்தை யொன்றுமொழியாத்
திரைக்கொண்ட தீப்பிறப்பு வாரிக் - கரைசேர்

புணையாகச் சென்னி பொறித்தருளும் பொன்னு
மிணையா ரடிப்போ திரண்டுந் - துணையான

நிற்குணனை யாமேத்த நின்மலன்று னீக்கியருண்
முக்குணங்க ளாய வொருமூன்று - நற்குணனைச்

சந்தித்து நோக்கத் தரியா தழிவுபடு
மந்தக் கரண மவைநான்கு — மிந்த

வுடலா னதிலிறைவந் தொன்றுமு னம்மை
யடல்செய் புலனெறிக ளைந்துங் - கடலான

காம முதலாறுங் கண்ணுளன் மண்ணிடையே
யேம முறவிங் கெழுந்தருளி - நாமொழியும்

பண்டைப் பிறப்பேழும் பாடிப் படியேழுந்
தொண்டுற்றுக் காணாத் துணர்க்கழல்கள்-கொண்டாடி

மெல்லையினி லென்னையுமாட் கொண்டபிரா னெவ்வி
[னையுங்
கொல்லு மதமாமேல் கொண்டுவர — மெல்லியலுங்

கூந்தல் சரியக் குதித்தோடிக் கோமான்முன்
காந்தள் பழித்த கரங்குவித்தா - ணிந்தரிய

வஞ்ச மகலவரு மானுடனார் தம்முடைய
கஞ்ச மலர்மேனி காண்பளவி — னெஞ்சமுட

னங்கனவ னிங்கிவனே யாமென்று நாடினா
ளங்கணவன் மேல்வைத்தற் காதரித்தாள் -பங்கனையு

மாயமெலாம் பார்த்தவளை யஞ்சினா ளாகியிந்த [னில்
மாயமெலா மென்மனத்தே மாற்றென்றாள் — காயமே

வேறாயி னுனிதற்கு வேறாயின வயலாத்
தேறுமை யென்னென்று செப்பினாள் - வேறாகத்

தன்னையும் பார்த்தருளத் தானும் பெரிதுவந்தாள்
பின்னையும் மச்சம் பெரிதுற்று - ளுன்னையலால்

வேண்டாத மேலோ ருடனே வினைதீர
வாண்டாலோ வென்பாள்போ லாயினாள் - மீண்டுந்

தொழுதாள் பலவென் றுறவிப்பே ராசை
முழுதாளு மூலைக் கெழுந்தாள் = பழமறைகண்

# ம ங் ள க.

மார்சற வோதி வழியே படுந்துறவித்
தேசுக ளெல்லாந் திகழ்மங்கை - யீச

னுவப்பாலே கோடற் கொருவிளக்கு நல்ல
தவத்தோ ரியாவர்க்குஞ் சார்பு - சிவத்தாரும்

பத்திக்கு வித்தரிய பாவனைக்கு மேவுதுணை
முத்திக்கு மூல முழுதுமாஞ் — சித்திக்கு

நல்லோர் தெளிந்தநெறி ஞாலத் தியற்கையினை
யெல்லா மொழிக்கு மியல்புடையா - டொல்லை

சுருதிப் பொருள்விளங்கத் தோன்றினா ளான்ற
யிருதிக்குங் கண்ணும் விளக்குக் — கருதியே

கற்றோர் பெறவருந்துங் காமங் கலரான
மற்றோர்க்கு நஞ்சாய் வளர்மருந்து - சிற்றின்பந்

தன்னில் விளையவுறுந் தாரணிக்குப் பேரின்பக்
கன்னல் விளையுங் கரும்பென்று — மன்னவே

சென்றடை யாதி திருவேதந் தேய்த்து
நன்றுடை யாரி னலனுடையா - ளொன்றினையும்

வேண்டுந் திறன்மறந்து வேண்டாதாள் வேண்டுங்
மீண்டும் பிறவாமை வேண்டுவா — ரீண்டத் [கான்

அடிக்கு மனத்தாலாந் துயர்ப்பிறவி யெல்லா
முடிக்க வினைதான் முடித்தாள் — படிக்கணங்கே

யன்ன நடையா ளனைத்துலகும் வந்துறினுந்
தன்ன னடையிற் றளராதா — வின்னுசெய்

பொய்தாய வெய்ய புலனைத் தலைவனைத்து
வெய்தாய செய்யும் வினைவழியா — டுய்தாய

வாய்மை மணநாறும் வாயாண் மறவியினுந்
தீமை விரவாத சீர்மொழியா — டுய்மைமிகும்

வானிலத்தோர்க் கெட்டா மறையின் முடிவென்னு
மேனிலத்தை யேறி மிகவுள்ளந் — தானலர்த்து

மன்பாய தோழியருந் தானு மருபரனுர்
பொன்பாவும் பாதம் புகழ்ந்தேத்தி — முன்பாய

பந்தத்தை யெல்லா மெறிந்தடித்துப் பார்வையினுற்
புந்திக்க ணெங்கும் புரையறவைத் — தந்தரத்தே

கீழ்மே யெனைத்தன்னை நாடக் கிடையாமற்
சூழ்தே மெங்குஞ் சுழன்றாடி — வாழியென

மாறுகின்ற பேருததி மாமறைக ளாயிரமுங்
கூறுகின்ற தெய்வக் குழாத்தொலியும் — வேறறியாத்

தொண்டர் துதியொலியுந் தோத்திரஞ்செய் தேத்து
வண்ட ரொலியு மதிர்ந்தியம்ப-வெண்டிசையே [கின்ற

ழோசை யறுசுவை யைம்பூத நான்கூழி
யாசினிகழ் காலமூன் றாகியே - மாசிலா

வீருருவா யொன்றாகி யெல்லாமா யல்லாதா
னோருருவா யிந்த வுலகத்திற் - சீருலவு

மாதவத்தி னானே மனுடரைப்போ லேஞான
போதகத்தின் மீதே புகுந்தருளி - யோது

மருமறைகள் கண்டறியா வம்போ ருகத்தா
ளிருமருங்குங் கண்டடியா ரேத்த - வருமரவந்

தன்செவியின் வந்தணுகா முன்னமே தானுமவன்
பொன்செய் கழலிணையிற் போய்வணங்கி முன்செய்த

சீரார் திருமேனி தன்னருமை சிந்தையகத்
தோராதே பார்க்க வொருப்பட்டா - ணோராகப்

பாராதே பார்த்தான் பரமன் றிருமேனி
நேராகக் காணு நினைவழிந்தாள் - பேரா

வுணரா வுறங்கா துணராதே யென்னைப்
புணரா யெனவும் புகன்றாண் - மணவாளன்

சீராரு ஞானத் திருநயனத் தாரொருகாற்
பாரானே யென்று பலநினைந்தா - ளோரரும்

போதகமே யான்வருந்தப் போகாநின் றாயிதுதா
னாதகுமோ வென்றென் றயர்வுற்றா - ளோதரிய

## மடந்தை.

மெய்யின்பந் தன்னின் விருப்ப மெனுமடந்தை
பொய்யின்ப மெல்லாம் புறக்கணித்த - துய்ய

துறவிக்கு நல்ல துணைத்தோர்கை யெண்ணில்
பிறவிக் கொருமருந்து போரா - நிறைவுதரு

ஞானே தயக்கொழுந்து நானெனதா நின்றுழலு
மூனேடும் வண்ண முரவிக்கும் - வானேனே

யோவுத லின்றி யொருகா லொழிவறவே
கூவுமொரு கோகிலப் பிள்ளை - மேவரிய

நல்லொழுக்கந் தன்னை நடைபயிற்று நல்லன்னம்
புல்லொழுக்கில் லாநெறியிற் போய்ப்படரும்- வல்லிக்

கொடியைம் புலத்தோடாக் கோமளமா னென்று
மடிமகிழ்வு தீர்சாந்தி மாதின் - குடிவிளக்கத்

தோன்றிய கொம்பறத்தின் சூளா மணியிறைபா
லூன்றிய வன்பி னுயிர்க்காவி - தோன்றி
யிறுவதா கின்ற விருணீக்க வந்த
மறுவிலா நன்மா மதியம் - பிறவிலா
வற்றை யிளங்கன் றலறுங் குரற்கேட்ட
கற்று வெனவே கலைகடெரிந் - தற்றபொரு
ளெங்கேனும் யாவ ரிருந்துரைப்பக் கேட்டினு
மங்கே செவிசென் றடைகுவாள் - சங்கேத
மான நலன்குலன்கொண் டாடா ளளப்பரிய
ஞான நலன்குலனு நாட்டுவா - ளூனமிலா
வந்தண ரென்போ ரறவோ ரெனுமுறையைச்
சிந்தையி னென்றுந் தெளிகுவா - ளொந்தைகழல்
பூண விரையுமலர்க் கையாள் புரையறவே
காண வவலம்வரு கண்ணினாள் - பேணிற்
பிணக்கஞ் செயாவழியே பேணுவாள் பேணு
வணக்கஞ் செயாநெறியே வாரா - கணக்கில்லா
வேதனை யுன்னி வெருவி விளங்கொளியா
நாதனை நின் றேத்துகின்ற நாவினாள் - சாதனங்க
ளான வொருநான்கு மாபரண மாயுடையா
ளீன மிருமூன்றி னீடழித்தா - டாணெழிய
வல்லாப் பொருளாயா ளாயுந் தனையாய
வொல்லாம லுள்ள முடைந்துகுவா - ணல்லவிரு

நாலங்க யோகமெனு நல்லுயிர்போற் றோழியர்தம்
பாலங் கிருந்துமிகப் பர்வித்து - மேலங்
கவநீங்கு மெல்லையினி னாமுதே யென்றன்
பவநீங்க நன்னெஞ்சே பாராய் - தவிராதே
மண்டலத்தி னில்லா மலனே பொழியுமுடற் [டிக்
கொண்டூக்கும் யாஞென்றுங் கூறேன்காண்- மண்
கெடுக்கும்வா யாங்கிளியுங் கேட்டார்வாய்க் கேட்டு
வடிக்கையால் வாய்திறக்க மாட்டேன் - செடிச்சேரு
நாற்றமென வோராதே நன்றிதிலே கொண்டாடி [ன்
மாற்ற மனங்கடந்தான் மாமலர்த்தாள்- போற்றிச்செ
றண்டமா ருந்தே னருந்தா ததனுலே [ரைப்பக்
துண்டமாம் வண்டிற்குஞ் சொல்லேன்காண் - கண்டு
கண்ணுய தோழியர்க்குங் கண்ணன் கழல்குறுக
வொண்ணுமை யாலே யுரையேன்காண் - புண்ணி
னெறியும் படைபோ லியம்புவார் சொல்லே
யறியுஞ் செவிச்செவிலிக் காற்றே - னிறையு
நிலையா னதையுற்று நில்லாப் பொருளைச்
சிலையா மெனப்பெரிதுந் தேறிப் - புலையாய
தன்னை மிகமதித்துத் தானழியச் சிந்திக்கும்
பின்னக் கரணப்பெருஞ்சுற்றத் - தின்னலே
பட்டே னிதுகால நின்சீர் பரவாதே
கெட்டே னினியான் கெடாதபடி - திட்டி

தரவல் லவன்றந்த தொன்றினைநீ கொண்டு
வரவல்லை யேயென்று வாழ்த்திப் - பரவெல்லை
வந்தானருட்சொருபா னந்தனென மாமறையாஞ்
சிந்தா குலந்தீர் திருச்சின்னம் - வந்தூதச்
சென்று தொழுதா டிருமேனி தான்காண
வொன்று மறியாடன் னுள்ளத்தே - யின்றிந்தச்
செய்யா னெனையுந் திருக்கடைக்கண் செய்யானே
லுய்யாதென் னாவி யெனவுணரா - மெய்யே
யுளவாய நின்ற வுடன்கூட்ட நல்ல
வளவாகு மென்றென் றழிந்தாள் - வளரு

---

# அரிவை.

மயித்திரி யாமரிவை மாயா விருளைச்
செயிர்த்திட வந்துதித்த தேசு - நபத்தின்மிகு
சத்தான தோருறவித் தாரணிமே லேகிடைக்கிற்
புத்தே ளுலகிற்குப் பொலிவென்ற - வித்தெனவே
யோவா துகற்றோ ருவந்து நுகரவுறுஞ்
சாவா மூவாத் தனிமருந்து - மேவத்
தெவிட்டாது தித்திக்குந் தேறறீச் செற்றந்
தவிர்த்தார்க்கு நல்லதொரு சார்பு - வுவப்பினெடுந்
தாதவர்க்க மாநெறியிற் சற்குரவன் றன்னடிக்கே
மாதவத்தி னாற்சேர மன்னுமலர் - போதக்

குறுகுந் தொறுமுள்ளத் துள்ளே குளிர்ந்து
சிறிதும் பிறியாத் தெறுந்தி . நிறனிறந்த
செவ்வி தருஞானக் கதிரேத் திசையுஞ்சென்
றெவ்வுலகு மெக்கால முமெரித்து - மெய்விளக்கு
மாதித் தனைக்கண் டலர்ந்தெழுமம் போருகநாட்
போதித் தனையும் புறஞ்சோரக் - கோதற்ற
வின்சொற் கரும்பினிமை யெல்லாந் தருமின்ப
நன்சொற் கடற்பிறந்த நல்லமிர்த - முன்சேர்ந்து
கண்ட பொழுதினெடுங் காலத் துறவாகக்
கொண்டு கலந்து குணமனைத்துந் - தண்டறவே
நாடிநடு வாடாம னட்டதற்பி னூழிகையும்
வீடியினை யாததொரு மேன்மையா - னூடி
னெருப்பாய நெஞ்சினையு நீராகப்பேசி
யிருப்பா ளிருசெவியீ தேற்று - நெருப்பெனவே
சொன்னோனை யும்புகழ்ந்து சொல்லுவா ளெந்நாளு
மின்னுசெய் தாரு மிடும்பையற - மன்னு
மினிதாய செய்பு மியல்புடையா ளோர்கான்
முனியா மதிநன் முகத்தா - ளனையா
ரிகழ்ந்திடினுங் கேளா விருப்பா ளுளதே
புகழ்ந்திடினு மெய்யே பொருதா - ளகழ்ந்திடினு
மன்றே மறக்கு மணியிழையாள் செய்நன்றி
கொன்றாலுந் தான்மறவி கூடாதா - ணன்றுப

சீலங் குணனொழுக்கஞ் சீர்வாய்மை செய்தவத்தால்
ஞாலம் பரவ நடந்திடுவாண் — மால்புதல்வன்
வித்தரித்து நான்முகத்தி னலெடுத்த வேதமெனுஞ்
சித்திரப்பொன் மண்டபத்தைச் சேர்பளவிற்- குத்தி
(ரம்போல்
வானீர்மன் டைகா லதனல் வகுத்தமைத்த
வூனர் பொறியா மொருபாவை — தானேநின்
றெச்செயலுந் தான்செய்ய வல்லதுபோ லீதியற்றும்
விச்சையினை நோக்கி மிகமெய்ச்சி - வைச்சுத்
திரிக்கின் றவனைத் தெரியாளா யென்னை
யிருக்கின்ற வாறென் றியம்ப - விரிக்கின்ற
வாரணத்தி னந்தமெனுந் தோழி யனைத்தினுக்குங்
காரணத்தர் தாமாட்டுக் காண்கைகாண், கோரணிக்
(கொண்
மூப்புட் பிணிமுடலை மோகாதி சேர்குரம்பை
கோப்பு பலகொள்ளுங் கூத்தாட்டு - தீர்ப்பாருந்
தாமே திருக்கோலங் காட்டித்தா டந்தென்னப்
பூமே லெமையும் பொருட்படுத்தி - யாமேவ
வந்திடுமே வானவருங் காணுத மாமலர்த்தா
டந்திடுமே யென்றுள்ளந் தான்கலங்கிச் — சிந்தைவரு
மாகுலத்தி னன்மயக்கு மக்கா லமளிமிசை
மாகனுழ்ச்சி தீரவொரு மானுடனு - யேகமுற

மோர்னமா கின்ற மொழியாண் முயங்களவி
னீனமா மாயை யெழுப்புதலுந் - தானுமெழா
வென்னாயி னாளறியே னென்னாதே யத்துபரஞ்
சொன்னான் முடிவிற் றொலையாது - பின்னையவன்
சிரடியார் பாதத் திருமருந்து சேர்ந்திலனேற்
பாருடனே விழ்ந்தழிந்து பாராகு - னோரா
வருளை திருமேனி யாகு மெனக்கேட்ட
தெருளே துணையாகத் தேறி — வெருளார்ந்த
தேடுமா மூவர்க்குந் தேர்வரிய வோர்மேனி
கூடுமேற் கூடென்று கூடலினை - நீடுந் [த்தி
தொழுதிறைக்கு மெல்லையினிற் றோத்திரஞ்செய் தே
யழுதரற்றி யார்த்தெழுந்திட் டாடு - முழுமதஞ்சேர்
பத்த ரொலிய திரும்பல்லியத்தின் முந்திவர
நித்த னெழுந்தருளு நீதியினை - யொத்து
மெழுதா வலம்புரிக ளெம்மருங்கு மார்த்த
பொழுதா மகிழ்வுரைக்கப் போகா - தொழுதோடி
வந்தாள் பெருமான் வருமா மதகரிமுன்
கொந்தா ரணிவளைக்கை கூப்பிக்கொண் - டந்தோவிக்
கோத்தார் கடலுங் குவலயமு மால்விசும்பும்
பூத்தா னெழுந்தருளும் போதகமே — மாத்திரையுந்
தேறாப் பெருங்கவலைச் செந்தீ யறப்பொழியு
மாறாப் பெருங்கருணை மாமுகிலே - யாறாத்

துடிக்கு மனன்வளையுஞ் சூழலெல்லாம் புக்கு
மடிக்கு மதவா ரணமே - நடிக்கின்ற
வேடங்கள் கூட மிடித்தகன்று வேறுரையாற்
றேடும் பரிகராச் செற்றெறிந்து - பாடகலாப்
பத்தருளக் கூடத்துப் பாசமவர் நேசமா
மெய்த்தறியிற் கட்டுண்ணும் வேழமே - தத்து
மயலா கியசமய மார்றையுநி வந்த
வியலாலே யீடழித்து விட்டேன் -: மயல்வே
ளுருபகத்தாற் செய்யு முறுப்பினைநீ பார்த்த
நிருபகத்தார் நேராக நீத்தே - யுருவச்
சமையாத பேராசைத் தாயையுநீ தந்த
வமைவாலே யானு மமைந்தேன் - கமைதீ
ரழலா மதிகோப மாறி வருகின்ற
நிழலாலே யானுறி நின்றே - யுழலும்
விதம்பலவா குட்பிறப்பு மேவுங்கருணை [ர்
மதம்பொழிய யானடைய மாய்த்தேன்- பதம்பணிவா
தங்கணி லேயுறையுந் தத்துவனே யெப்பொழுது
மெங்கணி லேகொண் டெழுந்தருளி - யிங்கென்
னுடைய வுடைமை யுடலுயிரு முற்று
மடைய வுனதென் றலர்தூஉய் - மடவாரு
ளேத்து முரைகளெலா மீசன் றிருச்செவியிற்
சேர்த்துத் திருவுள்ளஞ் செய்தருளிப் பார்த்திவடான்

முன்கிடைத்த தென்ன தவமறியே மூர்த்திபவன் [ன்
றன்கடைக்க ணெல்லாஞ் சாற்றினன் - மின்கொடிநி
ருவித்தா னெல்லாந்தா னுறை ளதிசயித்தாள்
பூவித்தாள் கண்ணீர் பொழிவுற்றாண் - மேலென்
விளம்பு மளவோ வியந்த படி மெய்யே
யுளம்புகுந்தா னென்றுருக லுற்றாள் - விளம்பரிய

# தெரிவை

வெத்தனையோ கால மிறந்துவரு மென்னையுவந்
தத்த னவனுண்ட வற்புதமு -- நித்தனவன்
றன்பெருமை யோராதே யென்னைத் தனக்குரிய
வன்பரிலே கூட்டு மதிசயமும் - பின்போர்
களங்க முறுதவகை காரணனோர் சொல்லால்
விளங்க வியம்பும் வியப்பு - முளம்புகுந்து
பன்னரிய தேனைப் பருகப் பருகவரு
மின்னதெனவொண்ணு விரதமு - மெந்நாளுந்
தொல்லைமறை தேர்ந்த சொருபானந் தன்றந்த
வெல்லை யிலாதபே ரின்பமுஞ் - சொல்லரிய
நல்வித் தகனுரை நாளும் புதிதாகப்
புல்லிப் புணரவரும் போகமு - மல்கு
மலக்கண் கெடுத்த வடியிணையை நாளுங்
கலக்கும்போ துள்ளக் களிப்பும் - புலேத்தக்க

நாயான வென்னை நயந்தபரிசு நினைந்
தோயாம லுள்ள முருகுதலுந் - தூய
சிவனடியின் றிப்பிறிது தோராமே நாயேற்
கவனரு ளால்வந்த வன்புந் - தவிரா
தெமையா ளுடையார்க்கே யெப்பணியுஞ் செய்ய
வமையா தெழுமா தரமுஞ் - சமைய
வொருவடிவ மாக்கி யுலகெலா முய்யப்
பெருவடிவந் தானுடைய பெம்மான் - றருவதொரு
பத்தியா குந்தெரிவை பாதாதி கேசமுறத்
தித்தியா நிற்பதொரு தீங்கரும்பு - முத்திக்
குருவிதுவே யென்ன வுயர்தவத்தோ ரென்றும்
பருக வினிதாகும் பாகு - பரனடிக்கு
வாடப்ப டாதமலர் மாமுனிவ ரெஞ்ஞான்றும்
பாடப் படுந்தெய்வப் பாமாலை - தேடிக்
கலைதடுமா றத்தன்னைக் காத்ததனைப் பார்த்துத்
தலைதடுமா றுகிவருந் தையல் - புலைசேர்
களவுபடா வுள்ளக் கரையழியப் பொங்கு
மளவுபடா வானந்த வெள்ள - முளமேவப்
பாவிக்க வொண்ணாத பாவனை சீர்பரவா
ராவிக்கு நஞ்சாகு மாரமிர்து - மூவ
ருளராய் தேவ ரொருங்கிய காலத்துந்
தளராது நின்ற தனத்தா - டெளிவுதரும்

பொன்செய்த தாள்கள் புகலுங்காற் றன்னுள்ள
மென்செய்ப வென்றறிய வில்லாதா - டன்செய்ப
கண்ணுலுங் கண்ணு ளனையொழியக் காணுதா [வன்
னெண்ணுஞ் சிந்தையில்வே றெண்ணுதா-ளண்ணால
பேரொழிய வேறொன் றும் பேசாதாள் பெம்மான்றன்
சீரொழியக் கேளாச் செவியினாள் - பாரொழிய
வானகத்தை யேபெறினு மற்றவன்பொற் றாளொழியத்
தானிறக்கஞ் செய்யாத் தலையினா - ளூனத்
தழுந்தா வகையாண்ட வர்க்காம் பணியே
தொழும்பாகிச் செய்பத் தொழுவாள் - முழுந்துசீர்
மெய்யடியார் சேர்ந்திருப்ப மேவி யினிதிருந்து
துய்ய சொருபன் றுணையடியாஞ் - செய்ய
மருவார் மலர்சூடி வாதவூர் வள்ள
றிருவா சகமாகுந் தேறல் - பருகா
வுருகா வுயரா வயரா வுணரா
விருபா தமுநா விசையா - பெருகா
வுவவா வுடையா னுடையானென் றோதா
மிகவா தரமே விளையா - வகமே
களியா வெனையாள் கருணு கரனே
யெளியா யரியாயென் றேத்தா - வொளியே
யெழிலார் நிருபா திகனேயோ வென்றென்
றழலார் மெழுகா வழியா - விழியா

வொழியா வுளமா யுடம்பெல்லாந் தானே
விழியா மிருதாரை மென்மேற் - பொழியா
விழையா விதிர்விதிரா விம்மா வியவா
தழையா மொழியுந் தளரா - வழையா
முறையோ வெனமொழியா முந்நீர்போ லேங்காச்
சிறைமீ றியபுனல்போற் செல்லா - நிறைபோகா
தேறு திகையா சிறிதுநகை யாகவுழா
கூறு மிகமிகவுங் கொண்டாடா - மாறுதே
கூத்தாடா விப்பரிசே கூறரிய பஃறொழிலான்
மாத்தாடா வென்னை வலிந்தாளப் - பார்த்ததிருக்
கோலமே கொண்டாடிக் கொண்டு புணர்வதொரு
காலமே யென்றுருகுங் காலத்து - மேலாய
வும்பரார் தேட வுவந்தென்னை யாட்கொண்ட
தம்பிரான் வந்தமையைத் தாரைபல - செம்பொற்
றிருவீதி யிலொலிப்பச் சிந்தனைக்கு முன்னே
வருவனென வேயோடி வந்து - திருமேனி
கண்ணு யிரங்கொண்டு கண்டாளோ கொண்டேத்த
வெண்ணு யிரநாவோ வென்றறியே - னண்ணலவன்
றன்செய்தி பார்த்தோ தனதுநிலை பார்த்தோவப்
பொன்செய்த வாறறியப் போகாதங் - கெஞ்சா
வுருகியோ மேன்மே லுடையான்மேற் காதல்
பெருகியோ வின்பம் பிறந்து - மருவியோ

கற்றைக் குழலொருடங்கிக் காலளவு நேராக
வெற்றவெறு நீராகி விட்டவே — பொற்றொடிதா
னென்செய்தா ளென்னுனை ளென்கேன் சிலசொல்லின்
வன்சொல்லே யச்செவ்வி வாராது — முன்செய்த
மன்ன னெழுந்தருளி வந்த வதிமதுரக்
கன்ன லயிலுங் களியானை — முன்னேதன்
ஞாமை யொன்று மொழியாதன் ஞவிமுத
னேராகி முன்னே நிறனழிந்து — சோரா
விழுந்து கிடந்த விளங்கொடியை மெய்யின்
முழுந்து மடியவர்கண் முன்னிச் — செழுங்கமலப்
பாதோ தகந்தெளித்துப் பற்றிப் பரன்பாதப்
போதோடு சென்னி பொருந்துவித்து — வாதாகி
மாறுஞ் சமய மயக்கங்க ளாகிவரு
மாறுங் குறுகா வகையகற்றி — வேறுந்தா
னேதுங் கலையகற்றி யோரா வுலகத்திற்
பேதங்க ளாகிவரும் பித்தகற்றித் — தீதகலத்
தொண்ட ரடிப்பொடியே பூசிமிகத் தோத்திரமே
கொண்டு கழித்தாள் குறைகால — முண்டா

## பேரிளம்பெண்.

மனைவு நிலைபாமை யவாவறுத்த லாற்றல்
சலைவு நிறைவறிவு சார்வு — கலையினுடன்

வாய்மை யினிமைதவ மாறு வளியுவகைத்
தூய்மை பெருமை துணிவுடைமை - தீமையிலா
வன்பு கருணை யருள்பே ரறமுடம்பா
யின்பமிகு மெய்யுணர்வே யிங்குயிராய்த்—துன்பமிகு
பாச மகலப் பரனமைத்த சாந்தியெனும்
பேசு வரியவெழிற் பேரிளம்பெண் - ணேசமிகு
முள்ளத் தமிர்த முகந்து நுகர்பவர்க்குத்
தெள்ளத் தெளிவுதருந் தேற - லுள்ளத்தி
னுபாத காமாதி யாகு மறுபட்டி
மேயாமற் காக்கு மிகுவேலி — தூயசீர்
நல்லோ ருளத்தடங்கு ஞானே ததியுலக
மெல்லா முபசமன மானவிடன் — சொல்லரிய
பெம்மானை யன்றிப் பிறிதொன்றுங் காணுதே
சும்மா விருக்குந் தொழிலுடையாள் - பொய்ம்மாயப்
பந்தமொடு வீடு மற்றும் பகரவருந்
தொந்தங்க ளில்லாத சோதியாள் - வந்திறைஞ்சும்
வானுட ரேத்து மரசுறினு மண்டழல்சே
ரூனு கியநிரய முற்றிடினுந் - தேனுருஞ்
செஞ்சாந்து கொண்டணிந்து செம்மலர்தூஉய்த் தொ
நஞ்சாந் துயர நலிந்திடினு - மெஞ்சாத [ழினு
செல்வ மிகவே சிறப்பினுந் தீதாய
நல்குரவே வந்து நயப்பினும் - பல்கியே

யென்று மிளமை கழியா திருப்பினும்
பொன்று முயிரின்றே போயிடினு - மென்றும்
பெரிதாக வேபுகழ்ந்து பேசிடினும் வீசு
மெரிபோல வின்னா செயினு - மொருபோதுஞ்
சிந்தையில் வேண்டல் செறுத லிவையன்றி
வந்தவையே கண்டு மகிழ்ந்திருப்பா - ளைந்திடவே
வெய்தாய செய்பவர்க்கு வெய்துயிர்த்து வெய்யநா
கெய்தாது வேண்டி யிரங்குவாள் - வெய்தா,
விடும்பை வருங்கா லிடையா தனைமந்த
கடன்கழிந்த தென்றே கழிப்பாள் - விடன்போ
லிறவு விளைப்பவரை யின்றவரைத் தானே
றுறவு பகையென் றுணராள் - சிறிதுணரிற்
செற்றுடம்பை யீந்தார் செறிவுற்றார் தீமைதரப்
பெற்றுடம்பை யீந்தார் பிறரென்பாள் - மற்றுற்ற
வெத்தன்மை யோர்க்கு மெழிலார் பளிங்கேபோ
லத்தன்மை யாகு மணியிழையாள் - சுத்த
குணநா றியமொழியாள் கோதிலா ஞான
மணநா றியமதுர வாயா - டணியாதே
கைமாறு வேண்டாவிக் காசினிக்கு வான்புனலே
பெய்மாரி போலீயும் பேரருளாள் - பொய்மேவு
மூனடைத்த வில்வாழ்க்கை யோர்வும் பழக்குலகிற்
றனடந்து காட்டுஞ் சரிதையா - ளேனோர்

வினவும் பொருளொன்றில் வேறறவே யெல்லா
மெனதென்ன வல்ல வெழிலான் - முனிநல்ல
சீரார் சடகோபன் றித்தித்த சொல்லொழிய
வோரா பரண முவவாதாள் — போாத
வன்பா யுதனை யனவரத மாராதே
தன்பாற் புணருந் தனமுடையா - ளின்பம்
வழங்கும் பெருங்கண்ணன் வந்தருள முன்னே
முழங்கும் பெருங்கொண்டன் முந்தத் — தழங்கு
கலையை விடவெ'றியா கற்பனைகள் சீறு
தலையை நிலமிசையே சாயா — பலபலென
மையழியக் கண்மல்கா வாழ்த்தா வருகாதன்
மெய்யழியப் பொங்கா மிகவிம்மா - மெய்யே
யொருபா வனைசெய்யா வோடிச்சென் றண்ணல்
வருபா வனைகண்டு வாழா - பெருகாதன்
ஞவி தளரா வகமகிழா வவ்விடத்தோ
ரோவியம்போ லாகா வுயிர்ப்பெய்தா - கோவைக்
கழறு கலுழா களியாகண் செல்லா
வுழறு வுயிரா வுணரா — குழறு
வருமாற்ற முந்தளரா வையகத்தோ ரெல்லா
முருமாற் றெனச்சிலர்தா னோதா — பெருமானே
யெவ்வுயிர்க்கு நீயெம்மா னென்னின் றென்னெஞ்சின்
வெவ்வுயிர்ப்பை நீமாற்ற வேண்டாவோ தெவ்வர்புரந்

தியா லழிவித்த திண்பொற் சிலேயின்றிம்
மாயா புரமெரிக்க மாட்டாதோ — வாயாவென்
னேழு பிறப்பு மெறியு மறிவாழி
யூழு மிறவெறிய வொண்ணுதோ - வாழித்தேர்ப்
பார்த்தன் வினையகலப் பண்டுன் பவளவாய்ச்
சேர்த்தசங்கமென்வினைக்குச் சேராதோ-நேர்த்தசுரர்
தாமாய் நீயெடுத்த தண்டா யுதம்விடயத்
தேமாக்கு நெஞ்சை யிடியாதோ - சார்பாதி
நாளுளு மீராமே ஞானவா ளாளிவற்றின்
வாளுளை யின்றீர வாராதோ - பேணிநினைக்
கொண்டாடுந் தொண்டர்கடங் கூட்டத் துடன்கூடித்
திண்டாட்ட நாளொருநாட் டீரேனே - பண்டியானை
மூலமே யென்றழைபா முன்னமே வந்தருளுங்
கோலமே யென்பணியுங் கொள்ளாயோ — வேலநீ
தானுகப் பார்த்துந் தவிரா தெனையொறுக்கு
மூனு கியநோ யொழியாதோ - யானுகக்
கூட்டியமா மாயக் குரம்பையினி லென்னைக்கூத்
தாட்டியநா ளின்ன மமையாதோ - கேட்டருளாய்
வையந் தனிலென்னை மாற்றினுன் மற்றுலகு
செய்யுந் திறனுனக்குத் தீருமோ - மெய்யிலெனைக்
கூவி யருளாத வென்னேநின் கோலவருள்
பாவி யளவும் பழுதாமோ - தேவே

சொரூபானந் தச்சுடரே தூயவனே வெய்ய
வருபாசந் தீர்க்கு மருந்தே - குருபரனே
தாதாவே சங்கரனே மாலே சராசரத்திற்
காதார மேயறிவே யற்புதனே - காதனே
யென்று பலபலதா னேத்தினு னிப்பரிசே
துன்று வளைகலைநாண் சோர்வெய்தி - நின்று
பலதைய லார்தம் பரிசழிய விந்த
வுலகுய்ய வந்தா னுலா.

---

## நேரிசை வெண்பா.

பழுதிலா வன்பர் பணிந்தெழுந்தார்த் தாட
வெழுதிடா மாமறைநின் றேத்தத்-தொழுதிறைஞ்சுந்
தொண்ட ருளம்புகுந்து சோமாம லாருயிரை
யுண்டருளப் போந்தா னுலா.

நாமார்ந்து பாமாலே சாத்தினு ணன்கமலே
யாமாது பூமாரி யார்க்கினுண் - மாமலர்த்தாள்
பூண்டார்ள் குலநிலமான் போக்குநாள் வந்தெம்மை
யாண்டா னுலாப்போந்த வன்று.

உலா-முற்றிற்று-ஆக-ஈகூஉ.

---

பதின்மூன்றாவது

# சிலேடையுலா.

## தத்துவவாக்கியம்.

### குழகன்.

ஓங்கு விசும்பு முறுகாலு மொண்டீயும்
வாங்கு திரைக்கடலும் வையகமு — நீங்காத
சத்தாதி யிற்பிறக்கச் சாரும் புலனைந்தும்
வித்தார மாக விவைவிளைக்கச் - சித்த
விகாரத் துதிக்க வியன்புலன்வெவ் வேறும்
விகாரமுஞ் சித்தம் விளைக்கத் - தகாது
தெரியாத மாயையினிற் சித்தந்திகழக்
கரியாய சீவன்கட் டோன்றி - வரமாயை
காலத்தின் வந்து கரிபிறக்கக் காலத்தை
மூலப் பகுதி முளைப்பிக்க — மூல
முனையுணர்ந்த முற்றின் முதன்முடிபாய்த் தானே
தனையுணர்ந்த போதத்தே சாராத் - தனையுணர்புந்
தன்க ணுதிப்பத் தனக்குவயக் கேடின்றி
முன்கணிற் றோன்ற முழுதின்றி - யென்கண்ணிற்
றோன்றிய தோன்றறன் சோதித் திருமேனி
யான்ற முனிவர்களு மண்டர்களு - மூன்றாய
மூர்த்திகளுங் கண்டு முடிவணங்க முன்மூர்த்தஞ்
சாத்திக் கயிலா சனத்திருந்தோ — னோர்த்துணரச்

சொல்லர்ன் மறைப்பொருடானென்றுமன் மாதவர்க
ளெல்லாரு மெங்கட் கியம்பென்னக் — கல்லாலின்
கீழிருந்து யோக சரிதை கிரியைகளிற்
ருழுகின்ற நெஞ்சினர்க்குத் தானருளிக் — கேழிறந்த
ஞானத்தை நால்வர்க் கருளி நலஞன
மோனத் திருந்த குருமூர்த்தி — வானுர்
திரண்டிவ் வுலகுந் திகைப்ப நகைப்பப்
புரண்டும் பெரும்பித்தர் போலே — யிரண்டு
கரங்குவியக் கம்பிக்கக் கண்சொரியக் கண்ட
மரங்களு நின்றிரங்க வாய்விட் — டிரங்கும்
பெருங்கருணை நோக்கிப் பிறந்திறந்திக் காலம் [ளின்
வருங்கருவை யோரிமைப்பின் மாய்த்த— டரம்பொரு
வல்லபத்தை நோக்கிமிகும் வானவர்க்கு மெய்தரிய
துல்லபத்தை நோக்கித் தொழுதிறைஞ்சிக் — கல்லு
மொருவா சகத்தை யுருக்கிநீ ராகத்
திருவா சகந்தந்த தேனைக் — குருவாய்ப்
பெருந்துறையி னன்று பிடித்தாள வெண்ணிக்
குருந்துறை நல்கியசெங் கொண்டல் — திருந்தியசீர்ச்
செம்பொன்செய் காழிச் சிறுவன் றனைஞான
சம்பந்த ணுக்குந் தனிவள்ள — ணம்பியைப்
புத்தியு முத்தியுஞ் சேரப் புணர்விக்க
வெத்தி யருட்டுறையி னேற்றுவான் — கைத்தலஞ்சேர்

வள்ளத் தமிர்துபோல் வாகீச ருள்ளத்தே
தெள்ளத் தெளிந்தூறித் தித்திப்பான்- வெள்ளத்தே
யுள்ள புவன மொழியாம லுண்டருளிப்
பள்ளிகொள் கின்ற பரந்தாமன் - றெள்ளி
யறவீன துணையென் றவைவரினும் பார்த்தற்
குறவேமேவித் தன்பெருமை யுன்னான் - மறமேவுந்
தேரா ழியைப்போகச் செய்வான்போற் றீயபவப்
பேரா ழியைப்போகப் பேசுவான் - சீரார்
முழுதுணர்ந்த தெய்வ முனிக்கணங்கள் போற்றும்
வழுதி வள நாடன் மாறன் - பழுதிலா
வெண்ணார் மறைப்பொருளை யெல்லாருந் தாமறியப்
பண்ணார் தமிழாற் பரிந்தெடுத்துக் - கண்ணீர்
திரைக்கொண்டு நெஞ்சுடைப்பத் தித்திக்கும் வார்த்
யுரைக்குந் திருநா வுடையான் - வரைப்பரிய [தை
சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த சோதி யெனத்துதித்து
வாழ்ந்திருக்க வைத்த மணிவண்ணன்-சூழ்ந்தொழுங்
[காய்த்
தீராத சித்தமெல்லாந் தீர்ந்தற்று மீண்டிங்கு
வாராத தமுத்தி மார்க்கமென - நேராகச்
சாதிக்க வென்று தரும்வேடங் கொண்டு
போதித் திருநிழல்சேர் புண்ணியன் - தீதி

லசோக நெறியை யறிவிப்பா னாக
வசோக நிழலமர்ந்த வண்ண — னிசாசரர்சேர்
தென்றிசை தானே சிவலோக மாய்விளங்க
நன்றிசை புத்தேளிர் நாடெலா — மொன்று
மரணம் பிறவியுற மாசிலா வந்தக்
கரணங் கடந்த கழல்க — டரணியிலே
கையகத்தி னெல்லிக் கனியென்னத் தான்கருணை
செய்யத் திருவுள்ளஞ் செய்தருளி — மெய்யே
பிறந்தவர்கள் போலே பிறந்தான் பிறழா
வறம்பொரு ளின்பம்வீ டாகுஞ் — சிறந்தபொரு
ளெல்லாம் வளர வளர்ந்தருளி யெம்மருங்கும்
பல்லாண் டிசைப்பப் பழமறைக — ணல்ல
புகழ்மாது திக்கெட்டும் போக விசையை
நிகழ்மாது வந்து நிலவ — வகமகிழ்ந்து
பூவின் மகளும் புவிமகளும் பூங்கலைசேர்
நாவின் மகளு நயந்தினிது — சேவிப்பச்
சாந்தி முதலாந் தவமாதர் தாம்பெற்ற [ன்
பூந்திருவை யென்னைப் பொருட்படுத்துக் — காந்துமன
போகும் படியளித்த பொன்னைப் புலன்கடந்தோர்
யோகம் பிரியாத வொண்ணுதலைச் — சோக
மொழிக்கின்ற தாயை யொழியாதென் னுள்ளே
விழிக்கின்ற ஞான விளக்கை — வழுத்துஞ்

சுருதி மிசைவாழுந் தோகையை நாயேன்
மிருதியி னின்றகலா மின்னைக் - கருதித்
தொழுதடியே னேத்துஞ் சொருபானந் தன்றேன்
முழுதும் பெறுவதற்கு முன்னே - பழுதி
லருந்தவஞ் செய்த வறிவுடை யானைப்
பொருந்தாவென் பொல்லா மனங்கண் டிருந்துவைத்
தாதரித் தென்னை யடியா ருடனண்ட
பேதையை யென்றும் பிரியாத - மாதவத்தோ
ஞராத வன்பா லடியா ரடிபோற்றச்
சீராக வீற்றிருந்த செவ்விக்க - ணோராத
வஞ்ஞான னென்னு மவனு லடர்ப்புண்ட
விஞ்ஞாலத் தோர்க ளிடரறிய - மெய்ஞ்ஞானச்
சோதி மணிவாயிற் றூங்கு மணியொலிபோய்
நாதன் செவிப்புலத்து நாடுதலுங் - காதளவுஞ்
செல்லுந் திருக்கண் சிவவா திருப்புருவ
வில்லுஞ் சிறிது விரையாது - நல்லமலர்ச்
செவ்வி முகம்பொழுது செய்யாது சிற்சிறிது
கொவ்வை யிதழ்முறுவல் கொண்டதா - லவ்வளவி
லிக்கார் சிலையு மிகல்செய்யு மாதரெனுஞ்
சக்கரா யுதமுந் தரைப்படுத்தி - மிக்க
மகரக் கொடியறுத்து மன்மதனார் நர்மம்
பகரப் படாவண்ணம் பண்ணிச் - சகமடையத்

தங்கோன் வளனை தழைக்கத் தனிஞானச்
செங்கோ னடத்திச் செயத்தம்ப - மெங்கெங்கு
நாட்டி மிகுஞான நாட்டஞ் சிவந்துபோர்
வேட்ட நிருபகனும் வேந்தனும் — வாட்டமிக்
வாகத் தெழுங்கோப வாரழலை யந்நிலையே
போகத் துறந்த பொறைக்கடலுஞ் - சோகமிகு
மாசை யெனுமந்த வாழ்கடலைத் தூர்த்திறைவ
னோசை யுலகெங்கு முண்டாக்கித் - தேசமெலா
மந்தோ வெனமுனிவ ராதரிக்க நின்றதிறற்
சந்தோட னென்னுந் தலைவனுந் - தொந்த
மதமாற் சரிய முதலான மாயா
விதமாம் பலவகையும் வென்ற - விதமா
மியம நியமாதி யென்றுலகி னென்னுஞ்
சயமுடைய தார்வீரர் தாமு — நயமேவு
நிற்குணன் றன்னை நினையா வகைசெய்யு
முக்குணந் தன்னை முனிந்தோட்டித் - திக்கனைத்துந்
தேனக்க வாகை புனைந்து சிறப்பெய்தி
யூனக் குரம்பை யொழிப்பிக்கு - ஞான
வடிவார் சுடர்வாள் வலங்கொண்ட செய்ய
வடியாரும் பாதத் தணைந்து - முடியாத
வின்பனை தேனை யிறைவனை யிங்ஙன்வரு
மன்பனை யன்பின் விளைபாரமுதே - முன்பமைந்த

விண்சிறந்த தேவர்க்கு மேலாய் விளங்கொளியே
பண்சிறந்த வேதப் பரம்பொருளே - கண்சிறந்த
தேவாதி தேவே திருவுலாச் செய்தருளிக்
காவா யெனவுரைத்துக் காதலிப்பத் - தாவிலா
மெய்க்க ணருந்தவர்கண் மெய்ந்நீ றணியவேண்
மைக்கண்மட வார்மீது வந்தணிய — மிக்க
வணியா லணியா வழகுடையா னன்பாக்
கணியார் களப மணிந்து - பணிபவரும்
பொற்றொடியா ரல்குல் பொருந்துங் கலைபோகக்
கற்றறிவார் நெஞ்சிற் கலைபோக - நற்றவர்த
முண்ணிலவு ஞான வொளிவிரவ வொப்பரிய
வொண்ணிலவே போலு முடைசாத்தி - வண்ணவளை
கைகழல மாதரார் காதலடியவர்கண்
மெய்கழல வீரக் கழல்சாத்தி - மைகலந்து
நீண்ட விழியார் நிறனழிந்து பொன்பூண
மாண்ட விமையோர் மயல்பூண - வாண்ட
வருளா பரண வழகெறிப்ப வேறுந்
திருவா பரணங்கள் சேர்த்தி - மருவுமவர்க்
கங்கழுநீர் மாலை யருள வளிமுரலுஞ்
செங்கழுநீர் மாலை சிலசாத்தி — பெங்கண்மே
லத்தேவர் தேடு மடியேற வானந்தப்
பித்தேற மாயப் பிறப்பேற - வித்தலத்து

மேதகு வானவர் விச்சா தரரேறப்
போதக மேறிப் புறப்பட்டு — நாதப்
பறையு முகுந்தன் பணிலமும் போதோ
ளறையு மறைநான்கு மான்மே — லிறைவன்கை
வீணையு மற்றுள விண்ணோ ரியம்பலவுந்
தாணயந்து போற்றத் தவஞ்செய்து — நீணிலத்து
மன்னர் முரச முதலாக மாகடல்போன்
முன்னர் முடிய முழங்கிவர — மின்னளிசேர்
தெய்வ மதிக்குடையுந் தேவ ரிடுகுடையும்
வையக மன்னர் மணிக்குடையு — மையந்
தடுத்து மலர்ப்பதத்தே தாழ்வித்து முத்தி
கொடுக்க வெடுத்த கொடியு — மெடுத்த
விடைசேர் கொடிமுதலா விண்ணோர் கொடியும்
படிவேந்தர் பல்கொடியும் பைம்பூண் — மடவார்கள்
வல்லபத்தை மாற்று மகர நெடுங்கொடியு
மல்லனவு மோங்கி யழகாரத் — தொல்லுலகி
லேந்த வெழிலார் பதியாகி யிப்புவியிற்
போந்த தெனலாகும் பொங்கொளிசேர் — சேந்தை
யணியார் கொடிநுடங்கு மம்பொற் சிகர
மணிமாட வீதி வரலு — மணிமலர்[illegible]ரள்
சேருந் தவத்தோர் சிரமுந் தெரிவையர்சேமன்
மாரன் சிலையும் வளைந்ததா — னோராக

வச்சங்க மற்றார்க ளச்சங் கழற்றினார்
கைச்சங்க மாதர் கழற்றினா — ரெச்ச
விடையார் வடிவழகோ வெல்லா வழகு
முடையா னிவனென் றுரைப்பார் — வடிவுடைய
னாதலா லந்த வனங்கனே யென்றிவனை
யோதலர் காவென் றுரைத்திடுவார் — போதப்
பிரம னேயென்பார் பித்தேற்ற வந்த
பரமனே யென்று பகர்வார் - பரமனே
யின்றும் பிறந்தானு மெம்போல வின்றுளா
லொன்றும் பிறவா தினக்கென்பா - ரின்றிவனைக்
கண்டாலுங் காணா திருந்தாலும் யாமென்ப
துண்டோ நமக்கென் றுரைசெய்வார் — கண்டே
யுருகியா ராமே யுயிரெல்லாம் வாரிப்
பருகினா னென்பார் பதைப்பார் — தெரியுங்கா
லாவி முழுது மளிப்பா னழிப்பானித்
தேவனே காணென்று செப்புவார் - ரோவியமே
நேரென்ன நேரே நெடுங்க ணிமையாமல்
வீரன் பதத்தே விழிவைப்பார் - நீராய்க்
கரையாநின் றேமென்பார் கண்ணாநின் கண்ணிற்
றிரைபோ லெழுமதுயிர்க ளென்பார் — பாவி
வருமாத ரிப்பரிசே மாலுழந்து செல்லச்
செருமா மதன்வெகுண்டு சென்று - னொருமடமா

ஞேது முனிவர்க் குவம மொருமூன்றி
ஞதி யினிதா மறிவருப்பு — வேதம்
பகரு முரைபயிலும் பண்டிதர்போற் றுயர்
புகலு முரைபயிலும் பூவை - வகைய
வயலொன் றறியா தவர்போ லுலகத்
தியல்பொன் றறியா வியல்பாண் - மயலின்றி
மாண்ட துறவினர்போன் மன்மதன்கை மாமலர்க
ளண்ட மிகவஞ்சுஞ் சீரடியாள் — வேண்டுநாட்
செல்லு மளவுந் தெரியா துடனுறையுந்
தொல்லை வினைபோற் றுணைமுலையா - ணல்லன்பா
லீசற்கா ளாகார்போ லெஞ்ஞான்றும் பந்தத்தே
பாசத்தாற் கட்டப் படுங்குழலாள் - பேசுங்காற்
காம மடையார் கருத்தேபோற் கள்ளமெனு
நாம மடையா நயனத்தாள் - - ஞம
மயல்காட் டுடல்பிறந்து மாய்ந்து வருகின்ற
வியல்காட்டு கின்ற வெயிற்று - ளயனீத்து
தீது நலன்கடந்தோர் போலச் செழுஞ்சாந்தும்
பூதியு மொன்றாகப் பூசுவாள் - போதமிலாப்
பேதை யருச்சனைபோற் பீடுகெழு மாமலர்கொண்
டாதேரிச பாவைக் கணிகுவாள் - யாதுங்
கடவு ளறிவதனைக் காணுமே கண்ணின்
மடலா மறைசெய்கை மான — வுடனிருந்தார்

கன்கண் டிடாமற் சரந்தாளாய் கைமலர்கொண் [ட்
டொண்கண் புதைத்தங்கொளித்திடுவா-ளொண்சாந்த

சற்பமெனக் காணலாற் றற்பரங்கா ணுதுசகம் [தர்
பொற்பமையக் காண்பவரே போல்குவாள்- கற்பிதத்
தாமறித ருனறித லாகின்ற தன்மையாற்
றாய்மறையே யொக்கின்ற சொல்லினு - ளர்மதனுக்
காசைப்ப டாதே யழுங்கி யருள்செய்யு
மீசற் பணிவுற் றிரப்போர்போற் - பர்சத்தான்
மம்ம ருழந்து மதியழைக்க வாராவென்
றம்மனைநீ தாவென் றழுங்குவாண்- மெய்ம்மைபோல்
விண்ணும் வளியு மொளியும் விரிகதிரு
மண்ணு மதியு மறிகடலும் - - பண்ணி
யழித்து விளையாடு மண்ணல்போற் சிற்றி
லிழைத்து விளையாடு மெல்லை - வழுத்த
மதவா ரணங்கண் மதவா ரணத்தின்
மதவா ரணம்போல வந்த - விதமான

வண்டத்தோ ரப்புறத்தோ ரலால முண்டிருண்ட
கண்டத்தோ னன்முகத்தோன் கார்நிறத்தோன்-ரு
[ண்டுற்ற
விண்ணுளர் நிற்ப வினையேனை யாண்டருளுங்
கண்ணுளன் றன்பவனி கைதொழுத - வொண்ணுத

ருயரை நோக்கியிவர் தாமா ரெனவியப்ப
நாயனுர் காணரா னு நான்முகனு - மாயவனும்
பண்டை மறையும் பரவுங் கடவுள்கா
ணண்ட மமைத்த தளித்தழித்துக் - கொண்டு
விளையாடும் வித்தகன்காண் வேதனையில் யானின்
றளையாமல் வந்த வருள்கா - ணுளவா று
காட்டுங் கருணைக் கடல்காண் கலந்தன்பர்
நாட்டந் தரவந்த நாதன்கா - ணட்டு
மவனிமுத லாறுக் கப்புறமாய் நின்ற
சிவனிவன்காண் டேவர்க்குந் தேவா - மிவனைநீ

பெண்ணமிர்தே கைதொழா யென்றிரப்பப் பெண்ண
மிர்துங், கண்ணெதிரே கண்டவனைக் கைதொழுதும் [வண்ண
மிழவாடன் பேதைமையி னேதுங் குறையா
ளழுவா ளவனருள்கண் டல்ல - வழுதாளுந்
தன்னை யவர்க்களிக்கத் தானல்ல தத்துவன்றாள்
பின்னை யவன்பாற் பெறவல்ல - பொன்னணியு
மாலையும் வேண்டியதே யாதலான் மற்றவளைச்
சால நகைத்தகன்றான் றம்பிரான் - மேலோ
ருருகின்பம் போல வொருநாட் கொருநாட்
பெருகின்பத் தாளோர் பெதும்பை - யருநூல்

விரித்த பொருட்கு விவேகம்போல் வேணூல்
விரித்த பொருட்கு விவேக - முரித்தாக
முந்தைமேற் காணிபெறின் மூர்க்கர் சிறிதொழில்போ
லிந்த வுலக மிடரெய்தச் - சிந்தை
யுறுநான் சிறிதா னுருவிலான் கைவிற்
சிறுநா ணெறியச் சிறப்பா - லிறைவன்மேற்
றன்னன்பு மேன்மேற் றழைக்கத் தழைக்கவிறை
யின்னன்பு மேன்மே லெழுதல்போன் - மன்னுங்
கரும்புருவ வில்வளைப்பக் காம னுதலிற்
கரும்புருவ வில்வளைப்பக் கற்பாள் - குரம்பை
கடிய நினைந்தவர்போற் காமவேள் காதன்
முடிய நினைந் தோதி முடிப்பாள் - படிபோர்
மனனே யியல்பு மருவித்தான் சேர்ந்த
வினனே யியல்பா மியல்பா - ளெனவேனிற்
கோமான் மகரக் குழைகூடி நாடோறுங்
காமாக மங்காட்டுங் கண்ணினா - ளாமா
றறியாது தாங்குபவர்க் கல்லல் விளைப்பார்போற்
குறியாது தோன்றுங் குயத்தாள் - வெறிமலர்ப்பூங்
கண்ணார் பரவக் கனகமணிப் பந்தர்க்கீழ்ப்
பெண்ணா ரமிர்தம் பெறற்கரிய - கண்ணாளன்
றாரணிநீர் தீக்கால்விண் டானன்றி வேறின்றி
யோருணர்வாய் நின்ற வொளியொன்றுஞ் - சேரப்

பிடித்தென்னை யாண்ட பெரியோ னருளா
லிடித்த வினைக்குன் றிரண்டு - தடுத்தென்று
நாட வரிய நளினமலர்த் தாளிணையா
லோட வுதைத்த குணமூன்றுந் - தேடுமறைக்
கேலாது நின்ற விருபத்தி னன்கொழிய
மேலாகி நின்ற வெறுநான்கு - மேலாழிப்
பாரய வுலகம் படைப்புமுதல் பரமா
காயத் தொழில்க ளவையைந்து - மேயாமற்
கூறுபடு மாறுறிற் கூடாமை நாயேனை
யாறும் வகைசெய்த வவ்வாறும் - வேறிலா
வண்ண லடியை யடையா ரடைவரென
வெண்ணு மெழுமை யெழுபிறப்பு - மெண்ணிக்
கழலா வினைகழலக் காசினிக்கண் வந்த
கழல்பாடிப் பாடிக் களித்துக் - கழலாட
மாலு மரனு மலரோனு மாமறைக
ளாலும் பரவரிய நாயனார் - ஞாலத்தே
யென்னை யடிமை யுவந்தருளி யென்னிலே
தன்னை யளித்தருளுந் தம்பிரான் - பொன்னித்
திருநாடுங் கன்னித் திருநாடும் வாழக்
குருநாத னுங்கோலங் கொண்டு - வருநாதன்
போர்தக மேற் கொண்டுவரப் பொங்கொளிசேர் சித்தர்
களுஞ், சாதகரும் வானோருந் தானோரு - மோது

மறையோரு மாதவரு மால்கொண்ட வாறு
துறையோரும் போற்றித் துதிப்ப — விறையோன்
வரும்பவனி கண்டு மலர்சே ரளகச்
சுரும்பினமும் வண்டுந் தொடரக் - கரும்பனைய
சொல்லா ரடிவணங்கத் தூய்நகையுந் தேர்மறுகிற்
செல்லா வணங்காச் சிவனிருந்தோ - ணல்ல
மலர்நோக்க நோக்க வருபானு நோக்க
நிலனோக்கு வாள்போல நின்று - சிலநோக்கிச்
சொல்ல வதரந் துடியாத் துணைவியரா
முல்லை நகையார் முகநோக்க — மெல்லவொரு
காதல் கலந்தமையுங் கண்ணிணைகள் பண்டையில்வே
ரூதலையுங் காணு தமர்செய்ய — வீதொன்று
பெற்றோ மெனமதனன் பேரின்பமெய்தியிரு [ருத்தி
பொற்றோளும் பார்த்துடனே போயினன் — மற்றொ

---

## ம ங் கை

மங்கை யிறைவன் வடிவுபோன் மாமுனிவர்க்
கெங்குந் திகழு மெழிலினள் — சங்கை
துணிக்கு மொளிக்கொளியாஞ் சோதிபோற் சோதி
யணிக்கு மணியா மணங்கு — கணிக்கின்ற

கந்தமுற் றைந்து முளதாய்க் கருணமயாய்
நந்துஞா னத்தியல்பு நாடரிதாய்ச் - சந்த
வகிலா லயமாகி யந்தா ரணிசேர்
நிகிலர் வியுமயக்கி நீண்டு - புகல்கின்ற
விஞ்ஞால மெல்லாம் பெறுகின்ற விண்ணியல்பா
லஞ்ஞானம் போனு மணிகுழலா - ளெஞ்ஞான்றுஞ்
சீரார் குணனில் சிறியோர்போற் றுள்வளைந்து
போராடா நிற்கும் புருவத்தா - டோராப்
புலவ ரருளிலரைப் போற்று முரைபோ
லிலவையே காட்டு மிதழா - ணலன்மிகவே
தித்தியா நிற்குஞ் சிவனடிசேர் பத்திபோன்
முத்திபா தென்னு முறுவலாள் - சுத்த
வுணர்வோர் மதிபோன் றொளிர்முகத்தா ணல்ல
புணர்வேபோ னாளும் புதியா - டணிவில்போற்
காதளவாய் நின்றகயற் கண்ணாள் கலர்போலச்
சூதளவாய் நின்ற துணைமுலையாள் - போத
மொருக்குங் கலரையுந்த முச்சிமேற் கொண்டு
பொறுக்குந் தபோதனரே போல - விறக்கொண்டு
தீங்கு வினையிலோர் செந்தனத்திற் கென்றுமிக
வேங்கி வருந்து மிடையினு - ளீங்காசை
பேதளவுண் டவ்வளவுண் டாதலா னிப்பிறப்பி
னீதி யெனலா நிதம்பத்தாள் - போதம்போற்

பல்லவத்தைவென்று படிமந்த விர்த்தறிஞர்
வல்லபத்தை மாற்றி மருவாரைச் - செல்லுற
வையம் புகுத்தி யடைந்தோரை நெஞ்சுருக்கி
வையம் பணிக்கு மலரடியா — ளையம்பான்
மைம்மலருஞ் சிந்தையர்கோன் மைக்கண் மடந்தைய
ரோ, டம்மனைகொண் டங்குவிளை யாடுவாண்— மெய்ம்
[மைதா
னென்றே பலவோ வுருவோ வருவோமற்
றன்றே பொருண்முழுது மாகுமோ - வென்று
முளதோ விலதோ வொளியோ விருளோ
வெளிதோ கரிதோ விளங்க - வெளிதோவென்
ருதி மறையு மரனுந் திருமாலும்
போதி னுறைகின்ற புத்தேளு - மோதும்
பெருமா னுலகிற் பிறந்தவர்கள் போலே
வொருமா னுடவேட முற்றிங் — கருளால்
வழங்கிய வின்ப வளநாடு முன்னு
முழங்கிய நாத முரசுஞ் - செழுங்கமழ்நீர்த்
தாருந் தருமக்கொடியுந் தரணியெனு
மூரு முடையா னுலப்பிலாப் - பெருங்
கருணைமுகில் சேர்மலையுங் காதன்மிகு மன்ப
ரருவியெனக் கண்சொரிந்த வாறு — மருவிவரும்

போதகமு ஞானப் புகர்வாளும் பொற்றொடியாண்
மேதகவே பாடி வியந்தாடும் - போதி
லிருபடியு மிரத்தினப் படியு மிடையில்
வருபொழுது வச்சிரப்படியும் — பருதித்தே
ரேறிற்றளப் படியு மிவையனைத்து
மாறின் மரகதமு நீலமும் — வேறும்
வடிவுள தாகி வருபவ வாகப்
படிபல சாத்தும் பகடு - கடமுதவி
வந்து சொரியு மத்சலதிக் கெண்ணவரு
மெந்த வுததிகளு மென்போதுஞ், — சிந்திக்
கதிக்கும் பதினு லுலகுங் களியாற்
றுதிக்கை வழங்கிவிடுந் தூளி - பொதிக்கும்
விழியால் வடவையோ விண்முதலா வேது
மழியாத வெல்லா மழியு - மழியா
வுயரா வகலா வுளவெல்லை யெல்லா
மயிரா பதத்தி ளளவே — பெயரா
வடக்கெல்லை தெற்கெல்லை வான்குணக்கி னெல்லைக்
குடக்கெல்லை போதுமே கூடந் — தடக்கைக்
கவள மகிலாண்டங் காரோ வுருவம்
பவளமோ பச்சையோ பொன்னோ — . தவளமோ
வெக்கோல மென்றயர்வ தல்லா லிமையவரு
மக்கோலந் தன்னை யறிவரோ - சக்கிர

இரிகிம் புரியக் கிரிசேர் கிரிகள்
சொரியுங் கடத்தைச்சூழ் தும்பி - பொருபகலே

ஞாலவட்டஞ் சூழிரவி நானூறு கோடியுகத்
தாலவட்டஞ் சூழாத் தனியானை - மேல்கொண்டு

காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடுங்
கூத்த னிமையோர் குழாம்வணங்கி - யேத்தி

வருமா றுணர்த்தும் வலம்புரியின் முன்னி
யருமா மறையொலிவந் தார்ப்பப் - பெருமான்சீர்

பாடினு செய்தும் பயனிதுவோ வென்றுநினைந்
தோடினுள் கண்டா னுடையானைக் - கூடித்

தொழுதாடன் னுள்ளுளே தூய்மறைகள் காணு
வெழுதாத கோலமே யென்றாள் - பழுதாகுங்

காணாத கண்ணென்றாள் கைவளையு மேகலையும்
பூணும் போகவிறை போகுதலும் - வாணயனஞ்

சிந்திய நித்திலமுஞ் செந்தனத்தின் மேலிறைவன்
றந்த தமனியமுந் தானணிந்தாள் - கந்த

மலர்தொடுத்து மாலை யளித்தான் மதவே
ளலர்தொடுத்து மாத ரழிந்தார் - நலனூர்

# மடந்தை

மடந்தை யொருத்தி வடிவார் மதியைக்
கடந்து கமலத்தைக் காதித் — தடங்கடலும்
பூவுஞ் சிலையும் புலப்படலாற் பொற்பமைந்த
தேவென்றாள் போலுந் திருமுகத்தாள் - பாவஞ்சேர்
வாமிகண் மாலை மருவி மயல்சுமந்து
மாமதம் பட்டு மணங்கமழும் - வீமருவு
கள்ளுண்டு ஞான மயங்கிக் கருத்தழியக்
கொள்ளுந் திறங்கொள்ளுங் கூந்தலாள் - ளுள்ளத்
திருக்கு மறையை யியல்பிலரா மாட்டு
விரிக்குமவர்போல் வெளிதாய் - விருப்பிலாப்
பண்டையோர் நெஞ்சிற் கருகிப் பரன்பாத
புண்டரிகம் போன்று பொலிவெய்தி - யண்ட
னளிபோ லகன்றவன தாரருள்போற் றார்போற்
களிமேவிக் காரணமாய் நின்ற - வொளிபோன்று
நேயமி லாதவஞ்சர் நெஞ்சத் தவஞ்செய்யு
மாயமென வஞ்ச வினைமருவிப் - போயெங்கு
மாடு மனத்தை யறுக்க வருண்மறக்கக்
கூடு மவரிற் கொடிதாகி — நீடுபுலன்
மாறு முனிவர் மனம்போன் மகரத்தைச்
சீறி யரியாற் சிறந்திலங்கி - வேறுந்தான்
காவி நிறத்தாற் கமலத் துறைதலா
லாவி முழுது மழித்தலாற் - சேவின்மிசை

பண்ணனு மந்த வலரோனு மாரருள்சேர்
கண்ணனும் போலுங் கயற்கண்ணா - ளெண்ணும்
வளமையின் மிக்கார்போன் மதனைந்தும் போக்க
விளமையின்மிக் கான வெழிலா - னுளமொன்றின்
மாலுற்று மீள வறியாத மம்மரே
போலுந் துடிக்கும் புருவத்தாள் - சாலத்
தமைவென் றவர்போலச் சாந்தங் கெழுமி
யமைவென் றணிசிறந்த தோளா - ளமுதொன்று
செப்பெனவே மாதவர்கள் சேர்தலாற் றேசிகனே
யொப்பென வோங்கு மொளிமுலையாண் - மெய்ப்
[பொருள்போ
லையஞ் செறிந்தே யமர்வஞ்சி யையகற்றிப்
பொய்யென் றிளையோர் புகலவுற - வைய
மடங்கப் பயக்க வசைந்தும்பர் விஞ்ச
நுடங்கி நுடங்கு நுசுப்பா - ளடங்கிய
யோகீச ருள்ள முடைத்தலா லுண்மைதிகழ்
வாகீசர் வாக்கனைய வார்த்தையா - ளாகத்
துரையழிய மன்னு முணர்வழிய வைய
மரபழிய வானந்த வாரி - கரையழிய
வன்புமீ தூரு மவர்பா லிறையவன்போ
லின்பமே செய்யு மியல்புடையாண் - முன்பரவை
மன்னுவா னன்னமுமாய் வானவர்க்கு மாமறையைப்
பன்னுவா னேனப் பசுங்கிளிக்கு - முன்னைமறை

சொல்லப் படாத சுடரென்னீர் சிந்தையுஞ்
செல்லப் படாத சிவமென்னீர் - நல்ல
வருளே திருமேனி யென்னீ ரமலப்
பொருளே யிவனென்று போற்றீர் - மருணீங்கத்
தென்சேர்ந்த தென்னீர் திருவார் செழுந்தரணி [ம்
மன்சேர்ந்து வந்திருந்த வாழ்வென்னீர்- பொன்சேரு
பூங்கோயி லென்னீரப் பொய்யற்ற மெய்யடியார்
பாங்கோடு மேத்தும் பரிசென்னீர் - பூங்கழுநீர்
மாலையு மந்த வரைமார்பு மென்னீரக்
காலை யெழுந்த கதிர்ரவி - போலே
யிருக்கும் படியேயென் றேத்தீரென் னெஞ்ச
முருக்கும் படியேயென் றோதீர் - திருக்கடைக்கண்
வைத்தவா றென்னீரென் மாமயலை வேரோடுங்
கைத்தவா றென்னீரக் கண்ணென்னீர் - சித்தந்தா
னெங்கே யொளித்ததுவோ வென்னீ ரெனையாண்ட
ரங்கே ருகப்பொற் பதமென்னீ - ரங்கைக்
கனியே யெனத்தன்னைக் காட்டினா னென்னீ
ரினியோனே யென்றென் றியம்பீர் - துனியார்
பவநோய் மருந்தென்னீர் பார்வாழவந்த
சிவனே யவனென்று செப்பீர் - சுவையாருங்
கன்னலே பாலே கனியே தெளிதேனே
யன்னையே யன்பேயென் னாருயிரே - யென்னீரென்

முன்னீர் பெருக வுரோமஞ் சிலிர்த்துரைத்துக்
கண்ணீர் பெருக்கெடுக்குங் காலத்து - விண்ணோரும்
பாரோருஞ் சூழ்ந்து பரவப் பறவைமிசைக்
காரோத வண்ணனுங் கார்மயின்மேற் - கூரிலைவேற்
சேயு மவர்பயந்த சேவின் மிசையோனும்
பாயு மயிரா பதத்தின்மே - லாயிரக்கண்
ணிந்திரனுந் தேர்மே லினனும் விமானத்துச்
சந்திரனு மன்னமேற் றாதாவும் - வந்தடிகள்
போற்ற மறைபோற்றப் போதகத்தின் மேல்வடிவாய்
மாற்ற மனன்கடந்த வள்ளலார் - தோற்றுதலும்
செங்கதிர் கண்ட செழுந்தா மரைமலரு
மங்கு முகில்கண்ட மாமயிலு - மங்கண்
கெடுமளவி ருங்கவொரு கேள்கண்டோர் நெஞ்சும்
படுமளவி னீர்காண் பயிரு - மிடுமுவம
மெல்லா மொருபடி மான்புற் றெழுந்தபடி
சொல்லாட வொண்ணாத சோதிபாற் - செல்லா
விழுந்தாடன் னெஞ்சாலே வேட்டபரிசே
செழுந்தா ரணியகலஞ் சேர்வுற் - றழுந்தத்
தழுவிக்கொ ளாநிற்குந் தம்பிரா னென்னுந்
தொழும்வித் தகமெல்லாஞ் சொல்லு - மழுநெக்குத்
தன்னிலையை நோக்குந் தனிநா யகனுடைய
வந்நிலையே நோக்கு மருணோக்கு - முன்னர்

நிறையு மடநாணு நெஞ்சு நிறனு
மிறைவன் கழலிணைக்கே யீந்தாள் - மறையால்

## அரிவை.

தெரிய வரிய சிவனடிபோற் றேவர்க்
கரிய வமுதா மரிவை - வரைமடந்தை
யண்ட ரிறைஞ்சு மடிபோல நல்லதிருப்
புண்டரிகத் தைமருட்டும் பொன்னடியா - ளுண்டாய
வண்ணந் திகழு மதியினார் முனமறையோ
ரெண்ணும் பொருள்போ லிடையினா - டிண்ணமுற
வோது மறைப்பொருள்போ லொன்றிரண் டென்றெ
நீதி யறிய நெறியின்றி - நாதன் [ருவர்
புகழ்வுபோற் செப்பிற் பொலிந்திகழ்வு போல
வகிலமைந் தார மருவு - நகிலினா
ளேத மகல வெனையாண் டவனடியே
யாதி மறைப்பொருளை யாங்களிக்கு - நீதிபோ
லஞ்சன முண்டங் கயலழித்து ஞாலமெலாந்
துஞ்சல் விழித்துமிகுந் தொல்காவி - யெஞ்ச
வருகமல மாற்றி மானங் கடந்து
வெருவ வொருவேலை வேறு - வெருவிற்
சிவந்தங் கொளியாய்த் தெளிவாய்க் கரிதாய்க்
கவர்ந்து சகமொளிக்குங் கண்ணாள் - பவஞ்சேரு

நீங்கரும்பை நீக்குநெடியோர்போற் காமவேள்
பூங்கரும்பை மாற்றும் புருவத்தா - ளோங்கு
குலநான் குலவிக் குருளையாய்க் கோதி
னலனுர்ந்து நாவி பரித்துப் - யலபணியும்
பூண்டு திருவை நயந்து புகையகத்து
நீண்டு குறுநெறிசேர் நீதிபா - லாண்டவனே
யென்றொருநா லோதா திடரே யுறுகின்ற
வொன்றறியா ரொக்கின்ற வோதியா - ண்ன்றுக
வந்த மறைப்பொருளை யந்தச் சடகோபன்
செந்தமிழே யொக்கின்ற செவ்வியா - டந்தப்
பவளத் திரளாறுகாற் பைம்பொற்பீ டத்திற்
றவளத் தரளப்பூந் தாமந் - திவளுமணிப்
பந்தர்க்கி ழுன்னத்தைப் பாராட்டிக் கொண்டிருந்து
கந்தர்ப்ப னுற்பட்ட கண்கலக்கஞ் - சிந்தித்து
மோன மடைந்து மொழியா மொழியாலே
நானவனென் றோதுகின்ற நாமத்தாண் - ஞானமுற
வான வுருவிருபத் தோரா யிரத்தறுநா
றான மறவுரைப்ப துன்னையே - யானுன்
பேரோ தினரும் பெறுதற் கரிதாய
சீரார் பரம்பொருளைச் சேர்வரே - நேரேயென்
னங்கையிலே நீயிருக்க வாரமிர்தை யானடையச்
சங்கையிலேன் முன்னர்த் தவப்பயனே - தங்கும்

பெரும்பாவி யேன்மனனும் பித்தேறி யந்த
வரும்பாவி பின்போன தன்றே - விரும்பினர்
மீட்டிங்கு வாரா ரெனமுன்னே வெவ்வினையேன்
கேட்டும் விடுத்துங் கெடுத்தேனே - நாட்டம்
பொருந்திலேன் பூவணைமேல் புத்தேளிர் தங்கண்
மருந்தினோ டின்புற்று வாழேன் - பெருந்தகையைப்
பெற்றவர்கண் டுஞ்சாமை பேசுவர்கள் பேறிலா
மற்றவர்க்குங் கண்டுஞ்ச வாராதோ - முற்றொளியார்
யெஞ்சாம லெங்கு முளனா கினுமிறைவன்
றுஞ்சா தவர்கண்ணிற் றோன்றுமோ - நெஞ்சன்பாற்
றீராத காதலுடன் சென்ற மனந்திரிந்து
வாராமை கண்ட மதியிலே - னோராதே
யீசன்பா லுன்னைவிடற் கெண்ணுகே னெய்துவன
வாசைப்பா டுற்றா ரறிவரோ - நேசத்தி
னோதா ரணங்க ளுயிர்க்கெல்லா மின்னையே
யாதார மென்ப தறுதியே - வேதாவைத்
தாங்கும் பெரும்புகழாய் தத்துவன்பாற் சென்றருளி
யீங்கென் றுயர்களையா யென்றிரப்பத்-தீங்கெவையுங்
காயும் பெருமான் கமலத் தயன்பெருமா
ளுபன் பெருமா னரன்பெருமான் - றூய
மறையின் பெருமான் வளைந்தோ ருளத்தே
யுறையும் பெருமா னுடம்பாஞ் - சிறையைவிடப்

பேசும் பெருமான் பெறநினையில் வானவருங்
கூசும் பெருமான் கொடிமறுகி - னேசமுடன்
முத்திக் குழுந்த முனிவர்களு முன்னமே
சித்தித் தகமகிழுஞ் சித்தர்களு — மெத்திக்கும்
பாதார விந்தம் பரவ வரும்பவனி
வேதாகமங்கள் வியந்தொலிப்பக் - காத
லுரைக்கவா வோதிமம்விட் டுண்ணீர்மை யெல்லாங்
கரைக்கின்ற வானந்தக் கண்ணீர் - திரைக்கொண்டு
வீச மணிமாட வீதியெலாம் வெள்ளமிடத்
தேசன் றிருமுன்பு சென்றிறைஞ்சி — நேசர்
பெருமானடியவரைப் பித்தேற்று கின்ற
மருவாரு மாலையு மார்புந் - திருவான
கண்ணிலே யுள்ள கருணையுங் கண்காண
மண்ணிலே வந்த மலரடியுங் — கண்ணிற்
கினிய வடிவு மிருதோளு மென்று
முனிய வறியா முகனுங் — கனிவாயுந்
துய்ய நகையுஞ் சுரக்குஞ் சுராலுஞ்
செய்ய முடியாத சேவகமுந் - தையலா
ளொக்கின ளொக்கு நுணங்கிடையை வேளொக்கு
நோக்க வரியானை நோக்குமோ - பூக்கொண்டு
சிந்திப் பரவினண் மேலொழிபச் செஞ்சரம்வேள்
சிந்திப் பரியான்மேற் சிந்துமே - சிந்தி

மடவாரலை வெய்ய மதனனேய் செய்ய
விடனமிர்து செய்தான் விடுமே - தடமார்பிற்
சாத்தியதார் நல்கினான் தாமரையா டானிற்க
வேத்திய நாமாது மேமாப்ப - மூர்த்தி
யருளினான் யான்பெற்ற தார்பெற்றாரென்று
சுரிகுழன்மேற் சூடினா டோகை - செருமாரன்
செல்லல் செயநினையான் செய்யா னருள்பெற்ற
வல்லியென நோக்கி மருங்ககன்றா - னல்ல

## தெரிவை.

தெரிவை யொருத்தி சிலைமதற்கு நேரே
யுருவங் கொடுக்கு முருவந் - தெரியின்
மருவா ச்கமறுத்த வாதவூர்வள்ள
திருவா சகம்போலுந் தேற - லுருவம்
பழுதற்ற வந்தப் பரம்பொருளே போல
வெழுதப் படாத வியல்பாண் - முழுது
மணியுடையுஞ் சூழ்ந்தகன்ற வல்குற் பரப்பு
நுணுகிய வந்த நுசுப்பு - மணிநிறத்த
பாரப் பயோதரமும் பைம்பொற் பணிமணியு
மாரமுஞ் சோதி யணிமுகனும் - வார்குழலு
நீரம் பரமு நிலனு மதனும்பர்ச்
சாரம் பரமுந் தரிக்கின்ற - சீரார்

பயோதரமு மெங்குந்தன் பல்கதிர்கள் வீசும்
வியாபகனும் வெய்யவனு மேலாய் - நியாயமுறுந்
தாரகையுஞ் சோதிசேர் சந்திர மண்டலமுங்
கூரிருளுந் தாமான கொள்கையாள் - பேரொளிசேர்
புண்டரிகத் தோனிந்தப் பூதலத்தே யெவ்வுலகுங்
கண்டதெனத் திகழுங் காட்சியாள் - பண்டு
முழவிய சங்கை முனிதலா லெந்தை
கழலிணையே போலுங் களத்தா - ளழிவிலாப்
பண்டை நிலையடைப் பட்டோர்போற் கோபமுந்
தொண்டையு மாறுந் துவர்வாயா - ளண்டராற்
பேண வரியான் பெருமைபோற் றன்னளவு
காண வரியதடங் கண்ணினாள் - பூணு
முறையி னணிந்தளிசேர் மொய்மலர்ப்பூங் காவி
னிறைவி யெனவந்த வெல்லை - நறைகமழ்பூ
மிந்து நுதலாரியம மதுவேந்தி
வந்து தொழுதிறைஞ்சி வாழ்த்தெடுப்ப - வெந்தை
கருணை முதலாகக் காதன் முளைத்துப்
பரிணமித்துப் பத்திப் பணைத்துப் - பெருகவே
யுண்ணீ ரரும்பி யொளிமலர்க்கை மொட்டிப்பக்
கண்ணீர் பெருகுங் கமலத்து - நண்ணு
நளின மலர்தந்த நாடரிய வின்பத்
தெளிநறவை நெஞ்சாரத் தேக்கிக் - களிசிறந்த

மாதவர்கள் போல மலர்தூவிவெள்ளத்திற்
சீத மதுவுண்டு தேக்கிட்டு - நீதி
யயரா நினையா வகலா வணுகா
வுயரா விழியா வொழியா - பெயரா
கலுழா களியா கரையிலா வின்ப
மொழியா தொளியா துருகா - வொளிசே
ரணியார் கலைநெகிழா வஞ்சனஞ்சேர் கண்ணு
மணிவாயும் வண்ணமும்வே றாகிப் - பணிவார்க்கு
மாறா வருளுடையாய்! வாராயோ வென்றொருமா
லேறா வழிகின்ற வெல்லைக்கட் - கூறுகின்ற
வுண்டு மிலதுமா யொன்றுந்தா னன்றியெலாங்
கண்டு தனையொருவர் காணாத - வண்டன்
காசர ணாதி யவயவியாக் காணத்
தரணி மிசைவந்த தன்மை - முரசமுங்
காகளமுஞ் சங்குங் கவியுங் கவின்சிறந்த
வாகமமு மாரணமு மார்த்திசைப்பத் - தோகைதா
னுண்ட களிமயக்கு மோர்வரியா னோருருவாய்க்
கண்டு கொளவந்த கண்களிப்புங் - கொண்டுபோய்ச்
சேர்த்து வணங்கித் தெருளு மருளுமாய்
வார்த்தை கலந்து மனக்கவலை - தீர்த்த
புயலி னியல்பு புகழ மகிழு
குயிலின் மொழிகள் குழற - மயிலின்

விழியு மிறைவன் விழிகொள் கருணை
மொழிய வருவி பொழிய - வொழிய
வழகு குடிகொள் வடிவை யடைய
முழுகி யயில முயல - வொழுக
வுரையு முளனு முடனு முடைய
நிரையில் வருகை நிகழ - வரையில்
கழலி னருமை கருகி யுருகி
யழலின் மெழுகி னழிய - வெழில்கொ
ளளக முகிலு மடியு மளவு
புளக மருவு பொழுதி - னளகேச
னன்ப னமரேச னம்புயத்தா னம்புயத்தர்
னின்ப னனைவர்க்கு மீசானன் - றன்ப
மொருக்கி யடியே னுளங்களிகூர்ந் திங்ங
னிருக்கும் படியளித்த வெங்கோன் - றிருக்கடைக்கண்
வைத்த வளவிந்த மானளவோ வைத்துமிவள்
சித்த மறவி தெளிவுறு - ளத்தனுறக்
கூடியும் வாடாமை கூடாள் குறைகழற்றுள்
சூடியும் விம்முந் தொழிலொழியாள் - சூடிய
தாரை யணிபக் கொடுத்துந் தடங்கண்க
டாரை யொழுக றவிர்வுறுள் - வீரனைக்
கண்டு முருத்தெரியக் காணுள் கடவுண்மா
னுண்ட களியி னெருகோடி - கொண்டொழிந்து

நாணு மிடனு முதலா நலஞ்சிறந்த
பூணு முறையினையும் போக்கினுள் - சேனுலா

## பேரிளம்பெண்.

வேரொளியுந் தன்னொளியை யொவ்வா தொளிபோ
பேரொளிவே றில்லாத பேரிளம்பெண்-ஞாத [லும்
பத்திக் கடலிற் படுமமிர்து போலெவர்க்குந்
தித்தித் தினிதாகுந் தெள்ளமிர்து - சுத்தமா
வாண்டா னடியை யடைவார் பெறவேண்டும்
வேண்டாமை யன்ன விழுச்செல்வம் - பூண்டவெண
திச்சை யறவருளி யேழையே னெஞ்சறிய
வச்ச மறுத்தாண்ட வடியிணையை - யுச்சி
மிசைக்கொண்டு கண்ணீரு மெய்ம்மலருஞ் சிந்தி
யிசைக்கின்ற கீதத் திரத - மிசைக்கின்ற
வேதுக்கள் செல்லா விறைவ னருணலம்போற்
போதுக்குப் போதும் புதியநல - ஞாதி
முடிவேது மின்றி முதலாகு மின்ப
வடிவே யனைய வடிவம் - வடிவி
னுணர்வி னுணராமை பொப்ப வுரோமப்
புணர்வின் வெளிப்படுத்தும் பொற்பா - ளிணையி
னுடைகொண்ட தோரல்கு லுண்டேமே லுண்டே
புடைகொண்ட கொங்கைப் பொருப்பு - மிடையுண்

டெனுமர்னந் தோற்று மிபல்பா னுலகத்
தனுமானம் போலு மணங்கு — பனுவலான்
மெய்ம்மை தருமுக் குணன்போல வெண்மையுடன்
செம்மை கருமைதருஞ் சேல்விழியாண்—மம்மர்தரும்
வம்பஞ்சு கொங்கை மறந்தோர்போற் கா்மன்மல
ரம்பஞ்சு மஞ்சு மடியினு — ணம்பெரிய
கோசநிலைமை குறியா தவர்குறிப்பி
னுசை யெனவகன்ற வல்குலாள் — பேசுங்கா
லேதுவே காட்டு மிறையா கமம்போல
வேதுவே காட்டு மிருதோளாள் — வேதம்போ
லோங்கார மேவி யொளிசேர்ந் திருந்தோர்போ
லாங்கார மாற்றி யமலனைப்போற் — பூங்கரும்பு
மன்பதைத்து வீழும் வகைகண்டு மாறிலாத்
தன்பதத்தை நோக்குந் தனத்தினு — ளன்புடனே
பூவிற் றிருமாது போலும் பொலங்கொடியார்
சேவித் தினிதிருந்த செவ்விக்கட் — பூவைமீர்
காதலித்த வப்பொருடான் கையகத்தே வந்தாலு
மாதவமி லார்கட்கு வாய்க்குமோ — வாதி
முடிவிடைதா் ளுகுவான் மூவர்க்குந் தோன்று
வடிவுடையான் மாமேல் வாலு — மடியவர்கள்
பாங்கோடு மேத்தப் பருமணிப்பூந் தாமஞ்சேர்
பூங்கோயி லுள்ளே புகுதவு — மோங்கிய

நன்பொன் மணித்தவிசி னேறி நலன்சிறந்த
வின்ப முறவுற் றிருக்கவு — முன்பயனு
மோதத்தே மன்னு மவனு முணராத
பாதத்தே யான்போய்ப் பணியவு — நாதனுடன்
கோதாட வெல்லாங் குறித்தருள்சேர் கண்ணினற்
பாதாதி கேசமுறப் பார்க்கவுங் — காதலித்த
மாகத்தார் கூசு மலர்த்தாளென் சென்னியினு
மாகத் தினும்யா னணைக்கவும் — யோகத்தி
னும்பரா ருன்னற் கரியதிரு மேனியிலே
தம்பிரா னென்னைத் தழுவவு — நம்பனெனை
விடாமற் கூட விரும்ப விரும்பவுங்
கூடாமை யான்கூடக் கொள்ளவு — மூடிய
வுள்ளமும் யானு முருக வொருமாற்றம்
வள்ள றிருவாய் மலரவு — மொள்ளிழையீர்
நாணாமல் யானு மவனு நலன்வேறு
காணாமற் கூடிக் கலக்கவுங் — காணும்
பொழுதிற் புரிசங்கம் போகாத கங்குற்
பொழுதுந் துயிலுடன் போக — விழிதுறந்து
விட்டதே யிக்கண் வினையேனுக் குண்டாகப்
பட்டதே யென்று பரிவெய்திக் கெட்டேனெஞ்
சென்றும் பரனுருவங் காண்பார்க்கிவ் வூன்கண்க
ளென்றும் பகையா யிருந்ததே — நன்றறியீர்

பாரேனோ வெனைப்பயந்த யாயோ விரங்காத
கோனோ கொடியா னெனக்கூறி — மானனையார்
வெய்ய முலைமேல் விடும்பனிநீ ருஞ்சாந்து
நெய்யு நெருப்பு நிகரென்றாண் — மெய்யேவந்
தெல்லாமா யல்லா னெனைப்புல்லா னனக்காற்
கொல்லானோ மாரனெனக் கூறினா — ளல்லன்
முடியாதோ வெங்கோமான் முன்னின் றெனக்கு
விடியாதோ வென்று வெறுத்தே — யடியிணைகள்
சூட்டுமேற் றன்னைத் தொழுவார் பெறும்வடிவு
காட்டுமே விக்கண்ணுங் கண்டிருக்கக் — கூட்டுமேற்
கூடென்று கூட விழைப்பக் குதிகொண்டு
நீடும் பெருந்தடங்க ணீரழிப்ப — வாடி
யழியும் பொழுததனி லுப்கிக்ற நெஞ்சு
மொழியுங் கடந்த முதல்வ — னொழிவின்றி
நின்றான் முழுதுமா நின்றாலுந் தன்னதரு
ளொன்றாலு மன்றி யுணர்வரியா — னென்றாதை
யெம்பிரா னெண்ணப் படுமீசன் யாவர்க்குந்
தம்பிரான் வீதிவரத் தாள்பரவி — யும்பரார்
போற்று மொலியும் பொலன்கழனின் றாரணங்கள்
சாற்று மொலியுந் தடங்கடல்போ — லற்றிசையும்
பல்லா கமவொலியும் பாடாந் தரங்களால்
வல்லார் வகுத்தொலியும் வாச்சியங்க — ளெல்லா

முழங்கொலியுங் கேட்டங்கு முன்வந்த தெல்லா
வழுங்கலும்போ யானந்த மெய்தித் — தழங்கு
முடிமே லடிச்சிலம்பை முத்திழையாள் சேர்த்தி
யடிமே லலர்மாலை யார்த்து — முடிய
மறந்த வணியுடனே வாணுதலாள் சென்று
சிறந்த மலர்பலவுஞ் சிந்தி — யிறைஞ்சி
மலைமாது பங்கயத்தின் வாழ்மாது ஞானக்
கலைமாதுஞ் சேராகங்காண — மலையாகம்
புல்லாது போகவிடேன் போர்மதனன் செய்பூச
லெல்லா மினிவெல்வே னென்றெண்ணி - நல்லொளி
பாதார விந்தத்தைப் பாராத்திருமாலும் [சேர்
வேதாவுங் காணா ரெனவிபவாப் — போதா
நகையா வருள்பெறுவே ஞனேதா னென்னுத்
திகையா வருள்காணத் தேறு — நிகரிலா
வானந்த நாட ரவர்க்கும் பிரமற்குங்
கோனந்தன் மைந்தற்குங் கோமானே! — ஞானந்தான்
வேறா கியசமய மெல்லாம் விரும்புகின்ற
பேறாகி நின்றருளும் பெம்மானே! - யாறாத
நஞ்சொத் தமர்நாடு நேரே நடுங்கவரும்
வஞ்சப் பிறவிக்கு மாமருந்தே! - நெஞ்சத்தர்
ஞேருந் திறனு மரிய வுனைநல்கச்
சாருங் கருணைத் தடங்கடலே! - பேரொளிசேர்

கண்ணே கருத்தே! கலையே! கலைப்பொருள்சேர்
பண்ணே! யதனிற் படுபயனே! - விண்ணோர்
குரவா! நந் தாவமுதே! கோற்றேனே! பாலே!
சொருபானந் தா! துணைவா! தோழா!- பெருமானே!
தீங்கணையா வண்ணந் திருமேனி கண்டேனைப்
பூங்கணைவே டான்முனியப் போதுமோ - நீங்காத
தீமதியைப் போக்குந் திறனிந்தத் தீயுமிழு
மாமதியைப் போக்குதற்கு மாட்டாதோ - நாமமிகு
காயமயன் மாற்றுகின்ற கண்ணனே! பண்ணையுந்
தீயமப லெய்துதுயர் தீராதோ - தீமையர்ன்
மந்தக்கால் வந்தக்கான் மால்பிரமர் தேடுகின்ற
வந்தக்கா றந்தக்கா லாகாதோ - சிந்தைக்
கமையாத காதலளித் தாயிழையாள் மாட்டு
மிமையா விழியளிப்ப தென்றோ - சமய
மயலார வாரமெலா மாற்றுயநின் மாற்ற
மயலார வார மறாதோ - செயலொன்றுஞ்
செய்யாத வீணையிசை தேவே செவிக்கினியான்
கையாத வீணையிசை காணேனோ - வையமெலா
முள்ளொடுங்கப் பண்ணு மொருவா வுயர்பனையிற்
புள்ளொடுங்கப் பண்ணுவிக்கப் போகாதோ - வுள்ளி
தாயில்லை யாக்குந் தலைவா! வித் தாயுடைய[னர்க்குத்
வாயில்லை யாக்குதற்கு மாட்டாயோ. - தீயபவப்

பேராழி மாற்றும் பெருமானே! பேரோத
நீராழி மாற்றுதற்கு நில்லாதோ - போரேறே!
நின்னணிய யானு நினையணுகா தாரைப்போற்
பொன்னணியு மொன்றாகப் பூணவோ-வின்னளியைக்
கண்டா தரிக்குங் கருத்தெலா நேராகக்
கொண்டா யறவுங் கொடியைகாண் - பண்டேயு
நோலா வெமையொழிய நோற்றார்க டங்களையு
மாலாக்க வல்லையே யென்றென்று - மாலாகி
நின்று ளிவள்போலு நேரிழையா ரியாவர்க்குந்
தன்றாள் பணியுந் தமோதனர்க்கு - மொன்றாகத்
தீராத பித்தளித்துச் செய்யாச் செயலளித்து
நீரா விழியளித்து நின்றதெலா - நேராகக்
கொண்டபிரான் மெய்யின்பங் கூர்ந்தென் புலனைந்து
முண்டபிரான் போந்தா - னுலா

---

நேரிசை வெண்பா.

சேரா வரிவையர்க்குஞ் சேர்ந்த வரிவையர்க்கு
நீரா விழிதுறந்து நின்றதே—நேரா
வுருவிலா னோரா வுணர்வுடையா னேரே
திருவுலாப் போந்த தெரு.

சிலேடையுலா-முற்றிற்று-ஆக-கூாக.

—0—

பதினான்காவது,

# நெஞ்சுவிடு தூது.

தத்துவநிச்சயம்.

படைப்போனுங் காப்போனும் பண்ணியவை முற்றுந்
துடைப்போனுந் தோத்திரஞ்செய் தேத்திக்-கிடைப்
[பரிய
செய்யசொரு பானந்தன் சீராரம் போருகத்தா
ளைய மறப்புணரு மன்புடையாய் — வெய்ய
கொடியமேன் றனையிக் குரம்பையினின் றேற்ற
வடியே னுடன்பிறந்த வன்னே! - முடியாத
வெவ்பிறப்பை மாற்ற வெழுந்தருள்வா யெப்பொரு
[ளும்
பின்பிறக்க முன்பிறந்த பேரிசையா!- யென்புருக்கி
யாண்டகோன் மாறு வருளா லவனடியை
மீண்டுநீ பார்க்கும் விரகுடையாய் - நீண்ட
கருக்கடல்விட் டீசன் கருணைக் கடலுட்
டிருக்கறவே நின்று திளைப்பா! - யொருக்கியவ
னனந்த வாரியெலா மார்வா யவயவநீ
தானந்த மில்லாத் தரம்பெறுவாய் - மேனந்து
தேவரே யாகமிகு தேவேந் திரராக
மூவரே யாக முடிவதனிற் - சாவதுவுந்
தாமீண் டுதிப்பதுவு மாகின்ற தன்மையா
னீமீண்டு பாரக்கா னீங்குமோ - கோமானைத்

தேட்டுவிப்பா யுண்மை தெளிவிப்பாய் தீயோரை
யாட்டுவிப்பா யெல்லாநீ யல்லேயோ - வீட்டுநெறிக்
கேகாந்த மாய்நீ யிராதபோ தெவ்வுலகு
மோகாந்த காரத்தான் மூடாதோ - யோகியர்க
ளுன்னையே நோக்குவதிங் கோதுகின்ற வெப்பொருட்
கு, மன்னையே யாக வறிந்தன்றோ - வென்னுடைய
தாயே! யெனது தடுமாற்றந் தானொழிப்பாய்
நீயேகாண் வேறில்லை நெஞ்சமே! - நாயனுர்
சுந்தரர்க்குங் குந்தி சுதர்க்குந் துணிவுடனப் [திடவே
பைந்தொடிபால் வேந்தர்பாற் பைம்பொனடி - நொந்
யன்றுதூ தானு ரவர்பா லடியேற்கா
வின்றுநீ தூதா யெழுந்தருளா - யொன்றொழியா
துண்டான சேவடியா லோரேனை நேராகக்
கொண்டானை யாமளவுங் கூறக்கேள் - கண்டார்க
ளுளுங்கோ லந்தன்னை நாடவில தேனும்வந்
தாளுங்கோ லந்தா னழகியா - னீளுங்
கலையளவா வண்ணங் கடந்தாலு மென்புன்
றலையளவா வந்தவிரு தாளான் - கலைவலோர்
பாபாலை சாத்தப் படாமே யுயர்ந்தாலும்
பூமாலை யான்சாத்தும் பூமுடியான் - மாமறைக
ளெல்லை திசையின் புறம்பெனினும் யானரைப்
புல்ல விசையும் புயத்தினு - னல்லலற

முன்னைத் தவத்தாலே முன்னின்றார்க் கந்நிலையே
தன்னைக் கொடுத்தருளுந் தம்பிரான் - பன்னு
முரையு முணர்வு முணர வரிய
கரையில் பரம கருணை - - பெரிய
சொருப னெனது துணைவ னிணையி
லொருவ னருவ னுலகின் - மருவி
யுரிய் பழைய வடிய ருடைய
வரிய சரண வருமை - தெரிய
விரிவி லெனையு மனைய வினைய
சிரமு மழகு திகழ - - வருளி
யிருளும் வெளியு மிதமு மகமு
மருளு மகிழ்வு மடிவும் - வெருளு
முரைசெய் பரமு முயிரு முலகும்
வரைசெய் தெருளு மருளு - நிரைசெய்
யுருவு மருவு முளது மிலது
மருவும் வகையில் வடிவை - யருளு
மருளை நினைய நினைய வருவி
புரளும் விழிகள் பொழிய - வுருகி
யுருகி யுளமொ டுடல்கள் புளக
மருவி யதிசயித்து வாழுந் - திருவுடையா
ரைம்புலனு மாரு மயோகமன மாரணமு
மும்பர்களுஞ் சிந்தைசெய வொண்ணாதா - னம்புய

# நெஞ்சுவிடுதூது.

ஞானனீசன் மனாதீத னுடைய
வாரண மோது மகோசர - னேரணி
ஞான விலோசனன் ஞான பராயணன்
ஞான திவாகரன் ஞானகன - னாமிர்தன்
ஞான விபூடணன் ஞான சிகாமணி
ஞான வினோதனோர் நாசமிலன் - வானவ
ராதி யனாதி யகாரண காரணன்
வேத சிராதனன் மேதகு - மாதவர்
நேச மருவுள நீண்மல ரான்மிகு
பூசைகொண் மாபரி பூரணன் - மாசறு
சோதி யனாதசு கோதகி மாநிரு
பாதிகன் மோது பவாசனீ - தீதில்
சராசர னீறில் சதோதித னாதி
புராண னொராசறு போத - னிராமயனிங்
கோர்போது மோராத போதுமொழி வின்றி
யார்போது நல்கு மடிப்போத - னோர்போதும்
வாராமல் வந்தபிரான் மாபூத வல்லபந்தா
னேரா விழுங்கிவிடு நிட்டூர - னோராமற்
றற்குஞ் சமயச் சவலைக் கவலைநூல்
கற்குஞ் சளனறுத்தென் கண்முனே - நிற்கின்ற
ஞானாதீ தன்ஞான கெம்பீரன் ஞானமய
மானா னளவில்பர மானந்த - னை

வருளர் பாண னருளா சரனென்
றெருளாகி நின்றபரஞ் சேறல் - பொருளாக

நாயான வென்னை நயந்திங் கருள்சுரந்த
தாயா னெனையாண்ட தம்பிரான் - வாயாரத்

தோத்திரஞ்செய் தேத்துஞ் சொருபானந் தச்சுடரோ
ன், ஞூத்திரங்க வேத்தி நயந்துருகப்- பார்த்தபெருங்

கண்ணன் சிவப்பிர காசன் கருதரிய
வண்ணந் தரவந்த மாமேக - மெண்ணுங்

கரணமா யானுப் கலங்கெங்கு நின்ற
புரணமா யெல்லாமாம் போதன் - றரணியிலே

யென்று முளவடிவ மெப்பொழுது மிப்படியே
நின்றபடி நிற்கத்தன் னேயத்தா - லொன்றுமுளத்

தன்பர் புலனுர வாராத பேரமிர்த
நன்பொ னுருவாய் நயந்தருளி - யின்பமிகு

மானந்த மாமிசையே யாயருளி யன்பர்களும்
வான்வந்த தேவர்களும் வாழ்த்தெடுப்பத்- தான்வந்து

தன்னைத் தருங்கற்ப கம்வந்தான் றொடொழுவார்
பின்னைப் பிறவா வகையளிக்க - வுன்னியொரு

மானுடனுய் வந்தபிரான் வந்தான்மற் றெப்பொருட்
குந், தானிடனு நின்றபிரான் றன்வந்தான்-வானிடஞ்
[சேர்

தேவர்க்குந் தேவாகச் செப்புகின்ற வப்பழைய
மூவர்க்குந் தேவா முதல்வந்தான் - யாவர்க்குஞ்
சிந்தைக்குந் தேர வரியானோர் தேசிகனா
விந்தப் புவியி னெழுந்தருளி - வந்தானென்
றாதுந் திருச்சின்ன மோரா யிரங்கோடி
வேதம் பலவொலியின் மேல்விளங்க - நாதப்
பறையே முதலியங்கப் பத்தரெல்லா முத்திக்
கறையே யெனநின் றறையச் - செறிகடல்சூழ்
ஞாலவட்ட முத்தி நெறிவீச நன்பொற்பட்
டாலவட்டம் வீச வணிகொடிகள் - ஞாலமுற்று
மால்காட்டி யந்த மயறீர் மருந்தான
கால்காட்ட வாருமெனக் கைகாட்ட - நூல்காட்ட
வொண்ணாத மேனி யுடையா னுலகத்தோர்
கண்ணாரக் காணவருங் காலத்திற் - புண்ணியத்தைச்
செய்யாத யானுந் திருவீதி யிற்சென்று
கையாற் றொழுவார் கருத்துப்பின் - புய்யாமற்
பண்ணு விடுமந்தப் பாவனைய நாவதனை
யெண்ணாதே வாளா விறைஞ்சினேன் - வண்ணமிது
கூற வரியேன் கொடியே னுடையமதி
மாறு மறுவின் மதிமுகனுஞ் - சீறு
மரணம் வெருவார்கண் மல்கு தொறுநின்று
கருணை பொழிகின்ற கண்ணும் - வருபிறவி

சாருவதற் கஞ்சி வந்தார் கடுமாற்றந்
தீர வமைத்த திருக்கரமு - மோருங்காற்
றனே தனக்கு நிகராகி யானந்தத்
தேனே பொழியுந் திருவடியு - மேனியி
னக்கழகு செய்ய வணிந்த களபமுஞ்
செங்கழுநீர் மாலையுமத் திண்டோளுஞ் - சங்கையெலா
மாற்று மொருவா சகமு மறந்துமெனக்
காற்ற வொணாத வருள்வடிவு - நோற்றிலேன்
சிந்தை யழிக்குந் திருவான கோலமுமென்
புந்தி யகலாத புன்சிரிப்பு - முந்தையே
நோராதே ஞோராதே நோக்கினேன் முன்னர்நிற
நேராகி நின்றே நிறைவழிந்தேன் - பேசரேறே
பொன்வடிவு சாத்திப் புகுந்தவெலாம் போதமிலா
வென்வடிவு நேரா யிழக்கவோ - தன்மைமிகும்
பூங்கோயி றன்னிற் புகுவதென் புன்குரம்பை
யாங்கோயி லாக வமரவோ - தேங்கமழுஞ்
செங்கழுநீர்த் தோண்மாலை சாத்தியது தீயேன்க
ணிங்கழுநீர் மாறு விருக்கவோ - வங்கமரர்
காணாத நாணுதிக் காசினியில் வந்ததுவே
ணுன தெல்லா நழுவவோ - வீணாக
வென்னையு நோக்கி யெழுந்தருள்வ திங்கினியா
-ன்னையு நோக்காதற் காகவோ - வென்னைப்பார்த்

தொன்றுமொழிந்தருளிற் றன்வார்த்தை யல்லதுவே
றென்று மொழியா திருக்கவோ - வென்றென்று
செப்பு மொழிக டிருச்செவியிற் செல்லாதோ
தப்புமொழிந்தேனோ தானறியே - னெப்புவெறுந்
தன்னே ரனையா னொருமாற்றந் தாராதே [ல்
யென்னே ரனையோனை யிங்கொழித்தான்-பின்னுமுட
கொண்டுழல்வே னுளவருங்கோலம் பிரியாதே
கண்டுருக நேராத கள்வியேன் - பண்டே
யுலரானின் றேனை யொறுத்திரு மார
னலரானே சால வலந்தேன் - புலராத
மாலை யொருகாலு மாறா தனுமாற்றுங்
காலை யொருகாலுங் காண்கிலேன் - வேலை
யலையிலே சால வலைவேனைச் சொல்லுங்
கலையிலே சாலக் கலைந்தேன் - றலையாய
காலாலே யன்றிக் கழியாநோய்க் குக்கட்டு
நூலாலே யானுணங்கி நூலானேன் - கோலவடி
வாயத்தா னெட்டாத வாயத்தா ராலழிந்தே
மாயத்தாய் மாயத்தே மாய்வுற்றே - னேயத்தா
னெந்தைபா னீசென் றெனைக்கூடு மாறறிந்து
வந்தநா ளன்றியிடர் மாறாது - சிந்தையா
னெட்டா தவனெங்கே யெங்கேயென் றெவ்விடத்துந்
தட்டாதே செல்லுமிடஞ் சாற்றக்கேள் - சிட்டர்கண்
[ழுன்

றெள்ளிப சீரார் சிவலோகம் வைகுந்தம்
வெள்ளிமலை பாற்கடல் வேத — மூளரும்
பரமபதமிந்தப் பார்மிசையே நாதன்
வரந்தரு தென்றில்லை மன்று - திருவரங்க
மண்டர்பர வானைக்கா வாரூர் முதலிறைவன்
பண்டிருந்த கோயிலெலாம் பாராதே — தண்டலைசூழ்
பொன்னித் திருநாடு நிற்கத்தன் பொன்னருளாற்
கன்னித் திருநாடே காதலித்து - முன்னேயத்
தென்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்கினு
னென்பா னியம்பு முறையிலங்க - வன்பதனாற்
புண்ணியநீர் கங்கு புரள வரும்பொருநைத்
தண்ணதியும் பண்டைச் சதுர்மறையும் - விண்ணவரும்
வந்துசூழ் சேந்தை வடகுடபால் வந்திப்போர்
சிந்தைநோ யெல்லாஞ் சிதையும்வகை - யெந்தைபிரான்
மெய்யன்பர் தற்சூழ வீற்றிருக்கு மெய்ம்மையிதிற்
பொய்யொன்று மில்லைநீ போகுங்கால் — மையறரு
மங்கையர் மாட மருங்கணைந்தான் மற்றவர்கால்
பங்கயமென்று பதையாதே - செங்கையைக்
காந்தண் மலராய்க் கருதாதே யல்குறனைப்
பாந்தளினைக் காட்டு மெனப் பாராதே - மாந்தளிர்
மேனி யெனவே விரும்பாதே மென்கிளவி
தேனி னினிதென்று செல்லாதே - கூனிய

## நெஞ்சுவிடு தூது.

கார்முக மாப்புருவங் காணாதே கண்ணிணை
கூர்முக வம்பென்று கொள்ளாதே - சீர்முகந்
திங்களெனவே திகையாதே செவ்விளநீ
ரங்களபக் கொங்கையென வாராதே - செங்கனிவா
யாம்ப லெனச்சென் றணையாதே வெண்முத்தே
யாம்ப லெனநின் றயராதே — கார்ம்பெனவே
மென்றே யிளைக்கண்டு வீழாதே மேகக்கா
டென்றே திகைக்கண் டிரங்காதே - யொன்று
விறைச்சியு மூளையு மென்பு நரம்பு
மறைத்திடு தோலு மயிரு - - நிறைத்த
மலமு மொழிய மடமா திலதென்
றலமல மென்றங் ககன்று — நிலமன்னர்
தின்டேர் மறுகதனிற் சென்று லவர்செல்வம்
வெண்டேரி னீரென்றே விட்டகன்று - யண்டத்து
மாத ருடனிருந்து மாலாய் மகஞ்செய்ய
வாதரவு செய்யு மருமறையோர் - வீதி
கடந்து பிறவிக் கடல்கடக்க யாவுந்
தொடர்ந்து வரவே துறந்தோ - ரிடன்குறுகி
யோது மறுசமயத் தொத்தோர்வ்வா நூல்கொண்டு
காது மவருடனே கத்தாதே - — யாதுந்தா
னாகிய வொன்றை யளவுபடப் பார்விக்கும்
யோகியர்க டம்மு ளொதுங்காதே — யேகன்பர்

கூட்டத்தோ டேநீயுங் கூடிப்போ யாரென்று
கேட்டக்காற் றீவினையேன் கேளென்று - காட்டிக்
கொடுத்தா லவர்நின்னைக் கூட்டார்க ளென்னை
முடித்தாய்நீ யாவை முடிவி - - லடிக்கடியு
மாங்கவரை யேத்தி யடியார்க் கடியேனப்
பூங்கழற்கு யானுமுடன் போதுதற்குப் - பாங்கோவென்
றோதிறு னின்னை யுடையா னடியார்கள்
போதுபோ தென்னுமற் போகார்கள் - யாதவர்க்குப்
பாங்கா வுவந்து பணிசெய்து நீயும்போய்ப்
பூங்கோயில் வாய்தற் புறஞ்சென்று - லாங்கமரர்
தங்கோனு மாலுஞ் சடாதரனு நான்முகனு
மங்கோடிங் கோடங் கலமந்து - - நங்கோ
னிடன்பார்த் தொதுங்கு மிவருடனே நின்று
நுடங்காதே பூங்கழற்கு நோற்றோ - ருடன்போய்த்
திருவாய்த லிற்றடையச் சீரடியார் தங்கட்
கொருகாலு மில்லை யுடையா - - னருகளவும்
போகலா மென்றுநீ போகாதே பொங்கொளிசேர்
மாகலா வல்லியர்கள் வாழ்த்தெடுப்ப - போகமா
மாரா வமிர்தோ டடியார்கள் வாழ்ந்திருக்குஞ்
சீரார் திருவோலக் கந்தன்னைத் - தூரத்தே
கண்டார்த்து நீயும் பணிந்தேத்திக் காயமுற்றுந்
திண்டாட்ட மெல்லாஞ் சிதையும்வகை பண்டை

யடியா ரடியா ரடியாரங் கேவன்
முடியாலே செய்தவர்க்கு முந்தி — மடைவெள்ளந்
தானெடுத்த வெல்லையினிற் றத்துவனே யித்தலத்தின்
மானிடத்து வந்துதித்த மாமணியே! — மாண்டுக்கத்
தஞ்சலெனுந் தேவேயென் றேத்தி யடியவர்கண்
மஞ்சன காலமென வந்திப்ப — விஞ்சிய
வேடவிழ் செங்கழு நீர்மல ரின்னிதழ்
பாடல நீடலர் பைம்பொழி — லூடலை
பூகம் விரிந்தலர் பாளைகள் பொன்மலர்
நாக நரந்தை செருந்தியோ — டாகிய
கேதகை சாதி கிளர்ந்தெழு சண்பக
மாதவி மௌவன் மாரமகி — — மூதிசெய்
கொந்து விரிந்து சொரிந்தலர் கொங்கவிழ்
கந்த மலரெல்லாங் கட்டியபின் — னிந்துநிகர்
சத்தாய கர்ப்பூரஞ் சந்தனஞ் சாந்தமொடு
கத்தூரி மெத்தக் கலந்தமைத்து — வித்தரித்த
தெண்பனிநீர் கொண்டு திருமஞ்ச னஞ்செய்து
வெண்கலிங்கஞ் சாத்தி விரைகமழுந் — தண்பளித
நல்லகில்சாந் தாற்புகைத்து நாவி மிகக்கமழ்வித்
தல்லி மலர்சாத்தி யன்புற்றூர் — வல்லுயிரை
நேராக வுண்டு நிரம்பத் திருப்பவளத்
தேரா ரறுசுவையு மின்புற்றுச் — சீரா

சமிர்துகா லஞ்சமைந்த வப்பொழுது கிட்டா
விமையவர்க்குக் கோவுக்கும் யார்க்குஞ் - சமயமிது
சென்று தொ பூமின்க ளென்று செழுமறைக
ணின்று முரச நெடிதியம்பக் - குன்றுத
மூவர் முதலாய முப்பத்து முக்கோடி
தேவர்களும் மற்றுஞ் சிறந்தவர்கள் - யாவர்களுந்
தம்பிரான் போற்றி சயசயபல் லாண்டென்றே
யெம்பிரான் பொற்று ளிணையேத்திக் - கும்பிட்டு
நின்றுசே விப்பளவி னீண்மறைகள் பண்டையினு
மின்றுசே வித்தி ரிரட்டிபொழு - தொன்றி
மிடையு மமரர்களு மிக்கவரு மெல்லா
மடைய விடைகொண்மி னென்ன - விடைகொண்டு
போனளவி னெங்கோனைப் போற்றுதார் போக்குமுயிர்
தானளவா நின்ற தனியாழிப் - பானுவும்போய்
மேற்றிசையி னெல்லை மறைய விளங்கிழையார்
நாற்றிசையும் பொன்விளக்கு நன்கேற்றிப் - போற்றித்
திருவந்திக் காப்பெடுப்பச் சீரடியார்க் கென்றும்
வெருவந்த வாராமை வேண்டித் - திருவார்ந்த
நெற்றிதனிற் காப்பிட்டு நேய மிகுமடியார்
சுற்றி முறையாற் றொழுதிறைஞ்சி - முற்றக்
களப மணிந்து கழற்கா றொடங்கி
யளக மளவு மருளே - கிளரொளிசேர்

மாணிக்கச் சோதிக்கு மாணிக்க நன்முகத்தோ
டாணிப்பொன் னூ லலங்கரித்துப் - பேணிமிகக்
கொங்கார் திருமாலை சாத்திப்பூங் கோயிறனுட்
சிங்கா தனத்திற் சிறந்திலங்க - நங்கோ
னெழுந்தருளி வீற்றிருந்த வெல்லைக்க ணன்பா
லழுந்தி யடித்தா மரையார் - செழுந்தேனின்
மூழ்கி யுருகு மடியார் முகம்பார்க்க
வெள்கிநீ விண்டு விளியாதே - யுள்கனிந்து
காம்பற்ற தீங்கனிபோன் றுண்ணெகிழ்ந்து காதலிக்கிற்
றாட்பெற்ற தெல்லாந் தரநின்று - கூம்புற்ற
கையினராய் மெய்யடியார் காதலினோ டேநினையச்
செய்யபிரான் றாளில்விழச் செய்வித்தெய் - மையனே
பார்த்தருளா யென்பார்கள் பங்கே ருகக்கடைக்கண்
சாத்தியபோ தென்னிலைமை தான்மறந்து-தீர்த்தனைக்கண்
டென்பட்டெ னுங்கவளென் றின்பத் திருத்தோண்மே
லின்புற் றிறையுடனென் றாகாதே - யென்பாவ
மங்ஙனே செய்ய வடுக்கி னடியேனு
மிங்ஙனே மாண்டுவிடு மித்தனைகா - ணெங்ஙனே
துன்புறுவ துன்பிறவித் தொன்னெடுங்கா லந்துணிந்தா
யின்புறுவ தப்படியே யின்புறுவா - யன்பதனு
ளொன்று மடியருட னில்லானை யோருங்கா
லென்று மடியருட னில்லானைப் - பின்றாமல்

வெய்ய திரிபுர முஞ் சுட்டானை மெய்ப்படவே
தூய்ய மறையாலுஞ் சுட்டானை - மெய்யாக
வானு மடிமைபுகுந் தாளானை வல்வினையேன்
றானு மடிமைபுகுந் தாளானை - வேனில்வே
ளெய்யப் படுங்கோலஞ் செய்தானை யென்னையிங்ஙன்
செய்ய திருக்கோலஞ் செய்தானை - யையமற
நேராகச் செய்தொன்றுஞ் செய்யானை நின்றுருக்குஞ்
சீரார் திருநிறனுஞ் செய்யானை - யோரிடத்துந்
தோரானை யாவர்க்குந் தோன்றானை யென்னவலம்
பாரானை யாளவரும் பார்ப்பானை - நேராக
வாறுரை யையம்புக் கஞ்சாரை வெம்பிறவி
யாறுரை மாற்றவருண் மன்னனை - வேறுவென்
மெய்யானை மெய்யர்க்குப் பொய்யானை யஞ்சலெனுங்
கையானை யென்னையிங்ஙன் கையானைப் - பொய்யருளத்
தாயானை யொன்றுந்தா னானானை யென்பிழைக்குஞ்
சாயானை யங்கைக்கனியானை - யாயிரமாம்
பேரானைக் கண்ணினின்றும் பேரானைச் செங்கழுநீர்த்
தாரானை மீண்டென்னைத் தாரானை - யோராதே
நூறு யிரங்கோடி கால்வணங்கி நோக்கியகண்
ணாறு வொழுக வழுதரற்றி - மாறாதே
போற்றி யடிபோற்றி போற்றியென் றுந்தலைமே
லேற்றிய கைகளொடு நின்றேத்திப் - போற்றிறு

லென்னுடைய நெஞ்சென் றறிந்தாலு மெம்பெருமான்
றன்னுடைய காருணியத் தாலிரங்கி - நின்னையும்பார்த்
திங்ஙனே போதென் றருளும்போ தென்னளவுங்
கெங்ஙனே சொல்வா யியம்பக்கே - ளிங்ஙன்
விரியுந் துயர்தீர மெய்யன்பா லையன்
பரியும் பெருங்கருணை பார்த்துச் - சொரியுங்க
ணப்பினைக்கொண் டாட்டாதென் னாட்டிபநீ ரவ்வேடன்
கொப்பளித்த நீரிற் குளிராதோ — வெப்படியு
மச்சனை செய்ய வறியே னடுமமிர்த
மெச்சி யிறைச்சியினு மின்னாதோ - பிச்சியேன்
பத்தி நெறியறியேன் பாதத்தே தூவுமலர்
புத்த னெறிகல்லிற் பொல்லாதோ — வத்தன்முடி
தேன்கட் டவிழ்மாலை சாத்தினாற் றேர்விசையன்
றான்கைக்கொள் வில்லிற் றழும்பாமோ - வான்குலத்துக்
கொன்றாய பிள்ளையென வோராதே தாம்பிழைக்கக்
கொன்றாரிற் சாலக் கொடியேனோ — தன்றாதை
வீழும் படிவெட்டி வீழ்த்தாரின் வேறாக
வாழும் படிவைக்க மாட்டாயோ - வேழையேன்
காவி விழிபார்பாற் காற்றாதாய் நள்ளிருளி
னேவ விடுவாரி னின்னேனோ - பாவியேன்
மாளும் வகையறியேன் மாளா வகையுன்கண்
மீள வொருகால் விழியாதோ - மாளாமே

காட்டாய் கமலக் கழலென்று மக்கழலிற்
கூட்டாய் பிரானே குறித்தென்றும் - பாட்டாய
பாடத்தா வென்றும் பணிந்தென்றும் பாதமே
சூடத்தா வென்றுந் தொழுதேத்தி - யாடிக்
குறைகால முமடியார் குற்றேவல் செய்ய
விறைவா வருளென் றென்றின்னே - முறையோவென்
றற்று தழிவாளே யஞ்சேலென் றாருளாற்
றேற்றாய்நீ செய்தகன்ற சிந்தைநோய் - மாற்றாயென்
றெல்லாப் படியு மிரந்தான் மறுமாற்றஞ்
சொல்லா திரானிருந்தாற் சொல்லுதற்கு - நல்ல
மதிசொல்லக் கேணின் மலரடிக்கு நோற்க
விதியிலார் செய்குவதென் மேலென் றிதுவேநீ
விண்ணப்பஞ் செய்து வினையே னடிகூடப்
பண்ணத் திருவுள்ளம் பற்றுவித்தங் - கண்ண
லருண்மாலை வாங்கிக்கொ டாயேனைக் காயு
மருண்மாலை வாராமுன் வா.

நேரிசைவெண்பா

அல்லா லயனு லனங்கனு லன்னையாற்
பொல்லா வினையேன் புகுந்ததுய - ரெல்லாஞ்
சொருபானந் தற்குத் துயரறுத்தாட் கொள்ளும்
பெருமாற்கு நெஞ்சமே பேசு.

நெஞ்சுவிடுதூது-முற்றிற்று

பதினைந்தாவது

# கலிமடல்.

## தத்துவத் துணிவு

பெருவர்ன் முதலாய்ப் பிறங்குகின்றபேத
வுருவா யருவா யுளபொருள்கட் கெல்லாங்
கருவாகிய பெருமான் கண்டநா டொட்டுப்
புரையார் புடவியினும் பொன்னுலகத் துள்ளு
மருநான் மறைநூலோ டாகமநூன் மற்று
முறைசான்ற நூலெல்லா மோதுகின்ற தோரிற்
பொருணன்கே யந்நான்கும் பொய்ம்மையற மெய்ம்மை
தெரிவார் தெரியுங்காற் றீங்கொன்று மேவா
நிருபாதிகமொன்றே நேரே தருமம்
பொருளா வதுமென்றும் பொன்றாப் பொருளே
பிரியாத வின்பமே யின்பஞ்சென் றெய்தற்
கரிதாய வீடு மதுவேயாய் நின்று
லுரையாடுவவெல்லா மொன்றாய வின்பப்
பெருமானை யல்லவோ பேதமா வேறே
பொருணாடி நின்று புலம்புவோர்க் கந்தப்
பரமானந் தத்தைப் பகரப் படுமே
திருவிலீர் வெவ்வேறாச் செப்புகின்ற வந்தத்
தருமமு மின்பந் தருமன்றே யன்றே
பொருளு மதன்பொருட்டே பொன்றாத வீட்டி
னுருவு மஃதே நமக்கேற வொத்தா
னெருந னுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யறிந்தும் பெறுதற் கரிய

வருமந்த வின்ப மவமே கழித்துத்
திரிகின்றதென்கொலோ தேரீர் தெளிந்தார்
பரவின்ப மைம்புலனு மாரப் பருகி
யுருகுந் திறனை யுணராதே யுண்மை
தெரியுந் தெரிவிலார் செத்துப்போ யங்கே
பிரமன் றனையடையப் பித்துப் பிதற்றிக்
கரணர் கனியிருப்பக் காய்கவர்ந்து கண்முன்
விரையார் விளக்கிருப்ப மின்மினித் தீக்காய்ந்து
கரணர் முபலைவிட்டுக் காக்கைப்பிற் போகி
நரையா வமுதிருப்ப நஞ்சுண்டு நாடா
தெருதீன்ற தென்பவரை யென்னகன் றென்று
திரிபவரை யானோ தெளிவிப்பேன் செய்த
பெருமா தவத்தாலே பேதையர்களோடே
விரிவேது மில்லேன் விளையாடப் போன
தெருவின்க ணேயொருவன் றேவா திபருஞ்
சுரருந் தொழுதேத்தத் தூய்மறைக ணான்கும்
பரவ வருமரவம் பாவியேன் கேட்டுத்
தெரிவை யொருத்தியையான் சென்றணைந்து சீரா
ரரவ மிதுவென்கொ லென்றேற் கவளுங்
குரவன் கழலிறைஞ்சக் கோல்வளாய் போதென்
றுரைசெய்ய யானு முடன்சென் றிறைஞ்சிப்
பரவ நினையளவிற் பாவியேன் கண்ணீர்
சொரியு முரைகுழறுஞ் சூழ்கலையு நெஞ்சுஞ்

சரியும் வளைகழலுஞ் சாயலுநா ணும்போ
யரிப வுயிரு மவனதா யாக்கை
யுருவு திரியு முரைப்ப தெவனோ
பிரியும் வகைபறியேன் பித்தேற் றிபது
சுரபுங் கவர்மகுட சூளா மணியோ
கரபங் கயங்குவித்துக் கண்ணீ ருகுமன்பர்
சிரம்வந் தமிர்தூறித் தித்திக்குஞ் செவ்வி
யரவிந்த நாண்மலரோ வள்ளு றடியார்
பருகும் பராவமுதோ பாவியே னெஞ்சு
முருகும் படிக்கோ வுலகுப்ப வோவந்
தருளுந் துணைக்கழலோ வம்பரமீ தன்றி
யிரவுந் தவிர வெறிக்கு நிலவோ
திருவுடையோ செங்கமலை வீற்றிருக்குஞ் செம்பொன்
வரையோ திருமார்போ வந்து பலவா
விரியு மிளநிலவோ வெண்ணகமோ முத்தித்
தருவோசெந் தாமரையோ சங்கோ தனது
கரிய நிறன்மாற்றுங் காரோ சுரபி
யுருவு கவர்ந்ததோ சார்ந்தவர் தம்முள்ளம்
வெருவுத றீரும்வகை மெய்யே யபய
வரத மருளு மலரோ வவர்த
மிருவினையும் வாங்கவோ வின்பமாந் தன்ன
துருவ மவர்பெறவோ வுச்சிமேல் வைக்கு
மிருகைம் மலரோ விருவரையோ முன்னை

யரிய தவமுடையா ராகம் பொருந்த
வுரிய புயமோ வொளிமணியோ முத்தி
விரையோர் இவனது நிலைகண் டரும்புந்
திருமுறுவ லோபாதஞ் சேர்ந்தார் பிறவிக்
கருமாற்றுங் காலமோ கன்னலோ பாகோ
வொருமாற்ற மேமலரு மொண்கமலப் போதோ
பெருநான் மறையின் பிறந்தகமோ செய்ய
மருவாருந் தொண்டையோ வையமெலா முண்ட
திருவாய் மலரோவென் சிந்தைமணங் கொள்ளுங்
குருவார் குமிழோ குழையோவென் குற்ற
மொருகாலுங் கேளா வுரைப்பதெலாங் கேட்குந்

திருவான செவ்விச் செவிமலரோ சென்று

பொருமாறே விவ்வுடம்போ பொன்றும னில்லாத்

திருவே கெடுமென்று சென்றவர்கட் கெல்லா

முரையா டுபவோவென் னுள்ளமும் பண்டை

விரகா னதுமொருங்கே மீளாத வண்ணம்

பருகா விடுகின்ற பங்கயமோ கண்ணோ

செருவார் சிலையோ திருப்புருவ மோசந்

திரபாக மோதனது தெய்வக்கண் காண

வரியார்க்குத் தோன்றுவொளித் திங் குதித்த

திருநுதலோ தானமுது செய்தருளி விட்ட

வருவினையே னுள்ளமோர் வல்லோ முகிலோ
சுரிகுழலோ வோங்கு சுடரோ திருவா
பரணமோ பாதாதி கேசாந்த மாக
வருளோ வருணை தயமோ மறையின்
பொருளோ வுரையிறந்த போதந் திரண்ட
வுருவோ வெனவறியே னுன்மத்த மாகிப்
பரவுந் திறனறியேன் பாவியே னிற்கக்
கரியுண் விளவின் கனிபோல வென்னைப்
பருக வறியாதே பண்டையே னாகக்
கருதி யெனைவந்த காட்சிக் கினிய
குரவ னெழுந்தருடல் கும்பிட்டா யாகி
லரிவையகம்புகுகென் றன்னைமார் சொல்லத்
திரிய வறியேன் றிகைப்பேறி நிற்பச்
சுரிகுழலார் தம்முடைய சூடகஞ்சேர் கையா
லொருவ ரொருவரொழியாமற் பற்ற
வெருவி யுளன்மயங்கி வீழ்ந்தேனை மீண்டுங்
குரவன் பிறகே கொண்டுபோ காக
வொருமனையிற் கொண்டுபோ யும்பர்க் கரிய
திருவடியிற் சேர்த்தார்தஞ் சீரமளி சேர்த்திப்
பரவரிய புண்ணியஞ்சேர் பாதோ தகத்தைச்
சொரியார் பனிநீர் சொரிந்தெங்கோன் சென்ற

திருவீதி யிற்பொடியைச் சேர்த்தார் செழுநீர்
விரையார் பளிதஞ்சேர் வெண்களபம் விம்மும்
வரையார் முலைமீதே மாரும லப்பித்
திருமார்பிற் சேர்த்திய செங்கழுநீர் மாலை
சுருளார் குழன்மிசையே சூட்டார்கள் வேறே
யொருமாலை சூட்டியிறைக் குள்ளுருகு மன்பர்
திரளோர் டிருத்தாதே தெண்ணிலவின் வைத்துச்
கருமாற நாமுமெலாங் கண்காண வின்னே
வருகா லொழிய மலயக்கான் மாறு
வொருசா ளரத்தருகே யோவர்ம லிட்டுப்
பெருமான் றிறனன்றிப் பேயேறி நூறு
பிரமாகச் செய்தார்க ளின்றெனக்க தெல்லா
மெரிமே லிழுதா யிருப்பதனைக் காணு
வரியார் மழைத்தடங்க ணம்மனையுந் தன்கை
நெரியா விதுதணிக்க நேராத வில்லை
யொருகோடி நோ வொருநாட் கொருநாள்
பெரிதா வறிமயலும் பீர்நிறம்போய் முன்னை
யுருவா னதும்வாரா வாகந்தா னுட்கா
பரிவோடு மென்னைப் பயந்தாளிப் பார்மேன்
மாணு னதுவறியு மாதரார் தங்கட்
குரையாடி யென்செய்கே னென்றுளுக் கோரா
நிரையார் வளையார் நிமித்தங் குறிகேட்

டருள்பே சினரர் லணங்குற் றுவந்த
வரலா றறியலா மென்றார் மயலார்
நிரையாகக் கேட்டா ணிமித்தங்க ளெல்லாம்
வருமா நிமித்தமாய் மன்னுங் குறிக்குக்
குருவார் குறியாய்க் குவலயமாங் கோப்பின்
கருவான கட்டிற்குக் கட்டாய்க் கடவு
ளருளான துக்கெல்லா மாரருளா யுள்ள
பெருமா னிவராலே பேசப் படுமே
தெரியாமை யாலென்னிற் சிந்தைநோய் கூர
வொருநாளு மென்க ணுறக்கத்து மென்வாய்
வருவா யெனையாள வாரா யிமையோர்
பெருமா னெனக்கேட்டுப் பெண்ணேநீ யுற்ற
வருமா லெனக்குரையா யென்றாளுக் கன்னே
பெருவே தனைக்கிடனும் பேதையே னுகந்
தருவாயொழியத் தவிர்ப்பாயு நீயே
வருமாயிற் கேளாய் மயலான வுங்க
டெரிவா லறியுஞ் சிறுதெய்வ மல்ல
விரிகாய் கதிர்ச்செல்வன் வெண்டிங்கள் பார்நீ
ரெரிவளி வானிய மானனென் றெட்டும்
வருநாள் வருமெவனால் வந்ததெவ னாலிங்கன்
சரியாது நிற்குந்தான் வானோர் தலத்தி
னாராதி யெண்பத்து நாண்கடுத்த நூறு

யிரமா யளவிறந்த யோனிபே தத்தாற்
சரமா யசரமாய்த் தானென்று போலே
விரிவா மெவனாலிவ் வெவ்வே றுடம்பு
பரியாப் பரமெவனாற் பாத மெவனாற்
சரியாது நிற்கின்ற தானாதி யாராற்
கரணா னதுவழங்குங் கற்றதெலாம் வாக்கு
முரையா டுவதெவனா லுண்கின்ற விந்த
விரதா திகளெல்லா மெவராலறியும்
புரையார் செவியும் புரைதீ ருலகி
னுரையா டுவதுணர்வ தாரா லுருவங்
கருமா மலர்க்கண்ணுங் காண்ப தெவனா
லுருவா முடம்பெவனா லூறறியுந் துண்ட
மருவார் மணமறிவ தாரான் மனாதி
கரண மெவனாற் கருதற் கறியு
மருவு பிராணாதி யாரால் வழங்கு
மருவ வுயிரெவனா லார்ப்புண்ணு மெல்லா
மரண முறினு மரியா னெவனிந்
திரனெரி தென்புலத்தார் கோமா னிருதி
வருணன் வலிபெரிய வாயுக் குபேர
னெரிநிற வீசனெனு மெண்மரும் யாவ
னொருவன் பணியி லுலகத்திற் றத்தங்
கருமஞ் செயாநிற்பார் காயங்க ளெல்லாம்

பிரம னெவனாற் பிறப்பிக்கும் பின்னை
யரியு மெவனா லளிக்குந் தொழிலுக்
குரிய னுருத்திரனு மாரா லொழிக்குந்
திரிய வெவனாற் செனிக்குஞ் செகத்தெவ்
வுருவு மவனா லொருவடிவு கண்ணிற்
றெரியும் வகையின்றிச் சிந்தனைக்கு மெட்டாற்
கரிய பொருளென் றருமறைக ளோதும்
பரம னவனிப் பரிசளித்திங் கென்ன
துருவு கவர்ந்தானென் றோதினே னேதக்
கருகி விழிசிவந்து காற்றறன் மாயப்
பெரிசறி வாகிநீ யிஞ்சிற் பழுத்த
வுரைகள் பகர லொழிகென் றுறுக்கி
மருவலர் கேட்டு வடுவுரைக்க மங்கா
யுருவி லொருவனைநீ யுள்ளப் படுதல்
கரும மலவென்று கற்பித்துக் கண்டா
லருவினையேன் றன்வசத்தி னல்லாமை யாலே
பரிபவித்து மண்மேற் பரனென் றொருவன்
றிரிதந்தென் பாவையைச் சிந்தைநோய் செய்திங்
குருவங் கெடுத்தானென் றோவா தாற்றப்
பரமன் றிரனறியாப் பாவையர்க ணின்று
பொருளோன் றிலவென்பார் புந்தியே யென்பா
ரொருசீவ னுண்டென்பா ரூழே பிறவிக்

கருவென்பார் கத்தர்வுண் டென்றுரைப்பார் சத்தப்
பிரம மெனவுரைப்பார் பேதமே யென்பா
ரொருபொருளே யென்பா ருபயமே யென்பார்
பரவை யுலகம் படைத்தற் குரிய
பிரம னிறையென்பார் பீர்வண்ணத் தங்க
வுரகன் மிசையனந்த யோகத் துறங்கு
கரிய முகிலவனே காக்கின்று னென்பா
ரானிவ் வுலக மழிப்பா னவனே
திரிய வமைப்பானு மென்றிசைப்பார் சித்திக்
கருக ளருகர்க்கா ளானரே யென்பார்
தரும நெறிக்கரசு சௌகதமாந் தன்மை
யரசி னிழலளித்த வாதியே யென்பா
ருருவில னென்பா ருருவுடையா னென்பார்
பரசத்தி யென்பார் பரப்பிரம மென்பா
ருருவமா மேலோ ருலகுறையு மென்பா
ரருவை யுருவத்தே யர்ச்சிக்க வென்பா
ரிமித் தசபை யிசைக்கின்ற தென்பார்
கருமத்தை நன்றென்பார் காயக் கிலேசம்
பெருகப் பிராணா யாமாதிப் பிலத்தா
னிருபித்து மூலாதா ரந்தன்னி னின்ற
வெரியைக் கொடுபோ யிரவிமண் டலத்தை
யுருவிச் சசிமண் டலமுருக்கி யோவா

திரிதிக்கு மாரமிர்தந் தெண்முத்தஞ் செய்வித்
துருமத்திற் கொத்ததுவே துல்லியமென் றேதி
யிரதிப்பா ரிப்புருட னிவ்வுடம்பி னுள்ளே
புருமத்தி யத்திற் புரிகின்ற போதிற்
கிரிவத்தி லேகனவிற் கெட்டிடத் தனுதி
மருமத்தி லேயாய் வடிவற்று நின்ற
துரியத்து நாபி தொடங்கியே யோர்நால்
விரலுக்கு மேலாகி வீற்றிருக்கு மென்பார்
கருமத்தி னெண்மடங்கு காயத்தே நின்று
நிருமித்து யோக நெறிகூறி லங்ஙன்
பிரமித்து நானு பிதற்றிப் பிணங்கி
யொருவர்க் கொருவ ரொழியா விலவிற்
குருவிக் குழாம்போலக் கூப்பிட்டார் கொண்டு
நிருபிக்கு நெஞ்சை நெகவிருந்து தம்மி
னெருமித்தாற் கித்தனையு மொன்றுகுந் தன்மை
தெரிசிக்குங் கண்ணிலார் தித்திக்குஞ் சொல்லான்
மருவுற்ற பூம்பொழில்சூழ் வாதவூர் வள்ளல்
கருவுற்று வந்த கவலைமையுங் கைக்கொண்
டொருசொற் றெரித்தளித்த தோர்விரகு முன்னிப்
பொருமிப் பொருமிப் புகலுங்கா னெஞ்சின்
விரகற் றமையான் விழியருவி நின்று
சொரியச் சொரியத் துயர்தீரக் கேட்டார்

பொருளுணா ராரும் புளகித்து நெஞ்ச
முருக வுருக வுலகுய்ய மேவாதுந்
திருவா சகமெனுந் தேறல் செவியாற்
பருகார் வுருகா பதையா கண்ணீர்
சொரியா வுலைகுழறு சொல்லும் பொருளும்
விரவாப் பொருளான மெய்யின்ப வேடங்
கருணா நிதியாகிக் கண்காண வந்த
பரிசேது நெஞ்சிற் படாதார் பரனே
குருகூர்ச் சடகோப னென்றொருபேர் கொண்டிங்
கருநான் மறையா யிரஞ்சிரமு மோரோர்
திருவாய் மொழியாகச் செந்தமிழாற் றென்றிக்
கிருணீக்கி மற்றிதுவே யின்பமா கின்ற
பரலோக மாகப் பரங்கருணை யாலே
தருமா ரமிர்தத்தைத் தாகந் தணியப்
பருகாச் செவியுடையார் பங்கயக்கண் மாலா
லரனு லயனு லறியாதா ரன்பால்
வருமா றறியாதார் மானுடமாய் வந்த
திருமேனி யின்றன்மை தேராதார் நேரா
வருளே வடிவென் றறியாதா ரன்பின்
கிரமர் கிரமங்கள் கேளாதார் கேட்டு
மாறுன கண்ணுடையார் வன்னெஞ் சுடையா
ருருகா வுள னுடையா ருனு முடம்பின்

வருநோ யறியாதார் வன்னிபோ லின்ன
மொருதாய் முகன்காண வுட்காதா ருள்ள
பரமா யுவையுணரார் பாழிற் கிறைத்துத்
திரிவா ரிவைசொல்லத் தீவினையே னற்றேன்
றரியேனென் னுள்ளே தலைமோதி யார்க்கி
துரையா டுவனென் றுழற்றுவேன் றன்னைத்
திருமாலு நான்முகனுஞ் செஞ்சடையோ னுந்தேர்
பொருளாகி யின்றளவும் புத்தேளி ரானு
மருவோ வுருவோவென் றுய்தற் கரிய
பொருளையோ வாகத்தார் புல்லுவா ளாகக்
கருதினளென் றுதங் கையார்த்துக் கண்ட
தெரிவைமா ரெல்லாஞ் சிரித்தார் சிரித்தென்
பொருமால் கரிவேட்டும் பூழ்வேட்டும் போனு
ருரியார் பெறுவ ரொழிந்தார் பெறுரே
நரிமா வுளங்கிழித்த வம்பினி னன்றே
யரிமாப் பிழைப்பெய்த கோலென் றறைந்தார்
பெரியோர் சிலர்முன்னே பேயேன் பெறுதற்
கரிதே யெனினு மவனுக மன்றி
மருவே னவன்றன் மணிவாக்கிற் கன்றி
யுருகே னுரையே னெனையா ளுடையான்
றிருநாம மல்லது சிரெய்தாச் செந்தா
மரையே தளிரே வனஞ்சேர வையங்

கரைசேர வந்த கழற்போ தொழியச்
சிரமீது சேரே னெனச்சிந்தை செய்தேன்
பெருமானைப் புல்லப் பெறுதாகி னாக
மொருபாவை யன்றே யுடையான் புகழே
பரவா தொழியினப் பாழூரி னோரிக்
குரலாகு மென்குரவன் கோல முழுதுங்கண்
டுருகா வொழியுமே லூனசும்பு மாறு
நுரையார் குமிழியே யன்றேதா னோக்கன்
திருநாமங் கேளா தொழியிற் செவியும்
புரையார் குறும்பிவாழ் பொந்தன்றே பொன்னார்
முருகார் மலர்ப்பாத மோந்துண்ணா மூக்குங்
ஊரிசான செற்புச் சொரிதுளையே யன்றே
பரமாக நாதன் பணியே செயாதேற்
கரனா னதுவழங்காக் காட்டகத்திற் கள்ளி
மரனார் கவையன்றே வானவர்க்குஞ் சார
வரியானை யிங்ஙு னவாவுற்று நானின்
றெரிவாய் மெழுகொத் திரவும் பகலுங்
கரையா வெழுவேனைக் கல்லார முல்லை
மரைமா வசோகென்னும் வன்கணைக ளேந்து
மொருகாலே யென்காறொட் டுச்சி யளவும்
பொரமார னாகமெலாம் புண்ணாகி நின்று
சரமாரி தூவத் தமிழ்க்குன்றி னின்றும்

வருகா லெரிவீச மாமதியு மென்மே
லெரியா வெறிப்ப விரும்பெண்ணை யன்றிற்
குரலாலு மாயர் குழலாலுங் கொம்பின்
வரியார் குயிலாலு மாய்வேனை மாயப்
பெருமான் றிருமார் பெறநினைந்த வென்போன்
றொருகா லொழியாம லோவா தரற்றுந்
திரைவாயி னெண்மடங்கு சேரியார் தங்கள்
பெருவாயி னுறெறுப்பப் பெற்று டனக்கே
யிரையா யிருப்பே னிதெல்லா மிறைவர்க்
குரையாடி வாவென்ன வோர்துணையுங் காணேன்
பிரியாவெ னெஞ்சும் பெருமான்றன் பின்போய்
வருமா றறியாது மற்றுரை நோவேன்
றிருசூ ழுலகத்திற் கெட்டார்க்கு நட்டா
ரொருபூத ரில்லையென வுண்மையாலோதும்
பாவை வழக்கும் பழுதாகு தன்றே
கரிய கடலன்ன காம முழந்து
வரிநெடுங்கண் மாதர் மடலேறு ரென்று
முரையை யெமக்கொழிய வோது முமையாம்
வரையரையன் பாவை மதுவுண்டு வண்டார்
கரிபகுழல் வேணி கட்டிக் கடின
மரவுரியைத் தான்புனைந்து மாதிரங்க ணைன்கு
மெரிவளர வீக்கி யிருவிசும்பி னேகும்

பருதி சுடநின்றும் பாசடையே யன்றிச்
சருகு மயிலா டவஞ்செய்து சாவா
வொருவ னுடம்பி னொருபாகங் கொண்ட
பெருமை பிறர்க்குரைக்கும் பெற்றியோ பின்னு
மரசொழிய வெங்கா னடைவதற்கோ ரன்னை
வானிரப்பத் தாதைபான் மைந்தற் கதுவே
தருமமெனச் சென்ற தாசரதி பின்னே
திரியு மருங்கற்பிற் சீதையே காம
சரிதை நிலைநிறுத்தித் தந்தா டகவா
மிருடிக ளோரெழுவ ரின்பம் பயக்க
விரதம் புரிந்துலகின் மேவுகா லென்றும்
பிரிவின்றித் தன்பதியைப் பின்றொடர்ந்து நின்ற
வருமந்த கற்பி னருந்ததியை நேரே
தரன்வந் தவருண்டே யித்தன்மை சார
வரனன்றே வானகத்து மண்ணகத்து மன்னும்
விரதங்கள் பூங்குழலார் வேண்டுவதும் வேறு
முருகுங் கமழ்குழலார் முன்செய்தார் செய்த
துரைதந் திடுங்கா லொருதோட முள்ள
பொருளிங் குணராதே பொய்யிற் புலம்பி
நிரயம் புகாமே நிலன்மிசையே முத்திக்
கரைகண் டிடத்தன் கழற்போ தளித்த
குரவன் றனையிக் குரம்பைத் துவக்கை

யுரையொன்றின் மாற்றி யுளதன்னை நல்கும்
விரகன் றனையென்னை வேதித் தெனக்கே
யிரதம் பிறப்பித்த வின்னமிர்தை யென்னைத்
தரமன்றி வாழ்வித்த தாளானைத் தன்ன
தருளொன்றி னுனு மறிதற் கரிதாய்க்
காணங் கடந்தொளிருங் கண்ணைக் கயிலை
வரைமிசையின் முத்தி வழங்கும் பிரானைப்
பரிநெடுந் தேருகைத்துப் பாரதப்போர் பார்த்தற்
கருள்சுரந்த வற்புதனை யன்றுலவி னீழ
லுரையிறந்த வுண்மை யுருவைத்தான் செய்ய
கரமலராற் காட்டுங் கருணைக் கடலைக்
குருவாக வென்னுள்ளங் கொள்ளக் குமரை
மருவு மரகதத்தை மண்ணிநதித் தென்பாற்
றரணி நகர்வந்த தம்பிரானைத் தண்
பொருனை நதியிற் பொதியிற் பிறந்து
வரிய வியலு மளியுண்டு தண்டேன்
முரலு மிசையு முகிற்கணங்க டம்மிற்
பொருது சொரியும் புனல்வழியே போந்து
தெருவு தொறுமுலவுந் தென்சேந்தை சேர்ந்த
குருமணியைக் கோவத்தை கோயிலாக் கொண்ட
வருமருந்தை யானைக்கா வாங்குவந்த தன்னைத்
தரவிருந்த தத்துவனைத் தானெல்லா மான

திருநடனைச் செய்ய சிவச்சுடரைச் செம்மை
யருளு மமிர்தத்தை யன்னையினு நல்ல
பெருமானை யென்னையிங்ஙன் பித்தேற விட்ட
சொருபானந் தச்சுடரைத் தூய்மறைகட் கெட்டாத்
திருமேனி யைம்புலனுந் தித்திக்க வாரிப்
பருகி யுருகும் பதமருளா னாகி
லருவா முருவெழுத லாகாவென் றோது
மொருநான் மறைபோனா னுள்ளக் கிழியிற்
கருணா நிதியடியேன் கண்காண வந்த
திருவான கோலமெலாந் தீட்டினேன் சீசந்தை
மருவார் பொழிற்பெண்ணை மாமடலா நல்ல
பரிமா மடலமைத்துப் பல்கலையாற் றன்னைத்
தெரிவா ரவையகத்துஞ் சிந்தையுளே யோகம்
புரிவா ருறைவிடத்தும் போற்று மடியார்
திருவீதி தோறுஞ் சிறியேனை யாண்ட
பெரியோனோர் பித்தன் பேரும் பிறப்பு
முருவுங் குணனு முறவும் பிறவு
மருவும் பதியும் வழியும் பழைய
கருவின்க ணேயிலான் காயத்தை மாற்ற
வுருவங் கொடுவருவா னுண்ணின் றொளிக்கும்
பெருவஞ்சக் கள்வன் பெண்ணா ணலியென்.
றொருதன் மையனல்ல னொன்றல னென்றிப்

பரிசெங்கு முள்ள பழிதூற்றி யென்றன்
சிரம்வந்த செந்தா மரைசிவப்ப வென்பால்
வருமெல்லை யூர்வேன் மடல்.

---

நேரிசைவெண்பா.

கண்ணு மனனுங் களிப்பக் கழலளித்த
வண்ண மிலாதான் வடிவெழுதி-யெண்ணுகின்ற
தென்றிக்கே வாணுக்குந் தேசிகன்வாழ் தென்சேந்தை
மன்றிற்கே யூர்வேன் மடல்.

கலிமடல்-முற்றிற்று.

---

பதினாறுவது.

# அஞ்ஞவதைப் பரணி.

தத்துவக் காட்சி.

## [கடவுள் வணக்கம்.]

படைப்பானும் வியன்ஞாலங் காக்கு மாழிப்
படையானும் படைத்தளிக்கப் பட்ட வெல்லாந்
துடைப்பானுஞ் சுருதிகளுந் தொழுது போற்றுஞ்
சொருபானந் தச்சுடரைத் தொழுதல் செய்வாம். (க)

அழிந்துபிறந் துழல்வதுமே தொழிலா யானின்
றழியாம லெழுந்தருளி யமையா வின்பம்
பொழிந்தபெருங் கருணைமுகி லொரு நாளும்
பூதலத்தின் றுயர்தீரப் பொழிக வென்றே (உ

தலைபலவாப் பெயர்பலவா நதிக ளெல்லாஞ்
சாகரத்தி னொருநீராந் தன்மை போலப்
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டவொரு பொருளினையாம் பணிதல் செய்வாம். (ங)

அழியாத வீடென்னும் பழைய வூர்கண்
டறியாதா ரதுகாண வேண்டி யாறு
வழியாகுஞ் சமயங்கள் கொண்டு தம்மில்
வழக்குப்பே சுஞ்சழக்கு மாழ்க வென்றே. (ச)

வேறு.

ஈருகியாதி முதலாவிரண்டு வகையாகி மூன்றுவடிவா,
லெழுதாதவேத மொருநாலுபூத மிவைதானொ டைந்து
சுவைதா, னாருகியோது மிசையேழுமான திசையெட்
டு மாகியெவையு, மாகாமலாகுஞ் சொருபங்கலந்த வரு
ளான வாறுமொழிவாம். (௫)

ஓர்வொன்றிலேலனோர் பொருளாகநல்கி யிருபாத மூ
ன்றுகுணநான், குள்ளிந்திபங்க ளாறுகோசஙமந்தொ
டறுபாவ னாதியுணர்கா, லேர்பொன்றிலாத பவமேழு
ந்து வடிவான வெட்டுமுடையா, னெழிலாருஞான மய
மாகவானா மியனானும் வாழ்கவெனவே. (௬)

வேறு.

சினமான மாயை யினமான மாசு
செறியாம னூறியறி வாகவே
மனமான தீய பகைவீய மோதி
வருஞான யானைவலி பாடுவாம். (௭)

ஒழியாமலீச னொளியாகிமேவ
வுணராமன் மூடுமொரு மாயையால்
விழியாத லோக ரழியாத ஞான
விழிமேவ லானவழி மேவவே. (௮)

வாழ்த்து.

இறைவாழி நாத னருள்வாழி தாளி
னிசைவாழி யானுமியல் வாழியே

மறைவாழி மோன மொழிவாழி யாறு
வழிவாழி ஞானவிழி வாழியே. (௬)

வேறு.

தறுகண்வினை வழிசரிய வருகலைவன் வாழியே
தனதுசர ணெனதுதலை தரவலவன் வாழியே
யுறுகணற வுணர்வுவிழி யுதவுமவன் வாழியே
யுணர்வறமெய் நிகழவரு ளொழிவில்பரன் வாழியே. (௭)
நினைவயர்வு கெடநிகழு நிகரிலவன் வாழியே
நிரதிசய சுகவடிவி னிலைசெய்பரன் வாழியே
யெனையழிய வரும்விழியி னிசையுமவன் வாழியே
யினிமைதரு சரணபத மருளுமிறை வாழியே. (௮)

கடவுள்வணக்கம் முற்றிற்று.

வேறு-கடைதிறப்பு.

தனிநாடியர் பொருளோடுறு தலைநாடியர் நிலைபேர்
துனிநாடிய ரலைதீர்வதோர் துறைநாடியர் திறமின் (௧)
மறைநாடியர் மனுநாடியர் மதியால்வரு சமயத்
துறைநாடிய ரிறைதாளிணை தொழுநாடியர் திறமின். ()

வேறு.

அருவ மன்றியவ ருருவ மன்றியவ
ரடைய வன்றியவ ருடையசீ
ருருவ மொன்றுபட வுடையநெஞ்சடைய
வுருகு கின்றவர்க டிறமினே. (௩)

வேறு.

புனலினமிழாது கனமிசை யூதை
புகுதவசை யாத பொருளதா
யனலினெரியாது படையினழியாத
வறிவையறிவார்க டிறமினே. (௪)

வேறு.

ஐபமொன்றுமற வந்தகோனடியி
னன்பொடொன்றியக மின்புற
மைய ழிந்திட மலர்ந்தி லங்குவிழி
மல்கு வீர்கள்கடை திறமினே. (௫)

வேறு.

பாருமெறிவளியும் நீருமெரியும்வெளி
பானு மதியுமிய மானுநே
ரோருமளவினுணர் வாகவொருமொழியி
னோதுமவர்கள்கடை திறமினே. (௬)

கருகு கலியின்வலி தொலைய வுலகின்வரு
கருணை மலையினருள் பரவியே
பெருகு மதிசயமொ டுருகியருவிசொரி
பெரிய விழியினவர் திறமினே.

வேறு.

உளவலி முனிவர்களொழியவா
ருயிர்விட விழிகொள வுருகிவீ

ழுளவினி னொருதிரு மொழியதா
மமிர்தருள் பவர்கடை திறமினோ. (௮)
கூளவினு மமரர்கள் பெறலறக்
கலியுக மிதிலொரு நினைவறத்
தனையருள் செயவிறை நினைவறத்
தமைநினை பவர்கடை திறமினோ. (௯)

வேறு.

வினைதரு வினைகழல் வுறவரு ளிறையடி
மருவுதொ றுளனுடல் புளகமதெறியவு
மலர்தரு குவளைக ளருவிகள் சொரியவு
மறிகடலொலியென வலறியு முலறியு
மனைதரு புலனவை மடிதர மனமிற
வறிவெழு மதுவற மருவிய வெளியினி
னழிதர வொழிவற மிகுவிழி நிகழ்தரு
மமிர்தது பருகிடு மவர்கடை திறமினோ. (௰)
சிதையு மெனவுடன் முதல்வரு பொருள்களுந்
திரியு மெனவுயர் பதமுறு வினைகளுஞ்
சிலுக தெனவலை யலைவரு சமயமுந்
தெளிவுத ரவிவை முழுதையு நழுவிநின்
றிதைய மலர்செய வுருகிநம் மிறைவர்தந்
திடுமடி யிணைமலர் முடிமிசை யணியவந்
திழிவு கழிவித மகமறு மமிர்தமுண்
டெமது சுகவடி வெனுமவர் திறமினோ. (௰௧)

மருவு குணமொடு மலமது கழிபவு
மலரு மிருவினை மயலது பறியவு
மகிழ்வு மடிவற வொருபொறை யணையவு
மனனு நினைவரு மிடமது நினையவு
மருவ வுருவன தடிதலை யமரவு
மயர்வு நினைவறு மறிவது நிகழவு
மடைய வொழிவுறு மதநிலை திதிபெற
மமிர்து பருகிடு மவர்கடை திறமினோ. (௧௨)

வேறு

உலகம னித்தமெனு வுணர்வது நித்தமெனு
வுருவரு வற்றவரோ ருருவுத னைக்கொடுநுங்
கலகம னத்திடையே யிலகமு தற்பகருங்
கலைகளை விட்டெறிவீர் கடைதிற மின்றிறமின். (௧௩)

ஓதல றக்கணியா வொப்பில்ப ரம்பொருளே
யொருவடி வாகியெழுந் தருளுத லுன்னுதொறுங்
காதல்மி குத்துவரக் கண்பனி கொண்டுவரக்
கரையழி யன்புடையீர் கடைதிற மின்றிறமின். (௧௪)

ஆவியி னுக்குயிரா மாரண னோருருவா
யவனியில் வந்தருளும் பவனிவி ளைந்துதொழா
வோவிய மொத்திடநின் றுரையுணர் வொன்றொழியர்
தம்மை யொழிந்திடவே யொழிவறு வீர்திறமின். (௧௫

வேறு.

பொருளையே கருதிவெம் புலன்வழிச் செல்லுமென்

புன்மையே கண்டுவந் திம்மையே யருள்பெருங்
கருணையே யுடையவன் கழலிணைந் திடுதொறுங்
கரையழிந் துளநெகுங் காதலீர் திறமினோ. (௰௬)

நம்மையா ளுடையநா யகனையே நனவினுங்
கனவினும் நவிலுமா றன்றிவே றொன்றுநஞ்
செம்மையா னதுதெரிந் திடுதல்கண் டிலமெனத்
தெரியுமா தரவினீர் கடைதிறந் திறமினோ. (௰௭)

வேறு.

விழியா லுலகழியா வெறு முணர்வாய்விடும் வகையா
லொழியாவமிர் துண்பீர் நம துபர்பொற்கடை திறமின்

வேறு.

அளவுகண்டிட வரியபங்கப நயனம்வந்தும தாவிபைக்
களவுகொண்டிட வருகுகின்றவர் கனகநன்கடை திறமினோ
அழுந்தவாகமி ரண்டுமொன்றுற வழிவிலானொடு தழுவி
முன், பிழந்தநாளை நினைந்துபோத விரங்குவீர்கடை திற
மினோ. (௨௰)

வேறு.

ஒழித்தே யுள்ள முணர்வடைய
வொழியா வொருவன் வருமளவும்
விழித்தே யுறங்கும் விளங்கிழையீர்
மேவுங் கபாடந் திறமினோ. (௨௧)

வேறு.

உருநாம மொன்றுமிலா வொளிகருணை கரனென்னுங்

திருநாமம் பெறவந்த திறன்பாடத் திறமினே. (உஉ)

வேறு.

தரணியில் வந்த பெருமானார் தாளிணைசூடி யஞ்ஞவதைப் பரணியை யின்றென் வாயாரப் பாடக்க பாடந்திற மினோ. (உ௩) ஆ ௩௪.

வேறு—காடு.

குறியுரு வறிவுதா னிறைவிதன் கோலமே
குறுகுவா ருளமெலா மவள்பெருங் கோயிலே
யறிஞர்வா ழிடமலா தழனெடுங் கானமே
யறிவிலா வவையெலா மடையவும் பேய்களே. (க)

மறையெலா மறைவதா கியபரஞ் சோதியோர்
வடிவதா யருளும்ப் பொருளெனுந் தேசதா
லுறைவதா மகமுறு தலம்வரும் பேயெலா
முழல்வதா முலகமா மொருபுறன் கூறுவாம். (உ)

வேறு.

கல்லுங் கயமேவார் மனமே யவர்தங்
கண்ணே மசமு மவர்தன் மையறச்
சொல்லு முரைபே சுடுதீ யிடர்சேர்
சூறு வளியற் றவர்தந் தொழிலே. (௩)

செய்ரைச் சுடவல் லவர்தம் மளவுஞ்
செயிர்செய் பவர்சேர் வுறுதீ வனமீ

துயிரைச் சுடவல் லதுவெவ் வழலோ
வோரா விவர்தம் முரையன்றியுமே. (௪)

வேறு.

வெருவ வெரிசொரியும் விழியுமழன் பொழியுபால்
வெருளி யெரிவிரவி மிகமிகவு மெரியுமா
லருவ வுயிருமிற வெரியுமன லதனில்வே
றனலு மிலதகில வுலகதனி னழலதே. (௫)

தருவர் திருவதில வெனநினையு மனமொடே
தமது தலைமைகெட வவரவர்கள் கடையிலே
யொருவர் தருமுணவு கருதியுழல் பனையில்வே
றழலு ஞமலிகளு முளவுமல வுணரிலே. (௬)

வேறு.

அணிகொ ளும்பர் தருவுநே மருகர் பிண்டி மரனுநேர்
கணிக பங்க ரரசுநேர் கடிய கான வனமிலே. (௭)

வேறு.

நீளத்திற் சோலையதாய் நெடுந்தா பத்தா
னிழலெனவந் தடைந்தவர்க்கு நெருப்பேயாகி
வாளொத்த முட்சரித்து வறிதே காய்க்கும்
வன்பாகுங் கருவேலை வளர்க்குங் கானம். (௮)

ஆராத வருந்துதலும் புணர்ப்பு மாகு
மாயாமல் வருந்தோற்ற மம்பென் றோடிப்
பேராசை மான்செல்லச் செல்லப்போகும்
பேப்த்தேரே பெம்மருங்கும் பெருகுங் கானம். (௯)

செத்தபிணை மிடுகாடு சுடுகா டென்று
செப்புவர்க ளறியாதார் சிலர்தன் னெஞ்சத்
தொத்ததா முணரா துண் டுடுத்து வாழு
முயிரோடும் பிணம்பயில்கா டொழிய விட்டே. (௰)

வேறு

அறங்காட்டி ளிருசெவிமீ தழற்காட்டி னுற்போது மலகை வாழும், புறங்காட்டிற் கொப்பதுமிப் புறங்காட்டை வேறுண்டோ புறம்பு கூற. (௰௧)

வெய்யமற மறப்பெருத்த விடயமெனி னெப்பொழுதும் வெறுத்து மெய்யை, யையமறத் துறந்தவர்க ளருவருத்த திதுசுடுகா டாகை யன்றோ. (௰௨)

தின்றாலுஞ் சிலரிந்து தீற்றினாலுந் தீமையுறத் தீக்குள்ளே தள்ளினாலுங்; கொன்றாலு மஞ்சாதார் தங்கணெஞ்சிற் குலைகுலைந்த திக்காடு கொடிதா யன்றோ. (௰௩)

கரையற்ற நீராருங் கனன்றெழுவ திக்காட்டின் கடுமையன்றோ, புரையற்ற பெரியோர்கள் போயகல்வ திவ்வெம்மை பொறாமை யன்றோ. (௰௪)

மேலாய வானோரும் விண்டிருப்ப துடம்புற்ற வெம்மையன்றோ, மாலாரும் பாலாழி வைகுவது மிவ்வழலை மாற்றவன்றோ. (௰௫)

இன்னமும்யாம் வேறுசில வியம்புவதெ னிவ்வுலகமெல்லாமீன்றா, னன்னமுமாய்ப் பறந்ததுமிவ் வாரணியத்துவெம்மை யாற்ற வன்றோ. (௰௬)

வேறு

ஓதவ ரியவெரி கானமி தினிலொருவ னுடுவ ரநினைய லாவ
தோ, போதவு ருவநினை யாதவ வரையடு பூதக ணமணவி
மோதுமே. (௭) ஆ. ௱௩.

——O——

வேறு—பேய்.

ஏதம ளவுதெரி யாதகொ டியவன
மேவும் வகை மருவு பேயரோ
பேதம ளவுதெரி யாதுபெ ரிதறிவு
பேசும லகைசில பேசுவாம். (௧)

வேறு.

ஒன்றென்று நின்றசில பலவென்று நின்றசில
வுபயத்து நின்றசிலபே
யன்றென்று நின்றதனை யாமென்று சொல்லியுட
னலகிட்டு விட்டசிலபேய். (௨)

இலதென்று நின்றசில வுளதென்று நின்றசில
விறைதன்னை நெஞ்சி னுணரும்
வலதின்றி மங்குமல வுடறங்கு கின்றதவ
வடிவங்கள் கொண்ட சிலபேய். (௩)

தண்டைப்பி டித்தசில சிகையைத் தரித்தசில
சடையைப் பரித்தசிலவே
முண்டித்து விட்டசில முடியைப் பறித்தசில
முசுவிற்பொ றித்தசிலபேய். (௪)

அலைகெட்டி ராறுபல தலைகெட்ட நூல்பழகி
யதுமுக்கிய மாகமிகவே
கலைகற்ற பேய்களொடு சிறுகிட் டுலாவுவன
கரையற்ற பேய்களுளவே. (௫)

வேறு.

வறிய வான வுரைபல கேட்பன
மாண்டு மீண்டினி வாராவ ழியினைச்
செறிப லான பொருள்க டெரிந்துரை
செய்யு மெல்லை செவிடுக ளாவன. (௬)

வம்பு கூறி னுடம்பெ லாம்வெறும்
வாய்க ளாகி வடித்தற்கு வல்லன
வும்பர் கோனடித் தாமரை போற்றிநின்
றுரைக்க வென்னில்வெற் றாமைக ளாவன. (௭)

பொய்மை யாகிமெய் போலவி ளங்கிய
பொருளெ ரிக்கினற் புற்புதக் கண்ணின
மெய்மை யான பொருளை யுளத்தினின்
மீண்டு பார்க்கின் வெறுங்குரு டாவன. (௮)

பருகு ளத்தமிர் தம்பொழி நூல்களைப்
பக்க மோதிப் பழித்துக் கழிப்பன
திருகு ளத்தொடு தர்க்கங்க ளேயுரை
செய்யு நூல்கற்றுத் தெற்றர்க ளாவன. (௯)

ஆவ தொன்றிலை யாயினுந் தன்னைமே
லாகவுன்னி யறக்கடை யாவன

பாவ கத்தொன்றி லாதமை காட்டுவே
படபடத்துத்தன் பாழ்வாய் திறப்பன. (௰)

ஆறு ஞான முடையார் பிணக்கற
வாறு ஞான நெறியென் றறிந்தவர்
கூறு ஞானக் கரும்புகொள் ளாதுபோய்க்
குருடர் சொன்னசொற் கோதுகொண் டாடுவ (௰௧)

உண்ண லானவி டந்தொறு மற்றவர்க்
குற்ற நட்டவர் போலுற வாடுவ
கண்ண னார்சில ராயினுங் கைப்பொரு
ளில்லை யாகிற் கழலக் கழல்வன. (௰௨)

கண்ட மட்டி னிதுவன்றி வேறென்றுங்
கண்டி லங்கதி யென்னுங்க ருத்தினாற்
பிண்ட மிட்டவர் தம்பிற கேனுன்னை
பின்னை யென்றுபி தற்றித் திரிவன (௰௩)

வயிறு சாணும்வ ளர்த்தற்பொ ருட்டந்த
வானஞ் சென்று வரக்கா லுடையன
கயிறுங் கம்பையு மேடும்பி றர்க்கொரு
காட்சி போல்வரும் புத்தகக் கையன. (௰௪)

வேறு.

சவலைச் சார்கர மாகிய சமயத் தேநிலை யாவன
தமைமெய்ப் பானுண ராதன தனுவைத் தானென நாடுவ
கவலைக் காகர மாவன கடைகட் கேகட மாடுவ
கலைவிற் றேயுண வாவன கருவிப் பேய்பல கோடியே (

அடைகட் டாவுக கோடிக ளளவிற் காமச ஞதியை
யமைவற் றேநிலை யாமையு மறைவுற் றேயறி யாதன
சடைகட் டாமழி யாவுட றலைகட் டாநினை யாவொரு
தமைமெய்ப் பாஞன ராதன சமயப் பேய்பலகோடியே() 

உழலத் தானினை யாதன வுணவிற் காவன தேடுவ
வுணர்வைத் தானுண ராதன வுலகத் தார்நக வாழ்வன
கழலத் தானுரை யாடுவ கதறத் தான்முசி யாதன
கனகத் தேமண ஞவன கருவிப் பேய்பல கோடியே. (௭)

வேறு.

மெய்வருந்திக் குரவனருள் விரும்பா தென்றும்
விட்டிடமுந் தொட்டிடமு மறியா தேநின்
றவ்வருகுப் பட்டனவாய் மிகவுந் தம்மை
யகமதித்துத் திரியும்பே யனந்தங் கோடி. (௮)

கவலையுற்ற தம்பசியைத் தணிப்ப வேறோர்
கதியின்மை யானறந்தாங் காட்டு வார்போற்
குவலயத்தோர் பொருள்விரகால் வாங்கிக் கொண்டு
குருக்கொடுக்கும் பேய்களொரு கோடி கோடி. (௯)

வேறு.

தன்ம னந்தனை வெருட்டுமே பிறர்
தளும்பு நெஞ்சுக டெருட்டுமே
வன்ம னங்கொடு கிளிகள் போலறம்
வடிக்கு மேபட நடிக்குமே. (௨0)

நீளு கின்றசடை தன்னி னைசமிக
நீளுமே வினையின் மூளுமே
மீளு கின்றநெறி சன்னி னுதரவு
மீளு மேமொழுக நாளுமே. (௨௧)

வேறு.

பஞ்சு படுகலைக டன்னை யும்பல
படிக்கு மேதலை வெடிக்குமே
பிஞ்சு படுகலைக டன்னை யுந்துவர்
பிடிக்கு மேபட நடிக்குமே. (௨௨) ஆக ௭௰௩.

பேய்முற்றும்.

---

உவமை.

சொல்லாலு மனனாலு மறியா வொன்றைச்
சொல்லாலே தோற்றுவிப்பத் துணியுஞ்சொற்கள்
புல்லாலே பெரிசுடுதல் போலும் போலும்
போலாதேற் புகையினெழுங் கனலே போலும். (௧)

ஒளிதருநா லோதிமுடி பொருளைக் காணா
தோதியநூல் பலவுணர்ந்து பிணங்கும் பேய்கள்
களிதரும்யா னையைக்குருடர் கையாற் கண்டு
கண்டகண்ட வளவுகொடே கழறல் போலும். (௨)

தலைபகருஞ் சமயிகள்கண் காணிற் பீலிக்
கண்ணொன்றைக் காணுமெனக் கையிற் கொண்டு

தலைபறியே சமயங்களென்று தத்தந்
தலைபறித்துச் சிலசமண்பேய் சாற்றல் போலும். (௩)

அன்புறுநற் குருபரனுக் கன்பு செய்யா
தருவுருவைப் பெறவிருக்குந் தன்மை யையோ!
வின்புறுநற் கனிபாறே னினித ருந்தா
திரதநுகர் பீறவிருப்பா ரியல்பு போலும். (௪)

அருவாய பரனுருவா யருள்வ தொன்றை
யஞ்சாதே சிலவளவை கொண்டு தாமுங்
குருவாகிச் சிலகுருப்பேய் கூறுந் தன்மை
குருடர்க்குக் குருடர்நெறி கூறல் போலும் ஆ ௭௮ (௫)

---

வேறு-உட்சோலை.

போகாத துயர்மேவு பொல்லாத விப்பேய்கள் புகுமா றிலா, யோகால யத்துள் ளிருப்பா டிருச்சோலை யுட்சோலையே. (௧)

ஆகாச நீர்பூமி யனல்காலி ரவிசோம ரவியாதுமு மேகாச தரநாத னடியார்கள் பயில்வார்க ளினிதாகவே (௨)

ஆறுமிலகலை நீருமறிஞர்க ளாறு நிறைவுமவ் வருளுமே வேறுமிலகலை கூறுபதினாறு நாலுமலதுவி ளம்பிலே (௩)

நிலவியகிளிக ளுலவியகுயில்க ணிறைபயிலியல்ப் நிறைவர்தாள்,குலவியமறைக ளிறைவிதனருகு குழ்றுவகுழறுவமழலையே. (௪)

அழலுறவுடனு மயர்வுறவுயிரு மலம்வர வெருவி யயரும்நா
ணிழலிலபிறிதவ் வழுகியகருணை நிகழ்வுறு நிழலொர்நிழ
லுமே. (௫)

என்றிவ்வுலகுள தன்றுமுதலெதி ரின்றுவரையிதிலொ
ன்றுதா, னின்றதெனவில்லை யென்றுமழிவற நின்றதொரு
பொருளொன்றுமே. (௬) ஆ. அ௪.

---

வேறு-கோயில்

ஆதிநாலுமா மறைகள் சூழ்வதற் கரியகோயிலுக் களவுகூறவோ, வோதுநாலிரண் டுடனிரண்டுதிக் குண்டமேனியக் கோயிலுள்ளதே. (௧)

சமயமாறுதா னறைவதேயலாற் சதுமுகாதிகா ணரியதார்கொலோ, வமையுமாறுதா னறியவோதுவா ரரியகோலம்வாழ் பெரியகோயிலே. (௨)

வேறு.

மெய்விளக்கினர் மேவுகோயிலுக்
கெவ்விளக்குவே றினிவிளக்குமே. (௩) ஆ. அ௭

---

வேறு-பெலிபீடம்.

அண்டகோடிநூ றுயிரங்களோர், பிண்டமாவிடும் பெரியபீடமே. (௧)

பவத்தினர்பொடி படப்பராவிய, தவத்தினர்பலி கொடுப்பர்தம்மையே. (௨)

வேறு.

தமதுரு விறைவடி வுறுதலி னிதநிகர்
தருவது மொருபொரு ளிலமிது தகவில
தெமதுயி ரெனினுமி தமுதுசெய் வதுகட
னெனவடி தொழுதிடு பலிபல பலவே. (௩)
உடையன வுடலுயி ருறும்வினை யுளனுணர்
வுலகது தனிலின முறைசெய வருபொரு
ளடையவு மமிர்துசெய் தனையினி யமிர்துசெய்
வதுமில தெனுமொழி யவைபல பலவே. (௪) ஆ ௬௬௧

வேறு—ஆல்

மருவிதய கமலமுறை வாளென்றும் வாழ்வதொரு
வடமுமுள ததனளவை யாமிங்கு நாடளவி
னொருவிதையி னளவளவி லோரண்ட மாகுமதி
னுளகனியி னளவையினி யார்கண்டு கூறுவரே. (௧)
அயனையுல கடையவரு மோருந்தி மாமலரி
னருளியறி வரியபர யோகொன்றி மாறுயில்கொள்
சயனமென மொழிவதொரு தாழ்கொம்பின் மேவுசிறு
தளிரினொரு தலையினுனி யேதென்பர் சாகையையே. (உ)
செறியும்வகை யரியதென வேதங்க ளோதுபொரு
டெரியவிர கொருவரறி யாதன்பி னலானெ
டறியும்வகை யகிலவுல காய்வந்து கூடியது

மதனில்விடு சிறியதொரு வீழ்நின்ற நீழலிலே
இரையுமெழு கடலும்வளை யாநின்ற வேழ்புவியு
மெழுமலையு முலகுபதி னுலுந்த லூடுருவும்
வரையுமிரு சுடரடைய வோரண்ட மாகுமிது
வடவிதையி னளவுமில தாலென்கொ லோதுவதே (௪)
நெரியமுய லகன்முதுகு நாகன்ப ணுமகுட
நெறுநெறென முரியநட னுடுஞ்ச டாதானு
மரியுமல ரவனுமதி லேநின்ற வூசல்மிசை
யணையவரி னவர்கள்விசை போயன்றி மீள்விலரே. (௫)

## வேறு

மாறுத வருளுடையான் மாறென்று லன்றிவிசை
யாறுத வவ்வூச லதிலூச லல்லவோ. (௬)
மேனோக்கி விழோட்டி விரிதிசையே கவடோட்டிக்
கீழ்நோக்கிக் கிளையோட்டிக் கிளரவளர் வடமிதுவே. ()
ஆசையெனுந் தளையிட்டே யமைபாமறப்பறந்திந் தப்
பாசம்விடப் பறவாத பறவைபதிற் பறவைகளே. (௮)

ஆக ௬௯

## தேவி.

அன்னையென வெழுந்தருளு மருளுடைய திருமேனி
தன்னையினி யரமறியுந் தன்மையினைச் சாற்றுவாம். (௧)

## வேறு.

மதுரவாரி யாய்ஞான மயமதாகி வாடாத
மலரதாகி நாடாத மணமதாகி யாளுத
சதுமுகாதி வானோர்கள் சகலவேத கீதாதி
தருமனுதி யான்மீது தடவொணுத தாளாளே. (௨)
தொழுதெழா விழாவாறு சுழலுமாற ருமாரைத்
துபரிஞல்வி டாதாறு சொரியவாய்வி டாநாளு
மழுதபாலர் சிறுமலமிர்தவாரி யாயூறி
யருள்பயோத ரியாகி யமிர்தபான மீவாளே. (௩)
கதியிலாத நாயான கடையனேனை வாகூடு
கழலெனுவெ னுடேறு கருணைவாரி யோர்கோல
மதியிலாமை யான்ஞான வடிவைவேறு கூறுக
வகைசெய்தேறு மாறுக மலைவதோடு காதாளே. (௪)
மருவுமாக மான்மேவி வருகுணுதி நேராக
மனனின்மாறி மீளாத மனனமாதி வேரோடு
மொருவமாறி மேனுடு முணர்வுநானு நேராகி
யொழியஞான மேயாக வொருசொலோதும் வாயாளே
விகடநாம ரூபாதி விததியோரொ ரோர்கோடி
விரியுமாக மீதோடி விரிவொணுத மேலான
மகுடநாடி லோர்கோடி மலருதாள்க ளோர்கோடி
மனனுநாவு மேவாத வடிவமான மாயாளே. (௫)
வெருவராம னுடோறும் வினையின்மூழ்கி வாள்ளாரும்
விழியினர்கள் டாலோடி விளைவதோர்வி ருதேனை

யருவராம னுயேனு ளமராரானு மாரானு
மறியொணாத தோர்கோல மருளுகாதல் கூர்வாளே. ()
அவனிநீரி னன்மாள வனலின்மாள நீர்காலி
னனலுமாள வாகாய மதனின்மாள வூடாடு
பவனன்வான மேலான பரமதேசி லேயான
படியின்மாள மாளாத பழையபாழின் வாழ்வாளே. ()
ஒருவிகார மோர்காலு முறநிலாமல் யாதானு
முளதுமாசி லாமேனி யொழியவேறொ ராதார
நிருபியான வோர்போது நிருபியாத வோர்போது
நிகழ்வுறும லோர்போத நிலையதாக நேர்வாளே. (௬)

வேறு.

அனுபவந்தனி னறிவதன்றியொ ரளவைகொண்டறிவுறுவதோ, தனுபவந்தனை யொழியவின்றிய த்கமைநின்றதொர் தனியையே. (௭)

உருவமென்பது மருவமென்பது முணர்வுகொண்டுணரவொண்ணுமோ, வருவமிங்கொரு வடிவுகொண்டது விதுவெனும்பொருடன்னையே. (௭௧)

வேறு.

பொருதுதிரிபல சமயமதிவழி புரிவதருகலை புகல்வதோ, கருதுபொருடொறு மருவியவையவை கழலகிலவிய கண்ணையே. (௭௨)

தத்தமதிகொடு தர்க்கசமயிகள் சத்தமறிவதொர் தத்

வமோ, சித்தமயலது கெட்டவவர்தெரி சிக்கவுரியதோர்
சித்தையே. (௰௩)

வேறு

மருவுரு ததற்குரைக்கும் வடிவுமில்லை யென்னவோ
கருவுரும லாளவந்த கருணைமேனி கண்டுமே (௰௪)
தொல்லையாகி நின்றதுய்ய துணைமலர்ப்ப தங்களுக்
கெல்லையான தில்லையோவென் னுச்சிமீ திருக்கவே. ()
விளம்புமெய் பொருட்குமேல் மிகுத்தநீண் முடிப்பரம்,
புளம்புகுந் திருக்கவெல்லை யுன்னவில்லையென்னவோ (௰௬)
அடையமாதி ரம்படைத்த வப்புறம் புடுப்பதோ
ருடையுமில்லை யென்னவோவென் னுள்ளடங்க லுற்றுமே
அன்னையாகி யத்தனுகி யஞ்சலஞ்சலென்றுவந்
தென்னையாளு கோலநீர்மை யென்னதா வியம்பவே. (௰௭)

வேறு.

மாசுணமோ மறைத்தலையோ மயானமோ வாக்கிறந்த
தேசுணர்ந்த மெய்யடியார் சிந்தையோ திருந்தமளி. ()
சாத்தும்பூ மாலையினுக் தமையுணர்ந்த மெய்யடியா
ரேத்தும்பா மாலையிலே யெப்போதுந் திருவுளமே. ()
பாதாதி கேசாந்த முவந்தணியும் பணியருளே
ஞாதாதி யாமூன்று முவந்தயிலு நல்லமிர்தே. (௨௰)

வேறு.

வேதமவ டிருவாயி லோது கீதம்
மேவுறினை விலர்காணு மேனி மேனி

பூதமவ டிருவாசல் காவ லாகும்
போதமவ டிருமேனி காவ ளுனே. (உஉ)
யோகினிகள் கருணைநி யான மாதர்
யோகமரு நிலமாசின் ஞான யோகங்
கோகனக னறியாத கோயில் கோயில்
கூறரிய பெருவாழ்வை யாவர் கூற. (உங)

வேறு.

கலையே றுவணங் களியன் னமெனக்
கற்பித் திடவோ சொற்பித் ததுவா
மலையே றுவணங் கிளியன் புறவந்
தருள்போ தகமே யவள்வா கனமே (உச)
பஞ்சா யுதமே திரிசூ லமழுப்
படையே யெனவோ பகைவெம் பிறவிக்
கஞ்சா முனெழுந் தருளா வெறியு
மன்பே திருவா யுதமா வதுவே. (உ௫) ஆ ாஉக.]

---

வேறு— உட்பரிவாரம்.

அரனே யறிவே செறிவே யழகே
யருளே வடிவா கவமைந் தவருஞ்
சரணே யெனவந் தடையும் மடியார்
தங்கோ லமெலா மிங்கோ துதமே. (க)

வேறு.

புரம யோகமுற பேதமறு போதமுடனே

பரம யோகமுறு வாரிறைவி பயிரவர்களே. (௨)
புணரு மைத்ரிமுத லானபொரு ளுள்ளபரிசே
யுணருமார்க்கம்வரு மாதவர்கள் யோகினிகளே. (௩)

வேறு.

நித்திரை சாகரதி மற்றதொரு நீர்மையினரே
நிட்டை யாதுமில தானதொரு நீதியினரே
முத்ரை ஞானமெனு முத்ரையல தேதுமிலரே
முத்தி நாயகர்க ளானபவ மோசகர்களே. (௪)
பெத்த முத்தியில தானதொரு சாதகர்களே
பித்து நற்கழிலா டானதொரு பாவகர்களே
பத்தி சித்தியென நாடிவரு தாபதர்களே
பத்த ரெப்பிலருள் கோலமிகு பைரவர்களே. (௫)

வேறு.

உரையிறந் துணர்விறந் திடனுணர்ந் திடுவரே
யுணவுமங் கையில்வரும் பலியுகந் திடுவரே
திரையிறந் தளவிறந் துளபரங் கடவுளே
செறிதரும் வடிவருந் திருவகம் படியரே. (௬)
அமுதன்மா றுதலிலா விழியர்பா லருள்வரே
யவர்களா கமுமெலாம் விழியதா மொழிவரே
யெழுதன்மா றுதலிலா விரவியா முருவரே
யிகலுமார் வமுமிலா திலகுபை ரவர்களே. (௭)
அவனிவா னடையவோ ரணுவதா நெடியரே
யணுவுமே ருகிரியா யறவுநே ரியர்களே

புவனிவா னடையவோர் பவனிபோ தூவர்களே
புகலுகோ மளவியா மளாபுரா தனர்களே. (அ)
அலேபொரு மலொருகா றலேயெடா தமைவரே
யருள்பொரு மலுருகா வருவிபாய் நயனரே
கலேபொரு மலொருகோ வணவராய் விடுவரே
கவலேதீர் பலிகொணீள் கரகபா லிகர்களே. (கூ)
சகலலோ கமுமெடா வயிலும்வா யுடையரே
சதிரெலா மழியமா றருவதா ளுடையரே
புகலுலோ கமுமலோ கமுமெலாம் விழியரே
புகலுமா றரியதாள் புணருநபை ரவர்களே. (௧௰)
உருகுவா சகமெலா முடையசா கினிகளே
யுயிரெலாம் விழியினு லயில்வர் யோகினிகளே
பருகியா ரமிர்தையா டுவர்கண்மோ கினிகளே
பகருமா றரியநா யகிபதா கினிகளே. (௧௧)

வேறு.

தமர்பிற ரற்றூர் சமயமு மற்றூர்
சகவியல் பற்றூர் தமையொழி வற்று
ரமர்விட மற்று ரறிவயர் வற்று
ரறமற மற்று ரவளடி யாரே. (௧௨)
இருநெறி விட்டா ரிருமையும் விட்டா
ரிலகந டப்பா ருலகுக டப்பா
ரருநெறி நிற்பா ரமரவி ருப்பா
ரறிவுரு வுற்று ரவளடி யாரே. (௧௩)

பொருளை விரிப்பார் புகழுதி றத்தார்
புளகித முற்றார் புராணத லுற்றா
ரருளைவி யப்பா ரலறியு ரைப்பா
ரதிசய மிக்கா ரவளடி யாரே. (௫௪)
தெளியுமு ளத்தார் சிலவர்தெ ளிப்பார்
சிலவர்க ளிப்பார் சிலவர்தி கைப்பா
ரளியுமு ளத்தோ டமுதுசி ரிப்பா
ரவர்கள் செயற்பா டறியவொ ணாதே. (௫௫)-ஆ ௩௩௫௩.

---

வேறு-வீலே.

ஆதி மூலமொரு கோலமுமி லாதவடிவி
வகில லோகமும றிந்தடையும் வண்ணமழகார்
சோதி மூவடிவு கொண்டருளி யந்தமறைமுன்
சொன்ன தன்மைதெரி யும்பரிசு சொன்னதுணிவும். (க)
கயிலை மாமலையின் மேவினிதி ருந்தருளியக்
கமல யோனிமுத லெக்கடவு ளர்க்குமருளான்
மயிலை யேறிவரு மைந்தனுட னந்திமுதலா
மற்றும் வந்தடைப வர்க்குமருள் செய்தவகையும். (உ)
ஆல நீழலி னிருந்தருளி யன்றுசுரரோ
டசுரர் நெஞ்சினள விற்கள வறைந்தறிவுசேர்
நாலு பேரறிய நாலுமறை சொன்னபரிசே
ஞான மானநய னந்தனைந யந்தநலனும். (௩)

இசைய வையமொரு பாரதமு டிப்பவர்கள்போ
லிப்பி றப்புமுடி யும்பரிசி யம்புமியல்பும்
விசைய னையமுறு நெஞ்சினை யறிந்தருளியே
விசுவ ரூபவியல் காட்டிவெருள் வித்தவிரகும். (௪)
ஆயர் தம்மனையி னோர்வடிவு கொண்டுபதின்
றூயி ரந்திரும டந்தையரு டன்புணரினுந்
தூயபிர மச்சரிய மத்தில்வழு வாமலொழுகுஞ்
சுத்த ஞானசரி தத்தியல்பு சொன்னதுணிவும். (௫)
வாத வூரனையொ ழிந்தவர்கள் பொன்னடியிலே
மன்ன வென்னுடலை மாற்றுகென வாற்றலிலரு
யோத வூறுமமிர் தஞ்செவிக ளார்வுறமுகந்
துண்டி வையகமு முய்யும்வகை செய்தவுறவும். (௬)
தன்ப ராபரம தான திரு மேனிநிலையிற்
சலன மின்றியொரு தன்மையினி னின்றருளியே
யன்ப ரானவர்க ணெஞ்சினி லுவந்தவடிவா
யங்கு வந்தவர்க ளுய்யும்வகை செய்தவருளும். (௭)

வேறு.

உலகமயக் குறுவண்ண முகந்தோறு முகந்தோறு முதிப்பனென்றென்
றிலகியமெய்த் திருவார்த்தை யாவர்க்கு மேறும்வகை யிக்காலத்தே. (௮)
பெருமான்வந் தவதரித்துப் பீடுடைய தாரணியுளோர் பிழைக்கும்வண்ணஞ்

சொருபானந் தச்சுடரின் றுணைமலர்த்தா டரும்பரிசு
சொல்லிச்சொல்லி. (௯)
அண்டரெலா மலமாக்க வருட்சொருபா னந்தன்றன்
னடியார்வாழப்
புண்டரிக மலர்ப்பாதம் பொறித்தருளுந் திருக்கருணை
போற்றிபோற்றி. (௰)
கூசாதே யாமுமெலாங் கொண்டாடும் படியிந்தக்
குவலயத்தே
வாசாமகோசரனோர் வடிவாகி வந்தவருள்
வாழ்த்திவாழ்த்தி. (௰௧)

வேறு.

கரைத்தல்தீர வந்துதித்த கருணைமேனி காதலேர்
டுரைத்து வாழு மிவ்வினைத மிடைவிடாம லுடையரே ( )
சாதலாதல் வாழ்தலாதல் தரையதாதல் சயனமாதல்
காதலாதல் காய்தலாதல் கருதுறார்கள் கணமுமே. (௰௩)
வந்தவிச் சகத்துதித்து வந்தவாறு மாறுமா
றிந்தவிச்சை பாருமென் றிருந்துவிச்சை காட்டியே. (௰௪)

ஆக ௱௫௰௩.

---

வேறு—பேய்முறைப்பாடு.

அண்டமுண்ட கண்டர்நிற்க வடையவுண்ண வாதரங்
கொண்டபேய்க ளகலவந்து குறைகணின்று கூறுமே.
உலகிலே சனித்துநின் றுழைத்துநீர் பிழைப்பிலா

வலகையாமி னெனவகுத்த தென்கொலெம்மை யம்மையே.

வேறு.

வாசகத்தா லாவியைநின் றுருக்கு ஞான
மதயானை வாதவூர் வள்ள லோடு
மாசகற்றி யாயிரம்பேர்க் கீச னார்நல்
லமிர்தளித்தா ரெமக்கிரங்கி யருளா ரிந்நாள். (௩)
தலைப்பான்மை மிகப்பெரிய காழி ஞான
சம்பந்தர் தாம்பிள்ளைத் தனத்தி னாலே
முலைப்பாலைப் பகிராதே தாமே யுண்டு
முத்தமிழும் பாடியற முதிய ரானார். (௪)
திருநாவிற் கரசர்மிகத் தெள்ளத் தேறித்
தெளிந்துதித் திக்குமருட் டேறன் முன்னா
மொருநாளிற் பெற்றெம்மை யொழியப் போயுண்
டொளியுருவா னார்யாங்க ளுலர்ந்தே போனேம். (௫)
அடுத்தனவே செய்துதிரிந் தற்ற நம்பி
யாரூரிற் கிறைவர்திரு வருளி னாலே
தடுத்தவரை யாட்கொண்டா ரமிர்த முண்ணத்
தாமளித்தா ரெம்மளவுந் தாயே காணேம் (௬)
சாந்தியினை நேராக வுடைய நல்ல
சடகோபர் பாரவமிர்தைத் தாமே யுண்டு
தீந்தமிழென் றொருகோடி வேத மாகச்
செய்யதிரு வாய்மொழிந்தார் தேர மாட்டேம் (௭)
கோபாக்கர் முதலாக முன்னந் தாந்தாஞ்

செய்பாக்கியத்தானித் தியக்கந் தீர்ந்தார்
நீபார்க்கப் பட்டவரே கண்டா யெங்க
ணிர்ப்பாக்கி யத்தையினி நீங்கப் பாராய் (அ)

வேறு.

முத்திவரும் படியன்றி முற்றுடலம் விடுமளவுங்
கத்திவரும் படியாகக் கற்பித்தா யெங்களையே. (கூ)
ஆராத வூனுண்டுன் னடியகலும் வகையெமக்குத்
தூராத குழிதூர்க்கை தொழிலாகச் செய்தனையே (ய)
பாகாய மொழியாயிப் படுதுயர மொருகாலும்
போகாத வுடலம்வெறும் பொய்யாமலே செய்தனையே.
உங்கட்குத் தகுமிதுவென் றுள்ளபடி யுனையுணரா
வெங்கட்கு வடிவுவெறு மிடும்பையின லெடுத்தனையே.
ஆ ௯௨௫.

---

வேறு—குறி

இப்பரிசே பலவியம்பி யிலகுமொரு பேயினையுன்
மெய்ப்பரிசே விளங்குறி விண்ணப்பஞ் செய்கெனவே (க)
அடியறிகின் றிலனடியே னறிவதொரு குறியன்று
குடிபறியும் படிவந்து தோன்றியதோர் குறியுண்டே (உ)
பூண்கின்ற வுடலாதி யாமிந்தப் புவனத்திற்
காண்கின்ற பொருளெல்லாங் கனவாகக் கண்டனனே. (௩)

வேறு.

உடலையொன்றிய வுயிர்விடும்பொழு துணர்வ தன்றியிலை
நடலை கொண்டுட னழுவல் கண்டுள நடுந டுங்கிடுமே. (௪)
அழியுமென்றம ருலகிலின்பமி தமையு மென்றிடுமே
கழியுமென்றம ருலகமென்பது கருது கின்றிலமே. (௫)
சமத மங்களை முதல்வ ருஞ்சில தலைமை வந்திடுமே
மமதை கொண்டிது நமதெ னும்பெரு மயன்ம டங்கி
டுமே. (௬)
அழிவ றும்பொருள் பொருளெ னும்படி யறுதி வந்திடு
மே, யொழிவ றும்பொரு ளுணர வென்றிடு முணர்வு வந்
துறுமே. (௭)
தெருளு றுங்கலை பலவு ணர்ந்தொரு சிறித லம்பிறவா
வருளு றுங்குரு பரனி ருந்திட மறிய வென்றெழுமே. (௮)
அழுத கண்களு மருவு நெஞ்சமு மலரு மன்பும்விடா
தெழுத ரும்படி மொழித லிங்கிரி திதுசெ யுங்குறியே. (௯)
அளியுநெஞ்சுடை யடிய ரிங்கிவை யழகி தென்றனரே
தெளிவை யின்றிய வலகை யுஞ்சில திகைமலங்கினவே (௰)
அழகி தென்றிடு மதுகொ டுஞ்சில வழகி தென்றனவே
பழகி வந்ததொர் பரிச யங்கொடு பலப யந்தனவே. (௰௧)

ஆ. ௱௭௬.

---

விசேஷம்.

வெருவ ருந்திற னுரைசெய் தங்கடி விழவு றும்பொழுதே

குருப ரன்பொரு களன றிந்தொரு குணலேவந்ததுவே.(க)
கடுக வந்திடு மலகைவெம்பவ கருவ றும்படிநீ
படிகளன்புக வினவி லேந்தமை பகரு கென்றனுமே.

வேறு

செயிரற மிக்க தியங்குமு டற்றுயர் சிறிதுதணித்தெமதா,
ருயிரை யளித்தம ருரையு மெனச்சில வுதடுதுடித்த
னவே. (௩)
அறுதி படத்தெளி வளவு தரித்திடு மடையவெ ளுமுதுபே
யுறுதி படத்தெளி வாலம ருற்றதை யுரையுமெ மக்கெ
னவே. (௪)

வேறு.

ஐயப்பா டோகெடுவீ ரஞ்ஞனழிந் தமையின்னம்
வையத்தே வந்ததுநான் மறைதேடும் பொருள் காணும்
பசியும்போ முங்கள்பெரும் பாவமும்போ மிப்பத்துத்,
திசையும்போய் முடிந்தபடு களத்தினொரு தினத்துணை
யில். (௫)
பல்லாயி ரத்தாண்டு பலகோடி யண்டத்தா
ரெல்லாரு முண்டாலு மித்தனையுங் குறையாதே. (௭)
பாருண்ட மாலுண்டென் படைப்பவனு டனுண்டெ
னுருண்டெ னுமொழிந்தெ னருகாது பெருகாது ()

வேறு.

ஒழிந்த போன காணுமஞ்ஞனுமமென்றுரைக்கவே
மொழிந்தவாயை யோடிவந்து முத்தமுண்டு நிற்குமே.

தொலையுள்ள பரிசுசொன்ன சுருதியைக்கொ டாடுமே
யி..லையென்ற பேயின்வாயி னெரிபைவையு மென்னு
மே. (௰)

மாயைநாம மஞ்ஞனும மாளுமாறு வந்துநந்
நாயனு ரழித்தவாறு நவிலுகென்ன நவிலுமே. (௰௧)

வேறு.

வர்யொரு கோடிகொர்ண்டு மலரோ னுதித்த
முதலாக விற்றைவரையா
வாயிர கோடிகோடி மறையோதி யோதி
முடியாது காணுமளவே (௰௨)

ஞானம லாதபாத முரையாடி ஞான
முரையாடு காலையரனுர்
மோனம லாதுகூற முடியாமல் யாது
மொழியாரி தியாவர் மொழிவார். (௰௩)

வாயுனா யாடுமெல்லை யலநாய னுரென்
மனனேபு குந்தமொழியிப்
பேயுரை யாடுகின்றதெனநீர் கொளாது
பெரிதாக வுன்னுமிதுவே. (௰௪) ஆகூ௫.

அஞ்ஞன்சரிதை.

நாயக னுளுகோல வருண்மேவு நீரு
நலனேடு கேண்மி னெடுநா

ளாயக னுமென்மாயா புரிமேவி நாளு
மசசானு மஞ்ஞ னளவே. (௧)

வேறு

மாயாபு ரத்துள்ள வலிகூறு மளவோ
மாதாபி தாமாது லன்றூர மகவென்
றூயாவ ருஞ்சுற்றம் வீழ்வோர்க ளேறற்
காதார மேபோல வுமிழ்விக்கு மகமே. (௨)

இன்னுனி யானின்ன னிவனென்று யர்த்தா
பியானென்ன தென்கின்ற பதனஞ்செய் தீசன்
றன்னாலு மிதுபோக விடுமாறு முடியாச்
சங்கற்ப மாமென்பர் சலியாத மதிளே. (௩)

ஓராத வாமூடி யுணர்வென் குடார
முள்ளூ டறுத்தற்கு மொண்ணும லியாரும்
பாராத பொல்லா வொழுக்கா மிழுக்கே
படைவீடு சூழப் படுங்காடு தானே. (௪)

அலகற்ற விபரீதம் விளைவிக்க வுரியா
ரளவற்ற பலவீர ரவர்சுற்ற முடனே
யுலகத்தை முழுதாளு முணர்வற்ற கெடுவா
னுருவத்தை யிருள்வேறு டுவமிக்க வரிதே. (௫)

வேறு.

கருதுமொரு பொருளையொரு கணமளவி லடையவிகல்
கடவுமவன் விடயரதமே
வருதிசைகள் முழுதுமொரு நொடியளவில் வலிசுழல
வருகமன மனதுரகமே. (௬)

பரஞொளிசெ யருமறைகள் பகருமல ரடியிணைகள் பரவ
மிணை கிலர்களெனவோ
வரனொடரி யபனெனினு மிலதகில மடையவெறு
மஞ்ஞுதல பதியாணையே. (௭)

வேறு.

அந்தக னுதஞ் செய்நன்றிக் ~~காகாப~~ யறியப் பருகல் வழியளவி
னிந்திர னுகும் பிறரொருவ ரேதங் காணு மிடத்திலே.
மெய்யென் றிருப்ப துடம்பினையும் விளங்கிழை யார்தம்
வார்த்தையுமே, பொய்யென் றிருப்ப தீசனையும் புரையற்
றோர்கள் புகல்வதுமே. (௯)

வேறு.

சையு ரைக்கினவ னூம னுகுமே
வசையு ரைக்கினவன் வாய்கோடி யாகுமே (௰)
எவ்வுத் தேற்புவர்க் கியக்கை யில்லனே
செள்வத் தேடி னுநகோடி கையனே. (௰௧)

இளமை யும்மிடும் பைக்கிட னாகிய
வளமை யும்பெரி தென்றே மதிக்குமே. (௰௨)

சாயை போலுஞ் சகட்டுருள் போலுமா
மாய வாழ்க்கை நிலைபாய் மதிக்குமே. (௰௩)

மின்ற னெல்லை விதியற்ற யாக்கைகொண்
டென்று மிங்கிருப் பார்போன் றிருக்குமே. (௰௪)

அறஞ் சுருக்கு மவலம் பெருக்குமே
புறன் பெருக்கும் புகழுஞ் சுருக்குமே. (௰௫)

நிரயத் தோடு நெடுவான் முகட்டொடுந்
தரையத் தோடுந் தனியூச லாடுமே. (௰௬)

வேறு.

ஓதலு முணர்த்தலு முணவு சுட்டியே
சாதலும் பிறத்தலுந் தவிர்க்க வல்லவே. (௰௭)

இந்த மன்னனுக் கென்றும்ப வங்கொளா
வந்த துன்மதி மந்திரி யாகுமே. (௰௮)

அற்ப மில்லை யருந்தவ மாதரார்
கற்பு மில்லை கழிந்தா ளொழுக்கமே. (௰௯)

ஆக மேவடி வாகிய மைந்துள
மூக வீதி முடியா மொழியவே. (௨௰)

முறைமை யற்றமை மூவுல கத்தினு
மிறைய வர்க்கறி விப்பாரு மில்லையே. (உக)

உண்மை யின்றி யுலகத்து ளோர்படுந்
தன்மை தம்பிரான் றானே யறியுமே. (உஉ)

அவப்பிர காச வவலம் பெருத்தமை
சிவப்பிர காசன் றிருவுளஞ் சென்றதே. ஆ௨ உ௱௰௩.

## அஞ்ஞன் சரிதை.

### வேறு.

### திருவவதாரம்.

அன்பே யனையான்மேல் வரமெய்ப் பரனுக்குத்
தன்பே ரருண்முற்றுந் தானோர் வடிவாயே. (க)

ஆரா வமிர்தின்சே வடியைப் பிரியாவச்
சீரா ரடியாருந் திருமே னிகள்கொண்டே. (உ)

குருநா யகனார்தங் கோலங் கூறப்பண்
டருநான் மறைகாணு திறிவா ரினியாரே. (௩)

பிறவிப் பகைவெல்வார் பிறிதற் றொருதானு
வறிவுற் றவரென்றே யறையுங் கழலிட்டே. (௪)

### வேறு.

ஞான மேதிரு வாபர ணங்களு
ஞான மேதிரு மாலைபுஞ் சாந்தமு

ஞான மேதிரு வானவக் கோலமு
ஞான மேபநுண் மேனியு ஞானமே. (ரு)

ஞான மேயுடை யாடையுங் கூரிய
ஞான மேயுடை வாளுந லன்புனை
ஞான மேவரு மூர்த்தியும் யாவையு
ஞான மேபிற வுஞ்சில நல்கியே. (சு)

வேறு.

கமல நான்முக னார்தங் கருத்தையுங்
கடந்து லோகம டங்கக் கவிப்பதோர்
விமல மாகி விரிந்தொடுங் காமலே
விளங்கு தண்கொற்ற வெண்குடை காப்பதே. (எ)

பூவி லேறியும் போதக மேறியும்
புள்ளி லேறியும் போர்மயி லேறியுஞ்
சேவி லேறியுந் தேரினி லேறியுஞ்
செய்ய பொன்னடி சேரச் சேவிக்கவே. (அ)

வேறு.

உம்ப ரானவர்க் கரிய தாணு விவ்
வுணர்வி லானையொன் றாக வுன்னியே
தம்பி ரானருட் கருணை யாலையன்
றானும் வந்தனன் பரணி தன்னிலே. (கூ)

மம்ம ரங்குழங் தமரா் தேடவிம்
மண்ணின் வந்ததா ளிணைவ ழுத்தியே
யெம்ம ருங்குநின் றடியர் போற்றவே
யெம்பி ரானிருந் தருளு மெல்லையே. ஆ ௨௱௨௰௩

---

வேறு-காமாதிபடைச்செருக்கு.

புணர்வினை டருந்தலென்றும் போற்றுத லன்றிவேறோ
ருணர்வறு மரசன் றன்பா லொற்றரு மோடிச்சென்றே (௧)

மதித்தல்விண் ணவர்க்கு மொண்ணு மறைப்பொருள் மனித னுவந், துதித்தன னென்னும் வார்த்தை யுண்டென
வுரைத்த போதே, (௨)

இனிதினல்வாழு மென்னை யீசனென் றொருவன் வெல்ல
மனிதனுப் வந்தா னென்னும் வார்த்தையும் வார்த்தையா
[மே. (௩)

வேறு.

ஒன்றில்லை யெனுநீரு மொன்றுண்டு போலே
யுரைத்தீர்க ளெனவொற்றர்தா
மின்றில்லை யென்னுதி ரேமிந்த வுலகத்தி
னியல்கூறி னோமென்னவே, (௪)

அளவில்லை சமயங்க ளவரேயு ரைப்பார்க
ளனுமெயென்ன வவர்வந்துமெய்

ஞனவில்லையென்றென்று மறியே முரைப்பா
ருரைப்போதி ஞேமென்னவே. (௫)

சொன்னர்கள் சொன்னத்தை மெய்யென் றிருந்தார்கள்
சுற்றஞ்சி றைச்செய்கவே
யென்னுதன் முன்னேவர் பொருளாக விக்காவ
லெனமார னிகல்கூறுமே. (௬)

மண்ணேரினென்னேயவர் மலைவார்கண் முத்தேவர்
மாருகி யானபடிபோய்
விண்ணேறி ஞெனொருவன் மலையேறி ஞெனொருவன்
வேலைக்கு ளானொருவனே. (௭)

வேறு.

பண்டொர் நான்மலர் பட்டின்று மக்கறைக்
கண்டன் மேனிசெம் பாகங்க றுத்ததே. (அ)

வேலை ஞாலத்த லரென்னை மீறவோ
மாவின் மார்பின் வடுக்கண்டு வைத்துமே. (௯)

விதியு மென்றன் விதியினை வெல்லுமோ
மதிய ழிந்து மகட்கும யங்குமே. (௰)

வேறு.

மலரோனு மாலு மதிசூடு வானும்
வடிவோடு கூடிவரும் யாருமோ

ரலோடு போத மழியாவொ ரோர்வு
மணுகாமல் மாதரடி தாழ்வரே. (௰௧)

பரியேறும் வீரர் பலகோடி யோட
மலைபோ லியானைபல மோதியே
யரியேறு நூறு மதிசூர ரேனு
மலர்வாளி காணினற மாய்வரே. (௰௨)

வேறு

கரும்பெனினு மென்னுடைய கைச்சிலை யசோகங்
கமலநறு முல்லைகழு நீரினொடு சூதத்
தரும்பெனினு மென்கணை சுரும்பெனினு நாணோ
ராவியுடை யார்களென தேவல்பிழை யாரே. (௰௩)

தேனிலவு பூகவன முந்தடமு மியாறுஞ்
செய்யவிசை யேழுமுயி ருய்பவரு காலும்
வானிலவு மாளிகையும் வாணிலவு மென்கை
மாமலரு முள்ளளவும் வந்துணர் வுறுதே. (௰௪)

தூமனனும் வாய்மையு முறுதுமட வார்தஞ்
சொன்னவில வுள்ளளவு மென்னுமள வேயோ
காமனெனு நாமமுள தாமளவு மாயக்
கங்குல்கழி யாதொருவர் கண்ணும்விழி யாரே. (௰௫)

வேறு.

அனிச்சமஞ்சு மடியினாரை யார்மறப்ப ரறிவினான்
மனிச்சர்முன் பிருந்துதான் வடிக்கும்வார்த்தை வார்த்
தையே. (௰௬)

பாவமேவு கொலையினோடு படுகனற்செய் கொடுவிழிக்
கோபனே யெழுந்தபோதிவ் வுலகுநின்று குலையுமே (௰௭)

வேறு.

குலைகுலைந் துளநினைந் திடுநினைந் திடுதொறுங்
குடர்கரிந் துலகடங் கலுநடுங் குதலுறத்
தலைகுலைந் துடைகுலைந் தறிஞரும் பெரியதந்
தலைமைகுன் றிடவெழுஞ் சலமெனுந் தழலதே. (௰௮)

தெருடரப் பொருள்விரித் தருடரத் திரிதருந்
தெளிஞரைத் தெளிவறத் திசைமயக் குறவெறுங்
குருடெனச் செவிடெனக் கொலைசினக் கனலெழுங்
கொதிபொறுப் பவர்களைக் குவலயத் தவர்களே. (௰௯)

வேறு

வருசெ ருச்செயா வகைய றத்தையே
வடநி ழற்கணே மதிபெ றச்சொனோ
னொருச ரத்திலே யொருக ணத்திலே
யுழல்பு ரத்தைநீ றெழவொ ருக்குமே. (௨௰)

மறுக வுக்கிரத் தொழில ரக்கர்தம்
மனமும் வாரியு மதிளி லங்கையுந்
தெறுக னற்கொளச் சிலைவ ளைத்ததுஞ்
சிரமு திர்த்ததுஞ் சினமி குத்தலே.
கோப மிக்கபோ தெவர்க ளாறுவார்
குறுகு வோர்தமைக் கொடிய கோய்புகுஞ்
சாப மிட்டுமா தவர்க ளாயினர்
தலைமை மிக்கதந் தவமி ழப்பரே. (௨௨)

வேறு.

அடலோப னெழிலேவ ரமைவார்க ளடையக்
கடலோடு மலையோடு தடுமாறல் காணே. (௨௩)
பேசோத நேரான பேராசை கூர்போ
தாரோடு முண்டோவெ ரன்பென்ப தங்கே (௨௪)

வேறு.

ஆலஞ்சேர் மிடற்றானு மையத்திற் குழந்திலனோ
மாலும்போய் மாவலிபான் மண்வேண்டி நின்றிலனோ
உரையாத பொய்யுண்டோ வுலோபனே யுற்றக்காற்
றரையாளும் பொருட்டன்றோ தருமனும்பொய் சாற்றி
னனே. (௨௫)

வேறு.

ஈசனொளி யோரிடத்து நிகழா வண்ண
மெவ்வுருவுந் தன்னுருவா மெங்குந் தானு

மாசையவ ஞோர்சேஞ பதியின் றேலிவ்
வஞ்ஞகுல பதிபெருமை யறிவார் யாரே. (௨௭)

புகர்வெண்டேர் புனலென்று புலன்க ளாரப்
போயலையத் திளைத்திளைத்துப் பொய்யே யார்ந்து
சகர்திண்டா டச்செய்யு மோக னஞ்ஞன்
ருஞன சமன்வேருேர் தன்மை யின்றே. (௨௮)

வேறு.

மோகமுற வேமுனிவர் மூவர்முதற் றேவர்கூரியாவர்களு
மிபாவையுமெலா, மாகமது யாமெனது தந்தைதமர் தார
மக வென்பது மொழிந்ததிலரே. (௨௯)
மோகமுற வேயெவரு மோகமத ஞலிடரின் முந்துவர்மு
டிந்தவிடமும், சோகமுற வேதுய ரமுந்துவத லாலது தூரந்
துணர்வு கூரவிலரே. (௩௦)
ஓசையி னிற்பெரியே ஞேதின்மி கப்பெரியே
னுங்களி னெண்மடியான் வம்சமெ னிற்பெரியே
னீசனெ னக்கெதிரோ வேவரெ னக்கெதிர்வே
றென்னும கங்காரத் தெவரெ,ழி ரேறுவரே (௩௧)

என்னள வீச னும்வந் தேற்றெருழி யும்பலிசென்
றேற்றில ஞகினயன் ருேற்றமி லன்றிருமா
றன்னள வோரவியுஞ் சந்திர னிந்திர னுஞ்
சற்றரெ ளப்பகருந் தம்படை நம்படையே. (௩௨)

வேறு.

கதத்தயானை யைத்தணிப்பர் களிமிகுத் தெழுந்தமா
மதத்தையார் தணிக்கவல்லர் மண்ணினன்றி விண்ணிலே,
எச்சரங்க ளுந்தமக் கெதிர்ந்துளோர்களைப்படு
மச்சரன்ற னுவிதன்னை வவ்வுதற்கு வல்லதோ. (௩௪)
தந்தவப்ப யன்பொசிந்தல் கண்டுநெஞ்சு தன்னுளே
வெந்தவப் பொருமைதன்னை வெல்லயாவர் வல்லரே (௩௫)
ஞானமாசில் தன்மவித்த காமநாம நாலையு
மீனமாக்கு நம்படைக்கொ ரெல்லைசொல்வ தெங்ஙனே
இங்கியாது மிவனுரைப்ப வின்பமெய்தி யிறைவனைச்
சங்கியாம லஞ்ஞசேனை தாமகிழ்ந் திருக்கவே. (௩௭)

காமாதிபடைச்செருக்கு முற்றிற்று

ஆ. உ௫அ,

வேறு

ஞானவினோதன்படைச்செருக்கு

எவ்வுயிர்க்கு முயிராய விறைவன் பொற்று
ளெய்தவிருந் தவஞ்செய்தோ ரிறைஞ்சிப் போற்றி
வெவ்வுயிர்க்க வருமஞ்ஞ வேந்தன் றன்னால்
விளைந்ததெலாம் விண்ணப்பஞ் செய்த போதே. (௧)
போராரு மஞ்ஞனவன் றன்னால் வையம்
புகுந்தபிழை கேட்டருளிப் போத மூர்த்தி

சீராரு மடியவரைத் திருக்கண் சாத்தத்
திருவடித்தா மரையவர்தஞ் சென்னி கொண்டே. (௨)

எம்பெருமான் றிருக்கடைக்கண் பட்டார்க் கன்றே
வெளிதாகி யிருப்பதுதா னேற்ற மிக்க
வும்பருமா யாபுரத்திற் கஞ்சா நிற்ப
ரொழிந்தவரே வினியொழிப்பா ருலகத் துள்ளே (௩)

வேறு.

வருபாசக் கட்டறுத்து மாயாபுரமழித்து மயக்கந் தீர்வார்
சொருபானந் தாநினக்குத் தொழில்செய்வார் பிறராலுந்
தொலைக்க லாமோ. (௪)

கச்சொருவுங் கனதனத்தார் கலவியினும் புலவியினுங் கல
க்கந் தீர்வார், மெய்ச்சொருபா னந்தநினை மெய்ப்படத்தாம்
பெற்றவரே வேறார்வல்லார் (௫)

வேறு.

சான்று நின்றுரை செய்த வெல்லையி
னெந்தை ஞானவி னோதனைச்
சென்ற வன்றன தாவி யுண்டு
திரிந்தி டென்றருள் செய்யவே (௬)

தம்பி ரானிரு பதங்க ளுந்தனது
சென்னி கொண்டறிஞர் கம்பிரா

னெம்பி ரானைவிடை கொண்ட வன்படை
யெழுந்த வாறெவ ரியம்புவார். (௭)

வேறு.

கடலன காமகோப லோபமாறுவ
கருணைநி ஷாதியாய்வி டாதுபாய்வன
கருவெனு நாமமாள வீதிபோவன
கலகம ருதவோசை மீளமீள்வன
வுடலொடு கோபமேலு மேலுமூள்வன
வுணர்வறி யாதவேட கூடமோதுப
வுலகிய றாரநாற வேபொருதன
வொளிமத யானைகோடி கோடிகோடியே. (௮)

உறவொடு வேறிலாத வாசியூர்வன
வுலகிரு நாலுமாறு மேலுமாவன
வுடுபதி சூரியாதி காணொணாதன
வுயர்வது வேறுதலை லாதிலாதன
துறவொடு சாலுஞான வீரர்சூழ்வன
சுருதிகள் போனநீதி வீதிபோவன
துணிவுற வேறுபாடு சாடியோடுவ
சுடர்விடு ஞானவாழி கோடிகோடியே. (௯)

சிதறவி டர்மல்யாது மாயநூறுவ
செறியவொ ணாதஞான வாளிபாய்வன

திருகுதல் தீருமாறு மாறுசேர்வன
சிறுகொழி யாதுகாதி யோதும்வாதிகள்
குதறிய கூர்மைவாய்கண் மூடவேறுவ
குணமொரு காலிலாத தானநீர்மைய
குருபர னார்தமேவல் வீதிபோவன
குரகத ராசிகோடி கோடிகோடியே. (௰)

இனியன வானகூறும் வாயும்வாய்மையு
மிறுதிய தானபோதும் வாழுபோதினு
மிபல்வழு வாதஞான தீரபாவமு
மிலகிய ஞானவாளு மோனவீரமு
மனியத வூணலாதி லாதவாண்மைய
மவரவர் சிலமோடு வாழுநீர்மையு
மளவுப டாமையேசு பாவமாகையு
மதிபப மானவீரர் கோடி கோடியே. (௧௧)

வேறு.

இந்தவுல கந்த ரஞ்செய் தெழுகட
லெண்டிசைக லங்கி நின்ற குலமலை
வந்துவிழு மன்று மொன்று மசைவிலர்
வந்தபடி கண்டி ருந்து மகிழ்வரே. (௰௨)

சந்தன குங்கு மங்கள் புழுககில்
தண்பனி தஞ்சொ ரிந்து மகிழ்விலர்

நொந்தன கொண்ட ரிந்து நகரென
நொந்திலர் முந்தை யென்று நகுவரே. (௳௩)

நொந்தனர் கன்றி வந்து நலிபவர்
நுந்தன ரென்ற மைந்த கடனற
வந்தன வென்றி டும்பை வரமகிழ்
வந்தன ரங்கி ரண்டு முடையரே. (௳௪)

வேறு.

செயலினை பற்றி ருக்கு முனிவர்கள்
செறிவினை யைக்கெ டுக்கும் வகையினின்
முயல்வினை யைக் கெடுப்ப ரறிவினின்
முனைவினை யைப்பொ சிப்ப ரடையவே. (௳௫)

வேறு.

எண்ணி லாதவியல் ஞான வீரர்தமை
யெண்ண லாகுமள வெங்ஙனே
கண்ணில் வேறுபட வின்மை யாரொருவர்
காணு மாறறியர் காணுமே. (௳௬)

கீழி லாதபடி கீழு மேலுமதின்
மேலி லாதபடி கெழுமியே
சூழி லாதபடி சூழு தானிலை
சொல்ல லாகுமள வல்லவே. (௳௭

வேறு.

நிறைந்தபெரும் படைநோக்கி நீரழிக்கும் பரிசெமக்கிங்
கறைந்திடுமென் றருள்செய்ய வரியநிரு பகன்றெழுதே ()
தோராதா ரல்லரோ சேயிழையா ரெனத்திகைப்பா
ராராயு மறிவுடையார்க் கருவருப்பே யல்லவோ (௧௯)
மாலாய வவரன்றி மாசற்றார் மாணிழையார்
கோலாக லங்களையு மொன்றாகக் கொள்ளுவரோ. (௨௰)
நரம்பென்பு மூளைதசை நவைதருதோ லாற்பொதிந்த
குரம்பைதனைக் கற்றோருங் கொண்டாட லென்கண்டோ

வேறு.

தசையறாத முகத்தைவந்தெழு சந்திரமண்டல மென்பரே
வசையறுமயிர் தன்னையுங்குழல் மங்குலென்று மதிப்பரே.

கற்கநாறி மணந்தகுங்கும களபவண்டலு மளவிலாத்
துற்கநாறுதல் கண்டிருந்துஞ் சுகந்தமென்று துதிப்பரே
பீளைசாரிய கண்களைச்சில பிணைகளென்று பிதற்றியே
சூளையாரையு மொன்றெனச்சில சொல்லுவாரவர் புல்லரே
மெய்ம்மையேகொடி யெனதுவேள்கொடி மீன்விடும்படை
மாதரார், தம்மையேயென தவர்தமைத்துணி செய்ததைரி
யச் சக்ரமே. (௨௫)
பாவைமாருடல் பைமறிப்பதோர் பார்வையிற்பொடி பட்ட
லும், பூவைமார்பொடி யாகவேபொடி யாகி வேளுயிர் போ
குமே. (௨௬)

இறைவன்முன்பு நிருபகன்றொழு திவைவிளம்பிய வெல்லையிற், பொறைவலஞ்செய்து தொழுதுறும்பகை பொடிபடும்படி புகலுமே. (உஎ)

வேறு.

மாசாய நாவுடையார் வாய்திறந்தா லவர்களுடன்
பேசாம லிருந்துவிடு மஃதன்றோ பெருந்தகைமை (உஅ)

வைதாரை வாழ்த்தினர்போன் மதித்தென்று மறக்கொடுமை, செய்தாரை யறியாத செயலன்றோ செயலாதல்.

பொதுவதுவா நிறைந்தபரம் பொருளேபோல் யாவர்க்கு மதுவதுவா யிருந்துவிடு மஃதன்றோ வவிரோதம். (௩௰)

வேறு.

இகழாவதேது புகழேதுதேரி லிவையாவு மாவதுரையே யசழ்வார்களியாவ ரருள்வார்களியாவ ரநுபோக மாகுமவையே. (௩௧)

எரியானகோப மெழுபோதினுறி யினிதாய கூறியெதிரே சிரியாதிரார்கள் பெரியோர்கள்சீற நினைவார்கள் வேறு சிலரே. (௩௨)

வேறு.

முகுளிதம்பெருகு முகமொழிந்துவிட முறுவல்கொண்டு முகமலர்வனே, வெகுளிதங்குமன வெரிகெடும்பரிசுமிகவு மங்கினிமை விளைவனே. (௩௩)

மொழிதருங்கனலு மவிபரின்றமிர்த மொழியெனுந்தடினி பொழிவனே, யழிதரும்படியென் னுடலில்வந்தனவெ ன னுபவங்களென வயில்வனே (௩௪)

வேறு.

மிகையாவென் பொறைப்படைக்கு விருந்தாக்கி விடுகின் றேன், பகைபாவங் கொடுமைகொலை படையுடைய் கோட் ணேயே. (௩௫)

பொறைபெரிது மிவையோதப் புகழ்பெரிய சந்தோட, னி றையுடையா னடியேத்தி நிறைவுடனின் றறைவுறுமே.

வேறு.

என்றும் பொருவரிய வின்பப் பொருளுடையார்
பொன்றும் பொருளும் பொருளாகப் போற்றுவரோ (௩௭)

வாணு ளொழிந்தாலும் வாய்விண்டு தாம்வேண்ட
நாணு தொழிவாரோ நன்ருய நாவுடையார். (௩௮)

வேறு.

உளம்படு பேராசை நோய்கூர மேன்மே
லுழன்றவர் வாழாத வாகாண லாமே
வளம்பட வாழ்வோமெ னுதார்கள யாரே
வருந்தினும் வாராது வாராது தானே. (௩௯)

புலன்றலை கொண்டேறு பொன்போக மேன்மேற்
புணர்ந்திட வுண்டாகி வந்தாலு மாரு

வலந்தலை கண்டாசை யொன்றோடு முதே
யறிந்தவர் சந்தோடம் வந்தாறி னூரே. (சு௰)

வேறு.

இல்லாத பொழுதின்ப மிஃதென்று பிறர்பாற்
செல்லாத செலவென்ப செலவாய செலவே. (சுக)

படைத்தவ னிருந்திசை படைத்தபொரு ளெங்கே
யெடுத்தவன் விழிற்சுமை விழாமலு மிராதே. (சுஉ)

ஆமசுகும் வழியா னருந்தித்த தடையத்
தாமாய்தல் பொருள்மாய்தல் தவிராது பிரிவே. (சுங)

வாதாகி நுகர்கின்ற வயிறுள்ள தொருசா
ணேதாவி தமையாதி தென்னே! யீதென்னே!. (சுச)

ஏசாத பற்றின்மை யெனுமாயு தத்தா
லர்சாப சாசோடு மடலோப னிறுமே. (சுரு)

வேறு.

சந்தோட னிவையிவை சாற்றவே
யந்தோ வென்றருள் செய்யும ளவிலே. (சுசு)

விவகார பராமுகன் மேவரும்
பவகாலன் பதம்பணிந் தோதுமே. (சுஎ)

வேறு.

அத்தனொ டன்னைக் கன்புசெய் கின்று
ரளவில் பிறப்புற் றவையவை தோறு

மெத்தனை தாயுந் தந்தையு முற்று
ரித்தனை யன்றோ யிவர்களு மிங்கே. (சஅ)

சால வுதிக்கும் புழுவுட றன்னிற்
றகவின் மலத்தோ டொழுகு முடம்பே
போல வுதிக்கும் புழுவினை யென்னே
புத்திர னென்றே புந்திசெய் வாரே. (சகூ)

வந்த வழிக்கண் வந்திலர் போகும்
வழியினும் வருவா ரிலரிடை வழியார்
தந்தை மகத்தாய் தம்மொடு வந்தார்
தாரமு முற்றார் தாமுமெ லாமே. (ருo)

அமரு முடம்போ டழிதுயர் வந்தே
யலம்வரு போதங் கனுபவி யாமே
தமர்கள் பகிர்ந்தர் ருளரென வுண்டோ
தம்முற வாவார் தாமல தின்றே. (ருக)

வேறு.

ஒழிந்தனி வேறற வொன்றுட ருனு
மழிந்தது தம்முட னுமுற வாரே. (ருஉ)

சுற்றமொ டுற்ற துவந்துவ மெல்லா
மற்றவர் தம்முட னற்றவர் தாமே. (ரு௩)

வேறு.

கதறிய வாழியாறி யாடுதல் கருதினர் யாவர்தாமி ப்பாவையு
முதறிய ருதபோது நாடொறு மொழுகவி டாதவார வா
ரமே. (ருச)

கழியசி லாதபோது சேறது கழுவியு மிலாபமேது யாவையு
மொழியசி லாதபோது மாசற வுதறவொ ணாதுபாச முடு
மே. (௫௫)

வேறு.

உறவாடு பந்தங்க ளெல்லா முதிர்ப்பன்
றுறவாகும் வச்சாயு தத்திற் றுணித்தே. (௫௬)

வடிவற்ற கோன்மைந்தன் முன்னின்று மறைநா
முடிவற்ற பலகோடி மொழியாத முன்னே. (௫௭)

தத்தந் தொழிற்கொன்று தாழ்வின்மை யின்னே
முத்தன் பெருஞ்சேனை யெல்லா மொழிந்தே. (௫௮)

ஞானவிநோதன்படைச்செருக்குமுற்றிற்று ஆ ௩௱௫௬.

——( )——

வேறு—ஞானவேந்தன் படையெழுச்சி.

தஞ்சேனை கண்டன்பு தாமுற்றி வாறே
நஞ்சே யனுன்மே னடக்கின்ற போதே. (௧)

வேறு.

வித்தக வேதங்க ளேவாசி யாவே
மெய்த்திற னய்நின்ற தோர்பாக னவே
தத்துவ மாகின்ற தேரேற்றி னரே
தற்சொரு பானந்தர் தாள்சூடி னரே. (௨)

வாதக ரோடினு மாதரவொ டோர்கால்
வாசியி லாவாசி யேவாசி தானும்
போதமே போதக மாந்தேர்வு தேர்தாம்
போல்பவ ரேவீர ரேதோது மாறே. (௩)

வேறு.

தானதேதுமில தாகிபாகவல தம்பிரானுடைய தானைமால்
யானைதேர்புரவி யஞ்ஞமன்னனது மாயமாபுர மணைந்த
தே. (௪)

புறம்புறுதபடி சூழநம்படைஞர் போதுகென்றருளு போதி
லோ, ரறம்புகாதபடை வீடுசூழவு மடங்கவும்படைஞ
ரானவே. (௫)

முகுந்தனன்றரனு மன்றுநாலுதிசை முகனுமன்றவர்த
மூலமே,புகுந்ததென்றிகல்புறம்புகண்டவ ரடங்கவுள்புகுத
போதிலே (௬)

வேறு,

மருவி யெங்குமுற நின்றபொரு ளின்றுபுவிமேல்
வடிவு கொண்டுவரு கின்றதென நின்றுமொழிவா
ரருவ மென்றுமொழி கின்றபொரு ளிங்குவருதற்
கடிமை யென்றுசிலர் நின்றுநகை கொண்டுவிடுவார். ()

சமய மென்பனவு மொன்றுமில தென்றுமொழிவார்
தவமுடிந்தது முடிந்ததென நின்றுசமைவா

ரமையு நந்துமுனி யென்றமைவு வந்துவிடுவா
ரறிவி லன்புரம ழிந்ததினி யென்றயருவார் (அ)
குடிகெ டும்படிபு குந்ததுணர் வென்றுதளர்வார்
குலம டங்கலுமு டிந்ததென நின்றுகுலைவார்
முடிவில் வந்துறுவ தொன்றென மொழிந்தகணியார்
மொழியு மின்றுதலை வந்ததென நின்றுமொழிவார் (௯)
பறைவ தென்கொல்பல விங்கவர்க ணின்றுகெடுவீர்
பவமெ றிந்துவரு கின்றபடி கண்டுமினநீ
ரிறைவ னன்றென வியம்புவதெ னென்று மொழிவர்
ரிருவர் தங்களி லியம்புவ தடங்கவிவையே, () ஆக ௩௨௯

வேறு.

அஞ்ஞவேந்தன்படையெழுச்சி.

விடர்விளங்கு தானையஞ்ஞ வேந்தனுக்கு மாந்தர்போய்ச்
சுடர்விளங்கு ஞானசேனை சூழ்ந்ததென்று சொல்லவே. ()
மூவர்சேனை யென்கண்முன்பு நிற்கவில்லை மொய்ம்பினோ
டியாவர்சேனை யென்னைவெல்ல விங்குவந்த தென்னவே.
யாவர்சேனை யென்னயா மறிந்ததில்லை யெங்கணுந்
தேவதேவ தேவனென்ற சின்னவோசை யென்னவே. (௩)

வேறு.

ஏகமுத லோனருவ னாகினமர் செய்யவவ
னென் கணெதிர் நிற்கவிலனே

தேகமுள னேலவனை மாரன்முதல் வீரர்படை
சிந்துவர்கள் சிந்திவிடவே. (௪)

வானவர்க டானவர்கண் மானவர்க ளானவரின்
யாவர்மறை கூறுபரிசே
ஞானபர ராய்மதன ராசன்முத லானவிரு
நால்வரையும் வென்றவவரே. (௫)

ஓது முத லிந்திரிய முள்ளுமன புந்தியுயி
ரோங்கியவ கங்காரமுமிங்
கியாதுமுள சங்கமெனு மேழணியி னென்றுவிடு
விக்கிலவ ளிங்கிறைவனே. (௬)

ஆண்டகைய னுகினெனை யஞ்சுதலொ ழித்துவரு
மவனையெதிர் கண்டளவில்யான்
மீண்டிடுவ னுகினெனை யஞ்ஞவர சென்றழையல்
வேறுபெய ரிட்டழையுமே. (௭)

என்றுபல பாஷைகள் கொடுத்துமத னுதிபடை
யேவியிறை வன்கணெதிரே
நின்றுபொர நேரறிவி னெஞ்சினிசி கோடியிரு
ணின்றதென லாகுநிலையே. (௮) ஆ௨ நாநசெ

—O—

வேறு. தொந்தயுத்தம்.

வேத கேதன்ப டையுடன் வெஞ்சினப்

போத னென்ப டைபொரப் போகவே. (௧)

துன்னிட் டகன போதகந் தோன்றலும்
வென்னிட் டகின வைம்புல வேழமே. (௨)

இரத மான ரதத்தெதிர் நின்றில
விரத மான விடய ரதங்களே. (௩)

புரணப் பாய்பரி தோன்றப் புரத்துள
கரணப் பாய்பரி யாவுங்க ரந்தவே. (௪)

அறிவன் பெருஞ்சேனை கண்கா ண வெதிரே
வஞ்ஞன்கொ டுஞ்சேனை யஞ்சாம லெழவோ
வெறிவெங் கதிர்ச்செல்வ ரெத்திக்கு மெழவே
யிரியாம லிருணிற்கி னிதுநிற்கு மெதிரே. (௫)

வேறு.

ஓடலின்றியெதிர் நின்றவீரர்தமை வீரங்கொருவ ரொழி
வறச், சாடுகென்றருள வீரர்சொல்லுவர் வணங்கிவீரனிரு
தாளிலே. (௬)

தும்பை.

அறிவிலன்படையு மளவினம்படையு மறியவின்றிவரு மறி
வுறுங், குறியுறும்பரிசை யருளுகென்னவவர் குறியுறும்
பரிசு கூறுமே. (௭)

வேறு.

விண்டிருந்தென்மெய் கண்டுளோர்தவ வேடமேவியென்
கோடிமாதரைக், கொண்டிருந்தெனவர் செய்ததேதவங்

கொண்டகொண்டதே கோலமாகுமால். (அ)

ஆகூ ருாசக.

வேறு.

நனவுநிலைபோல வறிவுமறிவார்க
ணவையுமறிவார்க ணலனுளோர்
கனவுநிலைபோல வெவதுவுமறியாத
வதுவுமறியார்கள் கயவரே. (க)

வேறு.

கற்றவரு மற்றவரு மொருவர் செய்யுங்
கடுமையினிற் கலுழும்வகை யொத்து மொவ்வார்
செற்றவர்மே லுறுஞ்செயிர்க்கு நோவர் நல்லார்
தீயுடன்மே லுறுஞ்செயிர்க்கு நோவர் தீயார். (உ)

உள்ளமழிந் துகும்அன்பர்க் கன்றி யோரா
வுலகர்திறத் தினுமுண்டங் கொவ்வார் மாதர்
கள்ளவிழிக் கழிந்துகுவா ரறியா ரீசன்
கலந்தவிழிக் கழிந்துகுவார் கவலை யற்றோர். (ரு)

அறிவினான் மிகுபவரு மறிவி லோரு
மாயுமா றொன்றுமில ரெரினு மொவ்வார்
பிறிவிலா மையிலறியார் பிறவி நீத்தார்
பேரிருளா லொன்றறியார் பிறந்து சாவார். (ச)

மகவருடப் பால்பபக்குந் தொங்கை யின்ப
மயக்கமுயக் குறுங்கணவன் வருடும் போது

மிகவுணர்ந்தோர்க் கும்பிறர்க்குஞ் செயல்கள் பார்க்கின்
வேறறினும் பாவகந்தான் வேறு வேறு (௫)

அழுக்கிலவர் செயவேண்டுந் தவமு மில்லை
யழுக்குடையோர் செய்வதில்லை யாத லாலே
யொழுக்குடைய நல்வினையு முயர்ந்தோர்க்கில்லை.
யொழிந்தோர்க்கு மில்லெனினு மொவ்வா ரொவ்வார் (௬)

மேவிவிடு மருட்படைக்கு மருட்ப டைக்கும்
வேறறிய விவ்வாறு விளம்ப வீர
னேவிவிடு மளவதனி லஞ்ஞ சேனை
பிறந்தபடி யதனையுமிங் கியம்பல் செய்வாம். (௭)

வேறு.

உருபக மகளிர் திறத்தினை புசாவொடு மறமொடிழிப்பொடு
நிருபகன் மதனை யழித்தன னிலவிய ரதியு மிறப்பவே. (௮)

பாவனு மிகலு மிரங்கலில் பாடுறு கொலையு மெரிந்தெழு
கோபனு மடைய நலம்பல கூறிய பொறையி னழிந்தவே ()
மோகனு முலகு மயக்குற மூடியமபனு மிகுத்தெழு, சோக
னு மகிழ்வு நசித்தனர் தூய்மதி கணவன் விழிக்கவே. (௧௰)

வேறு.

ஆனசந்தோடனில் லோபனு மாசையும் பேசுகள வர்தியு
மானசந் தாபனுந் தீனனு மானமுஞ் சேரவுயிர் மாயுமே.

வேறு.

அறன ழித்தனன் மறத்தினைய சூசையினைநல்
லமிர்த சீலனு மழித்தன னடக்கனுமதத்
திறன ழித்தன னும்பட்சைசயி லபேட்சைபொடிநற்
றேர்வி லேபெரியி டம்பனுயிர் சிந்தியதுவே. (கஉ)

ஆங்க ரிப்பரிய சாந்தியி னழிந்ததுயிர்கட்
கன்னை போலுமவி ரோதமெழ வாருயிரையுந்
தீங்க ருத்தியிடு மச்சர மழிந்தயரவே
செய்யு மையமழி வுற்றது மிகுந்தெளிவினை (கங)

தற்க மோனமுற வேபொடி தமம்பொடிவுறுஞ்
சத்து வத்தின்வரு சங்கமு மசங்கமுறநேர்
நிற்கு மோவொரு மருட்படை யருட்படையின்முன்
னிற்க வேதுநிண னேதுகுட ரேதுநிலையே. ஆ. ௩௫௬

வேறு-அஞ்ஞனழிவுவகை.

ஆவியை யொழியவெல்லா மழிந்தசப் பட்டவஞ்ஞப்
பாவியை யெந்தைபாதம் பணிகெனப் பகர்ந்தபோதே. (க)
அறிவில னெனும்பேரொன்று மழிவுற திருக்கஞானங்
கிறிவரும் படியென்றனை கிளர்ந்தெழு மென்னக்கேட்டே.

வேறு.

இருடுணிந் திரவிமுன் னிற்குமோ பஞ்சுதீ
நெரியின்முன் னிற்குமோ வெங்கனை யரவமுங்

கருடன்முன் னிற்குமோ ஞானமே வந்துறுங்
கண்ணின்முன் னிற்குமோ வெண்ணுறுங் கன்மமே (௩)

அழியுமிக் காயமுங் கழியுமுன் னிளமையு
மன்புறுங் கிளைஞரு மின்புறும் போகமு
மொழியுமிச் செல்வமொன் றுகநீ யுன்னியோ
வுடையநா யகனைநெஞ் சுணர்வுறு தொழிவதே. (௪)

வேறு.

தேவர்களு முனிவர்களுஞ் செழுமறையும் பழையவொரு
மூவருமென் றிருந்தனையோ முழுமுதலென் றறிந்திலை
யோ. (௫)

இந்தவுல கத்தினிடர் கெடும்பரிசிங் கெழுந்தருளி, வந்தவ
னென் றறிந்திலையோ மானிடனென் றிருந்தனையோ. (௬)

அதிரேக வழகுடையா னுளுடையான் றுளுடையா
னெதிரேநின் றனையாவி யிப்பொழுதே யிழந்தனையே (௭)

வேறு.

நாய னாடி பார்க ணவில்தொறும்
பேய னும் பெருகச் சினஞ்செய்தே. (௮)

ஞான வேந்தன்வந் தென்னெதிர் நண்ணுற
லான வெல்லையிற் காணுமென் னுண்மையே. (௯)

என்றவன்மொழி யெந்தைதி ருச்செவி
சென்ற வெல்லை சிரித்தருள் செய்யுமே. (௧௦)

உம்ப ரிம்ப ருவப்ப வொளிமிகுந்

தம்பெ ருந்தன்மை காட்டச்ச மைந்துமே. (௧௧)

வேறு.

பழுது படாமறை வானுளோர் பண்டையோர் மூவர்க ளின்றுகா, றழுது பெருவடி யஞ்ஞன்மே லாக விசைந்தன னண்ணலே. (௧௨)

வெருவரு நான்முக ஞதியாம் விண்ணவர் மண்ணவர் வேறுளோ, ரொருவர் பெருவடி யுணர்விலா னுச்சியின் மீது முதைத்ததே. (௧௩)

தென்றிசை யின்றுயர் தீர்த்ததாள் செய்தரு ளும்படி தெரியுமோ, வின்றிசை கின்றன வல்லவோ வித்தலை மீதுமி ருக்கவே.

பெரியவர் தஞ்செயலாவதும் பிறரறிவாலறி வோமெனத், தெரியும தன்றது தெரிவதுஞ் செய்து முடிந்திடு திசை யிலே. ()

வேறு.

செறிதரும்பிறவி முறியவந்திறைவர் திருவிளங்குகழல ருளுநா, ளறிஞரென்றுமில ரவலரென்றுமில ரவர்சுதந்தர ம தடையவே. (௧௬)

பிறிவிலாதகுரு பரமனார்தமருள் பெருகவேயுடைய திரு வினு, னறிவிலானுடனிவ் வகிலமாயையுயி ரடையஞானும் வகை யறைகுவாம். (௧௭)

வேறு.

சலிக்குமனத் தெழுச்சியறத் தவிர்த்திதம்விட் டகத்தே

வேறு.

கருதுமொரு பொருளையொரு கணமளவி லடையவிகல்
கடவுமவன் விடயரதமே
வருதிசைகள் முழுதுமொரு நொடியளவில் வலிசுழல
வருகமன மனதுரகமே. (௬)

பரஞெளிசெ யருமறைகள் பகருமல ரடியிணைகள் பரவ
ரிணை கிலர்களெனவோ
வரனொடரி யபனெனினு மிலதகில மடையவெறு
மஞ்ஞதல பதியாணையே. (௭)

வேறு.

அந்தக ஞதுஞ் செய்நன்றிக் ~~காகாப~~ யறியப் பருகல் வழியளவி
னிந்திர ஞகும்பிறரொருவ ரேதங் காணு மிடத்திலே.
மெய்யென் றிருப்ப துடம்பினையும் விளங்கிழை யார்தம்
வார்த்தையுமே, பொய்யென் றிருப்ப தீசனையும் புரையற்
றோர்கள் புகல்வதுமே. (௯)

வேறு.

[illegible]சையு ரைக்கினவ ஞவும ஞகுமே
வசையு ரைக்கினவன் வாய்கோடி யாகுமே ([illegible])
எவ்வத் தேற்புவர்க் கியக்கை யில்லனே
செல்வத் தேடி னொருகோடி வைகயனே. (௧௧)

இளமை யும்மிடும் பைக்கிட ளுகிய
வளமை யும்பெரி தென்றே மதிக்குமே. (௰௨)

சாயை போலுஞ் சகட்டுருள் போலுமா
மாய வாழ்க்கை நிலைபாய் மதிக்குமே. (௰௩)

மின்ற னெல்லை விதியற்ற யாக்கைகொண்
டென்று மிங்கிருப் பார்போன் றிருக்குமே. (௰௪)

அறஞ் சுருக்கு மவலம் பெருக்குமே
புறன் பெருக்கும் புகழுஞ் சுருக்குமே. (௰௫)

நிரயத் தோடு நெடுவான் முகட்டொடுந்
தரையத் தோடுந் தனியூச லாடுமே. (௰௬)

வேறு.

ஓதலு முணர்த்தலு முணவு சுட்டியே
சாதலும் பிறத்தலுந் தவிர்க்க வல்லவே. (௰௭)

இந்த மன்னனுக் கென்றும்ப வங்கொள
வந்த துன்மதி மந்திரி யாகுமே. (௰௮)

அற்ப மில்லை யருந்தவ மாதரார்
கற்பு மில்லை கழிந்தா ளொழுக்கமே. (௰௯)

ஆக மேவடி வாகிய மைந்துள
மூக னீதி முடியா மொழியவே. (௨௰)

முறைமை யற்றமை மூவுல கத்தினு
மிறைய வர்க்கறி விப்பாரு மில்லையே. (௨௧)

உண்மை யின்றி யுலகத்து ளோர்படுந்
தன்மை தம்பிரான் றானே யறியுமே. (௨௨)

அவப்பிர காச வவலம் பெருத்தமை
சிவப்பிர காசன் றிருவுளஞ் சென்றதே. ஆக உ௱௬௩.

## அஞ்ஞன் சரிதை.

### வேறு.

### திருவவதாரம்.

அன்பே யனையான்மேல் வரமெய்ப் பரனுக்குத்
தன்பே ரருண்முற்றுந் தானோர் வடிவாயே. (௧)

ஆரா வமிர்தின்சே வடியைப் பிரியாவச்
சீரா ரடியாருந் திருமே னிகள்கொண்டே. (௨)

குருநா யகனார்தங் கோலங் கூறப்பண்
டருநான் மறைகாணு தறிவா ரினியாரே. (௩)

பிறவிப் பகைவெல்வார் பிறிதற் றெருதானு
வறிவுற் றவரென்றே யறையுங் கழலிட்டே. (௪)

### வேறு.

ஞான மேதிரு வாபர ணங்களு
ஞான மேதிரு மாலைபுஞ் சாந்தமு

ஞான மேதிரு வானவக் கோலமு
ஞான மேபநுண் மேனியு ஞானமே. (ரு)

ஞான மேயுடை யாடையுங் கூரிய
ஞான மேயுடை வாளுநு லன்புனே
ஞான மேவரு மூர்த்தியும் யாவையு
ஞான மேபிற வுஞ்சில நல்கியே. (சு)

வேறு.

கமல நான்முக ஞர்தங் கருத்தையுங்
கடந்து லோகம டங்கக் கவிப்பதோர்
விமல மாகி விரிந்தொடுங் காமலே
விளங்கு தண்கொற்ற வெண்குடை காப்பதே. (எ)

பூவி லேறியும் போதக மேறியும்
புள்ளி லேறியும் போர்மயி லேறியுஞ்
சேவி லேறியுந் தேரினி லேறியுஞ்
செய்ய பொன்னடி சேரச் சேவிக்கவே. (அ)

வேறு.

உம்ப ரானவர்க் சரிய தானு விவ்
வுணர்வி லானையொன் முக வுன்னியே
தம்பி ரானருட் கருணை யாலையன்
ருனும் வந்தனன் றரணி தன்னிலே. (கூ)

மம்ம ரங்குழந் தமரர் தேடவிம்
மண்ணின் வந்ததா ளிணைவ ழுத்தியே
யெம்ம ருங்குநின் றடியர் போற்றவே
யெம்பி ரானிருந் தருளு மெல்லையே. ஆ உ௱உ௫

———()———

வேறு-கர்மாதிபடைச்செருக்கு.

புணர்வினை டருந்தலென்றும் போற்றுத லன்றிவேறே
ருணர்வறு மரசன் றன்பா லொற்றரு மோடிச்சென்றே (௧)

மதித்தல்விண் ணவர்க்கு மோண்ணு மறைப்பொருள் மனித னுவந், துதித்தன னென்னும் வார்த்தை யுண்டென வுரைத்த போதே, (௨)

இனிதினுல் வாழு மென்னை யீசனென் றொருவன் வெல்ல
மனிதனுய் வந்தா னென்னும் வார்த்தையும் வார்த்தையா
வேறு. [மே. (௩)

ஒன்றில்லை யெனுமீரு மொன்றுண்டு போலே
யுரைத்தீர்களெனவொற்றர்தா
மின்றில்லை யென்னுதி ரேமிந்த வுலகத்தி
னியல்கூறி னேமென்னவே. (௪)

அளவில்லை சமயங்க ளவரேயு ரைப்பார்க
ளழையென்ன வவர்வந்துமெய்

ளவில்லை யென்றென்று மறியே முரைப்பா
ருரைப்பேசதி ஞெமென்னவே. (ரு)

சொன்னார்கள் சொன்னத்தை மெய்யென் றிருந்தார்கள்
சுற்றஞ்சி றைச்செய்கவே
யென்னுதன் முன்னைவர் பொருளாக விக்காவ
லெனமார னிகல்கூறுமே. (சு)

மண்ணேரி னெனையேவர் மலைவார்கண் முத்தேவர்
மாருகி யானபடிபோய்
விண்ணேறி ஞெருவன் மலையேறி ஞெருவன்
வேலைக்கு ளாஞெருவனே. (எ)

வேறு.

பண்டொர் நாண்மலர் பட்டின்று மக்கறைக்
கண்டன் மேனிசெம் பாகங்க றுத்ததே. (அ)

வேலை ஞாலத்த வரென்னை மீறவோ
மாவின் மார்பின் வடுக்கண்டு வைத்துமே. (சு)

விதியு மென்றன் விதியினை வெல்லுமோ
மதிய ழிந்து மகட்கும யங்குமே. (0)

வேறு.

மலரோனு மாலு மதிசூடி வானும்
வடிவோடு கூடிவரும் யாருமோ

ரலரோடு போதமழியாவொ ரோர்வு
மணுகாமல் மாதரடி தாழ்வரே. (௯௧)

பரியேறும் வீரர் பலகோடி யோட
மலைபோ லியானைபல மோதியே
யரியேறு நூறு மதிசூர ரேனு
மலர்வாளி காணினற மாய்வரே. (௯௨)

வேறு

கரும்பெனினு மென்னுடைய கைச்சிலை யசோகங்
கமலநறு முல்லைகழு நீரினொடு சூதத்
தரும்பெனினு மென்கணை சுரும்பெனினு நாணே
யாவியுடை யார்களென தேவல்பிழை யாரே. (௯௩)

தேனிலவு பூகவன முந்தடமு மியாறுஞ்
செய்யவிசை யேழுமுயி ருய்யவரு காலும்
வானிலவு மாளிகையும் வாணிலவு மென்கை
மாமலரு முள்ளளவும் வந்துணர் வுறுதே. (௯௪)

தாமனனும் வாய்மையு முறுதுமட வார்தஞ்
சொன்னவில வுள்ளளவு மென்னுமள வேயோ
காமனெனு நாமமுள தாமளவு மாயக்
கங்குல்கழி யாதொருவர் கண்ணும்விழி யாரே. (௯௫)

வேறு.

அனிச்சமஞ்சு மடியினுரை யார்மறப்ப ரறிவினுன்
மனிச்சர்முன் பிருந்துதான் வடிக்கும்வார்த்தை வார்த்
தையே. (௰௬)

பாவமேவு கொலைபினேடு படுகனற்செய் கொடுவிழிக்
கோபனே யெழுந்தபோதிவ் வுலகுநின்று குலையுமே. (௰௭)

வேறு.

குலைகுலைந் துளநினைந் திடுநினைந் திடுதொறுங்
குடர்கரிந் துலகடங் கலுநடுங் குதலுறத்
தலைகுலைந் துடைகுலைந் தறிஞரும் பெரியதந்
தலைமைகுன் றிடவெழுஞ் சலமெனுந் தழலதே. (௰௮)

தெருடரப் பொருள்விரித் தருடரத் திரிதருந்
தெளிஞரைத் தெளிவறத் திசைமயக் குறவெறுங்
குருடெனச் செவிடெனக் கொலைசினக் கனலெழுங்
கொதிபொறுப் பவர்களைக் குவலயத் தவர்களே. (௰௯)

வேறு

வருசெ ருச்செயா வகைய றத்தையே
வடநி ழற்கணே மதிபெ றச்சொனே
ஞெருச ரத்திலே யொருக ணத்திலே
யுழப்பு ரத்தைநீ றெழவொ ருக்குமே. (௨௰)

மறுக வுக்கிரத் தொழில ரக்கர்தம்
மனமும் வாரியு மதிளி லங்கையுந்
தெறுக னற்கொளச் சிலைவ ளைத்ததுஞ்
சிரமு திர்த்ததுஞ் சினமி குத்தலே.
கோப மிக்கபோ தெவர்க ளாறுவார்
குறுகு வோர்தமைக் கொடிப கோய்புகுஞ்
சாப மிட்டுமா தவர்க ளாயினர்
தலைமை மிக்கதந் தவமி ழப்பரே. (உஉ)

வேறு.

அடலோப னெழிலேவ ரமைவார்க ளடையக்
கடலோடு மலையோடு தடுமாறல் காணே. (உ௩)
பேரோத நேரான பேராசை கூர்போ
தாரோடு முண்டோவெ ரன்பென்ப தங்கே (உச)

வேறு.

ஆலஞ்சேர் மிடற்றானு மையத்திற் குழந்திலனோ
மாலும்போய் மாவலிபான் மண்வேண்டி நின்றிலனோ
உரையாத பொய்யுண்டோ வுலோபமனே யுற்றக்காற்
றரையாளும் பொருட்டன்றோ தருமனும்பொய் சாற்றி
னனே. (உ௫)

வேறு.

ஈசனொளி யோரிடத்து நிகழா வண்ண
மெவ்வுருவுந் தன்னுருவா மெங்குந் தானா

மாசையவ ஞேர்சேனு பதியின் றேலிவ்
வஞ்ஞகுல பதிபெருமை யறிவார் யாரே. (௨௭)

புகர்வெண்டோர் புனலென்று புலன்க ளாரப்
போயலையத் திளைத்திளைத்துப் பொய்யே யார்ந்து
சகர்திண்டா டச்செய்யு மோக னஞ்ஞன்
ருனன சமன்வேரூர் தன்மை யின்றே. (௨௮)

வேறு.

மோகமுற வேமுனிவர் மூவர்முதற் றேவர்நரரியாவர்களு
மியாவையுமெலா, மாகடீது யானெனது தந்தைதமர் தார
மக வென்பது மொழிந்ததிலரே. (௨௯)

மோகமுற வேயெவரு மோகமத ஞலிடரின் முந்துவர்மு
டிந்தவிடமும், சோகமுற வேதுய ரமுந்துவத லாலது துரந்
துணர்வு கூரவிலரே. (௩௰)

ஓசையி னிற்பெரியே ஞேதின்மி கப்பெரியே
னுங்களி னெண்மடியான் வம்சமெ னிற்பெரியே
னீசனெ னக்கெதிரோ வேவரெ னக்கெதிர்வே
றென்னுமகங்காரத் தெவரெதி ரேறுவரே (௩௧)

என்னள வீச னும்வந் தேற்றெழி யும்பலிசென்
றேற்றில ஞகினயன் ரேற்றமி லன்றிருமா
றன்னள வோரவியுஞ் சந்திர னிந்திர னுஞ்
சற்றுமெ னப்பகருந் தம்படை நம்படையே. (௩௨)

வேறு.

கதத்தயானை யைத்தணிப்பர் களிமிகுத் தெழுந்தமா
மதத்தையார் தணிக்கவல்லர் மண்ணினன்றி விண்ணிலே.
எச்சரங்க ளுந்தமக் கெதிர்ந்துளோர்க ளைப்படு
மச்சரன்ற னுவிதன்னை வவ்வுதற்கு வல்லதோ. (௩௪)
தந்தவப்ப யன்பொசித்தல் கண்டுநெஞ்சு தன்னுளே
வெந்தவப் பொருமைதன்னை வெல்லயாவர் வல்லரே (௩௫)
ஞானமாசில் தன்மவித்த காமநாம நாலையு
மீனமாக்கு நம்படைக்கொ ரெல்லைசொல்வ தெங்ஙனே
இங்கியாது மிவனுரைப்ப வின்பமெய்தி யிறைவனைச்
சங்கியாம லஞ்ஞசேனை தாமகிழ்ந் திருக்கவே. (௩௭)

காமாதிபடைச்செருக்கு முற்றிற்று
ஆ உ௫அ,

வேறு

ஞானவினோதன்படைச்செருக்கு

எவ்வுயிர்க்கு முயிராய விறைவன் பொற்று
ளெய்தவிருந் தவஞ்செய்தோ ரிறைஞ்சிப் போற்றி
வெவ்வுயிர்க்க வருமஞ்ஞ வேந்தன் றன்னால்
விளைந்ததெலாம் விண்ணப்பஞ் செய்த போதே. (க)
போராரு மஞ்ஞனவன் றன்னால் வையம்
புகுந்தபிழை கேட்டருளிப் போத மூர்த்தி

சீராரு மடியவரைத் திருக்கண் சாத்தத்
திருவடித்தா மரையவர்தஞ் சென்னி கொண்டே. (௨)

எம்பெருமான் றிருக்கடைக்கண் பட்டார்க் கன்றோ
வெளிதாகி யிருப்பதுதா னேற்ற மிக்க
வும்பருமா யாபுரத்திற் கஞ்சா நிற்ப
ரொழிந்தவரே யினியொழிப்பா ருலகத் துள்ளே (௩)

வேறு.

வருபாசக் கட்டறுத்து மாயாபுரமழித்து மயக்கந் தீர்வார்
சொருபானந் தாநினக்குத் தொழில்செய்வார் பிறராலுந்
தொலைக்க லாமோ. (௪)

கச்சொருவுங் கனதனத்தார் கலவியினும் புலவியினுங் கல
க்கந் தீர்வார், மெய்ச்சொருபா னந்தநினை மெய்ப்படத்தாம்
பெற்றவரே வேறார்வல்லார் (௫)

வேறு.

என்று நின்றுரை செய்த வெல்லையி
னெந்தை ஞானவி னோதனைச்
சென்ற வன்றன தாவி யுண்டு
திரிந்தி டென்றருள் செய்யவே (௬)

தம்பி ரானிரு பதங்க ளுந்தனது
சென்னி கொண்டறிஞர் தம்பிரா

னெம்பி ரானைவிடை கொண்ட வன்படை
யெழுந்த வாறெவ ரியம்புவார். (எ)

வேறு.

கடலன காமகோப லோபமாறுவ
கருணைநி ஷாதியாய்வி டாதுபாய்வன
கருவெனு நாமமாள வீதிபோவன
கலகம ருதவோசை மீளமீள்வன
வுடலொடு கோபமேலு மேலுமூள்வன
வுணர்வறி யாதவேட கூடமோதுப
வுலகிய றாரநாற வேபொருதன
வொளிமத யானைகோடி கோடிகோடியே. (அ)

உறவொடு வேறிலாத வாசியூர்வன
வுலகிரு நாலுமாறு மேலுமாவன
வுடுபதி சூரியாதி காணொணாதன
வுயர்வது வேறுதலை லாதிலாதன
துறவொடு சாலுஞான வீரர்சூழ்வன
சுருதிகள் போனநீதி வீதிபோவன
துணிவுற வேறுபாடு சாடியோடுவ
சுடர்விடு ஞானவாழி கோடிகோடியே. (கூ)

சிதறவி டர்மல்யார்து டீாயநூறுவ
செறியவொ ணாதஞான வாளிபாய்வன

திருகுதில் திரு'மாறு மாறுசேர்வன
சிலுமொழியாதுகாதியோதும்வாதிகள்
குதறிய கூர்மைவாய்கண் மூடவேறுவ
குணமொரு காலிலாத தானநீர்மைய
குருபர ஞர்தமேவல் விதிபோவன
குர்கத ராசிகோடி கோடிகோடியே. (௰)

இனியன வானகூறும் வாயும் வாய்மையு
மிருதிய தானபோதும் வாழுபோதினு
மிபல்வழு வாதஞான தீரபாவமு
மிலகிய ஞானவாளு மோனவீரமு
மனியத வூணலாதி லாதிவாண்மைய
மவரவர் சீலமோடு வாழுநீர்மையு
மளவுப டாமையேசு பாவமாகையு
மதிபப மானவீரர் கோடி கோடியே. (௧௧)

வேறு.

இந்தவுல கந்த ரஞ்செய் தெழுகட
லெண்டிசைக லங்கி நின்ற குலமலை
வந்துவிழு மன்று மொன்று மசைவிலர்
வந்தபடி கண்டி ருந்து மகிழ்வரே. (௧௨)

சந்தன குங்கு மங்கள் புழுககில்
தண்பனி தஞ்சொ ரிந்து மகிழ்விலர்

நொந்தன கொண்ட ரிந்து நகமிரன
நொந்திலர் முந்தை யென்று நகுவரே. (௰௩)

நொந்தனர் கன்றி வந்து நலிபவர்
நுந்தன ரென்ற மைந்த கடனற
வந்தன வென்றி டும்பை வரமகிழ்
வந்தன ரங்கி ரண்டு முடையரே. (௰௪)

வேறு.

செயலினை யற்றி ருக்கு முனிவர்கள்
செறிவினை யைக்கெ டுக்கும் வகையினின்
முயல்வினை யைக் கெடுப்ப ரறிவினின்
முனைவினை யைப்பொ சிப்ப ரடையவே. (௰௫)

வேறு.

எண்ணி லாதவியல் ஞான வீரர்தமை
யெண்ண லாகுமள வெங்ஙனே
கண்ணில் வேறுபட வின்மை யாரொருவர்
காணு மாறரியர் காணுமே. (௰௬)

கீழி லாதபடி கீழு மேலுமதின்
மேலி லாதபடி கெழுமியே
சூழி லாதபடி சூழு தானநிலை
சொல்ல லாகுமள வல்லவே. (௰௭

வேறு.

நிறைந்தபெரும் படைநோக்கி நீரழிக்கும் பரிசெமக்கின்
கறைந்திடுமென் றருள்செய்ய வரியதிரு பகன்றெழுதே ()
தோராதா ரல்லரோ சேயிழையா ரெனத்திகைப்பா
ராராயு மறிவுடையார்க் கருவருப்பே யல்லவோ (௧௯)
மாலாய வவரன்றி மாசற்றார் மாணிழையார்
கோலாக லங்களையு மொன்றாகக் கொள்ளுவரோ. (௨0)
நரம்பென்பு மூளைதசை நவைதருதோ லாற்பொதிந்த
குரம்பைதனைக் கற்றோருங் கொண்டாட லென்கண்டோ

வேறு.

தசையறாத முகத்தைவந்தெழு சந்திரமண்டல மென்பரே
வசையறுமயிர் தன்னையுங்குழல் மங்குலென்று மதிப்பரே.
கற்கநாறி மணந்தகுங்கும களபவண்டலு மளவிலாத்
துற்கநாறுதல் கண்டிருந்துஞ் சுகந்தமென்று துதிப்பரே
பீளைசாரிய கண்களைச்சில பிணைகளென்று பிதற்றியே
சூளைபாரையு மொன்றெனச்சில சொல்லுவாரவர் புல்லரே
மெய்ம்மையேகொடி யெனதுவேள்கொடி மீன்விடும்படை
மாதரார், தம்மையேயென தவர்தமைத்துணி செய்தசைரி
யச் சக்ரமே. (௨௫)
பாவைமாருடல் பைமறிப்பதோர் பார்வையிற்பொடி பட்ட
றும், பூவைமார்பொடி யாகவேபொடி யாகி வேளுயிர் போ
குமே. (௨௬)

இறைவன்முன்பு நிருபகன்றொழு திவைவிளம்பிய வெவ்
வேயிற், பொறைவலஞ்செய்து தொழுதுறும்பகை பொடி
படும்படி புகலுமே. (உஎ)

வேறு.

மாசாய நாவுடையார் வர்ய்திறந்தா லவர்களுடன்
பேசாம விருந்துவிடு மஃதன்றோ பெருந்தகைமை (உஅ)

வைதாரை வாழ்த்தினர்போன் மதித்தென்று மறக்கொடு
மை, செய்தாரை யறியாதசெயலன்றோ செயலாதல். (உக)

பொதுவதுவா நிறைந்தபரம் பொருளேபோல் யாவர்க்கு
மதுவதுவா யிருந்துவிடு மஃதன்றோ வவிரோதம். (௩0)

வேறு.

இகழாவதேது புகழேதுதேரி லிவையாவு மாவதுரையே
யசழ்வார்களியாவ ரருள்வார்களியாவ ரநுபோக மாகும
வையே. (௩க)

எரியானகோப மெழுபோதிணறி யினிதாய கூறியெதிரே
சிரியாதிரார்கள் பெரியோர்கள்சீற நினைவார்கள் வேறு
சிலரே. (௩உ)

வேறு.

முகுளிதம்பெருகு முகமொழிந்துவிட முறுவல்கொண்டு
முக மலர்வனே, வெகுளிதங்குமன வெரிகெடும்பரிசு மிகவு
மங்கினிமை விளைவனே. (௩௩)

மொழிதருங்கனலு மவிப்பின்றமிர்த மொழிபெனுந்தடினி
பொழிவனே, யழிதரும்படியென் னுடலில்வந்தனவெ
ன னுபவங்களென வயில்வனே (௧௪)

வேறு.

மிகையாவென் பொறைப்படைக்கு விருந்தாக்கி விடுகின்
றேன், பகைபாவங் கொடுமைகொலை படையுடைய் கோட
ணையே. (௧௫)

பொறைபெரிது மிவையோதப் புகழ்பெரிய சந்தோட, னி
றையுடையா னடியேத்தி நிறைவுடனின் றறைவுறுமே.

வேறு.

என்றும் பொருவரிய வின்பப் பொருளுடையார்
பொன்றும் பொருளும் பொருளாகப் போற்றுவரோ (௧எ)

வாணு ளொழிந்தாலும் வாய்விண்டு தாம்வேண்ட
நாணு தொழிவாரோ நன்றுய நாவுடையார். (௧அ)

வேறு-

உளம்படு பேராசை நோய்கூர மேன்மே
லுழன்றவர் வாழாத வாகாண லாமே
வளம்பட வாழ்வோமெ னுதார்கள யாரே
வருந்தினும் வாராது வாராது தானே. (௧௯)

புலன்றலை கொண்டேறு பொன்போக மேன்மேற்
புணர்ந்திட வுண்டாகி வந்தாலு மாறு

வலந்தலே கண்டாசை யொன்றோடு மூதே
யறிந்தவர் சந்தோடம் வந்தாறி ஞரே. (சய)

வேறு.

இல்லாத பொழுதின்ப மிஃதென்று பிறர்பாற்
செல்லாத செலவென்ப செலவாய செலவே. (சக)

படைத்தவ னிருந்திசை படைத்தபொரு ளெங்கே
யெடுத்தவன் விழிற்சுமை விழாமலு மிராதே. (சஉ)

ஆமாகும் வழியா னருந்தித்த தடையத்
தாமாய்தல் பொருள்மாய்தல் தவிராது பிரிவே. (சந)

வாதாகி நுகர்கின்ற வயிறுள்ள தொருசா
ணோதாவி தமையாதி தென்னே! யீதென்னே!. (சச)

ஏசாத பற்றின்மை யெனுமாயு தத்தா
லாசாப சாசோடு மடலோப னிறுமே. (சரு)

வேறு.

சந்தோட னிவையிவை சாற்றவே
யந்தோ வென்றருள் செய்யும ளவிலே. (சசு)

விவகார பராமுகன் மேவரும்
பவகாலன் பதம்பணிந் தோதுமே. (சஎ)

வேறு.

அத்தனெ டன்னைக் கன்புசெய் கின்று
ரளவில் பிறப்புற் றவையவை தோறு

மெத்தனை தாயுந் தந்தையு முற்று
ரித்தனை யன்றோ யிவர்களு மிங்கே. (சஅ)

சால வுதிக்கும் புழுவுட றன்னிற்
றகவின் மலத்தோ டொழுகு முடம்பே
போல வுதிக்கும் புழுவினை யென்னே
புத்திர னென்றே புந்திசெய் வாரே. (சகூ)

வந்த வழிக்கண் வந்திலர் போகும்
வழியினும் வருவா ரிலரிடை வழியார்
தந்தை மகத்தாய் தம்மொடு வந்தார்
தாரமு முற்றார் தாமுமெ லாமே. (ருo)

அமரு முடம்போ டழிதுயர் வந்தே
யலம்வரு போதங் கனுபவி யாமே
தமர்கள் பகிர்ந்தா ருளரென வுண்டோ
தம்முற வாவார் தாமல தின்றே. (ருக)

வேறு.

ஒழிந்தது வேறற வொன்றுட றுனு
மழிந்தது தம்முட னுமுற வாரே. (ருஉ)

சுற்றமொ டுற்ற துவந்துவ மெல்லா
மற்றவர் தம்முட னற்றவர் தாமே. (ருங)

வேறு.

கதறிய வாழியாறி யாடுதல் கருதினர் யாவர்தாமி யாவையு
முதறிய ருதபோது நாடொறு மொழுகவிட் டாதவார வா
ரமே. (ருச)

அழியசி லாதபோது சேறது கழுவியு மிலாபமேது யாவையு
மொழியசி லாதபோது மாசற வுதறவொ ணுதுபாச முடு
மே. (௫௫)

வேறு.

உறவாடு பந்தங்க ளெல்லா முதிர்ப்பன்
றுறவாகும் வச்ராயு தத்திற் றுணித்தே. (௫௬)

வடிவற்ற கோன்மைந்தன் முன்னின்று மறைநா
முடிவற்ற பலகோடி மொழியாத முன்னே. (௫௭)

தத்தந் தொழிற்கொன்று தாழ்வின்மை யின்னே
முத்தன் பெருஞ்சேனை யெல்லா மொழிந்தே. (௫௮)

ஞானவிநோதன்படைச்செருக்குமுற்றிற்று ஆகூ௩௱௫௯.

—( )—

வேறு—ஞானவேந்தன் படையெழுச்சி.

தஞ்சேனை கண்டன்பு தாமுற்றி வாறே
நஞ்சே யனுன்மே னடக்கின்ற போதே. (௧)

வேறு.

வித்தக வேதங்க ளேவாசி யாவே
மெய்த்திற னய்நின்ற தோர்பாக னவே
தத்துவ மாகின்ற தேரேறி னரே
தற்சொரு பானந்தர் தாள்சூடி னரே. (௨)

வாதக ரோடினு மாதரவொ டோர்கால்
வாசியி லாவாசி யேவாசி தானும்
போதமே போதக மாந்தேர்வு தேர்தாம்
போல்பவ ரேவீர ரேதோது மாறே. (௩)

வேறு.

தானதேதுமில தாகியாகவல தம்பிரானுடைய தானைமால் யானைதேர்புரவி யஞ்ஞமன்னனது மாயமாபுர மணைந்ததே. (௪)

புறம்புகுதபடி சூழுநம்படைஞர் போர்துகென்றருளு போதிலோ, ரறம்புகாதபடை விடுசூழவு மடங்கவும்படைஞரானவே. (௫)

முகுந்தனன்றரனு மன்றுநாலுதிசை முகனுமன்றவர்த முலமே,புகுந்ததென்றிகல் புறம்புகண்டவ ரடங்கவுள்புகுது போதிலே (௬)

வேறு,

மருவி யெந்துமுற நின்றபொரு ளின்றுபுவிமேல்
வடிவு கொண்டுவரு கின்றதென நின்றுமொழிவா
ரருவ மென்றுமொழி கின்றபொரு ளிங்குவருதற்
கடிமை யென்றுசிலர் நின்றுநகை கொண்டுவிடுவார். ()

சமய மென்பனவு மொன்றுமில தென்றுமொழிவார்
தவமுடிந்தது முடிந்ததென நின்றுசமைவா

ரமையு நந்துழனி யென்றமைவு வந்துவிடுவா
ரறிவி லன்புரம மிர்ததினி யென்றயருவார் (அ)
குடிகெ டும்படிபு குந்ததுணர் வென்றுதளர்வார்
குலம டங்கலுமு டிந்ததெனு நின்றுகுலைவார்
முடிவில் வந்துறுவ தொன்றெனு மொழிந்தகணியார்
மொழியு மின்றுதலை வந்ததெனு நின்றுமொழிவார் (௯)
பறைவ தென்கொல்பல விங்கவர்க ணின்றுகெடுவீர்
பவமெ றிந்துவரு கின்றபடி கண்டுமினநீ
ரிறைவ னன்றெனு வியம்புவதெ னென்றுமொழிவா
ரிருவர் தங்களி லியம்புவ தடங்கவிவையே, () ஆ ௩௨௬

---

வேறு.

அஞ்ஞவேந்தன்படையெழுச்சி.

இடர்விளங்கு தானையஞ்ஞ வேந்தனுக்கு மாந்தர்போய்ச்
சுடர்விளங்கு ஞானசேனை சூழ்ந்ததென்று சொல்லவே. ()
மூவர்சேனை யென்கண்முன்பு நிற்கவில்லை மொய்ம்பினோ
டியாவர்சேனை யென்னைவெல்ல விங்குவந்த தென்னவே.
யாவர்சேனை யென்னயா மறிந்ததில்லை யெங்கணுந்
தேவதேவ தேவனென்ற சின்னவோசை யென்னவே. (௩)

வேறு.

ஏகமுத லோனருவ னுகினமர் செய்யவவ
னென் கணெதிர் நிற்கவிலனோ

தேகமுள னேலவனை மாரன்முதல் வீரர்படை
சிந்துவர்கள் சிந்திவிடவே. (௪)

வானவர்க டானவர்கண் மானவர்க ளானவரின்
யாவர்மறை கூறுபரிசே
ஞானபர ராய்மதன ராசன்முத லானவிரு
நால்வரையும் வென்றவவரே. (௫)

ஓதுமுத லிந்திரிய முள்ளுமன புந்தியுயி
ரோங்கியவ கங்கரமுமிங்
கியாதுமுள சங்கமெனு மேழணியி னென்றுவிடு
விக்கிலவ ளிங்கிறைவனே. (௬)

ஆண்டகைய னுகினனை யஞ்சுதலொ ழித்துவரு
மவனையெதிர் கண்டிளவில்யான்
மீண்டிடுவ னுகினனை யஞ்ஞவர சென்றழையல்
வேறுபெய ரிட்டழையுமே. (௭)

என்றுபல பாஷைகள் கொடுத்துமத னுதிபடை
யேவியிறை வன்கணெதிரே
நின்றுபொர நேரறிவி னெஞ்சினிசி கோடியிரு
ணின்றதென லாகுமிலையே. (௮) ௲௫௫௪

—o—

வேறு. தொந்தயுத்தம்.

வேதகேதன்ப டையுடன் வெஞ்சினப்

போத கினன்ப டைபொரப் போகவே. (க)

துன்னிட் டீடகன போதகந் தோன்றலும்
வென்னிட் டீடகின வைம்புல வேழமே. (உ)

இரத மான ரதத்தெதிர் நின்றில
விரத மான விடய ரதங்களே. (ங)

புரணப் பாய்பரி தோன்றப் புரத்துள
கரணப் பாய்பரி யாவுங்க ரந்தவே. (ச)

அறிவன் பெருஞ்சேனை கண்காண வெதிரே
வஞ்ஞன்கொ டுஞ்சேனை யஞ்சாம லெழவோ
வெறிவெங் கதிர்ச்செல்வ ரெத்திக்கு மெழவே
யிரியாம லிருணிற்கி னிதுநிற்கு மெதிரே. (ரு)

வேறு.

ஓடலின்றியெதிர் நின்றவீரர்தமை வீரரங்கொருவ ரொழி
வுறச், சாடுகென்றருள வீரர்சொல்லுவர் வணங்கிவீரனிரு
தாளிலே. (சு)

தும்பை.

அறிவிலன்படையு மளவினம்படையு மறியவின்றிவரு மறி
வுறுங், குறியுறும்பரிசை யருளுகென்னவவர் குறியுறும்
பரிசு கூறுமே. (எ)

வேறு.

விண்டிருந்தென்மெய் கண்டுளோர்தவ வேடமேவியென்
கோடிமாதரைக், கொண்டிருந்தெனவர் செய்ததேதவங்

கொண்டகொண்டதே கோலமாகுமால். (அ)

ஆ. நாசகெ.

வேறு.

நனவுநிலைபோல வறிவுமறிவார்க
ணவையுமறிவார்க ணலனுளோர்
கனவுநிலைபோல வெதுவுமறியார்த
வதுவுமறியார்கள் கயவரே. (க)

வேறு.

கற்றவரு மற்றவரு மொருவர் செய்யுங்
கடுமையினிற் கலுழும்வகை யொத்து மொவ்வார்
செற்றவர்மே லுறுஞ்செயிர்க்கு நோவர் நல்லார்
தீயுடன்மே லுறுஞ்செயிர்க்கு நோவர் தீயார். (உ)

உள்ளமழிந் துகும்அன்பர்க் கன்றி யோரா
வுலகர்திறத் தினுமுண்டங் கொவ்வார் மாதர்
கள்ளவிழிக் கழிந்துகுவா ரறியா ரீசன்
கலந்தவிழிக் கழிந்துகுவார் கவலையற்றோர். (௩)

அறிவினான் மிகுபவரு மறிவிலோரு
மாயுமா றொன்றுமில ரெரினு மொவ்வார்
பிறிவிலா மையிலறியார் பிறவி நீத்தார்
பேரிருளா லொன்றறியார் பிறந்து சாவார். (௪)

மகவருடப் பால்பபக்குங் கொங்கை யின்ப
மழக்கமுயக் குறுங்கணவன் வருடும் போது

மிகவுணர்ந்தோர்க் கும்பிறர்க்குஞ் செயல்கள் பார்க்கின்
வேறறினும் பாவகந்தான் வேறு வேறு (௫)

அழுக்கிலவர் செயவேண்டுந் தவமு மில்லை
யழுக்குடையோர் செய்வதிலை யாதலாலே
யொழுக்குடைய நல்வினையு முயர்ந்தோர்க்கில்லை.
யொழிந்தோர்க்கு மில்லெனினு மொவ்வா ரொவ்வார் (௬)

மேவிவிடு மருட்படைக்கு மருட்ப டைக்கும்
வேறறிய விவ்வாறு விளம்ப வீர
னேவிவிடு மளவதனி லஞ்ஞ சேனை
யிறந்தபடி யதனையுமிங் கியம்பல் செய்வாம். (௭)

வேறு.

உருபக மகளிர் திறத்தினை யுசாவொடு மறமொடிழிப்பொடு
நிருபகன் மதனை யழித்தன னிலவிய ரதியு மிறப்பவே.(அ)

பாவனு மிகனு மிரங்கலில் பாடுறு கொலையு மெரிந்தெழு
கோபனு மடைய நலம்பல கூறிய பொறையி னழிந்தவே()
மோகனு முலகு மயக்குற மூடியமயனு மிகுத்தெழு,சோக
னு மகிழ்வு நசித்தனர் தூய்மதி கணவன் விழிக்கவே. (கம)

வேறு.

ஆனசந்தோடனில் லோபனு மாசையும் பேசுகளவாதியு
மானசந் தாபனுந் தீனனு மானமுஞ் சேரவுயிர் மாயுமே.

வேறு.

அறன ழித்தனன் மறத்தினைய சூசையினைநல்
லமிர்த சீலனு மழித்தன னடக்கனுமதத்
திறன ழித்தன னும்பட்சைபி லபேட்சைபொழிநற்
றேர்வி லேபெரியி டம்பனுயிர் சிந்தியதுவே. (கஉ)

ஆங்க ரிப்பரிய சாந்திபி னழிந்ததுயிர்கட்
கன்னை போலுமவி ரோதமெழ வாருயிரையுந்
தீங்க ருத்தியிடு மச்சர மழிந்தபரவே
செய்யு மைபமழி வுற்றது மிகுந்தெளிவினை (கஙு)

தற்க மோனமுற வேபொடி தமம்பொடிவுறுஞ்
சத்து வத்தின்வரு சங்கமு மசங்கமுறநேர்
நிற்கு மோவொரு மருட்படை யருட்படையின்முன்
னிற்க வேதுநிண னேதுகுட ரேதுநிலையே. ஆ ௩௬௬

வேறு-அஞ்ஞனழிவுவகை.

ஆவியை யொழியவெல்லா மழிந்தசப் பட்டவள்ளப்
பாவியை யெந்தைபாதம் பணிகெனப் பகர்ந்தபோதே. (க)

அறிவில னெனும்பேரொன்று மழிவுறு திருக்கஞானங்
கிறிவரும் படியென்றனை கிளர்ந்தெழு மென்னக்கேட்டே.

வேறு.

இருடுணிந் திரவிமுன் னிற்குமோ பஞ்சுதீ
னெறியின்முன் னிற்குமோ வெங்கனை யரவமுங்

கருடன்முன் னிற்குமோ ஞானமே வந்துறுங்
கண்ணின்முன் னிற்குமோ வெண்ணுறுங் கன்மமே (௩)

அழியுமிக் காயமுங் கழியுமுன் னிளமையு
மன்புறுங் கிளைஞரு மின்புறும் போகமு
மொழியுமிச் செல்வமொன் றுகநீ யுன்னியோ
வுடையநா யகனைநெஞ் சுணர்வுறு தொழிவதே. (௪)

வேறு.

தேவர்களு முனிவர்களுஞ் செழுமறையும் பழையவொரு
மூவருமென் றிருந்தனையோ முழுமுதலென் றறிந்திலை
யோ. (௫)

இந்தவுல கத்தினிடர் கெடுப்பரிசிங் கெழுந்தருளி, வந்தவ
னென் றறிந்திலையோ மானிடனென் றிருந்தனையோ. (௬)

அதிரேக வழகுடையா னருளுடையான் றனுடையா
னெதிரேநின் றனையாவி யிப்பொழுதே யிழந்தனையே (௭)

வேறு.

நாய னாடி பார்க ணவில்தொறும்
பேய னும் பெருகச் சினஞ்செய்தே. (௮)

ஞான வேந்தன்வந் தென்னெதிர் நண்ணுற
லான வெல்லையிற் காணுமென் னுண்மையே. (௯)

என்ற வன்மொழி யெந்தைதி ருச்செவி
சென்ற வெல்லை சிரித்தருள் செய்யுமே. (௧௰)

உம்ப ரிம்ப ருவப்ப வொளிமிகுந்

தம்பெ ருந்தன்மை காட்டச்ச மைந்துமே. (௧௧)

வேறு.

பழுது படாமறை வானுளோர் பண்டையோர் மூவர்க ளின்றுகா, றழுது பெருவடி யஞ்ஞன்மே லாக விசைந்தன னண்ணலே. (௧௨)

வெருவரு நான்முக னாதியாம் விண்ணவர் மண்ணவர் வேறுளோ, ரொருவர் பெருவடி யுணர்விலா னுச்சியின் மீது முதைத்ததே. (௧௩)

தென்றிசை யின்றுயர் தீர்த்ததாள் செய்தரு ளும்படி தெரியுமோ, வின்றிசை கின்றன வல்லவோ வித்தலை மீதுமி ருக்கவே.

பெரியவர் தஞ்செயலாவதும் பிறரறிவாலறி வோமெனத், தெரியும தன்றது தெரிவதுஞ் செய்து முடிந்திடு திசையிலே. ()

வேறு.

செறிதரும்பிறவி முறியவந்திறைவர் திருவிளங்குகழல ருளுநா, ளறிஞரென்றுமில ரவலரென்றுமில ரவர்சுதந்தர மதடையவே. (௧௬)

பிறிவிலாதகுரு பரமனர்தமருள் பெருகவேயுடைய திருவினு, னறிவிலானுடனிவ் வகிலமாயையுயி ரடையநூறும் வகை யறைகுவாம். (௧௭)

வேறு.

சலிக்குமனத் தெழுச்சியறத் தவிர்த்திதம்விட் டகத்தே

சிலுத்தெழுமத் துடிப்புமறத் திரித்தடையக் கெடுத்தே (கஅ)
குறித்திடலற் றிடத்ததனைக் குறிப்பவரைக் கெடுத்தே
கறுத்தவிருட் டனைக்கதுவக் கரித்தனைவிட் டழித்தே. (ககூ)

குறித்தல்குறிப் பறுத்தலெனிக் குறிப்பழியக் குலைத்தே
மறித்தவிடத் ததிற்பரிசித் தகைத்தெனல்மற் றொழித்தே
தனிச்சுடரிச் சகத்தொளிரத் தனைக்கெடவக் கணத்தே
பனித்திவலைத் தடிப்பொழிபப் பரச்சுடர்விட் டழித்தே

ஒருக்கிவிரித் ததிற்சுழல்வுற் றுழற்றுமிருட் டனைப்பே
ரருக்கனுதித் தலக்கணறுத் ததிற்பிரபையிட் டழித்தே.
செகத்தொழிபத் திரித்தவிடத் தெளிர்ச்சியறச் சிதைத்தே
விகற்பமறத் தனிச்சுடர்விட் டெரித்தயர்வைக் கெடுத்
தே. (உங)

கலுழ்ச்சிகளிப் பகத்தெளிவுட் கலக்கமிருத் திகத்தே
செலுத்தல்திரித் தலற்றடையச் சிவச்சுடர்விட் டெறித்
[தே. (உச)

தனிற்பிறிதற் றிருக்குமருட் டனிச்சுடர்தற் பதத்தே
யினிப்பிறிதற் றிருக்கவிசைத் திடுக்கணறுத் துவிட்டே,
சகப்புரணத் தடிப்படையச் சமித்திடலுற் றிடத்தே, சுகத்
தெளிவிற் சிவப்பிரபையிற் களிப்பதனைத் தொலை
த்தே. (உரு)

வேறு.

காயாதிக ளேழு மாயாவிட யத்தே
கையற்றறி வின்கா ரணமாதிக ளேழும்
மாயாவிட யத்தே மாயச்சுக சற்சின்
மயபூரண மேதன் வடிவானது வந்தே. (உஎ)

கோதற் றமிர்தாகிக் கூறற்றுணர் வாகிக்
கூறற்கரி தாகிக் கோசப்புலன் மாறித்
தீதற்றவர் காணத் தேனொத்தினி தாகித்
தேசத்திசை மாறித் தேறித்தெளி வாயே. (உஅ)

வேறு.

எம்பிரானை வந்தெதிர்ந்த வஞ்ஞனிங் குருமலை
யும்பர்வானு ருதிரும லொன்றினைவ் வொளியொடே.
அல்லலான காமராச ஞதியான சேனையு
மில்லவாகி ஞானரூப மாகியே யிலங்குமே. (உகூ)

வேறு.

அறிவறி யாமைய ழிந்தனரே
யறிவறியாமை யழிந்தனரே.
பிறிவறி யாமைபி றழ்ந்தனரே
பிறிவறி யாமைபி றழ்ந்தனரே. (௩௧)

காக்குமு ளத்தவ ராயினரே
காக்குமு ளத்தவ ராயினரே.

இருக்க முடிந்தவ ருட்பொருளே
யிருக்க முடிந்தவ ருட்பொருளே (கஉ)

வேறு

அழிந்தற மார்பையி ருட்டிடலா
மறிவுரு வாகநம் மண்ணலார்
மொழிந்தது மிங்கொரு வார்த்தையே
மூவுல கும்மொரு வார்த்தையே. (கங)

உழுந்துரு ளுந்துணைப் போதிலே
யுணர்வுரு வாகநம் முச்சிமீ
தெழுந்தரு ளும்மிரு போதுமே
யேத்துவ தென்றுமெப் போதுமே. (கச) ஆ கசுஎ.

---

வெற்றிசாற்றல்.

அறிவிலா னுயிர்க் கிறுதி செய்தபி
னறிஞர் தம்பிரா னரிய தாளிணைப்
பிறிவி லாததம் படையை மீள்கெனப்
பெரிய சேனையுந் திரிய மீளுமே. (க)

காய மாகிவாழ் மாய மாபுரங்
கட்ட டங்கவே சுட்டல் கண்டுளோர்
தூய ஞானநற் சுடர்வி ளக்குமெய்ச்
சொருப னார்பதந் தொழுது ரைப்பரே. (உ)

### வேறு.

அடியே யுள்ளங் கறுப்பதுநல்
லம்போ ருகங்கள் சிவப்பதுமிப்
படியே வந்த பரனேநின்
பாதங் காட்டாப் பண்டன்றோ. (ரு)

செய்யப் படுங்கன் மமுமுலகுஞ்
சிறியேம் வாழ்வுந் தீப்பிறப்பும்
பொய்யற் றிருப்ப தெம்பெருமான்
புவியிற்போதாப் போதன்றோ. (௬)

போக்கும் வரவும் பொன்றுடும்
புழுவார் நரகும் புசிப்பனவு
மாக்க மழிவுந் திருக்கடைக்கண்
ணுகா திருக்கு மளவன்றோ. (௭)

சாவா கின்ற பெரும்பிணிக்குஞ்
சனிக்கும் பிணிக்குந் தடுமாற்ற
மாவா வென்றுன் றிருக்கரத்தா
லஞ்சே லென்னு மளவன்றோ. (௮)

முத்திக் கரசே! நீயெங்கு
முழுந்தி யிருப்ப விழுந்துழலும்
புத்திக் கிலேசந் தலைமிசைநின்
பொற்றாள் பொறியாப் போதன்றோ. (௯)

அந்தக் கரணம் புறக்கரண
மலத்தை பலவோ டகம்புறமர்ந்
தொந்தக் கலாதி யாவையுநின்
றுணைத்தாள் சூடார் சொல்லன்றே. (அ)

சமயர் வெந்தச் சமயமுமெச்
சடங்குஞ் சவலைத் தனமுமெலா
மமையா ததுநின் றிருப்பவள
மலரா திருக்கு மளவன்றே. (௯)

வேறு.

எவ்வளவு மளவுபடா திருக்கை யுன்ற
னியல்பாகு மெங்களையெவ் வளவின் வைத்தா
யவ்வளவே யளவாகி யிருக்கை யெங்க
ளளவாகு நின்பெருமை யறிவா ரியாரே. (௰)

கடம்படுமிவ் வுடம்பானேங் கரண மானேங்
கண்டிருக்குங் கரியானேங் காட்சி தீர்ந்த
திடம்படுபே ருணர்வானே மெல்லா மானேந்
திருவிளையாட் டிருக்கின்ற செயலி தென்னே!. (௰௧)

அஞ்ஞான மென்னவுமங் கதனு னுப
வனேகபவ மென்னவுமவ் வயர்வு தீர்ந்த
மெய்ஞ்ஞான மென்னவுநின் றிருவருளே தானே
விளையாட றோற்றுவித்த விரகி தென்னே!. (௰௨)

வேறு.

ஒழியாத பரவெளியா யெங்குமொரு பானந்தன்
வழியான செயலுறுதி வாழ்வன்றே வாழ்வாதல். (யக)

ஆ சாஅ.

---

திருமுடிசூட்டல்.

அடங்காமற் புலனூருக வடியிணையே வெளியான
திடங்காணல் கண்டிருக்குந் தெளிவன்றே தெளிவாதல்.
தோன்றும்வினை வழியொழியத் தோன்றாத பொருடே
ன்றிச், சான்றதுவே தானாகுந் தற்சிவமாய் நிறைந்தது
வே. (உ)

வேறு.

எல்லையில்பவ வேலைவீர னெறிந்தவாண்மை யறிந்தெமர்,
சொல்லவில்லினி வல்லவாறடி தொழுகையென்றிவர் தொ
ழுவரே. (ங)

வீரஞானவினோதனுண்மை விளம்புவார்கள் விளம்பவத்,
தீரனூர்தமை யாளுநாயகர் செம்பொன்மெல்லடி சேர
வே. (ச)

வேறு.

ஞானசக்கிர மெங்குநீர் நடாத்துமென்று நல்லதா
ளானரத்ந முடிகவிப்ப வருளினுனெம் மண்ணலே (ரு)

ஞானவானை தாள்கள்சூடி நாயன்மார்க டாமெலா
மானவான வதிசயங்கள் யாவர்கூற லாகுமே. (சூ)

வேறு.

ஒழிவற்ற தன்சோதி யுருவத்தை நம்பா
லுள்ளங்கை நெல்லிப்ப ழம்போல வுடையான்
மொழிவுற்ற விரகேயெ னுநின்று மொழிவார்
முன்னோன் மலர்ப்பாத முடிமீது கொள்வார். (எ)

தன்செய்ய திருமேனி யேயன்றி வேறோர்
தானென்றி லாவண்ண மெந்தம்பி ரானு
ரென்செய்த வாறேவி தென்னென்று மொழிவா
ரென்னே யிதென்னே யிதென்னே யிதென்பார். (அ)

பொருளேது மிவரன்றி வேறில்லை யென்பார்
போதங்கி டீர்செய்ய பொன்மேனி யென்பா
ரருளேகி டீர்வந்த திருமேனி யென்பா
ராவாவ தேயிந்த வருளென்று மொழிவார் (கூ)

பொய்யோடு மெய்யேது மில்லாத பெருமான்
புவனிக்க ணெம்மைப்பு குந்தாள விதுவு
மையோவெ லாமள்வாவ தேயென்று மொழிவா
ரருளோவி தருளோவி தருளோவி தென்பார். (ம)

எண்ணாத பெருவாழ் வெமக்காய பெருமா
னெ ழுதப்ப டாமேனி யிதுகாண வெங்கும்

கண்ணுன திலேயே யெமக்கென்று மொழிவார்
கண்ணல்ல காணுத கண்ணென் றுரைப்பார். (௰௧)

ஏயாத வெமையாளு பெருமானே யென்னே
யிரும்போகம்முடல்கொண்டெவ் விடமெங்கு மெங்கும்
வாயாய்வ முதீதாதி ராகின்ற தென்பார்
மலர்ப்பாத மீதுள்ள மாலாகி வாழ்வார். (௰௨)

அருகே செலச்செல்லு வாரஞ்சி நிற்பா
ரஞ்சாது சென்றாலு மெஞ்சாது புல்லற்
கொருகோடி கையில்லை யேயென்று மொழிவா
ரொன்றாலு மாராது காணென் றுரைப்பார். (௰௩)

வேறு.

அன்னேயங் கவர்கள்செய லென்ன விங்கோன்
றறையுமள விலகண்டே யறியி னல்லா
லின்னேதங் குறைக்காலங் கழித்தா ரென்ன
விக்கால மென்னேயென வியம்ப லுற்றே. (௰௪)

செய்தருளும் படிக்கிதுவு மன்றே தீர்க்கை
தேசிகனுக் கொருபொருளோ திரித்தல் பின்னு
முய்தரவங் தருளுகழ லுவந்து வாழ்த்தி
யுடம்பெடுத்த பயன்சிலநா ளுறுதற் கன்றே. (௰௫)

முழுந்தியவன் பினர்மலர்த்தாண் முடிமேற் சூட்
மூவர்களுந் தேவர்களு முழுதும் போற்ற
வெழுந்தருளி யிருந்தனனிங் கிறைவன் செய்த

இயல்பிதுவென் றிறைவிபதத் திறைஞ்ச லுற்றே. (௰௬)

எனக்கினிய சொருபானந் தனையெங் கோனை
யேத்தியவன் புகழினையே யியம்பா நின்ற
உனக்கினியென் செய்வேனென் றிறைவி யன்போ
டேச்சியைமோந் திடுந்தழுவு முவகை யுற்றே. (௰௭)

வேறு.

உடையசோ தியிலொர்மா சறவினு றிலனிலோ
ருருவமாய் வருமகா சொருபனு ருடையசீ
ரிடையறு துருகியோ திடுதலே யுரிமையா
மிதனைநீ பெறுகெனு விறைவிதா னருளியே. (௰௮)

திருமுடிசூட்டல்முற்றிற்று.

ஆ சா௨௰௧.

---

களங்காட்டல்.

இலகுநா யகிதனு ரருளதாம் விழியினு
விறைவனூர் செயவிதா மெனவினே யருளவே
மங்கைபோ யடையவோ கினிகளா யருளினு
ரடிதொழா வமர்செய்மா களமெலா மளவியே. (௧)

வேறு.

ஓதாத மயலார்விட் டொழிந்த போதே
புடனுதும் பிணிதன்னை யொழிபாச் சுற்றம்

போரத துவந்துவங்கள் போதல் துக்கம்
பிணம்போகப் போமாபோற் காண்மின் காண்மின். (உ)

தொத்தறவே மனந்துஞ்சப் புலன்க ளைந்துந்
துஞ்சியவா நஞ்சுமிழ்வா யஞ்சுஞ் சேரக்
கத்தறவே யடிக்கழுத்தை யரிய மாய்ந்த
கறையனற்கட் செவியொத்தல் காண்மின் காண்மின் (ங)

மைப்படியு நறுங்குஞ்சி மாயை மாய
மாய்ந்தபடி யகிலமெரி மருவ வேரிற்
கப்புடனுங் கிளையுடனு மரநே ராகக்
கரிசறப்பட் டமையொத்தல் காண்மின் காண்மின். (ச)

அவிழாத பிணியாக்கை யுடைய வஞ்ஞ
னழிந்தபடி தான்சாவ வுலக மெல்லாங்
கவிழாதோ வென்னுமுரை யார்க்கு மேற்கக்
கரமணிபோற் காட்டியவா காண்மின் காண்மின். [ரு]

நெய்விட்ட கருங்குழலார் தம்பால் வைத்த
நெஞ்சொழிந்தா ரைம்புலன்சே ரின்ப நேராக்
கைவிட்டா ரொழியாவா னந்த போகக்
காமுகராய் முடிந்தபடி காண்மின் காண்மின். (சூ)

இணைப்பரிய பேரின்பந் தன்னின் மூழ்கி
இன்புறப்பட் டெவ்விடத்து மெக்கா லத்துங்
கணப்பொழுது மின்பமிலா வுடம்ப ரின்பங்
கைவிட்டீர்த் தீமைகாட்டல் காண்மின் காண்மின் (எ)

செற்றவர்க டம்முடனுஞ் செறுதற் சென்றுஞ்
சிந்தைசெயுந் திறன்மறந்து சிறப்பே செய்யக்
கற்றவர்தம் முடனுன பிறப்பை யெல்லாங்
கரிசறுத்த பெரியசினங் காண்மின் காண்மின். (அ)

வேறு.

பழிப்பாகி யொருகாலு மிதுகொண்டு கௌவுற்ற
பயனற்ற பொருள்விட்டெலா
மழித்தாலு மழியாத பொருள்பேணி யிவருற்ற
வாராமை காண்மின்களோ. (சு)

ஓராக மேபண்டு வடிவென்றி ருந்தார்க
ளுணர்வுற்று மொழிவுற்றதோ
நேராக வுந்தங்கள் வடிவான திவர்நேதி
நேதித்தல் காண்மின்களோ. (ப) ஆ சநக.

களங்காட்டல் முற்றிற்று.

---

கூழடுவார்.

இந்தக்க ளன்பட்ட பாட்டிற்கு நீரொப்பிடத்தேடி டாதீச
ஞர், சந்திக்க விதுபட்ட தொப்பப் பெருங்கூழ் சமைப்பா
ரை யழைமின்களே. (க)

வேறு,

சாந்தீயுள்வரு தாந்தீவந்தடி தந்தார்திருவரு டன்ஞேடே
மாந்தீநல்லறு மாலாய்கூழட வாரீர்கூழட வாரீரே. (உ)

வேறு.

பொறையே மிகவரு நிறைவி புகழ்புனே பொன்னி யரு ளினே யுன்னிபக், குறையர் நிறைவுறு திருவிகூழட வாரீர் கூழடவாரீரே. (௩)

மேலா ரொடுமிகு முறவி தீவினே மிகுவாரொடுவிடு துறவி யம், மர்லாரொடுவரு கருணுய்கூழட வாரீர்கூழட வாரீரே.

முடிவேதித்துவரு முதலேலெதனவொரு மொழியானளவிட முடியாத, வடிவேயடைவதொர் மதியேகூழட வாரீர்கூழட வாரீரே. (ரு)

தன்போலெவரொடு மன்பேவிளேவதொர் தாயேபவமெனு மாயாவிவ், வன்பேகெடவரு மன்பேகூழட வாரீர்கூழட் வாரீரே. (சு)

பணியேசூடிய வணியேயபாடிய பத்திகூடிய சித்திநிர்க்,குணி யேகோமள மொழியேகூழட வாரீர்கூழட வாரீரே. (சஙஅ)

வேறு.

ஒருமைபெனு முன்வகுத்த சித்ரமாகிய
வுலகவுர லேயமைத்து லக்கையாகவிவ்
வுலகர்பழு வையொடித்தொ டித்துநீளெயி
று திர்செய்தரி சிபுடைத்தி டித்துமேலவர்
பெருமைமுடி யையடுப்பு வைத்துமேலுறு
பிணிசெய்யு டல்கடத்து லேச்செய்தாருயிர்.
பெரியவிரு ளேநெரித்தெ ரிப்பதாய்வினேப்
பிதிர்செய்தமிர் தம்மினிச்ச மைக்கவாருமே (க)

பரவையுல கமனைத்து முற்றெமாருயிர்
படர்செயுட லமெடுத்த ழித்துநோயொடு
பகலொடிர வுபசித்தி ளைத்திடாவகை
பவமெனிரு ளையறுத்து தித்தசோதிசெ
யரவமறை கள்சிரத்தி னிர்த்தமாடிய
வரியசொரு பனெனக்கு வைப்பெனுருயி
ரமலரடி யர்சிரத்தின் வைத்தபாமணி
யடிகள்பர வியுலக்கை குத்தவாருமே. (உ)

கூழடுவார் முற்றிற்று.

வேறு. சும்முலக்கை.

அருவரையா யிரஞ்சிரங்கொண் டருமறைக ளறியாத
சொருபரையாங் கண்டனமே சும்மேலோ சும்முலக்காய்.
மாயவடி வளவாகி மதியிலியா யுழல்வேற்குத்
தூயவடி சூட்டினர்காண் சும்மேலோ சும்முலக்காய். (உ)

பின்னமொழி வகைபுகுந்தென் பெருங்கருணைப் பெருமா
னார், சொன்னமொழி யொன்றேகாண் சும்மேலோ சும்மு
லக்காய். (ங)

நம்மாலே காண்கின்ற நாமும்போய் நாமாகிச்
சும்மாவே யிருந்தனங்காண் சும்மேலோ சும்முலக்காய்.(ச)

வான்றுடங்கு முலகுதனின் மன்னுசரா சரங்களெலாந்
தோன்றுமிடன் பிறிதுண்டோ சும்மேலோ சும்முலக்காய் ()

உலகாகி யுயிராகி யுணர்வாகி யொருபொருளே
* துலகாமை கண்டாயே சும்மேலோ சும்முலக்காய் (சு)

சாத்திரமென் செயநமக்குத் தக்கமய லறுத்தபிரான்
தோத்திரமே யமையுமது சும்மேலோ சும்முலக்காய். (எ)

வல்லவகை பரனருளே வாயார வாழ்த்தாதே
சொல்லுவது பிறிதுண்டோ சும்மேலோ சும்முலக்காய். (அ)

சத்தமா இக்ளுமெலாந் தற்சொருப மானபரி
சுத்தமாய் விட்டதுகாண் சும்மேலோ சும்முலக்காய். (கூ)

ஆகூ சசகூ.

சும்முலக்கை முற்றிற்று.

கூழ்சமைப்பு.

மிடையிரு வினைகள்பறகள் மேவரு மறியார்பறகள்
அடையவு மிடித்தீராகி னடங்கலு முலையுட்பெய்யீர். (க)

இழைக்கும்வல் வினையெரித்திங் கென்பெலா முருக்கியுள்ளங், குழைக்குமெய்ப் பத்திவந்து குறைவறக் குழைக்கச் சொல்லீர். (உ)

செப்பாதே பலவுநின்று சிலுப்பற விருத்தியின்பந், தப்பாமே பதத்தைப்பார்க்கச் சாந்தியை யிருத்திக்கொள்ளீர். (ங)

வேறு.

கனித னக்குநிகர் நெக்கு நெஞ்சுகள்
கரைந்து கன்னலொடு பாலு மொத்

---

* துலங்காமை எனவும் பாடம்.

இனிதி னிப்படிச மைத்த போனக
மெடுத்து மெத்தென விருத்துமே. (ச)

கூழ்வார்ப்பு.

தண்மை யாரும்வகை மீளு மாளுடைய
தம்பி ரானரிய தாள்கடா
முண்மை யானுரிய வன்ப ரின்புறு
முளக்க லங்களை விளக்கியே. (ரு)

கடங்க ளோடுமுள மான மெய்ப்பரி
கலங்க ளோடு முளவாவிதா
ணடங்க நீயமிர்து செய்க வென்னவரு
ளையை தானமிர்து செய்யுமே. (சு)

அணங்கு தன்றிரு வுளப்பிர சாதமது
வடைய வேநிறைய வயிலுவி
ருணங்கு கின்றவுட லான பேய்களையு
முடைய நீரமையு முண்ணவே. (எ)

வேறு.

வெந்தவுடலம் விடும்பரிசு வீடுவினவி மிகப்பசித்து
வந்தபேய்க்கும் பசிதீர வாரீர்மெத்த வாரீரே. (அ)

நசித்தேனிந்தக் கணத்துள்ளே நசியாவண்ண நல்குமிகப்
பசித்தேனென்று பதைக்கின்ற பதைப்பைத்தணிக்க வா
ரீரே. (கூ)

துரியாதீதம் பதினுலிற் றேன்றியெவர்க்குந் தோன்றுத

பெரியார்தம்மை யானென்னும் பிரமப் பேய்க்கும் வாரீரே.
ஒளிதங்கியமா மறையோதி யுள்ளபொருளை யுணராதே
பளிதஞ்சுமந்த கழுதையதாம் பனவப்பேய்க்கும் வாரீரே.()

படித்துமறைகள் பொருட்படுத்திப் பயனிணெட்டிப் பா ராதே, வடித்தகிளிபோல் வருமாயா வாதப்பேய்க்கும் வாரீரே. (ருஉ)

வேதாகமங்கள் சொன்னபொருண் மெய்மையறிவார் போன் றிருந்து, பேதாபேதஞ் சாதிக்கும் பெரும்பேய்தனக்கும் வாரீரே. (ருக)

சுத்தப்பிரம மதுநிற்கத் தொள்ளைச்செவியி னுணவான
சத்தப்பிரம மென்றேதுஞ் சளப்பேய்தனக்கும் வாரீரே.
பணியப்படுவா ருள்ளிருக்கும் பரதேவதையைப் பாராதே
மணியைத்துலக்கிக் கிணுகிணென வரும்பேய்தனக்கும் வாரீரே. (ருரு)

ஞானம்போலச் சிலசொல்லி நாடற்கரிய முத்தியினுந்
தானுஞ்சிவமும் பாசமுமென் சைவப்பேய்க்கும் வாரீரே.
எட்டுக்கரும முட்டறச்செய் தெட்டுக்குணத்தோ டெழின் முத்தி, வட்டத்திருக்கப் போமுத்தை வாய்ப்பேய்தனக் கும் வாரீரே. (ருஎ)

வெறுவாய்கொண்டு மென்றுமனவிகாரங்கொண்டு சிலபிதற் றிப், பெறுவாரன்றி முத்திபெறும் பிடகப்பேய்க்கும் வாரீரே. (ருஅ)

உடலை விடுகை முத்தியென வுரைத்தவுண்மை யுணராதே
முடலையுடலை நாமென்னு முழுப்பேய்தனக்கும் வாரீரே.
இயக்கந்தீர்வார் நன்முத்தி சேர்வாரென்னுந் திறன்கேட்டு
மயக்கஞ்செய்யும் வாமப்பேய் வாய்க்கேநெருப்பைவா
ரீரே. (உ௰)

அச்சந்ததிக ளெல்லாமா யல்லாதிருக்கு மறிஞரையு
மெச்சந்ததியுந் தமக்கன்றென் றியம்பும்பேய்க்கும் வா
ரீரே. (உக) ஆ சஎ௧

கூழ்வார்ப்பு முற்றிற்று.

---

வேறு-குணலைவாழ்த்து.

நின்மலன் கருணை யானடங்கவு
நெஞ்சறிந்திட * நினைந்தபின்
பொன்மலர்ந்தவிரு தாளினல்லவருள்
புகழுவாருளன் மகிழவே. (க)

வேறு.

பாவிடை நூல்படு சிந்தைதனிற்
‡ பதைப்பற வந்துப ராபரனார்
சேவடி தந்தமை பாடீரே
செய்ப கருணை யைப் பாடீரே (உ)

---

* நினைந்தனை எனவும் பாடம்.

‡ பரப்பற எனவும் பாடம்.

மீட்டவி ரகினைப் பாடீரே
விளம்பிய தொன்றென்று பாடீரே
நாட்ட வருளினைப் பாடீரே
ஞானவி னோதனைப் பாடீரே. (௩)

என்னையொ ழித்தமை பாடீரே
யென்னுயி ருண்டமை பாடீரே
தன்னைய ளித்தமை பாடீரே
தத்துவ நாதனைப் பாடீரே (௪)

துன்னிநி றைந்தொழி யாதுநின்ற
சொருபா னந்தச் சுடர்வையந்
தன்னி னடந்தமை பாடீரே
தானெனை யாண்டமை பாடீரே. (௫)

ஞானமு ஞேயமு ஞாதுருவு
நாடிட வொன்றின்றி நின்றதுநா
மான முழுநலம் பாடீரே
யல்லதில் லாதமை பாடீரே. (௬)

மதிபிலி யாவுழல் கின்றநமை
மாநுட னுபவ னுளவந்த
வதிசய மேனினைந் தாடீரே
யார்த்தெழுந் தார்த்தெழுந் தாடீரே. (௭)

என்றிவை யேமிகப் பாடிப்பாடி
யெழுந்து விழுந்தெழுந் தாடியாடி
நன்றிரு ருங்கண மானதெல்லா
நாஞவி தம்பட நட்டமிட்டே. (அ)

வேறு.

வரவுசெல வுறுபழைய வழிமொழிய மொழியுங்
குரவனடி பரவியிடு குணலைபல பலவே. (கூ)

உரைகழிய வுளமழிய வுணர்வழிய வணையுங்
குரைகழல்கள் பரவியிடு குணலைபல பலவே. (கய)

மதமதென விழிசொரிய மயிர்பூளகம் வசவே
குதுகுதென வுளமுருகு குணலைபல பலவே. (கக)

கொடியபவ முடிவுசெய்த குரைகழல்கள் பரவா
முடியவிவ ரிடுகுணலை மொழியமுடி விலதே (கஉ)

வேறு.

பிணக்குறு மாறுச மயங்கத்திப்
பேரிருள் சேர்மனங் கொண்டுநின்று
கணக்கிடு மாறுத விர்த்தபிரான்
கழலிணை பாடிக் களித்தனரே. (கங)

வேறு.

பாசமல மறவருளு பார்வையான் வாழியே
பாடுமறை முடிவினட மாடுவான் வாழியே

வாசமல ரெனமுழுது மேவினன் வாழியே
மாகரறி வரியவிரு தாளினன் வாழியே. (கச)

கோசமொடு முழுதுமற நூறினன் வாழியே
கூறவிர கரியமொழி யோதினன் வாழியே
நாசமது மறிவுருவ மாயினன் வாழியே
நாடிலது கழலநிகழ் மேனியான் வாழியே. (கரு)

வேறு.

நினையுமாற மின்றிநின் றிலங்குசோதி வாழியே
நேசமோடு மீசனென்ன நெஞ்சிலாத வஞ்சனை
மெனையுநீதி யன்பரோ டுவந்தநாதன் வாழியே
யென்னையாள வந்தகோல மென்றும்வாழி வாழியே. (கசு)

வேறு.

பந்தபாசம் வேரொடும் பறித்துவீழ வென்றலை
தந்தபாதம் வாழியே சமைந்தபார்வை வாழியே (கஎ)

வேறு.

வைத்த வைத்தக ணழித்தவடி வாழியே
வைப்பி லாதக ணளித்தவடி வாழியே
யெத்தி முத்தியரு ளீசனடி வாழியே
யென்னை யாளுடைய வெந்தையடி வாழியே. (கஅ)

சுத்த மறைதொடர்ந்த தாளினன் வாழியே
துற்றுவரும் பெரும்பவ நாசனீ வாழியே

தத்துவ நெறிதிறந்த சேவகன் வாழியே
தர்க்க சமயசண்ட மாருதன் வாழியே. (கக)

வாழிதங் குருபரன் மெய்ப்பத்த ரானவர்
வாழிமறை துணிபொருள் சித்திக்து வாழ்பவர்
வாழிபர மானந்தந் தித்தித்து வாழ்பவர்
வாழிசொரு பானந்தன் தத்துவப்பிரகாசனே. (உ௰)
தோத்திரமாகிய குணலைவாழ்த்து முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-சகூ௩

---

வெண்பா.

தாணிபுகழ் தத்துவனார் தாமுரைத்த ஞானப்
பரணிதனைக் கட்டவிழ்த்துப் பார்க்கிற்-காரணமுடன்
சேர்ந்துமண வாத சிவமணமே பூரித்த
சாந்தமண நாறுமே தான்.

அஞ்ஞவதைப்பரணி முற்றுப்பெற்றது.]

---

பதினேழாவது

# மோகவதைப்பரணி.

கடவுள் வணக்கம்.

மதிபரிதி யெரிநீர்கால் வானவனி யியமானன்
வடிவா யெல்லா
வதிபதியா யனைத்துமா யல்லாத வறிவுருவை
யகத்துள் வைப்பாம். (௧)

சொல்லாற்றும் மதிவிரகாற் றாயதிது தீயதிது
வென்னு * மாக்க
ளெல்லார்க்கு மதுவதுவா யிறையிருக்கும் படியேயா
யிருக்க வென்றே. (௨)

விழுமதிநம் பாவுலகில் வீடுபெற முயல்பவர்க்கு
வேத நான்குந்
தொழுமதிநம் பாலதென விளமதியொன் றணிந்தவரைத்
தொழுதல் செய்வாம். (௩)

பேதமதி யுளதாகிப் பிணங்குமதி யிருள்போகப்
பிறிதொன் றில்லா
வேதமதி சயமாக விளம்புநிர திசயமதி
விளங்க வென்றே. (௪

வேறு.

கடியவினைமேவு காயமனஜதி
கரணவசுரேசர் கணமெலா

* மார்க்கர் எனவும்பாடம்.

முடியமறமேவி முனியுமறவாழி
முதல்வனிருதாள்கள் பரவுவாம். (ரு)

கலகமதனுதி படையதிபராவி
கழியவொழியாத கருணையா
னுலகமிடர்மாற வுளதுணர்விவேக
வொளிநயனவாழி யுதவவே. (சு)

வேறு.

அகமுளரி தனினுதவு மகிலவுயி ரகமுளரி
யருமறைகணுன்
முகமுளரி யெனமுனிவர் மொழியுமுனி பதமுளரி
முடியினணிவாம். (எ)

எழின்முளரி யொழிப்பவரு மிருமுளரி யருளியிறை
யிருவினையெலாம்
விழிமுளரி கொடுபருகி மொழிமுளரி மலருநலன்
மிகவினையவே. (அ)

வேறு.

துறைகூறு படுமாறு சுழலாறு கலவாநு லொளிபானநான்
மறைகூறு மதஞான மணநாற வரும்பானை வழிபாடுவாம்()

சலமாகை பலமாக மலைவாதி லலைபாது தமைநாடியே
நிலமாக வெனைபாளி கழல்சூடி யுளஞான நிகழ்வாகவே.

மதியாளி சமயாதி வழியாறு மிறுகாலின் மறுகாலறுங்
கதியாகு மெனவாறு முகமாகி யருள்காளை கழல்பாடுவாம்.
நவையாகு மதுசால நலனாகு மிதுவாத மெனுமாறு போ
யிவையாவு மெமதாகி யெவரோடு மவிரோதமிசைவாகவே.

வேறு.

வதையுரையில் வழுநறவு விழைவுகள வெனவொழுகு
மயல்கணிலைவுங்
கதையுமற வறிவருளு கமலமலர் வருகமலை
மலர்கருதுவாம். (௰௩)

ஒழியவரு முடலினுட னொருகலவி யறவுதறி
யுயிர்களுணர்வோர்
மொழியவரு மற்கலறு பதமதெனு முலகுகளின்
முடிவுபுகவே. (௰௪)

வேறு.

ஒன்றுமாய்வற நிற்பதில்லை
யுளத்திதாமுங்கற யாவையும்
பொன்றமாய்வது முத்தியென்றருள்
போதியானடி யோதுவாம். (௰௫)

உரையுணர்ச்சியி னிகழ்த்துவ
தொன்றுமற்றது வாகவே

திரையெனப்பிறழ் கின்றசித்த
விகாரமானவை தீரவே. (௯௬)

வேறு.

அகிலவுலகுயிர் கருவிவினைபொழு
தடையமலர்வது குவிவதாம்
பகலுமிரவுமோர் பணியுமறவொளிர்,
பரிதியிருகழல் பரவுவாம். (௯௭)

குரவனடியிணை மருவியுலகவர்
கொடியபவவிருள் குலையுமா
றிரவுபகலற நிகழுமறிவொளி
யிதயவெளியினி னிலகவே (௯௮)

வேறு.

கஞ்சமக ளாய்நுகர்தல் காமுறுமு ளத்தே
கலைமகளு மாயினிய கற்றவரு ளத்தே
விஞ்சைமக ளாய்விமல யோகியரு ளத்தே
விளங்குமொரு மானடியு ளங்குளிர வைப்பாம். (௯௯)

ஐந்துபுல னுக்குமிசை வாகவிறை பெற்று
ளாறுசமய நூலின்முடி வற்றபொருள் காண
வய்ந்துபுகு முத்தியை யுடம்புட னுளத்தே
விளங்கிட வுளங்கையின் விளங்கனியை யொத்தே, (௨0)

வேறு-வாழ்த்து.

வாழிசொ ருபனெனை யாளுக ழறரணி
வாழவ ருதரணி வாழியே
வாழியெ னதிடரை மாறவ டிவுகொளு
வாழ்வுவ ருகுமறை வாழியே. (க)

வாழி சொருபனடி சூடிநிலன்மிசையின்
வாழும டியவர்கள் வாழியே
வாழிய ருளின்வழு வாதவ றநெறிசெல்
மாசி றவமுனிவர் வாழியே. (உ)

வேறு.

வாழிபழுதொன்றி லாமறை வாழியிறைதந்த வாகமம்
வாழிமுறைவந்த மாமனு வாழிபதினெண்பு ராணமே.

வேறு.

ஒண்பொருளைநாடி யீந்தநிலன்வாழ
வொண்டரளம்வாரி யெங்கணுந்
தண்பொருனைவீசும் வண்குருகையாளி
தந்ததமிழ்வேதம் வாழியே. (ச)

வேறு.

ஆரவார மறவொரு வார்த்தைசொ
லங்கணனை நினைதொறுந் தங்கணீர்
வார வார வழுதருள் வாதவூர்
வள்ள லார்திரு வாசகம் வாழியே. (ரு)

வேறு.

ஒழிவில ருண்மாது திருமுலையினூறு
முணர்வு பரபோத வமுதுண்
மொழியின் மணநாற வருளு மறைஞான
முனிவர் தமிழ்மாலை வாழியே. (கூ)

வேறு.

பாதமுடி தேடிருவர் பாலுமணு காவொருவர்
பாதமலர் சூடியருள்பொரு
நாதமொழி யாலவனி வீடுபெற வோர்துதிரு
நாவரசர் பேர்தமது வாழியே. (எ)

வேறு.

நினைவினரி தாகி நெறியினெளி தாகு
நிமலநிறை வான பொருளையோர்
வினையிறனி தூது மறுகிடையி னேவு
விமலர்தமிழ் மாலை வாழியே. (அ

வேறு.

செடிகொண் மாயப்பிறப்பிரு டீர்ப்பவன்
செய்ய தாமரைப் பாதமுன் சேர்ந்தவெம்
மடிகள் சாத்திய வண்டமிழ் மாலைக
ளமலவாரிய மாலைகள் வாழியே. (கூ) ஆ உகூ

வாழ்த்துமுற்றிற்று.

## கடைதிறப்பு.

பண்ணார் மொழி யமுதந்தரு பவளந்திற வாதே
கண்ணாலுயி ருண்பீர்கடை திறமின்கடை திறமின். (க)

உருவாய்வரு பெருமாளையு ளங்கொண்டெவ ருட்னுந்
திருவாய்மலர் திறவீர்கடை திறமின்கடை திறமின். (உ)

நீராவியு முழுதுநிம லந்தானும திருகண்
ணீராவியின் முழுகித்தனி நிற்பீர்கடை திறமின். (ந

அடையத்திரி புவனத்தையு மளவற்றுள நயனக்
கடையிட்டயில் பவர்பொற்கடை திறமின்கடை திறமின் ()

மலர்பொற்கழன் மலரிட்டிறை மதியைப்பரு கிடவே
சிலைசித்திர மெனநிற்பவர் திறமின்கடை திறமின். (ரு)

எளிவந்தரு ளிறைபொற்பத மிருகட்புல னுகரக்
களிவந்தவர் கனகக்கடை திறமின்கடை திறமின். (சு)

வேறு.

தணந்தபோது நமைப்பெறுது தலைப்பதந்தரு தம்பிரான்
மணந்தபோது நமைப்பெறுது மயங்குவீர்கடை திறமினோ

வேறு.

அகில புவனமு முடையவ னருளினு
னமரர் பெறலரு மமுதினை நுகரவே
துகிலு மணிகளு நெகிழ்புற விழியுளே
சொருகு மறிதுயி லுடையவர் திறமினோ. (அ

அரிமு னிடவுணு மமுதல விதுபெரு
தவனு மலம்வரு மமுதென வமரர்தா
மெரிமுன் மெழுகென வுருகினு மடியார
மினிய மொழியமிர் தருள்பவர் திறமினே. (கூ

வேறு.

எஞ்சவுல கங்களமிர் துண்டகளி தன்னினிறை யோனிரு கழற், கஞ்சமலர் கண்டகளி விஞ்சவரு வீர்கடைதி றந்திறமினே. (ய)

மெய்தழுவ வுங்கணிலை யுங்கலையும் வீழ்வுற விரும்பியிறை முன், கைதொழுது நும்மையு மிழந்துவிடு வீர்கடைதி றந்திறமினே. (கக)

வேறு.

சமய விதமள வறவுள துறைதொறுந்
தமர மிகவரு கலைபல மொழிதரு
சகல வினைகளு முதவிய வுலகுறை
சரமு மசரமு மெனவரு முயிரவை
யமையு முடல்கடொ றுளவக முளரித
மமரு மகமென மருவிமு னறைதரு
மகில முதவிய வறிவன தடிபணி
யமரவ னிதைய ரணிகடை திறமினே. (கஉ

உணரு முனிகண மடிசய சயவென
வுரைசெய் துதியொடு தொழவள வறுசிர

முடைய வுபநிட முவகையொ டுரைசெய
யுளமெய் யுணர்வதி சுகமொரு கரையறு
புணரி யொருதன திடனென விதமுறு
புவன முழுதையு மமுதுசெய் தறிதுயில்
பொறிகொ ளரவணை மிசையமர் பரனடி
புகழுபு னலர மகளிர்க டிறமினே. (ளஉ

அசையு முடலினி னுரவிய நெகிழ்வன
வவனி புனல்சுடு வனவசை வனவன
லனில மிடைவெளி ககனமு னுருவல
வறிய நயனமு முருவறி கருவிய
திசையு மொழிபுல னவைமன முதல்களு
மினையுவ யிரது முழுவது மறிவல
வெவையு மறிவறி வுருவெனு மிறைகுண
ரசித வரையர மகளிர்கடிறமினே. (ளச

உதய வரைபர மகளிரெ மிரவிமு
னுடுவு மவரதி பதியெனு மதியமு
மொளிர்வ திலருல கிருள்கெடு வதுமிவ
னுதய முறிலிவ னலதில திறையென
விதய வெளியினி னிலைபெறு மறிவுரு
விரவு பகலறு மிரவிமு னிகழ்கில
னிவனு நிகழ்வதிவ் விறையொளி யினிலென
வீவரை நகும்வனி தையர்கடை திறமினே()

பாவு புகழ்பழி பெறலிழ வுறவயல்
　　பதுமைபு ணர்பவள் பிரிவுற லுகமுயிர்
பலவு நிலைபெற னிதனமெ லிதிடின்ஞெரு
　　படியு மடிமகிழ் வறநிக முளமுடை
வரவு திரிவறு நிறைவுறு மறிவுதம்
　　வடிவ தெனவனு பவமுள முனிவரர்
மதுரமொழியமிர் தினைநுகர் வுறவுள
　　மகிழும் வனவர மகளிர்க டிறமினோ.　(கசு)

வேறு.

வீரஞ் சிறந்த சிலையநங்க வேளைவென்கண் டருளியவோங்
காரஞ் சிறந்த கனதனத்தீர் கனபொற் கபாடம் திறமினோ.
நல்லா தரத்து மைந்தர்க்கு நாவா லன்றி நயனத்தாற்
சொல்லா தெல்லாஞ் சொல்லுவீர் சுடர்பொற் கபாடந்
திறமினோ.　(கஅ)

ஐயங் கொண்டு நடுத்தேடி யறிவோ ரறியப் போதமணஞ்,
செய்யுங் கொங்கை யருளுவீர் செம்பொற் கபாடந் திற
மினோ.　(கசு)

கன்னிநாடுஞ் சோணாடுங் கவலை தீரும் படிவந்தென்
சென்னிநாடும் பதம்பாடச் செம்பொற் கபாடந்திறமினோ.
வன்னி யன்ன விறன்மோகன் மாள வந்த மலர்ப்பதத்தென்
சென்னி கொண்ட பிரான்வென்ற களப்போர்பாடத் திற
மினோ.
ஆ(உரு) ருடு.

## காடு.

எனையாள வுருவாகி வருகோல வருண்மாது
மிவள்பேயும்வாழ்
நினையாமுன் மனன்வேவ வழன்மேவு மொருபாலை
நெறிகூறுவாம். (க)

மண்மாளு நீர்மாளு மெரிமாளும் வளிமாரு
தம்மாளுமேல்
விண்மாளு மாளாத தொன்றில்லை நிலையாமை
யழல்வேவவே. (உ)

இருடார்வும் வன்னெஞ்சர் நன்னெஞ்ச ரென்றில்லை
யார்கண்களுங்
குருடாய்வி டுந்தீய கடமண்டு கோபக்
கொடுந்தீயிலே. (ங)

எத்தீயி லுங்காம வெந்தீக டஞ்சேரி டும்பைக்கெலாம்
வித்தீயு மதுசா டாத்தீயு மவ்வாறு மேல்கொள்ளுமே (ச)

நாசஞ்செய் பவவன்னி யழலாற வருண்மாதி னுமங்களா
நேசஞ்செய் மொழிமாரி பொழிபோது
மொருகண்ணு நீரில்லையே. (ரு)

காயத்தி லுயிர்கால வனல்வெளவு மழல்மாற
நிழல்கண்ணிநன்

னேயத்தி னருள்செய்ய பாதத்த வர்க்கன்றி
நிழலில்லையே. (௬)

வேறு.

குறுகினண்ட ரழிவரென்று மொழிவதென்கொல் கொடிய
தீ; முறுகியண்ட முகடுகொண்ட முளரியானு முனியுமே.
கருகியிந்து நிறனழிந்து கடமெழுந்த கனலிலே
யுருகியந்த வரியுமென்று முததியின்க ணுறைவதே. (அ
கலையிலங்கு மானையும்பர் கடவுளென்று விடுவதோ
மலையினும்பர் புகினுமண்டு மதனவங்கி விதனமே. (௯)
தரையினின்ற வவையெனும்பர் தருவுமில்லை சுகதர்த
மாசுமில்லை யுரைசெய்பந்த வனலிலெங்கு மழியுமே. (௰)
அழியுமிந்த வனலினெந்த வுலகுமென்ற வருகர்தா
மொழியுமந்த வருகர்பிண்டி மரமுமில்லை முடிவிலே. (௰௧)

வேறு.

உள்ளிற் பார்திப் போதும் பிரிந்
திரேனென் றுண்பேய்க் குரைக்கும்பேய்க்
கள்ளிப் பாவை யல்லாலோர்
கள்ளிப் பாவை யில்லையே. (௧௨)
பொருவி றந்த வானவரும் புகன்ற விந்தக் கடத்தீயை
வெருவி யன்றோ பிறப்பில்லாவெளியாம் வீடும்விரும்புவதே

வேறு.

உன்னவரி தாயதிரு வுருவுதன்னை

யுணருமதி மாறொழிய மாறுமில்லை
பன்னுகலை யொழிய வொரு கலையுமில்லை
பரமாம்ஸ மென்பதல்லாற் பறவையில்லை (௫௪)

பெருகிவருந் திருவுள்ளக் கருணைநீரும்
பேணுமடி யவர்தமது பெருகுமன்பா
லுருகிவருங் கண்ணீரு மில்லையாகி
லுலகினுயி ருய்வதற்கோ ருபாயமுண்டோ. (௫௫)

வேறு.

தம்பி ரானிரு செங்கம லப்பதந்
தங்கி டாமன னேயித்த ழல்வன
வெம்பி ரானையுன் னுதவு யிர்களே
யிவ்வு லகத்தினி யங்கிடும் பேய்களே. (௫௬)

காடு முற்றும் ஆக ௬௬.

தேவி-உட்சோலை.

துப்பி லாவல கைக்கணஞ் சேர்புறஞ்
சோலை யைச்சில சொல்லினஞ் சொல்லுதற்
கொப்பி லாளுறை கின்றவுட் சோலையை
யுரைப்ப தன்றது வுஞ்சிறி தோர்துவாம். (௧)

தாயும் பூதலத் தென்னையு மாண்டுகொ
டம்பி ரானும டியரு மல்லது .

பேயும் பூதமுந் தேவரு மற்றும்பி
றக்கும் யாரும் புகுதப்பெ றுார்களே. (உ)

வேறு.

வெந்து தாபதர்க டாயுதர வெந்தீயினால்
வந்து தாபமறு நீழலவண் மந்தாரமே. (ங)
மெய்ம்மை யேபெறவி ரும்பிபடி மேவில்விரை
தம்மை யேபெற வழங்குமவள் சந்தானமே.[யத்
பாரி சாதமுட னும்பர்பல முந்தருதலாற்
பாரி சாதமென வும்பர்முனி வோர்பகர்வரே.(ரு)
ஏம நல்குர விரந்தவர்க ளெல்லையில்பசந்
தாம நல்குமரி சந்தனமெ னச்சொறருவே. (சு)
கற்ப கந்தருவ தக்கலைக டந்தபொருளே
கற்ப கந்தருவ தக்கலைக டந்தபொருளே. (எ)

வேறு.

பிறிவழி யின்றி யுருகிய நெஞ்சு
பெருகிய வின்ப வுருவையே
பொறிவழி யின்றி மலர்வன நின்று
புலனெனு மைந்து தருவுமே. (அ)
மலர்தரு பஞ்ச தருமது வின்ப
மதிகட லென்ற மறையெலா

மலரவ னந்தன் மகனா னின்ப
மதிதொரு விந்து வளவதே. (௬)

வேறு.

யாது நாசமு றவழி வொன்றிலா
வின்ப மாய்விளைந் தென்றுந்த ருணமா
யோது நாலு மறையின் கொழுந்தின்மே
லுள்ள ஞானக் கொழுந்தொன்று மோங்குமே.
முடிவி லாப்பெரும் பாழாய்ச் சராசர
முற்றுந் தியவு மற்றெனை யாளவும்
வடிவி லான்வடி வாகிவ ருந்திரு
மாது பார்க்குங் கழுநீர் மலருமே. (௭க)

வேறு.

பத்தி யாங்கடற் றேன்றுமோர்
பாவை முன்றிலிற் சங்கநன்
முத்தி யாம்பெறவ ழங்குமே
முன்னை நான்மறைமு ழங்குமே. (௭௨

மொழியி னுளைப்பரிதெனு
முளரி நல்குமுத் தேவரு
மழியு நாளினு மழிவிலர்

வளவி லாதமர் நிதியை'ீய. (ளங)

உட்சோலை முற்றும்

வேறு. தேவி கோட்டம்.

தொந்தமி லாவுள மென்றுமொ ழிந்தன
சுருதிகள் சொல்லளவா
வந்தமி லாதவ கண்டனெ டம்மை
யமர்ந்திடு மாலயமே. (ளச)

விடலில மேவரும் வேதவி ழுப்பொரு
டனைவிட லில்லடியா
ருடலில மேயென வோர்தினன் வர்தநல்
லூரா னு வப்பினொடே. (ளரு)

வேறு.

அண்டமெலாந் தன்னுடைய வகத்தடக்குந் திருமேனி
யம்மைக்கேற்க
வுண்டெனலா வதுகோயி லன்பருள மல்லதுவே
றுலகத்துண்டோ. (ளசு)

வாசல்

செழுந்தரள வடமன்றி யகிலாண்ட வடமணியுந்
திருவேர்வம்மா
தெழுந்தருளுந் திருவாச லிருசெவியா மடியவரோ
பெரியார்யாரே. (ளஎ

### விளக்கு.

என்றுமதி யொழியலகைக் கிடும்விளக்கா மன்னைதனக்
கெல்லாருள்ளு
மொன்றுமதி யாந்தன்னை யொழியவவி யாத்விளக்
குலகத்துண்டே. (௭அ) ஆ. அச.

### தேவி கோலம்.

தாயிலும்வந் தென்னையாண்ட தம்பிரான் மலர்ப்பாதந்
தரித்தோருள்ளக்
கோயிலுவந் தருளியுறை கோமளத்தின் றிருமேனி
கூற லுற்றாம். க)

### வேறு.

முதியலோக மீரேழின் முளரிவாழு மூதாதை
முதல்பிபீலி காதேக முடிவதாக மேல்கீழ்செய்
மதியும்வாழ்வும் வாணாளும் வலியும்வேறு வேறாகி
வருமநேக மாகோடி வடிவிலேக மாயாளே. (௨)

நகிலுமாதர் வேல்போலும் விழியும்வாணி லாவீசு
நகையுமோவி டாதோதி நரகினுளும் வீழ்வேனை
யகிலமாத ரார்சேத மகல்வாள வோர்மேனி
யகிலநாதர் தாமேவ வருளுங்காதல் கூர்வாளே. (௩

நயனநீரொ டோவாது நதிசெய்நாதர் சீர்பாத்

நளினகீத நாவார நவிலுவார்க டாமார
வயநுமானு மேருளு மவனுநாளு மாராயு
மழிவிலாத வோர்போத வமிர்தபான மீவாளே. (சு)

நிலனில்வானில் வாழ்வோர்க ணிலையிலாமை தானுடி
நிகரில்வீடு சேர்போத நெறிகள்போல வேகூறு
சலனவாதில் வீழாது தமையலாது தேடாது
சமதமாதி சேர்வார்க டலையின்மேவு தாளாளே. (ரு)

வேறு.

அடியவ ரளவறு பிறவி யச்சம
தறவரு ளிபபத மறியு மித்தனை
முடியறி வுறமுயல் பணிய வர்க்கிலை
மொழிமுடி வெனமறை முடிவு ரைக்குமே. (சு)

அலர்மண முரைபொருண் மணிய திற்பிரமைப
யவையிவர் நிகரென மிகவு ரைப்பதோர்
கலவிசெய் தொருவடி வுறம தற்செறு
கடவுளை மருவிய கனத னத்தளே. (எ)

அருவென வுருவென நிகழ வைத்துமோ
ரணுவென வவளொரு திருவு ருக்கொளு
முருவினை யணுவினி னணுவெ னக்கொளு
முணர்வரி தவள்செயு மொருந டத்தையே. (அ)

## வேறு.

நிகழுமுல கினிலகில வுயிர்விழியு நிகழவொளியே
திகழுமெரி மதியிரவி திகழுமொளி திருநயனமே (கூ)
கவியுமிகு ககனவொலி யுலகினுயிர் கருதும்வகையே
செவியினூறு திசைகளையு முதவுமவள் செவிமலர்களே. ()
நவமணியு மிறைவிதிரு வுருவினொளி யுடனவிலலா
முவமமல வுலகமுயி ருணர்வுணரு மொளியவொளியே. ()
கருமுதலே கவரவொரு கரியதுயிர் கழிபொழுதிலே
யொருமுதலே நினையவிருள் கிழியவரு மொளிதிகிரியே ()
கருமிடைசெய் பலகரண வவுணர்நிசி சரர்கணனெலா
முருமிடியி னரவின்முடி வுறமுழவு மொலிபணிலமே (கங)

## வேறு.

கறுக்குநிசி சரன்செவி வாய்முதல ஞானகரு மங்களெனவே
யொறுக்குமொரு பதுசிரமு முருளவொரு கணையிறைவி
தனுவுதவுமே. (கச)

## வேறு·

ஊனவடி வாளவுணர் கோடிபடை சாயவொழி
யாதொளிருமெய்ஞ்
ஞானவடி வாடனது ஞானவடி வாண்மிகு
நலன்பெருகியே (கரு)

முத்தண்டு மொருதண்டு மலவெய்ய விறன்மோக
னெனுமந்தக
னுத்தண்ட மொழிவிப்ப துணர்வின்ப வுருவான
வொருதண்டுமே. (கசு)

வேறு.

ஒழிவி லுலகெனு முருவினிறையவ
ளூரகவணைமிசை யணைவதே
யழிவிலறிவெனு முருவினலமிகு
மடியரகமல ரமளியே. (கஎ)

எந்தவளவறு மண்டமனுவென
வண்டமெனவனு விசையுமா
தந்தவளவமை கின்றதடியவ
ரம்பொனகமல ரமளியே. (கஅ)

அயர்வுநினைவறு மகமென்மலரினி
லகிலபுவனமு மில்லையே
யுயிருநிகழ்விலை பரமுநிகழ்விலை
யிறைவியுணர்வொளி யுள்ளதே (ககூ)

வேறு.

அடிசூடு வாரடியா
ரமரர்முடி யவர்கோவின்

முடிசூடப் பெறுவதுவோ
பெறிற்பெறுவார் மூவருமே. (உ0)

மொழியின்மொழி மொழியினருண்
முதல்வியடி யாரொழியப்
பழியின்மறை யறியுமோ
பதம்பணிந்து பாடவே. (உக)

வேறு.

நாரணனே முதலாக நவைதீர வுலகங்காப்
பவரைக்காக்குஞ்
சீரணங்கின் பதமொருகாற் பிரியாநல் லன்பர்களே
திருமெய்க்காவல். (உஉ)

ஒன்பதுதீர்த் தமுமன்பர் தம்பாதம் விளக்கியநீர்க்
கொவ்வாதென்றே
யன்பர்கடங் கண்ணீர்கொண் டம்மைக்கு மஞ்சனநீ
ராட்டுவார்கள். (உ௩)

வேறு.

யாப்புச் செய்ய வலங்கலு மர்ச்சையு
மெனது நெஞ்சுசெஞ் சாந்த மிருகரங்
கூப்புச் செய்கை யணியென்று கூறினன்
குருகை யாளிமற் றூர்வலர் கூறவே. (உச)

புகலு மாறறி தாகிய பூவைக்குப்
பூத பௌதிக மாகிப்பொ லிந்திடு

மகில மாவி பரமிவை யன்றியே
யண்ட ருண்ணு மமுதோ வமுதமே. (உரு) ஆகாகூ

ஆல்.

சிவனி டங்கொடிரு மாத மர்ந்தருளு
தெய்வ வாலமுள தென்று முன்
னுபநி டங்கள்பல வோதும் யானும
துரைக்க லாமள வுரைப்பனே. (க)

வேறு.

ஆனமுகவின்க ணேயடைய வாதியிறைபண்டை நாலுமறை
யாயவரி தென்ற வீடுவிளை யாடியருள்கின்ற தோர்மொழி
யில், வானமுதலைந்து பூதமிய மானனிகழ்சந்த்ர சூரியரு
மாயவருமென்று மோதுமொரு வாதையறநின்று நீடியது.

ஆயபலவும்பர் வானமிடை யானநிலனம்பு ராசிமலை
யாழுமுறநின்ற பாதலனு மாகவிவையைந்தி னேழுமவை
மேயபலவும்பராதியென வேறுபடவந்த யோனிகளு
மேவுசகதண்ட கோடிபலம் வீழவெழநின்ற சாகையது. (ந)

நாலுமறையங்க மாறுசிவ ஞானன்விரிஞ்ச னுமகில
நாயகர்விளம்பு மாகமமு நாடுபதினெண்பு ராணமிறை
கோலமறைகின்ற கீதையிதி காசமுடனன்ப ராவிகளி, கூர
மொழிசெஞ்சொன் மாலைபல கூறுகிளிதங்கு கூடுளது. (ச)

ஒருவமையின்றி மேவுபர லோகமுறு கின்ற வீடுமிறை
யோனையெதிர்கண்டு வாழவரு மோரளவிலின்ப வீடுமவ

னேருவமையென்ற வீடுமொருநீர்மையுறவொன்றும் [வீடுமிவை
நீதிபெறவெம்பி ரானருள நேயமொடிருந்த நீழலது. (ரு)

வானு மிறைவன்ச தாசிவனு
மீசனுமியங்கு மாருதமும்
வானெரியு மும்ப ஞமானும்
வார்புனலும்வெங்க ணுகணையி
ஞனுநிலனும் பிதாமகனு
மாகவரு மைந்து பூதமிவ
ராவ தனுவின்ப ரமாணமினி
யாலி னளவென்கொ லோதுவதே. (சு)

வேறு.

சொன்னவாலி னின்னவூச லெல்லைசொல்ல வில்லையா
மன்னவாகனத்தரெல்லை சொல்லவாகி னுருமே. (உ)

ஆகூ ராமசு.

வேறு பலிபீடம்.

அண்டபல கோடிகளா லாரணபண் டிதரமைத்த
பிண்டபலி யிடும்பெரிய பீடிகையார் பேசுவார். (க)

ஏத்தரநின் றிடுநாவோ டிணையடியின் விழத்தலைகள்
கூத்தாட வுடலமுயிர் பலிகொடுப்பார் கோடியே. (உ)

வேறு.

தம்பிறவி வேரொடு தறிக்குமிறை தேவியிரு
தாடலைகடாங்
கும்பிட லொழிந்துயய னின்றி விளை யாடுவ
குறைத்தலைகளே. (௩

வாளெரிபி னிட்டபசு வாவிமகிழ் வுற்றிறைவி
வாணலகை கைக்கொளுமதே
யாளநல னுற்றறிஞர் ஞானவெரி யிட்டபசு
வாவிபிவள் கைக்கொளுமதே. (௪)

நிலாவரு முகத்தினி னிலாவிய விழிக்கடை
நிலாதுயி ரறப்பருகியே
யுலாவர வரத்தனி யுலாவருவர் மெத்தென
வியோகினிகள் சிற்சிலவரே. (௫)

வேறு.

மருங்கிலா வகைவளர்ந்த தனங்கொண்டு வையமுயி
ரொருங்கெலா மொருங்கும்வகை யோகினிகளுலாவுவரே.
அப்பொழுதைக் கப்பொழுது மதிசயமா மதுவேகொண்
டெப்பொழுது மதிசயமா யிருப்பரிடா கினிகளே. (௭)

வேறு.

இருணகைக் கிரைகொடுத் தெழிலுருக் கொடுசகத்
துருணசைக் கிடனறுத் தொளிர்வர்யோ கினிகளே- (௮)

பகலுமத் தழுமறப் பாமதத் துவமுறச்
சகலவத் துவுமெடுத் தயில்வர்சா தகர்களே. (௯)

வேறு.

அகிலமு மறவிழிந்த தாளுடையா
ரளவறி வறவுயர்ந்த நீண்முடியார்
பகலிரு ளறநிறைந்தசெய் மேனியினர்
பலிகொள வுலவுமந்த்ர பைரவரே. (௰)

அணிமுடி யளவிறந்து மேவினரா
லணிமலர் பெரிதுவந்து சூடுவர்நீள்
பணிமுடி தரவிழிந்த தாளவர்சேர்
பரிசுற வருள்வர்மந்த்ர பைரவரே. (௧௧)

கரியினு நிறனிருண்ட பேய்தொழவே
கருணையி னிரவியிந்து தாரகைவா
ளெரியொளி கெடவிலங்கு பேரொளியா
யிலகுற வருள்வர்மந்த்ர பைரவரே. (௧௨)

கலகலெ னணிசிறந்த பைரவர்நீள்
கலைகளி னொலியடங்க வீணைபூ
தலகவி கெடவியைந்த கீதமோடே
தமருக விசைவழங்கி யாடுவரே. (௧௩)

பழகிய வுடலமிந்தி யாதியினோர்
பணியற மதிவழங்கு நாதர்கள்பே

ரழகிய கருணைகண்டு நீள்விழியா
லருவிகள் விடுவர்நின்று சாதகரே. (கச)

வேறு.

அகிலசக மறையும்வகை யளவில்சுக மதுநிறைய
வமுதுசெய்துதாம்
பகலிரவு தெரிவதற விலகுமுரு வுடையர்சில
பைரவர்களே. (கரு)

எம்மையருள் செய்கென விரந்தவவர் கட்கினிய
பைரவர்கடாந்
தம்மையருள் செய்குதவி னுப்பர்தமை யாளுடைய
தத்துவனையே. (கசு)

ஏறுமயி டன்றலை துணித்தியமன் வென்றசிவ
யோகினிகண்முன்
சீறுமயி டன்றலை துணித்தவொரு தெய்வமயி
லிற்றிகழ்வரே. (கஎ)

வேறு.

சாலவரிதென்று நாலுமறை யாயிரமுகங்க ளானவுயர்
சாகைபலகொண்டு தேடநனி தாரணியுள் வந்து தாமனிதர்
போலவெளிவந்த நாதனிரு பாதமுடி கொண்டு பூமியிடர்
போகவெனநின்றி டாகினிகள் போதமதுவுண்டு பாடுவரே.

ஞாலமமிர்துண்டு வேகபுல னுகைகடநின்று கால்வளைய
நாடிமனவன்கண் மேவுமுயிர் நாசமுறுமந்த காமதி

யாலமமிர்துண்டு நாடரிய வாதியிறைபண்டை நீதியிவை
யாருமெனவன்பர் காணவிலை யாடுவர்கணங்க ளுபகரே.

பெலிபீடம்முற்றிற்று.

ஆ கஙடு.

---

பேய்.

போதமாம்வடி வுள்ளவாறறு போகமாருத லின்றியே
பேதமாகிய வாதமேபகர் பேய்களேச்சில பேசுவாம். (க)

வேறு.

நீதிகணபங்க மேநிலை யானவுயிரும்பன் வானிலை, நீரின
தொழுங்கு போன்மதி நேருறவியம்பு வீடிறை, போதிநி
ழலின்க ணேதிய போதநெறியென்று வாதிகள், போரின்
மிகவென்று சீவர போர்வைபுனைகின்ற பேய்சில. (உ)

ஏசுமுளதின் றநேகம தேகமெனநின்றி டாதுட, லேதனள
வின்ப வீடுல கேழின்முடிவென்ற மாறுகள், பேசுமருகன்
றனூனெறி பேணியுடையின்றி நாடவர், பேயெனவியம்ப
வோர்துடை பீலிகொடுநின்ற பேய்சில. (ங)

நாடுபரனன்றி தீவினை நாகநிரயங்க ளாருயிர், நாசபவபந்த
வீடெனு ஞானமவமென்று மாம்வழி, தேடுபொருள்
கொண்டுநாரியர் சீரடிபொருந்தல் வீடிது, தேவர்குருவின்
றன், வாய்மொழி தேறுமெனநின்ற பேய்சில. (ச)

நாதனறிவென்று மாமறை நாலின்முடிவெங்கு மோதிய
ஞானநெறிகண்டும் வீடுற நாளுநினைவின்றி நீள்வினை
வேதநெறியென்று மீள்வறு வீடுபிறிதின்றி வானக
மேவுமிதுவென்று நாடொறும் வேள்விசெயநின்ற பேய்
சில. (ரு)

ஆனவுடலிந்தி யாதிக ளாகுமெனபுந்தி மானக
மாருயிர்கள்பந்த வீடுக ளாதியிறையென்ற போதமும்
வானமுதலைந்துபூதமு மாகர்முதல்வந்த யோனியும்
வாழுமயனண்ட கூடமு மாயையென நின்றபேய்சில. (சு)

ஆழிவளைகண்ட தேகுறி யாகவிழிகின்ற சாதிக
ளானுமவருண்ட சேடம தார்வமுடனுண்டும் வேறில
னூழியுலகுண்ட கோன்முழு தாகுமெனுமின்ப மார்குரு
கூரன்மொழிகண்டும் வேறுற வோதிமயல்கொண்ட. பேய்
[சில (எ)

நாதனருள்சண்பை யார்மறை ஞானமுனிபண்டு பாடிய
நாலுமறையந்த நீதியை நாடிநெருங்கிஞ்சின் மாணிகழ்
பேதமதுகண்ட போதநி பீதியெனநின்ற தாமொரு
பேறுமிழவுங்கொ ளாமிகு பேதமறைகின்ற பேய்சில. (அ)

ஆதிமறையந்த நீதியை யாயவறிகின்ற போன்முன
மாயவறிவின்மை யால்வரு மாகதிசைநின் றனேகமு
மோதுபரனென்று வீடுறு மியோகதிசையின்க ணேகமு
மோதிமறையெங்கள் பாலவி ரோதமெனநின்ற பேய்சில

ஆழியுலகங்கள் வீடுற வாரணம்விளங்க வோதிய
வாதியிறைசந்த்ர மௌலியை யாடலதுகண்ட கோமளம்
வாழிசகதண்ட நாயகி வாழியெனவின்ப மாமகிழ்
வாசகறவுண்டு தாமதி மாறிவிழுகின்ற பேய்சில. (௰)

மேலிரவியிந்து சேய்புதன் வியாழன்வெளிமந்த னீராறு
மேடமுதல்வந்த ராசியை வேறுபடலின்றி நாளெழு
நாலில்வருகின்ற வாறுக ணுசநிகழ்சிந்த னுதிக
ணுடியறைகின்ற சோதிட நாளுமறைகின்ற பேய்சில. (௰௧)

வேறு.

முனிக்கண மெலாமனிதர் பந்தமுற வீடுபெற
மூலமிது வென்றுபகரு
மனக்கடவு ளானசெழு மதியொழிய வேறுபர
வத்துவில தென்றசிலபேய். (௰௨)

விண்ணவ னியர்வையும் விளங்குவது மற்றவ
னெழுந்தருளின் மேவுமுயிரின்
கண்ணவ னலாதுபிறி தில்லைகதி ரோனலது
கடவுளில தென்றசிலபேய். (௰௩)

மாலய னுருத்திரன் மகேசுரர் சதாசிவரு
மற்றுமுள தேவருமெலாங்

காலவச ராயழித லாலழிவி லாமனுள
காலமிறை யென்றசிலபேய். (யச)

யாவருல கத்துவினை வெல்லவுரி யாரமரர்
யாவரு மிறைஞ்சுமொரு முத்
தேவரு மொழித்திலர்கள் செய்தவினை யன்றியொரு
தெய்வமில தென்றசிலபேய். (யரு)

அந்தர மியங்குநரும் வருவரரி யாளிபர
வாதிகளு மஞ்சுமுலகு
மந்திர வசத்திறைவ ரென்பதுவு மற்றதனை
யென்றுமய லுற்றசிலபேய். (யசுா

முத்திதர வோதுமிரு முச்சமய நூலுமறை
நாலுமுழு துந்தருவதாஞ்
சத்திதரு மந்திரமு மெய்பொருளு மாகுவது
சத்தமென நின்றசிலபேய். (யஎ)

வேறு.

வழுத்தித் தற்பசி யாற்கவி பாடுநர்
வழுச்சொற் சொற்றறி யாத்தன மோதுதற்
கெழுத்துச் சொற்பொரு ளியாப்பலங் காரமென்
றிவற்றைக் கற்றிறு மாப்புறும் பேய்சில. (யஅ

படித்துப் பற்பல நூல்களுந் தார்முறு
பசிக்குக் குத்திர ராயிரசந் தார்கையிற்
பிடித்துப் பிச்சையி டாரகம் போயவை
பிதற்றிப் பய்க்கமு ணுவரும் பேய்சிலை. (மகூ)

வேறு.

ஊழைக் கழியச் சிலகா லமிருந்
துண்ணக் கருதற் றுடலத் துளவங்
கூழைக் குமிழிட் டுமுகந் ததணைக்
கும்பித் துவிடுஞ் சிலகூ ளிகளே. (உ0)

கடவா ளரிகோ முகம்வீ ரமலர்க்
கமலம் மயில்பத் திரசோத் திகருக்
குடவா தனமென் றிருகை யொடுகால்
கோணப் பழகுஞ் சிலகூ ளிகளே. (உக)

தீதார் மலமென் றுணரா துடலைச்
சேமிப் பவைதா னதினு வலசிக்
கோதா மலமும் மெனநல் லறிவோர்
கூறத் திரியுஞ் சிலகூ ளிகளே. (உஉ)

மூலந் திகழங் கியுருக் கவிழு
முடிசே ரமிர்தத் துளிமுத் தொருசெங்

கோலந் திகழ்தந் துவினுற் றிதெனக்
கோள்கொண் டயருஞ் சிலகூ ளிகளே. (உந)

தோ்யத் துலவச் சுடுவெங் கனவிற்
றேூபச் சுரர்சா திகள்போ கிபவா
கா்யத் துலவக் காயத் தைவிடக்
கா்யத் திலுறக் கற்குஞ் சிலபேய். (உச)

ஆடம் பரமா மறுமைத் துணைபா
மரணைத் தமகத் தொழியப் புறனே
வேடம் பலகொண் டுநடித் துழலும்
வேதா ளகணங் கள்விதம் பலவே. (உரு)

வேறு.

கடிய வா்ய விணைபல கத்துவ
கொடிய வாயன கொள்ளிவாய்ப் பேய்களே. (உகூ)

ஆகூ ௱கூ௬.

---

தொழில்.

எது கோ்டி யளவென்றிப் பேய்களுக்
கோது கோமிவற் றின்செய லோதுவாம். (க)

வேறு.

அமையக்கற் பதுவிட்டுச் சிலதா்க்கித் தமையாச்
சமையக்கத் ததுகத்தித் தலைமுட்டிக் கொளுமே. (உ)

பொருதர்க்கப் பரபட்சச் சமயத்தைப் பொரவே
விருதிட்டுப் பொருதிட்டுத் தனைமெச்சிக் கொளுமே (௩)

சபமுற்றப் பொருண்முற்றத் தமிழிட்டுச் சொலவா
ரியமிட்டுச் சொலவொட்டொட் டெனவட்டித் திடுமே (௪)

சொனவத்தத் தினைமுட்டத் தொடரக்கெட் டுனையான்
வினவத்தட் டிலதைக்கத் தெனவெட்கிச் சொலுமே (௫)

உனதர்க்கப் பொருள்பத்தெட் டுளதட்டிப் படியே.
யெனதர்க்கப் பொருளிற்றட் டிலமுத்திக் கென்னுமே. (௬)

பரிசுத்தப் பொருளெத்தத் துவநித்தத் துவமே
துரிசுற்றுக் கெடுமித்தைத் துணிசித்தத் தெனுமே. (௭)

தலைபிற்சொற் கடையிற்சொற் பொருளொக்கத் தழுவா
மலைபச்சொற் கெட * வத்தத் தினசொற்கட் டிடுமே.

துணிவுற்றத் துவிதத்தைத் துவிதத்தைச் சொலவே
பணிவுற்றுத் தணிவற்றிப் படிதுக்கப் படுமே. (௯)

குருதர்க்கத் தினிஃவெற்றிக் கொடியிட்டுக் கொளுமே
யொருதர்க்கக் கழுதைச்சொற் றெருதர்க்கக் கழுதே.

தெரிசித்துப் பரிசுத்தப் பொருள்சித்தத் துதவா
தெரிசித்தத் தொடுதர்க்கித் திடுமற்றிப் படியே. (௧௦)

வேறு.

அறவுரைக ளவையெனவு மிவையெனவு மலகையுட
னலகையிகலிற்

* வத்திப்பன எனவும்பாடம்.

செறவுரைசெய் பலகலையி னொலியினுயர் ககனமுடி
செவிடுபடுமே. (௬௨) ஆ ௱௭௩)

தொழின் முற்றிற்று.

---

உவமை.

கன்றின வுளத்தொடு களத்தினி னரம்புகள்
பரம்பவமையா
தொன்றினுரை யொன்றுரைசெ யாதகலை யோதல
கை யொப்புரைசெய்வாம், (௧)

வேறு.

நன்னலத்தபர ஞானநிற்கவினை
நல்லறப்பபனை நச்சுபேய்
கன்னலைக்கழிய விட்டதற்றகழி
கோதுகொள்பவர் கடுக்குமே. (௨)

உட்கிடந்தமல னெழிவுறுதுபுனல்
கொண்டுடம்புகழு வுற்றபேய்
மட்குடந்தனின் மலத்தைவைத்தது
புறந்துடைப்பவனை மானுமே. (௩)

அறங்கொணெஞ்சொழிய வலைகை யன்பினொடு
கட்டுகின்றவழ கார்மடம்

புறங்கொள்செஞ்சடை யகங்கொள் காமவெரி
போதருந்தகைமை போலுமே. (ச)

தன்னினூன்றிய நின்றமானமவை
கொண்டுதன்னதுரு நாடுபே
யுன்னினூலுவமை பாதவங்கொடெரி
பாவகற்சுடுத லொக்குமே. (ரு)

துதித்தலென்குருவும் யாமுமோரறிவ
தாகுமென்றுவினை சூழவே
மதித்தபேயுதவு நன்றிகொன்றவள
வற்றபாதகனை மானுமே. (சு)

கள்ளையுண்டுமுன் புள்ளபோதமு
மிழந்திடுங்கழுது கையின்முன்
புள்ளதூங்கெட வவாவிருேவிரத
வாதமூதுபவ னொக்குமே. (எ)

அருந்தலும்புணர்வு மர்தரித்துழலு
மலகைவலையிடு கண்ணியிற்
பருந்தின்வாயரவின் மண்டுகங்கொள்சிறு
பறவைநுகர்நறவை யொக்குமே. (அ)

பந்தமுத்திபெற வொருவரின்றிவரு
பவமறுக்கமுயல் வுற்றபேய்

வந்தைபெற்றமக னுற்றநோய்விட
மருந்துசெய்பவரை மானுமே. (௯)

ஒன்றுபல்பொரு ளநித்தநித்தமு
முள்ள தில்லதுரு வருவமா
மென்றுசொல்லலகை தெளிவுவல்லிருளி
னிருளையிட்டதிலை தொக்குமே. (௰)

வேறு.

போதமா யகண்டமான பொருளதொன்றை யெண்ணில்பல்
பேதமாக்கு மலகையெண்ணில் பிரமகாதர்போலுமே (௧௧)
தன்னெழிந்து வேறெனச் சகத்தைநாட லுற்றபேய்
பொன்னெழிந்து பூண்விரும்பு போதகனர் போலுமே.
எதிர்நிகழ்ந்த துண்டலாத தில்லையென்றி யம்புபேய்
கதிரையில்லை யென்றியம்பு கண்ணிலாள னொக்குமே, ()
இடும்பையோடு சுற்றமுற்ற வின்னதீர்க்க நின்றபேய்
குடும்பிகோபு ரஞ்சுமந்த கூனுபாவை மானுமே. (௧௪)

வேறு.

இக்க ளேபர நிற்கவி பற்றுபேய்
மொக்குள் பூண்கட்டு மூர்க்கனை யொக்குமே. (௧௫)

வேறு.

அகலி டத்துள நீங்கெலா மவற்றினுக் கணுவாம்
புகல்வ தென்கொல்பேய்க் கழகுபோல் லாமையேயன்றே.

பேத மன்னுபூ தங்களின் பெருமைபார் சொல்லும்
பூத மைந்தையும் பெற்றது மவற்றினோர் பூதம். (௧௭)
ஓத வெல்லையுண் டாதலி னுய்ந்தில வலகை
போத மெல்லையி லாமையின் மெலிந்தன பூதம். ()ஆூ ௩௬௬

---

விச்சை.

எக்க ணங்களு மெத்துதி யுங்கொடு
தொக்க ணங்கினைச் சூழ்ந்தடி போற்றவே. (௧)

உம்ப ராதிப ராமும்பர் கைதொழ
வெம்பி ராட்டி யிருந்தரு ளெல்லையில். (௨)

விச்சை யாவையுங் கற்றவிச்சாதர
ணிச்சை யாம்பர விச்சையை நெஞ்சிலே. (௩)

ஆய காலமி துவென வங்கொரு
பேயை வாவென்று பேய்த்தனம் போக்கவே. (௪)

வேறு.

ஆணுடன்பெணலி யாயுடம்புக
ளநந்தமாயதனி லொன்றினெண்
சாணுடம்பினள வாவிருந்தநின்
றன்மைபாரதனி னன்மைபார். (௫)

மடக்குமாறுமிகும் வானவர்க்குமரி
தாமறக்கடிய வாயுவிற்

கடக்குமாமன னடங்கல்பாரஃ
தடங்கிநின்றதொரு கருமைபார். (சு)

புக்கபூமிதெரி யாதவாறுமுன்
னின்கணின்றபுரை யொன்றிலா
மிக்கபேரிருளொளிக்கஞானநல்
விளக்குவந்துகண் விழித்தல்பார். (எ)

விழித்தியாவையும் விழித்திமைத்துல
கமைத்தளித்தகில மீளவு
மழித்துமூவர்களு மாகிநின்றவது
வாதல்பாரதுவ லாமைபார். (அ)

இட்டதீபமு மிலங்குமெய்பொருளு
மெண்ணும்யாவைகளு மின்றியே
விட்டதீயென விளங்குமாறுமற
விட்டிருந்தவொரு விரகுபார் (கூ)

களிக்கயாவையு மிறந்ததென்றலு
மிறந்ததோர்கரிய கங்குல்போ
யொளிக்கயாவையு முணர்ந்துநின்றபர
மானவொண்கதி ருதித்தல்பார். (ω)

எண்ணவருமிசை யாதலண்டசத
கோடியுந்தாமு னேதுவரம்

விண்ணைபா திவரு பூதமைந்தினையும்
விழியினுனது விழுங்கல்பார். (கக)

காட்சியாவுமொரு கண்ணதானபடி
பார்கவின்பெற விருந்ததோர்
மாட்சிபார்வசன மானகோசர
மலர்க்கையுற்றமணி யாதல்பார். (கஉ)

மறப்புமின்றியொர் நினைப்புமின்றிமலர்
வதுவுமின்றிமலர் வற்றதோ
ரிறப்புமின்றிநிக ரின்றியிப்பொரு
ளிருத்தல்பாரென வியம்பவே. (கங)

அலகையாயுழனு மென்னையேயுள
வனந்தவின்பவறி வாக்கினு
யுலகையார்தமி னொருத்தனுமென
வுனைக்கருத்தினி னினைப்பதே. (கச)

முன்னையானெனது கண்டிலேன்மொழி
யிறந்தவின்பவறி வாயினே
னென்னையானினி வியம்புமாறென
விறைஞ்சிநின்றவனை யேத்தியே. (கரு)

இந்தவிச்சையுல கத்திலியாருள
ரெனக்குநின்றிரு வுளத்தினல்

வந்தவிச்சையென வவனுநாயகி
மலர்ப்பதங்களில் வணங்கவே. (கசு)

அன்னையாதரவி னோடவன்றலையி
னம்புயப்பத மளித்தவந்
தென்னையாளிபர விச்சைவல்லவனை
யாவரும்பணிமி னென்னவே (கஎ) ஆ உ௱அ.

---

பேயிரங்கல்.

விச்சைகண்டவர்க டொழுகைகண்டில
மிகப்பசித்துவிழி சுழலுவேம்
பிச்சைகொண்டுணவு மிடுகிலார்களிவை
பேய்களென்றிகழ்வு பேசியே. (க)

அண்ணலாரடியர் கொண்டநல்லவற
வேடமாகுமவை கொண்டியா
முண்ணலாமென நினைந்துகொண்டன
மறிந்துகொண்டதிவ் வுலகமே. (உ)

எந்நிலங்களும் வளர்ந்தவேழ்கடலு
மெப்பொருப்புமுள யாவையுந்
தின்னினும்பருகி னுங்கெடாதுபசி
யென்னருந்திமி து தீருமே. (ந)

வேறு.

தாகமோ கர்திமெலாந் தணிக்குமொரு தனிமருந்திங்
ஙேககமா முணர்வென்ப ரெங்கள்கணிற் காண்கிலமே. (ச)

அந்தவொரு மருந்தினைப்பெற் றநந்தமா யிரத்தொருவ
ருய்ந்தவருண் டிலையென்ன வோதுவதும் வேதமே. (ரு)

மகனாரப் பெற்றமறை வல்லவரும் பெற்றிலார்
சுகனர்பெற் றனரென்று சொல்லுவதும் வேதமே. . (சா)

அப்படியே யரியபொருள் பெறுமவரா ரலகைகளா
யிப்படியே யிப்படியிற் றிரிகின்ற யாங்களியார். (எ)

கற்றெல்லே யறப்பிதற்றிக் கண்குழிந்து கடைகடொறுஞ்
சற்றல்ல யாம்பசித்துத் தடுமாறுந் தடுமாற்றம் (அ)

மழித்துநீட் டியும்பறித்தும் வற்கலைகள் பலபுனைந்து
மொழித்துங்கோட் டிகள்கொண்ட தெத்தனையா முண்ண
[ வே. (கூ)

கருக்கெடுப்போ முங்களைநாங் கழல்சூட்டி யென்றுபோய்க்
குருக்கொடுப்போ மெனிற்கண்டு குதித்தோடிப் போவர்
களே. (ய)

பேசிலோ வல்லவாய்ப் பேயென்பர் பேசுதற்குக்
கூசிலோ வூமனெனக் கொச்சையெனக் கூறுவரே. (கக)

துதிப்பாரைத் துதிப்பதுவுந் துதித்தாலுந் தம்மையவ
மதிப்பாரை மதிப்பதுவும் வயிறொருசாண் வளர்த்தற்கே.

மிகையாகும் பகையிதனில் வேறுண்டோ வுற்றவரும்
பகையாகப் பண்ணுவதும் பாழ்வயிறே யல்லவோ. (கரு)
இந்தவயி றேபெரிய தேழ்கடலோ பெரியதுதான்
வெந்தவயிற் றுள்ளெரிபோ வேலையினில் வடவெரியோ
வந்தனைசெய் தனைவாழ்த்த வைத்தருளாய் வயிற்றினெரிக்
கிந்தனந்தே டிச்சுழலப் பண்ணினைநீ யெங்களையே
உடலெழுசா ணுப்பண்ணி யொருசாணு மொழிப்பதற்குக்
கடலுலகி னுடலமெலாங் காண்பானைக் காண்கிலமே. (கசு)
பிழைத்தக்காற் பொறுத்தருள்கை பெரியோய்நின் கடனன்றோ; யுழைத்தக்கா லடியோங்க ளுனக்குறுதி யுரைத்தருளே. (கஎ) ஆ உஉரு.

வேறு-கனவு.

எனவிளைப்பெ லாம்விளம்ப யிரவுகண்ட தொருகனா
நனவெனத் திகழ்ந்ததென்ன வொன்றுநின்று நவிலுமே.
இமைத்ததோர்க ணில்லையோவொ ரெல்லையற்ற வல்லையிட்
டமைத்தவோர் மகாந்தகார நின்றியா னமுங்கவே (௨)
விட்டிலங்கு தீபமேற் றிசைக்கணே விளங்கவோர்
மட்டலங்கன் மார்பினொ ருத்தன்வந் திருக்கவே. (ங)
எல்லையற்ற வன்பதம் பணிந்தியா னிறைஞ்சவே
தொல்லையுற்ற வன்பரென்னை யாளவென்று சொல்லவே. ()
புலன்களிப்ப வந்துசெய்ய பொற்பதங்க ளன்றியே
நலன்களிப்ப தென்னையென்று நான்மிகக் களிக்கவே (ரு)

தேனுமிக்க பாலுமென்ன நின்றுதித்தி யாவென்முன்
மோனமுத்ரை தன்னிலே யிருக்கவந்த மூர்த்தியே. (சு)

மெய்யெனு நலத்தொடே விழித்ததென் கணிப்பய
னையைநாடி யருளுகென்ன வறியவோது மன்னையே (எ)

அந்தகார மோர்கனின்னை யாளவந் திருந்தவ
னெந்தைகார ணன்ப்ரகாச ஞான மிட்டதீபமே (அ)

மோனமா யிருந்ததன்மை மொழியிறந்த வின்பமெய்ஞ்
ஞானமா யிருந்தவேறி லாததன்மை நாடவே. (கூ)

மேற்றிசைக்கண் வானவர்க்கு மேலனுத லாலுடன்
போற்றிசைக்கு மன்பர்பாத முற்றபுண்ணி யத்தரே: (ώ)

கருத்தினொ டொணுதவெந்தை கண்ணினுட மண்ணின்மே
லொருத்தனுகி வந்தளிப்ப னென்றுவேத மோதுமே. (கக)

வேறு.

மரண மும்பிறப் பும்மறு மாமணி
கரண மெல்லாங் கடந்த கடவுளே. (கஉ)

வினவி வந்துநீர் வேண்டிய தேதருங்
கனவு முந்துறுக் காரிய மில்லையே. (கங)

என்ன வன்னை யிறைவி மறையெலாஞ்
சொன்ன வன்பிற வாடுனன்று சொல்லுமே. (கச)

விண்மு தற்பொரு ளெல்லாம் விளைப்பவன்
கண்மு தற்புலன் காண்டற் கரியனே (கரு)

முந்தை மூவர்க்கு மூலமு னிவர்தஞ்
சிந்தை யானுந் தெரிதற் கரியனே. (கசு)

வரவு போக்கற்ற வான்பொரு ளென்றுமுன்
பரவு மாமறை யெல்லாம் பகருமே. (கஎ)

முடிவு மாதியு மற்ற முழுமுதல்
வடிவ மாகி வரும்படி யெங்ஙனே. (கஅ)

சொல்லு கோலஞ் சுருதிவி ருத்தமோர்
வல்ல வோவென வன்னை யருளுமே. (ககூ)

அருவ னாகினு மன்பர்க் குருவனாய்
வருவ னென்றது மாமன்ற காணுமே. (உ0)

பத்தி யாம்வலை யிற்படும் பார்மிசை
புத்தி யாலறி யொண்ணாப் புராணனே. (உக)

தேவி யிப்படிக் கூறத்தி ருவருள்
பாவி யேற்கில தென்றுப தைக்கவே. (உஉ)

ஆக உசஎ.

---

சசிவன்னபோதம்.

அலகை யச்ச மறவக வான்களு
முலகின் முத்திபெ றும்பரி சோதுவாம். (க)

புணர்ந்த பாவமெ லாம்பரி பூரண
முணர்ந்த ஞானி விழிபட வோடுமே. (உ)

வேறு.

எழிலாரு ஞானி புகழென்னை கூற
வுயர்வீ டிவன்சொல் வழிசெய்
தொழிலாளர் சேர்கை பதுகேளு முன்னே
யிதிகாச மொன் றுசொலவே. (௩)

தந்தாப மற்ற பாவனைவல் செய்த
வவனுற்ற பேறு தனைமுன்
செந்தா மரைக்கண் முதல்வர்க்கெம் மண்ண
றிருவாய் மலர்ந்த திதுவே. (௪)

உவமிப்பின் ஞானி விழிபட்டு முன்னை
வினைவிட்டு முத்தியுலகிற்
றவமற்ற வெய்ய வினையே புரிந்த
சசிவன்ன னெய்துகதையே. (௫)

வேறு.

ஏமம் புகுவா ருளபா தகரா
மியாவர்க் குளுமிக் கவனு குமிவ
னுமம் புகல்வார் குலமும் மெரிவாய்
நரகம் புகுமா றுநடந் தனனே. (௬)

மலமே வியதீ வினையின் வலியால்
மகிழும் பர்பதத் திலிருந் தவிவன்

குலமே வியதென் புலவா ணர்களுங்
கொடிதா நரகங் குடியே றினரே. (௭)

மிகமே வியபுண் ணியபா வமெனும்
வினையின் பயன்மே லொருகா லமுறு
திகமே வருமென் பதனா லுளனோ
வெல்லா மிவனைச் செறவெய் தினவே. (௮)

தன்புத் திரனை யம்விடா மையினாற்
றவறுற் றவிவற் பெறுதந் தையுளந்
துன்புற் றினியென் னைகொலோ புதல்வன்
றுயர்தீர் வகையென் றுசுழன் றனனே. (௯)

ஒன்றா னும்வினைத் துயர்துய்ப் பதலா
லொழிவிக் குமுபா யமுனக் கிலதே
யென்றா னுமறிந் தவனன் புவிடா
திவனைக் கொடுமன் றனனெங் கணுமே. (௰)

ஒருமா தவன்மற் றிவன்வே தனைகண்
டொழிவற் றுளவொன் றையுளத் துணரும்
பரமா கியஞா னிகள்கண் ணுறலே
பரமௌ டதமென் றுபகர்ந் தனனே. (௰௧)

தானந் தமிலா ததனைத் தருவான்
சத்தீச் சுரமென் னுமிடந் தனில்வாழ்

மானந் திபரா யணனென் பவனின்
மைந்தர்க் குறுநோய்க் குமருந்தெனவே. (௰௨)

முடியா வுபதேச மிதென் றவனு
முனிவன் பதமெய் திமொழிந் தனனிக்
கொடியான் வெருவா துகுயிற் றியநோய்
கூறற் கரிதா யகொடுந் தொழிலே. [௰௩]

ஈங்குன் றிருமுன் பகரும் படியோ
விவனெய் தியதீ வினையென் னவெலா
நீங்கும் படிதன் னனுபூ தியிலு
னிகழும் விழிவைத் தனனின் மலனே. (௰௪)

கணியார் தபவக் கடவா னதிருக்
கண்வைத் தலும்விட் டனகா துகடும்
பிணியா வையுநல்ல பிதா விறைதாள்
பேணிப் பணியென் றுபெயர்ந் தனனே. (௰௫)

இடனே முதலா கவுவந் திறையோ
னேவும் பணிசெய் திவனுஞ் சிலநா
ளுடனே யிவனே திருமே னிதனக்
குரியா னெனவுற் றனனும் பனுடே (௰௬)

நன்று முனிதாள் வழிபா டதனு
ஞனு விதமா னபிறப் பினைவிட்

டொன்று கியவீ டுணருத் தமர்கட்
குளசா தனநா லுமுதித் தனவே. (௧எ)

முனிவன் றிருமுன் புளதன் குறைதான்
மொழிவன் சிலவஞ் சலிகுஞ் சியதாய்ப்
பணிவந் திருகண் கள்பதங் களிலே
பலகால் வலம்வந் துபணிந் தனனே. (௧அ)

அருளே வடிவா கியமா முனிதா
னறியா தவர்போ லவமுங் கலுழும்
பொருளே தெனமைந் தனடுங் கினனிப்
பொல்லா தபவப் புணரிக் கெனவே. (௧௯)

வெருவும் பிறவிக் கடல்வித் தரமுன்
வேதா கமகீ தைவிளம் புமதைக்
குருவுந் தனதன் பன்மனத் தளவிற்
கொளுமா றுதொகுத் திதுகூ றிடுமே. (௨௰)

வேறு

மரண பவங்களான புனலை யுடையது
மதியை விழுங்குகாம வரவு பெரியது
கரண வொழுங்கருது விடய விரைநுகர்
கணமொ டியங்குமீன மிகவு முகள்வுதே. (௨௧)

பெருமித மென்றுகூறு பெருமை யுடையது
பிணிகளொ னுங்கெடாத புலவு கமழ்வது
வருமிட ரின்பமான திரைகள் பொருவது
மனமெனும் வஞ்சராஜ மகர முறைவதே. (உஉ

அளவி லகந்தை யாமை யபரிமிதமுள
வவாவெ னிறைந்தவாழ மறிய வரியது
களவு நெருங்குபாரு மலையு முடையது
கலக விடங்கண்மேவு கிருமி நெளிவதே. (உங

துகளொ னு நன்கலாத நுரைக டருவது
துறவினி னின்பமான கரையை விடவகன்
மகளிரெ னுந்தவாத வலிய சுழியது
மறலியு மஞ்சுகோப வடவை யெரிவதே. (உச)

வெருவரு கின்றபோக முதலை யுடையது
விவித மனந்தமான துறையு மறிபவ
ரொருவர் கடந்துபோக விரகி லெழுபவ
வுததி விளம்பயாவ ருலகி னறிஞரே. (உரு)

பொறிவழி சென்றுமீளு மவல மதிகொடு
பொருசம யங்களாறு மறியவி ழுமதி
லறிவழி வொன்றிலாத பொருளெ தென்வுள
வநுபவ வங்கமேறு மறிஞ ரகல்வரே. (உசு)

புணரி கடந்துபோக விரகி லெனமொழி
பொழுது புலம்பியாவி புதல்வ னிறுமுன
முணர்வெனும் வங்கமேறு மறிஞ ரகல்வரென்
றுரையை வழங்கிநாத னுவகை யருளவே, (உஎ)

வேறு.

வாழியென விறைவனடி தொழுதுவரு பவமா
மாழியினை யகலுமறி வருளுகென வவரே. (உஅ)
பரவறிவு மபரவறி வெனவுமிரு பரிசாத்
திரவறிவை யறியுமவர் மொழிவர்தெளி வுறவே. ()
அபரவுணர் வருமறைகண் முதலகில கலையு
முபரமம தறவுதவு முணர்வுபர வுணர்வே. (௩0
ஆகமவி தங்களறி வாரபர மறிவார்
யோகமொ டுறங்குமவ ரேபர முணர்ந்தோர். (௩க)
புராணமிதி காசமெனை யும்பொரு ளனைத்தின்
பிராணனறி யாதுள விடத்திவை பிதற்றே. (௩உ
இயலறிவ திசையறிவ தினமறிவ துளதா
மயலறிவ தறிவதல வறிவறிவ தறிவே. (௩௩)
நவிலுகலை யறுபத்து நாலுமுணர் வாரும்
பவலபம தறுசுத்த பரமமறி யாரே. (௩ச)
ஆகவறி வாளரறி வாரிவை யனைத்து
மேகவறி வாளரிவை யாவுமறி யாரே. (௩ரு)

ஐயறி வறிந்தவை யடங்கினவ ரேனு
மெய்யறிவி லாதவர்கள் வீடது பெறுரே. (௩௬)

மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே. (௩௭)

பூசனையு மூதுசகல பொருளுமறி தமையு
மீசனையும் வேறதற வறிவதறி வெனவே. (௩௮)

தானெனு முடம்பது தனைத்தவிர வேறு
யானெனு மருத்தமுள தோவருளு மெனவே ()

வேறு.

எனதார்டை பொன்பூ மகன்றையல் பாய்மா
விபங்கண் முகங்கால்கை மெய்யென்ன வென்றுந்
தனதா யுரைப்பான் வகுத்திந்த வூனைத்
தானென் றயர்த்துஞ் சொலத்தக்க தன்றே. (௪௰)

தாளாக வூராழி யாவெங்நில் வீணு
தண்டாக வன்மார்பு தட்டாக மொட்டா
நாளா மலர்ச்சென்னி கூந்தற் கொடித்தேர்
நாணுளு மூர்வானில் வேறுக நாடே. (௪௧)

கடக்குஞ் சரம்பண்ணி யுண்ணின் றொருத்தன்
கைபாத கன்னங்கள் மெய்போ லியக்குங்
கிடக்குங் நடத்தா விடத்திவ் வுடம்புங்
கிடக்கும் மொருத்தன் னடத்தா விடத்தே. (௪௨)

ஒருகூறு மலமாகு மொருகூ றுடம்பாகு
மோருகூறு மனமாகு முண்டற்ற வன்ன

மிருகூறு நீயாகி னொருகூறு நீயா
மிழிக்கும் மலஞ்சோ ரிடப்பட்ட வுடலே. (சங)

கிளரா தரத்துண் ணு மன்னஞ் சுடக்கை
கிட்டப் பொருதே யிருந்தார் முனிந்தார்
தளரா துறுப்பொன்று முயிர்போக வன்றே
தழற்பள்ளி மீதே துயின்றார் சகித்தே. (சச)

நிழற்பாவை கண்ணாடி யிற்பாவை கைகா
ணிமிர்க்கும் முடக்கும் மிவன்செய்யு மெல்லாந்
தொழிற்பால வாமற்றிவ் வுடலஞ்செய் தொழிலுஞ்
சுடர்ஞான வடிவான வன்செய்த தொழிலே. (சரு)

அறிகின்ற பொருளென்று மறிவானில் வேறே
யாஞலிவ் வூனுகநா னென்ன லாமோ
செறிகின்ற புள்ளல்ல வேகூடிவ் வகையே
செடமான வுடனின்னில் வேறென்று தெளியே. ()

நிலனாகும் வற்பென்ற னெகிழ்கின்ற நீரா
நெருப்பா மிதிற்சுட்ட வெல்லாமு மனிலஞ்
சலமான புரையான வானிந்த வுடலஞ்
சடமான வைம்பூத வுருவங்க டாமே. (சஎ)

விழிவைப்பு மானென்னில் ரவியாதி யாலே
விளங்கின்ற தல்லால் விளங்காமை யாலே
யொழிபப் படுங்கன்ன முதனாலு முன்ற
னுருக்கண்ட கண்டன்னே யொப்பாக வுன்னே. (சஅ)

வேறு.

அழலூண்பொருள் களினுண்பவை முக்கூறதின்
றணிபென்பு நடுக்கூறது மச்சைக்கணி யாகு [முற்கூ
மெழில்கொண்ட கடைக்கூறது வாக்காயெழு மென்
யெழினூன்மறை யந்தங்க ளிசைக்கின்றன வாமே[றே

உண்ணும்புனன் முக்கூறதின் முற்கூறுவர் நீரா
முதிரந்நடு விற்கூறு கடைக்கூறு பிராண
னெண்ணும்மிதி யிருகூறவை நீயாயிடி னன்றே
விறுகின்ற பிராணன்னது நீயாகுவை யிசையே. (௫௰)

வேறு.

பிராணனு மல்லதுஞ்சி னுணர்வின்மை யாலஃ
துணரும் புலன்கடொழிவாற்
பிராணன தென்னின்மன்னை யொழியாது சேனை
நகர்சூழ் வலஞ்செய் பொழுதே. (௫௧)

கரண மொடுங்கவாயு நிகழ்வென்கொ லென்னி
னுடல்காவ் லாகுமலதேன்
மரண மடைந்ததென்று தமர்சுட்டி டார்முன்
வளைவாயின் ஞாளிகொளுமே. (௫௨)

இனமுற வெண்ணவுள்ள கரணத்தி லொன்றி
தெனலாவி தென்னதெனலான்
மனமுன மன்னமென்ற வதனாலு மல்ல
மதியல்ல வந்தவகையே. (௫௩)

வேறு.

இடரின் புளதாய் நிலையற் றறிவற்
றெண்ணுங் கரணங் களிலா யெவரு
மடரும் பிறவிக் கடியென் றுணரு
மாங்கா ரமுநீ யலவென் றறியே. (ருச)

ஐயப் படலோர் பொருணிச் சயமா
யறியப் படல்யா னெனதென் றுமதஞ்
செய்யப் படல்செய் வதுசிந் தனையாஞ்
சித்தம் மதுவன் றெனநீ தெளியே. (ருரு)

முன்னு கவுடம் பதுசித் தமதே
முடிவா கமொழிந் தபொருட் டிறடான்
நின்னு கிலநீ யறியும் பொருளாய்
நிகழ்கின் றதனு லெனநின் மலனே. (ருசு)

உன்னு லறியப் படும்யா வையுமுன்
னுருவன் றெனவோ தினையொக் குமெனக்
கென்னு லறியா தொழியும் பொருளோ
யானு குவதென் றனனென் றனுமே. (ருஎ)

அறியாப் பொருள்கா ரணமா யைகுறித்
தறியும் பொருள்கா ரியமா முலகிந்
நெறியாற் றிகழ்நான் மறையந் தமெலா
நீயன் றெனவோர் துநிரந் தரமே. (ருஅ)

அறியும் பொருளன் றறியாப் பொருளன்
றறிவா கியநீ யெனுமப் பொருடான்

பொறியின் வழிநின் றறியும் பொருளோ
போதக் கண்விழித் தறியும் பொருளே. (ருசு)

வேதப் பொருடா னிதுவே றுசொலும்
வினையா வையுமன் றொருவே றுமிலாப்
போதப் பொருளந் தமறைக் கணியாம்
புனிதப் பொருடத் வமசிப் பொருளே. (ருஎ)

வேறு.

நிமலமாம்பர மதுவெனும்பொரு ணீயெனும்பொருள்
சிவனே, யமலமான விரண்டயிக்கிய மசிபதப்பொரு ளா
வதே. (சுக)

அருமையாகிய பிரமமுன்னிலை யாகுமாருயிர் பின்னிலை
யிருமையான விரண்ட யிக்கிய மெய்துமாறெவ னென்ன
வே. (சுஉ)

உபாதியால்வரு பேதமேயிவர் பேதமன்றுரு வுயிரினின்
கபா தியாமுடல் போலிறைக்குள காரணாதிகள் காயமே.
ஈசன்முற்றறி வான்வியாபி யெவைக்குமேதா வியம்புமா
காசகன்னிரு பாதிபாவனை காரணாதிக ளாவதே. (சுச)

நீதியானிரு பாதிநீக்கிட நீயெனச்சொல் பதத்தினு
மாதியாகிய தற்பதத்து மசுத்த சுத்த முரைத்துமே. (சுரு)

ஆகமுன்றிக ழேழுநாளெனை றொம்பதத்தி னசுத்தமே
சோகமின்றிய சான்றுநாளெனை றொம்பதப்பொருள் சுத்த
மே. (சுசு)

அகிலகாரண மாதிநாளென றற்பதத்தி லசுத்தமே
சகலகாரண சான்றுநாளென றற்பதப்பொருள் சுத்தமே
செறிந்தகாரண காரியங்கள் சிதைந்துமேலுறு சித்ததா
யறிந்தவாதனை தானுமற்றதவ் வசிபதப்பொருளாவதே.
அசுத்தமாகிய விருபதத்தினு முக்கியப்பொருளாகுமே
விசுத்தமான விலக்கியப்பொருளென்றுசொல்லுவர் விமல
ரே. (௬௯)

முரண்டசீவ பரங்கடம்முடன் முக்கியப்பொருளாவதே
யிரண்டின்வேற்று சிற்சொரூப மிலக்கியப்பொருளாவதே
லக்கியப்பர சீவர்தங்களுடம்பிரண்டு மிலக்கணு
வாக்கியப்படி நீக்கிலொருவத்துவேபர வத்துவே. (எக)

ஓரில்விட்டதும் விட்டிடாதது முபயமும்மென வுணர்வு
ளோர், தேரிலக்கணை திரிவிதத்தி னிசைப்பர்மற்ற தியம்
புவாம். (எஉ)

மஞ்சுகூட்பிடு தென்றல்போலவும் வடபகீரதி யுள்ளதே
விஞ்சுகோஷம தென்றல்போலவும் விட்டலக்கணை யாவ
தே. (எ௩)

சிவலைநின்றது வெள்ளைபோயின தென்றுசெப்புதல் போல
வே, கவலையின்றி விடாதலக்கணை யென்றுநீகொள் கருத்
தினே. (எ௪)

மேவும்விட்டு விடாதலக்கணை மெய்ம்மையாதெனி லங்க
வித், தேவதத்தனெனும்பொருட்படி சிந்தைசெய்திடு தீர
வே. (எ௫)

விட்டலக்கணை தனையும்விட்டு விடாதலக்கணை தனையுநீ
விட்டுவிட்டு விடாதலக்கணை யால்விளங்கு விளங்கவே. ()

போதுமேவிய தேசம்விட்டொரு புருடனைக்கொளுமாறு
போ, லோதுமீருடல் கண்டுவிட்டதி னுண்மைகாண வுணர்
ந்திடே. (எஎ)

வேறு.

பிரியா வுயிர்கா ரியமா முடலும்
பிரமத் துறுகா ரணமா முடலுங்
கரியா கியவா தனையுங் கழியக்
காட்டும் படிகண் டுகொள்கண் ணுறவே. (எஅ)

காணத் திரணிற் பினுமப் பொருளைக்
காணக்கிடையா தவைகை யறவே
மரணப் படினும் மதுகண் டுகொளும்
வழியில் லையெனும் படிநீ மதியே. (எகூ)

எந்தக் கரணங் களுமே வனனு
விதன்வா தனையால் விடயங் களொரீஇ
யந்தக் கரணங் கள்பொருந் தல்கனு
வவைமாய் தல்சுழுத் தியவத் தைய்தே. (அய)

வேறு.

வினவிற் பாத்தையறி வுறுதற் கவத்தைபுலன் வினைமாறி
யே, நனவிற் சுழுத்திநிலை வரினப் பொருட்டிகழு நலனாக
வே. (அக)

துவிதத் தவத்தைகளை யறிவுற்ற வத்துரிய நிலைசிவனே
யிவிதத்தி னப்புருட னனவுற்ற வத்துரிய நிலையிசனே

அகிலக் கரிப்பரம துரியப் பொருட்டுரிய மதுவாகையே
புகலுற்ற தத்வமசி யெனுமுப் பதத்தின்முடி பொருளா
வதே. (அஈ)

நிமலப் பொருட்சுருதி நெறியிற் பெறக்கருணை நிதிகூறவே
யமலப் பொருட்பெறுத லருமைத் தெனக்கழறி யடிவிழ
வே. (அச)

தமரக் கலைக்களவு தெரிவற்ற தற்பொருள தனையீகுவா
னமரர்க் களப்பரிய பதநற் புனற்கொடுசெய் தபிடேகமே.

பவளத்தில் வைத்தவமிர் தினின்மிச்சி லிட்டினிய பரிவோர்
டுமா, தவளப்பொ டிக்கவச மெனவிட் டுடற்பகைக டலைசா
யவே. (அரு)

உதகத்து டற்பொருளொ டுயிர்கைக்கொ டுச்சிமிசையொ
ருபோதொடே
பதகத்த லத்தைவிட விருகைத்த லத்தொடிரு
பதமேவியே. (அஎ)

ஓழியப்பு லக்கணுப நிடதப்பொ ருட்டெரிய
வுளஞானமாம்
விழியைக்கொ டுத்துமொழி யெனமுப்ப தப்பொருளும்
வெளியாகவே. (அஅ)

நன்வைத்து வக்கிமுடி துரியத்தை முற்றவிறை
நவினீதியே
மனவர்க்க மற்றவனு பவமுற்ற சிற்ககன
வலியோதுமே. (அகூ)

புரணமாகவே புறப்புள புலன்களு மந்தக்
கரணம் யாவையும் வழங்கிட நனவெனக் கண்டேன். ()

புரண மாகிய புறம்புள புலன்கெட வந்தக்
கரணம் யாவையும் வழங்கிடங் கனவெனக் கண்டேன் ()

மரண மாகிய திசையிது வெனும்படி மனுதி
கரணம் யாவையு மிறந்துள சுழுத்தியுங் கண்டேன் (கூஉ)

எஞ்ச லின்றியெக் கரணமு மிறந்திருண் டிருந்த
துஞ்ச லங்குணர் போதமாந் துரியமுங் கண்டேன்.

துரிய மாகிய போதமோர் துளக்கமற் றனைத்தின்
கரிய தாயிருந் திடம்பர னனவெனக் கண்டேன். (கூச)

புணர்ந்த விச்சகத் தொழித்துணர் போதமாந் தனையே
யுணர்ந்த மீற்றது பரன்கன வெனும்படி யுணர்ந்தேன்

சான்று சாக்கிய பிறந்திடத் தானிருந் தமையுந்
தோன்று ருவிடம் பரன்சுழுத் தியதெனத் துணிந்தேன்

மரித்த தென்றுணர்ந் துரைத்தது மரித்திடந் தனிலே
தெரித்த போதமே ததுபரன் றுரியமாய்த் தெளிந்தேன்

இறையெ னும்பொருட் டுரியமே யென்னையாண் டவனே
மறையி னந்தநற் பதப்பொரு ளனவென மதித்தேன் ()

பண்டை விச்சுவ வாதனைப் பழுதுபோய் முழுதுங்
கண்ட கண்ணதே யாகிய கனவதுங் கண்டேன். (௯௯)

காட்சி யாவையுங் கண்ணதா யக்கணுங் கரைந்த
மாட்சி யாகிய வகோசர முறக்கமாய் மதித்தேன். (௱)

அருந்த வாமறை யந்தமா மகோசரந் தனினீ
யிருந்த வாறறி வித்தவா றெங்ஙன மிசைப்பேன். (௱௧)

எம்பி ரானிடந் தொறுமிடந் தொறுமது வதுவாய்த்
தம்பி ரானடஞ் செயும்வகை சாற்றுமா றறியேன். (௱௨)

ஆவி யேயடி யேன்செய்கைம் மாறுனக் கென்னெனிற்
பாவி யேனது தானுநின் னுடையதாம் பண்டே (௱௩)

ஆவல் செய்தென தாக்கையுள் ளளவுநின் னடிபார்க்
சேவல் செய்வதே யன்றிமற் றொன்றுநா னறியேன் (௱௪)

இறவி லெப்பத மும்பெற வேண்டிலே னென்றும்
பிறவி வேண்டுவ னின்றிருப் பணிசெயப் பெறினே. (௱௫)

வேறு.

என்றுபல கால்விழு மெழுந்தொழு மழும்புரியு
மென்னையினியா
னின்றுபல வாகவுரை செய்தவவ னன்பினொடு
நெஞ்சுருகியே. (௱கூ)

ஏட்டினறி வின்றியிறை தன்னிலறி வின்றியிவ்வு டம்பினு
டனே, வீட்டிலுறை வானையினி வீடுபெறு மென்பது விளம்
புகிலமே. (௱எ)

வஞ்சவலி யானரகில் வீழ்பிதிர ரங்கரகு பாழ்படமிகா
வீஞ்சைவலி யாலடைய வேறினர்சு ராதிபர்கண்மேலுலக
மே. (௱அ)

தேவரு மனித்தரு மிவன்றொழில் வியந்துரை செயப்படு
வதோ, மூவரும் வணங்கிமுடி யாலவன தேவல்செய முந்
துறுவரே. (௱கூ)

ஞானியை நரன்சுர னெனுதொழிக ஞாலமுய
நாதனருளான்
மேனியது கொண்டுதனை நல்கவரு மென்றறையும் வேதமு
டிவே. (௱ம) ஆடீ நடுன,

## திருமுடியடைவு.

மூல மான மறைப்படி மூலமே
கோல மர்ன் பரிசுகள் கூறுவாம். (க)

### வேறு.

தன்னுக நல்க வருளே நிறைந்த திருமேனி கொண்டு தன
தாள், முன்னுன தேவ ரொருமூவர் சூட விறையா யிருந்த
முதலோன். (உ)

மாதுற்ற பாகனெனவந்து வெள்ளி மலேமே லிருந்துமறை
நா, லோதுற்ற ஞான வடிவைத் திகழ்த்தி யுலகைப்பு ரந்த
வுரவோன். (ங)

ஆலத்தி னீழ லறநல்கி ஞான
வநுபூதி யாகவழியா
மூலத்தை நாலு முனிவர்க்கு மோன
மொழியால் வழங்கு முனிவோன் (ச)

வெளியாய் விசும்பி னிருண்மாற வந்த
வெயிலோன் விளங்குமுனநா
ளொளியா யுனக்கு மொளியா னெனத்த
ஞெளிதான் விளங்கு மொளியோன். (ரு)

தேனொத்த தன்ன தநுபூதி தேவர்
குருவைத் தெளிக்க வொளிசேர்

மோனத்திருந்த படியே யிருந்து
மொழிவற்ற வொன்றை மொழிவோன் (சு)

மகனார் தமக்கு மிகநல்கி யெந்தை வருகென்று தந்தைப ணியச், சுகனார் திருத்த முறஞான நல்கி யிடர்தா னொழி த்த சுடரோன். (எ)

பேராழி யேறி யடலாழி யேவி யருளாது பொன்றுபிற விப், பேராழி யேற விசையற்கு நெஞ்ச மிசையப் பகர் ந்த பெரியோன். (அ)

தேனொக்க மன்னு மமிர்தொக்க வேத
சிரமே மொழிந்த குருகைக்
கோனுக்கு வந்து பெருகன்பு நெஞ்ச
முருகக் கொடுத்த குரவோன். (கூ)

வழிக்க மிழ்ந்த வறன்மேன் மிதந்த வயனிற்சி றந்த ம றையோர், காழிக்கண் வந்து சிறுபால கன்க னுறுமாறு நின்ற கழலோன். (ய)

இல்லூரு வந்த மடவார் தனங்க ளிடர்நஞ்சு தஞ்ச மிறை யோ, னல்லூரில் வந்த பதமென்று நாவி னரசன் றுதிக்க நவில்வோன். (யக

இளையாது பூணு மணவாளர் போல
விளமாதர் கொங்கை யிடையே
விளையாட வீடு மிகுசுந் தரற்கு
விளைவிக்க வல்ல விறலோன். (யஉ)

உரைசெய்ய வின்றி யுளமொன்று வந்த
தெனவாத வூர னிருகண்
டிரைசெய்ப நீர்கொ டுரைசெய்ய வன்று
திருவாய் மலர்ந்த திறலோன். (௵)

சித்தான வேட மதுகொண்டு செம்மை
மிருசோதி சித்த வடமா
மத்தான மேவி யறிவான தன்னை
யறிவித் திருந்த வறவோன். (௱௪)

தானந்த மற்ற வருண்மேனி நின்ற
படிநிற்க வன்று தனதா
மாநந்த நிர்த்த மறிவித்த தில்லை
நகர்வந் தளித்த வருளோன். (௱௫)

அமரா திபர்க்கு மயன்மா லரர்க்கு
நிகரான வாதி மறையோர்
குமரர் பதிக்க ணொருமேனி கொண்ட
வருண்மேனி நல்கு குரவோன். (௱௬)

நல்லேன முன்னர் வருமங்கை தன்னை
நகரா வுவந்து பிறிது
மல்லே னெனாம லழியாத தன்னை
யொழியாமை சொன்ன வறவோன். (௱௭)

புரந்தா ளுறுக்கென்ற மறைவல்ல பூமி
சுரர்சொல்ல நல்ல புகழ்சேர்

பரந்தா ளுவந்து பரமாம் பதத்தை
யறிவித்தி ருந்த பழையோன். (௰அ)

தன்செப்பு மாறில் பதமன்பர் தங்க
டலையிற் பதித்து மதுரம்
புன்செய்க்கண் மேவி யொழிவற்ற தேச
புகழுற்ற தூய புகழோன். (௰௯)

சீலம் பொருந்து முனிவோர் கணங்கள்
செயடுவன் றிறைஞ்ச வறவோர்
கோலம் பொருந்தி நலமார் திருப்பை
நகர்வந் திருந்த குரவோன். (௨௰)

புயமாதர் கொங்கை பெறவேறில் போத
கனமான பாத மலர்பெற்
றுயர்மா தவத்த ருலகுய்ய வந்த
விறையாய் வருக்கை யுறைவோன் (௨௧)

பாரார் வருத்த முறுபந்த பாச
மறவந்து பாத மருடற்
கோரார் வருக்கை யிடமா வுவந்த
நடராச னென்னு மிறையோன். (௨௨)

வெருவந்த தொண்டர் கருவெந்து வீழ
நிறையைந்து வேள்வி மறையோர்
திருவிந்த வூரி லுருவந்திவ் வையம்
மகிழ்வித்த செய்ய திறலோன். (௨௩)

ஆவத்தை மாற வுலகன்பர் தன்னி
னருண்மேனி கொண்டு திருவார்
கோவத்தை மேவி யமுதைச் சுரந்த
நிகர்வேறி லாத குரவோன். (௨௪)

வேறு

அரணிதரு கனலினொளிர் புரணமொரு கரணமற
வுயிலவொரு மொழியருளவே
தரணிவரு சொருபனென திடாகல விருகழல்க
டருகருணை பெரியகுரவோன். ௨௫) ஆ ௫௨

வேறு திருவபிடேகம்.

ஆகியழி யாவண்ண மன்பர்க் கெல்லா
மரியதனைக் கொடுத்தருளு மந்தவாதி
யோகிசொரு பானந்தன் மோகற் காய்ந்திட்
டுங்கள்பசி தீர்த்தருள வுள்ளஞ் சென்றே. (௧)

குருவடிவ மாகிவந்த சொருபன் றானே
மைந்தனென வேறுமொரு கோலங் கொண்டான்
றிருவருளா லவன்கொண்ட கோல மான
திருவுருவஞ் செய்தசெயல் செப்ப லுற்றும். (௨

வேறு

குருவரு ளொழிந்தறிவு கூடலரி தென்பது
குறிக்கொடுலகந்
திருவருளை நாடும்வகை தன்றிருவு ளத்தினருள்
சென்றருளியே. (௩)

தந்தைசொரு பன்கழல் பணிந்துபிற வாதநெறி
தான்வினவவே
மைந்தனுள மன்புகொளல் கண்டருளி யெந்தையு
மகிழ்ந்தருளியே. (௪)

செப்பரிய வீடருள்செ யத்திருவு ளத்தினருள்
சென்றுமிகவே
ஒப்பரிய வெந்தைபெரு மானுவகை யோடுமெ
துரைத்தருளுமே. (௫)

வேறு.

மாறிலொளி யாய்நிக மூனந்தவறி வின்பம்
வாய்மைவடி வாகிமன வாசகமி றந்தோர்
வேறில்பொரு ளாயதனின் வேறுபடு பற்றும்
வீடுமில தாகுமது வேதநெறி வீடே. (௬)

கண்ணைமுத லாகியபு லன்களு மியங்குங்
கால்களு மனத்திகர ணங்களு முடம்பும்
விண்ணைமுத லாகவரு பூதமு மனைத்தும்
வேறிலறி வாய்நிகழ்தல் வேதநெறி வீடே. (௭)

கூறுபல பேருடைய வாறுபலவும்போய்க்
கோத்தபர வைக்கமொருத் ÷ தீர்த்தமெனு மா
வேறுபல வானசம யங்கண்முடி விற்போய் [போல்
வேற்றறவ டைந்தவது வேதநெறி வீடே. (அ)

ஆண்டொரு குலம்மொருப ரிச்சினவு டம்பு
மந்நிய சு கங்களுமரு ந்துதலு மற்றுன்,
மீண்டொருவ னுந்தவிர வேறுமொரு சூழ்கீழ்
மேலறநி றைந்துளது வேதநெறி வீடே. (௬)

காலையிறை தன்றலையில் வைத்தருளு போதே
கண்டுகொள வாயுடலி லேயுடலம் விட்டான்
மேலையொரு வீடுபுக வென்றுகரு தாமே
வீட்டினி னிருக்குமது வேதநெறி வீடே. (௰)

ஈடுபடு மிப்பிறவி தீரவிறை யோன்வந்
தெழிற்பத மளித்தினி தியம்புமொழி யொன்றால்
வீடுபெறு மப்பொழுதி னெப்பொழுது முண்டே
வீடென விளங்குமது வேதநெறி வீடே. (௰௧)

களங்கவுட லானபொழு தியாவரு முடம்பாய்க்
காணுமது போலொருவன் வீடது முளத்தே
விளங்குபொழு தெவ்வுலகி னுள்ளவுயிர் கட்கும்
வீடுநனி காணுமது வேதநெறி வீடே.

---

÷ நீத்தம் எனவும் பாடம்.

வேறு. (௰௨)

காதும்வர்தியர்க டாநினைந்தபடி கட்டுரைக்குமது வல்லவீ
டோதும்வேதமுடி வோதலாநுபவ முற்றஞானிக ளுரைத்
தலே. (௰௩)

நாதனந்திபெற நல்கியம்முனிச னற்குமாரர்பெற நல்கவே,
சூதனன்கூற வியாதனேதவவ னேதும்வீடடைவு சொல்
லிலே. (௰௪)

ஞானநீதியொடு பெற்றமாதவ ரனேகர் நாளும்ள வில்லைசோ
பானநீதியை யறிந்தினிப்பகரு மாறுதானரிது பாரிலே (௰௫

வேறு.

உவந்து நாமுனக் கோதிய வீட்டிய
லுபநி டத்தொரு கோடியு ரைக்கிலென்
சிவன்ற னுணர் வுற்றதீ தென்னநற்
றேசி கன்றன் றிருவடி போற்றியே. (௰௬)

இருக ரந்தலைக் கொண்டருள் செய்கென
வேத்து மைந்தனர் கண்ணீர் வரவர
வருக வென்றவர் தம்மி னுருகியே
மகிழ்வி னெந்தை திருவாய் மலரவே. (௰௭)

மல்கு கண்ணினீர் கொண்டிறை மேனியை
மைந்த னரும்வி ளக்கினர் வள்ளலார்

புல்கி மைந்தனர் மேனிவி ளக்கினர்
போத மாக வொருகணப் போதிலே. (யஅ)

உத்த மாபர மானந்த நாடுநீ
யுடைய தேயென் றுரைத்தருள் செய்திறை
சுத்த மாநம் பதநின தேயென்று
தூய பண்டைப் படியை விளக்கியே. (யகூ)

உவப்பி னுலிவ்வு லகினை யாள்வதற்
குரிமை யிற்றிரு வுள்ளத்த டைத்திறை
சிவப்பிர காசனெ னுந்திரு நாமத்துச்
செய்ய பாத மணிமுடி சூட்டியே. (உய)

வேறு

தன்பினுதியி லாதகோன்முடி யாதிதாண்முடி வாருயிர்க்
கன்பினாருள் கருணைநல்லற மணியுமாபர ணங்களே (உக)

கோட்டமொன்றறு முள்ளமாமலர்
கொண்டுகட்புனல் கொண்டுசெய்
வாட்டமொன்றறு மன்பர்வாசக
மாலையேதிரு மாலையே (உஉ)

ஒன்றுமோதுவ மம்பெருவிறை தந்தவாகம வுபநிடத்
தென்றுமோதுச துஷ்பதத்தரி யாசனத்தி லிருப்பவே

## வேறு

அவனி யிற்சிவந் தருசி வற்கதிர்ந்
துபநி டச்சலஞ் சலமொலிக்குமே. (உ௪)

வருபி றப்பறப் பருதி யிந்துவந்
திருபு றத்தினுஞ் சுடரெடுப்பரே. (உ௫)

குணங்களெந்தைநா மங்கள் கொண்டுதாள்
வணங்கி நின்று நாமங்கை வாழ்த்துமே. (உ௬)

பங்க யஞ்செறு பதநி னைந்துபூ
மங்கை நின்றுபொன் மாரிதூவுமே. (உ௭)

தான சக்ரமற் றுயிர்த னைப்பெறு
ஞான சக்ரமெங் கணுநடக்குமே. (உ௮)

மங்கைபாகனன் மகுட மேறும்வண்
கங்கை யாதிவெண் கவரி வீசுமே (உ௯]

வரர்க ணங்களு மறைக ளுமச்
சுரர்க ணங்களுந் தொழுது போற்றுமே. (௩0)

## வேறு.

ஞான கேதனந் தன்னைவ ழங்கிட
நாலு திக்கினுங் கட்ட வவையுமக்
கான கேத மறுக்குமம் பொற்கழ
லடைய வாருமென் றுலித்த ழைக்குமே.

வேறு

ஆருரைக்கவ லாரவன் றன்பத
மப்பெ ருந்தகை யிப்புவி மேவிய
கூரிருட்டன வாகத்து மோகனைக்
கொன்று நுங்கள் குறைதீர்க்கு மென்னவே.

திருவபிடேக முற்றும்.

மோகன்சரிதை

மோர்க னருமவ னூரென வவன்றன்வரவு
முனிவ ருய்ந்திட வவன்குல னடங்கமுனியு
மேக னுமிறை யுவந்தருள்வி வேகன்வரவு
மிருவர் செய்தியும் விளம்புமறை யென்றருளவே)

உண்டு மில்லையு மிரண்டுமல வாகிமனவாக்
குன்ன லோதலரு மாயையுள வுண்மை யுணர்காற்
பண்டு மில்லையிது வந்தபடி சொல்லவுளதோ
பகரு தாகரண மோர்புடைய தேபகர்வதே (௨)

வெய்ய வன்கணுள தாயவன்ம றைந்திடவெழும்
மேக மேயென விளம்பவிர கின்றிமனனஞ்
செய்ய வின்றியுள வொண்சுடர்முன் மாயைசனனஞ்
செய்து மூடிமதன் மேனிதெரி யாதவகையே. (௩)

ஓசை யாதியுல கானபரி சொன்னவொருதன்
னிலைபி னின்றுணர்வின் மாயையொட விஞ்சைபு
லீச ஞகியுயி ராகியுயி ரானவவனே [ணர்வா
டின்ப மாகியறி வின்மையெனு மாதிசையவே .(ச)

அறிவி லாமைபெறு மைந்தன்மன மந்தமனனுக்
கான பன்னிய ரபேட்சையு முபேட்சையுமெனப்
பிறிவின் மோகன்முதல் வந்தனரபேட்சை மடவாள்
பெறவி வேகன்முதல் வந்தன ருபேட்சையறவே.()

பந்தமா நெறியை மேவிய வபேக்ஷை யைமனம்
பற்றி முற்றுமவன் பெற்றவர்கள் கொள்கவெனவே
யந்த மோகவசு ரேசனர சானவதனு
னறிவி வேகன்முத லானசுர ராறுவர்களே. (சு)

அவுண ரென்பதடன் மோர்கன்முத லாமறவரே
யமர ரென்பது விவேகன்முத லாமறவரே
யிவண மிங்கிருவர் வம்சவர லாறுமெனவே
யென்ணே மோர்கனர சாளவுல கெய்துதுயரே. (எ)

வேறு

ஆனகேத மெல்லைசொல்ல வறிஞரில்லை சிறியியான்
மீனகேத ஞரியால் விளைந்தவா விளம்புகேன். (அ)

குடர்வழும்பு தொடர்நரம்பு குருதியென்பு குழுமவுங்
கடல்வழங்கு மமிர்தமிந்த மகளிரென்பர் கவிகளே (சு)

வேரிவாரி புண்டுவண்டு ஞிமிறுமிண்டு மடையவேழ்
வாரிவாரி யுண்டவம்பு வாகமென்பர் மயிரையே. (ய)

மயல்கொடம்பை யுமிழநின்ற குமிழியென்று மதிகொளார்
கயல்களென்பர் பிணைகளென்பர் கணைகளென்பர் கண்ணை
யே. (கய)

துரிசுதுன்று கபம்வழங்கு துளைசெய்துண்ட மதனையே
பரிசில்கொண்டு கவிசனங்கள் குமிழதென்று பகர்வரே (யஉ

மலவொழுங்குண் மலியநின்ற வதரம்விஞ்ச மதனனோ
விலவதன்று தளிரதன்ற திந்திரகோப மென்பரே. (யங)

பல்லையென்று மென்பெனுது பவளமுட்பொதிந்தகூர்
முல்லையென்று முறுவலென்று முத்தமென்பர் பித்தரே ()

கலர்நிறைஞ்செய் வதனம்விஞ்சு கபம்விளைந்த கவினெனுர்
மலர்நிறைந்த மறுவொழிந்த மதியமென்பர் மயல்கொடே

மருவி சந்து தொறுமெலும்பென் மதியதின்றி வளைகொ
டோ, டருவுலந்த விளகுமுய்ந்து தழுவிலென்று விழு
வரே. (யசு)

பிணிசெய்கின்ற கழலையென்பில் பிசிதபிண்ட முசிதமா,
யணிசெய்கொங்கை யமிர்தகும்ப மெனவிரும்பி யணைவரே

அபசதங்க ளுபய்ரந்திர மவை சொரிந்த வறியிஞ
மிபசிரங்க டடநிதம்ப மெனவியம்பி யிடுவரே. (யஅ)

அரிபரந்த விழியிலன்ப ரதிபயஞ்சொ லளவதோ
பரிபுரஞ்செய் பதயுகங்கொள் பணியுவந்து பணிவரே.()

வேறு

ஓராத வன்ப ருறுகாத லென்னை யுரைசெய்தல் யாதுமு
ணர்வோ, ராராத வன்பு மடவார்தி றத்தி னலையாழி யே
ழினளவே. (உ௰)

உளஞ்செய்து கொண்ட மடமா திருக்க
விலைமாதர் தாமு முளராக்
களஞ்செய்வர் காதல் பெரிதாகி யேதில்
குலமாதர் தங்கள் கவினே. (உக)

வேறு

வார்த்தை வேறுசெயல் வேறு வஞ்சமா
மனனும் வேறுபட மாதர் வைகலுந்
தூர்த்த சேவைசெய வன்பு செய்வரே
சுத்த மாமவர சுத்த மாகவே. (உஉ)

உருவ நங்கனை யார்வ னப்பிலா
ரும்பர் நீசரென லற்று ளன்கொள்வா
ரிரும னஞ்செய்மட வார்த னத்தையே
யிளையர் மூப்பரிவ ரென்று மில்லையே. (உங)

வேறு,

கிறியினிப் பாவையர்க ளுறுதுவக் காடவர்கள்
கிளரவொட் டாதநரகென்
றறியவுற் றுருமுற வணைவதப் பாழுருவி
லருவருப் பானவிடனே, (உச

இறுகவப் பாவையர்க டழுவவித் தாசைபக
லிரவுழைத் தாவியிறவே
யுறுகவுற் றுஹுமிவ ரொழிபநிற் பேர்மெனுணர்
வெர்ருகணப் போதுமிலரே. (உரு)

வேறு.

சிறுவர் யாவரோடு மடவார்கள் காதல்
பொருள்காதல் சிந்தைசெயவே
கூறுவர் வாய்மையல்ல படிறே நினைப்பர்
கொலைசெய்வர் கோபமிகவே. (உசு)

பாகுதி வந்தொருண்டி பரிவோடு நல்கு
மவரோடு செய்வர்படிறே
யாகுதி பண்ணவன்பொ டணைகின்ற வன்கை
யடுகின்ற வங்கியெனவே. (உஎ)

புற்புத மென்னவிந்த்ர தனுவென்ன வந்திவ்
வுடல்பொன்றல் கண்டுநிறைபொன்
வெற்பதன் விந்துவென்னும் வகைதேடி ஞளு
மமையாம லாசைமிகுமே. (உஅ)

நொந்தொரு குன்றி குன்றில் விலைசெய்வர் தம்மை
முகர்வே நினைந்து நுர்கவர்
வந்தொரு குன்றைபொன்றின் மதிசெய்வர் தம்மை
யொருவச்ர பாணியெனவே. (உகூ)

வேறு.

புலைசரிந்த குலனைநின்று புகழ்வதுஞ்செய் துவகையாற்,றலை
சரிந்து தொழுவபொன்று தருவனென்று தமதுளே (௩௰)

வேறு.

அருந்தலும் புணர்ப்புமன்ப ரானவான வாசையால்,வருந்த
லென்று முள்ளதாப மாதவத்தி னில்லையே. (௩௧)

வேறு.

பிறன்பொருள் கவர்ந்துகொளு மாறது
நினைந்தறிவு பேசும்வகையே
யறம்பொருளெ னுங்கலைகள் கற்பது
மதற்கிசைய நிற்பதுவுமே. (௩௨)

அருந்தவ ரெழுந்தல கடங்கலு நடந்தணி
நடஞ்செயலினே
ரிருந்தவ வுடம்புகொ டிடங்தொறு மிடங்தொறு
மிசைந்திடுவரே. (௩௩)

வேறு.

தெளிய மாதிமுதலெட்டி யோகமுஞ்
செய்து செய்வர் பொருடி வாவிரா
வெளிச மாம்சமது நித்தை மைதுனம்
விடியு மெல்லையினி யோக மேகவே. (௩௪)

சிந்தை மாதரைய லான்ம றந்துமொரு
தெய்வ சிந்தனைசெ யார்களே
தந்தை தாயர்முது குரவ ரேவல்செய
மைந்த ரானவர்க டவிர்வரே. (௬௫)

கொண்ட கேள்வனை யொழிந்தொ ருத்தனொடு
கூடி வாழ்வர்குல மாதரே
பெண்டிர் காதலொடும் வாட வாடவர்கள்
பிறனில் வீழ்வர்பிழை பெருகவே. (௬௬)

ஒழுக்கி லாதவ ரொழுக்க முள்ளவர்
தவங்க ளைப்பழு துரைப்பரே
வழுக்கி லாவறிஞ ரறிவி லார்களென
வறிவின் மானிடவ ரறைவரே. (௬௭)

அரசர் நீதிகெட வாழ்வர் தங்களை
யடைந்த வர்க்கருள்செ யார்களே
புரைசெய் தானையர சரைய மைச்சரடு
போர்க்க ளத்தி னிறை போவரே. (௬௮)

உறுப யன்சிறிது மின்றி யும்பிற
ரிடும்பை கண்டிட வுவப்பரே
பெறுப யன்கருதி யுறவு கொண்டவர்க
ளிரவு கண்டுநனி பிரிவரே. (௬௯)

வேறு.

குடும்பச் சிந்தை யொழியக் குரம்பைகூ
ரிடும்பை சிந்த நினைவென்ப தில்லையே [சO]

ஊக்கக் கேட்டி னுளத்த நலன்பிற
ராக்கக்கேட்டி னெரியு மவியுமே. (சக)

பட்ட வாகம் பதைப்பது பார்க்கவே
விட்ட வாவென்ன வேலை விடுவரே. (சஉ)

குமத மெங்கணு மான்து கோதறு
சமத மங்க ளொளிக்தன தப்பியே. (சங)

மோக முட்டி மொழியிய மாதியர்
மியோக மெட்டு மொளித்தன வோடியே (சச)

வீட்டின் மேவும் விருப்பம் வெகுண்டுபோய்க்
காட்டின் மேவிக் கரந்து திரியுமே. (சரு)

காந்தி வெஞ்சினக் காயெரி போனது
சாந்தி தாந்தி யிழந்துயிர் தன்னொடே. (சசு)

வேத நான்கும் விளங்கிய வாகம
பாத நான்கும் வழங்கில பாரிலே. (சஎ)

எங்கு முள்ள திறையரு ளின்றியப்
பங்க முள்ளபொய்ப் பாடாண்ட நூல்களே. (சஅ)

வர்க்கம் விட்டவெம் மார்க்கமும் வாதுசெய்
தர்க்க மிட்டுத் தடியடி யானதே, (சகூ)

வேறு.

அந்தரமிகவி ளைந்தது வன்பருளறமக ன்றன
மந்தரமலை மறைந்தன மந்திரவுபநி டங்களும். (ருഠ)

இந்திரவுலகெ னும்படி யெங்கணுமதன னின்புறு
தந்திரநலம டந்தையர் தங்குலமிக விளைந்தது. (ருக)

மங்கையர்செயும்வ ரம்பறு மங்கலகலக மெங்கணுஞ்
சங்கையைவிடநி லம்பல சங்கரகுலம்வி ளைந்தது (ருஉ)

அந்தியுமரபி றந்தன ரந்தணர்குலகு ளப்புகக்
குந்தியகுளிபி றன்பொருள் கொண்டிடு மபிம தங்கொடு
முந்தியமறைமொ ழிந்திலர் முன்றொழும்வகையொ ழிந்திடப், புந்தியினிடைபு குந்தது பொங்கெரிதிரிவி தங்களும்.

வேறு.

உரைசெய்முறை யன்றிமற் றுழவருண வொன்றறுத்
தரசர்பொருள் கொண்டிடற் கமைவரவர் நின்றழ. (ருரு)

புகைவர வழிந்திடப் பொருண்முழுது கொண்டுவெம்
பகைவர வழிந்திடப் படர்வரரு வெஞ்சுரம். (ருசு)

அரிகளுறில் வெஞ்சமத் தவரைபட வின்றிநற்
பரிகரி யிழிந்துகைப் படைவிடுவ ரஞ்சலில் (ருஎ)

குலவணிக ரன்புடைக் குரவர்பொரு ளென்றிலைச்
சிலவணுகி லங்கதிற் சிறிதுகொளல் சங்கையில் (ருஅ)

வேறு.

வஞ்ச மொன்று மொழிய வணிகர்த
நெஞ்சி னொன்று பிறிதில்லை நிற்பதே. (ருகூ)

அவம்பு ரிந்து திரிவார்க ளந்தணர்
தவம்பு ரிந்து திரிவார் சதுர்த்தரே. (௬௰)

வேறு.

பாதமோதி யேவல்செய்த பனவரைப் பழித்துநால்
வேதமோதி நீசசாதி விப்ரசாதி யானவே. (௬௧)

மறைபவுண்மை தவிரவின்ப வகுளகந்த மதுவெனு
நிறையவுண்டு விப்ரசாதி நீசசாதி யானதே. (௬௨)

மோகன்சரிதை முற்றிற்று.

---

வேறு.

சொல்லு வானரிது மோக சேனைசெய
லென்ன வேசுருதி சொல்லுவான்
வெல்லு வானவனை யிறைவ ரும்படி
தவஞ்செய் வான்விறல்வி வேகனே. (௬௩)

தவத்தி னுற்பெறு விவேகன் முன்பிறைவி
தான்மொ ழிந்தருளு தம்பிரான்
றிவத்தி னுர்தொழு சிவப்பிர காசனிரு
செய்ய செம்பொனடி சேரவே. (௬௪)

வேறு.

தோரவி வேகங் கொடுபொரு மோகன்
சுராசுரே சருந் தேயத் தொலைப்பதுந்
தேர விவேகன் சிவப்பிர காசன்
பதத்தின்விண் ணப்பஞ் செய்யுமவ் வேளே. (௬௫)

வேறு.

அடிவ ழுங்கி னறிஞர்க டம்பிரா
னமரின் மோகனுஞ் சேனையு மாருயிர்
மடியு மென்னு மளவோ வவற்றரு
மனமு மாயுமா மாயையு மாயுமே. (௬௬)

ஒன்று கூறு முபநிட மெம்பிரா
னுருவு கொண்ட துறுதுயர் தீர்க்கவே
யென்று கூற விரும்பசி தீர்ந்தபோ
லின்ப மெய்தி யிருந்த வளவிலே. (௬௭) ஆ சஅக.

---

வேறு—ஏகன் றிருப்பவனி.

ஆண்டானடி யருளெய்தவி வேகனடன் மோகன்
மாண்டானுயி ரென்றங்கொரு விச்சாதரன் வந்தே (௧)
பாதந்தன தலையிற்கொடு பரவப்பழ மறைதேர்
மாதந்தமி லிறைசேவடி வந்தித்து மகிழ்ந்தே. (௨)

வேறு.

என்ற வப்பயனெ னெம்பி ரானருளின் மோக னுருயிரிழக்கவே, வென்ற வப்பரிசெ லாம்வி ளம்புகென வேதொடங்கினன்வி ளம்பவே. (௩)

வான நாடரும னித்த ராகவழி தேட வீடுபெற மண்ணிலே, ஞான நாயகன்ம லர்ப்ப தந்தனை வழங்கு நாளினொரு நாளிலே. (௪)

வேறு.

ஓடிவில்பர வின்பமுற வுரியபர விஞ்சைமகள்
கலவியை யுவந்தவுரவோ
னடியவர்கள் சங்கதுதி யதிரவணி சங்கமுழ
வறிதுயி லுணர்ந்தருளியே. (ரு)

கண்புன லு மார்வமும் வழுத்துமிசை மாலையு
மழுத்தமுறு காதலடியா
ரொண்புன லு நாண்மலரு மொக்கவிர விப்பரவு
மர்ச்சனையு வந்தருளியே. (சா)

வேறு.

சிவேக நாதசிவ போற்றி செம்பொனடி
போற்றி போற்றிசய சயவெனு
விவேக ஞதிகளு மடியர் தம்மொடு
முனிக்க ணங்களும் விரும்பியே. (எ)

புவியு ளார்மகிழ நீதி ருப்பவனி
போத நின்கழல்கள் போற்றவே
யவியுண் வானவர்கள் யாரும் வந்தனர்க
ளெந்தை காட்சியரு ளென்னவே. (அ)

வேறு.

மேதகு சந்தும் பனிதமு மேயு
மிர்கம தமுஞ்சேர் விடுபனி நீரின்

சேதக முந்தற் சேர்ந்தவர் நெஞ்சிற்
சாந்தமு மெய்யிற் சேரவ ணிந்தே. (௯)

செங்கழு நீர்கொண் டன்பர்செ யும்பூ
மாலையொ டுள்ளஞ் சேரநு ராகத்
தங்கழு நீர்கொண் டன்பர்செ யும்பா
மாலையு மார்பத் தாரவ ணிந்தே. (௰)

ஆருற வாரிங் கயலென வுள்ளத்
தறிஞரு மாயா வகையவ ரோடும்
போருறு மோகன் கிளையொடு பொன்றிப்
போக மிதிக்கப் பொற்கழ லிட்டே. (௧௧)

குடிமுழு தாளக் குவலய மேவுங்
குருபர னார்தங் கருணையொ டுஞ்சே
வடிமுத லாகத் திருவபி டேகத்
தளவும ணிப்பொற் பணியும ணிந்தே. (௧௨)

சேமிசை யானுந் தூய்மறை நாலுந்
திருநெடு மாலுஞ் செவ்வர விந்தப்
பூமிசை யானுங் காமுறு ஞானப்
போதக மேலே போதரு போதே. (௧௩)

வேறு.

நடுமதி வரப்புவனி தலமதி சயிக்கவொளிர்
நலன்மருவு முத்திவரவே

யுடுமதி யொளிக்கவடி யவர்மதி களிக்கவுய
ரொருகுடை நிழற்றிவரவே. (கச)

சாமர முழக்கவுயிர் சாமர பொழிக்கவல
தாமரையு கத்தினலறூர்
சாமரமு னுக்கருகு தாமரை முகத்தியர்கள்
சாமரமி ரட்டிவரவே. (கரு)

விடைகருட னன்னமுத லாகவெழு துங்கொடிகள்
பின்புவர விண்ணவரெலாந்
தொடரவரி தென்று * மறைமொழியறிவெனும்
பெரிய, துவசமுமு யர்த்துவரவே (கசு) ஆ சகூள

---

பரவுதல்.

இரவிமதி பிரமன்முதல் சுரரவனி சுரர்முனிவ
ரெழின்மறைகள் சயசயவெனப்
பரவிவரு மரவமொடு பரவையென வடியவர்கள்
பரவிவரு பரிசுபகர்வாம். (க)

வேறு.

கர்தவினைத் துருகியமு மடியார் தங்கள்
கண்ணினின்றும் போராத கண்ணே போற்றி

---

* தொடர்வரிய தென்றுபல சுருதிமொழி வீடுதரு
துவசமுனுயர்த்து வரவே. எனவும்பாடம்

போதலையும் வருதலையு மொழித்து ஞானப்
பூரணமாய் வேதிக்கும் புனிதா போற்றி (உ)

பொய்யர்க்குப் பொய்யான பூத பேதப்
பொருளாயு மிருளாயும் புரிந்தாய் போற்றி
மெய்யர்க்கு மெய்ஞ்ஞான வநந்தா னந்த
வொளியாகி வெளிப்பட்ட வேந்தே போற்றி. (௩)

ஆதியுமா யந்தமுமாய் நின்றாய் போற்றி
யாதியந்த மில்லாத வமலா போற்றி
சோதியுமா யிருளுமாய் நின்ற தூய
சொருபானந் தச்சுடரே போற்றிபோற்றி. (௪)

அனைத்துலகு நின்பாலா நின்றாய்போற்றி
யழிவாக்க மறநிறைந்த வாதி போற்றி
நினைத்தவடி வாய்நிகழ்ந்து நின்றாய் போற்றி
நினைவிறந்தா ருள்ளத்து நிதியே போற்றி. (௫)

காரணத்தின் காரணமாய்க் கழன்றாய் போற்றி
கண்களிக்கும் படிவந்த கழல்கள் போற்றி
யாரணத்தின் மெய்ப்பொருளா மறிவே போற்றி
யடியவரங் கைக்கனியா மமிர்தே போற்றி. (௬)

கல்லாமை கற்பித்த தாளா போற்றி
கண்ணிற்குங் கண்ணான கண்ணே போற்றி

சொல்லாமற் சொல்லிறந்த பரமானந்தச்
சுடர்திகழச் சொல்லவல்ல சோதி போற்றி. (௭)

ஆவியா யனைத்துயிர்க்கு நின்றாய் போற்றி
யறிவறியா மையைக்கடந்த வறிவே போற்றி
பாவியர்ப்பாவகத்தி னிருந்தாய் போற்றி
பற்றற்றார் பற்றநின்ற பற்றே போற்றி. (௮)

போகமும்வீ டும்புரக்கும் புனிதா போற்றி
போதுக்குப் போதுநலம் புதியாய் போற்றி
யேகமுமா யநேகமுமா யிருந்தாய் போற்றி
யெல்லாமா யல்லாத விறைவா போற்றி. (௯)

பரவுமவ ருளத்திருந்த பதியே போற்றி
பந்தமும்வீ டும்படைத்த பரனே போற்றி
யிரவுபக லறவருளு மெந்தாய் போற்றி
யிப்பரிசென் றியம்பரிய விறைவா போற்றி. (௰)

முத்திக்கு வித்தான முதல்வா போற்றி
மொழியிறந்த வானந்த மூர்த்தி போற்றி
தித்திக்கு ஞானகனத் தேனே போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (௧௧)

வேறு,

அன்னையை யினிக்காணு மே யடைந்தவர்க் கமிர்தாய் நின்ற
தன்னையே யளிக்க வல்ல தம்பிரான் போற்றி போற்றி. (௧௨

துய்யசே வடியான் மாயைத் தூகளறத் துகைக்க வல்ல
செய்யசே வகனே போற்றி சிவப்பிர காசா போற்றி. (கரு

இப்படி மறைக ளாலும் யாவரும் போற்ற வீச
னப்படி யிலாத பொற்று ளணங்கனார் வணங்கி வாழ்த்தி

வேறு,

அன்றால முண்டா னிவன்கா ணுமென்பா
ரருளல்ல வோவுள்ள தெல்லா மவன்பாற்
சென்று லிரங்கா திராளென்று செல்வார்
தெரியாது பெரியோர்க டிருவுள்ள மென்பார். (கரு)

அளியொன்று தோண்மாலை தரவேண்டு மானே
யஞ்சாது பின்செல்ல யாமார்கொ லென்பா
ரெளியன் கிடைர்நல்ல மெய்யன்ப ரோடே
யேத்திப் பணிந்தா லிவன்சால வென்பார், (கசு)

அங்கண்ண னென்பார் திருக்கண்க ளன்றே
வடிபேணு நம்மாவி யடுகின்ற தென்பா
ரெங்கண்ணின் முன்னேயிவ் விறைவன்க ணின்று
லெங்கே யொளிப்பே மிவர்க்கென் றுரைப்பார். (கஎ)

தனுக்கல்லை முன்செய்த தனிவீர னென்பார்
தன்காலின் வீழத் தடங்கண்க ளாலே
மனக்கல்லை யெல்லாம் வளைத்தாள நேரே
வல்லான்மு னெக்கல்லும் வளையாத தென்பார் (கஅ)

நாமாது முற்செய்த தவமென்கொ லென்பார்
நாமாதி தன்றன்னை நாவார வாழ்த்திப்
பாமாலை சாத்தும் பதம்பெற்று நின்றுள்
பாரீரி தார்பெற்ற பதமென்று பகர்வார். (கசு)

பொன்மேனி கண்டார்கட் ன்மேனி யாகப்
புரக்கும்பி ரானென்றல் பொய்யன்று மெய்யே
யென்மேனி பொன்மேனி யாய்விட்ட தென்பு
ரிப்பேறு பெறுவார்க ளியாரென்றி சைப்பார். (உ0)

வேறு.

முடியாதப தத்தை யளிக்கு
மொழியாமொழி யாளிப தத்தே
கடியார்மலர் தூய்த்தொழு கிற்பார்
கையென்னத வஞ்செய்த தென்பார். (உக)

மரணப்பிற வித்துயர் தீர
மருந்தென்று வணங்கி வணங்கிச்
சரணப்பது மந்தலை வைப்பார்
தலையென்னத வஞ்செய்த தென்பார். (உஉ)

புரணப்பரி பூரணபோதப்
பொன்மேனி புலப்பட நல்குங்
கருணைக்கழல் கண்களில் வைப்பார்
கண்ணென்ன தவஞ்செய்த தென்பார். (உங)

பேயாகிய வெம்மையு மாளும்
பித்தாவென வொத்தன பேசி
வாயாரவும் வாழ்த்திபி சைப்பார்
வாக்கென்ன தவஞ்செய்த தென்பார். (உச)

காயாலய மேவியி ருந்துங்
காணுமன் மறைந்துறை யுங்கண்
மாயாவெளி வந்தனை யென்பார்
மன்றுவெளி வந்தனை யென்பார். (உரு)

நீராயுகு வார்துதி செய்யா
நிற்பாருனை யிப்படி காணில்
வாராத பதம்பெற வேண்டேம்
வரமீதென வாழ்த்தியி ரப்பார். (உசா)

வேறு.

தேனனைய சொல்லியரு மாதவரு மிங்ஙனிரு
சேவடிந யந்துசெலவே
வானனைய வன்குமரை மாநகர்வ லஞ்செய்திறை
மாளிகை புகுந்தருளியே. (உஎ)

வடிவுகொடு வந்தவருள் கருதுதொறு மன்பரிரு
மலர்விழி வழங்குபுனலே
படிவதுவு மன்றிமிகு பரிமளசு கந்தமுறு
புனவிடை படிந்தருளியே. (உஅ

இனியவடி யார் துதியெ னமுதுசெவி யுண்ணவிழி
யிவர்களுயி ருண் ணு மிறையோன்
கனிபவள வாயுலக வமுதொழிப வின்சுவைகள்
கமழடிசி லுண்டருளியே. (உசு)

மருடரு பவஞ்சிதைய வந்தனைசெய் பூசுரரு
மாதவரும் வேதமெனுமா
புருடனும் விவேகனொடு பொன்மலர்கள் சிந்தியடி
போற்றிட விருந்தபொழுதே. (௩௰) ஆ ருஉள.

---

(ஒற்று.)

நியதியுரைத்தல்.

தீர்த்தனெனை யாளிதிரு முன்பிறை பதங்கடுதி
செய்துபணி செய்பவரையு
மேற்றநினை யாரையு மியம்பென விவேகனதி
காரிமை யியம்புமவனே. (க)

வேறு.

சுருதி யாயிரமு கங்கள் கொண்டிறைவ
தூய நின்கழல்கள் பாடுமே
மிருதி யாகமபு ராண கீதையிதி
கர்ச மப்பரிசின் மேவுமே. (உ

அமையு மாறறியு முனிவர் பேணுவது
நின்னை யேயயலி ராமையால்

சமய மாறுமொரு நின்னை யேயிறைவ
தாமுவந்தபடி தாழ்வதே. (௩)

நாளு நாளுநினை யஞ்சி வானமிசை ஞாயி றுதிவரு கின்ற
வெக், கோளு நாளுமுன நீவி திந்தவழி யென டப்பர்குலை
யாமலே. (௪)

உழலு மாருதமு மிறைவ நின்றுவலி
செய்வ துன்வலியை யுட்கொடே
யழலும் யாவுமடு வதும டைத்தபணி
யென்று நின்னடி களஞ்சியே. (௫)

வருண னின்றுபணி செய்ய நின்னைமிக
வஞ்சி நெஞ்சினிடை வள்ளனின்
சரண பங்கயமி லாரை யேகொடுமை
செய்வ துந்தருமராசனே. (௬)

ஏத்தி யெண்டிசையி லமரர் யாவருநின்
னேவல் செய்யுமவ ரின்பமா
மூர்த்தி நின்பணிய லாது வேறிலது
மூவ ருஞ்செய்துமு டிப்பதே. (௭)

விண்ணு ளாருமவர் கோவு மற்றுமுள
வேறு வேறுலகினி யாவரு

மண்ணு ளாருநினை யன்றி யாவரை
வணங்கு வார்கருணை வள்ளலே. (அ)

வேறு.

ஏகநின்கழ லேவல்செ யாதவ ரில்லையே
மோக னின்கழ லேவல்செ யானென் மூர்த்தியே.

ஆகூ ருஙசு.

தூது.

மோகனெனு மைந்தனை மேவல்செய வென்றுநல
மொழியவல நியாயமகனைப்
போகவென வங்கவனை யெய்தியவ னேதுமருள்
செய்தவைபொ ருந்தும்வகையே. (க)

உன்னில்வலி மிக்கவர்கண் மோகவர சேயொரு
சுராசுரரு மில்லையுலகத்
தென்னினு நினக்குறுதி யாவதுவி ருப்பினெடி
யான்மொழிவ தற்கிசைவதே. (உ)

வேறு.

அழியாத நீதி யறியாத மோக
னவன்வந்து சேர்வ னெனவே
வழியாறி னென்றின் மதியான நீதி
மகன்முன்னி யேவன் மொழிவான். (ங)

வேறு.

மங்கையொரு பாகனொடு மாலயன தாலயமு
மாதவர்கண் மன்னுவனமுங்
கங்கைநதி பொன்னிநதி கன்னிநதி யின்னுமுள
நன்னதிக ளின்கரைகளும் (ச)

இயமநிய மாதியெனு மெண்வகை யியோகமு
* முயற்சியொ டியற்றியிடர்தீர்
சயமுனிவ ரானவர்கள் சாந்திமுத லாரொடு
தனித்தனியி ருக்குமிடமும். (ரு)

பாதமிறை யோனருளி லேயகில வுயிருருவு
பமையவறி வாவதெனுநால்
வேதமிறை யாகம புராணமிதி காசமுடன்
மிருதிகள்வி ளங்குமிடனும். (சா)

தூரதர மானகலை சாரதர மானவை
தொகுத்துமுனி சொல்லியமகா
பாரதமும் வேறுமுள வேதநெறி மாதவர்
பகர்ந்தனவ ழங்குபதியும். (எ)

சாதனச துட்டய நலந்தனை யலம்பெற
வடைந்தவர்க டன்னையறியும்

* அருத்தியொடு எனவும் பாடம்.

வேதன விருப்பினர் பொருந்துமிடம் யாவையும்
விவேகனர சாளுமிடமே. (அ)

என்னுடைய நாதனருள் செய்தவிவை விட்டிதம்
பூமிபுகின் மோகவரசே!
யுன்னுடைய வர்வியுன தாகுமுறை செய்தி
னுணர்ந்துகொ ளுனக்குறுதியே. (கூ)

காதிவரு மாறுசம யக்கடவு ளாகுமிறை
கண்ணுதல்மு குந்தனயனென்
ருேதிவரு தேவர்களு மாகநினை யாதவர்க
ளும்பனவ னென்பதுணரே. (ம)

உதித்தகுல னென்றிறைவ னுக்கிருதி றத்தவரு
மொக்குமென வோர்பொழுதுநீ
மதித்தமொழி யோர்குல மறம்பெருகு மைவரு
மறம்பெருகு நூற்றுவருமே. (கக)

வேறு.

குவளை யாம்பலர விந்த முற்பல குலங்களே தருச லங்களே
தவளை யாமைசட முதலை நீரரவு தன்னை யுந்தருவ தன்னி
லே. (கஉ)

தெருளு றும்படி விசும்பின் மீதுலவு திங்க ளுயிறுங்கோ
ள்களே, யிருளு றும்படிய தன்க ணேயுலவி ராகு கேது
வுங் கோள்களே. (கங)

கறுத்த தாயினு நிகர்க்க நின்றிலது
கோகி லத்தினொடு காகம்வெண்
ணிறத்த தேனுமட வன்ன முங்குருகு
நீரில்வாழினு நிகர்க்குமே. (௧௪)

மலைய முங்கயிலை யிமைய மந்தரமு மலைக ளேபிறவு மலைக
ளே, மலையின் மங்கைகலை திருவ ருந்ததியு மகளி ரேபி
றரு மகளிரே. (௧௫)

வேறு.

கங்கை காவிரியு நதிகளே காளி யாறுகளு நதிகளே
மங்கை பாகனுங் குரவனே மற்று ளார்களுங் குரவரே.

நந்த கோபன்மகன் மனுடனே நாட்டி னுள்ளவருமனுட
ரே, யிந்து சேகரனு மீசனே யேனை வான்வரு மீசரே.

வேறு.

சொல்லே மறையும் பிறவுஞ் சொலலே
சுடர்மா மணியுஞ் சுரனுர் மலையுங்
கல்லே பிறைபே னும்விவே கனையுங்
கருதா நினையுங் கருதிப் படியே. (௧௭)

கீழ்மே லுளதோ விறைவர்க் கெனினீ
யவருக் கிலகே டறுசெய் யமலர்த்
தாண்மேல் விழுமா தவர்மே லவர்கீ
ழவரார் குவர்தா ளில்விழா தவரே. (௧௯)

நீயும் பெருமா னடிபே ணுதியே
னெடுவா னுலகங் களுநின் னரசே
யாயும் பருநின் னேவணங் குவர்நீ
யறிகின் றிலையெந் தைதனு ரருளே. (௨௧)

வேறு.

என்று நின்றவ னியம்பவழ லென்னவிழியா
வேக னேவல்செய்வி வேகனர சாளவரவே
நன்று நன்றினிவி வேகனல நம்பகைவனன்
றுத னென்றிவன்மொ ழிந்தவன மக்கெதிரியே.

மோகன் யானெனது தந்தைமன னிந்தவுலக
மூன்று மென்றனர சாக்கினன்மொ ழிந்தவிறை
னேக னும்மவனி னென்னிவிக விற்குவலியார் [யோ
யாவ ரென்றினி யியம்புகவெ னக்கிசையவே. (௨௨

வேறு.

ஓதியொ ருத்தனல்க வதனத்தை நல்க
வரைமார்பொ ருத்தனுடலிற்
பாதியொ ருத்தனல்கமகளிர்க் கொறுத்த
படைமாரன் யாவர்படையே. (௨௩)

அரியர னென்றுகூறு மறிவோ ரரக்க
ரசுரேச ருர்களமர்செய்
தெரியெழு வித்தகோப னெனதேவ் லன்றி
யெவ்ரேவல் செய்வதிசையே. (௨௪)

சிறியனு மாயிரக்க நெடுமால் சிறந்த
பரமீச னனசிவனே
வறியனு மாயிரக்க வடலோப னின்று
வலிசெய்வ தார்சொல்வழியே. (௨௫)

வேறு.

அதமன் னசமன் னதன்மன் னசுபன்
னதபன் னபரன் னகிர்பன் னபமன்
மதனுன் மதன்வஞ் சகன்விஞ் சிபதுன்
மதிசம் ப்ரமன்மந் தனென்வம் சகனே. (௨௬)

ஆகா தனசெய் பவன க்ரமனு
பாசன் னபிமா னியபா யனகன்
சோதா கரனு குலிதுக் கசுகத்
தொந்தந் தருவிப் ரமனர் துணையே. (௨௭)

குரூரன் குருநிந் தகனந் தன்மகா
குபிதன் கிர்பணன் துவிர்தன் னவிர்தன்
சோரன் பரிவா திசுகிர்ப் பிசிதன்
சுரவிர்த் தனதி ப்ரமனர் துணையே. (௨௮)

தேகன் பரதுக் கசுகன் கபடன்
செடிலன் குடிலன் டம்பன் விடயோச்
சாகன் னிதிசா கசிகன் னசகன்
சபலன் விபலன் னிவரார் தமரே. (௨௯)

கோரன் வெகுமா னிருடும் பதரான்
குணாநிக் ரகன்விக்ரகமே வியசிங்
காரன் னவசன் விவசன் கலகன்
கலன்மத் யமனுர் படைகட் டுரையே. (௩0)

வேறு.

அஞ்ஞசன சங்கமனு மார்யசன நிந்தகனு
மந்தரனு மந்தணர்மகா
வெஞ்ஞபரி யாசகனு மான்மபரி மோசகனு
மெக்கள்படை யென்றுகருதே. (௩க)

விந்தியத ராசதனு முன்மத்த தாமதனு
நிட்டுரனு மித்ரசடனு
மந்நியப்ர தூஷகனு மதன்மப்பிர சஞ்சகனு
மப்ரதனு மியாவர்படையே. (௩உ)

அநர்த்தவிட யத்திலநு போர்தமெனனு நீசனு
மநர்ச்சகனு மிந்திரியகனு
மநித்தியசுக சங்கதனு நித்தியசுக வர்ச்சனனு
மாகுமிவர் யாவர்படையே. (௩௩

பயப்ரதன் மகாசனபராயணன் மலன்பர
தனக்கிரகண பண்டிதனொடே
பயக்யனு மெசப்பரி நிவர்த்தகனு மஞ்சனு
மச்சனனு மியாவர்படையே. (௩௪

மனோரதனு மத்ருவனு மாதுர்பிதிர் வஞ்சகனு
மச்சரனு மாதருடனே
வினோதனு மசற்பரனும் விவாதனும் விகற்பனும்
விதர்மகனு மார்விதயரே. (௫௫)

வேறு.

அதிப்ர தாபனு மதிப்ர மாதனு
மனர்த்த யேதுவு மபத்தனு
மெதிப்ர கோபனும் வெகுப்ர லாபனு
மிருக்க யாரெனை யெதிர்ப்பரே. (௫௬

சிநேக சாகசன் னித்திப வர்ச்சன
னீதி வர்ச்சன னித்திய சேவகன்
றேக போஷணன் போக பூடணன்
வேத தூடகன் யாவர் சேனையே. (௫௭)

வேறு.

சுற்பி பாசா பரவசன் றுர்ச்சனன்
சுத்ர கன்மன் குதர்க்கன் கிருதக்ன
னற்ப சார னனந்ததுக் காகர
னநிர்த நிந்தக னார்துணை யாவரே. (௫அ)

அப்ர சன்ன னசுசிய சாந்தக
னசற்ப்ர லாப னநித்ய நியமிதன்
விப்ர தூடகன் வேதப ராமுகன்
விடய சம்முகன் யார்படை வீரரே (௫௯)

பிராண யிம்சா பரன்பர தார
பரன சூயா பரன்கர ஞசவாக்
கிராண ஞசா பரன்பர தந்திர
ஞட்சே பன்னுத்தி கன்னர் கிளைஞரே

தூட ன்னதி கண்டக னிட்டுரன்
றுக்க மன்றுக்க சிந்தகன் றாடணு
பாட னன்பர போகவி வர்ச்சகன்
பஞ்ச பாதகன் யார்படை வீரரே. (சக)

நிலையி லாமதி மானவி வேகியா
நிதம்ப னிஷ்ப்ரியன் விக்ரக னிச்ரக
னலைய ரூதசம் ப்ரமஞ ரம்பக
னவய வத்தித ஞர்படை யாவரே. (சஉ)

வேறு.

உய்ந்து போக வுபாயமுன் டேநமக்
கைந்து பூதமு மென்படை யல்லவோ (சஙு)

வேறு.

தேவர் வென்றிலர்பு லன்க ளைந்தினையு
முனிவர் வென்றிலர் சிறந்துளோர்
மூவர் வென்றிலர் சகத்தில் வென்றவர்கள்
யாவ ரென்றினி மொழிந்திடே. (சச)

வேறு.

என்ப டைப்பெருமை தானுமிறை யோனுமுனி
யாரு மிங்கறிவ ரெண்ணமில் விவேகவாசன் [வோ

றன்ப டைப்பெருமை யானறிகு வேனதறியான்
ஞன்வ ரச்சொலிறை யைக்கொடுபொ ரச்சமரமே
தூது முற்றிற்று. ஆ ருஅக.

மோகன்படையெழுச்சி.

அறிவி லாமதிவி வேகனொட வன்றலைவனுக்
கறிய வோதென விடுத்தவனை மோகவரசன்
குறியி லாமை கிளர்காமனுட னெண்ணவருவெங்
கோபலோபர்படை கொண்டெழுக வென்ற பொழுதே.

வேறு.

எமைவிடு மெமைவிடு மெனவு ரைத்துவே
லெனவிரு கணையென விழிசெ லுத்தியே
சமைவர்க ளரிவைய ரொருக ணத்திலே
சதுமறை முனிவர்க * டவம ழிக்கவே. (௨)

ஒடிபட முனிவர்தம் விரத முற்றுரு
துலவுவ ரொருகையொ டொருகை தட்டியே
வெடிபடு திருநகை நிலவெ றிக்கநீள்
விழிசுட ரிருகுழை வெயிலெ றிக்கவே. (௩)

துடியிடை யினுமிகு மிருத வத்தினோர்
துணிபுற விணைமுலை மலைதொ லைக்கவே

* தவமிழக்கவே எனவும்பாடம்.

படியிணை பணியுமி தழகு மக்கெனு
வணிபரி புரவரி பொலிய மைக்குமே, (௪)

சடைசில புனையினென் மயிர்ப றித்திது
தவமென வுடைதவி ரினென்ம ழிக்கினென்
னுடைசில புனையினெ னுடைநெ கிழ்த்துமுன்
னுலவிய மகளிர் நும் முளன ழிப்பரே. (௫)

புலவிய லொருவிய புனிதர் புத்திகூர்
புலவியி லழிவகை புரித லுற்றுநீள்
கலவியின் விழவடு கரிம ருப்புநேர்
கனதன வரிவையர் கலக மிக்கதே. (௬)

குருகெழு தடமல ருகும ணற்குவால்
குயிலக வியபொழி லிசையிளைத்தகா
லுருகெழு மலரணை நிலவு முற்றுமா
லொருபடை முனிவரை யுணர்வ ழிக்குமே. (௭)

வேறு.

கோங்கரும்பு முலைமடவார் சூழ்போகவேண்மகரக்
கொடிமுன்போகத்
தீங்கரும்புச் சிலைமலரும் படையெடுத்துத் தென்றற்றேர்ச்
சென்றபின்னே. (௮)

இடிபோலு மிகற்றேர்மே லெழிற்படைகொண் டெரியெங்
குங் கொளுத்தித்தூமக்

கொடிபோகக் கொடுமைகொலை பழிபாவஞ் சூழவெழக்
கொடியகோபன். (கூ)

வேறு

ஒழிவறு முணர்வை யுளத்துளே
யுடையவர் தமையு மிமைப்பிலே
யொருவரோ டொருவர் சலிக்கவே
யுட்லடு மமரை விளைக்கவோ
வழிவரும் விரத மழிக்கவோ
வருமறை நெறியை யழிக்கவோ
வணைபவர் தமையு மொறுக்கவோ
வதிபய மிகவும் விளைக்கவோ (0)

அகலிட முடிய விடிக்கவோ வசலமு மலைய வலைக்கவோ
வலைகடல் சுவற வெரிக்கவோ வமரர்க ளுலக மழிக்கவோ
விகலெனு மெரியி லுழற்றியா ரிருபரு திகளு மொளிக்க
வோ, வெரியினு மழல விழிக்கவோ வெனவிங் ளிளொரு
ரிசைக்கவே. (கக)

வேறு,

ஆசையின்ப மேவிமீள்வி லாதகாத லாகுமே
ரோசைகுன்ற லோபனேகு மாண்மையாவ ரோதுவார்
புகைப்புகா விடங்களும் புகுந்து நன்னை யாவருந்
திகைக்குமாறு நிற்கவல்ல தீரனிந்த வீரனே. (கங)

செய்தவங்கொ டைக்குலஞ் சிறந்தகல்வி செப்பல்போய்க்
கைதவங்க ரப்பிரப்பி வன்படைக்க லங்களே. (கச)

வேறு

மதமாச் சரியா திமகா ரதரோ
ரொருவற் குளதாம் வலிசேர் படையின்
விதமார்க் கியலுஞ் சொலமே லெழின்மேல்
விண்ணென் றிலைநிற் பதுமே தினியே. (கரு) ஆ ருகககூ.

வேறு.

மோகனெழுச்சி வஞ்சி.

எள்ளின் றுணையும் புரையற் றுலக
மெங்கும் மிருண்மூ டவெழும் படையின்
வெள்ளம் பகரும் படியோ வினியவ்
விறன்மோ கனெழுச் சிவிளம் புதுமே. (க)

ஒண்முத் தன்மலர்க் கழலிற் பணியா
வொருமுத் தனுவந் தமடந் தையர்தங்
கண்முத் தணியத் தடமார் பணியுங்
கதிர்முத் துவடங் கள்கவின் பெறவே. (உ)

காலிற் கழியா முனநாள் பரமன்
காலிற் கழியாது கழிந்துயிர் போங்
காலிற் கழுகுண் டுவிடப் படுதன்
காலிற் கவினக் கழல்கட் டினனே. (ந)

மன்னுந் தவமும் புகழும் மரபு
மாறு வருளும் மணியா தழியும்

பொன்னுந் துகிரும் மணியும் பணியும்
பூணென் றுநினைந் துபுனைந் தனனே. (௪)

வேறு.

அத்தற்ப தப்பொருளி னற்பொற் பதத்தையறி
வற்றுப் பொரக்கடவனு
மத்தப்பிர மத்தனினி மற்றுப்பொ ருப்பிலதென்
மத்தக்க ளிற்றின்வரவே. (௫)

வேறு.

வருபிறவி மாறவல குரவனடி பேணுமிது
வொழியமதி மாறுபடுவோ
னிருபுறமு மாரவரு கழுகிறகு போலவரு
மிருகவரி வீசிவரவே.

வேறு.

மதித்தொரு தனக்குள நலத்தினையு மற்றவர் வழுக்கினையு
மே, கதித்திரு புறத்தினுமெ டுத்துள தனிக்குடை கவித்
துவரவே. (௭)

அழக்கிளரு ரின்புறு மணப்பறை கணத்தது பிணப்பறை
யுமா, முழக்கினை யறிந்துமறி யாவரசன் முற்பணை முழக்கி
வரவே.

கூற்றன மதக்கரி கொடிப்புய லணிந்துவரு குன்றனைய
தேர், காற்றன கடும்பரி நெருப்பென வமைக்கடல் கடுப்ப
வரவே, (௯)

வேறு.

எச்சில்காண லாவடிசி விட்டவாழி தான்மன்றய
விட்டநீறு மார்நிறைய விட்டபூண நூலினுடன்
மிச்சிருனு ஞவிரத விப்ரதீப ஞமனென
வித்தைசால வேகுலவு விப்ரர்கோடி சூழ்வரவே. (க0)

இட்டவேசி மார்கள்பெறும் வித்தையாசை யாலகல
வெக்யசாலை கோலியதில் யக்ஷமாண ராய்வடிவு
சிட்டவேட மாகமுடி தர்ப்பமாலை யோடுவெகு
செற்பவாய ராகிவரு விப்ரர்கோடி தேவர்வர (கக)

அப்ரகாச மாகவிடு மக்குமாலை யாபரண
வச்சிமார்கள் பானமதி லப்ரபோக ராயதிக
சுப்ரகாச நாமமொடு சுத்தமான ஞானபரி
சிட்டர்போல வேவருவர் கட்டசோர வாமிகளே. (கஉ)

உட்கியாரு மோடும்வகை துட்கசூல வேலரிண
முற்றகோடு தாமிருகை பற்றியோடு வார்மனிதர்
கட்கினுத கோலமொடு கட்குவாலு ஞவதெதிர்
கக்குவாய ராகிவரு கட்டவேட தாரிகளே. (கங)

சித்தியாகு மாகநல செக்கராடை மூடியுடல்
சிட்டாகி மேவினவர் சித்ரநாரி மார்ககளாடு
புத்தியாகி யேபுலவு புத்திநாடி வீடுதொறும்
புக்கபூசை போல்வருவர் புத்தகூட வேடர்களே. (கச)

இட்டநீறு காணிலெதிர் முட்டெனுவ டாவகைசெய்
யட்சசாத னுமுகம திட்டுவாதி யாமுதிய
கட்டமான நாரியர்கள் பக்கலாசை கூரவதி
கட்டமாக நாலுமரு கத்துராலர் சூழ்வரவே. (கரு)

ஆ. சூாயிகை.

விவேகன்படையெழுச்சி—காஞ்சி.

இப்பரிசு மோகவர சன்படை யெழக்கடிது
சென்றிறைவர் தஞ்
செப்பரிய சேவடி பணிந்திறைவர் தூதனுரை
செய்தபொழுதே. (க)

வேறு.

சிறிது சிவந்தில திருநய னங்களோர்
சிறுநகை கொண்டிறையோ
னறிது மவன்படை யெனவுல குண்டருள்
பவள மலர்ந்ததுவே. (உ)

அதிரத முங்கட கரிபரி யும்பரி
வரமும ணிந்தெழுமே
யெதிரெதிர் முந்தியொ ரேதில வன்படை
யெழுகவி ரைந்தெனவே. (ங)

இறைவன் விடும்படை யுடன்மன மைந்தனு
மிவனொடெ ழும்படையு

ளுன்றயிட நின்றில வள்வறி கின்றில்
வுபநிட தங்களுமே. (௪)

வேறு.

பாகென்மொழிபவ ராகமுறவரி பாசமிறவற வீசியே
கர்கமவருட லேறவிறுவகை நாதன்மதகரி காணுமே. (௫)
உலகிலொருவரு முணரும்வகைபற வுயர்வதறவுயர் வுடை
யவா, யிலகுமொருபது திசையுமிகலற விடுமெவ்விறையவ
ரிரதமே. (௬)

வேகமிகுபணைக் கிரிகலற மீளவடியினில் வீழவே
மாகமுடியினும் வீரர்கிளைவினில் வாளிவிடுமிறை வாசியே
தாவுபலபரி வீரர்பொரவெதிர் சாரிலவர்தலை சாயவே,மேவி
யிமையுறு போதினுடலுயிர் வேறுசெயவல வீரரே. (௮)

இருண்மை யையுமிற வெறியு மிறையடி
யவர்கள் குணவனு லேசினற்
பெருமை திறல்பொறை வலிமை யளிவெளி
யொளிமண் வளிபுனல் பெறுவதே. (௯)

வேறு.

வினையை நீறெழவி ழிப்பரேபிறிதில் வினையெலாமிற மிதி
ப்பரே, நினையு மாறறவெ திர்ந்த வாருயிரு நீரெனப்பரு
கி நிற்பரே. (௰)

யகலு மெல்லியும்வ ரம்பிலாவுலக னைத்தை யுந்திசைகள்
யத்தையு, மகில பூதரையும் வாரியேயயில வல்லரோரொரு
வர் தாமுமே. (௧௧)

அண்ட காரணமு மாவிகாரணமு மாதி காரணமு மகிலமுங்
கண்ட காரணர டங்கவேவொரொடு மறுப்ப ரேயொருக ணத்
திலே. (௧௨)

இரொ ருத்தருணர் விற்குரைக்களவி டப்படாதவுரு வுடை
யரே, யாரொர் ருத்தரிவ ரொப்பர்தம்முடைய நாயனுமொரு
வரன்றியே. (௧௩)

வேறு.

கூற்றையோ விலக்குவது கொடியவர்வெங் கூற்றினையே
காற்றையோ நிறுத்துவதுங் கடியமனக் காற்றினையே. ()

சிலைகளையோ வளைப்பதுதான் வன்னெஞ்சர் சிரங்களையே
அலைகடலோ தூர்ப்பதவ ரளவில்பவக் கடல்களையே (௧௫)
அல்லையோ பகல்செய்வ தறிவிலா ருளத்தினையே
கல்லையோ கனிசெய்வ தவர்கண்மனக் கல்லினையே (௧௬)

கொல்விடமோ நுகருவது கொம்பனையார் தம்போக
வல்விடமே நுகர்ந்தாலு மயங்காம லிருப்பர்களே. (௧௭)
படநாக மோபூண்பார் பார்வைமுத லைம்பொறியாம்
விடநாக மைந்தினையும் பூண்டுவினை யாடுவரே. (௧௮)

கொழுங்கனலோ வவிக்குமது கோபமெனுங் கொடுங்கனலே, வழங்குவது மழிபொருளோ மறைதேடும் வான்பொருளே. (கசு)

அடலிலர்வ் ருமவ்வொழிப்த் தாழ்விப்ப தடியனைபேர்
முடலையுட லேவறுப்ப ததன்மூல வுயிரினையே. (உ௦)

உரியநல வடிவவர்க டம்பெருமை நம்முணர்விற்
றெரியுமென யாஞ்சொலிய சிறுமையே சிறுமையதே. (உக

வேறு.

அல்ல தங்கவர் பெருமையை யருமறை கொழிய
வல்ல தன்றான் முகுந்தனும் பிரமனு மாட்டார். (உஉ)

இடையி லாரறிந் துரைப்பவர் தாமினி யிவரை
யுடைய நாயகன் பெருமையை யோதுவா ருளரே. (உங

வேறு.

கம்ப னல்லடி யார்புடை சூழ்வர நாப்பணே
செம்பொன் மாமணி வைதிகத் தேர்மிசைச் செல்லவே
என்ன ரந்தைகெ டும்படி செய்தரு ளெம்பிரான்
முன்ன ரந்தா துந்துமி யெங்குமு ழங்கவே. (உ௫)

சலைக டந்தம திநிக ரல்ல கவிகையவ்
வலைக டந்த மதிநிறை வேநிக ராவதே. (உசு

இவண மென்றெழு தற்கரி தாமெழி லன்னமே
றுவண முங்தொழு ஞானநெ டுங்கொடி யோங்கவே. (உஎ)

காம னும்படை - யுங்கெடக் காணுநி ரூபக
ஙாம னும்படை யுஞ்செலு மெங்கணு நாடியே. (உஅ)
பொறையு மின்சொன் முதல்வரு தானையும் போகுமே
யறையும் வெஞ்சின மும்படை யுங்கட் டழியவே (உகூ)

வேறு.

தோஷா காரு கியலோ பனுடன்
றுயரப் படையுந் தொலையும் படிசந்
தோஷா திகள்செல் லமதா திகளுந்
தொலையப் படைசெல் வகைசொல் லுதுமே. (ஙூ)

அமதன் சுகன்மௌ னியசிந் தகனப்
பிரதிகூ லனதிட் டபரன் னியமன்
யமனின் மமனின் மலனித் தியபரன்
பஞ்ஞன் யதிபூ தகிதா கரனே. (ஙக)

பிட்சா சனன்வை திகதன் மன்மகா
பெலனிந் தியநிக் ரகனுக் ரதபன்
னட்சா ரனவே கனகெர் வியநா
யாசன் கிர்தகிர்த் யனநிந் தகனே. (ஙஉ)
தன்மன் சுகிர்தன் சுகிர்தஞ் ஞனசஞ்
சலன்வீ ரியனபிஞ் ஞனசம் ட்ரமனிட்

கன்மன் கவிசந் திகிர்பன் சுகுணக்
கிரகணன் பலகன் மவிவர்ச் சிதனே. (௱௩)

வேறு.

அவாதியபயனசுலப ஞத்திக னவிக்ரகன்
சின்மய னித்தியவிரதன்
சிவாதிபரி பூசதர தனகிர்பண ஞாதி
சீலனதி தாகசமனே. (௱௪)

பாவகன யிஞ்சகனி வர்த்தனன கனவிசன
வர்சிகுரு பத்மபதசச்
சேவகன நிட்டுரன் விரத்தனவ தானனதி
தீரனதி நிச்சலனுமே. (௱௫)

உத்தமன் சேவகனு தாரனல சாசனி
சுதர்ரனப ரிக்ரகன்மகா
சத்தியபர் னிற்பிருகன் மிதாசன னடம்பனவி
காரிகுணி சத்யதபனே. (௱௬)

சுமந்திர னசலன் னகலன நபிமானி
சுகதன்சு மனசன் சமன்
றமனமச் சரன்விசுத் தன்னநக னற்கபடி
தானமிர்த சங்கிர கணனே. (௱௭)

வேறு.

அருபன் னித்திய னநித்திய நிருபணன்
சொருபன் சுத்தன் சுதந்த்ரன் சுவசனே. (௩௮)

வேறு.

விபரீத பரன்னநசூயன்
விவகார பராமுக மித்ரன்
னபராத கீனன தொந்த
னசோகன்பல சாதன னப்ரமனே. (௩௯)

வேறு.

எந்தப் படையுண் டிகன்மோகர்க் கெழிலார் விவேகர்க் கோரொருவ, ரந்தப் படையைத் துணித்தடுக்க வல்லா ரிவ்வா றநேகரே. (௪0)

வேறு.

பாதமுதல் வன்றர நிகழ்ந்தபரி பூரண பதங்களிலொரைம் பூதமு மறைந்தற நிறைந்துபடை நின்றநிலை யென்புகல் வதே. (௪௧)

செடிதரு முடற்கொடு மனித்தர்கடி வத்தன
மெனக்களி மிகுத்தனர்சிவ
னடிதரு நலத்தன மெனச்சுரர் களித்தனர்
நிலத்தவ ரடித்துகளினால் (௪௨) ஆ. ௬௫௩.

விவேகன் படையெழுச்சி முற்றும்.

தொந்தயுத்தம்—தும்பை.

சந்தி யாதமு னிரண்டுபடை யுங்குதறுபா
ஷண்டர் சங்கமதி ரச்சகல வேதமுடனே
நிந்தி யாமிருதி யாகமபு ராணவிதிகா
சாதி சங்கமொரு கோடியெதிர் நின்றதிசவே. (க)

வார மாகவொரு மோகனர சாளவெனவே
வைத்த வந்தமன மன்னனையு மாயையுடனே
யார மார்முலை யவிஞ்சைமுத லாக்கினவரே
யழிய வும்படை வகுக்கும்விர காரறிவரே. (உ)

ஆயு மாறரிய மாயைமுத லெண்ணவரிதா
மகில சேனையுயி ராதியவை யங்கொழியவே
வீயு மாகினும் விவேகன்விடு சேனைபொருதா
வெற்றி கண்டுவிளை யாடலை விரும்பிமிகுமே. (ங)

மாளு மோகனை விவேகனழி யென்றுமனனு
மாயை யுந்துணிய வாளுமிரு தாளுமுடையான்
வேளும் வேகனு முலோபனு முனைபடைபோய்
வீய வேநிருப கார்திபடை யேவிவிடவே. (ச)

இலங்கு மெய்ம்மைகொடி யாகவுள தேரினையுன
மென்னும் வாள்கொடு நிருபக னடக்கவெதிரே

கலங்கி நம்மடியில் வீழும்வகை சூழ்குவமெனக்
காம வேள்விடு கொடிப்படைக ளித்துவரவே (ரு)

ஊண முள்ளன வொழிப்பவர்க ளாகியுடன்மே
லுள்ள குற்றமுறை யாமலுறை செய்வரதனுஞ்
ஞான முள்ளவர் விளங்கவரு நம்படையினின்
னுரி மார்படை நமக்கென நகாமொழியுமே. (சு)

வேறு.

தூற்றி யவர்கட்டி னுமது தோன்றுமற்
போற்றி யவர்ப்பேணும் புல்லர்க்குச் சொல்லுவாம். (எ)

நீராட்டி வந்தவர்க ளன்றே நிரந்தரமா
வோரட்டி வந்தமண மெல்லாம் வெளியிட்டார். (அ)

கர்ம்பட்ட தோளியர்க ளன்றேவிக் காயத்தைப்
பூம்பட்டி னன்மறைத்துப் பொல்லாங் கறிவிப்பார் (கூ)

நாவி யொழுக வருவார் நடைப்பிணமென்
றாவி யொழுகுவதன் முன்னே யறிவிப்பார். (௰)

காயிலை கத்தூரி கருப்பூரங் கொண்டன்றே
வாயின் மணத்தை யறிவிப்பார் மாதரார். (கக)

புல்லித் துறக்க வறியாரைப் புல்லியவே
சொல்லித் துறப்பிப்பார் தூய்மொழியா ரல்லரோ. (கஉ)

பந்தக் குரம்பைப் பழுதெல்லாம் பாரோர்கட்
கெந்தக் குரவ ரிவர்போ லறிவிப்பார் (கங)

வேறு

இலகுமுத்துச் சுடுபுறத்துப் படுபெறுப்புத் தொடர்களே
கலகமைக்கட் கணைகளப்பிற் குமிழியொத்துக் கழிபவே.

முருகுபுத்தப் புதுமலர்ப்பொற் புறமுடிக்கிற் கமழ்வதே
கருகுகற்றைக் குழலொடுக்கிற் பழையசிக்குக் கமழ்வதே ()

அணியின்மிக்குத் திகழ்தனப்பொற் பதுமக்ழ்த்திற் றசை
களே, துணிபினத்தொக் கணுவிழிற்சற் றதுபுழுத்துச்
சொரிவதே. (கக)

உடைமறைக்கப் படுமழுக்கப் புடனொழுக்குத் துளைகளே
கடகளிற்றுச் சிரமென்மத்தக் கவிகள்கத்தக் கடவரே. ()

அடிதொடக்கிச் சுரிகுழற்கொத் தளவுபுத்திக் கருவரா
விடமொரெட்குத் தளவுகிட்டிப் புகழுமற்றெத் தனையுமே.

புலவுகக்குப் புழுமலப்பைப் புறமறிக்கிற் புவியிலார்
கலவியுற்றுப் பெரிதுவக்கக் கடவர்சுற்றிக் கழுகலால். (கக)

துரிசுரைத்திப் பரிசின்மைக்கப் படைபைமுட்டத் தொட
ரவே, தெரிசனப்பொற் றிகிரியுட்குற் றனர்கருப்புச் சிலை
யரே. (உ0)

வேறு.

புணர்விற் கானநிலாமதி புகுதக் காணுயர் மேனிலே, புன
ன்மிக் கார்தட மேவிய புளினப் பூதர நாண்மலர், மணமிக்
கார்குளிர் சோலைகண் மகிழுப் பாடிய வேழிசை, மலயக்
காலிவை யாவையும் வரவிட் டானிகன் மாரனே. (உக)

சீதத் தாலினி தேயழ றீமிக் காலினி தேருளிர்
தேனித் தார்வன வேபசி தீர்வுற் றுலில தேசுவை
பேதெத் தாலினி தாமென வோர்வற் றேயவீ வேகிக
ளேமத் தார்மல பாமிவை காமுற் றுரென வோதியே,

வேறு.

வேனி ளுதன்வர விட்டபடை வீயநலன்மெய்
விழியெ னுந்திகிரி யைக்கொடு நிருபகன் வெறுங்
கான னீரினி லெழுந்தநி னெழுங் குமிழிமின்
கனவி னிற்கனவு போலழிவு கண்டுவிடுமே, (௨௫)

விட்ட விட்டபடை யாவையு மழிந்துவிடவேள்
வெறுங்கை யோடுபொர மேனிகொடு செல்லவிருதோண்
முட்ட விட்டெழி னிருபகன் விளங்குமறிவா
மூளரி யங்கையின் முருக்கினன் முடித்தலையையே (௨௪)

வேறு

பாப ராசிமுத லானபடை கொண்டுபொரு பாதகக்
கோப ராசனை யரும்பொறை யழிக்கும்வகை கூறுவாம். ()

வேறு

இனத்தையறுத் தறுத்தெறியக் கறுத்தெரியிற் சிவத்தே
சினத்தவகத் தினைச்சிதையப் பனிக்கதிரிற் சிரித்தே. ()
கதிக்குமொழிக் கனற்கடுகக் கெடக்குளிரக் கதித்தே
கொதித்தமனக் கனற்கினிமைப் புனற்குளிரக் கொடுத்தே.
அறுத்தழலிட் டருத்தில்வினைப் பலத்தைதினைத் தசித்தே

யொறுத்ததனைப் பொறுத்துநலத் தினைப்பெரிதுற் றொறுத்
தே. (உஅ)

வேறு.

கோபனைப்புறன் காணக் கொலைபழி
பாப முற்றுந் துகளெழப் பட்டதே. (உகூ)

தாபந் தீர்தரு சந்தோ டன்கொலும்
லோபன் பட்ட பரிசுமு ரைத்துமே. (௩0)

வேறு.

தொகுத்தநிதி பலகோடி யுண்டெனினுந் தொல்லையிலே
வகுத்தவகை யல்லாது துய்ப்பவரார் மண்ணினிலே.
ஒன்றிரண்டே யுடுப்பதுவு முண்பதுவு நாழியே
யென்றுமொரு வன்கிடையு மிருசாணுக் கெண்சாணே

வேறு.

ஈட்டியிழுத்தல் வெங்கான மெங்குஞ் சென்று மங்காமற்
கூட்டியிழைக்குந் தேனீயைக் கண்டார்பின்னுங் கூட்டு
வரோர். (௩௩)

ஆடும்பரத ரவைபோல வாரும்படியு மதுபோலத்
தேடும்பொருள்கள் போம்படியுங் கண்டுந்தெளியார் சிலரு
ண்டே. (௩௪)

வேறு:

மாநிதி கோடிதேடி யும்மார்கா ணியுமின்றி
போனவ ரல்லாதொக்கப் புசித்தவரார் புவிக்கணே. (௩௫)

வேறு.

அலங்கொண்டு லோபன்ற னுசாபி சாசு
மிரப்புங் காப்பு மசத்பாதி யுஞ்சஞ்
சலங்கொண் டிழுக்கு மொழுக்குந் தவாவச்
சந்தாப முஞ்செற்ற னன்பற் றறுத்தே. (ருசு)

உம்பன் புவிக்கன்றி வானுக்கு மியானே
யெனத்தன் மனத்தே நினைத்தங் கரிக்குந்
தம்பன் பெருங்கர்வ முந்தானு மாண்டான்
சத்பா யுதங்கொண் டதம்பன் றிறத்தே. (ருஎ)

வேறு.

வேறி லாவகை விருப்பொடு கலந்துநலனே
விளைய வின்மொழி விளம்பியு முளங்தெளியவே
மாறி லாதசெயல் செய்துமொரு காலுமழியா
மச்ச ரன்றனை யமச்சரன் வதைத்து விடுமே. (ருஅ)

மந்த ரக்கிரியு நிற்குதல வேழுகடலும்
வற்று மேழ்புவியு மாளுமுயர் வானவுலகு
மந்த ரப்படுமெ னும்படி தெளிந்துடலின்மே
லாத ரன்றனைய நாதர னழித்துவிடுமே. (ருகூ)

நெஞ்ச மொன்றுசொல் லொன்றுசெய லொன்றுடையதாம்
வஞ்ச கன்றனை யவஞ்சகன் வதைத்துவிடுமே. (சம)

ஈரமொன் றிநிகழ் சாந்தியெதி ரேறியவகங்
கார மும்படையு மாண்டதோர் கணப்பொழுதிலே. (௪௧)

வேறு,

மொழிந்தவாச கத்தினன்று தீங்குகாணு முன்னமே
யெழுந்தவேக ஞவியோர் விவேகனு விறந்ததே.
மடக்குமாறி லாதவாத ராசகோடி மாளுமே
யடக்கமான வீரன்வாளி னற்றதார வாரமே. (௪௨)

சுபாடிதன் குபாடிதன் சிரந்தனைத் துணிக்குமே
யபாடிதன் வெகுப்பிரலாப ஞவிதன்னை வெளவுமே. ()
மர்யையிச் சகத்துவத்து சித்துவிச னேயெனுந்
துயசுப்ர புத்தனப்ர புத்தனைத் துணிக்குமே. (௪௪)

வேறு.

சுகனசு கன்றனைத்து ணிக்குமே
சுபனசு பன்றனைத்தொ லைக்குமே
யகனுயிர் பொன்றமெய்ச் சீர்த்திவா
ளதினரு கன்றுணித்த டுக்குமே. (௪௫)

உடலின கந்தையைத் தனைச்சதா
வுணருப வன்கெடுத்து வக்குமே
படருறு சிந்தையைச்ச மத்தனோர்
பரமப தந்தனிற்ப டுத்துமே. (௪௬)

வேறு.

கன்னைபவமறு கருத்துமே
வகலச னலசனை யழிக்குமே. (௪௭)

பரமன் றருளினைப் பாந்தபன்
கர்மென வந்துயிர் கழிக்குமே. (௪௮)

வேறு.

சுவசன் றுயர்வொண் டுசுழன் றுவரும்
விவசன் றுகளாம் வகைவென் றனனே. (௪௯)

வேறு.

வர தார்ம காவ்ரதன் வாளியினிற்
பர தசப ரிக்ரகன் பட்டனனே (௫0)

அதி மாசுறு பந்தனை பெற்றினனே
மதி மாணுயிர் வௌவினன் மந்தனையே. (௫௧)

வேறு.

பவந்தந் தன்னிற் படுத்திப் பாந்தெழுந்
துவந்தன் றன்னைநிர்த் தொந்தன் றொலைக்குமே. (௫௨)

இன்பஞ் செய்யு மிறைவ னிணையடி
யன்பன் கையில நாத னழியுமே. (௫௩)

உசாவன் றிண்படை யொண்டி றற்றீர்க்க
விசாரன் சாகசி கன்றனை வெல்லுமே (௫௪)

சீறு மப்ரதி கூலன் சிதையவே
யாறு மப்ரதி கூல னழிக்குமே. (௫௭)

குடும்பச் சிந்தையுங் கோலா கலங்களு
மிடும்பை யுந்துற வின்க ணிறந்தவே. (௫௬)

பிராந்தி சத்திய வான்கையிற் பட்டதே
சாந்தி யாலதி சம்ப்ரமன் பட்டனன். (௯௯)
ஏக ஞர்படை யாசிப்ப டியினின்
மோக ஞர்படை முற்றுமு டிந்தவே. (௱) ஆ. எாடு

## மோகசமன்வாகை.

விடமன்ன காமன் முதலான சேனை
விறலார்வி வேகர் படையாற்
படமன்னன் மோகன் மிகவேவெ குண்டு
படைகொண் டெழுந்து செலவே. (௧)

இகன்மோகன் முன்ன ரிருண்மீ தெழுந்த
ரவிபோல் விவேக னெழவே
பகலோ னெதிர்ந்த பனிபோ லிறந்த
படுமோகன் விட்ட படையே. (௨)

ஒருகோடி யம்பு விடமோகன்மீள
வொருசண்ட வாயுவுடனே
சருகோடு மென்ன வெழிலார் விவேகர்
தனியம்பு தள்ளிவிடுமே. (௩)

வேறு.

மாளமாள விவேகனெய்ய மனத்தின்மந்திர வலியினன்
மீளமீள வெழுந்துமோகன் விடாதுபூசல் விளைக்கவே (௪)

வீயுமோகினை வேரறுமல் விடஞ்செய்மோகன் விவேகனால் மாயுமோருயிர் மாயையாரு மனத்தினாரு மிருக்கவே. (௫)

மகனாகிய வீசனந்த மனப்பசாசற வெய்யிலே, மோசனாரு யிர் மாயுமென்றன முன்னைநான்மறை முடிவதே. (௬)

மோகனாருயிர் மாள்வடுகந்தை மனப்பசாசை முடிக்கி லென், றேகநாதர் துணைப்பதத்தில் விவேகராச னியம்பவே. (௭)

வேறு.

புலகதிகள் யாவையு மரிக்கவே புகலிடமி லாமன்நடுக்குறு வுலகுபதி னாலுமொ ரிமைப்பிலே யொழியுமறி யாமைபி னொளித்ததே. (௮)

மனமுமறி யாமையு மரிக்கவே
மதியெனொளி வாள்கொடு துணிக்கவே
முனமுதவு தாயெனும விச்சைதான்
முடுகமதி வாண்முக முழுத்தியே. (௯)

பரவுணர்வு வாளினைவி திர்க்கமா
பருதியென வேயொளி செறிக்கவே
யிரவுவடி வாகிய வவிச்சைதா
னிகலழிய வாருயி ரொளித்ததே. (௰)

அகலிடமி யாவுமத னைக்கொடே
யடையவெறி யாவனு பவத்தினாற்
புகலவரு மாயையை யறுக்கவே
புரணபரி பூரண மெறித்ததே. (௧௧)

மரணபவ வீடுயிர் பாத்தொடே
மன்னனிரு சேனையு மனைத்துமோர்
காரணமது வாதலின் மிகுத்ததே
கருணைநிதி யாருள மகிழ்ச்சியே. (க௨)

இப்படி யொன்று மில்லா வகையெலா மிறந்த பின்னு
மப்படி யொன்று மில்லா னமைந்தில னமரி னாசை (க௩)
பின்னரும் வான மாதிப் பெரும்படை யெழுப்ப ஞானப்
பன்னரும் படையில் யாதும் படும்படி பரமன் பார்த்தே.

வேறு.

வரவி யோமவொலி கோடிசெவி யோடுமடிய
பரவி யோமவிசை ஞானவொலி பண்ணியதுவே. (க௫)

வாத லூறுபல தொக்குவர மன்னுபரமன்
பாத லூறுணர்வு பற்றியிற வெற்றியிடுமே. (க௬)

ஊன நாட்டமொளி வந்தன வனந்தவுருவ
ஞான நாட்டவொளி வந்துற நசித்துவிடுமே. (க௭)

மங்கு நாவிற லிறந்தவிர தங்கள்வரவே
யெங்கு ஞானரத வின்பமிடை யின்றியெழுவே. (க௮)

காசி நின்றபுவி சேர்மண நடக்கநலமே
வீசி நின்றவறி வாமணம் விழுங்கிவிடுமே. (க௯)

ஆக்கை யற்றபொரு ளென்றக மகித்தமதியைத்
தாக்கை யற்றபொரு டன்னின்மதி தள்ளிவிடுமே. (௨௦)
ஐய மேயமைவ தானமன னங்கழியவே
வைய மேயமைவ தானமன னங்கழியுமே (௨௧)
யாது மாயறிவி றந்தபொரு ளொன்றுமிலதே
யாது மாயறிவி றந்தவொளி யொன்றுமுளதே. (௨௨)
ஊன மாகிய வகம்பிரம மாகியதுபோய்
ஞான மாகிய வகம்பிரம மாகியதுவே. (௨௩)

வேறு.

ஞான நாடகங் கண்டுள மகிழ்ந்தன ஞதன்
வான நாடரும் வணங்கினர் வந்தடி மகிழ்ந்தே. (௨௪)
கேத மாயையும் புதல்வருங் கிளையுடன் மடிந்தார்
போத மாகிய சேனையும் பரன்பதம் புகுந்தே. (௨௫)
ஈச னிங்ஙன மழிக்கவெண் டிசைகளுங் கீழ்மேற்
பேச நின்றிடு மகிலலோ கங்களும் பிணமே. ஆ. எ௩௬.

---

களங்காட்டு

ஏது தானியம் புவமென விறைவியுண் மகிழ்ந்து
போது நாமென விரை வொடும் படுகளம் புகுந்தே. (௧)

வேறு

துய்யமார்பில் சோதியாகு மேகனேச்சொ லப்படும்
வையமாவி யீசனுக்கு மாயைமாய்தல் பார்மினோ. (௨)

ஆவியர்க்கி யெல்லையற்ற சனனமாக்கு மப்பெரும்
பாவிகாமம் மாயைமாதி பட்டபாடு பார்மினோ. (௩)

வேறு.

அயர்ந்துபொரு மோகனை யளித்தவனை முன்னம்
பயந்தவறி யாணைபொடி பட்டபடி பாரீர். (௪)
மங்குமிட னின்றியொரு மாத்திரையி னுள்ளே
எங்குமுல வும்மன னிறந்தபடி பாரீர். (௫)
ஆகவள வர்கியுல கர்ண்டவறி வில்லர்
மோகவர சின்னன முடிந்தபடி பாரீர். (௬)

வேறு.

தூமங் கலந்த குழன்மடவார் சூழக் கிடப்பத் தூயவெழிற்
காமன் கிடந்த கிடைபாரீர் காகம் பிணங்கு மியல்பாரீர்.
கரும்பார் கன்ன லெனமொழியுங் கனிவாய் பட்ட படிபா
ரீர், சுரும்பார் குமிழே யெனப்புகழுந் துண்டம் பட்ட
படிபாரீர். (௮)
ஆர்க் கள்பச் சேருடி யறிவோர் தமையுந் திறலழிக்கும்
பாரக் கலசப் பயோதரங்கள் பட்டுக் கிடந்த படிபாரீர்.

வேறு.

தவளத்தி னித்திலமோ தண்புறவின் முல்லைமுகை
தானோ செய்ய
பவளத்திற் பொதிந்ததெனும் பூவலெயிறு முடிந்தபடிபா
ர்மின் பார்மின். (௰)

இணையென்ன மலரென்ன பெரியதபோ தனருளனும் பே
தஞ் செய்யுங்
கணையென்னக் கற்றவருந் துதிக்குங்கண் பட்டபடி காண்
மின் காண்மின். (கக)

வேறு.

பரிபுரப தங்களவை பாரீர் பரிமள மணஞ்செய்குழல் பா
ரீர், நரிபொருது கொண்டபடி பாரீர் நலன்மருவு மன்பர்
மதி பாரீர். (கஉ)

வேறு.

கலைசூ ழறிஞர் தஞ்செவியுங்
கண்ணுஞ் செவிடுங் குருடுமாய்க்
கொலைசூழ் வகைசெய் திடுங்கொடிய
கோபன் கிடந்த கிடைபாரீர். (கங)

வேறு,

ஆகமுமா வியும்பொருளு மளித்து நாதற்
கவனருளா லானந்த நாடா ளாதே
காகமுநாய் களுநமனும் பிறவு முண்ணக்
கைவிட்டுக் கிடந்தநிலை காண்மின் காண்மின். (கச)

முன்புமிகப் பொருள்பலருந் தேடித் தேடி
முந்தையுடன் கொடுபோகா திறக்கக் கண்டும்

பின்புமிகப் பொருட்டேடும வாவன் செத்துப்
பிணத்தினும்வா யங்காந்த பெருமை பாரீர். (கரு)

வேறு.

அடித்தலை வணங்கநர பால
னம்பச்சமரொ டிருந்தநிர்ப ராசன்
முடித்தலை கிடந்தபடி பாரீர்
முனைச்செயன் முடிந்தபடி பாரீர். (கசு)

உளவரு மகந்தையபி மான
முளவிருண் மனம்பொய்கள வாதி
யனைவரு முவந்தகிளை யோடு
மடையவு மிறந்தபடி பாரீர். (கள) ஆ. எருசு.

கூழடுவார்.

என்றுதனி நர்பக ரிகற்கள மியம்பிக்
குன்றுதவி லாவினிய கூழட வுரைத்தே. (க)
ஆங்கினி திருந்தன ளணங்கடு மடைக்குப்
பாங்கினிய பேய்மகளிர் பற்பலர் திரண்டே (உ)

வேறு.

அகமாறீபுற முகமாறீயறி வறிவாளேபிறி தறியாதாய்
முகமாறீசுக வடிவாய்கூழட வாரீர்கூழட வாரீரே. (ங)

ஈதிதெனநிகழ் வெல்லாமறிவுரு வல்லாவிலதெனு நல்லேக
வாதீயறிவுரு நீதீகூழட வாரீர்கூழட வாரீரே. (ச)

அறவீதியவை மறவீயினியவை சொல்வீதுனியறு செல்
வீநல், லறவீநலன்மிகு முறவீகூழட வாரீர்கூழட வாரீரே.

வேதீவினையொடு கர்தீயழகிய மேதாய் விண்முதல் யாதிற்
கு, மாதீபணிமிகு சோதீகூழட வாரீர்கூழட வாரீரே. (கூ)

திருவீஞானநல் லுருவீயழிவறு சித்தீபகிர் வறுபத்திசிந்,
மருவீயுலகிய லொருவீகூழடவாரீர்கூழட வாரீரே. (எ)

வேறு,

உயர்ந்த வாரணக்கொம்பேயு லக்கையா
யோங்கு போதகக் காலுர லாக்கியே
பயந்த மாயையின் மக்களின் பற்களைப்
பரம ஞானருள் பாடியிடித்துமே. (அ) ஆகூ எகூச

சும்முலக்கை.

உகைக்குமனத் தாருடைய வுரனெல்லாங் குரவனடி
துகைக்குமள வானதுகாண் சும்மேலோ சும்முலக்காய்

ஒன்றுவும் புறக்கரண முட்கரண மொடுங்கிடவே
தோன்றுமை தோன்றியதே சும்மேலோ சும்முலக்காய்

சான்றுமென் றறிந்திலேயோ சகலமுமாய் விடத்தோன்றுந்
தோன்றுமை தோன்றியக்காற் சும்மேலோ சும்முலக்காய்,

சான்றுரு மறிவொழிபச் சாக்கியமாஞ் சகத்தென்றுந்
தோன்றுது கண்டாயே சும்மேலோ சும்முலக்காய். (௪)

விரியுமிடத் துலகறியும் புரியுமிடத் துணர்வறியுந்
துரியமதிற் றுரிசுளகாண் சும்மேலோ சும்முலக்காய். (௫)

ஆங்குணரா மையமுணர்வு மாகியகோ ளறவிருந்து, தூங்
கினர்காண் சுகமடைவார் சும்மேலோ சும்முலக்காய். (௬)

தெரியாதென் பதுந்தெரிந்த விடத்தல்லாற் றெரியாத
துரியாதீ தம்மிதுகாண் சும்மேலோ சும்முலக்காய். (௭)

துரியாதீ தந்தன்னிற் புரிந்தாலுந் தொல்பிறவித்
துரிசானதொழியாகாண் சும்மேலோ சும்முலக்காய். (௮)

துஞ்சுதல்கண் டாயதிதம் பிறப்பதுகண் டாய்துரியந் துஞ்
சல்பிறப் பொழிந்திலகாண் சும்மேலோ சும்முலக்காய் (௯)

தொல்லையிறை யாகமஞ்சொற் றுரியாதீ தஞ்சுருதி, சொல்
லுகின்ற பரவுடல்காண் சும்மேலோ சும்முலக்காய் (௰)

கேட்டதென் றறியாத வதீதத்தைக் கேடின்றிச், சூட்டி
னது பரவுடல்காண் சும்மேலோ சும்முலக்காய். (௧௧)

நீங்குதலில் லாவறிவே நிகழ்ந்தக்கால் விழிப்பதுவுந், தூங்
குதலுமுண்டாமோ சும்மேலோ சும்முலக்காய். (௧௨)

சத்தமர் திகளுமெலாந் தற்சொருப மானபரி• சுத்தமாய்
விட்டதுகாண் சும்மேலோ சும்முலக்காய். [௧௩]

கருதவொண்ணு வெண்ணிறந்த காட்சியெல்லாங் கணுனை
சொருபமாய் நிகழ்ந்ததுகாண் சும்மேமேலோ சும்முலக்காய் ()

தோன்றியவில் வுலகமெலாஞ் சொரூபமாய் நிகழ்ந்ததெனத்
தோன்றியதுந் தன்கண்ணே சும்மேமேலோ சும்முலக்காய் []

எல்லாவண் ணுருமின்றி யிருந்தபடி யேயிருக்கச், சொல
லாமற் சொல்லியவா சும்மேமேலோ சும்முலக்காய். (௧௬)

எல்லர்மா யல்லாத விளையியல்பை யின்னதென்று, சொல்
லர்ட விரகுண்டோ சும்மேமேலோ சும்முலக்காய். (௧௭)

புலனறுபாழ் வருஞ்சீவன் போதப்பாழ் வருமீசன், சொலவ
றுபாழ் வருஞ்சொருபன் சும்மேமேலோ சும்முலக்காய். (௧௮)

வையமுயிர் பரமாக்கு மாயைப்பாழ் மூன்றுமறத், துய்யசு
டர் தானேயாஞ் சும்மேமேலோ சும்முலக்காய். (௧௯)

இடரின்பஞ் செயுமாயை யிருளின்ப வறிவாகுஞ், சுடரின்
கண் டோன்றுமதோ சும்மேமேலோ சும்முலக்காய். (௨௰)

சொருபன்விழி மலர்கண்டு சும்மாவி ருந்துவிடச், சொருப
பரி பூரணமாஞ் சும்மேமேலோ சும்முலக்காய். (௨௧)

வாயுணர்வு மாண்டிடத்தே வாயிலா மட்குடத்திற், றேய
மென நிறைந்ததுகாண் சும்மேமேலோ சும்முலக்காய். (௨௨)

ஊமைமொழி கொடுபிரம மோதவுணர் வுற்றபடி, தூய்மறை
யின் முடிவுரைக்குஞ் சும்மேமேலோ சும்முலக்காய். (௨௩)

தற்பதத்தின் றன்னிலைமை நானறிய வோதுகலால்
சொற்பதத்தில் வாராகாண் சும்மேலோ சும்முலக்காய் ( )
உற்பலத்தி னழகுமண முருப்போல வொன்றின்கண்
சொற்படுசத் தியமாகி சும்மேலோ சும்முலக்காய். (உரு)
அல்லைபுங் குழன்மாயை யவள்பயந்த வகிலம்வெறுஞ்
சொல்லேயாய் விட்டதுகாண் சும்மேலோ சும்முலக்காய்.
அலைந்துவரு முளவிகற்ப மழிந்துவிடப் பிறவியெலாந்
தொலைந்தபடி கண்டாயே சும்மேலோ சும்முலக்காய் (உஎ)
இன்னதென மறைமுடிக்கு மியலாத விப்பரிசைச்
சொன்னபடி கண்டாயோ சும்மேலோசும்முலக்காய். ( )
சொல்லாத மறைமுடிவைச் சொல்லாமற் சொன்னதனைச்
சொல்லாட விரகுண்டோ சும்மேலோ சும்முலக்காய்.
சாத்திரமென் செயநமக்குத் தர்க்கமய லறுத்தபிரான்
ஸ்ரோத்திரமே வேண்டுவது சும்மேலோ சும்முலக்காய்.

ஆ. எகூச.

---

ஊஞ்சமைப்பு.

ஏகன தடியிணை யிங்ஙனேத்தியே
மோகர்தம் பல்லெலா முறியக் குத்தியே. (க)

புண்ணிய னடியிணை போற்றி போற்றியே
திண்ணிய போதகச் செவியிற் றெள்ளியே. (உ)

வேறு.

பாதமா மலர்க ணல்கும் பரமனைப் பாடிப் பாடிப்
போதமா விடித்தி ராகிற் போனக மாக்க வாரீர். (௩)

செம்பொனுன் மகுடஞ் சூடித் தேசிக னாக வந்த
வம்பொனு ரடிகள் சூடா முடிகளை யடுப்பு வையீர். (௪)

வாழ்வுமா டென மயங்கி வள்ளலார் கீழலின் வந்து
தாழ்வுறு வறிவிலாளர் தலைகளைத் தடாக்க ளாக்கீர் (௫)

சொற்பதங் கடந்த வின்பச் சொருபனூர் துணித்து விட்
ட, வுற்பவ வுததிச் சோரி யடையவு முலையிற் பெய்யீர்

தொந்தவன் பாசத் தாலை சுற்றிவன் சுமையாய் வந்த
யந்தவிந் தனத்தான் ஞானப்பாவகன் றன்னை மூட்டீர்.

தீதண்டம் பெருக மோகஞ் செய்யுமக் காமராசன்
கோதண்ட மிரண்டாய் வெட்டிக் கூழடத் துடுப்புக்
கோடீர். (அ)

இராப்பகல் பசித்துப் பட்ட விடரினை நினைத்து நெஞ்சி
ற், பராக்கினை யொழித்து நல்லபதத்திலே யிறக்க
வாரீர். (௯)

வேறு.

என்ற நந்தக டத்தி னுக்கிய வின்னமு
தொன்றி னென்றுவி ரைந்தெ டுக்கவு வப்பொடே. (௰)

தொடைத்து காமூந் தெளித்துத் தொழுது முழுதையும்
படைத்த மாதின் புரிக்கலம் பார்த்துப்ப டைக்கவே. (௧௧)

ஏமதி யாமென வெண்ணின சாவியெலா மெடுத்
தமுது செய்து திருக்கைவி ளக்கின ளன்னையே. (கஉ)

பஞ்ச பாசமி லையெனக் காயெனப் பண்ணியே
பஞ்ச பாசமடைக்கா யமுதுப டைப்பரே. (கங)

பத்த ராவிப ருகுதி ருப்பவ ளத்திலே
வைத்த வாரமு தத்தினின் மிச்சில் வழங்கவே. (கச)

வருக வென்றுக ணங்களை வள்ளல்க ளௌள்ளுரு
ருருகு நெஞ்சொ டழைப்பர்க டம்முட னுண்ணவே. ()

ஆ. அராகூ.

---

இலகும் போதக் கண்விழித்தங் கெல்லாம் போத மென்க் காணு, துலகும் போத மாயையென வோதும் பேய்கள் வாரீரே. (க)

காணுஞ் சித்துத் தான்பரமன் காட்டுஞ் சித்தென் றுள்ள படி, பேணு முண்மைப் பொருட்பேதம் பேசும் பேய்கள் வாரீரே, (உ)

வேதா விரோத மறவொன்றும் வீட்டிற் பலவா நாட்டிலெ னப், பேதா பேத நிலைநிற்கப் பேசும் பேய்கள் வாரீரே.

கருதும் பொருளெல் லாமழியுங் கருத்தற் றதுவே வீடெ ன்று, 'சுருதி சொன்ன பொருட்சொல்லுஞ் சுகதப் பேய் கள் வாரீரே. (ச)

எல்லா வுலகுங் கருமுடிந்த விடத்தே, முத்தி யெல்லாமா

யல்லா தென்றப் பொருள்சொல்லு மருகப் பேய்கள் வாரீ
ரே. (ரு)

பொன்று முடல்போ லது முத்தி யின்பப் பொருளே பொ
ருளல்லா, தொன்று மில்லை யென்றேது முலகா யுதப்பேய்
வாரீரே. (சா)

பானத் தந்தக் காணத்தின் பதைப்பை யறுக்க வெனக்
கேட்டும், பானத் தந்தப் பதைப்பறுக்கப் பார்க்கும் பேய்
கள் வாரீரே. (எ)

அறவே தனைப் பட்டருந்துவது தேடித் திரியா தாரமுதம்
பெறவே விம்மி யலமாக்கும் பேய்க ளெல்லாம் வாரீரே.

இருக்கு முதலா மெக்கலையு மிதநோக்குறலா லகநோக்கி
யொருக்கும் வகையே முயல்கின்ற யோகப் பேய்க்கும்
வாரீரே.

துன்புற் றுழல வமையுமெனிற் றூரத் திரியி ஞரமுதுண்
டின்புற் றிருக்க வேண்டுதிரே லெல்லாப் பேயும் வாரீரே.

வேறு.

பொல்லாத வுடலமெலாம் பூரணமா கும்பரிச போத கத்
தால், வல்லாளன் வென்றகளக் கூழுண்ணும் வகையடங்க
வாரீர் வாரீர். (௰)

வேறு.

நினைத்து மறந்திச் சகத்தை யெல்லா நேரே யொறுத்துப்
பாராண்ட, மனத்தை யறுத்து மறுமாற்றந் தின்று கொள்
ள வாரீரே, (௧௧)

போக்கும் வரவு மறுத்தகழல் போற்றிப் போதக் கூழுண்
டு, வாக்கு மனனு மிறந்திடத்தே வாளா விருக்க வாரீரே.
ஆக்கை யறுத்துக் கரணங்க ளறுத்துச் சிவபரமறுத்து
வாக்கை யறுத்தா னந்தக்கூ ழுண்ண வாரீர் வாரீரே. ()

வேறு,

வீடாயெல் லாமென்று பொன்னடி சூட்டியே
வேதகஞ் செய்த வீரனை வாழ்த்தியே
வீடாயெல் லாங்கெட வுண்ண வரும்படி
மீளு முள்ளக் கலத்தை விளக்கியே. (கச)

இல்ல றந்துற வென்றிலை வேண்டினர்
யாவ ரேனும் வருகென் றிடுவதே
நல்ல றமென யாவர்க்கு நல்கினர்
நாதர் வெல்களக் கூழுண்ண நல்கியே. (கரு)

வேறு.

அலகைகள் கூழிற் கலமரலற்று ரமுதைப்பெற்
றுலகுயி ரீசற் பகிர்வற வெல்லா முடனுண்டே. (கசா)
மெத்தித் தாகங் கெடநுகர் மெய்ஞ்ஞா னனந்தந்
தித்தித் தாக மயிர்க்கா றூறுந் தேக்கிட்டே. (கஎ)
திருகறப்போதப் பேய்பசி யேயோ திருஞானம்
பருகப் போகப் படுவது பண்டைத் தாமுண்டோ (கஅ)

வேறு.

துஞ்ச வின்றியுணர் வின்றிமய லின்றியயதுந்
தொடர்வு மின்றியிட ரின்பமுத லின்றியெவையு

மெஞ்ச லின்றியிது வென்னுமியல் பின்றியுள்ளீர்
மியாவை யும்பிரம மாகியி ருந்தபடியென். (௧௧)

ஆ. அ௨அ.

---

வேறு- குணலேவார்த்தி.

அலைமிசை யானு மயன்முதலா
மண்டருந் தேடற் கரும்பதமேன்
றலைமிசை யாண்மை பாடீரே
தன்கரு ணைத்திறன் பாடீரே. (௧)

ஒருநய மின்றி யானுழைக்கு
முற்பவ நோய்கெடப் பார்த்தருளுந்
திருநய னங்களைப் பாடீரே
செய்ய கருணையைப் பாடீரே. (௨)

ஒழிவற்ற சோதி யுணர்வுதன்னை
யுளங்கைக் கனியெனக் கண்டுகொள்ள
வழியிட்ட வீரனைப் பாடீரே
வார்த்தை யொன்றுரென்று பாடீரே. (௩)

மரண பவங்கண் மடிந்திடவே
வடிவு புனைந்து வரும்பெருமான்
சரண நிகழ்ந்தமை பாடீரே
சந்தத மப்பதம் பாடீரே. (௪)

உன்ன வரிதென் றுபநிடங்க
ளோதும் பொருளை யொருமொழியிற்
சொன்ன விரகனைப் பாடீரே.
சொருபா நந்தனைப் பாடீரே. (௫)

பவமாயம் வேரறப் பார்த்திறைவன்
பதத்திலும் பண்டை நாமொழிந்து
சிவமா யிருந்தமை பாடீரே
சிவப்பிர காசனைப் பாடீரே. (௬)

புத்திக்கு மெட்டரி தாயபொருள்
புவனியில் வந்தைம் புலன்களினுந்
தித்திக்கு மாறினைப் பாடீரே
தேசிக ராசனைப் பாடீரே. (௭)

ஞான நடங்கண்டு முன்னநம்மை
யோருருவாய்வந்து ணர்த்திக்கண்ட
ஞானந டந்தனைப் பாடீரே
நடரா சன்றனைப் பாடீரே. (அ) ஆக அங்கு.

---

மங்கலவாழ்த்து.

புரியும்விழி தந்தகழல் வாழியே.
புறமதமி ருந்தபொருள் வாழியே

துரியமு மிறந்தசுடர் வாழியே
சொலவற விருந்தசுகம் வாழியே. (௧)

வேறு.

பேதமபேதம றுத்தவன் வாழியே
பேதமை தீரவ ளர்த்தவன் வாழியே
போதமபோதம றுத்தவன் வாழியே
பூரண போத சமுத்திரம் வாழியே. (௨)

துறந்தவர் கைப்பட்டி ருந்தவன் வாழியே
தொடர்ந்து பிடித்துப் புரந்தவன் வாழியே
யிறந்த வுளத்திற் றிகழ்ந்தவன் வாழியே
யிரங்கி யெனக்குத் தருங்கழல் வாழியே. (௩)

மறந்து நினைக்கப் படாதவன் வாழியே
மயங்கு மனத்தர்க் கிலாதவன் வாழியே
பிறந்து மரிக்கப் படாதவன் வாழியே
பெருங்க ருணைக்கற்ப காடவி வாழியே. (௪)

வேறு.

உருவருவொ ளிலது மொழிவில்பரன் வாழியே
யுளபொருளை யுணரிலவை யுதறுமவன் வாழியே
கருவழிவ்ய யழியவரு காசரணன் வாழியே
கழலும்விழி கருணையுட னருள்சொருபன் வாழியே. (௫)

அழகுபெறு மௌனபத மருளுமவன் வாழியே
யடியடருள முருகவரு மருள்முதன் வாழியே
பழகிவரு பவதுயரை யழிசெய்பரன் வாழியே
பரகருணை வடிவினிகழ் பரமகுரு வாழியே. (சு)

அறிவுதரி லுருகுமறி வருளுமவன் வாழியே
யகமிகழு மறுவிழியி னமருமவன் வாழியே
பிறிவதறு புலனுருக வருளுமவன் வாழியே
பெருவிழியி லுருவழிசெய் பெருநிலையன் வாழியே. (எ)

வேறு.

அன்னைபெ னக்கய லாக்கினன் வாழியே
யல்லல றுத்தெனை நோக்கினன் வாழியே
யென்னை யெனக்குற வாக்கினன் வாழியே
யின்னமு தத்துரு வாக்கினன் வாழியே. (அ)

வேறு.

தொழுமவ ரர்ச்சி வாங்கிய வங்கணன் வாழியே
சுகமக மான சாந்தி நெஞ்சினன் வாழியே
யெழுபல நாச மாஞ்சொல் லொன்றினன் வாழியே
யிமையவர் மூவர் தாந்தொ ழும்பிரான் வாழியே. (கூ)

கருதிய கோலமாந்திரு மேனியான் வாழியே
கதிரவர் சோதி தாம்பெறுஞ் சோதியான் வாழியே
சுருதிகடேடு வான்பொரு ளாயினன் வாழியே
சுகமக மாக யாம்பெறுஞ் சோதியான் வாழியே. (௰)

வேறு.

தொழுகுலம்வி ளங்கவிமை யோரென்றும் வாடவீள்
சுருதிகள நந்தமுக மாய்நின்று தேடமு
வெழுகுலம் விளங்கவடி யேனின்று சூடவே
பிணையடி வழங்குசொரு பானந்தன் வாழியே. (௧௧

வேறு.

மூவர்தேவர் வாழியென்று முடிவணங்கு ழிருகழற்
றேவதேவன் வாழியே சிவப்பிரகாசன் வாழியே. (௧௨)

வேறு.

அலைவா மென்றங் கலையிடு தர்க்கப் பசாச மோசகன் வாழியே, யதுநீ யென்றங் கருமறை யுச்சத் திஞேது மோர் பொருள் வாழியே, சொலவர வென்றுந் தொடர்வரு சற்சிற் சுகாதி காரணன் வாழியே, சொருபானந்தன் கலைபுனை தத்துவப் பிரகாச மாமுனி வாழியே. (௧௩)

ஆூ அசக.

மோகவதைப்பரணி.

தத்துவநிருபகம்—முற்றிற்று.

பதினெட்டாவது

# அமிர்தசாரம்.

## தத்துவதரிசனம்.

### வெண்பா—கலைக்கட்டளை.

### கடவுள்வணக்கம்.

ஞானக்கண் ணாளர்க்கு ஞானானந் தச்சுடரா
யூனக்கண் ணாளர்க் குலகமாய்—வானந்
தனக்குப் பெறவரிய தற்சொருபன் பொற்றா
ளெனக்குப் பெறவெளிதே யின்று. (௧)

### அருளிறைவணக்கம்.

அறியாமை யாந்திமிரத் தந்தனாய் வீட்டி
னெறிகாண லின்றி நிலையற்—றிருவேற்கு
ஞானாஞ் சனத்தாலே நாட்டந் தனைத்தந்த
சோனாந் தொழக்கடவ கோ. (௨)

### வேதச்சிறப்பு.

இதினுள்ள தெல்லாக் கலைகளினு முள்ள
திதினில்லா தியாவையினு மில்லை—யதினாலே
யாது மறிய விரும்பினான் யாதுமுள
வேத மறிவான் விரைந்து. (௩)

### ஆகமச்சிறப்பு.

கற்பவர்க ளெப்பொருளுங் காண்பவர்க்குக் கண்ணாகு
முற்பவநோய்க் கெல்லா மொருகடுவாந்-தற்பொருடான்
யாதா வுணர்ந்தா ரவர்க்கதுவா மெக்கலையு
மோதா துணர்ந்தா னுரை. (௪)

### அறிஞருரைச்சிறப்பு.

எந்தக் குலமாயென் னெந்தக் கவியாயென்
னெந்தச் சமயத் தெவராயென்-சிந்தைத்
துறவிதருஞ் சொல்லே தூய்தாவ தல்லாற்
பிறவிதருஞ் சொல்லே பிற. (௫)

### நூற்பெயர்.

வேதா கமமோதி மெய்ம்மை விளங்குதற்குப்
போதா தெவர்க்கும் புருடாயு-மோத
வுறுமமிர்த சாகரத்தே யுள்ள மதனாற்
பெறுமமிர்த சாரமெனும் பேர். (௬)

### அவையடக்கம்.

வேத மொழிப்பொருளை விண்ணவர்கண் மூவருமுன்
போத வுணரா வுலகறிய-வோதுகேன்
வானின்ற வல்லிருளை மாற்றுநின் றேனெழிப்பன்
யானென்ற மின்மினியே யான். (௭)

### நன்னெறியுரைத்தல்.

இம்மை மறுமை நிலையன் றெனவிடுக
செம்மை நெறிநடக்க சித்தந்-தமைமீட்க
தம்மை யுணர்ந்தோர் தலைப்படுக தத்துவத்தின்
மெய்ம்மை யறிக விரைந்து. (அ)

### அருமையுரைத்தல்.

பெறவரிது மக்கட் பிறவிபெற் றாலு
மறிவுநா லாய்த லரிதே-வதினுந்
துறவுடைய ஞாத லரிதே யதின்மெய்
யறிவுடைய ஞாத லரிது. (கூ)

### ஞானிலக்ஷணம்.

அறிவுள்ள தல்லதில தென்றறிவான் ஞானி
யறிவான் முழுது மறிவா-னறிவ
னறிவறி யானை யறவிருந்த வண்ணல்
மறையோது வான்பொரு டான். (ய)

### ஞானிசீலம்.

அருந்தல் பொருந்த லவையொக்கு மேனும்
பெருந்தகையோ ருள்ளம் பிறிதே-திருந்து
மனத்தின்வே றேபதியு மைந்தனுமம் மாதின்
றனத்தின்வே றல்லவே தான். (கக)

## ஞானிசரிதை.

தீதென நன்றெனச் சிந்திப்ப ரோதெளிந்தோர்க்
கோதன மன்றே வுலகெலாம்-பாதவத்திற்
றீதாத னன்றுதல் சிந்தித்திடச்சாத
வேதாவிற் குண்டோ விதி. (௧௨)

## ஞானிபெருமை.

விண்ணே பெரிது மிகவீசன் கைவழிபா
மண்ணே யதுபெற்ற மாமாயை-யெண்ணிற்
சிவனிற் பெரியாரிற் சிந்தையிலார் வைத்தா
ரவனிற் பெரியா ரவர். (௧௩)

## ஞானியேவற்சிறப்பு.

எங்கே வெளிப்படுக வென்று னெழின்ஞானி
யங்கே வெளிப்படுதற் காதரித்தே-யெங்கும்
பரமனவ னேவல்செயப் பார்த்திருக்கும் யார்தான்
றாமவ னேவ றனக்கு. ௧௪)

## ஞானிபூசைச்சிறப்பு.

அவனுண்ட தண்டமெலா முண்ட தயனுஞ்
சிவனுந் திருமாலு முண்டார்-சிவமென்று
பூரண ஞானியைப் பூசித்தான் பூசித்தான்
காரணனைக் கண்ணாரக் கண்டு. (௧௫)

## ஞானியையிகழ்ந்தவர்கேடு.

எழின்ஞானி யையிகழ்வார் கேட்டா ரிகழ்கேட்
டழலா ரனுமதித்தார் நால்வர்-கழலுதன்
மேதக வென்றவரை விட்டகலா தார்பஞ்ச
பாதக மென்னப்படும். (மிசு)

## கூடாவொழுக்கம்

யோகத்தி னுண்மை யுணர்வின்றி யூண்பொருட்டா
லேகத்தி னின்றே மெனவியம்பி-மோக
மனத்தவல மாற்றாத வல்வேடர் தம்மை
நினைத்தவருங் காணார் நெறி. (மிஎ)

## கனணவிதி

நன்ஞான ஞானி மரியா னொருநாளு
முன்னுன மோக விருண் முருக்கித்- தன்னுருவைக்
கண்டபொழு தேகழியுஞ் சூக்கவுடல் கன்மபல
முண்டுபோந் தூலவுடல். (மிஅ)

தத்துவ ஞானி திருமேனி தாங்கினு
ருத்தம லோகத்தி னும்பரா-முத்தன்
திருக்கோயில் கொண்டவிடந் தேவா லயமென்
றிருக்கோது கின்றவிடம். (மிகூ)

உலககாரணம்.

அணுவென்பர் மாமாயை யென்ப ரணுவின்
புணர்வென்பர் பூதமே யென்பர்- குணனென்ப
ரெவ்வே துவுமோ துகவிதற்கே தேதுவென்று
வவ்வேது வேபேது வாம், (உ0)

காரணகாரியவேறின்மை

மன்னு முதற்பொருளின் மன்னுத விவ்வுலகம்
பின்ன மெனுமாறு பேசற்க-பொன்னே
யணியா வதன்முன்னு மப்பொழுதுங் காய்ச்சி
மணியான போது மறித்து. (உக)

ஞானனந் தச்சுடராய் நன்றாகி யொன்றான
தானு கியபடத்திற் றன்றன்னு-ஞானவா
யார்த்த கடலுலக மாமோ வியமெழுதிப்
பார்த்து மகிழ்ந்தான் பரன். (உஉ)

நானிலநீர் பைமுட்டை நால்வகை யோனிசூரர்
மானிடநீர் வாழ்பறவை மாகிருமி-ஞானமிலா
மண்பட்ட தாபரமென் றேழாய் வரும்பவனு
றெண்பத்தி னன்கா யிரம். (உச)

ஊர்வ பதினொன்று மொன்பானு மானுடவர்
நீர்பறவை நாற்கால் கோர்பத்தாஞ்-சீர்திகழு

மூவாறுந் தாபரங்கண் முப்பத்து மும்மையோ
ராவா றொருப தாறும். (உச)

## அணுப்பிரவேசம்.

ஆன கடங்க ளளவிலவற் றுட்புகுந்து
வானகந் தானின்ற வாறொக்கும்-யோனிகளெண்
பத்துநான் காயிர நூ றாகப் படைத்தவற்று
ணித்தனுர் நின்ற நிலை. (உரு)

## அழிப்பு.

ஆன வுடம்பனைத்து மைம்பூதத் தேயழியும்
வானாதி பூதமிறு மாயையினி-னானு
வொழிந்தமா மாயவிரு ளுள்ளொளியா ரிம்ப
ரெழுந்தஞா னத்தா லிறும். (உசு)

## பவகாரணம்.

செறிபொருள தாகித் திகழ்பளிங்கு போல
வறிபொருள தான வறிவன்றுன்-றன்னை
யறியப் பிறவி யறலாற் பிறவிக்
கறியாமை யாகு மடி. (உஎ)

## உடலுற்பத்தி.

ஆதபன்வா னுகுதியா னல்குமதி னூடேதியா
மோதனமுண் டாயிருநீ ருண்டாகு-மாதுடனுண்

டன்னுருவா மிக்கநீர்க் கண்டஞ் சமங்கவிழ்தல்
வன்னிபுழ வுண்டேன் மலடு. (உஅ)

## பிண்டகோசம்.

சுவர்செய்து மண்டசையார்ச் சோரிநீ ராக
விவரங்கள் காலியங்க விட்டுக்-கவர்கால்க
ணட்டுக்கை வைத்து நரம்பிட் டுரம்பெறவே
கட்டித்தோல் வேய்ந்தவகங் காண். (உகூ)

பிண்ட வுருவிற் பிறத்தலாற் கெர்ப்பத்திற்
பிண்ட வுருவா யிருத்தலா-ஞ்ஞளும்
பிண்ட மிடவேண் டுதலா லுடற்பிண்டம்
பிண்ட மெனப்பேர் பெறும். (ஙம)

## அண்டகோசம்.

நிலனேழு சூழவரு நீரேழு கீழ்பா
தலனேழு வானேழு தப்பக்-குலகிரிக
ளொட்டுநடு மேருகிரி யேமகட கஞ்சூழப்
பட்டுளதோ ரண்டப் பரிசு. (ஙக)

## அண்டபிண்டவேறின்மை.

வெளியசைவு வெம்மை நெகிழ்வுரமாம் விண்கா
லொளிபுனன்மண் கண்ணுதய னுள்ளங்-குளிர்மதியங்

கொண்டுய்த் தவனறிவு கோசமாம் பிண்டத்து
மண்டத்து முண்டோர் வயல். (௩௨)

வீடுபேற்று.

நெடுந்தூர மண்மை நினைவுபோ மாறுங்
கடும்பரி கால்வைத்து வாங்கல்-படங்களைத்தோர்
புட்டகம் வேறே புனைத விவைபோலும்
விட்டுடலங் கொள்ளும் வினை. (௩௩)

உற்பத்தி யாதிதாதை வாயு வுடன்கூடிப்
பொற்புற்ற கொங்கையர்தம் போகத்தே-கொர்ப்பத்தைக்
கொண்டேதை செல்லுமெனக் கூறுவீர் கூறீர்கண்
மண்டேகஞ் சென்ற வழி. (௩௪)

உடலிழிவு.

மணனென் றியமாந்தர் வாயுப்போங் காட்டிற்
பிணமென்று பேரிட்டு பேர்த்தக்-கணன்வந்து
புட்கொத்து மிவ்வுடலிற் பொல்லாங் கொழிந்திருப்ப
தெட்குத்து முண்டோ விடம். (௩௫)

குடும்பவிழிவு.

திடன்படு சீலந் திகழ்கல்வி கேள்வி
யிடம்படு மேதைசி றெல்லாம்-பசுமட்

குடம்படு நீர்போற் குடும்பியைக் கைவிட்
டுடம்போடு கூட வுகும். (௬௬)

போகவிழிவு.

சிந்தா குலமனிதர் சீசீ செவிமுதலா
மைந்தானு மீட்ழிவ ரல்லரோ-வைந்திலொரு
வேட்கை யசுணமிபம் விட்டின்மீன் வுண்டு
கேட்கைமுத லோரொன்றிற் கேடு. (௬௭)

மகளிரிழிவு.

எரிகொண்டு மல்ல வெறிபடைகொண் டல்ல
வருநஞ்சுங் கூற்றுங்கொண் டல்ல-கருதிநெஞ்சத்
தம்மாதர் தம்மைப் படைத்த தணியிழையார்
தம்மாலே யாகத் தகும். (௬௮)

பொருளிழிவு.

இன்னலா மீட்டுங்கா லீட்டினு வியாவரையு
மொன்னல ராக்கு முயிரிறுக்கு-மன்னு
மனத்தைவே ருய்மயக்கு மானடுக்கஞ் செய்யுந்
தனத்தின்வே றுண்டோ தவறு. (௬௯)

அரசிழிவு.

முரசு விளங்குதம் முற்றத்திற் றெற்றி
யரசு வணங்குங் கழலா-ரொருசுணங்கன்

கவ்விய காலிற் கடைகடோ றுஞ்சுழல்வர்
வெவ்விய சொல்ல வெறுத்து. (ச0)

சுவர்க்கவிழிவு.

பொற்றுமாதர் தோளே புணர்வ தமிர்த
மதுபான முண்டே மகிழ்வ-தெதுகோடி
சாவார் பிறப்பார் சதுமுகனோர் நாளினிது
தேவா திபரெய்துஞ் சீர். (சக)

நிலையாமை.

உலகி னிலைசிறப்ப தொன்றில்லை யென்றே
தலைவர்கண் மூவருஞ் சாற்றினு-ரஃதே
மலைவுறு மார்க்கர் மதமு மதனு
னிலையின்மை யொன்று நிலை. (சஉ)

துக்கத்தொகுதி.

கருக்குழவி கௌமாரங் காளைப் பருவம்
விருத்த மழைவெய்யில் வீசும்-பனிக்கால்
கருத்தி லுறக்க முணர்ச்சியெக் காலத்
தொருத்தனின் பத்தை யுறும். (சரு)

துறவு.

மடம்படு மிப்பிறவி மாற்ற நினைவார்க்
குடம்பு மிகையென் றுணர்வுற்-றடங்கத்

துறவா மனிதர்க் கெளிதன்றே துஞ்சிப்
பிறவா நெறியைப் பெற. (௪௪)

புத்தன்.

ககனமு மான்மாவுங் காரணனு மில்லை
சகலமு மாமநித்தஞ் சார்வார்-பிறவி
வகைவினை யுண்டு மதிபொன்ற மாய்தல்
சுகதன்றன் முத்தித் துணிவு. (௪௫)

கரணமே யான்மாக் கணபங்கி நித்தப்
புரணமோ வீசன்வான் பொய்யே-மரணமே
வீடென்றா னத்திகரின் வேறாவிப் புத்தனெனு
மூடன்றான் சொன்ன மொழி. (௪௬)

சமணர்.

உருவருவுண் டில்லை யொன்று பலவாம்
பொருளியல்ப தூனளவே போத-மருகர்க்
குறுவினை விட்டா லுலகும்பர் வீடு
குறியதற் கெட்டுக் குணம் (௪௭)

வெளியிற் பறந்துபோய் வீடெங்குப் பெற்றாய்
குளிர்வெம்மை கண்டாயோ கூட-வுள தில்லை
யொன்று பலவென்று மூனளவென் றாயுணர்வை
யென்று மதிகண்டா ரியார். (௪௮)

## உலோகாயதம்.

இறந்தார் பிறவா ரிலதுவா னீச
னறம்பாவ மாயிழையார் கூடல்—சிறந்த
நலனுர் சுவர்க்க நரகம் பிரித
லுலகா யதன்ற னுணர்வு. (௪௯)

சடவுடரு நன்மைசாக் காடு நரகங்
கடவுள் வலிகாட்டுங் கண்ணுங்-கரும
முடியாமை காட்டு முனேவினையை மாத
ரடைவதே காட்டு மளறு. (௫0)

## மீமாஞ்சன்.

நரகுசுவர்க் கந்தீங்கு நன்றுங் கருமத்
தருமிறை தானன்றி யில்லை-பிரமமொலி
நாடுங் குணன்புத்தி ஞானமில்பா டாணம்போல்
வீடென்றுன் மீமாஞ்ச கன். (௫௧)

சித்துச் சடமாகை யோமுத்தி செய்வினைகள்
சுத்தச் சடமீய வற்றே-சுகதுக்கம்
புத்தி குணமாயிற் பொன்றுமோ வான்குணமாஞ்
சத்தப் பிரமமோ தான். (௫௨)

நியாயம்.

அணங்குற்ற வான்மா வநேகம் வியாபி
குணம்புந்தி யாமுத்தி கூறிற்-பிணம்போல்கை
மெய்யா மிறைவனையும் வீடுகட்டுக் கேதுவா
கையா யிகநூ னலை. (ருங)

செயாது வினைச்சடமாய்ச் சென்மத்தைச் செய்யிற்
றயாவிலனு மவ்வீசன் றானும்-வியாபி
குணமாகிற் புத்திக்குக் கூடா தொடுக்கம்
பிணமாகை யோவீடு பேறு. (ருச)

வைசேடிகம்.

முத்தியி னிர்க்குணனாய் முன்னங் குணங்குணியாய்ப்
பத்தியினன் முத்தியுறும் பாவனையால்-சுத்தச்
சடர்ப்பல ராயவத்தை சார்தலான் மாக்கள்
கடனென்றான் வைசேடி கன். (ருரு)

ஆவ சடலங்க ளான்மாவே யாமலம்போ
லோவு மவத்தையுறு முன்னுணர்விற்-பாவனையாற்
கூடுமோ வீடு குணம்போய்க் குணியுண்டோ
சூடுபோய்த் தீயுண்டோ சொல். (ருசா)

சாங்கியம்.

பகுதி புமான்மெய்ப் பகுதிப்பா லேவிகுதி
சகலந் தனதென்கை பந்தமாம்-விகுதியாம்

யாதும் பகுதி யுடையதெனக் கில்லையெனும்
வேதனஞ் சாங்கியன்றன் வீடு. (௫௭)

முன்னரே யுண்டேற் பகுதியதான் முத்தியிலை
பின்னுஞ் சடமாம் பகுதி-பெறக்கூடா
தன்னாலே வீடெய்து மாகினீ சற்குருவைக்
கொன்னே விரும்பியதென் கூறு. (௫௮)

சைவம்.

மடவன் பசுபதி வாலறிவன் பாசஞ்
சடமா மியல்பு சும்மா-முடன்வியாபம்
பண்டுளவை மூன்றும் பசுபாசம் போயிறையைக்
கண்டுறைதல் சைவர் கதி. (௫௯)

ஈசனது தோற்றமே தெல்லாம் வியாபித்தாற்
பாச மிலாதான் பதியென்னிற்-பாசமெனில்
விண்டிடா தர்ம்பதியால் மெய்காணம் வேறுண்டாங்
கண்டிடா நின்ற கதிக்கு. (௬௦)

சம்மேளித சைவம்.

பாசமாம் பந்தம் பசுப்பெத்த முத்தனு
மீசனநாதி யிவர்ஞானம்-பூசையா

மம்மோக மாற்றி யவரொன்றல் வீடென்றான்
சம்மேளி தச்சைவன் றான். (கூக)

பெத்த மசாதிகெடுமான பின்கெடுமே
முத்தியும் பாசந்தான் முன்னுள-தேற்கெடுமே
சத்தி யெனில்வெம்மை போனுற் றழலுண்டோ
வுத்தி யிலதிரண் டொன்றாகா தொன்றுகெடின்
முத்தி கெடலோ மொழி. (கூஉ)

பாசுபதம்.

ஆகில மிறைமுன் பணுத்திரள் செய்யுஞ்
சகலாத்து மாக்க டளையா-மலங்க
ளகமலம் பூசையா லொப்பாகை முத்தி
பகர்கின்றான் பாசு பதன். (கூரு)

சகம தனுவாஞ் சடஞ்செய்யு மாறென்
புகலணுவும் பூதமே யன்றோ-வகமில்
கிரியையாம் பூசை கெழுமலங்கள் போக்கி
விரியு மிருளா லிருள். (கூச)

வாமம்.

தண்ணிய சுட்கச் சமயிக ளெவ்வுருவும்
பெண்ணுருவிற் காணும் பிறப்பதெலா-முண்ணறவே

புத்தியு முத்திப் பொருளுந் தரும்பிணமே
சத்தியிலாதவெலாந் தான். (சூரு)

மேதினி யொன்றை விளக்குமோ வித்தின்றி
மாது தருருவ மையற்-பிறப்பன்றோ
போத மழிபுலைநீர் புத்திக்கு முத்திக்குஞ்
சாதன மானதோ சாற்று. (சூசு)

பைரவம்.

ஏகமாம் பைரவமெண் டத்துவமா யெண்கலையா
யாகிய ஞாலந்த ணர்ச்சனையாற்-போகமா
முத்தரிக்கு நால்வரா ஞல்வரா யோகத்து
வித்தரிக்கு முண்ணறவால் வீடு. (சூஎ)

ஏகத்து வங்கெடுமே யெட்டாஞன் மற்றவையே
யாகிற் கலைசொல்லா தாயழியும்-போகமுனக்
குள்ளதோ வன்றோ தருவா ருருகருக்தோ
கள்ளதோ நல்குங் கதி. (சூஅ)

காளாமுக மாவிரதம்.

வேணியென் பக்கு முதறரித்து மெய்விரதந்
தாணு வுரைப்படியிற் றப்பாமற்-பேணிப்
புரைதங்கா தானசிவ லோகம் புகன்மா
விரதங்கா ளாமுகன்றன் வீடு. (சூகூ)

துவவேடங் கொண்டவுட ருனழிந்தாற் போமே
யுவையோநின் றீடேற்று முன்னைச்-சிவலோக
மெங்குமெனக் காணுதே யோரிடத்தே யேறினர்
சங்கையில் வீழ்வதற்குத் தான். (௭௰)

## சிவாத்துவிதம்.

அனுதி சிவஞ்சகத்து மாருயிரு மாகத்
தனுதுருவைத் தானே பகுத்துத்-தனுலொழிப்
பேறிழ வில்லை பெறுவானு மீவானும்
வேறில தென்றறிகை வீடு. (௭௧)

தானே சகத்தாய்ப் பகரினது தான்சடமாந்
தானே பிறப்பாக்கிற் ருனெழிக்கிற்-ருனே தன்
கண்ணைக் கலக்கிக் கடவுளா முற்சிவம்போய்
வெண்ணைக் கழுமோ விளம்பு (௭௨)

## வைஷ்ணவம்.

நாராய ணுயதிரு நாமந் தரித்தலா
லாரா தனையா லடிமையெனப்-பேராழி
கோயிற் பொறியால்வை குந்தப் பதந்தந்தை
தாயிற் றருஞ்சீ தரன். (௭௩)

மண்ணு லிடுநாமம் வாளெரியா லிட்டகுறி
புண்ணு முடம்பொழிந்தாற் போகாதோ-விண்ணுடில்

வைகுந்த மேவுதிரு மாலுருவங் காணவொரு
மெய்கொண் டிருக்குமதோ வீடு. (எச)

மாயாவாதம்.

அவிகார மேபிரம மாயையினு லாகி
யிவிகார மெல்லா மிறக்கும்-பவமான
வூனதும்போய் ஞான முதித்ததும்போ யஞ்ஞானம்
போனதும்போய் மற்றுமெலாம் போய். (எரு)

அவிகாரத் தன்மை யவிகாரங் காணி
லவிகாரந் தானல்ல வாகு-மவிகார
மாயை யறியி லவிகார மாயையாய்
வீயும தாரறிவார் வேறு. (எகா)

சௌரவாதம்.

தோற்ற நிலையிறுதி செய்தலாற் றேல்லுலகி
லேற்றவிரு ளெல்லா மிரித்தலாற்-போற்றவருஞ்
சங்கரன்மா னான்முகனுய்த் தற்பரனாய் நிற்கின்றான்
வெங்கதிரோ னல்லதிலை வேறு. (எஎ)

ஈசன் முனிய வெயிறு விழவிழுந்தான்
மாசுண வாயின் மறைப்புற்றான்-றேசினு
லற்பவமா முள்ளத் திருளொழியா னேருருவன்
றற்பரனு வல்லனே தான். (எஅ)

### சோமவாதம்.

போர்தல் வருதலுளன் பூரணனு மல்லவிவன்
பாதிநா டோன்றான் பகலவன்றான்— சோதியா
லிந்திர சால விருளொழியா னென்னலாற்
சந்திரனா லென்செயலாந் தான். (எகூ)

### ஊழ்வாதம்.

தனாகம் வினையே தரில்வினைதான் செய்ய
முனாக முளதாய் முடியு—மனாதியெனி
லெஞ்ஞான்று முத்தி யிலதாகு மிவ்வூழிற்
கஞ்ஞான மாகு மடி. (அ௦)

மந்திர மானதெலாம் வார்த்தையே யவ்வார்த்தை
யந்தர வானின் குணனதுவே—வந்து
பலியா தருள்குருவைப் பாவியா னாகில்
வலிதா னவன்றன் வலி. (அக)

### மருத்துவாதம்.

மருந்தா னொருவரிம் மாநீ ருலகத்
திருந்தா ரெனக்கண்ட தில்லை—வருந்துவதென்
யார்க்கு மழிவு விளைப்பதாம் யாக்கையெனு
நீர்க்குமிழி பூண்கட்டி நீ. (அ௨)

ஜாதிசங்கற்பம்.

ஆதியே தந்தா னிலகைமை யருந்தவர்கள்
சாதியே தஞ்சிறிதுஞ் சாற்றுவரோ—சாதிகுல
நல்லார் தொழத்தக்க ஞான முடையவரே
அல்லா ரிழிகுலத்தா ராம். (அ௩)

தீர்த்தசங்கற்பம்.

அறன்சாரா வுள்ளத் தறியா வழுக்குப்
புறன்சாரு நீராலே போமே—திறன்சாரா
வோடுந்தீர்த் தந்தா னுடற்கே யுளம்விளங்க
வாடுந்தீர்த் தந்தா னறிவு. (அ௪)

அருச்சனை சங்கற்பம்.

சலமுழுகி நீர்தேடிப் பூத்தேடிச் சாணி
நிலன்மெழுகி யர்ச்சியா நிற்பர்—புலமிலவ
ருள்ளத்தே நின்ற வுலப்பில்பர மானந்த
வெள்ளத்தே நின்று விடாய்த்து. (அ௫)

அத்துவாசங்கற்பம்.

இந்நெறி யிந்நெறியென் றெம்மார்க்க மும்பகர்வ
வந்நெறி யெல்லா மறிந்தவறி—வெந்நெறியா
லெய்தலா மந்த நெறியென் றனைறந்தமறை
மெய்தவா வீட்டி னெறி. (அ௬)

சாத்திரசங்கற்பம்.

ஓது முறையின் பொருளுணர்ந் துள்ளபடி
போத மறியாப் புலவர்நூ-லோது
மொருகோடி நூறு யிரத்தானு முண்மை
யருகூடு போகா ரவர். (அஎ)

பிரமாணசங்கற்பம்,

அறிப்ப் படுமள்வை கொண்டளவை யெல்லா
மறியக் கடவ வறிவை-யறிய
விருப்புற் றிடுவான் விறகதனைக் கொண்டு
நெருப்புச் சுடுவா னிகர். (அஅ)

தர்க்கவாதம்.

தர்க்கநெறி வென்றக்காற் றம்ப மிகப்பெருகுந்
துக்க மிகப்பெருகுந் தோற்றக்காற்-றர்க்க
நிலைபெறுவ தொன்றல்ல நெஞ்சுகன்றக் கத்துந்
தலைபறியே யெய்துபயன் றான். (அகூ)

வாதத்தொகுதி.

உரைத்த துரையர் துரைக்குஞ் சமயம்
பரத்தை யறிவுற்ற பான்மை-மரத்தி
னவயவத்தி னேரொன் றறிந்தார் மாமா
வவயவத்தைக் கொண்டவர் றாம். (கூ0)

கேடுகண்டிரங்கல்.

கருத்துகட் கிடாய்க் கதிபலவா வீச
னுரைத்ததென் றென்றுணர வொட்டா-புரித்திங்
கிலதுள தென்னு முளதில தென்னுங்
கலதியுந் தடஞ்சமயக் கத்து. (சுக)

நன்னெறி.

எய்த வெளிதா மிறையரு ளில்லையே
லெய்த வரிதா மியாவர்க்கு-மெய்தெளிந்தா
லெம்மார்க்கத் தோடு மிகலற் றிருக்குமதே
சன்மார்க்க மாகுநெறி தான். (சுஉ)

அட்டாங்கயோகம்.

இயமநிய மாதனம் வாயு விசையங்
கமையுறு பிரத்தியா கார-மமையுறு
தாரணை தக்க தியானஞ் சமாதியென
வோரணியும் யோகங்க ளெட்டு. (சுங)

ஏம முறுமியம மீரைந் திவைதன்னிற்
றூய்மை யருளூண் சுருங்கற்-பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்விப்ப வாற்றுவ
காமங் களவு கொலை. (சுச)

வாய்மை யெனப்படுவ தியாதெனின் வாய்மையினத்
தீமையி லாதவெனச் செப்புவர்க-டேய்மைமிக

வோதும் பரமா முலப்பிலா வொன்றென்பர்
வேத முடிவுணர்ந்தோர் மெய். (௬௫)

மம்மர்செய் யாமை வதையாமை யெவ்வுயிர்க்குந்
தம்முணர்ந்தோர் தம்மை வதையாமை-தம்மை
யெறிபடை கானீ ரெரியிற் படாமை
யறிகை யெனவறிவ ரால். (௬௬)

மதுகையில் வஞ்சனையி லோர்பொருளை வெளவு
மதுகள வென்ப ரறிஞர்- மதமோதிற்
றன்னதல் லாத வுடம்பைத் தனதுதா
னென்னல் களவாகு மென்று. (௬௭)

அரிவையர் தம்மை யணுகாமை யாகும்
பிரம சரிய மதினும்-பெறுதற்
கரிய பிரமத்தோன் றுணர் பிரம
சரிய முடையவரே தான். (௬௮)

தாயோடு தந்தைமகத் தாரந்தான் சத்துருவாந்
தீயவனு நேரொக்கக் காணுமது-செவ்வையாந்
தூய நிலைமை சுருதிநெறித் துணிவு
தாயர்போன் றன்பு தயர். (௬௯)

மிகைசெய்தார் தம்மைத்தாம் வென்றுவிட வேண்டி
விகல்செய்யா தென்றும் பொறுக்க-விகல்செய்யிற்
கோபத்தை யொன்றையுங் கொல்க வதுவல்லா
ளுபத்தை யெல்லா மறும். (ா)

அற்புத யோகிக் கனுகூல மானவூ
ணற்பவூ ணுவ தெனவறிக-வாடுகின்ற
பொற்புறு நீரிற் புறத்தூய்மை யுட்டூய்மை
சிற்பொருளா லுள்ளத் தெளிவு (ாக)

நியமம்.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றரு நல்விரதஞ் சித்தாந்தக்-கேள்வி
யுவந்த சிவபூசை யொண்மதிநாண் பத்து
நிவந்த நியமங்க ளாம். (ாஉ)

தவநோன்பா லூண்சுருக்கித் தம்முடம்பை வாட்ட
லெவனுன் பிறவியெனக் கெய்திற்-றெதாலே
சிவமான முத்தித் திறனேமிதன் றோர்தல்
பவமாறப் பண்ணுந் தவம். (ாங)

கூடியது கொண்டமைதல் சந்தோடங் கோகனக
ளுடு முதலா நவில்கின்ற-வெப்பதமும்
வீடிப் பரமுளத்தே மெய்காண் மகிழ்ச்சிசந்
தோட மெனுஞ்சுருதிச் சொல். (ாச)

ஆத்திகம் வேதநெறித் தோற்றமா மாதரத்தோ
டத்தல் பயன்கருதா தீகையாங்—காத்திரத்தால்
வந்தித்தல் வசயார வாழ்த்தன் மனத்திறைமைச்
சிந்தித்தல் பூசை செயல். (௬௫)

பிரமந்தா ணுய்த்தெளியப் பேசுமறைக் கேள்வி
திரிவன்னத் தோர்கட்குஞ் சித்தாந்தக்—கேள்வி
புரையில் புராணந்தான் பொய்யிலா மாதர்
சரதவே ளாளர்க்கு மாம். (௬௬)

மந்திரந் தாரக மாதியா மன்னிருடிச்
சந்த மதிதெய்வந் தான்கொண்டு—முந்தி
யுரைவாய் துடியுள்ள வொன்றிற்கொன் றோரா
யிரமாம் பயனுண் டிவை. (௬௭)

வெறுதே யரிதெனினு மென்மேல் விருப்ப
மறுதே யிதுவே யறம்பொரு-ளின்ப
மிறுதான வீடு மெனக்குரவ னேவன்
மறுசெயன் மாவிரத மாம். (௬௮)

ஆசின் மறைநெறியி னுதரவு தான்மதியான்
றேச வழக்கிற் சிறந்த-மறைநெறியி
லாசிது வென்னுங் கருமத் தருவருத்துக்
கூசுது நாணமெனக் கொள். (௬௯)

### ஆதனம்.

பத்திரங் கோமுகம் பங்கேரு கஞ்சிங்கஞ்
சொத்திகம் வீரஞ் சுகாதனம்—முத்த
மயிலாச னந்தண்ட மாயோ ரியர்கள்
பயிலா சனங்களிவை பத்து. (ௌ௰)

செவ்வே யுடலுங் கழுத்துஞ் சிரமுமுற
வெவ்வா தனத்தே யிருந்தவர்க்குங்—கைவந்தால்
வாத முதனோய் நலியா மதியுடையோ
ராதன மென்ப தது. (ௌ௧)

### பிராணயாமம்.

வாங்கிப் பதினாறு மாத்திரை நான்மடங்கு
தாங்கித்தற் பாதிதனைவிடக்—கால்வலத்தால்
வாங்கி யிடத்தி லிடத்தேல் வலத்தில்விட
வோங்கார முச்சரித்துக் கொண்டு. (ௌ௨)

### பிரத்தியாகாரம்.

ஒருக்காலு முள்ள முபாதிவே றாகப்
பிரித்துணர்வைக் காண்டலும் பின்ன—வுபாதி
கரைத்துப் பருகிவெறுங் கண்ணாக் குதலும்
பிரத்தியா காரமெனப் பேசு. (ௌ௩)

### தாரணை.

ஆய வுடம்பனைத்து மைம்பூதத் தேவைத்து
மாயையி லேவைத்த மாபூத-மாயை
பரத்திலே வைத்தப் பரமேதா னாகத்
தரித்தலே தாரணை தான். (௱௫௪)

### தியானம்.

பொருளின்மெய் காண்டல் புலத்தியான முள்ள
பொருளினை தல்புத்தித் தியானம்-பொருளறிந்த
போத மறிதல்போ தந்தியானம் போதமே
யாதல் பரத்தியான மாம். (௱௫௫)

### சமாதி.

காய முதலையா காயா தியிலழித்து
மாய விருளினவை மாள்வித்து-மாயை
யொருக்கித்தன் னுற்று னுளபரத்தோ டொன்று
யிருக்கை சமாதி யியல்பு. (௱௫௬)

### அணிமாதிபலவிகழ்ச்சி.

நல்ல வியோகெட்டு ஞானத்திற் கங்கமெனுச்
செல்வ மணிமாதி சிந்தைசெய்வார்க்-கல்ல
விரும்பின் சுவர்கரும்பின் கோலா விடந்து
விரும்பித் தவிடெடுப்பார் வேறு. (௱௫௭

ஈருடல்.

வேய்ந்ததோல் சோரிதசை வெள்ளென்பு மச்சைசிரை
சேர்ந்த திரடூல தேகமா—மேய்ந்த
வகனுற் கரணமீ ரைம்புலன் வாயு
பகர்சூக்கம் பத்தொன் பது. (௱௦அ)

பஞ்சகோசம்.

அன்னம் பிராணன் மனஞான மானந்த
மென்னுங்கோ சங்களிவையைந்தும்--பன்னுங்
கிரமத்தா லொன்றிற்கொன் றுள்ளாகுங் கேடில்
பிரமத்தா லாகுநிலை பேறு. (௱௦௯)

பஞ்சாசயம்.

பந்திக்கு மாமா சயம்பக்கு வாசய
மந்த மலமுவர்நீ ராசயங்கண்—மைந்த
ருறைதரு கெர்ப்பா சயமென் றுடற்கே
யறைதரு மாசயங்க ளைந்து. (௱௨௰)

ஈரேழுநாடி

ஈரேழு நாடி யிடைபிங் கலைசு ழினை
வாருனை நாட்பூடா வைரி--யலம்புருடை
காந்தாரி பைசுனி சங்கினி யத்தி
சிஞுவை குகுபுருடன் கூ. (௱௨௧)

### ஈரேழுவாயு.

பிராண னபான னுதானன் வியான
னாவிசையன் றேவதத்த னுமை-கிருதரனே
அந்தரி யாமி முக்கியன் பிரபஞ்சன்
வைரன் சமீரனன் வளி. (௩௨௨)

### ஷடாதாரம்.

மூலா திட் டான மணிபூ ரகம்விசுத்தி
யேலு மனாகத மாஞ்ஞை--யிருமூன்றின்
மேலாதா ரத்துமதி வெய்யோன் விசுத்தியிற்றீ
மூலாதா ரத்துறைய மூண்டு. (௩௨௩)

### அஷ்டவிகாரம்.

உன்ன வருங்காம கோப முலோபமுடன்
மன்னுறு மோக மதமாச்--சரியந்
தன்னை மிகமதிக்குந் தம்பம் பொறாமையெனு
மின்னல் விகாரங்க ளெட்டு. (௩௨௪)

### ஷட்பர்வனே.

ஒன்றிற் பிறத்த லுளதாத லோங்கிவள
ரன்றிப் பருத்த லறத்தேய்தல்--பொன்ற
லெனுமாறு பாவமு மிவ்வுடற்கே ஞான
தனமாந் தனக்கில்லை காண் (௩௨௫)

சட்கோடி.

வீடுபற் றில்லை பிறிதொன்றி ஞற்றன்னை
வீடுபற் றில்லை பிறிதொன்றைத்—தன்னூலும்
வீடுபற் றில்லைதன் ஞற்றன்னை யிவ்வாறு
கோடியு மில்லை தனக்கு. (௲௨௬)

சடூனம்.

அன்னபா னங்கள் பிராணன தேயாகு
மன்னு மகிழ்வு மடிவு—மனத்தன
வின்னலா மூத்த லிறத்த லியாக்கைய
வென்னுக்கு நாடி லிலது. (௲௨௭)

முக்காரகம்.

மயலுடல் வாக்கு மனமென்று மாந்தர்
துயருறு மின்பமுந் துன்பமுந் — துய்க்கச்
செயலுரை சிந்தனை தீமையு நன்று
முயல்வன காரக மூன்று. (௲௨௮)

மும்மலம்.

உருவுணர வொண்ணு வகையுணர்வை யொன்றி
மருவிய வாணவ மாயை—கருமங்கண்
மூக்குந் தவிடு முமியு மிவையாக்கை
யாக்கும் பவவித்துக் காம். (௲௨௯)

### முக்குணம்.

சத்தமாஞ் சாத்திகமுந் தூய்மையி ருமதரு
மத்திம ராசதமு மாந்தர்க்கு—நித்த
மறிவறி யாமை யவற்றின் புணர்ச்சி
குறியுடைய மூன்று குணம். (௬௯௦)

### முப்பிணிக்குணம்.

நீதி கருணை நிலைமை யபிமானம்
போத மவையின்மை போரிற்—புறங்கொடுத்தல்
மேதக் கவர்ப்பழித்தல் வேண்டா தவைபிதற்றல்
வாதக் குணமு மதி. (௬௯௧)

அறிவுடைமை யைந்தடக்க லாகத் தழகு
நெறியுடைமை சொல்வண்மை நீர்மை—பெறவரிய
வத்து விதஞானத் தாதரவா மாண்மையிவை
பித்தகுண வென்றெனப் பேசு. (௬௯௨)

பொற்றிபிற ரூமை புகழ்கருணை யூக்கங்
குறிமதுகை கோப மிலாமை—பொறையோர்
சிபமின் றியவீகை நெஞ்சத் துவகை
கபமொன் றியகுணமுக் காண். (௬௯௩)

### முத்துக்கம்.

ஆதிபௌ திகமாதி தெய்விக மான்மிகமென்

ளூறு துயர்மூன்றி னுட்க வருமிடியின்
வாத மழைவேனில் வன்னி பனியாதி
பௌதிக மாகும் படர். (௱௩௪)

வாயு முதனோவு மானுடர் மாப்பறவை
பேயசுரர் நாகத்தார் பீடையாங்-காயத்தின்
மானஞ் சினமவா மாச்சரிய மாதிமனத்
தானதுய ராதியான் மா. (௱௩௫)

இடனில் கருப்புகுத லீங்குப் பிறத்த
னடையுடன் மூத்த னரைத்தன்-படமை
கிளைவறச் சாத னிரயம் புகுத
லிளையவை தெய்விக மாம். (௱௩௬)

மூவேடணை.

மகப்பற்ற தாகும் வருஞ்சுற்ற மெல்லாஞ்
சகப்பற்றுச் சங்கற்ப மெல்லா-முகப்புற்ற
வெப்பொருளு மத்தப்பற் றிவ்வே டணைமூன்று
மெய்ப்பொருள் கண்டால் விடும். (௱௩௭)

மூவவத்தை

காணுமது நேரே நனவா நிலைபேறு
காணாமை காணு மதுகனவா-மொன்றையுங்
காணா தொழிகை சுழுத்தியாங் காணாமை
காணுங்கட் பில்லையவை. (௱௩௮)

நாற்கரணம்.

ஐய மனமு மபிமான மாங்கார
மையலற வேதுணிதன் மாமதியாஞ்-செய்ய
வருசிந் தனைசித்த மாகு மவையே
யொருநான்கா முட்கரண மொன்று. (௧௩௯)

ஐம்பூதம்.

காசினிநீர் தீகால்வான் கந்தஞ் சுவையொளியூ
றோசைமா பூத முறுகுணங்கள்-மாசில்
செவிமெய்வாய் கண்மூக்குச் செப்பியநுண் பூத
மவையறியு மைம்புலன்க ளாம். (௧௪௰)

ஓதுகுணம் வான்முதலா வொன்றிற்கொன் றேறுமுறை
யேதனடை போக்குத லின்ப-நீதிவாய்
கையொடுகால் பாயு ருபத்தங் கருமங்கள்
செய்யும் புலனைச் செப்பு. (௧௪௧)

பூதநிறம் பொன்வெண்மை செம்மை கருமைபுகை
யோது முருவ மதற்குரைக்கில்-நீதி
சதுர மதிபாதி மூன்றுறு கோண
மதியமாம் வட்ட மவையாம். (௧௪௨)

உண்ணிலை.

புத்தி கருமப் புலன்பத்த தின்விடயஞ்
சத்த வசனாதி தான்பத்துச்-சித்த

மகமான வன்ஞன் கறிவா ஞெருவ
ணகமா கியவிருபத் தைந்து. (கசந)

புறநிலை
தசைமயிர்தோ லென்புசிரை தண்ணிணநீர் மூளை
யுதிரம் பெலம்புசி தாக முறக்க
மிதுன மறப்பிருப்பு மேலோங்க லோடல்
கதிகிடத்தன் மானபயங் காதல் கதநா
ணிதமாம் புறத்திருபத் தைந்து. (நசச)

இருபத்தெட்டு,
விகுதி யிருபத்து மூன்றும் பகுதியு
நாலாறுகண்ட புருடனுங்-கால
முயர்ந்த வியோமம் வியோமா திதமென்
றியம்பு மிவையிருபத் தெட்டு. (கசரு)

தத்துவமுப்பத்தாறு.
தலமுதலான் மாவீறு சத்திசிவம் வித்தை
சலமில் சதாசிவ மீசன்-கலைமாயை
யேறுவிச்சை கால மிராக நியதியையைந்
தாறசுத்தஞ் சுத்த மசோ. (கசகூ)

தத்துவந்தொண்ணூற்ரூறு.
பூதநிறங் கோசம் புறநிலையு முண்ணிலையும்
வாத விகார மலங்குணங்க-ளாதார

மேக புருடவிளை யஞ்சா லவத்தையென
வாக விவைதொண் ணூற்ரு று. (கசஎ)

### தத்துவநிச்சயம்.

உலவாத தத்துவத்தி னுண்மை யுணர்ந்தா
லிலவா மிவையியம்ப லென்னே-பலவாகக்
கண்ணிலவு மாசுடையார் கண்டாற் பலவாமோ
தண்ணிலவொன் றல்லவோ தான். (கசஅ)

### குணசம்பந்தாவவத்தை.

மூத்திற னான குணத்தன மூன்றவத்தை
யுத்தமமாஞ் சாத்திக மாமுணர்ச்சி-தான்கனு
மத்திம ராசத மாண்ட சுழுத்திதா
னத்தம தாமதம தாம். (கசகூ)

### அவத்தாந்தரவவத்தை.

நனவு முதலவத்தை நாலவையோ ரொன்றின்
நனவு முதனாலுங் கண்டார்-கனவா
நனவு முதனாலுங் காணார்கள் காண்பர்
நனவாக ஞான கனம். (கருо)

நனவி னனவு புலன்வழக்க மாகு
நனவிற் கனவு நினைவா-நனவில்
மனநினை வின்மை சுழுத்தி நினைவின்மை
தனைநாடு தறுரியந் தான். (கருக)

கனவி னனவுபோற் காண்ட னனவாங்
கனவினிற் கண்டு மறத்தல்-கனவாங்
கனவிற் சுழுத்திகா ணாமைகாண் பானை
யனுமதித்து லாமற் றது. (௧௫௨)

சுழுத்தி நனவொன்றுந் தோன்றாமை தோன்றல்
சுழுத்தி கனவாஞ் சுழுத்தி-சுழுத்தி
யரிய வறிவா லழிக்கை சுழுத்தி
துரியமாஞ் சொல்லிறந்த பாழ். (௧௫௩)

துரிய நனவா மிதமுணர்ந்த போதந்
துரிய கனவா மகமுணர்ந்த-போதந்
துரியச் சுழுத்தி வியோமந் துரியந்
துரியம் பரமாகச் சொல். (௧௫௪)

ஆதாரகேதாவவத்தை.

சந்தித் திடம்புருவந் தன்னினிலே சாக்கிரமாங்
கந்தரத்தி னிற்கை கனவாஞ் - சுழுத்தியா
விந்த மெனுமிதய மேவலா முந்திக்கு
நால்விரலி னுலா வது. (௧௫௫)

காரணகேதாவவத்தை

நனவிற் பதினாற் கரணமு நான்கு
கனவிற் சுழுத்தி கருத - லறமூன்றுந்

தனதாகை வேருகை தான்றுரிய மற்ற
தெனதியானற்ற விடம். (கருசு)

அவத்தைக்கழிவு.

ஒருக்க நனுப்போங் கனுப்பேர் முளத்தை
தரிக்கத்தற் றியானத்திற் றற்சுழுத்தி - போரு
மரிக்குஞ் சமாதி துரிய மதீதம்
புரித்துப் பரம்விளங்கப் போம். (கருஎ)

தரிசனவத்தை.

சுழுத்திநன வின்வரிற் றோன்றியிடுஞ் சீவன்
பழிப்பினதீ தத்திற் பரமன் - விழித்தவனேற்
றீதொருங்க வாண்ட குரவன் றிருக்கோல
மேதொருங்கித் தோன்று மென. (கருஅ)

மாவாக்கியம்.

அதுநீயா னுயென்னு மப்பதங்கண் மூன்றி
னதுவென் பதுபிரம நீயென் - பதுசீவ
னுனு யெனும்பதந்தா னவ்விருவ ரைக்கியமா
மூனு முபாதியொழித்து. (கருகூ)

ஓங்காரம்.

புகலு மறைபவத்தை காலம் புவன
மிகலுகுணந் தீயிறைவர் செய்கை - தகவே

யகார வுகார மகார மதனாற்
சகலமுந் தாரக மாம். (௧௬௰)

அசபை.

அஞ்ச வுருவிருபத் தோரா யிரத்தறு நூ
றெஞ்ச லறநின் றியம்பாமற் - றானியம்பித்
தஞ்சப் பிரமத்திற் றான்வேறன் றென்னுமதே
அஞ்ச லொழிக்குந் துணை. (௧௬௧)

ஸ்ரீபஞ்சாக்ஷரம்.

சிவமுதற் றத்துவங்க டேவதைகள் செய்கை
யவனிமுதற் பூத மவத்தை - புவனங்கள்
கோசம் பொறிபுலன்கள் கூறுங் கரணமெலா
மீசன் றிருவஞ் செழுத்து. (௧௬௨)

ஸ்ரீ அஷ்டாக்ஷரம்.

நாராய ணாய நமவென் பொருள்சீவ
னேரா ரிறையேக மென்றறிகை - பேர்வேறு
காரண காரிய காயத்தா னென்றாகும்
பூரண போதப் பொருள். (௧௬௩)

வாக்கியவிவேகம்.

வாக்கி யறுதியிட வொண்ணா வொருதன்னைப்
பேர்க்கி யிலாத பொருளுடா - னருளாலே

பாக்கியத்தால் வந்து பலிக்கி னலதில்லை
வாக்கியத் தார்கா ணு மாறு. (கசுங)

சீவபரவேறுபாடு,

அறிவா னறிவவென்ன வாகத்தே சீவ
னிறையோனென் பாருண் டிருவர்—பிறியாச்
சுபாசுபங்க ளாலிவரைச் சொல்லவரு பேத
வுபாதிகளா னல்லதுரு வொன்று. (கசுச)

சீவலக்ஷணம்.

இதமக மெய்து மிரண்டு தொழிலு
மதிய தவையறிந்த மாத்திரமே- சீவ
னிதன் பவங்க டனக்கில்லை நித்த
னதனை யறிவா னவன். (கசுரு)

பரலக்ஷணம்.

எப்பொருட்குங் காரணமா யெப்பொருட்கு மீசனு
மெப்பொருட்குந் தோற்ற நிலைபிறவா—வெப்பொருடா
னல்லா திலதா யகமும் புறமுநிறைந்
தெல்லா மறிவா னிறை. (கசுசு)

சீவபரவேறின்மை.

உபாதி யொழிந்தா லுயிர்பரங்க ளொன்றே
சுபாசுப ராய்நின்ற தோற்ற—முபாதி

கடர்கர்ய மாகாயம் வேறாகக் காண்கை
யடர்கா ணறிவொன்றே யாம். (௧௬௮)

மாயாவிவேகம்.

அறியாத மாயைக் கடியறியத் தேடி
னறிவா லறியவொணா தாகு -மறியாமைக்
கேது வறியி லறிவா லிருட்கேது
சோதியைக் கொண்டறிந்து சொல். (௧௬௯)

உலகவிவேகம்.

போதக்கண் பூதங்கள் பொய்யா மவைமெய்யாம்
பேதக் கடாதிப் பிறழ்வுகளிற்-பேதங்கள்
சுத்திகையின் வெள்ளியின்மெய் தோன்றப் படுங்கனவு
நித்திரையைப் பார்சங் நிலே. (௧௭௦)

அயலாக மெய்போ லனந்தபே தத்தை
மயலாகக் கண்டமா மாயத்-துயில்போனா
லெண்படு மிவ்வுலக முண்டாமா றெங்ஙனே
கண்படைபோ யுண்டோ கனா. (௧௭௧)

வன்னி யிருக்கமரம் வன்மிசையூ ணைவதே
தன்னிகழ்ச்சி யின்றேலித் தன்மையர்-ஞன்னுன
தன்னிகழ்ந்தா லுண்டோ சகத்துன்பஞ் சற்குருவால்
வன்னிகண்டா லுண்டோர் மரம். (௧௭௨)

ஞானமுதன்மை.

யோகாதி மூன்று முணர்வதனுக் கங்கமா
மாகா தெனிற்பதங்க ளாயழியுந்—தேக
மொழிய வருமுத்தி யொன்றுதற்கு ஞான
விழியை பலதில்லை வேறு (கஎங)

ஞானலக்ஷணம்.

பொறிவா யறிபுலன்கள் போதக் கரண
வறிவானி வெல்லா மடங்கி—யறிவா
யறிவா னறிவ தறியும் பொருளென்
றறியா தறிவ தறிவு. (கஎச)

ஞானப்பெருமை.

அலையிலே கன்ம மடியிலே யாக்குந்
தலையிலே ஞானந் தரிக்கு—மலையா
தருமறை நூலே யறியுஞா னத்தின்
பெருமை யறியார் பிறர் (கஎரு)

ஞானபூசை.

இன்பக்கண் ணீராட்டி யேத்தி யெழின்மலரா
வன்பிட்டுத் தம்மை யமிர்தாக்கி—முன்புற்ற
சிற்சடமெல் லாஞ்சிவ மாகநோக் கல்சிவற்
கர்ச்சனை யாகு மது. (கஎசு)

ஞானயோகம்.

யோகத் தபாவமெனும் யோகமது கைகூடி
னேகப் பொருளதனை னெய்தியிடு-மேக
மதுவா மிதுவன் றெனுவகண்ட மான
வதுவாகை மாயோக மாம். (களஎ)

ஞானவலி.

புணர்பாவ புண்ணியங்க ளெண்ணிறந்த தெல்லா
முணர்வா மெரிகொளுவி னுண்டோ-வுணராமை
கூடவெங் தேளுத துண்டோ குழைந்தமரங்
காடுவெங் தீப்பட்டக் கால். (களஅ)

போகாமுவுதல்,

யோகத்தா லேகத்தைக் கூடா திடையினுயிர்
போகிற்றுன் பொல்லா வுலகிற்-புகாநல்ல
யாகத்தா னெய்து பயனெல்லா மெய்திப்பின்
யோகத்தான் முத்தி யுறும். (களகூ)

ஊழ்வலி.

தந்த வறியாமை போகவுந் தான்போகா
திந்த வுடனிற்ப தென்னென்னி-னுந்துங்
குசவன்கை விட்டாலுங் கூடா திகிரி
திசைவற் றிடாதே விட. (கஅ0)

### முத்திசாதனம்,

தருபயன் வேண்டாத் தருவினைகள் சாந்தி
சுருதிகள் கேள்வி துறவி—குருவைப்
பெறுதற்கிங் கேதுபெறற்கரிய முத்தி
யறிதற்கிங் கேது வவன். (௧௮௧)

### ஆசாரியலக்ஷணம்.

சிறைபா முடன்முகல் சித்தமீ ருக
விறையோனே யானல்லே னென்று—மறைநீ
யதுவாகு மென்ற தெதுவானே னென்று
விதுநீகா ணென்பா னிறை: (௧௮௨)

### ஆசாரியன்மகிமை.

உள்ளந் தனினின் றொளித்தான் பரன்குரவன்.
கள்ளந் தனைத்தவிர்த்துக் காட்டினான்—வள்ள
லருவான கோலமோ வக்கோலங் காணக்
குருவான கோலமோ கூறு. (௧௮௩)

### அனுசாரியலக்ஷணம்,

துயிற்புணர்ப்பாற் கெர்ப்பந் தொடுகடனீ ராமை
மயிர்ப்படா மின்மினியின் வன்னி—முயற்கோ
டெருத்தின்பான் மெய்யுணர் வில்லாதான் பண்ணுங்
குருத்துவமு நேராகக் கொள், ௧௮௪)

### பக்குவலக்ஷணம்.

காய நிலையின்மை கண்டான் கருத்துச்செந்
தீயி னடுவிற்றான் சித்தஞ்-சினவரவின்
வாயுறு மண்டுகத்தின் னெஞ்சம் வரியுழுவை
தாயவ னுள்ளஞ் சமம். (௱௮௫)

### அபக்குவலக்ஷணம்.

தப்பாற் றவந்தூய்மை வாய்மை தயாவிலா
ருய்ப னடிபேணு ருள்ளபொரு-ணம்பார்
பொருள்செய்ய வாதரிப்பார் போக நினைவா
ரருள்செய்ய லாகா தவர். (௱௮௬)

சித்தியா நிற்குஞ் சிலர்க்கு விபரீதப்
புத்தியா குஞ்சிலர்க்குப் போதமே-சுத்தமாம்
பானீய மொன்றேனும் பாம்புண்டா னஞ்சீனு
மானீயு நல்ல வமிர்து. (௱௮௭)

### சீஷசரிதை

கழல்போற்ற வாயாரக் கண்மல்க வுள்ள
மழல்சேர் மெழுகி னழிவெய்த-யாக்கை
யெழில்சேர் குருபரன்ற னேவலை செய்க
நிழல்போல முன்பினு நின்று. (௱௮௮)

சந்தனந் தாம்பூலந் தாரார்த னஞ்சயன
மந்தனம் பொய்வெய்ய மாற்றங்கள்-சிந்தைக்
கரவபி மானங் கலுழ்ச்சி களிப்பின்ன
குரவன்முன் மேவாது கொள். (ளஅசூ)

சம்பிரதாயலக்ஷணம்.

அங்கையுற்ற நீராக்கொண் டாக்கை பொருளாவி
பங்கயக்கண் ணுற்கொண்டு பண்டைவினைச்-சங்கையற
பூத மலமுழுதும் போத மெனநிகழ்த்தப்
பாதமலர் வைத்தான் பரன். (கசூ0)

ஊனுயிர்வேறுபாடு.

ஆக்கை முதற்சித்த மீறுக வெப்பொருளு,
நோக்கு மவன்றன்னை நோக்கா-தவைசடமாச்
சாக்கியா நின்றவவன் சற்குருவா வந்தபரன்
வாக்கில் வெளிப்படுங்காண் வந்து, (கசூக)

மலக்கட்டளை முற்றிற்று.

---

அநுபவக்கட்டளை,
சிவதரிசனம்.

போக்கு மனமொருக்கிப் போதமங் கில்லாமை
நோக்கிய நோக்காலந் நோக்கத்தை-நோக்கென்னுன்
றேன்றுத!வண்ணம்போய்த் துஞ்சிற் றிருளறிவாச்
சான்றாகி நின்றேனுன் றான், (க)

வினைப்பய னென்னை யினிமேவா வின்றுதி
யனைத்து மழிந்து மழியே னெனக்கின்று
முன்பக்கங் கீழ்மேன் முதலிடையீ றென்றனவு
மென்பக்கற் காணே னியான். (௨)

இல்லாது முள்ளது மெல்லா மறிவேனு
னெல்லாப் பொருள்கட்கு மேதுவா-னெல்லா
வுலகும் படைத்தழித்துக் காத்துணர்வா யொன்று
யிலகும் பரமீசன் யான். (௩)

### துரியதூஷணம்.

விரிந்தா லுலகறியு மேனுக்கா துள்ளே
புரிந்தாற் றனையுணரும் போத-மருந்தவா
மாட்சி யுடைய பரமெனவோ மற்றிதன்
காட்சியு மாட்சியுங் கண்டு. (௧)

கரணங் களிற்கலந்து காணாமை நின்றான்
கரணங் களையொருக்கிக் கண்டான்-றனைத்தான்
காணியாய் நின்ற விவனதே கண்டாய்
மரணம் பிறப்புற்ற மால். (௨)

### அதீததரிசனம்.

அறிவென் பதனு லறியும் பொருளு
மறிவு மறிவானு மாகும்-பிறிதின்றிச்

சொல்லாட வில்லாத் துரியாதீ தம்பிறக்க
வெல்லா மவிழ விரு. (சு)

தேய்ந்து தெரிவு தெரியாமை யென்பதற
மாய்ந்த தெனவும் வகையில்லை-மாய்ந்ததுவும்
போந்த விடத்தே புகலு மலையொழிய
மாய்ந்த விடத்தில்லை மற்று. (எ)

வியோமதூஷணம்.

அடங்குகை யாலே யதீதமு மின்னை
மடங்கொள் சுழுத்தியை மானுங்-கிடங்கொள்ள
நில்லாக் கனவே துரிய நிலையிரண்டு
மல்லாமை யாலவத்தை யாம். (அ)

பாதரிசனம்.

அதீதம் பொருளென்ற லப்பொருளே தென்று
னதீதம் பொருளா வறிந்த-புதனொருவ
னுண்டாங்கா னென்றொன் றுரைத்தா னுரைத்தலுமே
கண்டா னதுகாணுங் கண். (கூ)

பிறிதுக் கறிவிருந்த பெற்றியே னென்ன
வறிவிற் கறிவா யிருந்த-வறிவை
யறிவே யறிகின்ற தன்றி யறியப்
பிறிதே னுமில்லை பிறழ்வு. (ய)

அகமிதங்க ளில்லை யறிவயர்வு மில்லை
யிகபரங்க ளென்றறிய வில்லை-சகமு
மெரியினுக்கு வெம்மையுரு வென்ன விறைவ
வுருவதற்கு நேரே யுணர்வு. (௧௧)

ஐக்கியவிருப்பம்.

பூத மறிந்த வறிவுயிராம்போதமா
யாது மறிந்தவறி வீசனும்--பேதமறப்
புல்லிற்றெங் கேயென்றான் புத்தேளிர் கோக்கண்ணீர்
மல்கித்தான் வீழ்ந்தான் மகன். (௧௨)

பின்ன மறிந்த செயல்போலப் பின்னமே
தன்னை யறிந்ததுவுந் தற்செயலாய்-நின்ன
செயன்மாண் டதுகாண் சிவமென்று ணீச
னயன்மா லறியா வவன். (௧௩)

ஒருக்கவே றில்லா வுணர்வாம் பரமும்
பருக்க விடயமெனப் பண்ணி-பருட்சொருபன்
பேசா திருவென்னப் பேதங்க ளாதிருந்தான்
வாசாம கோசரத்தே மாண்டு (௧௪)

இலங்க வறித னனவாகு மெங்குங்
கலங்க வறிதல் கனவாம்-புலன்கெட்ட

இதல்லாஞ் சுழுத்தியா மிம்மூன் றவத்தையினு
மல்லா ததுகா ணறிவு. (௧௫)

னானு மூயிரு முணர்வு முடனிறந்து
யானு மிறந்து பானிறந்து-கோனே
வடிவோது மாறின்றி வாக்கிறந்து நீயிப்
படியே யிருக்கும் படி. (௧௬)

திரண்ட சமவாயந் தீர்பாழிற் சிவ
னிரண்டாம்பா ழிற்றேன்று மீச-னிரண்டும்போய்
மூன்றும்பா ழிற்றேன்று மூன்றும் பதப்பொருளாஞ்
சான்றுரு மில்லாத் தனி. (௧௭)

சொருபதரிசனம்.

ஆவபா வாபாவந் தீர்ந்த வகோசாமு
மோவு மவத்தைகளி னென்றுக்கிச்-சிவபாந்
தானற் றிருந்த தனிப்பதங்கா ணீதென்று
மோனத் திருந்தான் முனி. (௧௮)

நோக்கினன் றுனைய் நிகழ நுனிதமறை
வாக்கினற் கூறிய வான்பொருளை-நோக்கிச்
செயிர்தீர்ந்தே னென்றெழுந்தான் மைந்தன் சினையின்
றுயிர்ந்த மீனதனுக் கொப்பு. (௧௯)

நிறைவுற்ற தெவ்வாறு நின்மலனுந் தன்னை
யறிவித்த வாறறியி லாகா-நிறைய

மூழ்த்துமா லானந்த முந்நீரி னுள்ளே
யழுந்துமு மைக்குடத்தி னும். (உ0)

அநுபூதி,

இருந்த படியே யிருந்தபடி காண
விருந்த படியே யிறைவ-னிருந்தபடி
யப்படியே யென்னு மஃதொழிய வப்படியை
யெப்படியே யென்றுரைக்கே னியான். (உக)

ஊனை யூனிற் குயிரானு யுள்ளுணர்வு
தானுய் போதத் தமமானு-யானை
யென்னை டொண்ணு விறையானு யாதுமாய்
நின்றது யென்னாய் நீ. (உஉ)

காண்டகையே யென்கைக் கடனன்றே யில்லெனின்
ஞண்டகைதாள் சூடார்க் கயலன்றே-மாண்டேன்
சயம்புவே யென்னினுரை தானுண்டோ வெவ்வா
றியம்புவே னென்றறியே னியான். (உ௩)

நாரணனு நான்முகனு நாடப் பெறாரின்ன
மாரணமுஞ் சொல்ல வறிகுதிலை-காரணநின்
செம்மா மலர்ப்பாதஞ் சென்னிப் பொறித்தார்க்குக்
கைம்மாறு காண்கிலேன் காண். (உச)

ஒல்லை யுலகு படைத்தழிக்க வுன்னுணர்வால்
வல்ல சொருபாவென் வஞ்சமனக்-கல்லைத்

25 JAN 1951
THIYALI

திரித்தருள வேண்டியொரு தேசிகனுங் கோலந்
தரித்தருள வேண்டியதே தான். (உரு)

சொருப வெனக்குன் றுணைமலர்த்தாள் சூட்டி
யிருவரு நேரொப்பே மென்றே-யருளாலே
தின்னே ரனையானே நீயு மருளாலே
யென்னே ரனையே னியான். (உசு)

வந்திக்கச் சென்னிவாய் வாழ்த்த மனனுருக
விந்தத் திருக்கோலத் தெம்பெருமான்-வந்தெனக்குப்
பொன்னங் கழலருளிற் பூரணபோ தச்சொருப
வின்னம் பிறப்பே யினிது. (உஎ)

என்கை பணிசெய்ய வெம்பெருமாற் கெம்பெருமா
னென்கை பணியாக வென்வாக்கு--நின்கீர்த்தி
கற்றென்றும் பாடக் கனியமனங் காணிறைவா
மற்றொன்றும் வேண்டேன் வரம். (உஅ)

அளித்தான் றிருமேனி யைம்புலனுங் கொண்டு
களித்தான்பே ரானந்தக் கண்ணீர்-குளித்தான்
குளித்தானம் பாலென்றுங் கூர்ந்தன்பான் மீண்டு
மளித்தா னருட்சே வடி. (உகூ)

ஆ. திருவெண்பா உ௱உ௰.

அமிர்தசாரம் முற்றிற்று.

---